விதியை மதியால் வெல்லலாம்

பல்கலைத் தமிழ்

பதிப்பாசிரியர்

முனைவர் இராதா செல்லப்பன்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி

பல்கலைத் தமிழ்

விதியை மதியால் வெல்லலாம்

அறக்கட்டளைச் சொற்பொழிவு

பதிப்பாசிரியர்

முனைவர் இராதா செல்லப்பன்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

தமிழியல் துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	பல்கலைத் தமிழ் - விதியை மதியால் வெல்லலாம்
பொருள்	:	பண்டைத் தமிழரின் வாழ்வியல் கோட்பாடுகள் அறிவியல் மற்றும் சைவசித்தாந்த அடிப்படையில்
ஆசிரியர்	:	சிவத்திரு அ.சொ. சுப்பையா, எம்.ஏ.,
பதிப்பாசிரியர்	:	முனைவர் இராதா செல்லப்பன்
உரிமை	:	பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி - 620 024
பதிப்பு ஆண்டு	:	2008
பக்கங்கள்	:	viii + 352 = 360
நூல் அளவு	:	டெம்மி 1/8
எழுத்து	:	11 புள்ளி
தாள்	:	18.6 Kg. மேப்லித்தோ
விலை	**:**	**ரூ. 90.00**

அச்சிட்டோர் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
189 (101-D), ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.
✆ : 24987562, 24661807

டாக்டர் மு. பொன்னவைக்கோ
துணைவேந்தர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024.

அணிந்துரை

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரால் அமைந்துள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகம் தனது வெள்ளி விழாவை நோக்கி அடியெடுத்து வைத்துள்ளது. பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழாவின் நிறைவாக இந்நூல் தங்கள் கைகளில் தவழ்கிறது.

விதியை மதியால் வெல்லலாம் என்றதொரு அருமையான படைப்பினை வழங்கியுள்ளார்கள் பேரா. அ.சொ. சுப்பையா அவர்கள். சைவசித்தாந்தம் என்பதைப் பொதுவாகச் சமய நோக்கில் மட்டுமே பார்த்து ஆய்வது தான் வழக்கம். அந்த ஆய்வுப் போக்கை விரிவாக்கிச் சைவ சித்தாந்தத் தத்துவங்களை அறிவியல் நோக்கில் சிந்தித்துப் புதுமையான கருத்துக்களைத் தருகிறார் பேராசிரியர்.

பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் பேரா. ச. முத்துக்குமரன் மணிவிழா அறக்கட்டளையின் சார்பாகப் பேரா. அ.சொ. சுப்பையா அவர்கள் நிகழ்த்திய அறக் கட்டளைச் சொற்பொழிவுகள் தற்போது அச்சேறித் தங்கள் கைகளில் நூலாகத் தவழுகின்றது.

பாரதிதாசன் பல்கலைக்கழக வெளியீடாக வரும் இந் நூலில் பேராசிரியர் அவர்கள் பேரின்பப் போகிய முத்தியை அடையுமாற்றினைச் சைவசமயத் தத்துவங்களின் அடிப்படையில் விளக்குவதுடன் அதற்கு உதவும் உடற்கூறுகளைப் பற்றியும் விவரிக்கிறார். நூலில் பல மருத்துவக் கருத்துகளும், உடற் கூற்றையும் சைவசித்தாந்தத்தையும் இணைக்கும் ஒப்பாய்வு வரைபடங்களும் இடம் பெற்றுச் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன.

சைவ சித்தாந்தக் கொள்கைகளின் பின்புலத்தில் திருமுறைகள், இலக்கண நூல்கள் போன்றவற்றுடன் சைவ சித்தாந்த நூல் களான சிவஞானபோதம், சிவஞானசித்தியார் போன்ற நூல் களையும் இணைத்து விளக்கம் தருவது அருமை.

மருத்துவ உடற்கூறுகளையும், சைவ சாத்திர நூல்களையும் தம் இலக்கிய, இலக்கண நூல்களையும் துணைகொண்டு

ஒப்பிட்டு விளக்குவதோடு பேராசிரியர் நின்றுவிடவில்லை. நடப்பியல் நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்துக் கூறுவதன் மூலம் சைவ சித்தாந்த கருத்துகள் எளிமை பெறுகின்றன.

உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன் என்பார் திருமூலர். மூலாதாரமாக இருக்கும் விநாயகப் பெருமானையும் முதுகுத் தண்டினையும் பொருத்திப் பார்க்கிறார். அழகான ஒரு ஒப்புமை பாருங்கள். நம் தலையிலுள்ள பெரு மூளையானது எண்ணற்ற மடிப்புகளோடு கூடிய திருக்கயிலை மலை. அதற்கு இரண்டு கூறுகள் கலை மாதொரு பாகனை நினைவுறுத்துவன. மூளை-முதுகுத் தண்டிலுள்ள பாய்மரத்தை (*cerebro spinal fluid*) ஆகாய கங்கையோடு சேர்த்து நினைத்துப் பார்க்கும் திறம் வியத்தற்குரியது.

தம் நண்பர்கள் சிவசாமி, குப்புசாமி ஆகியோர் ஐயங்களை எழுப்புவதாகவும் அவற்றிற்குச் சைவ சித்தாந்தக் கருத்துகளின் வாயிலாக விளக்கமளித்து அவர்தம் வினாக்களுக்கு விடை யிறுப்பவையாகவும் அமைத்துள்ள நயம் பேராசிரியரின் சிந்தனை ஆற்றலையும் அவர்தம் தருக்க ரீதியான அறிவுப் புலமையையும் காட்டுகின்றன. சமூக ஏற்றத்தாழ்விற்கான காரணங்களை சிவசாமி வினவ அதற்கு ஒரு நண்பகல் உணவு நிகழ்ச்சியை (பக். 53) எடுத்துக்காட்டி விடையிறுக்கிறார் பேராசிரியர்.

பொருள் விளங்க மிகவும் கடினமான, பட்டறிவால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய பரம்பொருள் தத்துவத்தை சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துகளை எளிமையாக, சுவையாக ஒப்பீட்டு நோக்கில் தந்து நூல் முழுவதும் சுவை குன்றாமல் சொல்வதில் வாகை சூடியுள்ளார் பேராசிரியர் அ.சொ. சுப்பையா.

பேராசிரியர் அ.சொ. சுப்பையா அவர்களுடைய இந்நூலை நம் பல்கலைக்கழகம் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறது. வாழ்க அவர்தம் சிவத்தொண்டு! வளர்க அவர்தம் சைவ அறிவியல் ஆய்வு. இவ் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நூல் வடிவம் பெறப் பெரிதும் முயன்று பதிப்பித்த பேராசிரியர் முனைவர் இராதா செல்லப்பன். இதனை நல்ல முறையில் வெளியிட உதவிய பதிப்புத்துறைப் பொறுப்பாளர் முனைவர் இராமர் இளங்கோ ஆகியோரின் பணிகள் பாராட்டிற்குரியன.

(மு. பொன்னவைக்கோ)

முனைவர் இராதா செல்லப்பன்
பேராசிரியர், துறைத்தலைவர்
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பதிப்புரை

பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை கல்விப் பணியிலும் ஆய்வுப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் ஒரு துறை. பல்கலைக்கழகம் பெற்றுள்ள அறக்கட்டளைகளில் பெரும்பாலானவை தமிழோடு தொடர்புடையவை. தமிழ் இலக்கிய வளர்ச்சியையும் தமிழாய்வையும் நோக்கமாகக் கொண்டு தமிழறிஞர்களாலும் தமிழார்வலர்களாலும் இவ்வறக் கட்டளைகள் பல்வேறு காலக்கட்டங்களில் நிறுவப்பட்டவை. எனவே இந்த அறக்கட்டளைகளைச் செயல்படுத்தும் பொறுப்பு தமிழ்த்துறையிடம் ஒப்படைக்கப் பட்டது. தமிழ்த்துறையும் ஆண்டுதோறும் அவ்வத்துறை வல்லுநர்களை வரவழைத்து அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நடத்தி வருகிறது. அறிஞர் பெருமக்களின் ஆய்வுக் கருத்துக்கள் காற்றிலே கலந்து மறைந்துவிடாமல் நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அவற்றை அச்சுவாகனம் ஏற்றவேண்டும் என்று நினைத்தேன். இந்தக் கருத்தை அன்றைய துணைவேந்தர் முனைவர் சி. தங்கமுத்து அவர்களிடம் தெரிவித்தபோது அவர் அக்கருத்தை ஏற்று, தமிழியல் துறை அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் அனைத்தும் அவ்வப்போது நூல் வடிவம் பெற வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். இதுவரையில் நடந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகளில் ஒரு சிலவே துறையில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இல்லாத சொற்பொழிவுகளின் எழுத்துவடிவங்களைப் பெற முயன்றோம். சிலர் ஏற்கெனவே தம் சொற்பொழிவுகளை அச்சு வாகனம் ஏற்றியிருந்தனர். எனவே, அவை இத்தொகுதியில் இடம் பெறவில்லை. நற்பேறின்மை காரணமாக ஒருசில சொற்பொழிவாளர்கள் இயற்கை எய்திவிட்டார்கள் என்றறிந்தோம். எனவே சொற்பொழிவுக் கட்டுரைகள் கிடைக்கவில்லை. ஏனையோரிடம் தொடர்புகொண்டு அவர்தம் கட்டுரைகள் பெறப்பட்டன. ஒரு சிலரிடமிருந்து அவர்களுடைய பல்வேறு பணிகளின் காரணமாகக் கட்டுரைகளைப் பெற இயலவில்லை.

எனவே தேடித் தொகுக்கப்பட்ட கட்டுரைகளை ஐந்து தொகுதி களாகப் பிரித்தோம்.

தொகுதி : 1 - இலக்கியம்

தொகுதி : 2 - சமயமும் தத்துவமும்

தொகுதி : 3 - கலைகள்

தொகுதி : 4 - அறிவியல் தமிழ்

தொகுதி : 5 - விதியை மதியால் வெல்லலாம்

முனைவர் ச. முத்துக்குமரன் மணிவிழா அறக்கட்டளை யானது அவர்தம் மணிவிழா ஆண்டில் முனைவர் எஸ்.ஓ. இராமகிருஷ்ணன் அவர்களால் நிறுவப்பட்டது. திரு இராமகிருஷ்ணன் அவர்கள் தேசியக் கல்லூரியில் தத்துவ ஆராய்ச்சித் துறையில் பேராசிரியராகப் பணியாற்றியவர். தமிழ்த் தத்துவம் என்ற பொருண்மையில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தும் நோக்கத்துடன் இந்த அறக் கட்டளை நிறுவப்பட்டது. முனைவர் ச. முத்துக்குமரன் அவர்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது துணைவேந்தர். இரண்டு பதவிக் காலங்கள், அதாவது ஆறு ஆண்டுகள் துணைவேந்தராக இருந்து பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு ஒரு தூணாகத் திகழ்ந்தவர். திரு அ.சொ. சுப்பையா அவர்கள் நம் பல்கலைக்கழகத்தில் முனைவர் ச. முத்துக்குமரன் மணிவிழா அறக்கட்டளையின் சார்பாக 4.12.1995 அன்று 'வினையும் விளைவும்' என்ற தலைப்பில் நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவு விரிவாக்கம் பெற்று விதியை மதியால் வெல்லலாம் என்ற பெயரில் நூலாக்கம் பெற்றுள்ளது. இந்நூல் வாழ்வியல் கோட்பாடுகளைச் சைவசித்தாந்த அடிப்படையில் அறிவியல் அணுகுமுறையோடு எளிய நடையில், நடைமுறைச் சிந்தனையோடு உருவாக்கப் பட்டுள்ளது.

சிவத்திரு அ.சொ. சுப்பையா அவர்கள் தருமை ஆதினத்தின் சைவ சித்தாந்தப் புலவராகப் பணியாற்றிய பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திருமுறை இருக்கையில் சிறப்பு நிலைப் பேராசிரியராக அமர்ந்து சைவத் தொண்டாற்றி

யவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை வாய்ந்தவர். தில்லைத் திருப்பதிகங்கள், தொல்காப்பியம் - சைவ சித்தாந்த நோக்கில், சுந்தரர் தேவாரம் - ஆய்வு விரிவுரைகள், திருஞானசம்பந்தர் தேவாரம் (உரையுடன்) முதலான நூல்கள் அவரால் இயற்றப்பட்டன. திருவாவடுதுறை ஆதினம் தமிழ் மறைச் சீலர் என்ற விருதினைச் சிவத்திரு சுப்பையா அவர் களுக்கு அளித்து மகிழ்ந்தது. தொண்டை மண்டலம் குருமகா சந்நிதானம் அவர்கள் சைவ சித்தாந்த ஞான தேசிகர் என்ற பட்டத்தை அளித்தார்கள். இவருடைய சைவ சித்தாந்தக் கட்டுரைகள் பல ஞானசம்பந்தம், குமரகுருபரர், மெய்கண்டார், சாது, சங்கொலி, சித்தாந்தம் போன்ற இதழ்களிலும் ஆன்மீக மலர்களிலும் குடமுழுக்கு விழா மலர்களிலும் வெளி வந்துள்ளன. சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களிடம் சிவாகம முறைப்படி மூவகைத் தீட்சை பெற்று, நாளும் தீ ஓம்பி ஆன்மார்த்த சிவ வழிபாடு செய்பவர். சிவயோக நெறி வாழ்வும் ஆன்ம ஈடேற்றமுமே தலையாய குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர். பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பொதிந்து கிடக்கும் இறைமைப் பண்புகளை அறிவியல் கருத்துக்களோடும் மெய்ப்பொருள் கோட்பாடுகளோடும் இணைத்து இனிய எளிய தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிப் பரப்பும் தொண்டில் ஈடுபட்டிருப்பவர்.

'மனம், புத்தி, அகங்காரம், சித்தம்' என்ற நான்கும் நுண்ணிய அகக் கருவிகள். அவையே மனித உணர்வுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றன. மனித உடம்பில் அவற்றிற்கு இருப்பிடங்கள் எங்கெங்கு உள்ளன? மண்ணில் வாழுகின்றான் மனிதன். அவனைப் போன்று மண்ணீரலில் நிலை கொள்ளுகிறது ஆன்மா. ஆன்மாவுக்கு ஒரு நண்பனாக, அமைச்சனாக வழி நடத்துவோனாக இறைவனால் அருளப் பெற்றது மனம். ஆதலால் அஃது அவ் ஆன்மாவுக்கு வெகு அருகில் மனித நெஞ்சில், இருதயத்தின் கீழே இருந்து இயங்குகிறது என்றும், 'தேன் குடித்து இன்புற வேண்டிய வண்டு, தேனுக்கு உள்ளேயே விழுந்து மாய்வதைப்' போன்று, நாமும் மாயா காரியங்களிலேயே மயங்கி, விருப்பு வெறுப்பு களில் அழுந்துகிறோம். அதனாலே மயக்கநிலை ஏற்படுகிறது. மயக்க உணர்வுகள் முழுவதுமாகக் கழியாதபோது நல்வினை

தீவினைகளை விரும்பியோ, விரும்பாமலோ செய்கிறோம். அதன் மூலம் புது வினைகளின் தோற்றத்திற்குக் கருவி யாக்கிக் கொள்ளுகிறோம் என்றும் நூல் முழுவதும் பல்வேறிடங்களில் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் எளிமை பெற்றுள்ளன.

சைவ தத்துவக் கருத்துக்களை எளிய முறையில் விளக்கும் இந்நூல் சமய ஆர்வலர்களுக்கும் தமிழ் ஆர்வலர் களுக்கும் சிந்தனை விருந்தாக அமைந்த நல்லதொரு நூல்.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நூலாக்கம் பெற ஆணை நல்கிய பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரா. தங்கமுத்து அவர்களை நன்றியுடன் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அழகானதொரு அணிந்துரையைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் மு. பொன்னவைக்கோ அவர்கள் நல்கியுள்ளார்கள். இந்த நூலை நல்ல வடிவமைப் புடன் அழகான முறையில் உருவாக்கிய பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பதிப்புத்துறை பொறுப்பு இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு எங்கள் நன்றி.

(முனைவர் இராதா செல்லப்பன்)

பேராசிரியர் ச. முத்துக்குமரன் மணிவிழா அறக்கட்டளை

விதியை மதியால் வெல்லலாம்

பண்டைத் தமிழரின் வாழ்வியல் கோட்பாடுகள்
அறிவியல் மற்றும் சைவசித்தாந்த அடிப்படையில்

நூலாசிரியர்

சைவசித்தாந்தப் புலவர், சைவசித்தாந்தக் கலாநிதி
தமிழ்மறைச் சீலர்

சிவத்திரு **அ.சொ. சுப்பையா,** எம்.ஏ.,
(முன்னாள் சிறப்புநிலைப் பேராசிரியர்)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சிதம்பரம் – 608 001

காணிக்கை

எல்லா மனிதர்களும் அறிவுள்ளவர்களே. எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன. அந்த அறிவும் ஆனந்தமும் முழுமையான நிறைவில் நிலைபெறவேண்டும் என்பதே ஆன்றோர் சிந்தனை. சத் சித் ஆனந்தம் எனும் அதைப் பெறுவதில் தடையாக உள்ள மாயா – மயக்கங்களையும், இவற்றிற்கு வித்திடுகிற பலதர வினைகளையும் இவை யாவற்றிற்கும் காரணமாகவுள்ள ஆணவத்தையும் களைந்து, உயிரினத்தை நிறைவின்பத்தில் செலுத்துகிற

சிவபரம்பொருளின் திருவடிகளில்

'விதியை மதியால் வெல்லலாம்'

என்னும் இந்நூலை நன்றிப் பெருக்குடன்

காணிக்கையாக்குகிறோம்.

அ.சொ. சுப்பையா

முன்னுரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழியல் துறையில் சிறப்புநிலைப் பேராசிரியராகத் திருமுறை இருக்கையின் பொறுப்பேற்றுத், திருமுறைகளுக்கு யான் உரைகள் எழுதிக் கொண்டிருந்த நேரம். இக்கால அறிவியல் அடிப்படையிலும், சைவசித்தாந்த தத்துவங்களின் பின்னணியிலும், இலக்கியச் சான்றுகளோடு யான் வரைந்துகொண்டிருந்த திருமுறை உரைகளைக் கண்ணுற்றார், பாரதிதாசன் பல்கலைக் கழகத் தமிழியல்துறைத் தலைவர், பேராசிரியர் முனைவர் இராமலிங்கனார் அவர்கள்.

அதன் விளைவு திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில், 1995-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 4-ஆம் நாள், **முனைவர் ச. முத்துக்குமரனார் மணிவிழா அறக்கட்டளை** சார்பாக இரண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தும் நற்பேறு பெற்றனம்.

நிகழ்ச்சிகளுக்குப் பல்கலைக்கழகத்தின் இந்நாள் மாண்பமை துணைவேந்தர், பேராசிரியர், **முனைவர் வீர. முத்துக்கருப்பன்** அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்பித்தார்கள்.

முதற்பொழிவினை, அன்று காலை 11-மணியளவில் **''சுந்தரரும் சேக்கிழாரும்''** என்ற தலைப்பில் நிகழ்த்தினம். பிற்பகல் 3- மணியளவில் நிகழ்ந்த இரண்டாம் பொழிவுக்கு **''வினையும் விளைவும்''** என்பது தலைப்பாயிற்று.

அன்றைய பிற்பகல் சொற்பொழிவின் விரிவாக்கமே **'விதியை மதியால் வெல்லலாம்'** என்ற ஒரு நூலாகி, இப்பொழுது உங்கள் அன்புக் கரங்களில் தவழ்கிறது.

மணிவிழா அறக்கட்டளை நாயகரும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் உறுப்பினர்- செயலருமான பேராசிரியர், **முனைவர் ச. முத்துக்குமரன்** அவர்களும்,

சொற்பொழிவுகளுக்குத் தலைமை ஏற்றுச் சிறப்பித்த பல்கலைக்கழகத்தின் அந்நாள் துணைவேந்தர், பேராசிரியர், **முனைவர் வீர. முத்துக்கருப்பன்** அவர்களும்,

அப்பல்கலைக்கழகத்தின் இந்நாள் மாண்பமை துணை வேந்தர் பேராசிரியர், **முனைவர் மு. பொன்னவைக்கோ** அவர்களும்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர், டாக்டர் பி. சி. ராய் விருது பெற்றவரும், இந்திய மருத்துவக் கல்வி மேம்பாடு தொடர்பான பற்பல துறைகளிலும் உயர்பதவிகளில் சீரிய பணியாற்றி வருபவருமான பேராசிரியர், மருத்துவர், சேவா ரத்னா **மு.கோ. முத்துக்குமாரசாமி** அவர்களும்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அரசர் முத்தையா மருத்துவக் கல்லூரி, உடற்கூற்றியல் பேராசிரியரும், சான்றாண்மை மிக்க மூதறிஞருமான மருத்துவ-முனைவர் **பேரா. ஆ. கிருஷ்ணமூர்த்தி** அவர்களும்,

இந்நூலுக்கு அணிந்துரைகள் மற்றும் பாராட்டுரைகள் மதிப்புரைகள், வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதில் பெருமகிழ்வுறுகிறேன்.

தமிழியல் துறையின் அந்நாள் தலைவர், பேராசிரியர், முனைவர், **மா. இராமலிங்கனார்** அவர்கள் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தும், அறிமுக உரை நல்கியும், பல்லாற்றானும் சிறப்புச் செய்தார்கள்; அவர்களுக்கும்

இந்நூலுக்கு சீரிய பதிப்புரை வரைந்து பெருமை சேர்த்துள்ள பல்கலைக்கழகத் தமிழியல் துறைத் தலைவர், பேராசிரியர் முனைவர் **திருமதி. இராதா செல்லப்பன்** அவர் களுக்கும் என் அன்பார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

இந்நூலைச் செவ்விதே பதிப்பித்து வெளியிடுகிற திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழக நிருவாகத்தினருக்கு வணக்கமும் நன்றியும் உரியன.

இந்நூலை அழகிய கட்டமைப்பில் அச்சிட்ட யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ"க்கு நன்றி!

அ.சொ. சுப்பையா

திருச்சிராப்பள்ளி

முனைவர் பேரா. ச. முத்துக்குமரன்

முன்னாள் துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்

உறுப்பினர்- செயலர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், சென்னை

பாராட்டுரை

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் என் பெயரில் நிறுவியுள்ள மணிவிழா அறக்கட்டளைச் சொற்பொழிவாக 1995-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சிறப்பு நிலைப் பேராசிரியர் சிவத்திரு அ.சொ. சுப்பையா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் விரிவாக்கமாக அமைந்த 'விதியை மதியால் வெல்லலாம்' என்ற நல்லதொரு நூலை முழுமை யாகப் படித்துப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றேன்.

''பதி பசு பாசம் ஆகியவை என்றும் உள என்பதையும், ஆன்மா வினைகள் பல புரிந்து அவ்வினைகளின் பயனால் இன்பதுன்பங்களை அனுபவிக்கிறது'' என்பதையும், ''ஆன்மாவின் குறிக்கோள் பேரின்பப் பேறாகிய முத்தி அடைவது'' என்பதையும் அதை எவ்வாறு அது அடையும் என்பதையும் சைவசமய அடிப்படையில் ஆசிரியர் விளக்கு கிறார். அவ்வாறு விளக்கும்போது, தமிழரின் பழம்பெரும் இலக்கியங்களில் சைவசமயக் கோட்பாடுகள் அடங்கியிருப் பதை ஆசிரியர் நமக்கு எடுத்துக்காட்டுகிறார். இவற்றின் மூலம் பண்டைத் தமிழரின் வாழ்வியல் கோட்பாடுகள் எவை என்பதை நாம் உணரச் செய்கிறார்.

நாம் வாழ்வின் ஒவ்வொரு நொடியும் ஏராளமான செயல் களைச் செய்து கொண்டே இருக்கிறோம். ஏதோ பயனை எதிர்பார்த்தே காரியங்கள் செய்யப்படுகின்றன. எதிர்பார்த்த பயன் கிடைப்பதும் உண்டு, கிடைக்காமல் போவதும் உண்டு. எதிர்பார்த்த பயன்கள் நன்கு புலப்படுகிறபோது மகிழ்வுறு கிறோம்; ஏதேனும் பொருள் இழப்பாக முடிந்தால் மிகவும் வருந்துகிறோம்.

வெற்றியும் தோல்வியும் முறையே இன்பதுன்பங்களுக்கு அடித்தளமாகின்றன. ஆகவே அவற்றிற்கான காரணங்களை இலக்கிய, தத்துவச் சான்றுகளோடு அறிவியல் அடிப்படை யிலும் ஆய்ந்து நோக்கியுள்ளார் இந்நூலாசிரியர்.

நாம் இயல்பாகச் செய்கிற பல்வேறு வினைகளையும் வகுத்தும் தொகுத்தும் கூறி, ஆங்காங்கே மேற்கோள்களாகச் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருக்குறள், தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் நூல்களிலிருந்து பாடல் களையும் நடப்பியல் நிகழ்ச்சிகளையும், வரலாறுகளையும் சான்றுகாட்டி விளக்கியுள்ளார்.

மருத்துவக் குறிப்புகளும், ஒப்பாய்வு வரைபடங்களும் மன மகிழ்ச்சி அளிக்கின்றன. நூலின் பல இடங்களிலும் ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத் திறனும், ஆழ்ந்த சிவயோக நெறி அனுபவமும், கடுமையான உழைப்பும் முத்திரையிட்டுக் காணப்பெறுகின்றன.

நூல் பன்னிரண்டு இயல்களாக வடிவமைக்கப் பெற்றுள்ளது. அவற்றுள், முதல் இயலில், ''நாம் செய்யும் செயல்கள் நம்மைப் பின் தொடரும்; அச்செயல்கள் வினைகள் எனப்படும்.

வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையும் காலைக் காலமொடு தோன்றும்

(சொல்.வினை. 198)

என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதை அறிவுறுத்துகிறது'' என்று விளக்குகிறார் ஆசிரியர்.

இரண்டாவது இயலில், 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதையே கருப்பொருளாகக் கொண்டது சிலப்பதிகாரம்' என்பதை எடுத்துக்காட்டுகிறார். அதாவது, நமது ''பழைய செயல்கள் நம்மைத் தொடர்ந்து வந்து நமக்குப் பலன் தரும், அப்பலனை நியதிப்படி ஊட்டுபவன் இறைவன்'' என்பது தமிழர்தம் கோட்பாடு என்பார் ஆசிரியர்.

''ஆன்மா ஒரு நிலையான பொருள்'' என்பதையும். ''செயல்கள் செய்து இன்பதுன்பங்களை நுகர்வது ஆன்மாவின் இயல்பு'' என்பதையும் அடுத்த இரு இயல்களில் ஆசிரியர் சொல்லுகிறார்.

ஐந்தாவது இயலில் வினை வகைகளை ஆசிரியர் விவரமாக அளித்துள்ளார். நமது வினைகளால் அதாவது நம் நல்வினை தீவினைகளால் நமக்குப் பலன் கண்டிப்பாகக் கிடைக்கும்; அப்பலன்களை நாம் தவிர்க்கமுடியாது என்பதை

ஊழில் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும் (குறள். 380)

என்ற வள்ளுவர் வாக்கால் நமக்கு ஆசிரியர் சுட்டுகிறார்.

அடுத்து, இறைவன் அன்புக்கு எளியவன் என்பதையும் ஆன்மா உய்வினை நாடும் இயல்பினது என்பதையும் ஆசிரியர் சொல்கிறார். அதாவது அந்தமில் ஆனந்தத்தை ஆன்மா தேடும் என்பதைத் தொல்காப்பியரே சொல்லியுள்ளார் என்பது ஆசிரியர் கருத்து. அதற்குச் சான்றாகக் கீழ்க்காணும் தொல்காப்பியச் சூத்திரத்தை அவர் கொடுத்துள்ளார்.

அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே (தொல்.கற்பியல்-47)

ஒன்பதாவது இயலில் ''நாம் நமது கடமைகளைச் செய்ய வேண்டும் அவ்வாறு கடமைகளை ஆற்றி வாழும்போது, நன்மையும் தீமையும் வரும். அவை வருவதற்கு யாரேனும் காரணம் ஆகலாம்; ஆனால் அந்த நன்மை தீமைகள் நமது செயல்களால் நமக்கு வருவன. ஆகவே நன்மை செய்தவரோ, தீமை செய்தவரோ அவற்றிற்குப் பொறுப்பல்ல. ஆகவேதான் வள்ளுவரும்

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (குறள் - 314)

என்று கூறினார்'' என்று நமக்கு இவ்வாசிரியர் விளக்குகிறார்.

வாழ்க்கையின் குறிக்கோளாக நாம் வினையில் நீங்க வேண்டும் என்பதே தமிழர்தம் வாழ்வியல் கோட்பாடு; அதை அடைய அதற்கு முன்னதாக உள்ள படிக்கட்டாக விளங்குவது திருவடிப்பேறு ஆகும். வள்ளுவர் காலத்திலேயே இதை நம் தமிழர் உணர்ந்திருந்தனர் என்பதை ஆசிரியர்

பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (குறள் - 350)

என்ற குறளைச் சுட்டி நமக்குத் தெளிவுபடுத்துகிறார்.

பெருவாழ்வு வாழ விரும்பும் தமிழன் அதை அடையப் பாசத்திலிருந்து விடுபடவேண்டும். சிவஞானசித்தியார் போன்ற பல சைவ நூல்களிலிருந்து மேற்கோள் காட்டும் ஆசிரியர் இவற்றிற்கு அடிப்படையாக வள்ளுவர்

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் (குறள் - 629)

என்று சொல்லியதைச் சுட்டுகிறார். மேலும் "நல்வினை தீவினை இரண்டுமே பிறப்புக்கு வித்து; அவற்றிற்குரிய பலனாகிய இன்பத் துன்பங்கள் இரண்டுமே நிலையற்றன என்பதைக் கருத்திற் கொண்டு இரண்டையும் வேறுபாடு இன்றி ஒப்ப நோக்கி வாழ வேண்டும் என்று இக்குறள் மூலம் நம்மனோர்க்கு வள்ளுவர் அறிவுறுத்தினார்" என்ற தன்னுடைய முடிவையும் விளக்குகிறார்.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும் (பொருள்.மரபி. 640)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தைக் காட்டிச் சீவன் முத்தர் என்ற பொதுக்கொள்கை தொல்காப்பியர் காலத்திலேயே தமிழருக்கு இருந்தது என்பதை நமது ஆசிரியர் தனது சீவன் முத்தர் இயல்பு என்ற கடைசி இயலில் உணர்த்துகிறார்.

ஆக, பேரின்ப முத்திப்பேற்றினை முடிந்த முடிவான இலக்காகக் கொண்டது நம் பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் கோட்பாடு; அதனை இப்பூவுலக வாழ்விலேயே பெறுவதற்கும் சீவன் முத்தர் ஆவதற்கும் வாய்ப்புகள் உள்ளன; அவ் உயரிய நிலையை அடைதற்குச் சைவச் செந்நெறிகளைப் படிமுறையில் பயில்வதும், வினையில் நீங்குவதும் இன்றியமையாதன என்ற சீரிய கருத்துக்களை நமது ஆசிரியர் மிக அழகாக நிறுவுகிறார்.

ஆசிரியரின் அறிவியல் சிந்தனைகளும், அனுபவ மொழிகளும் சமுதாயத்துக்குப் பெரிதும் பயனளிக்கும் என்பது உறுதி. யாவரும் விரும்பிப் படித்துப் புரிந்து கொள்ளும் வகையிலும் எளிய நடையிலும் இந்நூலை இயற்றியுள்ளமை பாராட்டுக்கு உரியது. அவர் மேன்மேலும் இத்தகு சிறந்த சிந்தனை நூல்களை எழுதி மக்களை நன்னெறியில் ஆற்றுப்படுத்துவாராக!

யாவரும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக!

ச. முத்துக்குமரன்

பேரா. முனைவர் வீர முத்துக்கருப்பன், FNS FAS
முன்னாள் துணை வேந்தர். பாரதிதாசன் பல்கலைக்கழகம்
இயக்குநர். ஆய்வியல், அரவிந்த் கண் மருத்துவமனை , மதுரை.

பாராட்டுரை

திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் யான் துணை வேந்தராகப் பணியாற்றியபோது, என் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் சிறப்பு நிலைப் பேராசிரியர் சைவசித்தாந்தக் கலாநிதி சிவத்திரு அ.சொ. சுப்பையா அவர்கள் 'சுந்தரரும் சேக்கிழாரும்' என்ற தலைப்பிலும் 'வினையும், விளைவும்' என்ற தலைப்பிலும் 4-12-1995 திங்கட்கிழமை இரண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். அவை முனைவர் ச. முத்துக்குமரனார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளாகும்.

'வினையும் விளைவும்' என்ற இரண்டாவது பொழிவினை அவர்களே இப்போது 'விதியை மதியால் வெல்லலாம்' என்னும் தலைப்பில் நல்லதொரு நூலாக விரிவாக்கம் செய்து எழுதியுள்ளார்கள். அண்மையில் இந்நூலைப் படிக்கும் வாய்ப்பு பெற்றேன். இலக்கியச் சுவை, தத்துவ சிந்தனை என்பவற்றோடு, பெரிதும் அறிவியல் அடிப்படையில் இந்நூல் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

இந்நூலின் தொடக்கமே நம் நடைமுறை வாழ்வின் நிகழ்ச்சியில் அமைக்கப்பெற்றுள்ளது. தன் பேத்தியின் இன்பத்துக்குக் காரணம் மருதாணிப்பூச்சு; அவளுடைய துன்பத்துக்குக் காரணம் கத்தியின் கீறல் என்ற நிகழ்வு மூலம் சிந்தனை தொடங்குகிறது. சிவசாமியும் குப்புசாமியும் தத்துவ மற்றும் அறிவியல் விளக்கங்கள் கேட்டுப் பாடங்கள் கற்றுக் கொள்ளுவதுபோல இந்நூல் சுவையுற அமைந்துள்ளது.

நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஓர் இலக்கினை நோக்கியே சிந்திக்கிறோம்; செயற்படுகிறோம்; அச்சிந்தனையும் செயற்பாடும் இடையறாது நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. ஆயினும் இலக்கினை அடைவதில் சிலர் வெற்றி பெறுகின்றனர். வேறு சிலர் தோல்வியைத் தழுவுகின்றனர். வெற்றி கண்டவர் மிகவும் மகிழ்வுறுகிறார். மற்றவரோ பெரிதும் வருந்துகிறார்; துன்புறுகிறார்.

இன்பத்துக்குக் காரணம் வெற்றி என்பதும், துன்பத்துக்குக் காரணம் தோல்வி என்பதும் வெளிப்படையாக யாவர்க்கும் தெரிந்த உண்மைகள். ஆயினும் அந்த வெற்றிக்கும் தோல்விக்கும் அடிப்படையான மூலகாரணங்கள் இருக்க வேண்டும்: அவை யாவை? என அலசி ஆய்வது நல்லறிஞர்களின் பொதுவானதோர் இயல்பு.

சைவ சித்தாந்த சாத்திரங்களும், தோத்திரங்களும் இது தொடர்பான அரிய பல உண்மைகளை மிகச் செறிவாக ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளன. அத்தகு உயர்ந்த கருத்துக்கள் மக்களைச் சென்று அடைய வேண்டியது இன்றியமையாத தாகும். என்றாலும் அவை கூறும் நுணுக்கங்களும் உட்கிடை களும் யாவர்க்கும் எளிதில் புரியும் என்று சொல்லுவதற் கில்லை.

ஆணவத்தின் தூண்டுதலால், ஆன்மாக்கள் பலப்பல வினைகளைச் செய்ய, அவ்வினைகளின் பயனாகவே பிறப்பு-இறப்பு, செல்வம்-வறுமை, வெற்றி-தோல்வி, இன்பம்-துன்பம் என்பன போன்ற மாறுபட்ட வாழ்க்கை முறைகள் அமை கின்றன என்னும் சைவக் கோட்பாட்டினை இந்நூலில் ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகிறார்.

சைவ சித்தாந்தத்தின் சீரிய இக்கொள்கைகளின் பின்னணி யில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுறைகள் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களையும், சிவஞானபோதம், சிவஞான சித்தியார் போன்ற சாத்திர நூல்களையும், நடப்பியல் நிகழ்ச்சி களையும் சான்று காட்டி அறிவியல் அடிப்படையில் ஆய்ந்து நோக்கியுள்ளார் இந்நூலாசிரியர்.

நாம் ஒவ்வொருவரும் நடைமுறை வாழ்வில் செய்கிற இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வினைகளின் வகைகளை விரித்துக் கூறி, ஆங்காங்கே மேற்கோள் பாடல்களையும் வரலாறுகளையும் சுட்டிக்காட்டி எளிமையான முறையில் அவற்றை விளக்கியுள்ளார்.

உடற் கூறு-சைவசித்தாந்தம் தொடர்பான அவருடைய தெளிவான ஒப்பாய்வுகளைக் கூர்ந்து நோக்குவார்க்கு அவர் பன்னெடுங்காலம் சிவயோக நெறி நின்று பெற்ற அனுபவத்தின்

ஆழமும் விழுப்பமும் நன்கு புலனாகும். ஒப்புநோக்கு வரைபடங்கள் பயனுறுமாறு அமைந்து மன நிறைவைத் தருகின்றன.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற உயர்ந்த குறிக்கோளாடு நூலாசிரியர் தம் நுண்மாண் நுழை புலத்தாலும், தெளிவான சிந்தனையாலும், நிறைந்த அனுபவத் தாலும் கடுமையாக உழைத்து இந்நூலை யாத்துள்ளமை பாராட்டிற்குரியது.

பலப்பல சிவசாமிகளும் குப்புசாமிகளும் படித்துப் பயனடைய வேண்டிய நூல், ஆசிரியரின் அறிவியல் சிந்தனை களும் அனுபவ மொழிகளும் சமூதாயத்துக்குப் பெரிதும் பயனளிக்கும் என்பது உறுதி. சிந்தனைக்குரிய நூல்: விவாதிக்க வேண்டிய கருத்துக்களும் நிறைய உள்ளன.

சைவசித்தாந்தக் கலாநிதி சிவத்திரு அ.சொ, சுப்பையா அவர்கள் இவை போன்ற செந்தமிழ் நாட்டின் பழம்பெரும் தத்துவச் சிந்தனைகளை இக்கால அறிவியல் கருத்துக்களோடு ஒப்பாய்வு செய்து இந்நூல் போன்று மேலும் பல நூல்களை எழுதித், தமிழகத்தின் தொன்மைச் சிறப்புகளை உலகறியச் செய்வார்களாக!

வீர முத்துக்கருப்பன்

'சேவா ரத்னா'

பேரா. மருத்துவர் மு.கோ. முத்துக்குமாரசாமி

D.Sc., M.S., F.A.C.S., F.I.C.S., F.M.M.C., F.I.M.S.A.,

முன்னாள் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மதிப்புரை

'விதியை மதியால் வெல்லலாம்' என்ற நல்லதொரு நூலைச் சைவசித்தாந்தக் கலாநிதி, சிவத்திரு அ.சொ. சுப்பையா, எம்.ஏ. அவர்கள் எழுதியுள்ளார்கள்; படித்துப் பார்த்தேன். அரியபல ஆழ்ந்த சித்தாந்தக் கருத்துக்களை, உடற்கூற்றோடு ஒப்பாய்வு செய்து, தகுந்த வரைபடங்களோடு, எளிய இனிய மொழியில் விளக்கியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. நிறைந்த அனுபவத்தின் வெளிப்பாடு இந்நூல் என்பதில் ஐயமில்லை.

அவர்கள் சுட்டி உரைப்பதுபோல், நம் தலையிலுள்ள பெருமூளை என்பது அளவால் பெரியது என்பது உண்மையே; ஆயினும், நம் போன்ற சாதாரண மக்கள் அதில் 2% மட்டுமே பயன்படுத்துகிறோம் என்பது இக்கால நரம்பியல் ஆய்வாளர்கள் பலரின் ஒருமித்த கருத்து. மூளையின் இப்பகுதியைச் சீராகப் பயன்படுத்தினால் பண்டையத் தமிழகத்தில் வாழ்ந்த சித்தர் பெருமக்களின் சிந்தனை வளத்தை நாமும் பெறமுடியும் என்பதை இன்றைய அறிஞர் உலகம் உணரத் தொடங்கியுள்ளது.

பொதுவாக அறிவியலை இரண்டு கோணங்களில் சிந்திக் கலாம். ஒன்று புற உலகப் பொருள்களின் தோற்றம், வளர்ச்சி, மற்றும் முடிவு பற்றிய ஆய்வுகள். ஏனையதோ, எக்காலத்தும் அழியாது இருப்பதாக நம் முன்னோர்கள் அறிவுறுத்திச் சென்றிருக்கும் செம்பொருட் கொள்கைகள் பற்றிய அனுபவங்கள்.

இவற்றுள் முன்னவை உலகியல்-அறிவு தொடர்பானவை. அவை கண்ணுக்கும் கருத்துக்கும் தெளிவாக நிற்பன. எனவே பல்லோரும் ஆய்ந்து ஒரே முடிவுக்கு வர வாய்ப்புகளும் உள்ளன.

ஏனையது இறை - ஞானம். அஃது எல்லாராலும் எளிதில் உணரமுடியாத அதி நுண்ணிய பொருள்களின் சீரிய ஒருங்கிணைப்பு; செந்நெறி நிற்போர்க்குப் பயனளிப்பது.

பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்பு எனும்
செம்பொருள் காண்பது அறிவு (குறள் - 358)

என்பார் திருவள்ளுவரும். முடிந்த முடிவாகிய முத்திப்பேறு என்பது ஒன்றேயாயினும், இடைப்பட்ட நிலைகள் ஏராளமாக இருப்பதால், அந்நெறி பற்றிச் சிந்திப்பார்க்கு உள்ளத்தில் ஒருவகை மருட்கை ஏற்படுவது இயல்பே.

தெரிந்த பொருளை உவமை காட்டித் தெரியாத பொருள் களை உணர்த்தலாம் என்ற உறுதிப்பாட்டோடு, உவம-இயல் என்ற ஒரு தனி இயலையே வகுத்தவர் நம் பழந்தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர்.

அவரை அடியொற்றி இந்நூலாசிரியரும் உடற்கூற்றியலை யும், பிற அறிவியல் முடிவுகளையும் ஆதாரம்காட்டிச், சைவப் பெரு நெறியின் மேன்மையை நிலைநாட்ட முற்பட்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது.

மேலை நாடுகளில் மட்டுமன்றி, நம் நாட்டிலும் அண்மைக் காலம் வரை இறைமைக் கொள்கைகளை வெறும் மூட நம்பிக்கை என்று சிந்தித்தவர்கள் பலர். கடவுட் சிந்தனையை ஏற்றவருள்ளும் கருத்து வேறுபாடுகள் பலவாறாக இருந்துள்ளன. வினைக் கொள்கை என்பது அத்தகைய மெய்ப் பொருளியல் தொடர்பான ஒரு அரிய சிந்தனையாகும்.

''ஒவ்வொரு செயலுக்கும் சமமானதும் எதிரானதுமான மாற்று விளைவு உண்டு'' என்ற ஆய்வு-முடிவுகளைப் பொருள்-அலைவுக் கொள்கைகளாக (*Law of Motion*) நியூட்டன் போன்ற மேலைநாட்டு அறிவியல் மேதைகளும் கூறியுள்ளனர். அவை பருமையான உலகியல் பொருள் தொடர்பானவை. எனினும், நுண் பொருள்களாகிய வினைகளையும் அவற்றிற்கான விளைவுகளையும் சமய - தத்துவங்களாக எண்ணிப் பார்ப்பதே பொதுவான உலக வழக்கு.

ஆனால், வினைகளின் படிமங்கள், 'ஹைப்போதாலமஸ்' என்றவாறு, நம் மனித உடலின் சிரசுப் பகுதியில் உள்ளன என்றும், மடைமாற்றம் என்ற உத்தி மூலம், சித்தத்தைச் சிவன்பாலே வைத்து, சிவ-தியானம் செய்வதால் மூளை-நரம்பு களையும், முதுகந்தண்டு நரம்புகளையும் புதுப் பொலிவுறச்

செய்யலாம் என்றும், உடலினுள் பொதிந்து கிடக்கும் அரிய கருவூலங்களை அதன் மூலம் அகழ்ந்து எடுத்து உயரிய பயன் களைப் பெற வாய்ப்புகள் உள்ளன என்றும் இந்நூலாசிரியர் அறுதியிட்டுக் குறிப்பிடுகிறார். இஃது அவர் நீண்டகால சிவயோகப் பயிற்சியின் விளைவாகப் பெற்ற ஆழ்ந்த அனுபவத்தின் வெளிப்பாடாகும்.

யான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராக இருந்தபோது, இந்நூலின் ஆசிரியர் சிவத்திரு அ.சொ. சுப்பையா அவர்கள், அங்குத் தமிழியல் துறையில் சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணியாற்றினார். சைவசித்தாந்த சாத்திரங்களிலும், தோத்திரங்களிலும் நிறைந்த பயிற்சியுடையவர். நாளும் தவறாது எரிஓம்பி, அகநோக்கில் சிவ வழிபாடு இயற்றுபவர், நல்ல பண்பாளர், எம் அன்புக்கினிய நண்பர். அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக அவர்கள் உருவாக்கி வழங்கிய 'தொல்காப்பியம்-சைவசித்தாந்த நோக்கில்' என்ற நூல் சமயப் பெரியோர்களாலும், அறிவியல் அறிஞர் களாலும் ஒருங்கே பாராட்டப் பெற்ற சிறப்புடையது. உடற் கூறு தொடர்பான அவருடைய அறிவியல் அணுகுமுறையை பலரும் வியந்து பாராட்டுவர்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் திரு. சுப்பையா அவர்கள் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவின் விரிவாக்கமே 'விதியை மதியால் வெல்லலாம்' என்னும் இந்நூல் என்பது, அவர்தம் முன்னுரையிலிருந்து அறியற்பாலது.

சைவசித்தாந்தம் பழம்பெரும் திராவிட நாகரிகத்தின் தனிப்பெருங் கருவூலம் என்பது மேலைநாட்டு அறிஞர்களான ஜி.யூ.போப் போன்றோரும் ஏற்றுக்கொண்ட உண்மை. அதன் கோட்பாடுகள் கால எல்லைகளையும் நில எல்லை களையும் கடந்து வாழக் கூடியவை. சைவ-ஆகமக் கருத்து களின் சாரமாகத் திகழ்வது இந்நூல். இதனைப் பலரும் பயின்று, தத்தம் அனுபவத்தில் கொண்டு, இன்புற்றிருக்க இறைவன் திருவருள் பாலிப்பாராக!

(ஒ-ம்) *மு.கோ.முத்துக்குமாரசாமி*

தாயகம்.
சென்னை-40

21-02-2002

Dr. A. KRISHNAMURTI
B.Sc., M.B.B.S., F.A.Z., Ph.D., F.S.Z., M.I.Biol., F.A.M.S., F.A.B.M.S
உடற்கூறியல் பேராசிரியர் & திட்ட ஒருங்கிணைப்பாளர்
இராசா முத்தையா மருத்துவக்கல்லூரி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மதிப்புரை

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார்.

நம் உடம்பினை வெறும் தசை, எலும்பு, நரம்பு, குருதி முதலியவற்றின் கூட்டமைப்பு எனச் சிந்திப்போரே இன்றைய உலகில் மிகுதி. ஆயினும் நம் முன்னோர்கள் மனித உடம்பின் தெய்வீகத் தன்மையைத் தெளிவாக உணர்ந்திருந்தனர்.

'ஊன் உடம்பு ஆலயம்' என்றும், 'உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்' என்றும் கூறுகிறார் திருமூலர். ஊன்-உடம்பினுக்குள்ளே உறுபொருளாகிய இறைவனை எவ்வாறு யோகிகளும் ஞானிகளும் கண்டிருப்பார்கள் என எண்ணி வியப்பது யாவர்க்கும் இயல்பே. அதற்கான பல விடைகளையும் விளக்கங்களையும் 'விதியை மதியால் வெல்லலாம்' என்ற இந்நூலில் படித்தறிதற்கான நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது; மகிழ்வுறுகிறேன்.

சைவசித்தாந்தக் கலாநிதி, சிவத்திரு அ.சொ.சுப்பையா அவர்கள் கால் நூற்றாண்டுக்கு மேலான மெய்த்தவத்தால், தாம் கசடறக் கற்றவற்றைக் கற்றபடி சிவயோக நெறியில் நின்று, யாவற்றிலும் மெய்ப் பொருள் கண்டு, முதிர்ந்த அறிவால் நல்ல பல நூல்களை உருவாக்கி வரும் உயரிய பண்பாளர்.

தில்லைக் கூத்தன் திருவருளால் 'தில்லைத் திருப்பதிகங்க'ளைச் செவ்விய குறிப்புரைகளோடு வரைந்து வழங்கிய அவர்கள், அறிவியல் அணுகுமுறையில் தாம் எழுதிய 'தொல்காப்பியம்-சைவசித்தாந்த நோக்கில்' என்ற நூலில், அரிய பல பழந்தமிழ்ச் சைவக் கொள்கைகளை விளக்கி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மூலம் வெளியிட்டு, அறிஞர்களின் பாராட்டைப் பெற்றார்கள்.

'விதியை மதியால் வெல்லலாம்' என்ற இந்நூலை வினா-விடை வடிவில் அமைத்து, உயர்ந்தபல சைவக் கொள்கை களை எளிய சான்றுகளோடும், ஒப்புநோக்கு வரைபடங்களோடும் நன்கு விளக்கியுள்ளார்கள். நூலில் பொதிந்துள்ள கருத்தாழமும், அமைப்பு முறையும், இனிய எளிய விளக்கங்களும் என்னை மிகவும் கவர்ந்தன. அவற்றுள் சிலவற்றை இங்கு நினைவு கூர்தல் சிறப்பாகும்.

நம் மூதாதையர் பலரும் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்கள்; சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்கள்; திருவருள் துணைநிற்க, தத்தம் உடம்புக்குள் கடவுளின் திருவுருவங்களைக் கண்டு, வழிபட்டு, இவ் உலக-வாழ்விலேயே பேரின்பத்தை நுகர்ந்தவர்கள்; தாம் பெற்ற அப் பேரின்பப் பெருவாழ்வினைத் தம் வழித் தோன்றல்களாகிய நாமும் பெற்றுப் பயனுற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்டவர்கள்.

ஆகவே, தாம் தம்முள் அகக் - காட்சியாகக் கண்டவற்றைத் திருக்கோயில்களில் கடவுளின் திருவுருவங்களாகச் சமைத்துப் புறவழிபாட்டுக்கும், பொதுவழிபாட்டுக்கும், உரிய மூர்த்தங் களாக ஆக்கி, நம்மையெல்லாம் நன்னெறியில் ஆற்றுப் படுத்தியுள்ளனர்.

எனினும் புறவழிபாடே அவர்களுடைய முடிந்த முடிவான குறிக்கோள் அன்று. புறக்கண்களால் ஆலயங்களில் நாம் காணுகிறவற்றைச் சிறிதுசிறிதாக உள்முகப்படுத்தி மனக்கண்ணால் பாவித்து, பருவ முதிர்ச்சியில், அதிநுண்மையான அருட் கண்ணால் நோக்கி, பேரின்பப் பாதையில் நாமும் பீடுநடை போட வேண்டும் என்பதே அவர்களுடைய உள்ளார்ந்த விருப்பமாகும்.

சான்றாண்மை மிக்க அப்பெரியவர்களின் உட்கிடையைச் செவ்விதே உணர்ந்த நிலையில், அன்பிற்கினிய திரு சுப்பையா அவர்கள் அகம்-புறம் ஆகிய இரண்டு வழிபாட்டு முறை களையும் இந்நூலில் இயைபுபடுத்திக் காட்டியுள்ளார் எனலாம். உடலினுள்ளும், மனத்தினுள்ளும், உயிரினுள்ளும் இறைவன் எவ்வாறெல்லாம் தன்னைக் காண்பித்து நிற்கிறான் என்பதை, அவர் அனுபவ வழி உணர்ந்து, அங்ஙனம் உட்காட்சியாகவும், உள்ளுணர்வாகவும் *(In-sight and in-tuition)* தாம் பெற்ற

அருளிப்பாடுகளைத் தமக்கே உரிய பாணியில் வரைபடங் களின் துணையோடு விளக்குகிற பாங்கு பாராட்டுதற்குரியதாகும்.

நம் ஒவ்வொருவருக்கும், அவரவர் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப, இறைவன் நடுவுநிலை நின்று உரிய முறையில் இன்ப துன்பப் பயன்களை ஊட்டுகிறான் என்பதே இந்நூலின் கருப்பொருள்; தத்துவச் சிந்தனையாகிய அக்கருத்து பலப்பல இலக்கியச் சான்றுகளோடும் வரலாறு, நடப்பியல் தொடர்பான எடுத்துக்காட்டுகளோடும் அறிவியல் அடிப்படை யிலும் அழகுறவே சித்திரிக்கப்பட்டுள்ளது.

விருப்பங்களுக்கு ஊற்றுக்காலாய் இருப்பது மனம் என்றும், அறிவுக்கு நிலைக்களனாக இருப்பது புத்தி என்றும், செயற்பாட்டை ஊக்குவிப்பது அகங்காரம் என்றும் இம் மூன்றின் நிகழ்வுகளையும் பதிவு செய்யும் குறிப்பேடு சித்தம் என்றும் கூறி, நுண்ணிய உட்கருவிகளின் இயல்புகளை வகைப்படுத்தி யுள்ளனர் நம் சைவத்தமிழ் அறிஞர்கள்.

மேலும், உடம்பை மட்டும் வைத்து, கோயில் காரியங் களைச் செய்வதைத் தொண்டு நெறி (தாச-மார்க்கம்) என்றும், மனத்தை ஈடுபடுத்தி மனம், உடம்பு இரண்டாலும் செயற் படுவதை வழிபாட்டு-நெறி (கிரியா மார்க்கம்) என்றும் மனம், புத்தி, அகங்காரம், சித்தம், ஆன்மசிற்றறிவு யாவற்றையும் ஒருங்கிணைத்து இறைவனை உள்முகமாகத் தமக்குள்ளேயே கண்டு வழிபடுதலைத் தோழமை நெறி / யோகநெறி (சக-மார்க்கம்) என்றும், அனைத்தையும் ஆண்டவனின் திருவடியில் அர்ப்பணித்து அவனருளில் திளைத்திருப்பதை ஞானநெறி (சன்மார்க்கம்) என்றும், அதுவே சிவத்தை அடைவதற்கான நால்வகைச் செந்நெறி என்றும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். ஆன்மாவின் படிமுறை வளர்ச்சி (*Evolution of Soul*) எனப் பெறும் இஃது ஒரு பண்பட்ட அணுகுமுறையாகும்.

மேலைநாட்டு மருத்துவ அறிஞர்களின் ஆய்வு முடிவு களுக்கும், தமிழகத்தின் இத்தத்துவச் சிந்தனைகளுக்கும் சீரான அறிவியல் ஒருமைப்பாடு இருப்பதை நன்கு உணர்ந்த சிவத்திரு சுப்பையா அவர்கள் தம் அனுபவங்களுக்கே உருவம் கொடுத்து நல்ல பயனுள்ள ஒரு நூலாக இதனைப் படைத்துள்ளார் எனலாம்.

பெருமூளையின் அடியிலுள்ள ஹைப்போதாலமஸ் *(Hypothalamus)* என்ற பகுதியை நூலாசிரியர் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் கூட்டமாகவும், ஊழ்வினைகளின் பதிவேடாகவும் *(Slate of Destiny)* கொண்டு, தலையெழுத்து என்ற தத்துவக் கொள்கையை நிறுவுகிறார்:

தலை-எழுத்து என்பதை விதி என்றும், மூளையின் வல-இடக்கூறுகள் இரண்டையும் *(Two Cerebral Hemispheres)* இயைபுபடுத்துகிற மூளை-இணைப்பான் *(Corpus Callosum)* என்ற உறுப்பு ஒரு பிறைமதியின் தோற்றமுடையது என்றும் எடுத்துக் கூறி, அவற்றின் தொடர்பால் விளையும் பயன்களை ஆசிரியர் விளக்கும் முறை சிறப்புடையதாகும்.

ஆழ்ந்த சிவ-தியானத்தின் மூலம், மதியாகிய மூளை-இணைப்பானைச் சிவமாகவே பொலிவுறச் செய்யலாம் என்றும், விதியாகிய தலையெழுத்தை அம்மதியின் துணையால் வெற்றி கொள்ளலாம் என்றும் அறுதியிட்டுக் கூறுகிறார். 'விதியை மதியால் வெல்லலாம்' என்ற பழமொழிக்கு நூலாசிரியர் இங்குத் தருகிற விளக்கம், சிந்தனைக்கு விருந்தாகிற புதிய கருத்து ஆகும்.

இன்பம் விளையும்போது இறுமாந்து ஆர்ப்பரிக்காமலும், துன்பம் நேரும்போது துவண்டுவிடாமலும், வாழ்க்கையை அமைதிப் பூங்காவாகப் பண்படுத்திக் கொள்ள இத்தகைய நூல்கள் மிகவும் தேவை.

படிப்போர் மனத்தில் தெளிவையும் நிறைவையும் ஏற்படுத்துகிற இந்நூலை யாவரும் படித்துப் பயன் பெறுவார்களாக!

ஆ. கிருஷ்ணமூர்த்தி

அண்ணாமலைநகர்
11-02-2002

பொருளடக்கம்

பதிப்புரை

அணிந்துரை

முன்னுரை 5

பாராட்டுரைகள்

முனைவர் ச. முத்துக்குமரன் 7

முனைவர் வீர. முத்துக்கருப்பன் 11

மதிப்புரைகள்

மருத்துவர் மு.கோ. முத்துக்குமாரசாமி 14

மருத்துவர் ஏ. கிருஷ்ணமூர்த்தி 17

பொருளடக்கம் 21

வரைபடங்களின் அட்டவணை 22

இயல் அமைப்பும் உட்கிடையும் 23

முகவுரை 31

நூன் முகம் 37

நூல் 43

துணைநூற் பட்டியல் 353

வரைபடங்களின் அட்டவணை

1.	மூலாதார விநாயகர்	46
2.	மாதொருபாகனும் பெருமூளையும்	75
3.	ஆலமர் கடவுளும், பார்வைக்குறுக்கும் மூளையின் அமைப்பும் இயக்கமும் பெருமூளையின் உட்பகுதி	109
4.	தலை எழுத்து	117
5.	இருதயம்-சிவலிங்கம்	242
6.	ஆதாரயோகம் - (மனித உடலில்)	257
7.	பிச்சாடனரும் பெருமூளைத் தியானமும்	257
8.	விநாயகர் ஔவையைக் கயிலையில் சேர்த்தல்	296
9.	மைய நரம்பு மண்டலமும் ஆகாய கங்கையும்	307
10.	மதிசூடி	350
11.	பள்ளிகொண்ட ஈஸ்வரன்	350

இயல் அமைப்பும் உட்கிடையும்

நூன்முகம் 37

இன்ப துன்பத்துக்குக் காரணம் 37

நல்வினை 37

இருள்சேர் இருவினை 37

விதி என்பது என்ன? 37

விதி ஏடு 39

மதி என்பது என்ன? 39

விதி-மதி பற்றித் திருவள்ளுவர் 41

மங்கல வாழ்த்து 43

பொள்ளார் இணை மலர் 43

அறிவியலும் சிவயோகமும் 44

அவையடக்கம் 47

இயல் 1 : வினையே பிறவிக்கு வித்து (தடைகளின் இருப்பு) 48

இன்பமும் துன்பமும் 48

இன்ப துன்பங்கள் - இயல்பா? 49

வினை என ஒன்று உண்டா? 51

பழந்தமிழ்க் கொள்கை 52

சமுதாய ஏற்றத் தாழ்வு 53

பழவினைகளின் தொடர்ச்சி 55

புதுவினைகளின் ஈட்டம் 56

வினை என்றால் என்ன? 56

ஊழ் என்றால் என்ன? 57

சைவசித்தாந்தக் கோட்பாடுகள் 58

வினை எவ்வாறு உயிரைத் தொடர்கிறது? 60

அறிவியல் இலக்கியச் சான்றுகள் 61

வினைக்கான வாயில்கள் 62

முயற்சி-ஒரு துணைக் காரணமே 63

முயற்சி நுகர்ச்சிக்கு ஓர் ஊக்கியே 64

வினையே வித்து 68

இயல் 2 : இரு வினைப் பயனை இறைவனே ஊட்டுதல் (கடவுள் உண்மை) 69

வினைகளே பயன்தர வல்லனவா? 69

உயிர்கள் தாமே வினைகளை ஏற்குமா? 71

உயிர்கள் மறக்கும் இயல்புடைய சிற்றறிவு 71
உயிர்கள் துன்பங்களை உகந்து ஏற்குமா? 72
பரம்பொருள் தேவை 72
நுகர் கருவிகளின் தேவை 72
இறைவனே வினைப்பயனை ஊட்டுவன் 74
மாதொருபாகனாய் நின்று ஊட்டுவன் 74
நுகர்ச்சிக்கு ஆன்மாவைத் தயார்செய்தல் 76
சிவம்-உயிர்கள் அத்துவிதக் கூட்டம் 77
ஊட்டத்தில் நீதியும் நியதியும் 78
நியதி தத்துவம் 78
மறைந்து நின்று ஊட்டுதல் 78
இறைவனே ஏன் ஊட்ட வேண்டும்? 79
நுகர்ச்சிக்கு ஏற்ற உடம்பு 80
சிவபெருமானே வினைப்பயனை ஊட்டுமுறை 81
சோறும் கூறையும் தருபவன் 82
உடம்பு முதலியன ஏன்? 83

இயல் 3 : உயிர் ஒரு சிற்றறிவுப் பொருள்
(உயிர்களின் உண்மை) 85

விதியின் விளையாட்டு 85
ஆணவமும் கூடா நட்பும் 86
இலக்கியங்களில் ஆணவம் பற்றிய குறிப்பு 88
ஆகூழ்ப் பயன் 88
சிற்றின்பம் 90
வினை-உயிர் தொடர்பு எப்போது ஏற்பட்டது? 90
ஆன்ம வளர்ச்சியில் மூன்று நிலைகள் 90
மூலகன்மம் 91
சகல நிலை 92
சுத்த நிலை 92
மறுமைக்குக் காரணம் என்ன? 92
வினை எச்சம் 93
புதுவினை ஈட்டம் 93
பசு செய்கிற வினை 94

இயல் 4 : உணர்த்த உணரும் ஆன்ம இயல்பு
(உயிர்களின் இயல்பு) 96

வினை-நுகர்ச்சி உடலுக்கா? உயிருக்கா? 96
ஆன்மா என்பது சிற்றறிவுப் பொருள் 98
அறிவும் உணர்வும் 99

ஆன்மாவுக்கு முக்குண சரீரம்	*101*
குண சரீரமும் வினை ஈட்டமும்	*102*
வினைகளின் பதிவு எங்கே?	*104*
சித்தத்தின் செல்வாக்கு	*105*
சித்தம் உணர்கருவி (அறிவியல் சிந்தனை)	*106*
மறுபிறப்பும் உயிரின் இடைப்பட்ட நிலையும்	*111*
வினைவழி, பிறப்பும் வாழ்வும்	*112*
நுகர்ச்சி அட்டவணை	*114*
சித்தம் ஓர் ஆவணக்களரி (அறிவியல்)	*115*
தலை எழுத்து எவ்வாறு பொருந்தும்?	*117*
திருந்து சாத்துவிகம்	*119*
இயல் 5 : ஊழில் பெருவலி யாவுள? (வினை வகைகள்)	121
பந்தபாசம்	*126*
மறைத்தல் தொழில் ஏன்?	*127*
விபரீத ஆசைகள்	*130*
இறை வழிபாடு வினையாகுமா?	*131*
அருள் வினையும் இருள் வினையும்	*131*
அருள் சேர் வினை	*132*
இருள்சேர் இரு வினை, நல் வினை, தீ வினை	*133*
பொன்விலங்கும் இரும்பு விலங்கும்	*134*
வினை வகைகளும் பெயர்க் காரணமும்	*135*
ஆகூழ்-ஆகாமியம்	*135*
தொகுப்பு வினை-சஞ்சிதம்	*136*
நுகர் வினை - பிராரத்தம்	*137*
ஆதி தைவிகம்	*140*
ஆதி ஆன்மிகம்	*142*
ஆதி பௌதிகம்	*144*
அபுத்திபூர்வ வினை	*147*
புத்தி பூர்வ வினை	*149*
மன மொழி மெய் வினைகள்	*150*
இச்சை, ஞானம், கிரியை	*151*
பயன் கருதி வினை	*157*
பயன் கருதா வினை	*159*
மறைந்திருந்து பயனளிப்பவை	*161*
இரு போழ்தும் பயனளிப்பவை	*163*
உலக வினை	*165*

வைதீக வினைகள் 166
அத்தியான்மிக வினைகள் 166
அதிமார்க்க வினைகள் 167
மாந்திர வினை 167
விதி என்பது மூட நம்பிக்கையன்று 167
வினை-விளைவுகட்கு இடைப்பட்ட நிலை 169
சூக்கும கன்மம் 170
வினைக்கான மூவகைக் காரணிகள் 174
முதல் காரணம் (அநாதி மூல கன்மம்) 174
நிமித்த காரணன் (உயிர்கள்) 174
துணைக்காரணங்கள் 175
(சிவசக்தி, ஆணவம், கருவிகள்)
மூலகன்மம் என ஒன்று உண்டா? 181
வினைகள் நிலையற்றன 183
கோழி முந்தியா? முட்டை முந்தியா? 185
மூலகன்மம் அநாதி நித்தம் 186
பிரவாக அநாதி 191
உயிர்களைப் போல் அநாதி 186
மாயாயினைப் போல் அநாதி 186
சத்காரியவாதம் 186
கேவலத்தில் முடங்கிய 188
சிவ-சீவர்களைப் போல் அநாதி 188
உடைமைப் பொருள் 190
மூலகன்மத்தை ஏன் மலம் என்றனர்? 191
நிலையான காரணி 191
மூலகன்மம் எங்ஙனம் பற்றியது? 192
மூலகன்மம் முன்னரே ஏன் பற்றவில்லை? 192
மூலகன்மத்தை இறைவன் ஊட்டுதல் 193
எப்போது பற்றியது? 197
சிவசத்தியின் அருளிப்பாடு 197

இயல் 6 : இறைவன் அன்புக்கு எளியவன்
(இறைவனின் இயல்பு) 199

சோதனையும் வேதனையும் 200
சிவபெருமான் சோதிக்கும் முறைமை 207
சிவசத்தியின் செயற்பாடு 209
முப்பொருள்களின் இயல்பு நிலை 212
முப்பொருள்களின் தொழிற்படுநிலை 212

ஆணவத்தின் ஆற்றல் 213
ஆன்மாக்களின் இயல்பு 214
உடைமையும் அடிமையும் 215
மும்மலங்களின் ஆற்றல் 216
சிவபெருமானின் திருவருள் ஆற்றல் 216
வினைப்பயனை ஏன் ஊட்ட வேண்டும்? 217
பிறப்பின்றியே கடைத்தேற்ற முடியாதா? 218
ஊனப்பாலும் ஞானப்பாலும் 219
இறைவன் நின்மலன், தொடக்குறான் 220
சிவபெருமான் நடுவுநிலைமையாளன் 220

இயல் 7 : இன்ப நுகர்ச்சிக்கு உரியோர்
(பேரின்ப உரிமை) 225

முப்பொருள் உண்மை 225
சிவம் பேரின்பப் பொருள் 225
அறிவற்ற பொருள்களுக்கு நுகர்ச்சி இல்லை 226
ஆன்மாக்களுக்கே இன்ப நுகர்ச்சி 226
செய்வினையும் செயப்பாட்டு வினையும் 227
உரிமைப் போராட்டம் 227

இயல் 8 : ஆன்மா உய்வினை நாடுதல்
(குருவின் வருகை) 230

குருவின் தோற்றம் 230
கடவுளை நேரில் பார்க்க முடியுமா? 235
எது உண்மையான வாழ்வு? 237

இயல் 9 : என் கடன் பணி செய்து கிடப்பதே
(நெறி முறை நிற்றல்) 238

நான்கு கட்டளைகள் 238
உடலால் தொண்டும் சிவலோக வாழ்வும் 238
உடல்-மன வழிபாட்டால் சிவனை அண்ணிய வாழ்வும் 238
மனமும் ஆன்மாவும் ஒன்றிய சிவ-சாரூப வாழ்வு 239
ஞானத்தால் அறிவானந்தப் பெருவாழ்வு 240
இதய கமலத்தில் இறை வழிபாடு 241
வேள்வித் தீயில் விமலன் பூசை 243
நெறியும் நெறிஞ்சிலும் 244
மூவகை அறிவு 245
திரு ஐந்தெழுத்து ஓதும் முறை 249

எல்லாம் நன்மைக்கே 250
புரியட்ட காயம் 252
சத்திய சோதனை 253
தியானத்தின் சிறப்பு 254
அறிவியல் தமிழ் 259
மனத்தைத் தூய்மை செய்தல் 261
மனம் என்பது என்ன? 263
மாயையின் தொடர்பு ஏன்? 264
மனத்தை இறைவன் இயக்குதல் 265
மனத்தூய்மை-சிவதியானத்தால் விளைவது 265
மெய்யுணர்வு பெறுதல் 267

இயல் 10 : வினைகளை நீக்கும் முறைமை (கட்டு நீத்தல்) 270

ஆன்ம சுத்தி 270
நுகர்ந்தால் தொலைவது வினை 270
செய்தவனே நுகர வேண்டும் 271
புதுவினை ஈட்டம் தவிர்க்க 272
ஆறுவது சினம் 272
இன்னா செய்தாரை ஒறுத்தல்? 273
இருவினை ஒப்பு 275
இறை பணி நிற்றல் 277
இச்சா சத்தி 278
ஞானசத்தி 278
கிரியா சத்தி 278
நுகர்ச்சி கால அடைவிலா? 278
வரம் கேட்டல் 279
வினை நீக்கத்தில் இறைவனின் அருளிப்பாடு 281
சத்திநிபாதம் 281
அறக்கருணையால் வினை நீக்கம் 282
ஒன்றியிருந்து நினைமின் 284
மறக்கருணையில் வினை நீக்கம் 286
பாவமன்னிப்பு உண்டா? 289
வினைப்பயனை இறைவனே ஏற்றருளல் 291
வினைநீக்கத்தில் மற்றொரு முறை 292
சிவபெருமான் தீவினைக்கு ஓர்மருந்து 293

ஔவை மூதாட்டியின் அனுபவம் (வரைபடம் விநாயகர்) 295
வினைதீர்க்கும் விநாயகர் 297
திருமுறைகள் மூலம் இடர் நீங்குதல் 298
வினைகள் எப்போது எவ்வாறு நீங்கும்? 300
ஆகூழ் வறுத்த வித்தாய்க் கழியும் 301
பிராரத்தம் உடல் - ஊழாய்க்கழியும் 301
சஞ்சிதம் சுட்டெரிக்கப்படும் 301

இயல் 11 : திருவடிப் பேறு (அறிவானந்தப் பேறு) 304

சிவபூசையில் கரடி 304
ஒளியும் இருளும் 308
சிவசக்தி அருள் பாலிக்கும் முறைமை 308
ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால் 309
சுத்த மனத்தையும் கடந்த அருள் நிலை 310
அனுபவத்தால் மட்டுமே இன்பம் 312
கொடைவடிவில் சிவபெருமான் 313
திருவடிப்பேற்றின் சிறப்பு 313
இறைவன் ஆன்மாவைத் தன்னுள் ஏற்கும் முறை 314
பிறப்பு நீங்க வழி 314
உண்மைச்செல்வம் எது? 315
மனித உடம்பில் இறைவன் திருவடி (அறிவியல்) 317
நெஞ்சினில் திருவடி 317
சிரசினில் திருவடி 318
படிமுறைகளில் திருவடிப்பேறு 319
அன்பைத் தொடர்ந்து அறிவு 320
உள்ளுணர்வும் உட்காட்சியும் 321

இயல் 12 : யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் (சீவன் முத்தர் இயல்பு) 323

எச்சரிக்கை வேண்டும் 323
அடி தொழுதலின் சிறப்பு 324
மெய்யடியார் இயல்பு 327
சீவன் முத்தர் என்பார் யாவர்? 328
வினை உடலூழாய்க் கழியும் 330
ஒளிக்குமுன் இருள் நில்லாது 332

வினையின் நீங்கியோர் மாண்பு *333*
முனைவன்-அறிவியல் குறிப்பு *335*
அன்பே சிவம் *338*
அன்பினில் விளையும் அறிவானந்தம் *339*
அறிவியற் கல்வி *340*
அறிவியலின் ஆணிவேர் *340*
அறநெறிக் கல்வி *341*
அருளியற் கல்வி *341*
ஏட்டுச் சுரக்காய் *343*
உலகம்-ஒரு பயில் களம் *344*
விதியை மதியால் வெல்லலாம் *346*
(வரைபடம் மதிசூடி)

நிறைவுரை 350

முகவுரை

சைவ சமயத் தத்துவக் கோட்பாடுகளுள் வினைக் கோட்பாடு-என்பது முக்கியமான ஒன்றாகும். உலகத் தோற்றம், வாழ்வு, இயக்கம், முடிவு ஆகிய அனைத்தும் வினை வழி நிகழ்வுகளே - என்பது சைவசித்தாந்தம்.

''இன்பம் துய்க்க வேண்டும்; அஃது துன்பக் கலப்பில்லாத இன்பமாக அமைந்திருக்க வேண்டும்; அளவால் பெரியதாக இருக்க வேண்டும்; இடையீடு இன்றி நிலைத்திருக்க வேண்டும்; நிறைவானதாகவும் அமைய வேண்டும்''-இவ்வாறெல்லாம் ஒவ்வொருவரும் விரும்புகின்றனர். அஃது யாவர்க்கும் உள்ள பொது இயல்பு; அங்ஙனம் விரும்புவது ஒவ்வொருவருடைய அடிப்படையான உரிமையுங்கூட. ஆயினும் ''எல்லா மனிதர்களும் தாம்தாம் விரும்புகிறபடியே இன்பத்தை நுகர்கிறார்களா? நுகரமுடிகிறதா?'' - எனில் இல்லை என உறுதிபடக் கூறலாம்.

மனிதனுக்கு மட்டுமன்று, உயிர்க்கூட்டம் முழுமைக்குமே இன்பமும் துன்பமும் மாறி மாறித்தான் தொடர்கின்றன. இவை ஏன்? துன்பங்களுக்கும் இன்பங்களுக்கும் மூலகாரணமாக இருப்பவர் யார்? அவை நம்மிடத்து நிகழ்வதற்குக் காரணம் என்ன?

இன்ப அனுபவங்கள் நிகழும்போது மட்டும், அவ் இன்பங்களும், நலன்களும், தத்தம் அறிவுத் திறனாலும், செயல் திறனாலுமே விளைந்ததாக எண்ணி இறுமாந்திருப் போரே பெரும்பாலோர். ஆனால் அவர்களே துன்பச் சூழலில் சிக்கும்போது, அவ் அவலத்துக்குக் காரணம் ஆண்டவனே'' - எனப் பிழைபடக் கருதி மருள்கின்றனர்; மயங்குகின்றனர். இறைவன் சோதனை என்பார் சிலர். இறைவனைத் திட்டித் தீர்ப்போர் பலர். ''எம்பெருமானே! கண்ணைத் திறக்கமாட்டாயா?'' என ஏங்கி நிற்போர் எண்ணற்றோர்.

உண்மையிலேயே நம் துன்பங்களுக்குக் காரணம் யார்? இறைவனா? எனில், அன்று அன்று; இறைவனை நீதியின் வேந்தன் என்றுதானே பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக் கிறோம். நூல்களும் அவ்வாறுதானே அவனைப் போற்றுகின்றன.

அவன் ஒருபொழுதும் பிழை செய்யான் அன்றோ? அவ்வாறாயின், நமக்கு உலகவாழ்வில் இன்ப துன்பங்களும், ஏற்ற இறக்கங்களும் ஏன் நிகழுகின்றன?

இன்பத்தையும் துன்பத்தையும் நமக்கு ஊட்டுகிறவன் சிவபெருமானே என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவன் நம்மில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு வகையாக அன்றோ இன்ப துன்பங்களை ஊட்டுகிறான்? அவன் அவ்வாறு ஊட்டுவதற்கு எது ஆதாரமாக அமைகிறது? எந்த அடிப்படையில், எதனை ஆதாரமாகக் கொண்டு, அவன் அங்ஙனம் வேறுபட்ட நுகர்ச்சிகளை நமக்கு ஊட்டுகிறான்?

''தீதும் நன்றும் பிறர்தர வாரா; உயிர்களாகிய நாம் செய்த நற்செயல்களும், குற்றங்களுமே அவற்றிற்குக் காரணம்'' - என்பர் அறிஞர். கூடா நட்பாலும், தகாத செயலாலும், பந்த பாசத்தாலும் விளைந்தனவே இவை எல்லாம், எனச் சுட்டி உரைக்கிறது சைவசித்தாந்தம். அதனால்தான், 'சேரிடம் அறிந்து சேர்', - எனச் சொல்லி வைத்தார்கள் நம் மூதாதையர்கள்.

ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்பார் சிலர். அந்த ஆசை ஏற்படுதற்கும் மூலகாரணம் உண்டு என்பதை உறுதி செய்கிறது சைவசித்தாந்தம். நாம் முன்னர்ச் செய்த நற்செயல்களும், செய்முறைக் கேடுகளுமே இன்றைய நம் முன்னேற்றத்திற்கும், சீரழிவுக்கும் பெரிதும் அளவு கோலாக அமைகின்றன என்பது சைவக் கோட்பாடு.

தொன்றுதொட்டே உயிருக்கு ஒரு நோய் இருந்து வருகிறது. அஃது ஓர் இருள்நோய். அதற்கு ஆணவம் என்பது பெயர். அத்தகு நோய்ஒன்று நம்மைப் பிணித்திருக்கிறது என்ற உண்மையையோ, அந்நோயின் தீய இயல்புகளையோ உயிர் சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை.

அந்நோய், உயிரை அறியாமை-இருளில் அழுத்தி நிற்கிறது. அறிவு என்னும் ஒளியைப் பார்ப்பதற்குக்கூடக் கண் கூசுமாறு செய்கிறது. அப்போது நாமே நம் தகுதியை உயர்வானதாகப் பிழைபட எடைபோட்டுக் கொள்ளுகிறோம். ஆணவம் என்ற இருள் நம் இயல்பான சிறு அறிவொளியையும் மறைத்து

விடுகிறது. நிலையற்ற உலகப் பொருள்களில் அளவுக்கு அதிகமாகவே மயங்கிக் காரியங்களைச் செய்து விடுகிறோம்.

இங்ஙனம் ஆணவமும், பழவினைகளும், உலகப் பந்தங்களுமாகிய தடைகளே நம் தகுதியை மிகுதியும் சீர்குலைக்கின்றன. அவற்றுள் பழவினைகள் என்பன யாவை? அவை எவ்வாறு பயனளிக்கின்றன? என்பதே இப்பொழுதைய சிந்தனை.

வேம்பின் பழம் மிகவும் கசப்பானது. ஆயினும், அதையே நாளும் தின்று பழக்கப்பட்ட புழு அக் கசப்புப் பழத்தையே மீண்டும் மீண்டும் நாடித் தின்பது இயல்பாகிறது. அத்தகு 'வேம்பு தின்ற புழுப்' போலப் பலகாலம் இருளிலேயே இருந்து பழக்கப்பட்ட உயிர், தொடர்ந்து இருளில் இருப்பதையே விரும்புவதால் ஒளியைக் காண முயற்சி செய்வதில்லை. ஒளியால் கிடைக்கும் இன்ப விளைவுகளைப் பற்றிய அறிவு அதற்குக் கொஞ்சமும் இல்லை. எனினும் மற்றவர்கள் யாரேனும் உணர்த்தினால், உயிர் உணர்ந்து கொள்ளும் தன்மையுடையது.

எனவே இருளின் தீய தன்மைகளையும் அதன் தொடர்பால் நிகழ்கிற இழப்புகளையும் உயிரினத்துக்கு - குறிப்பாக மனித இனத்துக்கு - எடுத்துக் கூற வேண்டும்; ஒளி பற்றிய உயர்ந்த நலன்களையும், அதனால் பெறக்கூடிய இன்ப சுகங்களையும் விளங்கச் செய்ய வேண்டும்; ஒளியை அடைவதற்கும், அதிலேயே இன்பமுடன் நிலை பெற்றிருப்பதற்கும் நல்ல நெறிகளைக் கற்பிக்க வேண்டும்: இவை எல்லாம் உயர்ந்தோர்தம் கடமையாகின்றன.

அத்தகு உயர்பொருளின் இருப்பையும் இயல்புகளையும் ஆன்மாக்கள் அனுபவ வழி உணர வேண்டுமே, சீரிய அறிவு விளக்கம் பெற்று அவை உய்தி அடைய வேண்டுமே? அதன் பொருட்டு, உயிர்களுக்கு அமைந்துள்ள இடைக்கால ஏற்பாடே இந்த உடல், உலகம், கருவிகள், நுகர்ச்சி என்பன. அவ் உண்மையைச் சரியாக உணராத நாம், மேன்மேலும் இருள்சேர் இருவினைகளைச் செய்வதற்கே உடலையும் உள்ளத்தையும் பிற சாதனங்களையும் தவறான வழிகளில் பயன்படுத்தித் தொடர்ந்து அல்லல்களில் இடர்ப்படுகிறோம்.

பண்டு தொட்டே நம் மெய்ப்பொருள் கொள்கைகளின் உண்மைப் படிநிலைகளை அவற்றின் அடி ஆழம் வரை கற்று,

முறையாகப் பயின்று, உணர்ந்து, அணுஅணுவாக நுகர்ந்தவர்கள் பழந்தமிழ்ச் சான்றோர்கள். அங்ஙனம் இன்புற்றுத் தெளிந்த அவர்களால் சைவம் தழைத்தது. ஆகவே தமிழும் தெய்வீக மொழியாகத் திகழ்ந்தது. சைவத்தின் மேன்மையே தமிழுக்கு வளர்ச்சி என்பது முக்காலும் உண்மை.

இன்று நாம் நுகரும் இன்பதுன்ப விளைவுகள் அனைத்துக்கும் மூலமாக இருப்பவை, முன்னர் நாம் செய்த நல்வினைகளும் தீவினைகளுமே என்பதை நம் முன்னோர்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தனர். அவர்களுடைய கருத்துக்கள் பலவற்றையும் நாம் இந்நூலின் கண் சிந்திக்கிறோம்.

அந்த வகையில் வாழ்வியலை நன்னெறியில் ஆற்றுப் படுத்த வல்ல இந்நூற் சிந்தனைகள் மிகவும் பயனுள்ளனவாகும்: கால எல்லைகளையும் நில எல்லைகளையும் கடந்து வாழத்தக்க பெருமையும் உடையனவாகும்.

நூல் அமைப்பு

சைவ சமயத்தின் சாத்திர நூல்கள் பதினான்கு. அவற்றுள் தலையாயதாகப் போற்றப்பெறுவது சிவஞானபோதம். மெய்கண்டார் என்ற அருளாளரால் இயற்றப்பெற்ற அந்நூல் பொது, சிறப்பு என இரண்டு அதிகாரங்களையும், உண்மை-இயல், இலக்கண-இயல், சாதன-இயல், பயன்-இயல் என நான்கு இயல்களையும், பன்னிரு சூத்திரங்களையும் உடையது.

பொது அதிகாரம்: கடவுள், உயிர்க்கூட்டம், கட்டுக்கள் ஆகிய மூன்றும் எக்காலத்தும் நிலையாக உள்ள முப்பொருள்கள் என அவற்றின் இருப்பினையும் இயல்புகளையும் பொதுவகையால் கூறுவதால் பொது அதிகாரம் எனப்பட்டது; ஆறு சூத்திரங் களைக் கொண்டது.

முதற் சூத்திரம் கடவுள் இருக்கிறார் என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது;

இரண்டாம் சூத்திரம் உயிர்களாகிய நாம் கடவுளை உணர முடியாதவாறு ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்கள் தடையாக உள்ளன என்று உணர்த்துகிறது.

மூன்றாம் சூத்திரம் கடவுளுக்கும், அத் தளைகளுக்கும் வேறாக, உயிர்கள் எண்ணற்றனவாக உள்ளன என்ற உண்மையை அறிவுறுத்துகிறது.

இங்ஙனம் முப்பொருள்களின் உண்மை பற்றிக் கூறுதலின், இம் மூன்று சூத்திரங்களும் சேர்ந்து உண்மை-இயல் எனப்பட்டன.

அடுத்து உள்ள மூன்று சூத்திரங்களுள் நான்காம் சூத்திரம் உயிர்களின் இயல்புகளையும், ஐந்தாம் சூத்திரம் மலங்களின் இயல்புகளையும், ஆறாம் சூத்திரம் இறைவனின் இயல்பு களையும் தனித்தனியே பொது-இலக்கணமாகக் கூறுதலின், பொது அதிகாரத்துள் இலக்கண-இயல் எனப்பட்டன.

அடுத்த ஆறு சூத்திரங்களைக் கொண்டது சிறப்பு அதிகாரம். அதில் சூத்-7-இல் சாதனங்களை மேற்கொள்ளுவதற்கும், இறைவன் அருளை (பேரின்பத்தை)ப் பெறுதற்கும் உரிமை யுள்ள அதிகாரி யார்? என்பது கூறப்பெறுகிறது.

சூத்-8-இல் அவ் அதிகாரி செய்ய வேண்டிய சாதனங்கள் (கடமைகள்) யாவை என்பது உணர்த்தப்பெறுகிறது.

சூத்-9-இல் அச் சாதனங்களை நிறைவேற்றும் முறைமை பற்றி அறிவுறுத்தப் பெறுகிறது.

சாதனங்கள் தொடர்பான செய்திகள் இங்ஙனம் இயைபுபடக் கூறப்படுகின்றமையின், இஃது சாதன இயல் என்னும் பெயர் பெற்றது.

முத்தாய்ப்பான மூன்று சூத்திரங்களுள், முதற் சூத்திரம் (சூத்-10) பாச விடுதி (தடையாக உள்ள மும்மலங்களின் நீக்கம்) பற்றியும்,

இரண்டாம் சூத்திரம் (சூத்-11) திருவடிப்பேறு பற்றியும் கூறுவன.

மணிமுடியான அடுத்த சூத்திரம் (சூத்-12) சீவன்-முத்தர்தம் இயல்பு கூறுவது. ஆகவே இம் மூன்றும் சேர்ந்து பயனியல் எனப் பெயர் பெற்றன.

சிவஞானபோதத்தின் சீரிய இவ் அமைப்பு முறையை அடியொற்றி, இந்நூலும் பன்னிரண்டு தலைப்புகளில் பன்னிரண்டு இயல்களை உள்ளடக்கி, ஏதுக்கள் எடுத்துக்காட்டுகளோடும், இலக்கியச் சான்றுகளோடும், அறிவியல் ஆதாரங்களோடும், ஒப்பாய்வு வரைபடங்களோடும் செவ்விதே வடிவமைக்கப் பெற்றுள்ளது. நூலின் தலைப்புக்கு ஏற்ப, முதல் இரண்டு இயல்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

இயல்களின் அமைப்பு

இயல் 1 : வினையே பிறவிக்கு வித்து (தடைகளின் இருப்பு)

இயல் 2 : இறைவனே வினைகளை ஊட்டுதல் (கடவுள் உண்மை)

இயல் 3 : உயிர் ஒரு சிற்றறிவுப் பொருள் (உயிர்களின் உண்மை)

இயல் 4 : உணர்த்த உணரும் ஆன்ம இயல்பு (உயிர்களின் இயல்பு)

இயல் 5 : ஊழில் பெருவலி யாவுள? (வினை வகைகள்)

இயல் 6 : இறைவன் அன்புக்கு எளியவன் (இறைவனின் இயல்பு)

இயல் 7 : இன்ப நுகர்ச்சிக்கு உரியோர் (பேரின்ப உரிமை)

இயல் 8 : ஆன்மா உய்வினை நாடுதல் (குருவின் வருகை)

இயல் 9 : என் கடன் பணி செய்து கிடப்பதே (நெறி முறை நிற்றல்)

இயல் 10 : வினை நீக்கும் முறைமை (தடைகள் நீங்குதல்)

இயல் 11 : திருவடிப் பேறு (அறிவானந்தப் பேறு)

இயல் 12 : யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் (சீவன் முத்தர் நிலை)

சைவசித்தாந்தக் கொள்கைகள் திராவிட நாகரிகத்தின் பெருமைமிகு சின்னம் என ஜி.யூ.போப் போன்ற மேலை நாட்டு அறிஞர்களும் கூறுவர். சங்க இலக்கியங்களிலும் சைவ-ஆகமக் கருத்துக்கள் விரவிக் கிடப்பதைச் சைவத்தமிழ் அறிஞர்கள் ஏற்பர். சைவசமயக் கோட்பாடுகள் நவீன அறிவியலோடு பொருந்தி வருகின்றன என்பதை இக்கால மேலைநாட்டு மருத்துவப் பேரறிஞர்களும், பொறியியல் வல்லுநர்களும், அறிவியல் மேதைகளும் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

ஆகவே சைவசித்தாந்தச் செம்பொருளை யாவரும் உணர்ந்து உய்யும் நெறியில் உறுதியாக நிற்பதும், வினையின் நீங்கி விளங்கிய அறிவைப் பெறுவதும் தமிழினத்தவராகிய நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

அன்பே சிவம்!

அ.சொ. சுப்பையா

விதியை மதியால் வெல்லலாம்

நூன்முகம்

இன்பத் துன்பத்துக்குக் காரணம் என்ன?

எல்லா நாட்டிலும் எல்லா மக்களாலும் எல்லாக் காலங்களிலும் கேட்கப்பட்டுவரும் கேள்வியே இது.

உள்ளத்தில் ஆசைகள் எழுகின்றன, அவை பாசமாக வளர்கின்றன; பந்தங்களில் ஆட்படுத்துகின்றன, அறிவு தடுமாறுகிறது; ஆகாத காரியங்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதன் பின்விளைவாகவே துன்பங்கள் வந்து சேர்கின்றன. சுருங்கக் கூறின், தீவினைகளே துன்பத்துக்குக் காரணம். ஆகவே அறிவின் துணை கொண்டு தீவினைகளைத் தவிர்த்தல் வேண்டும் என்பது ஒரு கருத்து ஆகிறது.

நல்வினை

அவ்வாறாயின் தீவினைகளை விடுத்து, நல்ல காரியங் களை மட்டுமே செய்யலாமா? செய்யலாம். ஆனால் அந்த நல்ல செயல்களுக்கும் பரிசுகள் கொடுக்கப்பட வேண்டுமே!

வினைக்கு உரிய பரிசுகள் தவிர்க்க முடியாதவை ஆயிற்றே? அப் பரிசாக இன்ப வாழ்வு ஒன்று அமைகிறது. இன்பத்தை நுகரும் மனிதன் சும்மா இருப்பானா? நடுநடுவே சிலசில ஆகாத செயல்களையும் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். அஃது யாவர்க்குமான பொது இயல்பு. நன்மைகளோடு தீமைகளும் சேர்ந்துகொள்ளவே, அவற்றின் விளைவாக இன்பதுன்பக் கலப்புடைய பிறப்பு வந்து அமையும். ஆக நல்வினை செய்வதும்கூட ஒரு புதைசேறு ஆகி, பிறப்பு என்னும் பெருங்கடலுள் அழுத்தவே செய்யும்.

'இருள்சேர் இரு வினை'

இங்ஙனம் துன்ப-இன்பப் பிறப்புக்கு வித்து ஆகும் காரணம் பற்றித் தீவினையை 'இரும்பு-விலங்கு' எனப் பகன்ற ஆன்றோர் நல் வினையைப் 'பொன்-விலங்கு' எனச் சித்தரித்தனர்.

விதி என்பது என்ன?

விதி என்றதுமே யாவர் எண்ணத்திலும் உடனே தோன்றுவது 'தலைவிதி' என்னும் வழக்காறு. மேலோட்டமாக இங்ஙனம்

பொருள் கொண்டு முரண்படுவோர் பலர்; முகம் சுழிப்போர் பலர்; ஆனால் விதி என்பது

'தலைவிதி' (Destiny)

வாழ்வியல் நெறி (Code of Ethics)

அ) தனிமனிதப் பண்பியல் (Individual Morality)

ஆ) சமுதாயச் சீரமைப்பு (Social Ethics)

உய்யும் நெறி (Path of salvation)

இறை-இன்பத்தில் திளைத்தல் (Experiencing the Eternal Bliss)

எனப் பலவாறு விரியும். இதனை ஏற்று நடப்போரும் எண்ணற்றோர். அத்தகையோர் பயன்பெற்று உய்ய வேண்டும் என்னும் உயரிய சிந்தனை சான்றோர்க்கு எஞ்ஞான்றும் உண்டு. சமுதாயத்தில் அமைதியைக் காக்க விரும்பும் அரசு பலப்பல வாழ்வியல் சட்டங்களைக் கொண்டுவருகிறது. சமுதாயத்துக்கு நன்மை செய்பவர்களை விருதுகள் மற்றும் பரிசுகள் கொடுத்துச் சிறப்பிக்கிறது. அதற்கு மாறாகச் சமுதாயத்தில் கேடு விளைவிப்பவர்களை உரியவாறு தண்டிப்பதும் காண்கிறோம். இங்ஙனம் நல்லன செய்தார்க்குப் பரிசும், தீயன புரிவார்க்குத் துன்பமும் என வழங்குகிற நீதி அல்லது நியதியே விதி என அழைக்கப்படுகிறது.

நடைமுறை வாழ்வில் சமுதாய ஒழுக்கத்தைப் பேணுகிற சட்ட திட்டங்களாக, இவை கருதப்படுகின்றன.

ஆயினும் அரசியல் செல்வாக்கு, பொருளாதாரச் செல்வாக்கு போன்றவற்றின் ஆளுமையால் விதிகள் மீறப்படுவதும், நீதிகள் பிறழ்வதும் யாவரும் அறிந்த உண்மை. எனவே, நீதி மன்றங்கள் சிறுசிறு தீர்ப்பாயங்களில் தொடங்கி, உயர் நீதிமன்றம், உச்ச நீதி மன்றம் எனப் பல தரத்தனவாக உள்ளமை காணுகிறோம்.

இங்கிலாந்து போன்ற சில நாடுகளில் வழக்குகள் முந்தைய வழக்கத்தின்படியே தீர்க்கப்படுகின்றன. அங்கே சட்டங்கள் 'எழுதாக் கிளவி'களாகவே உள்ளன. விரிவாக எழுதப்பட்டுள்ள நம் நாட்டுச் சட்டங்களில், ஓட்டைகளும், விதிவிலக்குகளுமே முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளன. நீதி பல சமயங்களில் 'கேலிக் கூத்'தாக்கப்படுவதையும் காணுகிறோம்.

உச்சநீதி மன்றமும் பிழை செய்தால் சமுதாய ஒழுக்கம் மற்றும் அமைதி, பண்பாடு ஆகியவற்றின் கதி என்ன? வலியார் மிகுந்த ஒரு சமுதாயத்தில் எளியோரின் வாழ்வியல் நிலை என்ன? சமுதாயக் கேடன் ஒருவன் வாழ்நாள் முழுவதும் தண்டனைகளுக்குத் தப்பிக்கிறான்; வளமான பின்னணியில் இன்பமாகவும் வாழ்கிறான் என்றால், அதற்கு முந்தைய காரணங்கள், அல்லது பிந்தைய விளைவுகள் ஏதேனும் இருக்க வேண்டுமன்றோ? அவற்றையே விதி என ஆன்மீகவாதிகள் அழைக்கின்றனர்.

நல்வினைகளுக்கு இன்பக் கலப்புடைய பிறப்பும், தீவினைகளுக்குத் துன்பமான பிறப்பும் அமைய வேண்டும் என்பதே நடுவுநிலைமையான தீர்ப்பு, அதுவே நியதி, அதுவே சட்டம், அதுவே இறைமையின் நீதி, அதையே விதி எனக் கூறுகிறோம்.

விதி ஏடு

சட்ட மன்றங்களில் உருவாக்கப்படுகிற சட்டங்கள் படி எடுக்கப்பட்டுப் பல இடங்களிலும் பதிவு செய்யப்படுகின்றன அன்றோ? அதே போன்றுதான் கண்ணுக்குப் புலப்படாத பல வினைகளும் அவற்றிற்கான பயன்களும் முறைமையாக்கப்பட்டு, அவ் விதி ஏட்டின் படிகளுள் ஒன்று சிரசினில் பதிவுசெய்யப் படுகிறது. தலையில் பதிவுசெய்யப்படுகிற விதி ஏட்டின் படி அது, ஆதலால் இதனைத் 'தலை எழுத்து' என்றும். 'தலை விதி' என்றும் அழைக்கின்றனர்.

மதி என்பது என்ன?

'அறிவு' என்றும் 'சந்திரன்' என்றும் இரண்டு பொருள்கோள் களில் இங்குச் சிந்திக்கிறோம். அறிவு; அதிலும், பண்பட்ட அறிவு; பகுத்துணரும் பண்பட்ட அறிவு. அதிலும், 'ஒவ்வொரு செயல் அல்லது வினைக்கும் எதிரானதும் சமமானதுமான பின்-விளைவு உண்டு' என்பதை உணருகிற தெளிந்த அறிவு, அதைக் கொண்டு 'செம்பொருள்' காணும் அறிவு; அதுவே தொல்காப்பியர் உணர்த்தும் 'வினையின் நீங்கி விளங்கிய அறிவு'; அதுவே 'முதல் நூல் இயற்றுதற்குத் தகுதியுடைய முனைவர்' தம் அறிவு.

விளைவுகள் எப்போது, யார் மூலம், எந்த வகையில் வருகின்றன என்பதை உணர்த்துவதையே 'விதி' எனக் கூறுகிறோம். இத்தகு இன்பம் மற்றும் துன்பங்களுக்கான காரணங்களைச் சீர் தூக்கிப் பார்த்துத் தக்கவாறு நடந்து கொள்ளுவதே அறிவுடைமை; அதுவே 'மதி' எனப்படும்.

கேடு செய்வோனுக்குத் தண்டனை கொடுக்கலாம். அஃது நோய் வந்தபின் மருந்து கொடுத்துக் குணப்படுத்துவது போன்றதோர் முயற்சி. அதனினும் நோயே வாராமல் தடுப்பது சிறப்பு அன்றோ? 'வருமுன் காத்தல்' என்னும் பண்பு வளரு மாயின் தனிமனித வாழ்வு சிறக்கும்; சமுதாயப் பண்பு மேலோங்கும்; உலக அமைதிக்கும் வித்திட்டதாகும். இதனை, *Prevention is better than cure* என்பார் ஆங்கிலத்திலே.

மதி உடையவன் சந்திரன். ஆதலால் தன் கலைகள் தேய்ந்து அழகுத் திறன் அனைத்தும் அழிந்து அல்லற்பட்ட அவல நிலையில், ஆண்டவனைச் சரண் அடைந்தான் அவன். அங்ஙனம். 'சிவபெருமான் திருவடி ஒன்றே புகலிடம்' எனப் பற்றுகிற மெய்யுணர்வு பெற்றமையால்தான் அவனுக்கு 'மதி' என்பதும் சிறப்புப் பெயராயிற்று; அம்மட்டோ! பஞ்சபூதக் கலைகள் தேய்ந்தாலும், அம்மையப்பனின் அருட்கலைகளைப் பெற்று, அவன் இறைவன் திருமுடியிலேயே 'மாதர்ப்பிறைக் கண்ணி'யனாய் யாவரும் போற்றியிசைக்குமாறு பொலிவுறு கிறான். அனைத்துக்கும் காரணம்: சிவபெருமான் ஒருவனே. அவனே வாழ்வியல் வினாக்களுக்கெல்லாம் 'விடை'யாக இருப்பவன். 'மதிசூடி'யாகிய அவன் 'விடை-ஏறி'யும் அல்லனோ?

'குஞ்சிதபாதம்' எனப் போற்றப்பெறும் தில்லைக்கூத்தனின் தூக்கிய திருவடித் தோற்றமே முன்னர்ச் 'சரண்' என, அடிசார்ந்த சந்திரப் பிறையின் வடிவினை உணர்த்துவது.

தானே வந்து தலையளித்து ஆட்கொள்ளும் இயல் புடையவன் சிவபெருமான், மதிக்கு அருள்பாலித்த அவன், தன் திருவடியை நம் ஒவ்வொருவருவர் சிரசினுள்ளும் மிகப் பொலிவுற அமைத்துள்ளான்.

நம் தலையின் உள்ளே, 'மதி' என்னும் அறிவுக்கு நிலைக் களனாக விளங்குவது பெருமூளை. எண்ணற்ற மடிப்புகளைக்

கொண்டது பெருமூளை; அஃது இரண்டு கூறுகளாய் (*Cerebral Hemispheres*) அமைந்து பல நுண்ணிய ஆற்றல்களுக்கு ஆதாரத் தானமாக உள்ளது. மூளையின் இவ் இரண்டு கூறுகளும் அமைப்பால் மட்டுமன்றிச் செயலாலும், பிற இயல்புகளாலும் 'மங்கை ஓர் பங்கனை' (அர்த்தநாரீசுவரனை) நினைவுறுத்தும். இரண்டு கூறுகளுக்கும் நடுவில் வான்மதியை ஒத்த நீளமான வெண்ணிற இணைப்பு (*The Largest White Commissure*) ஒன்று உள்ளது. மூளைக் கூறுகளை இணைத்து ஆற்றலை விரித்து உயிரின் இயக்கத்துக்கு உறுதுணை புரிகிற இஃது கூத்தப் பெருமானின் தூக்கியதிருவடியாகச் சிந்திக்கற்பாலது.

இந்த அற்புத 'வெண்-மதி'யைக் 'கார்ப்பஸ் காலஸம்' (*Corpus Callosum*) என அழைப்பர் மருத்துவ நூலார். சிரசின் உள்ளே அளவாலும், ஆட்சியாலும் அளப்பரிய பெருமையுடைய பெருமூளையில், நாம் சாதாரணமாக மிகக் குறைந்த (2%) அளவுக்கே பயன்படுத்துகிறோம் என்பது மேலைநாட்டு நரம்பியல் அறிஞர்களும் ஏற்கும் உண்மை. இதனைச் சீராகப் பேணினால் வாழ்வு வளமுடையதாகி அற்புதமான முன்னேற்றம் காண இயலும்.

'தாள் + தலை = தாடலை' என்பது நம் தெய்வத் தமிழுக்கு ஓர் மணிமகுடம் அன்றோ? சிவபெருமானின் தாள் + மெய்யடியாரின் தலை = பேரின்பப் பெருவாழ்வு என்பது கருத்து.

ஆனால், உலகியல் சிக்கல்களிலேயே உழலுகிறோம் நாம். நம்மில் பெரும்பாலோர் அந்த 'விடையேறி'யை 'மதி-சூடி'யை எண்ணிப் பார்ப்பதில்லை. அவன் நம்முள் திருக்கயிலாய இருக்கையாகக் கொண்ட பெருமூளையைப் பற்றிச் சிந்திக்க நமக்கு நேரம் இல்லை! ஆகவே, மதிசூடியை உணரும் மதியைப் புகட்டுவது மாண்புடையோர் கடமை.

பழந்தமிழ்ச் சித்தர்களும் ஞானிகளும் அருளாளர்களும் தம் அனுபவ வழி உணர்ந்த இவ் உண்மையை நன்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

விதியை மதியால் வெல்லுவது பற்றித் திருவள்ளுவர்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாழ்வியல் நெறிகளைச் சீராகச் சிந்தித்த ஓர்

பேரருளாளர். அவருடைய கருத்துப்படி நல்வினை, தீவினை இரண்டுமே 'இருள்சேர் இரு வினைகள்' என்பதாம். அம்மட்டோ? பிறப்பு எனும் ஊழிலிருந்து விடுபட, 'மதி'யை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் குறிப்புரைக்கிறார் :

பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு (குறள். 358)

அத்தகு செம்பொருள் எங்கே உள்ளது? ஊரெல்லாம் தேட வேண்டியதில்லை. காடுமேடுகளில் அலைய வேண்டியதில்லை, கானகம் சென்று தேடவேண்டியதுமில்லை.

மதி (முற்றுணர்வு, முழுமையான பேரறிவு) என்னும் பெயரோடு, மதி (பிறைச் சந்திர) வடிவில் (*Corpus Callosum, The Largest White Commissure*) நம் ஒவ்வொருவர் சிரசின் உள்ளேயும் பெருமூளை (*Cerebral Hemispheres*) என்னும் கருவறையை இடமாகக் கொண்டு அச் செம்பொருளாகிய பரமசிவம் வீற்றிருக்கிறான். இஃது தலையாய உண்மை. இதனை விரிவாகச் சிந்தித்து. இதன்மூலம் மக்கள் யாவரும் செம்பொருளை உணர்ந்து தெளிந்து செவ்விய இன்ப வாழ்வில் நிலைபெற வேண்டும் என்பதே இந்நூலின் தலையாய குறிக்கோள். விதி காத்திருக்கிறது, மதியால் வெல்லுங்கள்! வெற்றி உறுதி!

திருச்சிற்றம்பலம்

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல் மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே

பிரம குமாரர்கள் நால்வரும் வேதங்களையும் அவற்றின் துணை நூல்கள் பலவற்றையும் கற்றிருந்தும், மலைவு (ஐயங்கள்) நீங்காத நிலையில், தம்மை அணுகியபோது, சிவபெருமான் அவர்களுக்கு ஆகமவழியில் சின்முத்திரைகாட்டி மலைவு நீக்கி, ஞானத் தெளிவூட்டினார் எனத் 'திருவிளையாடற்புராணம்' கூறுவார் ஆசிரியர் பரஞ்சோதியார்.

சிவாகமப் பொருள்கள் ஒன்றோடு ஒன்று முரணுவதாக நந்தியம்பெருமான் மலைந்து வினவியபோது, கல்லால் மர நிழலில் அமர்ந்து சிவபெருமான் சிவஞானபோதம் என்னும் ஞானநூலை ஓதி அவருக்கு மலைவு தீர்த்து அருளினார் என 'மாபாடியம்' கூறுவார் மாதவச் சிவஞான யோகிகள்.

புராணங்களும் விளக்கங்களும் வேறுபடினும் அனைத்து ஆன்மாக்களுக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்பக் குருவாய் எழுந்தருளி வந்து, ஞானத் தெளிவூட்டியவர் சிவபெருமானே என்பது கருத்து.

கல்-ஆல் என்பது குறிஞ்சி நிலத்துக் கருப்பொருள்களுள் ஒன்று. அஃது விழுதுகள் இல்லாத ஆலமரம். குறிஞ்சியின் உரிப்பொருள் தலைவன்-தலைவியரின் இன்பக் கூட்டம். ஆகவே இங்கு வாழ்கின்ற காலம் வரை செவ்விதே வாழ்ந்து (பிறப்பு-இறப்புச்சுழற்சி நீங்குமாறு) மீண்டும் பிறவாத பேரின்பப் பெருவாழ்வு அடைகிற நெறியைப் போதிக்கும் இடம் என்பது குறிப்பால் உணர்த்தப்பெற்றது.

(மற்ற நிலங்களில் உள்ள ஆலமரத்தின் விழுதுகள் நெடிது வளர்ந்து மண்ணில் பதிந்து, தாய் மரத்தைத் தாங்குவதும் அம்மரம் பன்னெடுங்காலம் தொடர்ந்து வாழ்வதும் இயல்பு. அத்தகு விழுதுள்ள மரங்கள் வினைவழிப் பிறப்பு - இறப்புச் சுழற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு)

மலை வில்லார் என்பது சிவபெருமானை இரண்டு வகையால் உணர்த்தும் அழகிய தொடர். தன் அளவில் எத்தகைய மலைவும்

இல்லாதவன் என்பது ஒரு பொருள். தன் குழந்தைகளாகிய உயிரினத்தின் துன்பம் களைவதற்காக மேருமலையையே வில்லாக வளைத்த பேராற்றல் உடையவன் என்பது இன்னொரு பொருள். அவன் இயல்பாகவே மும்மலங்களால் பிணிக்கப்படாத முற்றுணர் வினன் என்பதும் வன்னெஞ்சமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்க வல்ல கருணையாளன் என்பதும் குறிப்பால் உணர்த்தப்பெற்றன.

பொல்லார் என்பது உளி கொண்டு பொள்ளப் படாத மூத்தபிள்ளையைக் குறிக்கும். நாம் திருக்கோயில்களில் விநாயகரின் திருவுருவச் சிலைகளைக் காணுகிறோம். அவை எல்லாம் தெய்வீகக் கலைஞர்களால் உளி கொண்டு பொள்ளப்பட்ட உருவச் சிலைகள். இங்கு மெய்கண்டார் குறிப்பிடுகிற விநாயகர் பொள்ளப்படாதவர்.

ஈராண்டில் சிவஞானம் பெற்று உயர்ந்தவர் மெய்கண்டார். ஆகவே சிவயோகத்தால் முதிர்ந்த சிவஞானிகள் தத்தம் உடம்பினுள்ளும், உயிருக்குள் உயிராகவும் கண்டு வழிபட்டு இன்புறுகிற ஆனைமுகப் பிள்ளையையே அவர் இங்கு வாழ்த்தி வணங்குகிறார் எனலாம்.

அருளிய என்பது சிவபெருமானால் அருளப்பெற்ற விநாயகக் கடவுள் எனவும் சிவபெருமான் அருளை நாம் பெறுதற் பொருட்டு முன்னர் வணங்குதற்குரிய விநாயகர் எனவும் இரண்டு வகையாலும் பொருள் கூறுதல் பொருந்தும்.

இணைமலர் என்பது விநாயகரின் ஞானசக்தி, கிரியாசத்தி ஆகிய இரண்டு திருவடிகள்.

நல்லார் புனைவர் என்பது ஆன்ம உய்தியை நாடுகிற மெய்யன்பர்கள் விநாயகரின் திருவடிகளைத் தம் சிரமேல் சூடிக் கொள்ளுவர் என்னும் பொருளது.

அறிவியலும் சிவயோகமும்

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் எத்துணை சிறப்பாக இப்பாடலில் இணைந்து செல்லுகின்றன என நோக்குவது இறை-இன்பம் பெற விளைவோர்க்கு நற்பயன் தரும்.

மூலாதாரம் என்பது நம் ஒவ்வொருவர் உடலின் அடி வயிற்றிலும் கருவாய்க்கும் எருவாய்க்கும் இடைப்பட்ட பகுதி. இதனை மருத்துவநூலார் பெரிநியம் *(Perineum)* என

அழைப்பர். இதுவே மூலாதார விநாயகரின் இடம். உடம்பு என்னும் திருக்கோயிலுக்கு இதுவே ஓமகுண்டம்.

நம் சிரசினுள் இருக்கும் பெருமூளை எண்ணற்ற மடிப்பு களோடு கூடிய திருக்கயிலைமலை. இதன் இரண்டு கூறுகளும் மாதொருபாகனை நினைவுறுத்துவன. ஆகாயகங்கை (*Cerebro Spinal Fluid*)யின் தோற்றுவாய் இதன் மையப்பகுதியில் (*Choroid Plexes*) உள்ளது.

மூளை-முதுகந்தண்டு இணைந்த பகுதியைச் சுழுமுனை நாடி என்பர். இதனை மருத்துவநூலார் மையநரம்பு மண்டலம் (*Central Nervous System*) என்பர். திருமூலர் இதனைச் 'சிவபூமி' எனப் போற்றுவார்.

பிராணாயாமத்தால் நுரையீரலில் பிராணவாயுவை நிரப்பிக் கொண்டு, புருவநடு வழியாகப் பிரணவத்தை உள் முகமாகச் சிந்தித்துப் பெருமூளைக்கு உரமூட்டி, மீதானத்தி லிருந்து தலை உச்சிக்குழி வழியாக நுழையும் சிவசத்தியரை மூளையின் இரண்டு கூறுகளில் மூலமந்திரம் கொண்டு மாதொரு பாகனாய்ச் சிந்தித்துப், புருவக் கடை (*Temples*)களில் மெதுவாக மூன்றுமுறை குட்டிக் கொண்டால், மூளை நரம்புகளில் அதிர்வுகள் தோன்ற, இடப்பாகத்து அருட்சத்தி பிடி (பெண் யானை) உருவில் வலமாகச் சுழித்துவர, வலப்பாகத்துச் சிவன் கரி உருவில் இடம் சுழிக்க, இருவரும் புணர, இரண்டு துதிக்கைகளும் பின்னிப் பிணைந்து முதுகந்தண்டின்வழி தாழ அருட் குழந்தையாக மூலாதாரத்தில் மூத்தபிள்ளையார் தோன்றுகிறார்.

நர்த்தன விநாயகராய்ச் சுழுமுனையில் நின்று. ஆர்வமும் பக்குவமும் உள்ள ஆன்மாக்களைக் குண்டலினி சத்தியோடு சிவபூமியில் படிப்படியாக உயர்த்திச் சிரசினுள் சிவபரத்தின் திருவடிகளில் சேர்ப்பிக்கிறார். ஔவையாரைத் தம் துதிக்கையால் தூக்கிச் சிவலோகம் சேர்ப்பித்தமை உன்னற்பாலது.

இந்நூலில் மங்கல வாழ்த்தில் கூறியுள்ள மெய்கண்டாரின் அறிவுரைப்படி, நம்மையும் சிவபெருமான் திருவடிகளில் சேர்ப்பித்தற் பொருட்டு நாமும் நல்லடியாராய்ப் பொள்ளாப் பிள்ளையார் இணையடிகளைச் சிரமேற் கொள்ளுவோம்.

நூலறிவு எளிதாகும்!
நுண்ணறிவு புலனாகும்!
இறையறிவு சித்திக்கும்!



1. பெருமூளை
2. செயலகம்
3. அறிவகம்
4. மூளையின் மைய மேல்பகுதி
5. மூளையின் பின் பகுதி
6. மூளையின் பக்கப் பகுதி
7. சிறு மூளை
8. முகுளம்
9. கழுத்து - விசுத்தி
10. நெஞ்சு - அனாகதம்
11. வயிறு - மணிபூரகம்
12. அடிவயிறு - சுவாதிட்டானம்
13. இருப்பிடம் - மூலாதாரம்
14. முதுகெலும்புக் கோவை

மூலாதார விநாயகரும் முதுகுத்தண்டும்

அவையடக்கம்

தம்மை உணர்ந்து தமைஉடைய தன் உணர்வார்
எம்மை உடைமை எமை இகழார் - தம்மை
உணரார் உணரார், உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன். சிவஞானபோதம்

சிவாகம வழிநின்று, ஆன்மாக்களாகிய தம்மையும், தம்மை உடைமைப் பொருளாகக் கொண்ட தலைவனாகிய சிவபெருமானையும் உணர்ந்தவர்கள் ஞானத்தால் தெளிந்த வர்கள்; அவர்கள் சிவமே ஆவர்; அத்தகையோர் எம்மையும் தம் உடைமைப் பொருளாகவே ஏற்பர்; எம்மிடத்தும் எம் நூலிடத்தும் குற்றங்கள் காணினும், கோதாட்டுவதன்றி இகழ்தல் செய்யார்.

உயிர் என ஒன்று இல்லை எனவும், கடவுள் என ஒன்று இல்லை எனவும் கூறுவோரும், கடவுளின் தலைமையை ஏற்காதோரும், தலைவனல்லாத ஒருவனைத் தலைவனாகக் கொண்டு மயங்குவோரும், அனைய பிறரும் தம்மைப் பற்றியோ தம் தலைவனைப் பற்றியோ தெளிவான சிந்தை உடையாரல்லர். பிறவிக் குருடர் சிலர் ஆனை ஒன்றைத் தம் கைகளால் தடவி அதன் வடிவத்தை முறம் என்றும், உரல் என்றும், உலக்கை என்றும், மலை என்றும் பலவாறாகக் கூறுவதோடு, ஒருவரை ஒருவர் மறுத்தும், முரண்பட்டுக் கலகம் விளைவித்தும் ஆர்ப்பரிப்பர். பிழைபட்ட கருத்துடைய அவர்கள் தம்முள்ளும் ஒருமித்த கருத்து இல்லாதவர்கள். அத்தகையோர் எம்மையும் தம் போன்ற ஒருவராகவே கருதுவதும், எம் நூலை ஏதேனும் கூறி இகழ்வதும் இயல்பே. அவற்றை மனம் கொள்ளாது, அவர்தம் பொய்ம்மைகளை வெள்ளறிவின் விளைவு என ஒதுக்கி விடுதலே சீர்மையாம்.

இயல் - 1

வினையே பிறவிக்கு வித்து

(தடைகளின் இருப்பு)

இன்பமும் துன்பமும்

இனிய வைகறைப் பொழுது; வழக்கம்போல் இறைமைச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். ஐயா! என்ற அன்பான மழலை மொழி கேட்டது. சற்றே நிமிர்ந்து பார்ந்தேன். சிரித்த முகத்தோடு பேத்தி சிவகாமி அருகில் வந்தாள். ஐந்தாண்டுப் பெண் மகவு: அழகிய கண்கள்; அவையும் அன்றலர்ந்த தாமரை போல் மலர்ந்து நோக்கின. அவள் உள்ளத்தில் அத்தனை மகிழ்ச்சி, தன் பிஞ்சு விரல்களை மெல்ல விரித்துக்காட்டினாள்.

விரல்களில் மருதாணி சேர்த்த அழகு; அதை எல்லோரிடமும் காட்டுவதில்தான் அந்தப் பிஞ்சு உள்ளத்துக்கு எத்துணை பெருமிதம்! சிரித்து மகிழ்கிற அச்சிங்கார முகத்தில் கள்ள மில்லா உவகையைக் கண்டேன். அதில் நமக்குந்தான் எத்துணை இன்பம்!

இவற்றிற்கெல்லாம் காரணம், அவளுடைய பாட்டியார் அவள் விரல்களில் இட்டிருந்த மருதாணி; அதன் செவ்விய தோற்றத்தால் அவளுக்கு ஏற்பட்ட உவகை, (மருதாணி வெறுமே அழகூட்டும் சாதனம் மட்டுமன்று; கண்களின் சூட்டினைத் தணித்து, உடம்பிலும் உள்ளத்திலும் குளிர்ச்சியை ஊட்டுவதற்காக இறைவன் தந்த இயற்கை மருந்துகளில் ஒன்று அது. கடையில் வாங்கும் செயற்கைப் பூச்சுகளைப்போல் அது செலவு வைப்பதும் இல்லை; தீமை பயப்பதும் இல்லை.)

அன்று மாலை நான் அலுவலக வேலையை முடித்து வீடு திரும்பினேன். குழந்தை அழுது கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும், தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள். அவளை அன்போடு எடுத்து அணைத்துக் கொண்டேன். அவள் தன் கையை என் கண் முன் நீட்டினாள். அந்தோ, பாவம்! அப்பிஞ்சு விரலிலே பஞ்சு சுற்றியிருந்தது. ஏதோ கூரியதோர் பொருள் கீறியதால் ஏற்பட்ட இரத்தக் காயம். சிவந்த விரலில் செந்நிறக் குருதி. ஆறுதல் கூறித் தேற்றினேன். சற்றே அமைதி அடைந்தாள்.

என் சிந்தனை-அலைகள் சித்தாந்த சைவத்தைச் சுற்றி வந்தன. மருதாணி தந்த அழகுச் சிரிப்பு ஒரு புறம்; காயம் தந்த இரத்தச் சிவப்பு மறுபுறம். இரண்டும் ஒரே விரலில் தான். என்றாலும் ஒன்றை ஒன்றால் ஈடுகட்ட முடியவில்லை.

காலையில் தாவித் திரிந்த இன்ப உள்ளம் மதியத்தில் வாடித் துவண்டு வருந்தி நிற்கிறதே, அஃது ஏன்? இன்பத்துக்கு காரணம் மருதாணிப் பூச்சு, துன்பத்துக்குக் காரணம் கத்தியின் கீறல் என எளிதில் விடை கூறிவிடலாம். ஆயினும் அவை மேலோட்டமான காரணங்களே. இந்நிகழ்ச்சிகளின் அடி ஆழத்தில் வேறொரு முக்கிய காரணம் இருக்க வேண்டும். அஃது யாது? என்பதை ஆராய முற்பட்டது உள்ளம்.

அப்போது அங்கு வந்தனர் சிவசாமியும் குப்புசாமியும், இருவருமே எங்களூரில் நல்லாசிரியர் விருது பெற்ற பள்ளி ஆசிரியர்கள். அறிவியலிலும் இறையியலிலும் அழுத்தமான பற்றுக் கொண்டவர்கள். செய்திகளை ஆர்வத்தோடு கேட்பதும், ஆழமாகச் சிந்தித்துச் சரியான முடிவுக்கு வருவதும் அவர்களிடம் காணப்பெறுகிற நல் இயல்புகள். ஊர்மக்கள் அவர்களைச் 'செம்மல்கள்' எனப் போற்றுவர். சைவசித்தாந்தப் பாடம் கேட்பதற்காக அவர்கள் மாலை நேரங்களில் என் இல்லத்துக்கு வருவது வழக்கம். அன்றும் அவ்வாறே வந்தனர்.

மனித வாழ்வின் இன்பதுன்பங்கள், ஏற்ற-இறக்கங்கள் தொடர்பான சிந்தனை எங்கட்கு அன்றையக் கருப்பொருளாயிற்று. சித்தாந்த சைவத்தின் இணையற்ற கொள்கைகளும் கோட்பாடு களும் நடைமுறை உலக வாழ்வோடு இணைந்து வருகிற பாங்கினை எண்ணிப் பார்ப்பதாக எங்கள் சிந்தனை அமைந்தது. அதன் விளைவுதான், இதோ! உங்கள் கையில் ஓர் முத்தாரக் கோவையாக மிளிர்கிறது.

இன்ப துன்பங்கள் - இயல்பான நிகழ்ச்சிகளா?

''ஐயா! குழந்தை சிவகாமிக்கு இன்பத்தை மருதாணி தந்ததாகவும், துன்பத்தைக் கத்திக் கீறல் தந்ததாகவும் கூறுகிறீர்கள்; ஆனால் இன்பமும் துன்பமும் இயற்கையாகத் தோன்றுபவை எனச் சிலர் சொல்லுகிறார்களே, அது பற்றிய தங்கள் கருத்தை அறிய விரும்புகிறோம், ஐயா'' என விண்ணப்பித்து அன்றைய சிந்தனைக்கு உரமிட்டார் குப்புசாமி.

''ஆம், ஒரு சாரார் அப்படித்தான் கூறுகிறார்கள்; இன்பமும் துன்பமும் முற்றிலும் இயல்பான நிகழ்ச்சிகளே'' என்பது அவர்களின் வாதம். ஆழ்ந்து சிந்திப்போர்க்கு அவர்களது கருத்து பிழையானது என்ற உண்மை புலனாகும்.

''காலங்காலமாகச் சிவபெருமானின் திருவருளைப் பெற்று, அப்பேரின்பத்திலேயே திளைத்த அருளாளர்கள் எண்ணற்றோர் நம் தமிழகத்தில் இருந்திருக்கிறார்கள். தாம் அங்ஙனம் உணர்ந்த மெய்ப்பொருள் உண்மைகளை நம் போன்றார்க்கும் உணர்த்தி, ஞானத் தெளிவூட்டும் உயர்ந்த குறிக்கோளோடு, அவர்களுள் பலர் ஞான - நூல்களை உருவாக்கியும் உள்ளார்கள். நிலையான உண்மை அறிவானந்தப் பொருளையும் அது தொடர்பான செய்திகளையும் உணர்த்து வதால் அவற்றை மெய்ஞ்-ஞான-நூல்கள் எனப் போற்றுவது மரபு. சைவசித்தாந்த சாத்திரங்களில், அத்தகைய சிறப்புடையன வாகப் பதினான்கு ஞானநூல்கள் உள்ளன.''[1]

'எக்காலத்தும் நிலையாக உள்ள, இயல்பான பொருள்கள் எவை எவை? அவை ஒவ்வொன்றின் தனித்தன்மைகள் யாவை? அவை ஒன்றோடு ஒன்று எவ்வாறு தொடர்பு கொள்ளுகின்றன? அத்தகு தொடர்பினால் நேரும் விளைவுகள் யாவை?' என்பன பற்றி எல்லாம் அவர்கள் மிகவும் சீராகச் சிந்தித்துத் தெளிவாக வரைந்துள்ளனர்.

உயிர்க் கூட்டமாகிய நம்மை எல்லாம் காத்து, இன்பம் தருகிற கடவுளின் இருப்பும் இயல்புகளும் ஒரு புறம், நம்மைத் துன்பச் சூழலிலேயே அழுத்துகிற தீதுறு மலங்களின் திறன்கள் மறுபுறம், - என ஆழமான அரிய பல உண்மைகள் அந்நூல் களில் அனுபவ வழியாக ஆராய்ந்து வரையப்பட்டுள்ளன; கடவுள் ஒருவரே. அவர் முற்றுணர்வினர். உயிர்கள் எண்ணற்றன. அவை, சிற்றறிவுடையன. உயிரினத்தின் இன்பவாழ்வுக்கு ஊறுவிளைவிப்பன ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள். இவைபற்றியெல்லாம் அந்த ஞானநூல்களில், விரித்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் இன்பதுன்பங்கள் பற்றிய செய்திகளை மட்டும் ஈண்டுச் சிந்திப்போம்.

1. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், உண்மைவிளக்கம், இருபாஇருபஃது, சிவப்பிரகாசம், திருவருட்பயன், நெஞ்சுவிடுதூது, வினாவெண்பா, சங்கற்பநிராகரணம், கொடிக்கவி, போற்றிப் பஃறொடை, உண்மைநெறிவிளக்கம்.

'இன்பமும் துன்பமும் இரண்டு மாறுபட்ட நுகர்ச்சிகள். முரண்பட்ட அவ் இரண்டு தன்மைகளும் ஒரே பொருளில் நிலவுவது இயல்பு-ஆகாது' என்பது சைவ ஞானாசிரியரின் ஒருமித்த கருத்து.

இவ்வுண்மையை நிறுவ அவர்கள் சில சான்றுகளும் காட்டுவர்; தண்மைத் தன்மையின் காரணமாகவே நீருக்குத் தண்ணீர் என்பது பெயர்; அதன் இயல்பு, குளிர்ச்சி, அதனைத் தொடும் போது வெப்பமாக இருந்தால், யாரேனும் அதனைச் சூடுபடுத்தி இருக்கவேண்டும் என்பது தெளிவு. அதேபோல், அத்தண்ணீரில் நறுமணம் வெளிப்பட்டால், யாரேனும் நறுமணப் பொருளை அதில் சேர்த்திருக்க வேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அங்ஙனமின்றித், தண்ணீருக்குத் தானாகவே வெம்மை யாகும் இயல்போ, நறுமணத்தைப் பெறுகிற தன்மையோ இல்லை. இஃது நாளும் நடைமுறை உலக வாழ்வில் நாம் தெளிவாக அறிகிற ஓர் அனுபவம், இதேபோன்றுதான், கண்ணுக்குப் புலப்படாத நுண் பொருள்களின் இயல்புகளும் உள்ளன.

நாம் நாளும் நுகர்கிற இன்ப துன்பங்கள் என்ற இரண்டு மாறுபட்ட உணர்ச்சிகளும் நம்மிடத்தில் இயல்பாகத் தோன்றி யவை அல்ல. தண்ணீரை ஒத்த நம்மிடத்தில் இன்ப-நறுமணமோ, துன்ப-வெம்மையோ தோன்றுகிறதென்றால், அவற்றிற்கு மூலமாக ஒரு காரணம் நம்மிடத்தில் இருக்க வேண்டும். அக்காரணங்கள் யாவை எனத் திருவருளை நினைந்து சிந்தித்தனர் அருளாளர்கள். அவர்களுக்கு இறையருளால் கருத்து விளக்கம் கிடைத்தது.

முந்தைய பல பிறப்புகளிலும் நாம் ஈட்டிய நல்-வினை, தீ-வினைகளின் பயன்கள் இப்பிறப்பில் உரிய போழ்தில் உரிய முறையில் நமக்குச் சிவ-ஆணைப்படி, சிவசத்தியால் ஊட்டப்படுகின்றன என்பதே அவர்கள் கண்டு உணர்த்திய பேருண்மை.''

வினை என ஒன்று உண்டா?

'அவ்வாறாயின், வினை என ஒன்று உண்டா?' -இது சிவசாமியின் வினா.

'ஆம். உண்டு. இன்பமோ துன்பமோ எதுவாயினும், அது நம் விருப்பப்படி வருவதும் இல்லை, போவதும் இல்லை; அவற்றை நாம் நுகராது நிறுத்த எண்ணினாலும், அவை நில்லாது வந்து நம்மை அணைகின்றன. நாம் எதிர்பாராமலேயே நம்மிடம் வந்து சேர்கின்றன. அவற்றை நாம் முயன்று போக்க விரும்பினாலும், நம்மை விட்டுப் போகாமல் அவை நம்மையே தொடர்கின்றன. இவற்றிலிருந்தே முன் வினை என ஒன்று உண்டு என்பது துணியப்படும்.

பழந்தமிழ்க் கொள்கை

''ஐயா! இன்பம், துன்பம் பற்றிய சிந்தனைகள் எத்துணை காலமாக நம் தமிழகத்தில் இருந்து வருகின்றன? என வினவினார் சிவசாமி.

வினைக்கோட்பாடு என்பது தமிழர்களாகிய நம்மிடம் இன்று-நேற்றுத் தோன்றிய புதிய கருத்து அன்று. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வியல் இலக்கணத்தை வகுத்துத் தந்தவர், நம் தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர். அவர் தொல்காப்பியம் என்னும் தம் தெய்வத் தமிழ்நூலில் சைவ சமய அனுபவங்கள் பலவற்றைச் சிறப்பாக அறிவுறுத்துகிறார்:

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்று ஆகும். (பொருள் : 319)

என்று 'இன்பம் என்பது உயிரினம் முழுமைக்கும் ஒரு பொதுவான உரிமையே; ஆயினும் அவ்இன்பம் அந்த அந்த உயிர்கள் மேற்கொண்ட இருவினைகளுக்கு ஏற்பவே அமையும்' என்பது தொல்காப்பியரின் கூற்று. இதுவே பண்டு தொட்ட நம் தமிழர் கொள்கையாகும்.

இக்கருத்தை மிக எளிமையாகவும் தெளிவாகவும் அழகிய தமிழில் பாடியுள்ளார் ஔவை மூதாட்டி:

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா;
பொருந்துவன 'போம்' என்றால் போகா; - இருந்து, ஏங்கி,
நெஞ்சம் புண்ணாக, நெடுந்தூரம் தான்நினைந்து,
துஞ்சுவதே மாந்தர் தொழில்! (நல்வழி - 5)

'ஒருவன் பெறுகிற கைப்பொருளாயினும், அவன் பெறுகிற இன்பமாயினும், பிறவாயினும், அவை அவன்பால் வருவதற்கும்,

அவனிடத்துத் தங்கி இருப்பதற்கும், அவனை விட்டு நீங்கு வதற்கும் முதற்காரணமாக இருப்பது ஊழ்' என அறிவுறுத்து கிறார், தெய்வப்புலவர் திருவள்ளுவர்

ஆகூழால் தோன்றும்அசைவு இன்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி (குறள் - 371)

''மன அலைவு இன்றி, புத்தி சரியான முறையில் திட்டமிட, அகங்காரம் சீராகச் செயற்பட ஒருவனிடத்தில் பல்வகை வளங்களும் பெருகுவதற்கு ஆகு-ஊழே காரணம்; மன உளைச்சலால் உள்ளம் பேதலித்து ஒன்றிலும் நிலைகொள்ளாது சோம்பி நின்று கைப்பொருளையும் ஒருவன் இழப்பதற்குக் காரணமாவதும் ஊழே, அது போகு-ஊழ்.''

இவ்வாறு ஊழின் இருப்புப் பற்றிக் கூறிய திருவள்ளு வரிடம் ஒருவர் கேட்டார்: 'எதையும் பகுத்து அறிந்து செயற் படுகிற அறிவு இருந்தால் ஒருவன் சிறப்புடன் வாழ முடியு மன்றோ?' என்று, அதற்கு அப்பெருமகனார்

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவுஅகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை (குறள் - 372)

''ஒருவன் எத்துணைதான் பகுத்துப் ஆய்ந்து நோக்கித் திறம் படச் செயற்படுகிற அறிவு உள்ளவனாகவும் கல்விமானாகவும் இருந்தாலும், கைப்பொருளை இழப்பதற்கு ஏதுவாகிய ஊழ் (இழவு-ஊழ்) வந்துற்றால், அஃது அவனைப் பேதையாக்கி, அவன் மாட்டு உள்ள கைப்பொருளை இழக்குமாறு செய்யும். அதேபோல் முந்தைய நல்வினை காரணமாக ஆகூழ் (ஆகல் - ஊழ்) வந்துற்றால் அஃது கைப்பொருளைப் பலவாறாகப் பெருகுமாறு செய்யும்'' என மொழிந்து, ஊழின் மேலாண்மையை அறிவுறுத்தினார்.

சமுதாய ஏற்றத் தாழ்வு

சிவசாமி சிந்தனையைத் தூண்டுவதில் வல்லவர்; அவர் சில வினாக்களை எழுப்பினார்.

''சமுதாயத்தில் செல்வம் நிறைந்தோர் சிலராகவும் வறுமையில் தத்தளிப்போர் பலராகவும் உள்ளனர். செல்வர்களில் பலர் உடலால் நோயுற்றும், உள்ளத்தால் நலிவுற்றும் துன்புறு கின்றார். அதேசமயம், வறியோரில் பலர் எப்பொழுதும் மனக்

களிப்போடு உலவிக் கொண்டிருப்பதையும் காண முடிகிறது. மேலும், இன்றைய சமுதாயச் சூழலில்,

நேர்மையாக வாழும் பலர் சொல்லொணா இடர்ப்பாட்டில் சிக்கித் தவிக்கின்றனர்; ஆனால் சமூகக் கேடிகளாய்த் தீய நெறி யிலேயே வாழ்ந்துகொண்டிருக்கும் பலர் எல்லா வசதிகளோடும் இறுமாந்து வாழ்கின்றனர். வினை என ஒன்று உண்டு என்றால், இத்தகைய முரண்பாடான உலகியல் நிலைமைகளுக்குக் காரணம் என்ன?''

''ஐயா, தங்களுடைய வினாக்கள் மிகவும் நியாயமானவை. நடைமுறை வாழ்வில் பலராலும் நன்கு உணரப்படுபவை. ஆயினும் நான் இப்பொழுது தங்களிடம் மாற்று வினா ஒன்று எழுப்புவதன் மூலமே தங்கள் வினாக்களுக்கு விடை பகர விரும்புகிறேன்'' எனக் கூறித் தொடர்ந்தேன். அவரும் உவகையோடு கேட்பதற்குத் தயாரானார்.

''இரண்டு நண்பர்கள் நம் வீட்டுக்கு வருகிறார்கள். இருவரையும் நம் வீட்டில் விருந்து உண்ணுமாறு வேண்டு கிறோம். ஒருவர் உண்கிறார், வயிறார உண்கிறார்; உண்டு மகிழ்வோடு அமர்ந்திருக்கிறார். மற்றவரோ 'உடல் நலமில்லை' எனக் காரணம் கூறி, நம் வீட்டில் எதுவுமே உண்ணவில்லை.

உணவுக்குப் பிறகு நால்வரும் அமர்ந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கிறோம். நம் வீட்டில் எதுவுமே உண்ணாதவர் சற்று பதற்றத்துடன் வினவுகிறார்: 'கழிப்பறை எங்கே இருக்கிறது?' என்று. அழைத்துச் சென்று காண்பிக்கிறோம். ஒருமுறை அங்குச் சென்று வந்தவர், மீண்டும் மீண்டும் சிலமுறை அக் கழிப்பறைக்கு விரைகிறார். அவருடைய இச்செயலுக்குக் காரணம் யாது?'' -இதுவே யான் எழுப்பிய மாற்று வினா.

குப்புசாமி அதற்குப் பதிலிறுத்தார்: 'உண்ட உணவு சீரணிப்பதில் ஏதோ கோளாறு' -என்று.

யான் நினைவுறுத்தினேன்: 'அவரோ நம் வீட்டில் எதுவுமே உண்ணவில்லை' என்று. அவர் முன்னர் எங்கோ உட்கொண்ட ஒவ்வாத உணவினால் வந்த இடர்ப்பாடு இஃது' என்று பதில் கூறினார் குப்புசாமி.

'தாங்கள் கூறியதை மீண்டும் கூறுங்கள்' என்றேன். 'வேறு எங்கோ ஓரிடத்தில் சில மணி நேரங்களுக்கு முன்னர் அவர் உட்கொண்ட உணவு அவருக்கு ஏற்றதாய் இல்லைபோலும்; அதுவே இப்போது இங்கு அவர் வயிற்றுக்குத் தொல்லை கொடுக்கிறது' என்றார்.

'எங்கோ வேறிடத்தில் அவர் உட்கொண்ட முந்தைய உணவு நம் வீட்டுக்கு வந்த இடத்தில் எதுவும் சாப்பிடாத அவரைத் துன்புறுத்துகிறது. ஒவ்வாத உணவினை உண்டதே அவர் முன் செய்த வினை. அதன் விளைவுதான் இப்போதைய தொல்லை, நம் வீட்டில் நன்றாகச் சாப்பிட்டவரோ இப்போது அமைதியாக இருக்கிறார். (நம் வீட்டு உணவு அதை உண்டவருக்கு ஒவ்வுமா? ஒவ்வாதா? என்பது சில மணி நேரம் பொறுத்துத்தானே தெரியும்! அப்போது அவர் வேறு எந்த இடத்தில் இருப்பாரோ?)

அதே போன்றுதான் நாம் ஒவ்வொருவரும் முந்தைய பிறப்புகளில் வெவ்வேறு இடங்களில் பலப்பல வகையான வினைகளைச் செய்திருக்கிறோம். அதற்கு உரிய பயனை அவரவரே இப்பொழுது நுகர்ந்து கொண்டிருக்கிறோம். அதுவே மறுக்க முடியாத உண்மை.

இப்பொழுது நல்லவர்களாகவே இருந்தும் சிலர் துன்பத்தில் உழல்வதற்கு அவர்கள் முன்னர் எப்பொழுதோ செய்த தீவினை களே காரணமாகும். அதேபோல்தான் தீயோர் சிலர் நீதி நேர்மைக்குப் புறம்பாகவே இன்று வாழ்ந்தாலும் இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம், அவர்களுடைய கணக்காக வரவிருக்கும் முந்தைய நல்வினைகளே ஆகும்.

உண்மையைச் செவி மடுக்கும்போது சற்று கசப்பாகவே இருக்கும். இன்றைய போலி உலகம் உண்மையை ஏற்பது மில்லை, உண்மையைக் கூறுபவர்களை மதிப்பதுமில்லை. சரியாகச் சொல்லப் போனால் இன்று சமுதாயத்துக்குக் கேடு செய்யும் சிலர் இன்பமாக இருப்பதற்கான காரணங்களை எண்ணிப் பார்த்தால் ஒன்று பழவினைத் தொடர்ச்சி, மற்றது புதுவினைகளின் ஈட்டம் - என இரண்டு விதமாகச் சிந்திக்கலாம்.

பழவினைகளின் தொடர்ச்சி

முந்தைய பிறப்புகளில் அவர்கள் உறுதியாக, தம் சொந்த நலன்களைக் கருதாமல் உயர்ந்த நோக்கத்தோடு சமுதாயத்துக்குத்

தொண்டுகள் செய்திருக்க வேண்டும். சமுதாயம் அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கொடுமைகள் பல இழைத்திருக்க வேண்டும். உத்தமர் அண்ணல் காந்தியையே சுட்டுக் கொன்ற சமுதாயம்தானே இது. ஆப்ரஹாம் லிங்கனை அரங்கத்திலும், கென்னடியைத் தெருவிலும் வைத்துச் சுட்டுக் கொன்ற அமெரிக்க சமுதாயமும் இதற்கு விலக்கன்று. காந்தியும் இயேசுவும் வேண்டு மானால் தமக்குக் கேடு செய்தவர்களை மன்னித்ததாக நாம் இன்று பெருமையாகக் கூறிக்கொள்ளலாம். தெய்வ நீதி என்பது நம் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டது, அனைத்திலும் மேலானது.

ஒரு காலத்தில் சமுதாயத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட நல்லவர்கள், சமூகத்தின் பேரிலேயே வெறுப்புற்று, இன்று சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதை இன்றும் நாம் காணுகிறோம் அன்றோ?

புது வினைகளின் ஈட்டம்

இவ்வாறு ஊழ்வினைத் தொடர்பு எதுவும் இல்லாமலும் அவர்கள் சமுதாயத்துக்குக் கேடோ நன்மையோ செய்யவும் கூடும். அங்ஙனமாயின் சமூகத்துக்குக் கேடோ நன்மையோ செய்யும் அவர்கள் இன்று மேற்கொள்ளுபவை அவர்களின் புதிய முயற்சியாகவும் இருக்கலாம். அவ்வாறாயின் அதுவே அவர்கள் செய்கிற புது வினையாகிப் பின்னர்ப் பரிசாகவோ, தண்டனையாகவோ அவர்களை வந்து சேரும்.

வினை என்றால் என்ன? கன்மம் என்றால் என்ன?

''வினை என்பதற்குச் சரியான பொருள் என்ன? ஐயா! வினையும் ஊழும் ஒன்று தானா?'' என்று வினவினார் சிவசாமி.

வினைகள் என்பவை வேறொன்றுமில்லை; ஒவ்வொரு நொடியும் நாம் செய்கிற காரியங்களே வினைகள். நாம் படிக்கிறோம், எழுதுகிறோம், விளையாடுகிறோம், உண்கிறோம், உடுக்கிறோம், உறங்குகிறோம், தொழிலில் ஈடுபடுகிறோம், பிறர்க்கு இன்பம் அல்லது துன்பம் நேருமாறு பல செயல் களைச் செய்துகொண்டே இருக்கிறோம். இவை அனைத்துமே நம்மால் செய்யப்பட்ட/ செய்யப்படுகிற வினைகளாம்.

வினை என்றால் என்ன என்பதற்குச் சைவ ஞானநூல் களிலும், சைவ இலக்கியங்களிலும், பழந்தமிழ் இலக்கியங் களிலும் நல்ல பல விளக்கங்களைக் காணுகிறோம்.

'வினை என்பது ஒரு பொருளினது தொழில் நிகழ்ச்சியை அறிவிக்கும் சொல்' என மொழி இலக்கணிகள் பொதுவாகக் கூறுவர்.

ஊழ்

ஊழ் என்பதைச் சற்று விளக்கமாகக் கூற வேண்டுகிறேன்'' என விண்ணப்பித்தார் சிவசாமி.

நல்வினையோ தீ வினையோ எதுவாயினும், வினை செய்தவரே அவ்வினைக்குரிய இன்ப துன்பப் பயன்களை உரிய காலத்தில், உரிய அளவு, உரிய முறையில் நுகர்ந்து தொலைக்கவேண்டும் என்பது நியதி. அத்தகு நியதியையே பலரும் பல சொற்களால் அறிவுறுத்துகின்றனர். ஊழ் என்பது திருவள்ளுவரின் சொல்லாட்சி.

நிலையான மூன்று பொருள்களுள் ஆன்மாவும் ஒன்று. அது பல்லாற்றானும் தொழில் நிகழ்த்தித் தன் கணக்காக நல் - வினை, தீ - வினைகளை ஈட்டிக் கொள்ளுகிறது; பின்னொரு கால் அதற்குரிய பயனையும் நுகர்கிறது.

அவ்வாறு நுகரவேண்டிய கடப்பாடே ஊழ் எனப்படும்.

'இருவினைப் பயன், செய்தவனையே சென்றடைவதற்கு ஏதுவாகிய நியதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நீதி என்பன ஒரு பொருட்கிளவி' என ஊழ் - இயலுக்கு உரை செய்கிறார் பரிமேலழகர்.

'ஏழை - பணக்காரன், கற்றவன் - கல்லாதவன், தொழிலாளி - முதலாளி, சிப்பந்தி - மேலாள், குடிமகன் - அரசன் - அமைச்சன் என்பன போன்ற வேறுபாடுகள் எதுவுமின்றி, எல்லோரும் செயற்பட முதற்காரணமாக இருப்பதும், அச் செயல்களுக்கான பயனை வேறுபாடின்றி அவரவரே உரிய காலத்தில், உரிய முறையில் நுகர்வதற்குத் துணைக்காரணமாக இருப்பதும் வினை என்ற கன்ம-மலமேயாம்'. இவ் அரிய உண்மையை, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நம் தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர் கூறக் காணலாம் :

வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

(சொல் : வினையியல் - 198)

சைவ சித்தாந்தக் கோட்பாடுகள்

காலம், நிலம், இனம், மொழி முதலிய அனைத்துப் பாகுபாடுகளையும் கடந்த தொன்மைச் சிறப்புடையது சைவ சமயம். ஆண்டவனைப் பற்றிய சிந்தனை முதன்முதலில் தோன்றிய போதே, சைவக் கொள்கைகளும் தோன்றியுள்ளன. தாய்ச் சமயம் வளர்ந்துவருகின்ற நிலையிலே, அதன் எண்ணற்ற கோட்பாடுகளுள் ஒரோ ஒன்றினைத் தம் தலையாய கொள்கையாகக் கொண்டு அதனின்று கிளைத்து எழுந்தவையே வரலாற்றுக் காலச் சமயங்கள் என்பது சிந்திக்க வேண்டிய உண்மைகள்.

''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்''* என்பது இளங்கோ அடிகளின் சிலம்பொலி. அவர் சைவ இளவரசராகப் பிறந்து சமண சமயத்தைத் தழுவியர்; எனவே அவர் தாய்ச் சமயமாகிய சைவசமயம் கூறுகிற வினைக் கொள்கையை ஏற்றுத் தம் இலக்கிய நூலில் பேசுகிறார். இவ்வாறாக, ஊழ் (வினை) என ஒன்று உண்டு என்பதையும், அதன் பின்-விளைவுகளே ஒவ்வொருவருடைய இன்பம்-துன்பம் என்ற மாறுபட்ட நுகர்ச்சி களுக்குக் காரணமாகின்றன என்பதையும் உலகச் சமயவாதி களில் பெரும்பாலோர் ஏற்பர்.

கன்மம்

'கன்மம் என்று சொல்லுகிறார்களே அஃது என்ன, ஐயா? என வினவினார் குப்புசாமி.

'வினை, கன்மம், கருமம், செயல், தொழில், காமியம், கர்மா என்ற பல பெயர்களும் பொதுவாக ஒரு பொருளையே குறிக்கின்றன. வினைகளை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் எனப் பகுத்துக் காண்பது ஒரு முறை.

நம்மால் புதிதாகச் செய்யப்படும் நல்வினை தீவினைகளுக்கு ஆகாமியம் என்பது பெயர். அதுவே பின்னர்ப் புண்ணிய பாவமாகி சஞ்சிதம் என்று பெயர் பெறுகிறது. தொடர்ந்து இன்பதுன்பங் களாக அஃது அனுபவத்திற்கு வரும்போது, பிராரத்தம் என அழைக்கப்படுகிறது. ஆக, இம்மூன்று வினைகளுமே கன்மம் என்றும் இருவினை என்றும் பொதுவாகக் கூறப்படுகின்றன. இதனை அருள்நந்தி சிவனார் சிறப்புறப் பாடுகிறார் :

★ சிலப்பதிகாரம் - இளங்கோ அடிகள்

இருவினை இன்பத்துன்பத்து இவ்வுயிர் பிறந்து இறந்து
வருவது போவது ஆகும்; மன்னிய வினைப்பயன்கள்
தரும் அரன்; தரணியோடு தராபதிபோலத் தாமே
மருவிடா, வடிவும் கன்ம பயன்களும், மறுமைக் கண்ணே

(சித்தியார் 94)

கருத்துரை

நல்வினை, தீவினை ஆகிய இரண்டு வினைகளையும் முற்பிறப்புகளில் செய்ததன் காரணமாக, நமது இந்த உயிர், தக்கதோர் உடம்பினை எடுத்துப் பிறந்து நல்வினைகளுக்கான இன்பத்தையும், தீவினைகளுக்குரிய துன்பங்களையும் நுகர்ந்து வினை முடிவில் உடலை விட்டுப் பிரிதலாகிய இறப்பினைச் செய்கிறது; இவ்வாறு பலப்பல பிறப்புகளில் உயிர் போக்கும் வரவும் புரிகிறது. இங்ஙனம் வினையே பிறப்புக்கு வித்து ஆகிறது.

பேறு [1]இழவு[2], இன்ப மோடு பிணி மூப்புச் சாக்காடு என்னும்
ஆறு(ம்)முன் கருவுட்பட்ட து; அவ்விதி அனுபவத்தால்
ஏறிடும்; முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது;
தேறுநீ; இனிச்செய் கன்மம் மேல் உடல் சேரும் என்றே

(சித்தியார்-99)

1. பேறு : கல்வி, செல்வம், நற்குடிப்பிறப்பு முதலிய உலகியல் நலன்களைத் தரும் பேறு
2. இழப்பு : மேற்கூறியவற்றின் இன்மையும், இடைக்கால இழப்பும்
3. இப்பொழுது நீ செய்யும் வினைகள், உன் மறு பிறப்புக்கும், அங்கு அமைகிற பேறு மற்றும் இழவு முதலியவை களுக்கும் காரணமாக அமையும்.

மேலைக்கு வித்துமாகி விளைந்தவை உணவுமாகி
ஞாலத்து வரும்ஆபோல நாம்[1] செய்யும் வினைகள் எல்லாம்
ஏலத்தான் [2]பலமா[3]ச் செய்யும் இதம்அகிதங்கட்கு[4] எல்லாம்
மூலத்த தாகி என்றும் வந்திடும் முறைமை[5] யோடே,

(சித்தியார்-102)

கருத்துரை

விளைந்து வந்த உணவுப் பொருள் உடனே உணவாகி இன்பப் பயனைத் தருவதோடு, அடுத்த ஆண்டின் உழவுக்கான விதையாகவும் பயன்படுகிறதன்றோ? அதேபோல் நாம்

இப்போது செய்யும் வினைகள் உடனே உரிய பயனை நல்குவது மட்டுமன்றி, மறுமறு பிறப்புக்கும் அடிகோலுகின்றன.

குறிப்புரை

1. நான் என்னும் முனைப்போடு மனம் வாக்கு காயங் களால் செய்யும் வினைகள் எல்லாம்; 2. ஏலத்தான் -புண்ணிய பாவங்களாய்ப் பொருந்துதலினால்; (ஏலுதல் - பொருந்துதல்); 3. பலனாய் - பின்னர் இன்பத்துன்பப் பயனாய்; 4. அவற்றை நுகருமிடத்துச் செய்யப்படும் நல்வினை மற்றும் தீவினை களுக்கு; 5. முறைமை - முறை பிறழாமல் (பக்குவ - காலத்திற்கு முன்பின் இன்றி, உரிய காலத்தில்)

திருமந்திரம்

''தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே'' - திருமந்திரம்-2195

இவையேபோல, இக்கால அறிவியல் அறிஞர்களும் செய்-வினை பற்றிய தத்தம் ஆய்வுமுடிவுகளை மிக அருமையான முறையில் வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களின் ஆய்வு முடிவுகள் பருமை யாகக் கண்ணுக்குப் புலப்படுகின்ற உலகத்து பொருள்களின் தொடர்பானவையே; ஆயினும், அதே கொள்கைகள் நுண்ணிய மெய்ப்பொருளியல் கோட்பாடுகளுக்கும் பொருந்தி வருவனவே.

தெரிந்த பொருளின் இயல்பு கொண்டு தெரியாப் பொருளை உணர்த்துகிற உவமயியல் கோட்பாடு, தொல்காப்பியர் போன்ற நம் செந்தமிழ் அறிஞர்களால் தொன்றுதொட்டே கையாளப் பட்ட உத்தியாகுமன்றோ? எனவே இன்றைய பருமைப் பொருள்களுக்கான அறிவியற் கருத்துக்களைப், பண்டுதொட்ட நுண்ணிய சமய உண்மைகளுக்கு உவமையாகக் கொள்ளுவது ஏற்புடையதே.

வினை எவ்வாறு நம்மைப் பற்றுகிறது?

''வினைகள் நம்மை எவ்வாறு தொடர்ந்து வந்து பற்று கின்றன? ஐயா!'' என வினவினார் சிவசாமி. ''இன்பத்தைத் தேடி அலைகிறான் மனிதன்; செல்வத்தைச் சேர்ப்பதே இன்ப வாழ்வுக்கு வழி என எண்ணுகிறான். செல்வத்தை அடையப்

பெரிதும் வேட்கையுறுகிறான்; பலவாறு முயற்சி செய்கிறான்; அதற்காகவே அவன் அங்குமிங்குமாக அலை மோதித் திரிகிறான்.

ஆனால் அவனுக்கு 'உண்மைச் செல்வம் எது?' என்று உணருகிற சிந்தனை இல்லை. 'அவனுடைய கண்களுக்குச் செல்வமாகத் தோன்றுகிற உலகத்துப் பொருள்கள் எல்லாம் மாயை என்னும் சடப் பொருளினால் ஆனவை; இவற்றை மாயா-காரியம் என்பர்.

'ஆணவம், கன்மம் என்ற கொடிய நோய்களின் பிடியிலிருந்து தாம் விடுபடுவதற்காக ஓர் இடைக்கால ஏற்பாடாகவே, மாயா காரியங்கள் அனைத்தும் தமக்கு இறைவனால் அமைத்துத் தரப் பெற்றன. அவை நிலையானவை அல்ல; உயரிய இன்பத்தை தரவல்லவையும் அல்ல; மாறாக, அவை துன்பத்துக்கும் வழிவகுப்பன' - என்பன போன்ற உண்மைகளை, வேட்கைமிகு உலகியற் சிந்தனைகள் திரையிட்டு மறைத்து விடுகின்றன.

கடுநோயில் அவதியுறும் நோயாளிக்கு அந்நோயின் கடுமை தெரியாமல் இருப்பதற்காக மருத்துவர் கொடுக்கும் மயக்க மருந்து போன்றவையே இவையெல்லாம். இவையே நோயினைத் தீர்க்கும் மருந்து ஆகா; நிலையான தீர்வும் ஆகா' அதே போன்றவைதாம் மாயா காரியங்களும். இவ் உண்மைகள் அவனுக்குப் புலனாகவில்லை.

பெரும் பொருள் ஈட்டிய ஒருவன் அப்பொருளைக் காத்துக் கொள்ளுவதற்காக ஒவ்வொரு நொடியும் அடைகிற மனத்துன்பம் அளவிட முடியாததாகிறது. ஆயினும் அப்பொருளை மேன்மேலும் சேர்க்க வேண்டுமென்ற வேட்கை காரணமாக அவன் உள்ளத்தில் எழுகின்ற கொடிய சிந்தனைகள், செய்யும் தீய வினைகள், உதிர்க்கும் கடுஞ்சொற்கள், அத்துணையும் அவனை அறியாமலேயே, அவன் கணக்கில் வினைகளாகப் பதிவாகின்றன.

அறிவியல்/இலக்கியச் சான்றுகள்

''வினைகளையும் அவற்றின் பயன்களையும் பற்றி நாம் நம் நாட்டில் தத்துவ அடிப்படையில் இத்துணையளவு சிந்திக் கிறோமே, இவற்றுக்கு அறிவியல் அடிப்படையிலும், இலக்கிய அடிப்படையிலும் ஆதாரங்கள் ஏதேனும் உள்ளனவா, ஐயா?'' என வினவினார் சிவசாமி.

''இக்கால அறிவியல் அறிஞர்களும் செய்வினை பற்றிய தத்தம் ஆய்வுமுடிவுகளை மிக அருமையான முறையில் வெளிப் படுத்தியுள்ளனர். 'ஒவ்வொரு வினைக்கும் எதிரானதும் சம மானதுமான பின் விளைவு உண்டு'* - என்பது மேலை நாட்டு விஞ்ஞானிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அறிவியல் உண்மை. கண்ணுக்குப் புலப்படுகின்ற பருமையான பொருளுக்கு மட்டுமின்றி, புலப்படாத நுண்பொருள்களுக்கும் இக்கருத்து, நன்கு பொருந்தி வருகிறது.

இதுவே பண்டு தொட்ட நம் சைவத் தமிழ்க் கொள்கை யும் ஆகும்.

'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்,
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்'

என்பது தமிழ்ச் சான்றோர்களின் அனுபவ வாக்கு. வினைகளுக்கு ஏற்பவே இன்பதுன்பங்கள் அமைகின்றன என்பது கருத்து.

வினைக்கான வாயில்கள்

''வினை ஈட்டத்துக்கும் ஊட்டத்துக்கும் வாயில்கள் உள்ளனவா? ஐயா!'' என்றார் சிவசாமி.

ஒலி-ஒளிகளை (நாதம், விந்துவை) மூலக்கூறுகளாகக் கொண்டு ஆறு வகையான வாயில்கள் உள்ளன. அவற்றை வடநூலார் அத்துவாக்கள் என்பர். அவற்றுள், எழுத்து, சொல், தொடர் (வண்ணம், பதம், மந்திரம்) என்பன ஒலி உருவமான மூலக்கூறுகள். தத்துவம், புவனம், கலை ஆகிய மூன்றும் ஒளி வடிவமானவை.

நாம் வினைகளைச் செய்வதற்கும், அவற்றின் பயன்களை நுகர்வதற்கும், உலகப் பற்று நீத்துத் திருவருளில் தோய்வதற்கும் இந்த அத்துவாக்களே வாயில்களாக அமைகின்றன. ஒலியும் ஒளியுமான இவை ஆறும் ஆன்மா படிமுறையில் வளர்ந்து ஈடேறுவதற்கான வாயில்கள். இவற்றைக் களமாகவும், மனம் வாக்கு காயம் என்னும் மூன்றையும் கருவியாகவும் கொண்டு, உயிர் நல்வினை, தீவினைகளைத் தன்முனைப்போடு செய்கிறது. இங்ஙனம் செய்யப்படும் வினைகளைத் தூல கன்மம் என்பர்.

(இவ் அத்துவாக்களைக் கொண்டுதான், சிவபெருமான் உயிர்களாகிய நம்மை வினைசெய்யத் தூண்டுவதோடு,

★ Every action has an equal and opposite reaction - Newton's Law of Motion

அவ்வினைகளின் விளைவுகளை உரியவாறு நமக்கு ஊட்டியும், இறுதியில் திருவருளமுதத்தை வாரி வழங்கியும் அருள் பாலிக்கிறான்.)

முயற்சி - ஒரு துணைக் காரணமே

சிவசாமி ஓர் ஐயத்தை எழுப்பினார் : ''சென்ற திங்கள், ஒரு பெரியவரின் சொற்பொழிவு கேட்டேன். வாழ்வில் வெற்றிபெற வேண்டுமானால் இடையறாது முயற்சி செய்தால் போதுமானது. கடவுள், வினை என்பவற்றை எல்லாம் அதிகம் மனத்தில் கொள்ள வேண்டியதில்லை எனக் கூறினார். அது எந்த அளவுக்குப் பொருந்தும்? கருணை கூர்ந்து விளக்க வேண்டும், ஐயா!''

'முயற்சி திருவினையாக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. அது உண்மையே, மரம் செடி கொடி போன்ற சிற்றுயிர்களும் தண்ணீரை இழுத்துக் கொள்ளுதல் போன்ற முயற்சியிலேயே உயிர் வாழக் காணுகிறோம். எனவே, இன்பம் நிறைந்த வளமைக்கு முயற்சியும், வறுமைத் துன்பத்துக்கு முயற்சி இன்மையுமே காரணம் என்பர் ஒரு சாரார். அவர்கள் உலகாயதர் எனப்படுவர். கடவுட் கொள்கையிலோ, வெளி (ஆகாயம்) மனம் போன்ற நுண்பொருள்களின் இருப்பிலோ அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அத்தகையோர் வினைக் கோட்பாட்டினை மறுப்பதில் எவ்வித வியப்பும் இல்லையன்றோ? இன்பதுன்பங் களுக்கு இருவினையே காரணமாயின், இப்பிறப்பிலே யாதொரு முயற்சி இன்றியும் இவ்விடத்தே பொருள் வந்து சேர வேண்டும் என்றும் அவர்கள் வாதிடுவர். மேலோட்டமாகப் பார்த்தால் அவர்கள் கூற்றில் நியாயம் இருப்பது போல் தோன்றும்.

ஆயினும் நடைமுறை உலகவாழ்வின் நிகழ்வுகள் வேறுவிதமாகவே காணப்படுகின்றன. பொருளும் இன்பமும் வேண்டி, எல்லோரும் ஒரோ ஒருவகையால் முயன்று கொண்டு தான் இருக்கின்றனர். ஆனால் அவர்களில் பலருக்கு, இடையறாது முயன்ற போதிலும், உரிய பயன் கைவராது போவதையும், அதனால் தளர்ச்சி ஏற்படுவதையும் காணுகிறோம்; தளர்வின்றி முயன்ற காலையும், அம்முயற்சிக்குத் துணையாய கைப்பொருள் முதலிய வசதிகள் கிடையாமல் போவதும், பிறபிற இடையூறுகள் நேர்தலும் பரவலாகவே காணப்படுகின்றன.

படித்த இளைஞர்கள் பலவாறு முயன்றும் வேலை கிடைக்க வில்லை; வேலையில் சேர்ந்து திறம்படப் பணியாற்றியும், ஆறலைக் கள்வர்களால் பலர் அவதியுறுவதையும் காண முடிகிறது. வேலையை ஒருவன் பார்க்க, இன்பத்தை வேறொருவன் அனுபவிக்கிறான். பெருமுயற்சி செய்தும் தொழிலில் தோல்வி கண்டோர் எத்துணையோ பேர் உள்ளனரே?

அதிக உழைப்பின்றியே செல்வச் செழிப்பால் வசதியோடு வாழ்பவர்கள் பலர். எனவே, ''முயற்சி ஒன்றே வளமைக்கு வழி என்றும் முயற்சி இன்மை வறுமைக்குக் காரணம் என்றும் கூறுவது பொருந்தாது'' என்று கூறினேன்.

முயற்சி : நுகர்ச்சிக்கு ஓர் துணைக்காரணம்

''அவ்வாறாயின், ஐயா, வினைகளுக்கும் முயற்சிக்கும் உள்ள தொடர்புதான் என்ன?'' சிவசாமி.

மின் விசிறியின் மூலம் காற்றைப் பெறுகிறோம். மின் விளக்கின் மூலம் ஒளியைப் பெறுகிறோம். அவற்றை நாம் பெறுவதற்கு முன்னர், அதற்கு மூலமாகிய மின் ஆற்றல் எங்கு இருந்தது? அஃது அதிநுண்ணிய ஒரு பொருளாக அந்த மின்சாதனங்களின் வாயிலில் மறைந்து கிடந்தது. நாம் மின்-இணைப்பானை (Switch) இயக்கியதும், அந்த நுண்ணிய மின் ஆற்றலே காற்றாகவும், ஒளியாகவும் காட்சிப் பொருளாக - வெளிப்படுகிறது அன்றோ? இப்போது நாம் காற்றையும் ஒளியையும் நுகர்கிறோம். அவ்வாறு நுகர்வதற்கு மூலகாரணமாக இருப்பது மின் ஆற்றலா? அல்லது மின் இணைப்பானா? அல்லது நம் முயற்சியா?

மின் ஆற்றலே மூலகாரணம்; மின்-இணைப்பானை (Switch-on) இயக்கினோம் என்பது மின்-ஆற்றல்களைக் கூட்டுவிப்ப தற்கான பலவகையான முயற்சிகளுள் ஒரு முயற்சியே. ஆகவே முயற்சி என்பது ஒரு துணைக் காரணமேயன்றி, அதுவே மூலமாகாது. இணைப்பகத்துள் (Switch-Board) இருக்கும் மின் ஓட்டத்தைப் போன்று, அவரவர் செய்த வினைகளும், கருவினுள் அவரவர் உருவாகும்போதே, அவரவர்க்கு உரிய தலைவிதியாக, நுட்பமாக அமைந்து கிடந்தன.

இதிலிருந்து நாம் ஓர் உண்மையை உணரலாம்: முற்பிறப்பு களில் ஒருவர் செய்த இருவினைகளே, இப்பிறப்பில் செல்வ

வறுமைகளும், பிணி மூப்புச் சாக்காடுகளும் அவரைச் சேர்வதற்கு முதல் காரணமாகின்றன; இப்பிறப்பில் அவர் செய்கிற முயற்சிகள் அனைத்தும், முந்தைய வினைகளையும், அவ் வினைகளுக்கு ஏற்றவாறு இப்பொழுது நுகரவேண்டிய விளைவுகளையும் கூட்டுவிக்கிற துணைக்காரணங்களே.

இங்ஙனம் முன்னர்ச் செய்த இருவினைகளே மூல முதற் காரணமாக இருக்க, இப் பிறப்பில் செய்யும் முயற்சிகள் யாவும் இன்பதுன்பங்களை நுகர்தற்கான துணைக் காரணங்களாகவே அமையும். மேலும், நுகர்தற்கான வினைகள் இருக்கும் வரை, முயற்சி என்ற துணைகாரணமும் இருந்து கொண்டே இருக்கும்.

முயற்சி : நுகர்ச்சிக்கு ஓர் ஊக்கியே!

''தாங்கள் முயற்சிபற்றி இதுவரை சொன்னவற்றைச் சிந்திக்கும்போது, நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் ஒரு புது வினையாகவோ அல்லது முன்னர் செய்த வினைகளின் இன்ப-துன்பப் பயன்களை நுகர்தற்கான வாயிலாகவோ அமைகிறது எனக் கூறலாமா? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

''ஆம். அப்படிக் கூறுவது முற்றிலும் சாலும். இலக்கியச் சான்றாக ஒன்று காண்போம். சிலப்பதிகாரத்தில் கோவலன் முடிவைப் பாருங்கள். முந்தைய ஒரு பிறப்பில் அவன் கொலைத் தண்டனைக்குத் தப்பியவன். பின்னர் மதுரையம்பதியில் கள்வனாகக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை பெறுகிறான். அன்று குற்றம் செய்யாத அவனைக் குற்றவாளியாக்கிக் கொலை செய்தமையால் பாண்டியன் நெடுஞ்செழியனும் உலகியல் வளங்களை இழக்கிறான் ஆயினும் தன் செங்கோலை உயர்த்துகிறான்.

கோவலன் தன் மனைவியின் காற் சிலம்பை விற்க முயற்சி செய்தான். அம் முயற்சியே அவ்வாறு கொலை செய்யப் படுவதற்கு முன்னோட்டமாக, அமைந்தது. அப்போதைக்கு அவன் நல்லவனாயினும் அவன் தன்னுடைய ஊழ்வினையை நுகர்தல் வேண்டுமே! அதற்காகவே தோன்றுகிறது, சிலம்பு விற்கும் அவனுடைய முயற்சி. அஃது ஊழ்வினை நுகர்ச்சிக்காக இறைவனால் அவனுக்கு ஊட்டப்பெற்ற புது முயற்சியே அன்றோ?

ஒரு தொழிலில் சிறந்த வெற்றி வாகை சூடுவதற்கான நல்வினையை ஒருவன் முன்னர்ச் செய்திருப்பின் அத்தொழில் செய்வதற்கான நன் முயற்சியில் அவன் ஈடுபடுவதும் வெற்றி பெறுவதும் உறுதி.

கோவலனைப் போன்று, முந்தைய தீவினைகளின் பயனை நுகர்தற்குக் காத்திருக்கும் ஒருவன் விபரீத ஆசைகளுக்கு அடிமை யாகிறான். அவ் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளப் புது முயற்சி களில் ஈடுபடுகிறான். சுய-அழிவுக்கு வித்திட்டு, குடி, சூது, பொய், வஞ்சனை என பல தீய செயல்களில் முயன்று, கைப் பொருள் அனைத்தையும் இழந்து அல்லலுறுகிற எத்தனையோ மக்களை நாம் இன்றும் நடைமுறையில் காணுகிறோமே?

திரைப்படம் பார்க்கும் விதி இருந்தால், திரை அரங்கிற்குச் செல்லுகிற முயற்சி தானாகவே அமையும். அவ்வாறு செல்லுகிற செயல் இல்லையாயின், படத்தைக் காண்பதாகிய நுகர்ச்சியும் இல்லை: ஆகவே, எந்த அளவு நுகரவேண்டியது எஞ்சி உள்ளதோ, அந்த அளவு முயற்சியும் நிகழும்.

சுருங்கக் கூறின், வினை இல்லாமல் விளைவு இல்லை; அந்த விளைவுகளை முழுவதுமாக நுகர்ந்து முடிக்கும்வரை, அங்ஙனம் நுகர்தற்கு ஏற்றவாறு, முயற்சியும் இருந்து கொண்டே இருக்கும் என்பதே உண்மை.

புது முயற்சிகள் செய்வதில் குற்றமில்லை, முயற்சிகள் ஈடேறவில்லையாயினும் கவலை கொள்ளுதல் கூடாது. இன்று நல்லவர்கள் செய்கிற புண்ணியச் செயல்களும் தீயோர் செய்கிற கொடுமைகளும் அவரவர்களுக்குப் புதிய வினைகளாகும். அவற்றிற்கும் பயன் உண்டு. அவை பின்னொருகால் தக்க சமயத்தில் தகுந்த முறையிலே இன்பதுன்பப் பயனுக்குக் காரணமாவது உறுதியே. இங்ஙனம் வினைகள் தத்தம் முயற்சிக்கு ஏற்ப உடனேயோ காலம் தாழ்த்தியோ பயன் தருவது இயல்பாகும்'' என்றேன்.

முயற்சி என்பது ஊழ்வினையின் தொடர்ச்சியே

'சிவபெருமானின் நெருங்கிய தோழர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவருக்கு எந்த வித மூலவினையும் இல்லை; பின்

ஏன் அவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்த அவர், நம்மைப் போன்று நிலவுலகத்தில், இன்பதுன்பச் சூழலில் பதினெட்டு ஆண்டுகள் வாழ நேர்ந்தது?' என வினவினார், சிவசாமி.

''அஃது சிவபெருமானின் ஓர் அற்புதத் திருவிளையாடல். தேவார திருவாசகங்களை இயற்றி அருளிய நால்வர் பெருமக்களுள் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் ஒருவர். அவர் திருக்கயிலாயத்தில் ஆலால சுந்தரராகச், சிவசாரூபியாகச், சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டு செய்து கொண்டிருந்தவர்.

மக்களைச் சைவநெறியில் ஆற்றுப்படுத்தி உய்வித்தற்கு விரும்பினான் சிவபெருமான். சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுகளைத் திருத்தொண்டத் தொகையாகப் பாடினால் மக்கள் அவற்றைக் கேட்டு அந்நெறியில் வாழ்ந்து முன்னேறத் தலைப்படுவர் என்று எண்ணினான். மேலான அப்பணியை நிறைவேற்றச் சுந்தரரைத் தெரிவுசெய்தான்; அதற்காக ஒரு திருவிளையாடல் புரிந்தான்.

சுந்தரர் ஒருநாள் திருக்கயிலை நந்தவனத்தில் மலர் ஆய்ந்து கொண்டிருந்தார். அப்போது, அங்கு மலர் கொய்ய வந்தனர் அம்மைக்குத் திருத்தொண்டு செய்யும் இரண்டு மகளிர். அவர்களைச் சுந்தரர் கண்ணுறுமாறு செய்தான் இறைவன். பாவையரை நோக்கிய பார்வையே சுந்தரர் செய்த வினை யாயிற்று. அன்புப் பார்வை எனும் வினைக்கு ஈடாக, ஆலால சுந்தரர் இம்மண்ணுலகில் சுந்தரமூர்த்தியாக அவதாரம் செய்தார். சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கயிலையில் கன்னியர் இருவரைக் கண்ணால் கண்டார்; காமம் சற்றே தலைதூக்கியது; பிழை என உணர்ந்தார். எனினும், கயிலையில் காமுற்றதற்காக இவ்வுலகில் பிறக்க நேர்ந்தது. கண்ணால் கண்டு காமுற்றதற்காகக் கண்ணொளி இழப்பு நிகழ்ந்தது. இவ்விரண்டும் நியதியாயின.

அ(வ்)ஊழினை அவர்க்கு ஊட்டவேண்டியது சிவபெருமானின் கடமை. ஆதலால், மகிழமரத்தின் அடியில் சுந்தரர் சூழுரைக்கும் புது முயற்சியும், அதுவே புது வினை யாகும் திறனும், அதற்கான விளைவாகக் கண் இழப்பும் என அழகியதோர் நாடகத்தைச் சிவபெருமான் நிகழ்த்துகிறான் அன்றோ?

வினையினது பயனை, யாவரேயாயினும் அனுபவித்தே தொலைக்க வேண்டும், அதுவும் அவரே நுகர வேண்டும் என்பதே சைவநீதி. அணுக்கம், சேய்மை என்ற பாகுபாடு வினைக்கு இல்லை. இதுவே பண்டு தொட்ட தமிழ்க் கொள்கை.

வினை எனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக், காலமொடு தோன்றும்

(சொல்.வினை. 198)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தை மீண்டும் இங்கு நினைவு கொள்ளலாம்.

வினையே வித்து

உயிர்களாகிய நாம் செய்த/செய்கிற வினைகளே நம்முடைய பிறப்புக்கும், வாழ்வுக்கும் மூலகாரணம் என்பதைக் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் மிக அழகான ஓர் விருத்தப் பாவினால் அறிவுறுத்துகிறார்.

எண்ணரிதாய், நித்தமாய், இருள் மலத்தில் அழுந்தி,
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை,
அண்ணல் அருளால் நண்ணி, அவை அவரால் அதனால்
அலகில் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றல்
புண்ணிய பாவம் புரிந்து போக்குவரவு உடைத்தாய்ப்
புணரும் இருள் மலபாகம் பொருந்தியக்கால், அருளால்,
உள்நிலவும் ஒளியதனால் இருள் அகற்றிப் பாதம்
உற்றிடும் நல் பசு வர்க்கம் என உரைப்பர் உணர்ந்தோர்.

சிவப்பிரகாசம்-19 - பசுவியல்

முதல் இயல் முற்றிற்று.

இயல் - 2

இரு வினைப் பயனை இறைவனே ஊட்டுதல்

(கடவுள் உண்மை)

'இன்ப வாழ்வுக்குத் தடையாக உள்ள வினை முதலிய வற்றைப் பற்றித் தாங்கள் கூறியவை மிகவும் பயனுடையனவாக இருந்தன. ஆயினும் எல்லா வினைகளுக்கும் பயன் உண்டு என்பது பொருந்துமா? ஐயா!' என வினவி அன்றைய சிந்தனைக்கு வித்திட்டார் குப்புசாமி.

''வினைகள் யாவற்றிற்கும் தக்கவாறு பயன்கள் உண்டு எனக் கொள்ளுவது பொருத்தமானதே. வினைக் கோட்பாட்டை உலகில் பெரும்பாலோர் ஏற்பர். இக்கால மேலைநாட்டு விஞ்ஞானிகளுங்கூட இக்கருத்தை உடன்படுகின்றனர். ஐஸக் நியூட்டன் என்னும் அறிஞன் 'ஒவ்வொரு வினைக்கும் எதிரானதும் சமமானதுமான பின் விளைவு உண்டு' என்னும் கொள்கையை வெளியிட்டுள்ளான். அஃது பருமையான பொருள்களுக்கு மட்டுமன்றி, நுண்மையானவற்றிற்கும் பொருந்துவதே''

''திருக்கோயில்களிலிருந்து சிலைகளையும் பொருள் களையும் திருடுகிறார்களே, அவர்களும் செல்வந்தர்களாகத் தானே வாழ்கிறார்கள்? வினைகளுக்கு உண்மையிலேயே பயன் உண்டு என்றால் அவர்களின் நிலை ஒரு புதிராக இருக்கிறதே!'' எனத் தம் ஐயத்தை வெளியிட்டார் குப்புசாமி.

''அரசன் அன்றே கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்' என்னும் பழமொழியை நீங்கள் அறிவீர்களே. எல்லா வினை களையும் முறையாகக் கணக்கிட்டு உரியவாறு நீதி வழங்குபவன் இறைவனே. நல்வினை, தீவினை என வினைகள் இருவகைப் பட்டமையின் அவற்றின் பயனும் இன்பம், துன்பம் என இரண்டு வகையில் ஊட்டப்பெறுகின்றன.''

வினைகளே பயன்தர வல்லனவா?

சிவசாமி உடனே ஓர் ஐயத்தை எழுப்பினார். ''ஐயா! வினைக்கு விளைவு உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளலாம்.

ஆயினும் அந்த வினைகள் தாமே வினையாளிக்கு உரிய இன்பத்தையோ அன்றித் துன்பத்தையோ கொண்டுவந்து சேர்க்கும், - எனக் கூறலாமா?''

''இக் கருத்து சமணர் போன்ற புறச்சமயிகளால் முன்னரே கூறப்பட்டதுதான். சமணத்துறவியாகிய இளங்கோ அடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரம் என்னும் காப்பிய நூலுக்கு 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பதையே கருப் பொருளாகக் கொண்டார்.

மேலும் சமணர்களின் இக்கருத்தை 'நாலடியார்' என்னும் அவர்களுடைய நீதிநூல் வாயிலாகவும் அறியலாம்.

பல் ஆவுள் உய்த்திடினும், குழக் கன்று
வல்லதுஆம், தாய் நாடிக் கோடலைத் - தொல்லைப்
பழவினையும் அன்னதகைத்தே, தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு (நாலடியார் - 101)

என்பது அப்பாடல். ஒரு பசுவின் குழந்தையாகிய இளங் கன்றினைப் பல பசுக்கள் நிறைந்த ஒரு கூட்டத்தினுள் கொண்டு விடினும், அது தன் தாய்ப் பசுவைச் சரியாக உணர்ந்து அதனைச் சென்று அடையும் வல்லமை உடையது. அதுபோலவே, ஒருவன் முன்னர்ச் செய்த வினைகளும் தன்னைச் செய்த கர்த்தாவை நாடித் தானே சென்று அடையும், என்பது இப்பாடலின் திரண்ட கருத்து.

இப்பாடலில் அவர்கள் ஓர் அரிய உண்மையை மறந்து விட்டனர் என்பது தெளிவு. கன்றுக்குட்டி அறிவுள்ள ஓர் உயிர்ப்பொருள். அத் தன் தாய்ப்பசுவை உணர்ந்து கொள்ளுவதில் வியப்பில்லை. ஆனால் ஒருவன் செய்த வினையும் சரி, அவ் வினைக்கு உரிய பயனும் சரி, ஆக இரண்டுமே அறிவற்ற சடப்பொருள்கள். அவை தம்மையும் அறியா, தம் தலைவனாகிய வினையாளியையும் அறியா.

அவற்றிற்குத் தாமாகவே இயங்கும் ஆற்றல் எதுவும் இல்லையே. அவை எவ்வாறு தம் தலைவனாகிய வினையாளியை அறியும்? என எண்ணிப்பார்த்தல் வேண்டும். எனவே குழக்கன்று போல், பழவினைகள் தாமாகவே வினையாளியைச் சென்று அடையா, அவை அங்ஙனம் தாமாகவே அடையவும் முடியாது. இவ் உண்மையை மற்றோர் எடுத்துக்காட்டு மூலமும் சிந்திக்கலாம்.

வள்ளல் ஒருவர் தம்மிடம் உதவிகேட்டு வந்தவருக்கு ஒரு பொருளைத் தானமாகக் கொடுக்கிறார். கொடுப்பது, பெறுவது இரண்டு வினைகளே. கொடுத்த சிறிது பொழுதிலேயே இருவரும் பிரிந்து விடுகின்றனர். தானம் என்ற செயலும் முற்றிலும் மறைந்ததாகவே காணப்படுகிறது.

ஆகவே அவ்வினைகள் நிலைத்து நின்று, நெடுங் காலத்துக்குப் பிறகு, வேறொர் இடத்தில் வேறோர் உடம்பினில் வாழுகிற வள்ளலையோ, மற்றவரையோ தாமே சென்று பற்றும் என்பதும், இன்பதுன்பப் பயன்களைத் தாமே அவர்கட்குக் கொண்டு வரும் என்பதும் இயலாது. எனவே வினைகள் தாமே தம்மைச் செய்தவர்க்குப் பயனைக் கொணரும் என்பது பிழையான கருத்து ஆகும்.

உயிர்கள், தாமே வினைகளை ஏற்குமா?

''வினைகளோ அறிவற்றன, ஆதலால் அவை, தாமாக வினையாளியைச் சென்று அடையா' என்ற கருத்தை வேண்டு மானால் ஏற்றுக்கொள்ளலாம்; ஆனால், உயிர்களோ அறிவுப் பொருள்கள் ஆயிற்றே! ஆகவே, அவை தத்தம் வினைகளைத் தாமே ஏற்றுக்கொள்ளும், எனக் கூறலாம் அன்றோ?'' இஃது குப்புசாமியின் மற்றொரு வினா.

உயிர்கள் - மறக்கும் இயல்புடைய சிற்றறிவு

ஒருவகையில் தங்களுடைய இக்கருத்து பொருத்தமாகவே தோன்றும்; ஆயினும் உயிர்கள் தாமே தத்தம் வினைகளைத் தேடிக் கொள்ளுவதிலும், அவற்றின் பயன்களை நுகர்வதிலும் சில தடைகள் உள்ளன.

உயிர்கள் அறிவுப் பொருள்களே; ஆயினும் அவற்றின் அறிவு சிற்றறிவே; காலப்போக்கில் அவை நிகழ்ச்சிகளை மறந்து விடுகின்ற இயல்புடையன; இறைவன் உணர்த்தியே அவை உணர்கின்றன. எனவே வினைகளை அறிந்து அவை ஏற்றுக்கொள்ள வாய்ப்பு இல்லை.

உயிர்கள் காந்தத்தை ஒத்தன. காந்தத்துக்கு இரும்பினை இழுத்துக்கொள்ளும் ஆற்றல் உண்டு என்பது உண்மையே. ஆயினும் அந்த ஈர்ப்பு ஆற்றல் ஓர் எல்லைக்கு உட்பட்ட தாகவே இருக்குமன்றோ? சிறு அளவு ஈர்ப்பு ஆற்றலுள்ள

தான ஒரு காந்தம் வெகு தொலைவிலுள்ள இரும்பினை இழுக்க மாட்டாது. ஆதலால், காந்தத்தின் ஈர்ப்பு-எல்லைக்குள் இரும்பினைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு, வேறு ஒருவன் வேண்டும். அதுபோலச் சிற்றறிவு உயிர்கள் தாமே நினைவு கூர்ந்து, தம் வினையின் பயன்களை அறிந்து எடுத்துக்கொள்ளும் ஆற்றல் இல்லாதவை. அவற்றிக்கு வினைப்பயன்களை ஊட்டு வதற்கு வேறு ஒருவர் வேண்டும். மேலும் ஒரு கருத்தையும் நாம் இங்குச் சிந்திக்க வேண்டும்.

உயிர்கள்-துன்பங்களை உகந்து ஏற்குமா?

நல்வினைக்குப் பயன் இன்பம் என்பதும், தீவினைக்குப் பயன் துன்பம் என்பதும் நியதி. உயிர் வினைகளை அறிந்து ஏற்பதேயாயினும், எந்த உயிராவது இன்பத்தை ஏற்றுக் கொள்ளும் அளவுக்குத் துன்பத்தை விரும்பி ஏற்றுக்கொள்ளத் தாமாகவே முன்வருமா? எனவே, விருப்பு வெறுப்பு இல்லாது, நடுவுநிலை நின்று, அதனை உரியவாறு ஊட்டுபவன் ஒருவன் வேண்டும்.

பரம்பொருள் தேவை

மேலும், உயிர் தான் செய்த வினைகளுக்கான பயன்களை நுகர வேண்டுமானால் அதற்குத் தக்கதொரு உடலும், உணர்-கருவிகளும், உலகச் சூழலும், நுகர்ச்சிப்பேறும் வேண்டும். அவை இல்லாமல், ஆன்மாக்களால் இன்பதுன்பப் பயன்களை நுகர முடியாது. எனவே அவற்றைக் காலமும், இடமும் அறிந்து, இயைபுபட அமைத்துத் தருவதற்கு, யாவற்றையும் உணர்ந்த ஒரு பரம்பொருள் வேண்டும்.

நுகர் கருவிகளின் தேவை

''வினைகள் ஆன்மாக்களைச் சென்று அடைவதில் வேறு துணைக் காரணங்களும் உள்ளனவா? ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

''வினைகள் பயன் தரத் துணைக் காரணங்களும் வேண்டும். நிலத்தில் விதைத்த விதைகள் தாமே முளைத்தலைப் போன்று, வினைகளும் தாமாகவே வினையாளியை அடைந்து உரிய பயனைத் தரும் என்பது சமணர் மற்றும் மீமாஞ்சகர் போன்றோரின் கருத்து. மேலோட்டமாகப் பார்த்தால், அவர்கள் கூற்றில் நியாயம் இருப்பதுபோல் தோன்றலாம். ஆழ்ந்து சிந்திப்பின் நுட்பமான அரிய பல உண்மைகள் புலனாகும்.

வீட்டில் வைத்திருக்கும் விதைகளோ, மருந்துகளோ அல்லது உரமோ தாமாகவே எவ்வித பயனையும் தருவதில்லை. விதையிலிருந்து பயிர் தோன்றுங்கால் விதையைத் தூவுதலாகிய தொழில் நிகழ்கிறது. அவ் விதையைத் தூவுவதற்கு உழவராகிய வினையாளி ஒருவர் வேண்டும் இஃது யாவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மை. அதேபோல் உயிர்கள் வினை செய் வதற்கும், அச் செய்வினைகளின் பயனை நுகர்ந்து கழிப்பதற்கும் சிவபெருமானின் திருவருட் சத்தியே 'வினைதீர்த்தாள்' எனும் பெயரோடு (புள்ளிருக்கு வேளூரில்) 'தலைமைத் துணை'யாக நின்று அருள் புரிகிறாள்.

அவ் விதையைத் தன்னுள் ஏற்றுத் தக்க வைத்திருந்து, அதற்கான பயனைத் தருவதற்கு நிலமும், நீரும், உரமும், பூச்சி-கொல்லிகளும் அனைய பிறவும் இன்றியமையாத் தேவையாகின்றன அன்றோ?

'காலத்தே பயிர் செய்', 'அளவு அறிந்து உண்' என்பன ஆன்றோரின் அனுபவக் கூற்றுகள். இவற்றையே 'காலம் நியதி' என்னும் தத்துவங்களாகச் சைவ ஞானநூல்கள் போதிக்கின்றன. உயிர்களின் வினைவழி வாழ்வில் இவற்றின் பங்கு மிக முக்கியமானதாகும்.

உழவன் நிமித்த காரணன். நிலம், நீர், உழவு என்பன துணைக் காரணங்கள். அதேபோல் உடம்பு, கருவி கரணங்கள், உலகம், நுகர்ச்சிப் பேறு ஆகியவை வினை நுகர்ச்சிக்கு உறுதுணையாகின்றன.

அம்மட்டோ! நிலத்தின்கண் ஈரமாகிய மண்ணும் அவ்விதை முளைத்து வளர்வதற்குத் தேவையாக இருக்கிறது அன்றோ?

உழவர்கள் பயிரிடுவதற்காக நிலத்தை உழுகின்றனர்; பின் விதை விதைக்கின்றனர். இங்ஙனம் உழுவதும் விதைப்பது மாகிய அவர்களுடைய செயல்களே அவர்களுக்கு அத் தொழிலின் பயனைத் தருவதில்லை; ஈரமான விளை நிலமே உழவினை ஏற்று, பயிராகிய பயனைத் தரும்.

அதே போன்று, வினைகள் தாமே பயன் தாரா; ஈரநிலத்தைப் போன்று சிவசக்தி துணை நிற்க, விளைநிலத்தைப் போன்று முதல்வனாகிய சிவபெருமானே இறைவனாய் ஆன்மாக்களைத் தாங்கிநின்று, அவற்றின் வினைகளை ஏற்றுப் பயனையும் தருவன்.

எனவே வினைகள் புத்தியிலே கிடந்து மறுமையில் தாமாகவே பயன்தரும், என்ற புறச் சமயிகளின் கூற்றும், சொல் அளவிலே யன்றி, உண்மைப் பொருள் ஆகாது.

இறைவனே வினைப்பயனை ஊட்டுவன்

நடுவுநிலைமை பிறழாமல், பொதுவான முறையில் நின்று, எல்லா ஆன்மாக்களுக்கும் இறைவன் ஊழ்வினைப் பயனை ஊட்டுகிறான். நம் வினைகளின் தன்மைகளை எடுத்துக்காட்டு வதற்கு, நாம் செய்யும் அனைத்துச் செயல்களுக்கும் அவனிடம் ஒரு பதிவேடு உள்ளது. அதன்கண் நம் ஒவ்வொருவரின் வரவு-பற்றுக் கணக்காக புண்ணிய-பாவங்கள் பதிவாகின்றன.

சிவசக்தியின் மேற்பார்வையில் நம் புத்தி தத்துவத்தில் உள்ளதோ, படிஏடு ஆகும். வினை முதிர்வுக் காலத்தில் சிவ ஆணைப்படி, சிவசக்தி என்ற அன்னையால் வினைப்பயன்கள் இன்பமாகவும் துன்பமாகவும் அவரவர்க்கே தக்கவாறு ஊட்டப் பெறுகின்றன.

இறைவன் மாதொரு பாகனாய் நின்று வினைகளை ஊட்டுதல்

''இறைவன் நடுவுநிலையானவன் என்பது எவ்வாறு?'' வினவினார் குப்புசாமி.

இறைவனுக்கு அவனுடைய இயல்பு நிலையில் குணம் - குறிகளோ, பெயர், இடங்களோ இல்லை என்பதும், நமக்காகத் தொழிற்பட வரும்போது அவன் எண்குணத்தானாக, ஆயிரமாயிரம் பெயர்களோடு எவ்விடத்திலும், எந்நேரத்திலும், எவ்வுருவத்திலும் மாதொருபாகனாய்த் தோன்றி அருளுகிறான் என்பதும் சைவ சித்தாந்தக் கொள்கை.

இறைவன் எங்கும் நிறைந்த பரம்பொருள். இவ்வுண்மையை எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளுகின்றன. சிவபரம் பொருளை 'மின் உரு' என்பார் அப்பரடிகள். ஒன்றேயாகிய மின் பொருள் இயங்கத் தலைப்படும்போது நேர் மின் ஆற்றல் என்றும் எதிர் மின் ஆற்றல் என்றும் இரண்டு கூறுகளாகி ஒன்றை ஒன்று மருவி, மின் கருவிகளின் மூலம் செயற்படுகின்றன அன்றோ?

அதேபோல், பரசிவம் என்ற ஒரே பரம்பொருளும், நமக்காகத் தொழிற்படத் தொடங்கும்போது, சிவன் என்றும் சத்தி என்றும் இரண்டு கூறுகளாகி, - மாதொருபாகனாகி

நின்றுதான் செயற்படுகிறது. சிவனும் சக்தியும் இங்ஙனம் எஞ்ஞான்றும் இணைபிரியாது, ஒருமையில் இருமையாய் இருப்பதைத் தாதான்மியம் என்று கூறுவர் வடநூலார்.

> யாதொரு தெய்வம் கொண்டீர், அத்தெய்வமாகி ஆங்கே
> மாதொரு பாகனார்தாம் வருவர்...

என விருத்தம் பாடுவார், அருள்நந்திசிவனார் (சிவஞான சித்தியார் - *115*).

மாதொரு பாகனும் பெருமூளையும்



அம்மை அப்பனின் திருவுருவம்

1. பெருமூளை - வலக்கூறு - சிவநாதம்
2. பெருமூளை - இடக்கூறு - விந்துசத்தி
3. சிறுமூளை - ஆதிசத்தி
4. முதுகுத்தண்டு - தண்டாயுதபாணி

அனைத்துச் சக்திகளையும் தம்முள் கொண்டவரையே பரம்பொருள் என அழைக்கிறோம். இக்கருத்து எல்லாச் சமயத்தவர்க்கும் ஏற்புடைய ஒன்றே. சக்தியை எப்போதும் இடப்பாகத்தில் கூடிநின்றே நமக்கு அருள்பாலிப்பதால், சிவ பரம்பொருளை நாம் மாதொருபாகன் எனப் போற்றுகிறோம்.

வினை-ஈட்டம், பயன் ஊட்டம் இரண்டையும் இறைவன் எவ்வாறு செய்கிறான்? எனச் சிவசாமி வினவினார்.

வினை நுகர்ச்சிக்கு ஆன்மாவைத் தயார் செய்தல்

நல்வினை-தீவினை, புண்ணிய-பாவம் இவற்றிற்கு உரிய இன்பதுன்பங்களை அனுபவித்தற்கு ஏதுவான ஓர் உடம்பை இறைவன் அருளுகிறான்.

அந்த உடம்பு உலவித் திரிவதற்கு ஏற்ற ஓர் உலகினைப் படைக்கிறான். அந்த உலகத்தில் ஏராளமான நுகர் பொருள் களையும் உருவாக்குகிறான். உலகு - உலகச் சூழல்.

அப்பொருள்களின்பால் ஆன்மா விருப்பு-வெறுப்புக் கொள்ளுவதற்கு ஏற்பக் கருவி கரணங்களையும் தந்தருளுகிறான்.

மேலும், அந்தந்த ஆன்மாக்கள், பொதுவான உலகச் சூழலில், தத்தமக்கு உரிய முன்வினைப் பயனை முறையாக நுகர்தற்பொருட்டு, அவற்றை எல்லாம் இயைபுபடுத்திச், சரியான நுகர்ச்சி-வாய்ப்புகளையும் நல்குகிறான். அக் கருவிகரணங் களையும், ஓர் கால எல்லைவரை தங்கி நிற்கச் செய்கிறான். இவற்றை எல்லாம் சிவபெருமான் தன் அருளாற்றலாகிய அன்னை உமையவளைக் கொண்டுதான் அருளுகிறான்.

இக்கருத்தினைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் மிக அழகாகப் பாடியுள்ளார்.

'செய்வினையும், செய்வானும், அதன் பயனும், சேர்ப்பானும்
மெய்வகையால் நான்குஆகும்; விதித்த பொருள்' எனக்
கொண்டே
'இவ்இயல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லை' - என
'உய்வகையால் பொருள் சிவன்' என்று, அருளாலே
உணர்ந்து அறிந்தார்.

(சாக்கிய நாயனார் - 5)

செய்வினை - கன்மம் : செய்வான்-ஆன்மா, அதன் பயன் - இன்பத்துன்பங்கள், சேர்ப்பான் - சிவபெருமான்.

எனவே நல்வினை, தீவினை என்ற இரண்டையும் நடுவு நிலைமை நின்று இயைபுபடக் கூட்டுவதற்குத் தக்கவர் ஒருவர் வேண்டும். அத்தகைய தக்கவர் முற்றும் உணர்ந்த இறைவனாகிய சிவபெருமான் ஒருவனே' வினைகளின்

இயல்பு பற்றி நம் பழம்பெருந் தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியரின் கருத்து எண்ணுதற்குரியது'' எனக் கூறினேன்.

''சிவபெருமான் ஆன்மாக்களோடு எவ்வாறு அத்துவிதமாகக் கூடி நின்று அருள்பாலிக்கிறான்'' என வினவினார் குப்புசாமி.

சிவபரம் ஆன்மாக்களோடு அத்துவிதமாக இருத்தல்

வினைகளின் இயல்புபற்றி வினைகள் வேற்றுமை கொள்ளாமல் காலத்தொடு பொருந்தி நிற்கும் என வினை யியலில், கூறிய தொல்காப்பியர், அவ்வினையால் கட்டுண்ட ஆன்மாக்களுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள அத்துவிதக் கூட்டத்தின் இயல்பை வேற்றுமையியலில் உரைக்கிறார்:

வேற்றுமை தானே ஏழுஎன மொழிப,

(சொல். வேற்றுமையியல் - 62)

விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே

(சொல். வேற்றுமையியல் - 63)

ஆன்மாவின் வினை-நுகர்ச்சிக் காலத்தில் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களிலும் நின்று அருள்புரிகிற இறைவன் வினை நீங்கியபோது, சஹஸ்ராரம் என்ற நிராதாரத்தில் நின்று அருள் பாலிப்பதோடு மும்மலங்களும் முற்றிலுமாகக் கழிந்தபோது, தலை உச்சிக்குமேலே 12-அங்குல உயரத்திலுள்ள மீதானப் பெரு வெளியிலும், [வினை நுகர்ச்சியின்போது ஏழு இடங்களிலும் ஞானக்கண் (விளி) பெற்றுத் திருவடி கூடும்போது உருபு ஏற்காமல், மீதானத்திலும்] ஆக எட்டு இடங்களிலும் பரசிவத்தோடு ஆன்மா அத்துவிதமாகக் கூடியுள்ள உண்மையைத் தொல்காப்பியர் இந்நூற்பா மூலம் குறிப்பால் உணர்த்துகிறார் எனலாம்.

சிவபெருமான் ஆன்மாக்களாகிய நம் உயிருக்குள் உயிராய்க் கலந்து நின்று நம்மை இயக்குகிறான் எனவும், நம்மோடு உடனாய்க் கூடி நின்று நம்மைச் செயல்படுத்துகிறான் எனவும், நம்மில் வேறாய், நமக்குப் புறத்தே நின்று, நம்மை மற்றவர் களோடு தொடர்புபடுத்துகிறான் எனவும் சிவனுக்கும் சீவனுக்கு முள்ள தொடர்பைச் சிறப்புரைக்கிறது சைவசித்தாந்தம். ஒன்றாய், வேறாய், உடனாய்ச் சிவனும் சீவனும் இங்ஙனம் இருமையில் ஒருமையாய் இருப்பதையே வேதங்கள் அத்துவிதம் என முழங்குகின்றன; இதுவே அத்துவிதம் என்பதன் உண்மைப் பொருள் எனவும் மெய்கண்டார் மொழிவர்.

வினை ஊட்டத்தில் நீதியும், நியதியும்

''வினைக்குரிய பயன்கள் எவ்வாறு நீதி பிறழாது ஊட்டப் படுகின்றன?'' என வினவினார் குப்புசாமி.

செய்யத் தக்கனவற்றைச் செய்ய வேண்டும்; தகாதனவற்றை ஒறுக்கவேண்டும்' என வரையறையிட்டுக் கூறுவது நெறி. இதனை உலக வழக்கிலே, 'சட்டம்' என்றும், 'நீதி' என்றும் நாம் அழைக்கிறோம்; சமய சாத்திரங்கள் இதனை 'விதி' என்று கூறும். மொழிநூல் வல்லுநர்களோ 'இலக்கணம்' என அழைப்பர். இவற்றையே இலக்கணங்களும், இலக்கியங்களும் 'ஊழ்' என்றும் 'பால்' என்றும் உணர்த்தி நிற்கின்றன; தத்துவ நூலார் 'நியதி' என்று குறிப்பிடுவர்.

நியதி தத்துவம்

உலகவாழ்வில் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்து, உரிய தண்டனை வழங்குவதற்குக் கருவிகளாக இருப்பன, சட்டமும் நீதியும். இவற்றைப் போலவே, வினைகளைச் செய்கிற உயிரினமாகிய நமக்குக் காலம் அறிந்து, அளவு அறிந்து, ஆள் மாறாட்டம் இல்லாமல், அந்தந்த வினைக்கு ஏற்றவாறு இன்பத் துன்பப் பயனைச் சிவசத்தி ஊட்டுவதற்குக் கருவியாக அமைவது நியதி என்ற தத்துவமாகும்.

மறைந்து நின்று ஊட்டுதல்

அவரவர் செய்த வினையின் பயனை அவரவரே நுகர்ந்து தொலைக்க வேண்டும் என்பது சைவநீதி, 'ஆன்மாக்கள் நிலையான அறிவானந்தத்தில் திளைத்திருக்க வேண்டும்' என்பதையே கருத்தாகக் கொண்ட கருணையாளன் சிவபெருமான். ஆன்மாக்களுக்கு நன்மை செய்வதில் மட்டும்தான் அவன் உடனாக இருக்கிறான் என்பதில்லை; ஒவ்வோர் ஆன்மாவும் ஊழ்வினைக்கு ஏற்ப நுகர்ந்து தொலைக்க வேண்டிய துன்பங்களையும், தானே உடனாய் நின்று, ஊட்டுகின்றான்.

எனவே, வினை-நீக்கத்தைத் துணைக் காரணமாகக் கொண்டு, அவன் நோய்க்கு ஏற்ற மருந்து போல, இப்பொழுதைய பிறப்பினைத் தந்து, இன்பதுன்பங்களை உரிய அளவு, உரிய போழ்தில் யாவர்க்கும் ஊட்டி அருளுகிறான். அப்போது அவன் தன்னைத் தானே மறைத்து கொண்டும் செயல்படுகிறான். இதனைத் 'திரோபவம்' என்பர் வடநூலார்.

சிவபெருமானே ஏன் வினைகளை ஊட்ட வேண்டும்?

ஆகமக் கருத்துக்களைத் துருவித் துருவி அறிந்து கொள்ளுவதில் அலாதியான இன்பம் குப்புசாமிக்கு. எனவே அவர் மேலும் ஒரு வினாவை எழுப்பினார்.

'வினைகளும், உயிர்களும், சிவபெருமானும் - ஆகிய மூவரும் வெவ்வேறு பொருள்கள். அவ்வாறிருக்கச் சிவபெருமான் சும்மா இருக்காமல், ஏன் ஆன்மாக்களுக்கு வினைகளை ஊட்டி, இன்பத் துன்பச் சுழற்சியில் சிக்க வைக்கிறான்?'' என்பது அவர் எழுப்பிய வினா.

''சிவபெருமான் கருணையே வடிவானவன்; எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதே அவனுடைய விருப்பம். ஆனால் உயிர்களோ ஆணவத்தால் வலிதே பிணிக்கப் பட்டு அல்லலுறுகின்றன. ஆயினும் அவற்றிற்குத் தம்முடைய உண்மையான நிலை தெரியவில்லை. ஆணவத்தின் தீதுறு தன்மைகள், தன்னுடைய அறியாமை, ஆணவமே முன்னேற்றத் திற்குத் தடை என்ற உண்மை ஆகியவற்றை ஆன்மா உணர வேண்டுமானால், உலக வாழ்வில் அனுபவமும், அதன்மூலம் மெய்ஞ்ஞானத் தெளிவும் தோன்றவேண்டும். அதற்காகவே சிவபெருமான் ஆன்மாக்களைப் புது-வினைகளைச் செய்யுமாறு தூண்டுகிறான்.

உயிர்களோ ஆணவத்தால் உந்தப்பட்ட நிலையில் அறிவு விளங்காமல் அவை தன்முனைப்போடு வினைகள் பல செய் கின்றன. அவ்வினைகள் துன்பத்துக்கே பெரிதும் வித்திடுகின்றன; தத்தம் முயற்சியால் ஆன்மாக்கள் பெறுகிற இன்பமும் சிற்றின்ப மாகவும், துன்பக் கலப்புடையனவாகவுமே இருக்கின்றன.

மேலும், வினைகள் நுகரப்பட்டு முற்றிலுமாகக் கழிந்தாலன்றி, ஆன்மாவுக்குப் பேரின்ப நுகர்ச்சி வாய்ப்பதில்லை. எனவே பேரின்பத்தில் ஆன்மாக்களை நிலைபெறச் செய்யும் பெருங்கருணை காரணமாகவே, சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அவரவர் வினைக்கு ஏற்றவாறு இன்ப துன்பப்பயன்களை ஊட்டி அருளுகிறான்.

ஆன்மாக்கள் தவநெறியில் தலைப்பட்டால்தான் சிவபரத்தின் மேன்மைகள் சிறிதுசிறிதாகப் புலனாகும். நால்வகைச் சைவ

நெறியால் சிவஞானம் சித்திக்கும். திருவடி இன்பமும் வாய்க்கும். இங்ஙனம் ஆன்மாக்களின் உய்தியில் நாட்டம் கொண்டமை யாலேயே சிவபெருமானின் அருளிப்பாட்டில், புது-வினை-ஊட்டம், ஊழ்-வினை நுகர்ச்சி, திருவடி சூட்டுதல் என்பன இன்றியமையாத செயல்களாகின்றன.

ஆணவத்தால் ஆன்மா தன் முனைப்போடு செய்யும் வினைகள் இருள் சேர் இரு வினையாகின்றன; உலகியலில் இன்ப துன்ப வாழ்வுக்கு அவையே வித்தும் ஆகின்றன. இறப்புக்கும் பிறப்புக்குமே அவை அடிகோலுகின்றன.

அதற்கு மாறாக, ஆண்டவனால் ஊக்குவிக்கப்பெறும் வினைகளோ அருள் வினைகளாகி ஆன்மாவைப் பேரின்பப் பெரு வாழ்வு நோக்கிச் செலுத்துகின்றன'' என்று கூறி விளக்கினேன்.

வினை நுகர்ச்சிக்கு ஏற்ற உடம்பு

வீட்டில் காய்கறிகள், பருப்பு, உப்பு, புளி, மிளகாய் போன்ற எல்லாப் பொருள்களும் இருக்கின்றன. அவற்றை எல்லாம் சரியான அளவில் சேர்த்துச் சமையல் செய்து சாம்பார் ஆக்கு வதற்கு ஓர் அன்னையார் வேண்டுமல்லவா? அதே போன்றுதான் நம் வாழ்வினை முறையாக இயக்குவதிலும் இறைவனின் கருணை அமைகிறது.

பலவகை உணவுப் பொருள்களையும் தெரிந்தெடுத்துச் சமையல் காரியங்களில் அன்னை உதவுவதைப் போலவே, சமய-நன்னெறியில் 'சமையல்-தலைவனாக'த் திகழ்கிறான் சிவபெருமான். அவனே நமக்கு எல்லாவகையாலும் துணையாக நின்று அருள் புரிகிறான். நாமெல்லாம் உயிர்கள். பலவகை நோய்கள் நம்மைப் பற்றியுள்ளன. அந்தந்த நோய்க்கு ஏற்ற வகையில் உயிர் உறைவதற்கு அமைந்திருக்கிறது ஒரு கூடு, இக்கூட்டுக்கு நாம் உடம்பு என்று பெயரிட்டிருக்கிறோம்.

இந்த உடம்பு ஓடி ஆடி விளையாட வேண்டும்; அதற்காக, ஒரு பெரிய நிலபரப்பு; அந்த நிலப்பரப்பை நாம் உலகம் என அழைக்கிறோம். உலகத்துப் பொருள்களில் நமக்கு ஏற்றவற்றை நாம் அடைந்து நுகர வேண்டும். அதற்காகவே கருவிகளும் கரணங்களும் உள்ளன. ஆயினும், அந்த நுகர் பொருள்களுக்கும் உயிர்களாகிய நமக்கும் ஓர் இயைபு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கை என்பது நிறைவு பெறும்.

இங்ஙனமாக நாம் ஊழ்வினையை நுகர்தற்கு ஏற்றவாறு, மாயையிலிருந்து நமக்கு உடம்பாகிய ஒரு கூட்டினையும், உலகமாகிய ஒரு விளையாட்டுப் பண்ணையையும், கருவி கரணங்களையும், நுகர்ச்சி வாய்ப்புகளையும் சிவபெருமான் அருளியுள்ளான்'' என்றேன்.

நடுவுநிலைமையாளன்

''அங்ஙனமாயின், பட்டம், பதவி, பணம் என்றவாறு உயர்ந்த நிலையிலுள்ள சிலர் தத்தம் வலிமையால் மற்றவர்களைத் துன்புறுத்தித் தம் வாழ்வினை வளப்படுத்திக் கொள்ளுகிறார்களே? அவர்களுடைய செயல்களும் இறைவனால்தான் நிகழ்த்தப்படுகின்றனவா?'' என வினவினார் குப்புசாமி.

''சிவபெருமான் நடுவுநிலைமையாளன்; உலகத்துக்கு ஒளி கொடுக்கிற சூரியன், எவ்விதப் பாகுபாடுமின்றி எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரியாகத் தன் ஒளிக்கற்றைகளை வீசுவதுபோல, சிவபெருமானும் எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரியாகவே அருள் பாலிக்க விரும்புகிறான்.

ஓர் உயிர் மற்றோர் உயிருக்குச் செய்த நலம்-தீங்குகளைத், தனக்குச் செய்ததாகவே அவன் ஏற்று, அவ்வவ் வினைக்கு உரிய பயன்களை, இருவகையான உயிர்களுக்குமே எவ்விதப் பிழையுமின்றி உரிய நேரத்தில் உரிய முறையில் நுகருமாறு கூட்டி அருளுகிறான்; இதில் அவன் எவ்வகையிலும் தவறுவதில்லை. மார்க்கண்டேயருக்கு அருள்பாலிப்பதற்காக அவன் இயமனை உதைத்துக் கொன்றதும், பின்னர் அவனையும் உயிர்ப்பித்து அருள்புரிந்ததும் யாவரும் அறிந்ததே'' எனக் கூறினேன்.

சிவபெருமானே வினைகளை ஊட்டுகிறான்

ஒரு கொடையாளி தன்னிடம் இரப்போனுக்குச் சிறிது பொருள் கொடுத்து உதவுகிறான். பொருளைக் கொடுத்தவன், அதைப் பெற்றுக் கொண்டவன், கொடுக்கப்பட்ட பொருள் இவை எல்லாம் பருமையாக அப்படியே இருக்கின்றன. ஆனால், 'ஈகை' என்னும் வினை (செயல்) மட்டும் புலப்படாது உடனேயே மறைந்து விடுகிறதன்றோ?

அதைக் கொடுத்தவனும், அப்பொருளை ஏற்றவனும்கூடக், கால அடைவில் அச்செயலையே மறந்து விடுகின்றனர். ஆயினும் ஈதலின் புண்ணியப் பயன் ஈந்தோனை அடைய

வேண்டும் என்பதே நியதி. அப்புண்ணியத்திற்கு ஈடான இன்பம் அவனுக்கு உடனேயோ, காலங்கடந்தோ ஊட்டப்பட வேண்டும். அங்ஙனம் ஊட்டுவதற்கு ஒரு தலைவன் வேண்டும். அத்தகைய தலைவன் யாவன்? எக்காலத்தும் நிலைத்து நிற்பவனாயும், முற்றுணர்வினனாயும், அனைத்துக் காரியங்களுக்கும் சர்வ சாட்சியாய் விளங்குபவனாயும், நடுவுநிலையாளனாயும் உள்ள முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே.

சோறும் கூறையும் தருபவன்

நம் போன்ற ஒவ்வோர் உயிருக்கும் பருமையானதும் நுண்மையானதுமான ஐவகைக் கவசச் சட்டைகளைத் தந்தருளியவன் சிவபெருமானே; அங்ஙனம் உடம்போடு கூடிய உயிர்கள், தத்தம் வினைகளுக்கு ஏற்றதோர் உலகத்தில் உலவுமாறு விட்டவனும் அவனே; முந்தைய வினைகளுக்குரிய இன்பதுன்பங்களை நுகர்வதற்கான கண், காது போன்ற அறிவுக் கருவிகளையும், கை, கால் போன்ற செயற்கருவிகளையும், மனம், புத்தி போன்ற உணர்-கருவிகளையும், அனைய பிறவற்றையும், அவரவர் ஊழ்வினைக்கு ஏற்றவாறு வடிவமைத்துத் தந்தவனும் அவனே. இவ் உண்மையை,

இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே!

(தேவாரம், திருப்புகலூர் - 340)

எனப் பண்ணிசைத்துப் பரவுகிறார் சுந்தரமூர்த்தி.

'கைக்கு எட்டிய உணவு வாய்க்கு எட்டவில்லை' என்பார்களே அதுபோல் இல்லாமல், அவரவர்க்கு உரிய ஊழின் இன்பத் துன்பமாகிய பயன்கள் அவரவரை உரிய காலத்தில் உரிய அளவு உரிய முறையில் சென்றடையுமாறு நுகர்ச்சி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருபவனும் சிவபெருமானே. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது சைவசித்தாந்தம்.

தான, தருமங்களுக்கான விதிமுறைகளும் அவற்றிற்கான பயன்களும் இறைவனாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. (சிவஞான சித்தியார் 103-110)

இருவினை இன்பத் துன்பத்து இவ்வுயிர் பிறந்து இறந்து
வருவது போவது ஆகும்; மன்னிய வினைப் பயன்கள்

தரும் அரன்; தரணியோடு தராபதிபோலத் தாமே
மருவிடா, வடிவும் கன்ம பயன்களும் மறுமைக்கண்ணே
(சிவஞான சித்தியார்-94)

கருத்து : தரணம் என்றால் கடத்துதல் என்பது பொருள். தரணி- மருத்துவன், நோயைக் கடத்துபவன் சிவபெருமான். வினைப் பயனை நுகர்தற்பொருட்டே, உயிர்கள் உடலைப் பொருந்தி இப்பூமியில் பிறக்கும். பிராரத்த வினை நுகர்ச்சிக்குப் பின் இறந்து, சஞ்சிதமாக எஞ்சிக்கிடக்கும் பிற வினைகளை நுகர்தற்காகச், சுவர்க்கம், நரகம் சென்று, மீண்டும் பூமியில் பிறக்கும்.

அரசனையும், மருத்துவனையும் போல அரனே உயிர்களுக்கு வினைப்பயனை ஊட்டி நுகர்விப்பான். இன்பதுன்பங்கள் இயல்புமன்று. ஆன்ம முயற்சியால் வருவனவுமன்று. இரு வினையே இன்பத் துன்பங்களுக்குக் காரணம்.

நெல்லைப் பயிரிட்டவனுக்கு நெல்லைப் பரிசளிக்கிறான். முள்ளை முளைக்க வைத்தவனை முட்புதரில் சிக்க வைக்கிறான். அவரவர் வினை அவரவர்க்கு அனுபவம் ஆகிறது. நெல்லும் முள்ளும் வினை ஊட்டத்துக்குத் துணையாக நிற்கிற இடை நிலைக் கருவிகளே.

உடம்பைப் பெற்றதன் குறிக்கோள்?

பிராரத்த வினைகளுக்கு உரிய பயன்களே இன்பமும் துன்பமும். அவற்றை அவரவரே நுகர்ந்து தொலைக்க வேண்டும் என்பதற்காகவும், அறியாமையாகிய இருளின் கேடுகளை, அவரவரே உணரவேண்டும் என்பதற்காகவும், அவற்றிலிருந்து விடுபடுவதற்கான அனுபவத்தைப் பெறுவதற்காகவும், மெய்ஞ்ஞானத் தெளிவு பெறுவதற்காகவுமே இறைவன் இந்த உடம்பு முதலியவற்றை நமக்கு வழங்கியுள்ளான். ஆகவே முன்னை வினையின் பயனை முழுமையாக நுகர்ந்து கழிப்பதற்கு அமைந்ததே இவ்வாழ்வு. இவ் உண்மையை நாம் சரியாக உணர்ந்து செயற்பட்டால் பல வகைத் துன்பங்களிலிருந்து விடுபடலாம்.

தொகுப்புரை

இது வரை கண்ட செய்திகளை எல்லாம் தொகுத்து நோக்கினால் சில உண்மைகள் தெளிவாகும்.

- வினை என்பது சடம். ஆகவே அஃது தன்னைச் செய்தவனைத் தானே அறிந்து கூட மாட்டாது.

- ஆன்ம அறிவோ சிற்றறிவு. இறைவன் அறிவித்தால் அன்றி, அறியமாட்டாத இயல்பினது. முன் எப்பொழுதோ செய்த வினையைப் பின்னொருகால் அறிந்து எடுத்துக்கொள்ளுகிற ஆற்றல் ஆன்மாவுக்கு இல்லை.
- ஆன்மாவுக்கு அத்தகு ஆற்றல் இருப்பதாகக் கொண்டாலும் நல்வினைக்குரிய இன்பங்களை மட்டும் எடுத்துக் கொண்டு தீவினைக்குரிய துன்பங்களை ஏற்காமலே ஒதுக்கிவிட வாய்ப்பு உள்ளது. அத்தகு நிலை நடைமுறையில் காணப் படவில்லை.
- பதி, பசு, பாசம் என்னும் மூன்று நிலையான உள்-பொருள் களில் பசுவாகிய ஆன்மாவோ, பாசமாகிய வினைகளோ ஒன்றை ஒன்று அறிந்து கூடமாட்டாது. இவ் உண்மை முற்கூறிய காரணங்களால் உறுதிப்படுகிறது.
- ஆகவே அவ் இரண்டும் நீங்கலாக, மூன்றாவது உள்-பொருளான பதியாகிய இறைவனே அவைகளைக் கூடுமாறு செய்கிறான் என்பது ஒழிபு அளவையால் உணரப்படுவதாகும்.
- ஆணவத்தைச் சார்ந்து ஆன்மா செய்கிற வினைகள் அனைத்தும் இருள்சேர் இருவினைகள். அவை மறுமறு பிறப்புகளுக்கும் இன்ப துன்பங்களுக்கும் அடிகோலும்.
- ஆண்டவனைச் சார்ந்து நின்று, ஆன்மாக்கள் செய்கிற வினைகள் யாவும் 'அருள் வினைகள்' அவை ஆன்மாக்களுக்கு மெய்ஞ்ஞானத் தெளிவூட்டிக் கால அடைவில் கண்ணுதலோன் கழல்-அடியில் சேர்ப்பிப்பன.

இரண்டாவது இயல் முற்றிற்று.

இயல் - 3

உயிர் ஒரு சிற்றறிவுப் பொருள்

(உயிர்களின் உண்மை)

விதியின் விளையாட்டு

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறைநாள். ஆதலால் நல்லாசிரியர்கள் சிவசாமியும் குப்புசாமியும் காலை நேரத்திலேயே என் இல்லத்துக்கு வந்துவிட்டனர். முறைப்படி வணக்கம் தெரிவித்து இருக்கைகளில் அமர்ந்தனர். அன்றைய எங்கள் சிந்தனை உயிரினத்தின் இயக்கம் பற்றி அமைந்தது.

'உலகில் உயிர்களின் இயக்கம் ஒரு நியதிப்படி நிகழ்கிறது எனக் கூறலாமா? ஐயா!' என வினவி, அன்றைய சிந்தனைக்கு வித்திட்டார் சிவசாமி.

'ஆம் கூறலாம். சமையலில் தொடங்கி, அறிவியலில் வளர்ந்து, சமூக, பொருளாதார அரசியல்களில் ஊடுருவித் திகழும் நம் வாழ்வியல் துறைகள் அனைத்தும் ஒரோ ஒரு விதிமுறைப்படியே இயங்குகின்றன.

ஆதியும் அந்தமும் இல்லாதவன் ஆண்டவன். அவனைப் போலவே உயிரினமும் எக்காலத்தும் அழியாத நிலையான பொருள். இவை இரண்டு மட்டுமே இருந்தால் வாழ்வில் எவ்வித சிக்கலும் இல்லை. ஆனால் ஆண்டவனும், உயிர்களும் மட்டுமன்றி இவ்விரண்டையும் சேரவொட்டாமல் தடுத்து நிற்கும் வேறு சில பொருள்களும் உள்ளன எனவும் அவற்றுள் மாயையும் ஒன்று எனவும் முன்னரே சிந்தித்துள்ளோம்.

உயிர்கள் மற்றும் மாயை என்பன இரண்டும் வெவ்வேறான நிலையான பொருள்கள். இவற்றின் இடைக்காலச் சேர்க்கையே நாம் காணுகிற மனிதன், மரம், செடி, கொடி எல்லாம். இவ் உண்மையை நமக்குத் தெளிவாக உணர்த்த விரும்பிய நம் செந்தமிழ்ச் சான்றோர்கள் மிக எளிதான முறைகளைக் கையாண்டுள்ளனர்.

ஒலி அமைப்பைக் கொண்டு வாழ்வின் தோற்ற ஒடுக்கங் களை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளுமாறு செய்துள்ளனர்.

ஒலிக் கூறுகளில் சிலவற்றை உயிர் என்றும் வேறு சிலவற்றை மெய் (உடம்பு) என்றும் வகைப்படுத்தினர். அவற்றின் புணர்ச்சியை உயிர்மெய் என்றும் அறிமுகம் செய்து புணர்ச்சி விதிகளையும் கூறிப்போந்தனர்.

உயிர்+மெய், உயிர்+உயிர், மெய்+மெய் எனும் புணர்ச்சிகள் பற்றி அவர்கள் கூறிய அனைத்தும் மொழி இலக்கண விதிகள். ஆனால் உலக வாழ்வில் உயிரும், மெய்யாகிய உடம்பும் இணைவது என்பதோ தலைவிதிப்படியான புணர்ச்சி. உயிர்களுக்கு இடையே உறவு என்பதும், பொருள்களுக்கு இடையே தொடர்பு என்பதும் விதி வழி நடப்பதை நாம் அறிகிறோம்.

எவை எவை, எங்கெங்கு எந்த விதிமுறைப்படி அமைய வேண்டும் என மரபுகளை வகுத்துக் கூறுவது இலக்கணம். எந்த எந்தப் புணர்ச்சிகள், தொடர்புகள், உறவுகள் எந்த எந்த விதிமுறைப்படி தொகுக்கப்பட்டுத் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றன என அறிவுறுத்துவது தத்துவம்.

வினைச் சொல் இல்லாமல் ஒரு மொழிக்கு தொடர்கள் அமைவதில்லை. அதேபோல் வினைத்தொடர்கள் இல்லாமல் உலக வாழ்வில் இன்பதுன்ப நிகழ்வுகள் இல்லை.

ஆணவமும் கூடா நட்பும்

''வினையே பிறப்புக்கு வித்து என்று கூறுகிறீர்கள். அவ்வாறாயின் நாம் அத்தகைய வினைகளைச் செய்யக் காரணம் என்ன?'' என்று வினாவை எழுப்பினார் குப்புசாமி.

ஆன்மாக்கள் வினை வட்டம் என்னும் இழிந்த வாழ்வில் அழுந்துவதற்கு ஆணவம் என்ற ஒரு தீய பொருளே காரணமாக உள்ளது. ஆண்டவனோடு, உயிர்களை சேரவொட்டாமல் தடுத்துநிற்கும் மலங்களுள் ஆணவம் முதன்மையானது.

''இந்த ஆணவம் எவ்வாறு ஆன்மாவைத் தன் வயப்படுத்து கிறது ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

அஃது ஒரு விந்தையாகும்.

குழந்தைகளின் வளர்ச்சியில் உண்மையான நாட்ட முடையவர்கள் அவற்றின் பெற்றோர்களே; அவர்களுடைய அன்பு அளவிட முடியாதது; அவர்கள் தம் குழந்தைகளைக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குமாறு பயிற்றுவிப்பர்;

அவர்களுடைய கண்டிப்பும் கட்டுப்பாடும் சில சமயங்களில் குழந்தைகளுக்குக் கசப்பாகக்கூட இருக்கலாம்.

ஆனால் வேறு சில அந்நியர்கள் உளர். அவர்கள் இனிக்க இனிக்கப் பேசி, இனிப்பும் கொடுத்துப் பிறருடைய குழந்தைகளைக் கடத்திச் சென்று, அவர்களைக் கொண்டு தம் வயிறு வளர்க்கும் தீய நோக்கம் கொண்டவர்கள். திட்டமிட்டுக் குழந்தைகளைக் கவர்ந்து சென்று, திருட்டு, சூது, வஞ்சனை, பிச்சை எடுத்தல் போன்ற தீதுறு வழிகளிலேயே பழக்க முற்படுவர். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் நெறிமுறைகளை வெறுத்து அவர்களைப் பிரிந்து செல்லுகிற குழந்தைகள் மிக எளிதாகத் தீயோரின் வஞ்சக வலையில் சிக்கி வாழ்வில் அல்லலுறுவதைப் பரவலாகக் காணுகிறோம்.

நாமெல்லாம் சிவம் என்ற அம்மையப்பரின் அன்புக் குழந்தைகள். நமக்குச் சில இயல்பான ஆற்றல்கள் உண்டு. அவை விருப்பம், அறிவு, செயல் (இச்சை, ஞானம், கிரியை) என்பன. அவற்றைத் தன் வயப்படுத்திக் கொள்ளுகிறது ஆணவம். அதற்காக, அது நம்முடைய இயல்பான விருப்பங்களில் நஞ்சினைப் பாய்ச்சுகிறது; இயல்பான அறிவினை மழுங்கச் செய்கிறது; இயல்பான செயல்திறனை தீய வழிகளில் ஊக்கு விக்கிறது. நம்மை அம்மையப்பரிடமிருந்து பிரித்து, தற்போதத்தை யும் தன்முனைப்பையும் ஊட்டுகிறது; தீ நெறியில் செலுத்தி நம்மை அது ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறது.

ஆணவம் என்பது அகந்தையின் தந்தை. அஃது இருளின் மாற்று உருவம். தன்னைச் சார்ந்த உயிர்களை முழுவதுமாகப் பிணித்து, தீ நெறியில் செலுத்துவதே அதன் தொழில். செம்பினில் களிம்பு ஊறுவதைப் போன்றும் இரும்பினில் துருப்பிடிப்பதைப் போன்றும், இந்த ஆணவம் ஆன்மாக்களின் ஆற்றல்களை மாசுபடுத்திவிடுகிறது. துருப் பிடித்த இரும்புக்கு, காந்தத்தின் ஈர்ப்பு ஆற்றலுக்குள் செல்லும் அருகதை இல்லையன்றோ?

அதேபோல், நான் என்ற அகந்தைக் களிம்பு மேலோங்கி இருக்கும் வரை, உயிர்களாகிய நமக்கு, மெய்ப்பொருள் பற்றிய அறிவு விளங்குவதில்லை. கருணையே வடிவான கடவுளின் ஈர்ப்பு ஆற்றலை உணர முடிவதில்லை; அதனால், உயிர்கள் பேரின்பத்தை அடைமுடியாமல் தவிக்கின்றன.

ஆணவப்பிடியின் இறுக்கத்தால் உயிர்கள் முனகுகின்றன. ஒளியைக் காணத் துடிக்கின்றன. அதன் வலிய பிடியிலிருந்து விடுவித்து உயிர்களாகிய நம்மை உய்விக்க விரும்புகிறான் இறைவன். இது தொன்றுதொட்டு நிகழ்ந்து வரும் நிகழ்ச்சி.

இலக்கியங்களில் ஆணவம் பற்றிய குறிப்பு

இதனை ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் என்ற தொடர்களால் குறிப்புரைத்தனர் சங்ககாலத்து நம் தமிழ்ச் சான்றோர்கள்,'' (ஆ=பசு. நிரைக்கூட்டம். நாமெல்லாம் பசுக்கள், பாசத்தால் கட்டுண்டவர்கள் என்பது பொருள். உயிரினத்தை ஆணவம் கவர்தலை ஆநிரை கவர்தல் என்றும், ஆணவத்தின் பிடியிலிருந்து உயிரினத்தைச் சிவபெருமான் விடுவித்தலை ஆநிரை மீட்டல் என்றும் அவர்கள் குறித்தனர்)

ஆகூழ்ப் பயன்

அடுத்து, எங்கள் பேச்சு உள்ளூர் நடப்புப் பற்றித் திரும்பியது : ''மோகனும், மனோகரனும் அண்ணன் தம்பியார். மோகன் இன்று ஒரு செல்வச்சீமான்; அவருடைய வாழ்க்கை மிகவும் இன்பமாக அமைந்திருக்கிறது. பிறருக்கு வழிகாட்டியாய் அமைந்துள்ள, உயரிய வாழ்வு அவருடையது. ஆனால் அவருடைய தம்பியாகிய மனோகரனின் வாழ்வோ அவலத்தில் அழுந்திக் கிடக்கிறது. இருவருமே ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்; தந்தையார் அவர்கள் இருவருக்கும் சம அளவில்தான் சொத்துக் களைப் பிரித்துக் கொடுத்தார். ஆயினும் இருவர் வாழ்விலும் காணப்படுகிற ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணம் என்ன''? எனக் கேட்டுப் பேச்சைத் தொடங்கினார் சிவசாமி.

''மோகனின் இன்பச் சூழலுக்குக் காரணம் அவருடைய செல்வச் செழிப்பே'' எனக் கூறினார், குப்புசாமி.

''செல்வம் தானாகவே வந்து சேருமா?அது மோகனிடம் எவ்வாறு பெருகியது?''-என்பது, சிந்தனையைத் தூண்டும் சிவசாமியின் வினா.''தந்தை கொடுத்த சிறு முதலீட்டையே, தம் சுய முயற்சியால் பெருக்கிச் செல்வந்தன் ஆனார், மோகன்; மேலும், அவர் கடுமையாக உழைப்பதற்கும் பலவகையான முயற்சிகளைச் செய்வதற்கும் அவருடைய உடல் நலமும் மன உறுதியும் பெரிதும் துணை நின்றன''-என்றார், குப்புசாமி.

''அவ்வாறாயின், உடலும் மனமும் நல்ல ஆரோக்கியமாக இருப்பதற்கும் ஏதேனும் காரணம் இருக்க வேண்டுமல்லவா, அது என்ன?''-இது சிவசாமியின் வினா. ''நல்ல உள்ளம், அமைதியான சிந்தனை, நிதானமான செயற்பாடு-இவையே அவருடைய இவ்வெற்றிக்குக் காரணம்; மனத்தாலும் அறிவாலும், செயலாலும் அவர் செய்த/செய்கிற அனைத்துமே சால்புடையன. அவை யாவும் உயர்ந்த நல்வினைகள்; அவருடைய செல்வப் பெருக்கத்துக்கும், உடல் நல, மன நலங்களுக்கும், இன்ப வாழ்வுக்கும் அவ்வுயரிய வினைகளே காரணம்.

ஆனால் மனோகரனின் நடைமுறை வாழ்வு சால்புடைத்தாக இல்லை; தீய நட்பு, கெட்ட செயல்கள், ஒழுக்கமில்லா வாழ்வு, வறுமையிலும் துன்பத்திலும் வாடுகிற குடும்பச் சூழல் என அமைந்தது மனோகரனின் வாழ்க்கை. ஆகவே, தீய பழக்க வழக்கங்களாகிய தீவினையே அவனுடைய இன்றைய வாழ்வின் மொத்த துன்பத்துக்கும் காரணம் என்பது தெளிவு. முந்தைய நல்வினை தீவினைகளோடு, இப் பிறப்பில் ஒருவன் செய்கிற நல்வினை, தீவினைகளும் முதிர்ச்சிக்கு ஏற்ப, அவ்வப் போது உரிய பயனைத் தருகின்றன''-எனச் சிவசாமி கூற, அவ் உண்மையைக் குப்புசாமியும் ஒப்புக்கொண்டார்.

''ஒழுக்கங்களுள் கடவுட் பற்று என்பதே தலையாயது என்று கூறுகிறார்களே, அஃது சரியா? ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

கடவுட் கொள்கையில் எவ்விதப் பற்றும் இல்லாதவன், சிற்றின்பத்தையே பேரின்பமாகப் பிழைபடக் கருதுகிறான். அந்த வாழ்வின் அற்ப சுகத்திலேயே இறுமாப்போடு வாழ்கிறான். இறுதிவரை நிறைவான ஆன்ம இன்பத்தைப் பெறாமலேயே இறக்கிறான், மறுமறு பிறப்பு-இறப்பாகிய இன்பத் துன்பச் சூழலுக்கும் வழிவகுத்துக் கொள்ளுகிறான்.

இறைவனின் செந்நெறி ஒழுகிச் சோதனைக்கு ஆட்பட்டவனோ, ஆன்ம முன்னேற்றத்தால் எழுமையும் ஏமாப்பு உடையவனாகத் திகழ்கிறான்; ஆண்டவனின் திருவடி அடைகிற பக்குவத்தால் உய்தி அடைகிறான்; மானுடத்திலும் அமைதி காண்கிறான்.''

சிற்றின்பம்

'ஐயா! சிற்றின்பம் எனக் குறிப்பிட்டீர்களே. அவை எதைக் குறிக்கின்றன?' என வினவினார் சிவசாமி.

சிற்றின்பம் என்பது அளவால் சிறியது; மிகக் குறுகிய காலத்திற்கே இன்பம் பயப்பது; நிறைவான இன்பமாக இல்லாமல் துன்பமும் கலந்திருப்பது. நாம் உண்ணும் உணவு, குடிக்கும் சுவைநீர்கள், காணும் காட்சிகள், கேட்கும் செய்திகள், பேசும் பேச்சுக்கள் போன்றயாவும் சிறிது போழ்தே இன்ப சுகத்தைத் தருகின்றன அன்றோ? இங்ஙனம், காலத்தாலும், அளவாலும், நிறைவாலும் சிறுமையுற்று இருப்பதாலேயே இதனைச் சிற்றின்பம் என்றனர்' என விளக்கினேன்.

'உலக வாழ்வினை நோக்கிய வினைகளை நல்வினை என்றும், தீவினை என்றும் இரண்டாகப் பகுத்துக் காண்பது பொது வழக்கு. அவற்றை 'இருள்சேர் இரு வினை' என்பார், திருவள்ளுவரும். அவற்றுள் நல்வினைக்கு உரிய விளைவுகள் யாவும் சிற்றின்பம்.

வினைக்கும் உயிர்களுக்கும் எப்பொழுது தொடர்பு ஏற்பட்டது?

''வினை செய்ததன் காரணமாகவே உயிருக்கு உடம்பு தோன்றியது எனக்கூறப்படுகிறது; அவ்வாறாயின், உடம்பும் கருவிகரணங்களும் இல்லாமல் உயிர் எவ்வாறு வினை செய்திருக்க முடியும்? என்ற ஒரு வினா எழுகிறதே! அதைப் பற்றிக் கூறுங்கள் ஐயா'' என்றார் குப்புசாமி.

''இதுபற்றி இருவித கருத்துக்கள் உண்டு. வினை செய்த பிறகு, அவ்வினையின் பயனை நுகர்தற்காகவே உடம்பு முதலியன அருளப் பெற்றன என்பது ஒரு கருத்து. உடம்பும் கருவி கரணங்களும் இன்றி உயிர் ஒரு காரியமும் செய்ய இயலாதே. ஆகையால் முன்னர் கருவிகரணங்களோடு கூடிய சூக்குமமாகிய ஓர் உடம்பினைப் பெற்று, அதன் மூலமே உயிர் வினைகளை மேன்மேலும் ஈட்டிக்கொண்டது என்பது இன்னொரு கருத்து''.

ஆன்ம வளர்ச்சியின் மூன்று நிலைகள்

''ஆன்மாக்களுக்கு உயிர் என்ற சொல் எவ்வாறு பொருந்துகிறது ஐயா?'' வினவினார் குப்புசாமி.

''உய் என்ற சொல்லுக்கு மேல் நோக்கி முன்னேறுதல் என்பது பொருள். அதை வேர்ச் சொல்லாகக் கொண்டதுதான் உயிர் என்ற சொல்.

''உய்தல் என்னும் குணம் உடைமையால்தான் நம் போன்ற அறிவுப் பொருள்களுக்கு உயிர்கள் என்பது காரணப்பெயராயிற்று. உயிர்கள் படிமுறையில் சிறிதுசிறிதாக உய்தி அடைகிற பரிணாம வளர்ச்சியை மூன்று நிலைகளில் சிந்திப்பது சைவசித்தாந்தம். அவை, கேவலநிலை, சகலநிலை, சுத்தநிலை என்பன. அவற்றுள்.

கேவலம் என்பது தனிநிலை. அநாதி காலந்தொட்டே ஆன்மாக்களை ஆணவம் வஞ்சனையால் கவர்ந்து தன்வயப் படுத்தி வைத்துள்ளது, அந்த நிலையில் ஆன்மாவுக்கு ஆணவமே உடம்பாக உள்ளது. ஆன்மாவின் விருப்பு, அறிவு, செயல்திறன் ஆகிய மூன்று ஆற்றல்களும் ஆணவத்துள் முடக்குண்டு கிடக்கும் அஃது ஓர் அவல நிலை; அதையே கேவல நிலை என்றனர்.

மூலகன்மம்

அதுகாறும் தன்னளவில் சூக்குமமாய்ச் சும்மா இருந்த மூலகன்மம் (என்னும் மலம்) ஆணவத்தின் சேர்க்கையால் உயிரைப் பந்திக்கத் தொடங்கியது; உயிர்களுக்கு விருப்பு, வெறுப்புகள் தோன்றத் தலைப்பட்டன.

ஒரு மனிதன் பெரியதொரு சுமையைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஒரே இடத்தில் எத்துணை நேரம் நின்றாலும். அவன் வேலை செய்ததாகக் கருதப்பட மாட்டான். ஒரு குறிப்பிட்ட காலத்தில் அச்சுமையோடு அவன் எத்தணை தூரம் நடந்திருக் கிறான் என்பதைப் பொருத்தே அவன் செய்த வேலை கணக்கிடப் பெறும். அதுபோல, ஆன்ம ஆற்றல்களும் மூலகன்மமும் முன்னர்ச் சும்மா இருந்தமையால், கன்மம் அநாதி தொட்டே இருந்தபோதிலும், ஆன்மாவைப் பற்றவில்லை; ஆணவமே ஆன்ம-ஆற்றல்களை இருளில் செலுத்தத் தலைப்பட்டது.

மூலகன்மத்தின் காரியப்பாடு

ஆணவத்தின் பிடியிலிருந்து விடுபடுவதற்காக, ஆன்மா முயற்சிகளைச் செய்யத் தலைப்பட்டது ஆணவ உடம்பினைக் கருவியாகக் கொண்டுதான் உயிர் முதன்முதலாக வினை செய்தது; அப்போதுதான் உயிரை மூலகன்மம் பற்றியது என்று கொள்வது பொருத்தமாகும்.

கேவலத்தில் ஆன்மா ஆணவத்தைச் சார்ந்திருந்தது.- என்று கூறினாலே, சார்தல் என்ற தொழிலை - ஒரு வினையை, ஆன்மா செய்தது என்பதாகி, அதனால் அநாதியான மூல கன்மம் ஆன்மாவைப் பந்தித்தது-என்பதும் உறுதியாகிறது.

மூலகன்மம் இவ்வாறு காரியப்படத் தொடங்கியதால் அதற்குக் காரிய-கன்மம் என்பது பெயராயிற்று. எனவே, மூலகன்மம் என்பது முன்பு இல்லாத ஒன்றாகவும், இப்போது நடுவில் வந்ததாகவும் கூறுவது பொருந்தாது.

சகலநிலை

கன்மத்திற்கு ஏற்ப, உயிர்களுக்கு மாயா-காரியமாகிய உடம்பினைச் சிவபெருமான் அருளுகிறான். அதுவே இப்பொழுது நாம் வாழுகிற நிலை; இதற்கு சகலநிலை என்பது பெயர். சூக்குமமாய் இருந்த கன்மமும் (ஒலி-வாயில்கள் மூன்று, ஒளி - வாயில்கள் மூன்று[1] ஆக) ஆறு அத்துவாக்களின் வழியாக உயிரைப்பற்றி நின்று, தூலகன்மமாகி, மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் நல்வினை, தீவினை என்ற இருவினை களைச் செய்கிறது.

இவற்றுள் மனம் என்ற சூக்கும உடம்பின் பங்கு மிகுந்து காணப்படுகிறது. மனத்தில் எழுகின்ற விருப்பு-வெறுப்புக்களுக்கு ஏற்ப ஆன்மா, கண், காது, நா போன்ற அறிவுக் கருவி களையும், கைகால் போன்ற செயற்கருவிகளையும் பயன்படுத்திக் காரியங்களைச் செய்கிறது. இங்ஙனம் வினை புதிதாக உயிரைப் பற்றிய நிலையில் இதற்கு ஆகாமிய கன்மம் என்பது பெயர்.

சுத்த நிலை

மும்மலங்களும் ஆற்றல் ஒடுங்கி ஆன்மாவை விட்டு நீங்குகிற போது, சிவசக்தியே அத்தூய ஆன்மாவுக்குத் தன் அருளுடம்பை நல்குகிறாள். அம்மையின் அருளுடம்போடு ஆன்மா சிவத்தின் திருவடிகளில் பேரின்பம் துய்க்கிற நிலை, ஆன்மாவுக்குச் சுத்தநிலை எனப்படும். அதை அம்மைப் பேறு என்பர்.

மறுமைக்குக் காரணம் யாது?

வினைகளே பிறப்புக்கு வித்து என்று கூறுகிறீர்கள். முற்பிறப்பின் வினைகள் யாவும் இப்போது நுகரப்பட்டு

1. 'ஒலி-வாயில்கள்; வண்ணம், பதம், மந்திரம்; ஒளி-வாயில்கள் தத்துவம் புவனம், கலை.

விடுகின்றன. அப்படி இருக்க, இனியும் மறு பிறப்பு அமையும் என்பதற்குக் காரணம் யாது? என வினாவை எழுப்பினார் குப்புசாமி.

வினை-எச்சமும், புதுவினை ஈட்டமுமே மறுமைக்குக் காரணமாகின்றன. அவைபற்றி நோக்குவோம்.

வினை-எச்சம்

உழுது பயிரிட்டு வேளாண்மை செய்தான் ஒருவன். அதன் விளைவாக அவன் பெறுகிற நெல் இப்போதைக்கு உணவுப் பொருளாக அமைவதோடு, மறு ஆண்டு வேளாண்மைக்குத் தேவையான விதை நெல்லாகவும் ஆகிறதன்றோ?

அதேபோன்றுதன் முற்பிறப்புகளில் ஒருவன் ஈட்டிய வினைகளும் இருவகையில் பயன்தருகின்றன. முன்வினைகளோ ஏராளமாக நம் கணக்கில் (சஞ்சிதமாகக்) குவிந்து கிடக்கின்றன. அவற்றின் ஒரு பகுதியைத்தான் இப்பொழுது நுகர்-வினையாக (பிராரத்த வினையாக) நாம் நுகர்ந்து கொண்டிருக்கிறோம். அங்ஙனம் நுகர்ந்தவை போக ஒரு பகுதி வினைகள் எஞ்சி விடுகின்றன. அங்ஙனம் சஞ்சிதத்தின் எஞ்சியபகுதிகளே வினை-எச்சங்கள் எனப்படும். அவையே அவ்வப்போது மறு மறு பிறப்புகளுக்கு வித்தாகின்றன.

புதுவினை ஈட்டம்

முந்தைய வினைகள் முதிர்ந்து, இப்பொழுது நம் அனுபவத்துக்கு வரும்போது, ஆன்மா அவற்றைப் புது முயற்சிகள் செய்தே அனுபவிக்கிறது. அம்முயற்சிகள் பெரிதும் தன் முனைப்போடு செய்யப்படுகின்றன. நான் செய்தேன் இஃது என் திறமை என்றெல்லாம் வீண் பெருமை பேசி ஆன்மா அப்போது தருக்குறுகிறது. அங்ஙனம் தற்போதத்தோடும், தன் முனைப்போடும் செய்யப்படுகிற வினைகள் அனைத்தும் புதுவினைகள் ஆகின்றன.

இன்று ஒருவன் அனுபவிக்கிற இன்பதுன்பங்களுக்குக் காரணம் அவன் முன்னர்ச் செய்த வினைகள் என்பது போல, இன்று அவன் செய்யும் நல்வினைகளும் தீவினைகளுமே மறுமறு பிறப்புகளுக்கும் அப்பிறப்புகளில் அவன் நுகர வேண்டிய இன்பதுன்பப் பயன்களுக்கும் வித்தாகின்றன.

பசு செய்கிற வினை

பசு மிகச் சாதுவான ஒரு பிராணி; அதனிடம் எந்த ஒரு கெட்ட பழக்கமும் இல்லை. ஆயினும், இவ்வுலகத்தில் நம் போன்று வாழ வேண்டியிருப்பதால், அதுவும் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டியதாகிறது. என்ன காரியம்?

பசு புல் தின்கிறது, தண்ணீர் குடிக்கிறது, வைக்கோலையும் எள்ளுப் புண்ணாக்கையும் உண்கிறது. இங்ஙனம் தின்பதும், குடிப்பதுமே அப் பசு செய்கிற வினைகள் ஆகின்றன.

வினைகள் அததற்குரிய பயனைத்தரத் தெடங்குகின்றன. பசுவின் வயிற்றினுட் சென்ற உணவு சீரணிக்கப் பெறுகிறது; உணவிலிருந்த உயர்ந்த சத்துக்கள் குருதியாக மாறுகின்றன. உணவின் எஞ்சிய சக்கைப் பொருட்கள் கோமயமாகவும், கோசலமாகவும் உடம்பிலிருந்து பிரிந்து விடுகின்றன.

இரத்தம் பிறகு பாலாக மாறி வெளிப்படுகிறது. பாலிலிருந்து தயிரும் அதிலிருந்து நெய்யும் உண்டாகின்றன. இங்ஙனம் பசு தின்ற புல்லும் குடித்த நீரும், பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்ற ஐந்து பொருள்களாக மாற்றுருக் கொண்டு வெளிப்படுகின்றன அன்றோ? அவை சிவபெருமானுக்குப் பெருமைமிகு அபிடேகப் பொருள்களாகின்றன. சிவபெருமானை 'ஆன்-ஐந்து ஆடுவோன்'-எனச் சைவ அருளாளர்கள் போற்றிப் பரவுவர்.

எனவே, பால் என்ற பொருள், பசு முன்னர்த் தின்றும் குடித்தும் செய்த வினைகளின் விளைவு என்பது தெளிவாகிறது. (ஆதலால்தான், பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள், வினைப் பயனை உணர்த்துதற்குப் பால் என்ற சொல்லை குறியீடாகக் கொண்டனர் எனலாம். பாலது ஆணையாலே,-என்பார் தொல்காப்பியர்; பால் என்பது வினைக்குரிய பயனையும், ஆணை என்பது சிவசக்தியையும் குறிப்பதாகிய, பொருள் பொதிந்த அழகிய தமிழ்ச் சொற்கள்.)''

''சிவபெருமான் இவ்வாறு பசுவின் ஐந்து பொருள் களையும் விரும்பி ஏற்கக் காரணம் என்ன, ஐயா?'' என வினவினார், குப்புசாமி.

உலகெங்கும் வன்முறை தலைவிரித்தாடத் தொடங்கியது. அதைக்கண்ணுற்ற அறக்கடவுள் (தருமம்) தான் உலகெங்கும் நிலை பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகச் சிவபெருமானை

நோக்கித் தவம் செய்தது. மெய்ப்-பொருளை நாடிச் செய்த மெய்த்தவம் அது. அறக்கடவுள் மேற்கொண்ட தவவேள்வியின் சீலமிகு தன்மையை நோக்கினான் சிவபெருமான். அவனது கருணை உள்ளம் கனிவுற்றது. அறக்கடவுளின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டான்; ஆதலால் சிவபெருமானுக்கு இடப - ஊர்தியாகும் மிகப் பெரிய பேறு அறக்கடவுளுக்கு வாய்த்தது.

தவமே சிவத்தை அடையச் சிறந்த வழி என்பதை உலகுக்கு உணர்த்த விரும்பினான் சிவபெருமான். எனவே ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் மிகவும் குறைந்த அளவே பற்றியுள்ள உயிர்களைத் தேர்ந்தெடுத்தான். அவற்றிற்குத் தன் ஊர்தியாகிய இடபத்தின் வடிவத்தை அருளினான். அவையே பசு, எருது, கன்று அடங்கிய ஓர் இனமாயிற்று. இக்காரணம் பற்றியே பசு பூசையாகிய கோ பூஜையை நம் தமிழினம் பெரிதும் போற்றி வருகிறது எனலாம்.

(தவம் என்றதும் முற்றிலுமாக உலக வாழ்வைத் துறந்து, கானகம் சென்று, கண் மூடி இருந்து, ஊண் உறக்கமில்லாமல், உடம்பை வருத்தி, உட்கார்ந்திருத்தல் -என்று தவறாகப் பொருள் கொள்ளுதல் கூடாது. உண்ணும் போதும், உறங்கும் போதும், இன்பம் நிறைந்த இல்லற-உறவுக் காலமாயினும், துன்பம் மிகுந்த அவலச் சூழலாயினும், எப்பொழுதுமே சிவபெருமானை நினைந்து, ஊற்றமும் தெளிவும் கொண்டு, கருவி கரணங்கள் அனைத்தையும் ஒன்றித்துச் சிவசிந்தனையில் இருத்தலே மெய்த் தவமாகும்).

அறக் கடவுளுக்குப் பசுவின் வடிவத்தைக் கொடுத்தவன் சிவபெருமான். உலகில் அது உயிர் வாழ்வதற்கான புல்லையும் தண்ணீரையும் உடன் ஆக்கித் தந்தவனும் அவனே. சாத்துவிக குணம் மிக்கது பசு. அது யாருக்கும் ஊறு செய்வதில்லை. எனவே அங்குப் புதிய வினைகள் (ஆகாமியம்) எதுவும் இல்லை.

மிகச் சாதாரண உணவை உட்கொண்டு, மிக்க ஆற்றலுள்ள பால் முதலியவற்றைத் தருகிறது பசு. எனவே குற்றம் ஒன்றும் செய்யாத பசுவின் பால் முதலிய ஐந்து பொருள்களையும் சிவபெருமான் தனக்கு அபிடேகப் பொருள்களாக விரும்பி ஏற்றுக்கொண்டு, வினைச் சுழற்சியிலிருந்து பசுவை விடுவித்தருளுகிறான்.

மூன்றாம் இயல் முற்றிற்று

இயல் - 4

உணர்த்த உணரும் ஆன்ம இயல்பு

(உயிர்களின் இயல்பு)

அன்று மாலை சிவசாமியும், குப்புசாமியும் சீக்கிரமாகவே என் இல்லத்திற்கு வந்துவிட்டனர். 'ஐயா! வணக்கம்' எனக் கூறி இருக்கைகளில் அமர்ந்தனர். குப்புசாமி அன்றைய சிந்தனைக்கு வித்திட்டார்.

நேற்றைய சிந்தனைக்குப் பிறகு வீடு சென்ற நான் இரவில் நன்றாக அமைதியாக உறங்கினேன். ஐயா, உடம்பில் ஒரு வகைப் புத்துணர்வு தோன்றுகிறது. உறக்கம், உணவு ஆகியவற்றை எண்ணிப் பார்க்கும்போது, இன்பத் துன்பங்களை நுகர்வது உடம்பின் கூறுகளோ? என ஐயம் தோன்றுகிறது. ஆகவே நுகர்ச்சி என்பது உடலுக்கா? அன்றி உயிருக்கா? என்பதை விளக்கி அருள வேண்டுகிறேன்' என்றார் குப்புசாமி.

வினை-நுகர்ச்சி உடலுக்கா? உயிருக்கா?

உண்பதும் உறங்குவதும் உடம்புக்கு ஒரு தெம்பினை ஊட்டி, உள்ளத்துக்கும் உற்சாகத்தைத் தருகிறது என்பது உண்மையே. ஆயினும் அவ் இன்பத்தை நுகர்வது உடம்பா? அல்லது ஆன்மாவா? - என்பதே தங்கள் ஐயம்.

மாணவன் ஒருவன் தேர்வுக்கு வருகிறான். மன ஈடு பாட்டோடு அறிவைப் பயன்படுத்தி, வினாக்களுக்கு ஏற்ற விடைகளை செவ்விதே விடைத் தாளில் எழுதுகிறான். அவனுடைய வினைத் திட்பத்துக்கு ஏற்பத் தேர்வாளரும் உயர்ந்த மதிப்பெண்களை அத்தாளிலேயே குறிக்கிறார். வெற்றி கிட்டுகிறது. அவன் இன்புறுகிறான். இப்போது வெற்றிக்கான இன்பத்தை நுகர்வது விடைத்தாளா? மாணவனின் மனமா? அன்றி அந்த ஆன்மாவா?

தேர்வின் வெற்றி அவனுடைய அறிவின் வெளிப் பாட்டுக்குக் கிடைத்த வெற்றி. அந்த வெளிப்பாட்டுக்கு விடைத்தாள், பேனா, மனம் முதலியவை துணைக் கருவிகளாக இருந்தன. ஆயினும் அவை உணர்வுகளற்ற சடம். வெற்றியை

நுகர்ந்து இன்புறுகிற ஆற்றல் அவற்றுக்கு இல்லை. ஆன்ம அறிவே அவ் இன்பத்தை உணர்ந்து நுகர்கிறது. அதுவே வினை ஈட்டத்துக்கும் இன்பத்துன்பப் பயன் நுகர்ச்சிக்கும் கர்த்தா; மனமும் மதிப்பெண்களும் துணைக் காரணங்கள்.

அதே போன்றுதான் உண்பதும் அதற்கான இன்ப நுகர்ச்சியும் உயிருள்ள உடம்பே உண்ணுகிறது. உயிரற்ற உடம்பினால் உண்ண முடியாது. அவ்வாறு உண்பதாகிய செயலுக்கு வாயும், வயிறும், மனமும் துணைக் கருவிகள். அவற்றின் மூலம் உண்பதாகிய செயலைச் செய்கிற ஆன்மாவே அவ் உண்டி இன்பத்தை நுகர்கிறது.

மாற்றுச் சமயிகள் பலரும் இது தொடர்பாக வெவ்வேறு கருத்துக்களைக் கூறுவர். உலகாயதர் என்ற ஒரு சாரார், கண்ணுக்குப் புலப்படுகிற பொருள்கள் மட்டுமே உண்மை, ஏனைய அனைத்தும் கற்பனையே எனும் கொள்கையுடைய வர்கள். அவர்கள் காட்சிப் பொருளாகிய உடம்பே இன்புறு கிறது எனக் கூறுவர். உடம்பு என்னும் ஆலயத்தின் அற்புதமான உள்ளமைப்பினை அறியாது மதில் சுவர்களின் புறத்தே சுற்றுகிற அவர்கள், மனம், உயிர் என்பவற்றின் இயல்புகளை அறியா திருப்பதில் வியப்பேதும் இல்லை. அவர்களைப் ‘புறப்புறச் சமயவாதிகள்’ என வகைப்படுத்திக் காண்பர் சைவசித்தாந்திகள்.

சாங்கியர் என்போர் மற்றொரு புறச் சமயிகள். அரைக் கிணறு தாண்டிய நிலையினர். கோயிலின் கொடிக்கம்பம் வரை நுழைந்தும் கருவறையில் கடவுள் இருப்பதை ஐயுறுபவர்கள். அவர்கள் ‘வினைகளைக் கூட்டுவதும், நுகர்வதும் புத்தி என்னும் தத்துவமே அன்றிப் புருடன் (ஆன்மா) அல்லன்’ என மொழிவர். இவ்விரு கூற்றுகளுமே பிழையானவை.

வினைகளைச் செய்பவர் யார்? உணர்வுள்ள உயிர்களா? உணர்வற்ற சடமாகிய உடம்பு முதலிய கருவிகளா? வினை செய்தவரே அதற்குரிய பயனையும் நுகர்கிறார். இங்கு வினை செய்த உயிரே (ஆன்மாவே) அதன் பயனை நுகர்கிறது.

உடம்பு, மனம், புத்தி முதலிய தத்துவ அமைப்புகள் அனைத்தும் அறிவற்ற உணர்வற்ற சுய-இயக்கமற்ற சடப் பொருள்கள். ஆகவே அவற்றிற்கு இன்பத் துன்ப நுகர்ச்சிப் பேறு இல்லை; ஆயினும் உயிர்கள் வினை செய்வதற்கும் அவற்றின்

பயனை நுகர்வதற்கும் இச் சடப்பொருள்கள் பெரிதும் துணையாக இருக்கின்றன என அறிவுறுத்துகிறது சைவசித்தாந்தம்.

ஆன்மா என்பது சிற்றறிவுப் பொருள்

'ஆன்மாவைப் பற்றியும், ஆணவத்தைப் பற்றியும் நேற்று தாங்கள் கூறிய கருத்துக்கள் மிகவும் பயனுடையனவாக இருந்தன. ஐயா, எனினும் எனக்கு ஓர் ஐயம். உயிர் என்பதுதான் அறிவுப் பொருளாயிற்றே! அஃது சடமாகிய ஆணவத்தோடு எவ்வாறு தொடர்பு கொண்டது? ஒருவாறு ஆணவத்துக்கும் அறிவு உண்டோ?' என வினவினார் குப்புசாமி.

''ஆணவம் என்பது அறிவற்றதோர் சடப்பொருளே. அதற்குச் சிந்திக்கும் ஆற்றல் எதுவும் இல்லை. ஆயினும் சிந்தனை ஆற்றல் மிக்க உயிரினத்தையே அது தன் வஞ்சனையால் கட்டிப்போட வல்ல திறமை மிக்கது. அறிவற்ற சடமாகிய ஆணவத்துக்கு இத்தகைய பேராற்றல் உண்டா? என ஐயுற வேண்டியதில்லை.

கொடிய நஞ்சுக்கு அறிவு என்னும் ஆற்றல் இல்லை எனினும் தான் சார்ந்த உடம்பிலுள்ள கருவிகளைச் செயலற்ற தாக்கி, அங்கு உறைகிற உயிரை இயங்க முடியாதவாறு செய்து, உடலை நீலநிறமாக மாற்றுகிற இயல்பும், சேர்ந்தாரைக் கொல்லும் ஆற்றலும் இருக்கின்றன அன்றோ? அதேபோன்று தான் அறிவில்லாத ஆணவம் அறிவுப் பொருளாகிய உயிரைத் தன் கட்டுக்குள் ஆட்டி வைக்கிறது.

மேலும் ஆணவத்தின் ஆளுமைக்குக் கன்மமும் மாயையும் கைகொடுத்து உதவுகின்றன. கன்மம் நம்மை நல்வினை தீவினைகளில் புகுத்த உதவுகிறது. மாயை தன் காரியமாகிய உலகப் பொருள்களில் நாம் வேட்கையும் மயக்கமும் கொள்ளுமாறு செய்கிறது. இவ்வாறுதான் உலக மாந்தரின் வாழ்வியல் சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது.

உயிர்களாகிய நம்மிடம் ஓர் அப்பாவித்தனமும், மென்மையான இயல்பும் மெத்தனப்போக்கும் மிகுதி. எப்பொருளைச் சார்கிறோமோ அப்பொருளையே சார்ந்து, அதாகவே ஒன்றி நிற்கும் இயல்புடையவர்கள் நாம், தனக்கு உணவிடுகிறவன் நல்லவனா, தீயவனா என்று பாராமல்,

அவனுக்கு நன்றியுடன் வாலாட்டி அவனையே வளைய வருகின்ற நாய்போல, நல்லது எது? கெட்டது எது? எனப் பாகுபடுத்தி நன்கு சிந்தித்துப் பின்னர்ச் சார்பு கொள்ள நமக்குத் தெரிவதில்லை. நமக்கு இருப்பதெல்லாம் மிகச் சிறிய அளவினதான அறிவே. இந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஆணவம் நம்மைப் பல்லாற்றானும் ஆட்டி வைக்கிறது.

செம்பினில் ஊறுகிற களிம்பு, விளக்கினை மறைக்கும் மாசுகள், நடப்போனின் தலையில் அழுத்திக் கொண்டிருக்கும் சுமை, ஏணியில் ஏறுவோன் காலில் கட்டிய பாராங்கல் மற்றும் தன்னுள் இழுத்துக் கொள்ளுகிற 'புதைசேர்' - இவை போல, இந்த ஆணவம் உயிரைத் தன்னுடைய அடிமைத் தளையுள் சிக்க வைக்கிறது.

அஃது தன்னை ஒரு மேதகு நண்பனாகவே நம்மிடம் காட்டிக் கொள்ளுகிறது. சிறிது சிறிதாக மிகத் தந்திரமாகத் தன்னுள் கவர்ந்து இழுத்துக்கொள்கிறது. நாமும் அதன் வஞ்சக வலையினுள் வலிமையாகச் சிக்கிக் கொள்ளுகிறோம். அது நம்மைத் தீயநெறிகளிலே வலுக்கட்டாயமாகப் புகுத்து கிறது. நல்லது எது, கெட்டது எது என்றோ, உயர்வு, தாழ்வு என்றோ அறியாமல் நாம் பலப்பல கேடுகளைச் செய்யத் துணிகிறோம். அதன்மூலம் நமக்கு வினை-ஈட்டம் மிகுகிறது. அதன் விளைவுகளே நம்முடைய இன்றைய வாழ்வு.

ஆகவே ஆணவத்துக்கு அறிவு இல்லையாயினும், தீய ஆற்றல்கள் பல உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அறிவும் உணர்வும்

'உணர்வு என்ற சொல்லாட்சி திருமுறைகளில் பயின்று வரக் காணுகிறோம். அறிவு என்பதும் உணர்வு என்பதும் எவ் வகையில் தொடர்புடையன? பொருள்கள் அனைத்துக்கும் உணர்வு உண்டா? ஐயா, தெளிவுறுத்த வேண்டுகிறேன்' என்றார் சிவசாமி.

'ஆம்' உணர்வு என்னும் சீரிய சொல் சைவ இலக்கியங் களில் பெரிதும் பயின்று வரும் சொல்லாகும்.

விறகில் தீயினன், பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்

உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே (அப்பர் 4-90-10)

(உறவுகோல் - அறிவு என்னும் மத்து. உணர்வுக் கயிறு அன்பு என்னும் உயரிய பண்பு)

இஃது அப்பர் பெருமான் வாக்கு. விழைவு, அறிவு, செயல் என மூவகை ஆற்றல்களையும் கொண்ட ஒரு உணர்வுப் பொருளே ஆன்மா. இம்மூன்று ஆற்றல்களும் சூக்குமமானவை. இவற்றை முறையே இச்சை, ஞானம், கிரியை எனக் கூறுவர் வடநூலார். இம்மூன்றும் பிரிப்பின்றி (அவ்வியக்கமாக)க் கூடி நிற்கும் நிலையே உணர்வு ஆகும். ஆன்மாவின் இந்த உணர்வு ஓர் எல்லைக்கு உட்பட்டது.

எல்லாப் பொருள்களுக்கும் உணர்வு உண்டா? என்பது உங்களுடைய இரண்டாவது ஐயம்.

பொருள்களை, 'இறை, உயிர், தளை' என மூவகைப் படுத்திச் சிந்திப்பது சைவ மரபு. அவை ஒவ்வொன்றின் இயல்பான உணர்வுத் தன்மைகளை முன்னரே கூறியுள்ளோம். மீண்டும் நோக்கலாம்.

எவ்வித கருவிகரணங்களும் இன்றி, யாவற்றையும் ஒருசேர முழுமையாக அறிபவன் இறைவன் ஒருவனே. அவனை முற்றுணர்வினன், ஞானமே வடிவானவன், பேரின்பத்தின் நிலைக்களன் எனச் சாத்திரங்கள் போற்றும்.

உயிர்களாகிய நாமும் உணர்வுள்ள பொருள்களே. ஆயினும் சிவபெருமான் என்ற கோடானுகோடி சூரியப் பிரகாசத்துக்கு முன்னால், நம் உணர்வுகள் யாவும் ஒரு சிறிய மின்மினிப் பூச்சி ஒளியின் மிகச்சிறிய கூறு போன்றதாகும்.

கருவிகளின் துணைகொண்டு மட்டுமே பொருள்களை அறிவன உயிர்கள். அவை சிற்றுணர்வுப் பொருள்கள். மேலும் யாரேனும் உணர்த்தினால் மட்டுமே உணரக்கூடிய தன்மை யுடையது உயிரினம். இறைவனுடைய உள்ளீட்டு ஆற்றலாகிய அருட் சத்தி இச்சா சத்தியாகவும், ஞானசத்தியாகவும், கிரியா சத்தியாகவும் விரிந்து, ஆன்மாக்களின் இச்சை ஞானம், கிரியை ஆகிய மூன்று ஆற்றல்களையும் தூண்டுகிறாள். குருமார்களோ மற்றவர்களோ அவ்வாறு உணர்த்தினால் உணர்ந்து செயல்படுகிற

இயல்புடையன ஆன்மாக்கள். அஃது ஆன்மாக்களுக்கு அமைந்த ஒரு நல்லியல்பு எனலாம்.

ஆண்டவனால் அறிவும் உணர்வுகளும் தூண்டப்பெறும் போது, உற்சாகத்தோடு நிற்பது மனித இயல்பு. அப்போது 'பகுத்தறிவுப் பாசறை'யாகத் திகழ்வது நம் பின்தலைப்பிடரி யிலுள்ள சிறுமூளையே. அந்த அறிவும் சிற்றறிவே.

இறுதியாக உள்ள மலங்களோ எவ்வகையிலும் உணர்வுடையன அல்ல. அவை உணர்வற்ற முழுமையான சடம். உணர்த்தினாலும் உணராத் தன்மையன. செய்திகளைத் தொகுத்து நோக்கலாம்.

"தானே முழுமையாக யாவற்றையும் ஒருசேர உணர்பவன் இறைவன்"
"யாரேனும் உணர்த்த, சார்ந்ததன் வண்ணமாக நின்று உணர்வது உயிர்"
உணர்த்தினாலும் உணரும் ஆற்றலற்ற சடமாக இருப்பன தளைகள் (மலங்கள்)

ஆன்மாவுக்கு முக்குண சரீரம்

'ஆன்மாக்கள் அனைத்தும் அறிவுப் பொருள்கள் எனக் கூறினீர்கள். அவ்வாறாயின் பொருள்களைப் பகுத்து உணர்வதில் ஆன்மாக்களுள் ஏன் இத்தனை வேறுபாடு?' என வினவினார் குப்புசாமி.

உலகம் முழுவதற்கும் சூரியன் தன் ஒளிக் கற்றைகளை ஒரே மாதிரியாகவே பரப்பினாலும், சீரான கண் பார்வை உடையவர்களும், கண்ணின் படலத்தால் குருடானவர்களும், பிறவிக் குருடர்களும் அவ் ஒளியைக் கண்டு அறிவதில் வேறுபடுகின்றனர் அன்றோ?

அதேபோன்றுதான் முடங்கிக் கிடந்த ஆன்மாக்களின் முத்திற ஆற்றல்களையும் சிவசத்தி ஒரே மாதிரியாகவே உசுப்பினாலும், ஆன்மாக்களின் விருப்பு - ஆற்றலிலுள்ள வேற்றுமை காரணமாக அவற்றின் எண்ணங்களிலும் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன.

பல ஆன்மாக்கள் ஆணவத்தின் இந்தத் துன்பப் பிடி யிலிருந்து ஒரு வழியாகத் தப்பியதும் 'அக்கடா' என்று சும்மா

இருக்க வேண்டும், உண்பதும் உறங்குவதும், களியாட்டங்களில் காலங் கழிப்பதுமாக வாழ்வினை ஓட்ட வேண்டும் எனச் சுய நல உணர்வோடு தம்முடைய சுகபோக வாழ்வினை மட்டுமே சிந்திக்கின்றனர். இங்ஙனம் தம்மளவில் இன்பம் துய்ப்பதைத் 'தாமசகுணம்' என்பர்.

மற்றும் சில ஆன்மாக்கள் ''நாம் இவ் இடர்ப்பாட்டி லிருந்து விடுதலையானதும், நம் போன்றே இப்பிடியில் சிக்கித் தவிக்கும் ஏனைய ஆன்மாக்களுக்கு உதவிக் கரம் நீட்டி அவர் களின் விடுதலைக்கும் முன்னேற்றத்துக்கும் உதவ வேண்டும் என சமுதாய உணர்வோடு வாழ எண்ணுகின்றன. இங்ஙனம் தன்னலத்தோடு பொது நலத்தையும் பேணுவதை இரஜோகுணம் என்பர்.

வேறு சில ஆன்மாக்களோ 'நாம் தப்பித்துக் கொண்டதும் மீண்டும் இந்தப் பக்கமே தலை வைத்துப் படுக்கக்கூடாது. விடுதலையாவதற்கு உதவிய பெருமகனைக் கண்டு நன்றி கூற வேண்டும் அவனுக்கு அடித் தொண்டு செய்து நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைத்து மேன்மேலும் உயர்வினை அடைவதற்கு முயல வேண்டும்' எனச் செய்ந்நன்றி உணர்வோடு சிந்திக்கின்றன. இத்தகு மன எழுச்சியைச் சாத்துவிக குணம் என்பர். இங்ஙனம் ஆன்மாக்கள் குணத்தால் வேறுபட்டு இருப்பதாலேயே அவை பொருள்களைப் பகுத்து உணர் வதிலும் வேறுபாடு காணப்படுகிறது.

குண சரீரமும் வினை ஈட்டமும்

தொடக்கத்தில் கூறும்போது, 'மூலகன்மத்தைத் தூண்டி, ஆன்மாவை வினையாளி ஆக்குவது ஆணவமே' என்றீர்கள். அடுத்துக் கூறும்போது, 'முடிவிலா வினை ஈட்டத்துக்கு மாயையும் அதன் வெளிப்பாடான குணசரீரமுமே துணைக்காரணம் என்றீர்கள். ஆகவே குணசரீரம் என்பது பற்றிக் கூறவேண்டுகிறேன்'' என்றார் குப்புசாமி.

ஆணவச் சட்டைக்கு ஒரு மாற்றுச் சட்டையாகவே சிவபெருமான் உயிரினத்துக்கு ஒரு புத்தாடையை அளிக்க எண்ணுகிறான். மாயை என்னும் தன் பொருட்சத்தியை விரிக்கிறான். அஃது மூன்று கூறுகளாக விரிகிறது. தலையாய கூறு தலைவனாகிய சிவபெருமானுக்குத் தொழிற் களம்

ஆகிறது. முற்றிலும் தூய்மையான அதற்குச் சிவதத்துவம் என்று பெயர்.

இடைப்பட்ட கூறு வித்தியா தத்துவம் எனும் பெயரில் ஆன்ம ஆற்றல்களைத் தூண்டும் படைக்கலனாக அமைகிறது. வினை-ஈட்டம் மற்றும் பயன் ஊட்டம் ஆகியவற்றிற்கான காலத்தையும் நெறிமுறைகளையும் ஆன்ம-ஆற்றலையும் கண்காணிக்கிறது.

மூன்றாவதாகிய கூறுதான் குணசரீரம் என்பது. முற்றிலும் அசுத்தமான இஃது மூன்று குணங்களும் பிரியாத கட்டமைப்பாக உள்ளது. சித்தம் எனப்படும் இதுவே முந்தைய வினைகளின் ஆவணக்களரி ஆகும். இறைவன் உயிரை ஏற்றமுற வாழச் செய்வதற்கும் துன்பத்தில் இடர்ப்படுத்துவதற்கும் இந்தப் பதிவேட்டையே 'விதி ஏடா'க் கொள்ளுகிறான்.

கோடானுகோடியாக எண்ணற்றவையாக உள்ள உயிர் களோ விருப்பம் மற்றும் அறிவு, செயல் நிலைகளில் பலவாறு வேறுபட்டுக் கிடக்கின்றன. புலி சிறுத்தைகளின் முரட்டுக்குணம், பசு, மான், முயல்களின் அமைதிக்குணம், எருமையின் தாமச குணம் - என்றவாறு மொத்த உயிரினமும் குண வேறுபாடு கொண்டுள்ளன.

அந்த அந்த குணமும் செயல்படுமாறு அகங்காரம் என்னும் உட்-கருவியைத் தோற்றுவிக்கிறான் இறைவன். விருப்பு வெறுப்புகளைத் தூண்டுதற்கு மனம். அறிவு விளக்கத்துக்கு ஊற்றுக்காலாக புத்தி என அமைக்கிறான். இங்ஙனம் அகக் கருவிகள் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என நான்கு ஆகின்றன.

இவற்றை மேலும் விரித்து கண், காது முதலிய அறிவுக் கருவிகள், கைகால் முதலிய செயற்கருவிகள் என பத்துக்கருவி களையும், அவற்றிற்கான நுண்ணிய ஆற்றல்களையும் நிலம் முதலிய ஐம்பூதங்களையும் தோற்றுவிக்கிறான்.

உயிர்கள் தத்தம் நுண்மையான குண சரீரத்தைக் கொண்டு தத்தமக்கு ஏற்புடைய அகங்காரத்தின் துணையோடு, பருமையான அறிவு மற்றும் செயற் கருவிகளின் மூலம் தத்தம் வழியில் செயலாற்றத் தலைப்படுகின்றன.

ஒரு காரியத்தை கைகால் முதலிய உடற்கருவிகளால் செய்வதுபோலவே, மனத்தால் நினைப்பதும், புத்தியால் உறுதிப்

படுத்துவதும் வினைகளாகின்றன. அவை சித்தம் என்னும் முக்குண சரீரத்தில் பதிவாகின்றன.

இங்ஙனம் உயிர்கள் வினை செய்வதற்கும், அவ்வினை களின் பயன்களை நுகர்வதற்கும் குண சரீரம் ஒரு துணைக் காரணம் ஆகிறது.

வினைகளின் பதிவு எங்கே?

'ஐயா, தாங்கள் முன்னர்க் கூறும்போது 'வினைகள் புத்தி தத்துவத்தில் பதிவாகின்றன' என்று குறிப்பிட்டீர்கள். இப்போது சித்தம் என்ற தத்துவமே 'வினைப் பதிவேடு' எனக் கூறுகிறீர்களே அதன் விளக்கத்தை அறிவுறுத்த வேண்டுகிறேன்' என்றார் சிவசாமி.

இரண்டும் சரியே. நிறுவனங்களில் கணக்கு எழுதி வைக்கும் முறையை நீங்கள் அறிவீர்கள் பற்று-வரவு தொடர்பான எல்லாக் கணக்குகளையும் குறிப்பேடு என்ற புத்தகத்தில் முதலில் எழுதிக் கொள்ளுவார்கள் பின்னர் அந்த அந்தப் பற்று-வரவுகளைத் தனித்தனியே தலைப்புகளைக் கொண்ட பேரேடு *(Ledger)* என்ற புத்தகத்தில் பதிவர்.

இங்குப் புத்தி தத்துவத்தை முதற்குறிப்பு ஏடாகவும் சித்தத்தைப் பேரேடாகவும் கொள்ள வேண்டும்' என்று யான் கூறினேன்.

உடனே குப்புசாமிக்கு ஓர் ஐயம் எழுந்தது. சித்தம் நீங்கலாக. மனம், புத்தி, அகங்காரம் என மூன்று அகக்கருவிகள் இருக்கும் போது புத்தி தத்துவம் மட்டும் ஏன் முதற்குறிப்பு ஏடாக அமைகிறது?' என்பதே அவரது ஐயம்.

'உணர்வுப் பொருளான உயிருக்கு அறிவு என்பது தலையாய ஆற்றல் என்றும், இச்சையும், செயல்திறனும் அதன் பக்க ஆற்றல்கள் என்றும் முன்னரே கூறியுள்ளோம்.

விருப்பு வெறுப்புகளுக்கு விளைநிலம் மனம், அஃது அலைமோதும் நீர்நிலை போன்றது. அதில் வினைகளைக் குறிப்பது நீர்மேல் எழுத்துக்கு நேர். ஆகவே வினைப் பதிவுக்கு அஃது ஏற்புடையதாகாது.

செயல்திறனை ஊக்குவிப்பது அகங்கார தத்துவம். ஆயினும் செயல் என்பது விருப்பம் மற்றும் அறிவு இவற்றைச்

சார்ந்தே அமைவதாகும். ஆகவே அதுவும் குறிப்பேடு ஆகத் தக்கதன்று.

எஞ்சி இருப்பது அறிவாற்றல் ஒன்றே. அறிவின் விளக்கத்துக்கும் விளங்காமைக்கும் நிலைக்களனாக இருப்பது புத்தி தத்துவமே. ஆகவே, புத்தி தத்துவம் மட்டுமே முதற் குறிப்பு ஏடாக அமைகிறது.

இங்ஙனம் தனித்தனியே பதிவான அனைத்து வினைகளும் 'தத்துவத் தாயான மாயை'யில் சஞ்சிதமாகத் தொகுக்கப்படு கின்றன. அவற்றுள் கால, நியதிக்கு ஏற்ப, உயிர் இப்பிறப்பில் நுகர வேண்டியவை மட்டும் தனியே பிரிக்கப்பட்டுப் பிரார்த்த வினைகளாக சித்தம் என்ற தத்துவத்தில் 'விதி'களாகப் பதிவு செய்யப்படுகின்றன.

ஆகவே புத்தி என்பது குறிப்பேடு எனவும், சித்தம் என்பது பேரேடு எனவும் மாயை என்பது மூல ஏடு எனவும் இயைபுபடுத்திச் சிந்தித்தல் சாலும்.

சித்ததின் செல்வாக்கு

ஒரு காரியத்தைச் செய்ய முற்படும்போது, அக்காரியத்தைச் செய்வதற்கான விருப்பம் மனத்தில்தான் முதற்கண் எழுகிறது. புத்தியும் அதைச் செய்யத் துணிகிறது. ஆயினும் பல சமயங் களில் நாம் ஒரு முடிவுக்கு வர இயலாமல் குழப்பநிலையில் துன்புறுகிறோம். அத்தகு மனக் குழப்பத்துக்குக் காரணம் என்ன? சித்த-மயக்கமே அன்றோ? சித்தம் என்ற விதி ஏட்டிலுள்ள தலை-எழுத்தின் அலங்கோலத்தால்தான் நம்மில் பலரும் அவ்வப்போது தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு அல்லலுறுகிறோம்.

மனமும் புத்தியும் ஒருங்கியைந்து நினையுங்கால், அக் காரியம் கைகூட வேண்டும் என்பது நியதி. அவ்வாறு காரியம் கைகூடுவதையே யாவரும் எதிர்பார்ப்போம். ஆயினும் நம் முயற்சி முழுமனத்தோடு கூடியதாக இருந்தாலும் பல சமயங் களில் தடைபட்டு நின்றுவிடுகிறது அல்லது அதற்குரிய பயனை அளிக்காமல் வீணாகிப்போகிறது. இது நடைமுறையில் காணப்படுகிற உண்மை. அதற்குக் காரணம் என்ன? சித்த மலம்.

ஒருவர் உண்மையாக ஓடிஓடி உழைத்துத் தேய்ந்தாலும், தோல்வியையே தழுவித் துவளுகிறார்; ஆனால், உறங்கிக் கொண்டே இருக்கிற அண்டை வீட்டுக்காரரோ, மேன்மேலும் வெற்றி வாகை சூடி இன்பத்தில் திளைக்கிறார். அங்ஙனம் சோம்பேறி சுகமாக வாழ்வதற்கும், உழைப்பவன் உருக்குலைந்து அல்லலுறுவதற்கும் காரணம் என்ன? சித்தம் என்ற தலைவிதி.

ஐந்தாறு பேருந்துகள் அருமையாக விலகி ஓடுகிற அளவுக்கு அகலமான நெடுஞ்சாலை, நெருக்கடியில்லாத அதிகாலைப் பொழுது, ஓட்டுநரோ மிகவும் திறமையானவர், மகிழ்வூர்தி மிகச் சீராக ஓடிக் கொண்டிருக்கிறது. அப்போது எங்கிருந்தோ தோன்றுகிறதே ஒரு பளுவூர்தி (லாரி), அது இமைப்பொழுதில் மகிழ்வூர்தியை மோதிப் புரட்டி விடுகிறது. மகிழ்வூர்திப் பயணிகள் மரணப் படுக்கைக்கு செல்லுகின்றனர். கண் இமைக்கும் நேரத்துக்குள் அத்துணை மகிழ்ச்சியும் துன்பமாக மாறி விடுகிறதே, அத்தகு மாற்றத்துக்குக் காரணம் என்ன? அது தான் தலைவிதி.

சித்தம் என்னும் பதிவேட்டில் ஆழமாகப் பதிந்த கருத்து களும் நிகழ்ச்சிகளும், அவ்வப்போது நடைமுறை வாழ்வில் குறுக்கிட்டு இன்பத்தைத் துன்பமாகவும், துன்பத்தை இன்ப மாகவும் மாற்றிவிடுவது இயல்பு. இவ்வாறாக, மனக்குழப்பம், முயற்சியில் தடை, முயற்சி பயனளிக்காமை, இன்பத் துன்ப மாற்றங்கள் - இவை எல்லாம் நிகழ்வதற்குக் காரணம் சித்தத்தின் செல்வாக்கே.

உடலின்கண் உணர்கருவிகள் (அறிவியல் அடிப்படையில்)

'ஐயா! குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கும் நுண்ணிய அகக்கருவிகள், அவையே மனித உணர்வுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றன என்று கூறினீர்கள். நம் மனித உடம்பில் அவற்றிற்கு இருப்பிடங்கள் எங்கெங்கு உள்ளன? என்று கூறினால் பெரிதும் உதவியாக இருக்கும்' என்றார் சிவசாமி.

'மண்ணில் வாழுகிறான் மனிதன்; அவனைப் போன்று, மண்ணீரலில் நிலைகொள்ளுகிறது ஆன்மா. ஆன்மாவுக்கு ஒரு நண்பனாக, அமைச்சனாக வழிநடத்துவோனாக இறைவனால் அருளப் பெற்றது மனம். ஆதலால் அஃது அவ் ஆன்மாவுக்கு வெகு அருகில், மனித நெஞ்சில், இருதயத்தின் கீழே இருந்து இயங்குகிறது எனலாம்.

இந்த அடிப்படை உண்மையை அறிந்தோ அறியாமலோ, வெள்ளைக்காரர்கூடப் பிறர்க்கு நன்றி நவிலும்போது, 'நான் என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து தங்கட்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன் *(I thank you from the bottom of my heart)*' எனக் கூறுவதைக் காணலாம்''.

அதேபோல் புத்தி என்ற தத்துவமும், அகங்காரம் என்ற தத்துவமும் நம் பின்தலையில் பிடரியிலிருந்து தொங்குகிற அறிவு நரம்புகளிலும், செயல் நரம்புகளிலும் *(Sensory Nerves and Motor Nerves)* நிலைகொண்டு இயங்குகின்றன.

நம் உடம்பிலேயே பேரறிவுத்தானமாக ஓர் உறுப்பு இருக்கிறது. அதற்குப் பெருமூளை என்பது பெயர். அஃது நம் தலையினில் மண்டை-ஓட்டினுள் முழுவதுமாக நிறைந்திருக் கிறது. பெயரளவில் மட்டும் பெரியது என்றில்லாமல், தன் பரிமாணத்தாலும் பெருமைகளாலும், செயற்பாடுகளாலும் அஃது ஒரு தலையாய உறுப்பு ஆகும். 'எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' என்ற பழமொழி யாவரும் அறிந்த ஒன்று.

ஆயினும் அதில் நாம் 2% மட்டுமே பயன்படுத்துகிறோம் என்பதே இக்கால மேலைநாட்டு மருத்துவ நரம்பியல் நிபுணர் களும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை. சிவசிந்தனை என்ற தியானத்தின் மூலம் பெருமூளையின் வளமையை உணர்ந்து அதைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பண்டு தொட்டு நம் சைவ அருளாளர்களின் அனுபவக் கூற்று.

அடுத்து, சித்தம் என்ற தத்துவத்தைக் காண்போம். இதுவே ஊழ்வினைகளின் பதிவேடு ஆகும். நம் தலையினுள் மூளைக்குக் கீழே ஓர் அவல-உறுப்பு *(an ugly organ)* உள்ளது. ஹைப்போ - தாலமஸ் *(Hypothalamus)* என்பது அதன் மருத்துவப் பெயர். ஆயிரம் இதழ் கொண்ட பெருமூளை என்னும் தாமரை மலரின் அடியில் இருப்பதால் இதனைத் தாமரைக் காம்பு என நாம் அழைத்தல் பொருந்தும்.

இப்பகுதி, மூளையின் பிற பகுதிகளைப் போன்று, சிந்தனைகள் செய்வதோ, ஒளி பொருந்தியதோ, தோற்றத்தால் எழிலுடையதோ அன்று. எனினும் நம் ஒவ்வோர் அசைவிலும் இது முக்கிய பங்கேற்கிறது. ஒரு நாளின் 24 மணி நேரமும்,

இது உடலின் இயக்கங்களை எல்லாம் ஒருங்கிணைக்கிறது. அதனை நாம் சித்தம் எனக் கொள்ளுதல், பெரிதும் பொருத்த முடையதே.

ஹைப்போ-தாலமஸ் (*Hypothalamus*) என்பது தனி ஓர் உறுப்பு அன்று. பிலத்துவாரம் (*Infundibulam*), பார்வைக் குறுக்கு வளையம் (*Optic Chiasm*), பாலூட்டக அமைப்பு (*Mammillary body*) முதலிய சில அரிய உறுப்புகளின் கூட்டமைப்பே ஹைப்போதாலமஸ் (*Hypothalamus*) ஆகும்.

நமது உடம்பின் மொத்த எடையில் ஐம்பதில் ஒரு பங்கு (2%) எடையே உள்ளது நம் பெருமூளை; அந்த மூளையின் எடையில் முந்நூறில் ஒரு பங்கு எடையே உள்ளது இந்தத் தாமரைக்காம்பு. ஆயினும் இத்துணை சிறிய உறுப்புத்தான், நம் உடலின் வேறு எந்த ஒரு பகுதியையும் விட, இருதயத்திலிருந்து மிகுதியான குருதியைப் பெறுகிறது. 'ஊழில் பெருவலி யாவுள?' என்ற தெய்வப் புலவரின் வாக்குத்தான் எத்துணை உண்மை!

''புறத்தே உள்ள பொருள்களை நாம் பார்க்கும் போது, அப்பொருள்களின் நிழல் நம் கண்களின் வழியாக ஊடுருவிச் சென்று, பார்வைத் திரையில் தலைகீழாகவும் இடவல மாற்றத் தோடும் விழுகின்றது. இத்தகு இடவல-மாற்றத்துக்குக் காரணம் பார்வைக் குறுக்குவளையம் (*Optic chiasm*) என்ற நுண்கருவியே'' என மருத்துவ அறிஞர்கள் கூறுவர்.

அவர்கள் கூற்று இவ்வாறிருக்கப், ''பொருள்களையும் அவை தொடர்பான கருதுகோள்களையும் மாற்றியும் திரித்தும் நம் புத்தியில் பதிப்பித்து நம்மை உண்மைக்கு மாறாக நடத்தி செல்லுகிறது ஆணவம் என்ற மலம்'' என அறிவுறுத்து வார்கள் சைவ சமய அருளாளர்கள். இவ்இருவர் கூற்றையும் இணைத்துச் சிந்திக்கும்போது, பார்வைக் குறுக்கு வளையம் (*optic chiasm*) என்ற உறுப்பே ஆணவம் என்ற தத்துவப் பெயருக்குப் பொருந்துமாறு உள்ளது எனக் கொள்ளலாம்.

கார்ப்பஸ் கலஸம் (*Corpus collosum*) என்ற நீண்ட நெடிய உறுப்பு நம் தலையினுள் பெருமூளையின் இரண்டு கூறுகளையும் இணைத்து நிற்கிறது. இந்த மூளை-இணைப்பான், புனல் வடிவ அமைப்புள்ள பிலத்துவாரத்தின் (*Infundibulam*) வழியாகப்

ஆலமர் கடவுளும் பார்வைக் குறுக்கோட்டமும்

1. பொருள், 2. கண்கள்,
3. பார்வை நரம்புகள்,
4. பார்வைக் குறுக்கோட்டம்,
5. பார்வைப் பாதை



மூளையின் அமைப்பும் இயக்கமும்

1. பெருமூளை
2. சிறுமூளை
3. நடுமூளை
4. தலைமைச் சுரப்பி
5. முகுளம்
6. மூளை இணைப்பான்
7. தாலமஸ்
8. ஹைப்போதாலமஸ்
9. மூன்றாம் நாளம்
10. நான்காம் நாளம்
11. மூளையின் முன்பகுதி
12. மூளையின் பின்பகுதி
13. மூளையின் மையமேற்பகுதி
14. மூளையின் பக்கப்பகுதி
15. பார்வைக் குறுக்கு
16. இணைப்பான்
17. உச்சிக்குழி



பெருமூளையின் உட்பகுதி

1. ஞானப்பால் ஊட்டகம்
2. தலைமைச் சுரப்பி (ஆன்ம அல்குல்)
3. வீரக்கழல் (கண் நரம்பு குறுக்கோட்டம்)
4. மூளை இணைப்பான் (பிச்சாண்டியின் ஆண்மைப் பொலிவு)
5. மூன்றாம் நாளம்
6. பகீரத கங்கை
7. பெருமூளை முன்பாகம்
8. சிறு மூளை
9. முகுளம்

பிட்யூட்டரி (*pituitary*) என்ற தலைமைச் சுரப்பியை நோக்கிச் செல்லுகிறது. இஃது மருத்துவக் குறிப்பு.

பிறை வடிவமுள்ளது மூளை-இணைப்பான் (*Corpus callosum*) அஃது சிவபெருமானின் ஆண்மைப் பொலிவாகத் திகழ்கிறது என்றும், பிட்யூட்டரி என்பது ஆன்ம-அல்குல் என்றும், இவை இரண்டும் பொருந்துவதை ஆண்டவன் - ஆன்மப் பேரின்பப் புணர்ச்சி என்றும் கொள்வது சிவயோக நெறியில் விளைகிற அனுபவ உண்மை.

இத்தகு இறைப்பேரின்பத்தை நுகரவிடாமல், ஆன்மாவைத் தடுத்து, உலகியல் சூழலில் ஆன்மா பிறப்பினை எடுப்பதற்கு வித்தாக இருப்பன, கன்மம் என்ற வினைகளே, ஆகவே பேரின்பத்துக்குத் தடையாக உள்ள பிலத்துவாரம் (*Infundibulam*) என்ற உறுப்பே கன்ம-மலம் (வினை) என்ற தத்துவப் பெயருக்குப் பொருந்தி நிற்பதாகக் கொள்ளலாம்.

ஒரு பசுவின் பால்-மடியைப் போல, பெருமூளைக்கு அடியில் அமைந்துள்ளது பாலூட்டகம் (*Mammillary body*) என்ற அமைப்பு. நம் எல்லார் வீட்டிலும் பெண் குழந்தைகள் உள்ளனர். பெண் குழந்தைக்குப் பிறந்தது முதலே மார்புகள் உள்ளன என்றாலும், பருவம் எய்திப் பூப்படைந்து, திருமணமாகிப் பாலுறவுக்குப் பின்னர், கருவுற்ற நிலையில்தானே பால் சுரக்கிறது? அதேபோன்று, நம் எல்லார் தலையின் உள்ளும் இந்தப் பாலூட்டகம் என்ற அமைப்பு வேறுபாடு இன்றி அமைந்துள்ளது. ஆன்மா தவநெறியில் மேம்பட்டு முதுகந்தண்டின் வழியாகச் சிரசு எனும் சிவ-உலகத்தினுள் நுழைந்தாலும், அப்போது இந்த பாலூட்டகத்தை உராய்ந்து சென்றாலும், சிவ-சீவ சம்பந்தத்தால், சிவஞானமாகிய கரு தோன்றுதற்கான பக்குவம் வரும்போதுதான் ஆன்மாவுக்கு ஞானப்பால் ஊட்டப்பெறுகிறது.

குழந்தைக்குப் பாலினை ஊட்டுபவள் தாய். அஃது ஞானப்பாலாயின், அதை ஊட்டுபவள் நற்றாயாகிய சிவசக்தி. சீர்காழிப் பதியில் திருஞானசம்பந்தருக்கு அன்னை உமையவள் ஞானப்பால் ஊட்டிய வரலாறு யாவரும் அறிந்ததே. ஆயினும், நம் போன்றே சிற்றறிவினர்க்குச் சிவஞானம் தோன்றுகிறவரை ஆன்ம வழியில் குறுக்கிட்டு, ஊனப்பாலை ஊட்டுபவள் செவிலித் தாயாகிய மாயை.

மேலும் உலகியலில் காமம் என்ற மயக்க உணர்வைத் தூண்டுகிற பெண்ணுறுப்புகள் பலவற்றுள் மார்பகங்கள் தனித்

தன்மையோடு விளங்குகின்றன அன்றோ? ஆகவே பேரின்பத் துக்குத் தடையாக உள்ள பாலூட்டகம் (Mammillary body) என்ற அமைப்பே மாயா-மலம் என்ற தத்துவப் பெயருக்குப் பொருந்தி நிற்பதாகக் கொள்ளலாம்.

இங்ஙனம் நம் சிரசினுள் இருக்கும் இம் மூன்று உறுப்பு களையும் முறையே ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங் களோடு பொருத்திக் காணுதல் இயலும். சித்தத்தை ஊழ்வினைப் பதிவேடு என்றும் சித்தமலம் என்பதை முற்கூறிய மூன்று உறுப்புகளின் தடை-ஆற்றல் என்றும் சிந்திக்க வாய்ப்பு உள்ளது.

மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்களுக்குச் சிவபெருமான் தன் திருவடியைச் சிரசிலே சூட்டிச் சித்தமலம் அறுவித்ததும் இங்ஙனம் தானோ!

மறுபிறப்பும் உயிர்களின் இடைப்பட்ட நிலையும்

''வினைகளைச் செய்த உயிர், அவ்வினைகளில் அவ்வப் போது நுகர்ந்தவை போக எச்ச-வினைகளுக்குரிய பயன்களை நுகர்வதற்காக மறு பிறப்பு எடுக்க வேண்டியது நியதி எனக் கூறினீர்கள். அத்தகைய மறுபிறப்பு எங்கு எப்படி அமையும்? தெளிவுறுத்துங்கள். 'ஐயா'' என்றார் குப்புசாமி.

''வினைக்கு ஈடான மறுபிறப்புப் பற்றிச் சைவ நூல்கள் நல்ல பல விளக்கங்களைத் தருகின்றன. உயிருக்குக் கவசமாக ஐந்து உடம்புகள் உள்ளன. இறக்கும்போது, உயிர் ஐம்பூதங் களாலான ஊனுடம்பை மட்டுமே விட்டுப் பிரிகிறது. ஏனைய நான்கு உடம்புகளும் மிகவும் நுண்மையானவை. அவற்றோடு தான் ஆன்மா அடுத்த இடத்தை நோக்கி ஓடுகிறது.

உள்ளிருக்கும் நான்கு கோசங்களுள் மனோமயகோசமும் இந்திரியமயகோசமும் இணைந்த உடம்பினைப் புரியட்டகாயம் (புரி+அட்ட+காயம்) என்பர். அட்டம் என்றால் எட்டு என்பது பொருள். மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று உணர்-கருவி களோடு (அந்தக்கரணங்களோடு), சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்ற ஐம்-புலன்களும் (தன்மாத்திரைகளும்), ஆக எட்டு உறுப்புகளும் சேர்ந்திருப்பதால் புரியட்டகாயம் என்பது இதற்குப் பெயராயிற்று. இவ்உடம்பு வினை வயப்பட்ட ஆன்மாக்கள் யாவர்க்கும் பொது.

தீவினை செய்த உயிர் புரியட்டகாயம் என்ற இந்த நுண் உடம்புகளோடு (சூக்கும தேகத்தோடு) பேயாய் திரியும்; நரகத்தில் துன்பத்தை அனுபவிப்பதற்காக யாதனா சரீரத்தைப் பெறும். (யாதனை=வேதனை) எருமை, காண்டாமிருகம் போன்ற மிருகங்களின் மேல்தோல் பலமான அடிகளையும் தாங்கிக் கொள்ளுமாறு கடினமாக உள்ளது அன்றோ? நல்வினை செய்த ஆன்மாவாயின், சுவர்க்க இன்பத்தை நுகர்தற்காக, இச் சூக்கும தேகத்தோடு தெய்வீக உடம்பையும் (பூதசார உடம்பினைப்) பெறும்; நல்வினை முடியும் வரை அங்குள்ள தேவர்களோடு இன்புற்று வாழும். பசு, மான், முயல் போன்றவற்றின் மென்மையான தோல் அமைப்பினை நினைவிற் கொள்க.

தீவினை செய்த ஆன்மா ஆங்காங்கே நுகர்ச்சி முடிவுற்றதும், அதன் கணக்கிலுள்ள நல்வினைக்கு ஏற்ப, நம்போன்று ஐம்பூத, ஊனுடம்பினைப் பெற்று, மீண்டும் இப்பூமியில் பிறந்து, நால்வகைச் செந்நெறியில் தலைப்பட்டு இறுதியில் சிவப்பேறு எய்தும்''[1] எனக் கொற்றவன்குடி உமாபதிசிவனார் தம் சைவ ஞானநூலாகிய போற்றிப்பஃறொடையில் அறிவுறுத்துகிறார்.

வினை வழிப் பிறப்பும் வாழ்வும்

''இருவினை என்ற வித்திலிருந்து இன்ப துன்பங்கள் எவ்வாறு வளர்ந்து வெளிப்படுகின்றன ஐயா!'' சிவசாமி வினவினார்.

''முன்னர்க் கூறியபடி, 'சஞ்சிதம்' என்பது வினைகளின் தொகுப்பு : அதிலிருந்து, நாம் இப்பிறப்பின் நுகர்ச்சிக்கு என எடுத்துக் கொண்ட வினைப்பகுதி 'பிராரத்தம்' அல்லது 'ஏன்ற-வினை' எனப்படும். அதனையே ஊழ் எனப் பொதுவாக யாவரும் கூறுவர். நாம் முன்னர்ச் செய்த வினைகளின் நன்மை தீமை களுக்கு ஏற்ப இன்பதுன்பங்களை நுகர வேண்டுமன்றோ? எனவே இப்பொழுது, நல்வினை தீவினை என்ற வித்திலிருந்து, இன்பதுன்பமாகிய செடி எவ்வாறு வேர்விட்டுத் துளிர்க்கிறது, எவ்வாறு பூத்துக் காய்த்துக் கனியாகி உரிய பயனைத் தருகிறது என்பனவற்றைக் காண்போம்.

உயிர் என்னும் உணர்வு-ஆற்றலை, உடம்பு என்னும் கூட்டிற்குள் அடைப்பதே பிறப்பு. எந்த உயிரை எங்குப் பிறக்குமாறு

செய்வது என்பதைப் பரம்பொருளாகிய சிவபெருமானே தீர்மானிக்கிறான். அவ்வாறு தீர்மானிப்பதற்கு அவன் சில சீரிய நடைமுறைகளைக் கையாளுகிறான். ஒரு பணியாளை வேலைக்கு அமர்த்து முன் அவனுடைய அறிவுத் திறன், விருப்புடன் வேலை செய்யும் மனநிலை, வேலை செய்வதற்கான உடல் நலன் முதலியவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளுகிறோம் அன்றோ? அதுபோல ஒரு ஆன்மா எந்த அளவுக்கு ஆணவத்தால் கட்டுண்டு அறிவு முடங்கிக் கிடக்கிறது என்பதை இறைவன் எண்ணிப் பார்க்கிறான்.

அந்த உயிரின் முந்தைய உலகியல்-சாதனைகள், இறைமை நோக்கிய மெய்த்தவ நெறிகள் ஆகியற்றிக்கு ஏற்ப, அவ்ஆன்மா நுகர வேண்டியதான செல்வம்-வறுமை, பெருமை-சிறுமை, கல்வி, ஒழுக்கம், கருணை, புகழ், ஏனைய பண்புகளுக்கு ஏற்றவாறு பெற்றோரையும், குடும்ப, சமுதாய, உலகச் சூழல்களையும் முதற்கண் அவனே தெரிவு செய்து கொள்ளுகிறான்.

அந்த முறையிலே தக்கதொரு தந்தை வருகிறார். இறைவன் அந்த ஆன்மாவை ஒரு சிறிய அணுவின் வடிவில், அத் தந்தை உட்கொள்ளும் உணவின் மூலமாகவோ, அவர் குடிக்கும் தண்ணீரின் மூலமாகவோ, அவர் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றின் மூலமாகவோ, அவருடைய விந்துக்குள் சேர்ப்பிக்கிறான். அது அங்குக் கருவாக உரு எடுக்கிறது.

அப்போதே, அச்சிறிய அணு அளவு உடம்பின் சிரசுப் பகுதியில், அந்த ஆன்மாவின் அந்தப் பிறப்புக்கான நுகர்ச்சி-அட்டவணை பதிவு செய்யப்படுகிறது. தந்தையாரின் விந்துவிலும், தாயாரின் கருப்பையிலும் ஆன்மா இங்ஙனம் வளர்ந்து வரும்போதே, வினையாகிய விதையும் கிளைத்து, உடன் வளர்ந்து வருகிறது. ஆதலால்தான், 'விளையும் பயிர் முளையிலே தெரியும்', என்றனர், ஆன்றோர்.

ஒரு செடி எப்போது பூக்கவேண்டுமோ அப்போது பூக்கிறது. அப்பூக்கள் உதிர வேண்டியவை தாமாகவும் உதிர்ந்து விடுகின்றன, காற்றடித்தும் உதிர்கின்றன. எஞ்சியவை எப்போது பிஞ்சாகிக் காய்த்துப் பழுக்க வேண்டுமோ, அப்போது அங்ஙனமே ஆகின்றன. வலிமையற்ற பிஞ்சுகளில் சில இடை இடையே வெம்பி உதிர்கின்றன. இடையில் உதிராது முழுமையான வளர்ச்சிக் காலம் வரை தாய்-மரத்தைப் பற்றி நின்று, அதனதன் பயனைத் தருவனவும் உள. அதே போன்றுதான் வினையாகிய பயிரும்

முளைத்து, வளர்ந்து, பூத்துக் காய்த்துப் பழுக்கும் முறையும் அமைகிறது என அறிதல் வேண்டும். வலிய இயல்புடையனவாய் விடாது தொடர்கிற வினைகளை வல்வினைகள் என்பர்.''

நுகர்ச்சி அட்டவணை

''இடையில் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும். ஐயா, ஏதோ நுகர்ச்சி-அட்டவணை என்று குறிப்பிட்டீர்களே! அஃது என்ன?''- என்றார் சிவசாமி.

''நுகர்ச்சி-அட்டவணை என்பது, வங்கியிலுள்ள பதிவேடு போன்றது. நம் சேமிப்புக் கணக்கில் பணம் செலுத்தும்போதோ, எடுக்கும்போதோ, அத்தொகை அங்கு உள்ள பேரேட்டில் *(Ledger)* நம் கணக்கில் வரவு-பற்று என பதிவு செய்து கொள்ளப் படுகிறது. நாம் செலுத்திய அல்லது திரும்பப்பெற்ற தொகையை நம் கணக்காக, வங்கியின் மேலாளர் ஆணைப்படி, வங்கிக் கணக்கர், வங்கிப் பேரேட்டில் எழுதிக் கொள்ளுவதோடு, நமக்கும் ஒரு சிறு குறிப்புப் புத்தகம் *(Pass-Book/Deposit Receipt)* தருகிறார்.

அதுபோன்றதே நுகர்ச்சி அட்டவணை என்பதும். நாம் ஒவ்வொருவர் செய்யும் வினைகளும் அவரவர் கணக்காகச் சிவசக்தியின் மேற்பார்வையில் நாம் முன்னர்ச் சிந்தித்தபடி, மாயையில் பதிவாகி, அதன் படிகள் உரிய இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அத்தகைய படி ஏடுகளில் ஒன்றுதான் சித்தம் என்ற தத்துவப் பெயரைப்பெற்றுள்ளது. அதனையே விதி ஏடு, தலைவிதி, தலை எழுத்து என்றெல்லாம் கூறுகின்றனர்.

வங்கியில் நாம் செலுத்திய தொகை, பின்னர்க் காலக் கெடுவில் நமக்குத் திரும்பக் கிடைக்கின்றது அன்றோ? அதேபோல் தான், வினை முதிர்வுக் காலத்தில் வினைகளும் தத்தம் பயனைத் தருமாறு சிவசத்தியால் நமக்கு ஊட்டப்பெறுகின்றன.''

சுந்தரரைத் தடுத்தாட்கொள்ளத் திருமண மேடைக்கு ஆவண ஓலையோடு வந்தார் சிவபெருமான். அவரிடமிருந்து அடிமை-ஓலையைப் பறித்துக் கிழித்துவிட்டார் சுந்தரர். பின்னர் ஆன்றோர் கூடிய அவையில், ''அவன் கிழித்தது படி ஓலையே, இதோ என்னிடம் இருக்கிறது மூல ஓலை'' எனக் காட்டிச் சிவபெருமான் சுந்தரரை ஆட்கொண்ட வரலாறும் இங்கு நினைக்கற்பாலது.

சித்தம் - ஒரு பதிவேடு :
அறிவியல் சான்றுகள் (ஹைப்போதாலமஸ்)

சித்தம் என்பது ஓர் எழுதுபலகை. அது, நாம் பண்டு தொட்டு ஈட்டிய வினைகளின் முதிர்ந்த பகுதி முறையாக வரையப் பட்டுள்ள ஒரு கணிப்பானைப் போன்றது. கால நியதிப்படி நாம் நுகரவேண்டிய இன்பதுன்பங்களையும் நலம் கேடுகளையும், ஏற்ற இறக்கங்களையும் அக் கணிப்பானே சுட்டிக் காட்டுகிறது.

அதனைக் கையேடாகக் கொண்டுதான் சிவசக்தி, சிவபெருமானின் ஆணைப்படி, உரிய காலத்தில், உரிய முறைப்படி, உரிய அளவு ஊழின் பயனை நமக்கு ஊட்டுகிறாள். நெல்லைப் பயிரிட்டவனுக்கு நெல்லைப் பரிசளிக்கிறார்; முட்களை முளைக்கச் செய்தவனை அந்த முள்ளிலேயே சிக்க வைக்கிறாள். அவரவர் வினையே அவரவர்க்கு அனுபவம் ஆகிறது. நெல்லும் முள்ளும் வினை ஊட்டத்துக்கு துணைநின்ற இடைநிலைக் கருவிகளே.

சித்தம் என்பது ஓர் ஆவணக்களரி. நுண்ணிய அகக்கருவிகள் நான்கனுள் அதுவும் ஒன்று. மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கு அகக்கருவிகளையும் வடநூலார் அந்தக்கரணம் என்பர். சடமாகிய இவை தாமாக இயங்கும் ஆற்றல் அற்றவை. எனினும், இவை நான்கும் ஒரு சங்கிலியைப்போல் தொடர்-நிகழ்ச்சிகளைச் செய்கின்றன.

அவற்றுள் மனம் என்பது விருப்பு வெறுப்பு உணர்வுகளுக்கு ஆதாரமாக அமைகிறது. மனம் ஒரு பொருளைப் பற்றியதும், ஆன்ம-சிற்றறிவு புத்தி தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு இயங்கி, அப்பொருள் தொடர்பான பிறவற்றை உறுதி செய்கிறது. அகங்காரம் என்ற தத்துவமோ, அப்பொருளை அடைவதற்கான நம் செயல் திறனுக்கு ஊக்கமளிக்கிறது.

நாம் மனத்தால் எண்ணுபவை. வாயால் சொல்லுபவை, உடலால் செய்பவை அனைத்தும் நாம் செய்கிற வினைகளாக, வினைத் தளைகளாக, நம்முடைய சிரசினுள் சித்தத்தில் பதிவாகின்றன. இஃது தத்துவ சிந்தனை. உடற்கூற்று அடிப்படையில் இதன் நிலைப்பற்றிக் காண்போம்.

ஒவ்வொரு மனிதனும் தன் விருப்பு வெறுப்புகளை, எண்ணங்களை மற்றும் நிகழ்ச்சிகளை தன் மனத்தில் ஆழமாக

நினைவுவைத்துக்கொள்ள விரும்புகிறான். மனத்தில் மேலோட்டமாக எழுந்த பற்றுதலை, அவன் தன்னுடைய புத்தியின் மூலம் ஆய்ந்து அறிந்து, அகங்காரத்தின் மூலம் செயற்படுத்த, அஃது ஒரு வினையாகிறது.

அறிவு விளங்காதவர்களும் அரைப் பைத்தியங்களும் தேவையற்ற குப்பைகளை எல்லாம் மூட்டை மூட்டையாகக் கட்டி முதுகில் சுமந்து திரிவதை நாம் தெருக்களில் காணலாம். அதேபோல், மும்மலச் சேர்க்கை காரணமாக, வீண் உலக விவகாரங்களிலேயே தலைப்படுவதும், அவற்றையே ஏராளமான அளவில் நினைவிற் கொள்ள விரும்புவதும், அந்நினைவுகளைச் சித்தம் என்ற பதிவேட்டில் பதிந்து வைத்துக் கொள்ளுவதுமே இந்த உலகத்தில் வாழுகிற பெரும்பாலானோரின் செயலாக உள்ளது. இக்கருத்தினை மாணிக்கவாசகர் செவ்விதே பண்ணிசைக்கக் காணலாம்.

''பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் தனக்குச் செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே! சிவபெருமானே!'' என்பது திருவாசகம்.

மூலப்பதிவேட்டின் படிகள் அண்டவெளியில் 12-இராசி வீடுகளில் தங்குகிற 9-(நவ) கிரகங்களிலும், கோப்பு ஆக்கப் படுகின்றன; அதேபோல், அவ்ஏட்டின் படிகள் நம் உடம்பாகிய பிண்டத்திலும் நம் சிரசினுள் கோப்பிடப்படுகின்றன. நம் தலையினுள் 12 மூளை நரம்புகள் (12 *Cranial Nerves*) உள்ளன. அவை உடம்பிலுள்ள (9) நவதுவாரங்களையும் 12-மார்பு நரம்புகளையும் (12 *Thorax Nerves*) சீராக இயக்குகின்றன.

சித்தம் என்பது உள்மனம், இதனைப் பாலது ஆணை என்பார் தொல்காப்பியர். பால் என்பது வினைக்கான குறியீட்டுச் சொல், தத்துவநூலாரோ இதனைப் பிரிவுபடாத முக்குணங் களின் கூட்டம் (அவ்வியக்க குண சரீரம்) - என மொழிவதோடு, பிறப்பு, வாழ்வு, இறப்பு ஆகியவற்றிற்கு மூலமான, பிரகிருதி மாயை/மூலப்பிரகிருதி என்றும் கூறிப் பலவாறாகப் பொருள் விளக்கமும் கொடுப்பர்.

ஒவ்வொருவரின் விழைவு, அறிவு, செயல்களிலும் வேறு பாடுகள் இருப்பதால் சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் முதலிய அறிவுப் புலன்களிலும், கை கால் முதலியவற்றின் செயற்

பாட்டிலும், மனம் முதலிய உணர்-கருவிகளிலும் மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகளும், தனித்தன்மைகளும் உளவாகின்றன.

தலை எழுத்து என்றது எவ்வாறு பொருந்தும்?

சித்தம் என்பது நம் சிரசினுள் இருக்கும் பதிவேடு. அது நம் சிரசினுள் பெருமூளையின் அடியில் இயைபுற அமைக்கப் பட்டுள்ளது. அஃது ஆன்மாவைப் பந்தித்துள்ள ஆணவத்தின் அடர்த்தி, ஆன்மா நுகர வேண்டிய வினைத் தொகையின் அளவு, ஆன்மாவுக்கு மாயையின்பாலுள்ள மயக்கத்தின் வரம்பு - ஆகியவற்றின் குறிப்பேடு ஆகும்.



1. பெருமூளை - சிவன்
2. சிறுமூளை - சத்தி
3. நடுமூளை - கந்தன்
4. முகுளம் - கந்தன்
5. மூளை இணைப்பான் - பிச்சாண்டி
6. பிட்யூட்டரி - ஆன்மஅல்குல்
7. மூன்றாம் நாளம்
8. மூளைநீர் - ஆகாயகங்கை
9. நான்காம் நாளம் - பகீரத கங்கை
10. ஹைப்போதாலமஸ் - தலை எழுத்து

நம் தலையினுள் அமைந்திருப்பதால் அதனைத் தலைவிதி என்றும், தலைஎழுத்து (*Destiny/Fate*) என்றும், ஊழ்வினை களின் பதிவேடு என்றும் கூறினர். நியதி என்றும் பால்-என்றும் இது சித்தாந்திகளால் அறிவுறுத்தப்பெறுகிறது.

இதனை உடற்கூற்றியல் அறிவியலார் தாமரைக் காம்பு (ஹைப்போதாலமஸ்) என அழைப்பர். உடற்கூற்றியலில் இது

எவ்வாறு நம் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது எனக் காண்போம்.

பெருமூளையின் இரு கூறுகளிலிருந்தும் ஏராளமான ஊட்டச் சத்து நீர்கள் (*Hormones*) ஊறுகின்றன. அவை தலைமைச் சுரப்பி (*Pituitary, the master-gland*)யினுள் முறையாகச் சேர்ந்து, உடலுக்கும் உள்ளத்துக்கும் வளம் கொணர்தல் வேண்டும். அவை அவ்வாறு செய்வதற்கு வழிகாட்டியாக இருப்பதும், செய்ய முடியாதவாறு தடையாக இருப்பதும் இத்தாமரைக் காம்பே.

நமது உடல் வளர்ச்சி, உள்ளத்து எழுச்சி, அறிவின் முதிர்ச்சி, புணர்ச்சி வேட்கை, புனர் உற்பத்தி முதலிய மாபெரும் செயல்கள் எல்லாம், சிறிய பட்டாணி அளவேயுள்ள தலைமைச் சுரப்பி யிலேதான் நிர்ணயிக்கப்படுகின்றன; என்றாலும், இத் தலைமைச் சுரப்பியும் தான் செயல்படுவதற்கான நெறி முறைகளைத் தனக்கு மேலே அமைந்துள்ள தாமரைக்காம்பி (*Hypothalamus, the slate of destiny*)லிருந்துதான் நேரடியாகப் பெறுகிறது. ஆன்மச் சிற்றறிவின் உயர்வு-தாழ்வுகளையும், இருவினைக்குரிய இன்பதுன்பங்களையும் நிர்ணயிப்பதில் சிவசக்திக்குக் கை-ஏடாக (*a personal file with the Divine verdict*)த் துணை நிற்பது இதுவே.

நாம் ஆணைத்தானமாகக் கருதுகிற பிட்யூட்டரி, தனக்குக் கீழுள்ள சுப்பிகளுக்கும் பிறவற்றிற்கும் உயிர்ப்பு ஆற்றல்களை அனுப்பும்போது, ஹைப்போத்தாலமஸ் என்ற உறுப்பிலிருந்து ஆணைகளைப் பெற்றுக்கொள்கிறது என மருத்துவ அறிஞர்களும் கூறுகின்றனர். ஆகவே, ஹைப்போத்தாலமஸ் என்ற மூளைப்பகுதியைச் சித்தம் (வினைப் பதிவேடு) எனக் கொள்ளுதல் முற்றிலும் பொருந்தும்.

பிராரத்தம் என்ற ஊழ்வினைகளின் இன்பதுன்பப் பயன்களை நாம் எப்பொழுதெல்லாம் எந்த அளவில் யார்யார் மூலம் நுகரவேண்டும். எவ்வெவ்வாறெல்லாம் எதிர்கொள்ள வேண்டும் என்ற கால நியதிகளின் கணிப்பானே இந்த ஹைப்போதாலமஸ் என்னும் நுண்கருவி.

சிவத்தையே முழுக்க முழுக்கச் சார்ந்து, சிந்தித்துச் செயலாற்றுகிற சீலமிகு உயிர்களுக்கு நுகர்ச்சியால் ஊழ்வினை

கழிகிறது. ஆகாமியம் என்ற புது வினைகளும் ஏறுவதில்லை. ஆதலால் கால அடைவில் வினைத்தொகை நீங்கிய நிலையில் ஹைப்போதாலமஸ் என்ற இப்பதிவேடு முற்றிலுமாகத் தூய்மையுறுகிறது.

சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன், என்பார், மணிவாசகரும். சித்தத்தினுள்ளே சிவம் ஒன்று மட்டுமே நிறைந்திருந்தால், ஊழ்வினைக்கு இடம் ஏது?

ஊழில் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான் முந் துறும் (குறள் - 380)

என ஓரிடத்தில் வினவிய வள்ளுவரும்,

ஊழையும் உப்பக்கம் காண்பர், உலை(வு) இன்றித்
தாழாது உஞற்று பவர் (குறள் - 620)

எனப் பிறிதோரிடத்தில் விடை பகர்கிறார்.

திருந்து சாத்துவிகம்

தில்லைக் கூத்தன் திருநடனத்தில் ஒன்றிநின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நிலையைக் 'குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமாக' எனச் சேக்கிழார் பண்ணிசைக்கிறாரே. அதில் 'திருந்து சாத்துவிகம்' என்பதை விளக்கி அருளுங்கள் ஐயா' என்றார் சிவசாமி.

''மலக்கட்டுகளால் கீழ்மைப்பட்டுக் கிடக்கும் நிலையில் நாம் பல்லாற்றானும் வேறுபட்டுக் கிடக்கிறோம். கால அடைவில் திருவருள் துணைநிற்க உண்மையான அன்பு நம் உள்ளத்தில் சிறிதுசிறிதாக வளர்கிறது. சாத்துவிகம் என்ற அமைதிக் குணம் மேலோங்குகிறது. பிற உயிர்களுக்கு ஊறு செய்யாமல், இயன்றவரை துணைநின்று சாத்துவிக குணத்தோடு வாழ வேண்டியது நம் கடமை எனும் உணர்வு வளர்கிறது.

உலக வாழ்வில் இங்ஙனம் நாம் அமைதியை நாடநாட நம் உள்ளம் பண்புறுவது சாத்துவிகம் எனப்படும்.

இத்தகைய அமைதிக்கு வித்திட்டு நம்மைச் செந்நெறியில் ஆற்றுப்படுத்திக்கொண்டிருக்கும் இறைவன்பால் நன்றி உணர்வு பெருகுகிறது. கால அடைவில் ஒன்றிய சிந்தையராய் இறைவனை வழிபடத் தலைப்பட்டு அறிவானந்தத்தில்

திளைக்கிறோம். அத்தகு இறைமை இன்பத்தில் திளைத் திருப்பதாய சாத்துவிகமே 'திருந்து சாத்துவிகம்' ஆகும்.

இங்ஙனம் உயிர்கள் வெவ்வேறு வகையான வினைகளைச் செய்வதற்கும் முந்தைய வினைப்பயன்களை நுகர்வதற்கும் முக்குணங்கள் துணைக்கருவிகள் ஆகின்றன. முன் வினை களின் பயன்களை நுகரும்போது ஏற்படுகிற விருப்பு வெறுப்புகள் செயல்கள் யாவும் புது வினைகளாகி மறுமறு பிறப்புகளுக்கு வித்தாகின்றன. அங்ஙனம் நிகழாமல் பார்த்துக் கொள்ளுவதே அறிவுடைமை''.

நான்காம் இயல் முற்றிற்று

இயல் - 5

ஊழில் பெருவலி யாவுள?

(வினை வகைகள்)

''நம் ஒவ்வொருவர் உயிருக்குள்ளும் கடவுள் இருக்கிறார் எனக் கூறப்படுகிறது; உயிரின் உள்ளே இருக்கும், நமக்கு அமைந்த உடம்பிலும் பரவிநின்று, உயிருக்கு உடனாக உறைகிறார் என்றும் பேசப்படுகிறது; அம்மட்டோ! உயிர், உடம்பு இவ் இரண்டின் உள்ளே மட்டுமின்றி, உயிரின் வேறாக, வெளியேயும் நீக்கமறப் பரவியுள்ளார் என்பதும் சைவ- சிந்தாந்தத்தில் அறிவுறுத்தப் பெறுகிற அத்துவிதக் கொள்கை'' என்று கூறினீர்கள்.

கடவுள் இத்துணை பாதுகாப்பினை அருளிக் கொண்டிருக்க, ஊழினைப் பெருவலி உள்ளதாகக் கொள்ளுவது முரண்பாடு அல்லவா? ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

''சிந்தனைக்குரிய மிகச் சிறந்த வினாவினைக் கேட்டிருக்கிறீர்கள்; வாழ்த்துக்கள்! தாங்கள் நினைவுறுத்தியதுபோல் சிவபெருமான் உயிருக்கு உள்ளே ஒன்றாகவும், துணையாகி உடனாகவும், புறத்தே பரவி வேறாகவும் நின்று, உயிரோடு அத்துவிதமாக உள்ளார் என்பது முற்றிலும் உண்மையே; ஆயினும் நமக்கு அவர் அருளும்போது தம் இச்சைப்படி இயங்குவதில்லை; நம் ஒவ்வொருவரின் முந்தைய விருப்பு, வெறுப்புகள், செயற்பாடுகள், சிந்தனைகளைக் கையேடாகக் கொண்டுதான் செயற்படுகிறார்; ஏனெனில் வினைகள் நுகர்ந்து கழிக்கப்பட்டால் தான் ஆன்மா இன்றைய அவலச் சூழலிலிருந்து விடுபட முடியும்.

நமக்கு ஏதேனும் இன்பம் நிகழ்கிறது; அப்போது மட்டும், ''நான் அன்றுச் சிறப்பாகச் செய்தேன் அல்லவா? அதற்குரிய பயன் இது'' எனப் பீற்றிக் கொள்ளுகிறோம்.

காலம் மாறுகிறது; துன்ப மேகங்கள் சூழ்கின்றன. அப்போது நம் போன்றோர் நம்முடைய முந்தைய செயல்களை எண்ணிப் பார்ப்பதில்லை. முன்வினையை ஏற்கவும் மறுக்கிறோம்; நம் முந்தைய செயல்களுக்கெல்லாம் நியாயம் கற்பிக்கவும் முற்படுகிறோம், ''கடவுளே! இத்துணை துன்பங்களைத் தந்திருக்

கிறாயே! உனக்குக் கண் இல்லையோ? '' என்று கூட நம்மில் பலர் ஏசத் தலைப்படுகின்றனர்.

ஆனால் மெய்யுணர்வாளர்களின் நிலை முற்றிலும் வேறு விதமானது. அவர்கள் தத்தம் வினைகளுக்கான பயன்களையே இறைவன் தமக்கு ஊட்டுகிறான் எனத் தெளிவாக உணர்வர். சைவ இலக்கியங்களாகிய தேவார திருவாசகங்களிலும் இக்கருத்து சிறப்புற உணர்த்தப் பெறுகிறது. கடுமையான வயிற்று வலியினால் துன்புற்ற அப்பரடிகள் மெய்யுணர்வு மிக்கவர். அவர் இறைவனை நோக்கி மனமுருகிப் பாடுகிறார்.

''கூற்றாயின வாறு விலக்ககிலீர்,
கொடுமைபல செய்தன நான் அறியேன்.
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்,
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே''

(தேவாரம், திருவதிகை வீரட்டாணம் - 1)

வயிற்றோடு துடக்கி முடக்கியிட... சுடுகின்றது சூலை... வலிக்கின்றது சூலை... ஆற்றேன் அடியேன்... கொடுமை பல செய்தன யான் அறியேன்... கூற்றனைய இக்கொடுநோயி லிருந்து அடியேனைக் காத்தருளும்''--- என்றெல்லாம், உடலும் உள்ளமும் துடிதுடிக்கப் பாடி, அதிகைக் கெடில வீரட்டானத்தில் உறையும் பெருமானை இரங்கித் துதிக்கிறார், அப்பர் அடிகள்.

அதேபோல் சுந்தரரும்,'' முந்திச் செய்வினை இம்மைக் கண் நலிய, மூர்க்கனாகிக் கழிந்தன காலம்'' எனப்பாடி, இறைவனிடம் இரந்து நிற்பார். (7-60-4)

ஒருவன் பழத்தைக் கத்தியினால் வெட்டுகிறான்; சிறிது நழுவுகிறது; கத்தி கையைக் கீறுகிறது, இரத்தம் பீரிடுகிறது; கடுப்பும் மிகுதியாகிறது; இன்பத்தைச் சுவைக்க விரும்பியவன், துன்பத்தால் துவளுகிறான். முறையாகச் செயல்பட்டிருந்தால், கத்தியோ, பழமோ, கையில் நழுவி இருக்காது, இது செயலில் அக்கறை இன்மையால் விளைந்த குறைபாடு என்பர் நூலறிவு மட்டுமே உடையோர். ஆனால் நுண்ணறிவும் மிக்க வள்ளுவர்

(குறள் 380) போன்றோர், இதற்கான காரணத்தைத் தெளிவுபடக் கூறுவர்;

ஊழில் பெருவலி யாவுள மற்றொன்று,
சூழினும் தான் முந்துறும்! (குறள் - 380)

என்று. 'ஊழினும் மிகுதியான வலிமையுடைய பொருளும் உளதோ?' என்று வியக்கும் அளவுக்கு ஊழ் பெருவலியுடையது. கருவிகளாலோ, வேறு வழி முறைகளாலோ ஊழைத் தவிர்க்க முயன்றால், ஊழ் அவற்றை எல்லாம் முந்திக் கொண்டு தன் ஆற்றலை அக்கருவிகளின் மூலமாகவே வெளிப்படுத்தவும் வல்லது.'' - என்பது இக்குறளின் கருத்து.

ஈ, கொசு மற்றும் நச்சுக் கிருமிகள் பலவாறு நோயினைப் பரப்பி ஊறு விளைவிப்பன. அவற்றைக் கொல்வதில் பிழை இல்லை; அப்பாவியானஆடும், மாடும், கோழியும், புறாவும் என்ன கேடு செய்தன? அவற்றைக் கொல்லுவது பாவமாகும்; போர்க்களத்தில் எதிரி ஆட்களை வீழ்த்தி மாய்ப்பது வீரம் ஆகலாம்; ஆனால் சமூக இயல்பு வாழ்வில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை, அவன் எதிரியேயானாலும், கொலை செய்வது குற்றமாகும்; அதிலும் அன்பிற்கினிய அன்னையையோ, தந்தையையோ கொல்லுவது கொடிதினும் கொடிய கொடுஞ் செயல் ஆகும்.

மனிதன் செய்த / செய்கிற வினைகளின் ஆற்றல் இவ்வாறெல்லாம் வேறுபடுகின்றதன்றோ? ஆகவே, நுகர வேண்டிய இன்பதுன்பப் பயனும் வினைக்குச் சம அளவு ஆற்றல் உடையதாகவே இருக்கும். அதிலிருந்து யாரும் எவ் வகையாலும் தப்பிக்க முடியாது. அதுவே ஊழின் பெருவலி!

ஊழின் வலிய பிடியில் சிக்கியோரிடம் எத்துணைதான் பக்தியும் வழிபாடும் இருந்தாலும், கடவுள் கூட அந்த நுகர்ச்சி நேரத்தில் தம்மைத்தாமே மறைத்துக் கொண்டுவிடுவார்.''

'சற்று வியப்பாகவே இருக்கிறது, ஐயா!' என்றார் குப்புசாமி.

''ஆம், உண்மைதான். மருத்துவரின் மிக நெருங்கிய நண்பருக்கு நோய் கண்டது. இப்போது அவர் நண்பர் அல்லர், ஒரு நோயாளி, மருத்துவர் அன்பு உள்ளம் கொண்டவராகவும், அரிய நட்புடையவராகவும் இருக்கலாம்; ஆயினும் தன் நண்பர் நோய் நீங்கிக் குணமாக வேண்டும் என்பதிலேயே

அவர் கருத்தாக இருப்பார் அன்றோ? ஆகவே நோயாளியை மயக்க நிலையில் கிடத்தியாவது அவர் அறுவை சிகிச்சை முதலியன செய்கிறாரே!

அந்த மருத்துவரைப் போன்றவர்தான் வைத்தியநாதனாகிய சிவபெருமானும். அவர் நம்மை வலிதே பிணித்துள்ள 'ஊழ் - வினையாகிய நோய்'தனை நீக்குவதற்காகத் தம்மைத் தாமே மறைத்துக்கொண்டு, 'இன்பதுன்பங்க'ளாகிய ஊசியைப் போட்டுச் சிகிச்சை செய்கிறார். அப்போது கடவுள்பாலுள்ள அன்பை விடவும் ஊழின் வலி பெரியதாகிறதன்றோ?

கள்ளச்சாராயம் காய்ச்சிப் பெரும்பொருள் ஈட்டியவன் கருப்புசாமி; அவன் விற்ற சாராயத்தின் நச்சுத் தன்மையால் பாதிக்கப்பட்டோர் பலர்; அவன் பலருடைய வயிற்றைக் கெடுத்தவன்; பலர் கண்ணொளி இழக்கக் காரணமானவன்; உயிரையும் குடித்தவன். ஆயினும் பணபலத்தால் அரசு அதிகாரி களையும், ஆள்-பலத்தால் எதிரிகளையும் சரிகட்டி, அவ்வப்போது தண்டனைகளிலிருந்து தப்பிவந்தான். பாதிப்புக்கு உள்ளான நல்லவர்கள் பலரும் ''அவனுக்கு ஆண்டவன்தான் கூலியைக் கொடுக்க வேண்டும்'' என ஏங்கி நின்றனர்.

நச்சுச் சாராயத்தால் நாட்டைக் கெடுத்தவனுக்கு நச்சுக் கிருமிகளாலேயே உயிர்போக வேண்டும் என்பது நியதிபோலும்.

ஒருநாள் அவனுக்கு வாந்திபேதி கண்டது. அவன் அனுப்பிய ஆள் கடையிலிருந்து மருந்துவாங்கி வந்தான். அதை உட்கொண்ட சிறிது நேரத்திலியே கட்டுக்கு அடங்காத பேதியால் கண்ணொளி மங்கியது, நாக்கு உளறியது, உடம்பு நடுங்கியது, உயிரும் பிரிந்தது. காரணம் அவனுடைய ஆள் வாங்கிவந்தது பேதியை நிறுத்தும் மருந்தன்று; பேதி ஆவதற்கு (மலச்சிக்கலைத் தவிர்ப்பதற்கு) உள்ள மருந்து.

ஊரை வஞ்சித்து அவன் பொருள் சேர்த்தான்; ஊழ் அவனைத் துரத்தியது; அந்த ஊழை வெல்ல மருந்து உண்டான்; ஆனால் அந்த வலிய ஊழ் அவன் உட்கொண்ட மருந்தின் மூலமே தன் திறனை முன்னின்று காட்டிவிட்டது. தெய்வப் புலவரின் வாக்குத் தான் எத்துணை உண்மை!

வீரப்பன் என்ற ஒரு செல்வந்தன், போதைப்பொருள் கடத்தலால் பெரும்பொருள் ஈட்டியவன். மற்றவர் நல்வாழ்வைப்

பற்றி அவன் கவலைப்பட்டதே இல்லை. அவனுக்கு மட்டும் ஊழ் விதிவிலக்கா என்ன? அவன் போதைப் பொருள் கடத்தினான்; ஊழ் அவனுடைய உயிரையே கடத்தியது! அஃது ஒரு வியத்தகு விபத்து!

அகலமான நெடுஞ்சாலை, போக்குவரத்துக்கூட அதிக மில்லை, காலை நேரம், விலை உயர்ந்த மகிழ்வூர்தியில் பயணம், ஓட்டுநரும் அனுபவமிக்கத் திறமைசாலி, ஆயினும் எருமை களை ஏற்றிக்கொண்டு எதிரே வந்த பளுவூர்தி (லாரி) நேருக்கு நேர் வந்து மகிழ்வூர்தியில் மோதியதே, அது தான் விதி, அந்த மகிழ்வூர்தியே அவனுக்கு மரணப்படுக்கையாயிற்றே, அதுதான் ஊழின் வலிய தன்மை.

கப்பலில் சரக்கு வரும்; வளமாக வாழலாம் எனக் கனவு கண்டு காத்திருந்தான் வணிகன் ஒருவன். தொலைபேசிமணி அடித்தது, ஆவலோடு ஹலோ! சொன்னான். செய்தி சொன்னார்கள், 'கப்பல் நடுக்கடலில் கவிழ்ந்துவிட்டது' என்று. கோடிஸ் வரனாக வாழ நினைத்தவன் குடிசைக்கு மாறினான். இதுவே விதியின் விளையாட்டு. இதனைத் திருவள்ளுவர் நயமுறக் கூறுவார்;

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை (குறள் - 372)

ஒருவன் எத்துணை அறிவுடையவனாக இருந்தாலும், கைப் பொருளை இழப்பதற்கு ஏதுவாகிய ஊழ் (இழவு - ஊழ்) வந்துற்றால், அஃது அவனைப் பேதையாக்கிக் கைப்பொருளை இழக்குமாறு செய்யும்; ஆக்க - ஊழ்வரினோ, மழுங்கிய அறிவினனுக்குங்கூட மாடு, மனைகள் பலவும் வந்து குவியும்' என்பது கருத்து,

''வினைகளே பிறப்புக்கு வித்து; அவரவர் வினைவழி அவரவர் இன்பதுன்ப அனுபவங்கள்'' - என்பன போன்ற பல அரிய கருத்துக்களை 'மிகத் தெளிவாக எங்களுக்குக் கூறினீர்கள் அவை எல்லாம் வாழ்வியல் வழிகாட்டி என்பதைப் புரிந்து கொண்டோம். மிகவும் நன்றி, ஐயா! மேலும் சில ஐயங்கள்.

''வினை என்பது என்ன? எத்தனை வகை? எப்போது ஏன் ஆன்மாவை வினை பற்றியது? விளைவுகள் எத்தன்மையன?

பிடியிலிருந்து தப்புவதற்கு வழிகள் யாவை? அவற்றை விளக்கியருள வேண்டும்'' என விண்ணப்பித்தார் சிவசாமி.

''சைவசித்தாந்த அருளாளர்கள் வினைக்கோட்பாட்டை மிகத்தெளிவாக வகுத்தும் தொகுத்தும் விரித்தும் நோக்கி யுள்ளனர், அவற்றை சிந்திப்பது மன அமைதியும், உயரிய பண்பாடும், மெய்ப்பொருள் பற்றிய அறிவும் வளரப் பெரிதும் துணையாகும்'' - எனக்கூறி அவர்கட்கு விளக்க முற்பட்டேன்.

வினைகளின் இயல்பினைக் கூறிய தொல்காப்பியர், அவ்வினையால் கட்டுண்ட ஆன்மாக்களுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள அத்துவிதக் கூட்டத்தின் இயல்பை வேற்றுமையியலில் உரைக்கிறார்;

வேற்றுமை தானே ஏழுஎன மொழிப,

(சொல். வேற்றுமையியல் - 62)

விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே

(சொல். வேற்றுமையியல் - 63)

வினை-நுகர்ச்சிக் காலத்தில் (ஆன்மா) தன் உடம்பிலுள்ள ஆறுஆதாரங்களிலும், வினை நீங்கியபோது, சஹஸ்ராரம் என்ற நிராதாரத்திலும், மும்மலங்களும் முற்றிலுமாகக் கழிந்தபோது, தலை - உச்சிக்குமேலே 12 - அங்குல உயரத்திலுள்ள மீதானப் பெருவெளியிலும், - ஆக எட்டு இடங்களிலும் பரசிவத்தோடு ஆன்மா அத்துவிதமாகக் கூடியுள்ள உண்மையைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

பந்தபாசம்

பந்தம் என்றாலும் பாசம் என்றாலும் கட்டுதல் என்பது பொருள். அன்பு மலரால் பிணித்து நிற்பது பந்தம், வலிய கயிற்றால் கட்டிப்போடுவது பாசம்.

ஈண்டுப், பந்தபாசம் என்பது ஒரு கணவன் தன் மனைவி யிடமோ, குழந்தைகளிடமோ, உற்றார் உறவினரிடமோ, சமுதாயத் தினிடமோ கொள்ளுகின்ற அன்பினைக் குறிப்பதன்று. அன்பு என்பது வேறு; பந்தபாசம் என்பது வேறு, குழந்தை முதலியோரிடம் கொள்ளுகிற அன்பு, இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட ஓர் ஆன்ம நியதி; தவிர்க்க முடியாத, தவிர்க்கக் கூடாத ஒரு கடமை.

ஆனால், இதனில் வேறாக, ஒவ்வொரு ஆன்மாவையும் தனித்தனியே பற்றி நின்று, அவலத்திற்கு இழுத்துச் செல்லுகிற

மூன்று பொருள்கள் உள்ளன. அவற்றை மும்மலங்கள் என்பர் ஆன்றோர். அவற்றுள் ஒன்றுதான் ஆணவம், அதை முன்னர்ப் பார்த்தோம். அதன் சார்பால் நாம் பலப்பல காரியங்களைத் தன்முனைப்போடு செய்கிறோம், அவையே நமக்கு வினையா கின்றன. அவ்வினைகளே இறைவனிடமிருந்து நம்மைப் பிரித்து உலகியலில் கட்டி வைப்பதாலும், மறுமறு பிறப்புக்கு வித்தாவதாலும் அதுவும் ஒருபாசமே. அதனைக் கன்ம மலம் என்பர். ஆணவம், கன்மம் என்ற இவ்இரண்டு பாசங்களி லிருந்து நம்மை விடுவிக்க வந்தது, மாயை என்ற மற்றொரு பொருள். அது, நாம் நன்னெறியில் ஆற்றுப்படுவதற்காக இறைவனால் தந்தருளப் பெற்றது என்றாலும், அவ்வப்போது மயக்க உணர்வினையும் நல்குவதால், அதனையும் பாசங்களுள் ஒன்றாகவே கருதுவது மரபு.

உலகத்து பொன்னும், பொருளும், போகமும், பிறவும், மாயையிலிருந்து வெளிப்படுவதால் இவற்றை மாயேயம் என்றும், மாயா காரியம் என்றும் கூறுவர். இவை அனைத்தும் ஆன்மாவைப் பெரிதும் கவர்ந்து, இறை பேரின்ப நுகர்ச்சிக்குத் தடையாவதால், மாயாகாரியம் என்ற இவற்றையும் பாசங்களுள் ஒன்றாகக் கொள்ளுவர்.

மும்மலங்கள் நீங்கும் வரை இவற்றை எல்லாம் மறைந்து நின்றே ஊட்டுகிறாள் சிவசத்தி, அப்பொழுது அவளுக்குத் திரோதாயி (மறைப்பு ஆற்றல்) என்பது பெயர்.

மறைத்தல் தொழில் ஏன்?

''சிவசத்தி மறைந்து நின்று செயற்படுவதாகக் கூறுகிறீர் களே, பேராற்றல் உள்ள அவள் ஏன் மறைந்து நின்று செயற் பட வேண்டும்? என்பதன் உண்மையை விளக்கியருள வேண்டு கிறேன்' என்றார் சிவசாமி.

'நல்லதொரு வினாவை எழுப்பியுள்ளீர்கள்; மகிழ்ச்சி எனக்கூறி விளக்க முற்பட்டேன்,

தெருவில் ஓடிஆடி விளையாடிக் கொண்டிருக்கிறது குழந்தை. அதன் தந்தையார் சீருடை அணிந்து அலுவலகத்துக்குப் புறப்படுகிறார். குழந்தை அவருக்கு ஒரு முத்தம் கொடுக்க விரும்புகிறது; ஆசையோடு அவரை நோக்கி ஓடிவருகிறது. ஆனால் தடுத்து நிறுத்துகிறாள் அன்னை. காரணம், என்ன

அக்குழந்தையின்பால் அவளுக்கு வெறுப்பா? இல்லை, இல்லை. அக்குழந்தையிடம் அளப்பரிய அன்பு கொண்டவள் அவள். குழந்தையை அவள் தடுத்த காரணம், அக்குழந்தையின் கைகால், ஆடைகள் அனைத்தும் ஒரே அழுக்கு.

அதேபோல்தான், மாசுகள் நிறைந்த ஆன்மாவை ஆண்டவனின் பால் செல்லவிடாமல், அன்னை சிவசத்தியே ஒரு தடையாக நிற்கிறாள்; ஆகவே, அவளையும் திரோதான சத்தி (மறைப்பு ஆற்றல்) எனக் கொண்டு, பாசங்களில் ஒன்றாகவே கருதுவது மரபு,

குழந்தையை அன்னை குளியலறைக்கு இட்டுச் சென்று, அழுக்குகளைக் கழுவித் தூய்மை செய்து, அதன் பின்னர்த் தந்தையிடம் சேர்க்கிறாள்; அதேபோன்றுதான் சிவசத்தியாகிய அன்னையும் சத்திநிபாதம் என்னும் திருஅருட்பொழிவால் ஆன்மாக்களின் மாசுகளைக் கழுவித் தூய்மை செய்த பின்னர்த் தானே முன்னின்று சிவத்திடம் சேர்ப்பிக்கிறாள். மறைப்பு ஆற்றலாக இருந்த அவளே அருளாற்றலாகிக் கருணை பாலிக் கிறாள். சிவபரமாகிய மெய்ப்பொருளைக் காணவொட்டாது, ஆன்ம அறிவினை அலைக்கழிக்கும் அத்துணையுமே பாசம் (தளை, கட்டு, தடை) என்பது அறியற்பாலது. இறைமை உணர்வு அல்லாத பிறவற்றிலேயே உயிர்களைக் கட்டிப் போட்டுத் தன்வயப்படுத்துவதால், இவற்றைத் தளை என்றும், கட்டு என்றும், மலம் என்றும், சைவஞான நூல்கள் கூறும்.

இங்ஙனம் பேரின்பத்திற்குத் தடையாக உள்ள பாசங்கள், முற்கூறிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களோடு, மாயேயம், திரோதாயி இரண்டும் சேர்த்து ஐந்து ஆயின. அவற்றுள் நாம் ஈண்டுச் சிந்தித்துக் கொண்டிருப்பது, கன்ம மலம் என்னும் வினை பற்றியேயாம். அவ்வினையை நாம் செய்வதற்கு மற்ற நான்கும் ஊக்கிகளாக இயங்குகின்றன.

மற்றொரு நிகழ்ச்சியைக் கொண்டும் இதனைச் சிந்திக்கலாம். நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு மருத்துவர் ஊசிபோட்டும் கட்டி போன்றவற்றை அறுத்தும் சிகிச்சை செய்கிறார். அப்போது அக்குழந்தையின் அன்னை எத்துணைதான் அன்புடையவளாக இருந்தாலும், மருத்துவரின் செயலில் குறுக்கிடுவதில்லை. மாறாக அவளே மருத்துவர் கேட்டபடி ஊசியையும் மருந்து

களையும் வாங்கிக் கொடுத்து அவருக்குத் துணை நிற்கின்றா ளன்றோ? அதற்கு காரணம் என்ன? அக்குழந்தைக்குச் சிறு துன்பத்தைக் கொடுப்பதன் மூலம், அதை மிகப்பெரிய ஆபத்திலிருந்து காக்க வேண்டுமென்ற கடமை உணர்ச்சியும், அக்குழந்தையின் பால் அத்தாய்க்கு உள்ள அளப்பரிய அன்பும், கருணையுமே அன்றோ?

மருத்துவர் தன் விருப்பத்துக்கோ, நோயாளியின் விருப்பத்துக்கோ மருந்து கொடுத்தில்லை; நோயின் வன்மை மென்மைகளுக்கு ஏற்பவே சிகிச்சை செய்கிறார். நோய் நீங்கி விட்டால் ஒருவன் தன் விருப்பப்படி வாழ முடியுமன்றோ?

நாமெல்லாம் மும்மலக் கிருமிகளால் பிறவி என்னும் பிணியில் இன்பதுன்பங்களை நுகர்ந்து கொண்டிருக்கும் நோயாளிகள். நம்மை இப்பிணியிலிருந்து விடுவிப்பதற்காகவே, இறைவன் வைத்திநாதராகவும், அம்மை தையல்நாயகியாகவும் தோன்றுகின்றனர். மறைந்திருந்தே, மருத்துவ சோதனையும் வைத்திய சிகிச்சையும் செய்கின்றனர். 'தீரா நோய் தீர்த்தருள வல்லான்' வைத்தியநாதன், -எனப் பண்ணிசைப்பார் அப்பரடிகள்.

உலகியல் நடைமுறையில் சட்டங்கள் இயற்றப்படு கின்றன. நீதி மன்றங்களால் அச்சட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன அன்றோ? அதே போன்றுதான் வினைக்கு ஏற்ற இன்பதுன்பப் பயனும் அவற்றின் நுகர்ச்சியும் இறைவனாலேயே நியதியாக்கப்படுகின்றன.

இறைவனாலேயே உருவாக்கப்பட்ட நியதிகளை அவனே மாற்றவும் முடியும்; ஆயினும் அவ்வாறு மாற்றுவதை ஒரு சிறப்பு விதியாகக் கொள்ளலாமேயன்றி, எல்லா நியதிகளையும் எல்லாக் காலங்களிலும் எல்லா ஆன்மாக்கள்பாலும் மாற்றிக் கொண்டே இருப்பது எவ்வாறு நீதியாகும்?

சிறையில் ஆயுள் - கைதிகளுக்குங்கூட நன்னடத்தை காரணமாகவும், காந்தி அடிகள் நூற்றாண்டு விழா, சுதந்திரதினப் பொன்விழா போன்றவற்றை ஒட்டியும் தண்டனைக்காலம் குறைக்கப்படுவதைக் காணுகிறோமே!

அடுத்து, ஓர் அன்னை மற்றொரு விதமாகவும் மறைத்தல் காரியத்தைச் செய்வதுண்டு; குழந்தைக்கு வயிற்றுப் போக்கு; முக்கிய விருந்தினர்கள் வீட்டுக்கு வந்துள்ளனர். அவர்களுக்காக

அப்பம், வடை போன்ற சிறப்பு உணவுகள் தயாரிக்கப்படு கின்றன. குழந்தை அவற்றைப் பார்த்தால் தனக்குத் தருமாறு கேட்டு அடம் பிடிக்கும். உண்டால் உடல் நலத்துக்கு ஒவ்வாது. அன்னை என்ன செய்கிறாள்? உணவை மறைத்து வைத்தோ, குழந்தையை மற்றவர்களுடன் வெளியே அனுப்பியோ, விருந்தினரை உபசரித்து, நிலைமையைச் சமாளிக்கிறாள். அஃது ஏன்?

குழந்தையின் மீதுள்ள வெறுப்பா? அப்பம் வடைகளைக் குழந்தை எக்காலத்தும் உண்ணக்கூடாது என்ற கொடிய எண்ணமா? அல்லவே. அன்றையச் சூழலில் அக்குழந்தைக்கு அந்த உணவு ஒவ்வாது என்பதாலேயே அன்றோ அவ்வாறு மறைக்கிறாள்? குழந்தையின் உடல் நலம் சீரானதும், அவளே அதுபோன்ற சிறப்பு உணவுகளை அக்குழந்தைக்கு மகிழ்ச்சி யுடன் ஊட்டுகிறாளே!

ஆகவே அன்புத்தாய் தன் குழந்தையை மாசு நீக்குதற் பொருட்டுத் தந்தையிடமிருந்து மறைத்தும், நோய்க்குச் சிகிச்சை செய்யும்போது அவள் தன்னைத் தானே மறைத்துக் கொண்டும் ஒவ்வாத உலகப்பொருள்களை குழந்தையிடமிருந்து மறைத்தும், அக்குழந்தையைக் காப்பது அவளுடைய முக்கியப் பொறுப் பாகும். இதே போன்றுதான் தன் குழந்தைகளாகிய உயிரினத்தைக் காத்து நலம் புரிதற்காகவே அன்னை சிவசத்தி மறைத்தல் தொழிலை மேற்கொள்ளுகிறாள்.

விபரீத ஆசைகள்

இதேபோல்தான் சர்க்கரை நோய்க்காரனுக்கு இனிப்புப் பொருள்களின்மேல் அளப்பரிய ஆசை. இதய நோயால் துன்புறுவோன் பாலுறவு இன்பத்தைப் பெரிதும் நாடுகிறான். இங்ஙனம் ஆகாத பொருள்களுக்காக அலைவதும், போகக்கூடாத இடத்துக்கே போக விழைவதும் பொதுவான ஆன்ம இயல்பு. இறைவன் எப்போதும் எல்லோருக்கும் எளிய காட்சிப் பொருளாக இருப்பின், எல்லோருமே இத்தகைய விபரீத ஆசைகளை நிறைவேற்றித் தருமாறு அவனிடம் கேட்டு அடம்பிடிப்பர்? அஃது நன்மை செய்வதற்கு மாறாகக் கேடாக அன்றோ முடியும்?

ஆகவே சிவபெருமானும் ஆன்மாக்களுக்கு ஊழ்வினைப் பயனை ஊட்டும்போது, தன்னைத்தானே மறைத்துக்கொண்டு

செயற்பட வேண்டியதாகிறது. அவனுடைய பஞ்சகிருத்தியங்களுள் மறைத்தல் என்னும் தொழிலும் ஒன்றாகிறது.

இறை வழிபாடு வினையாகுமா?

சிவசூரிய பூஜையைத் தொடர்ந்து, வழக்கம்போல், ஆன்மார்த்த சிவவழிபாட்டினை செய்து கொண்டிருந்தேன். அன்று ஞாயிற்றுக்கிழமை; பள்ளி விடுமுறை; எனவே சிவசாமியும் குப்புசாமியும் காலை நேரத்திலேயே என் இல்லத்துக்கு வந்தனர். நேரே குளியலறை சென்று கைகால்களைக் கழுவித் தூய்மை செய்து கொண்டு, பூஜை அறைக்குள் வந்து, இறைவனை வணங்கி பின் அமர்ந்தனர்.

சிவவழிபாட்டின் அங்கமான எரி ஓம்புதலையும் செய்து, பூஜையை நிறைவு செய்ததும் அவர்களுக்குத் திருநீறு பிரசாதங்கள் கொடுத்தேன். காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு எங்கள் சிந்தனைமேடைக்கு வந்து அமர்ந்தோம்.

''ஐயா! தாங்கள் நாளும் சிவபெருமானை மனத்தால் உளமார நினைந்தும், நாவால் அவன் புகழைத் தேவாரமாகப் பாடியும், எரி ஓம்பி வழிபாடு இயற்றுகிறீர்கள். சிவவழிபாடாகிய இவை எல்லாம் செயல்கள் தாமே? வினைகளைப் பற்றிச் சிந்திக்கும்போது, செயல், வினை எல்லாம் ஒரே பொருள் - என முன்னர்க் கூறினீர்கள்; அவ்வாறாயின் சிவ வழிபாட்டினையும் வினை என அழைக்கலாமா?'' என்ற வினாவோடு சிவசாமி அன்றைய சிந்தனைக்கு வித்திட்டார்.

அருள் வினையும், இருள்வினையும்

''நாம் செய்கிற செயல்களையே வினைகள் என்பர் அறிஞர். உலக வாழ்வில் பிறர்மாட்டு மனத்தால் விருப்பு வெறுப்பு கொள்ளுவதும், நாவால் பிறரை வாழ்த்துதல், வைதல் போன்று, மொழியால் இனியன, இன்னாதன சொல்லுதலும், உடலால் பிறர்க்கு உதவி செய்தோ ஊறு விளைவித்தோ செயற்படுதலும் - ஆகிய இவை எல்லாம் வினை என்ற பொதுப்பெயருள் அடங்கும்.

நாம் செய்கிற வினைகள் உலக வாழ்வினை நோக்கியதாகவும் இருக்கலாம், இறைவனை நோக்கியதாகவும் இருக்கலாம்.

மும்மலங்களால் கட்டுண்டு உலக வாழ்வில் இருக்கும் போது நாம் பெரிதும் அறிவு விளங்காத வினையாளிகளாகவே

இருக்கிறோம். நிலையற்ற உலகச்சிற்றின்பங்கங்களை நாடியே அவ்வினைகள் அமைகின்றன. ஆணவம் என்னும் இருள் மலத்தோடு தொடர்புடைய நாம் அவ்வாறு செய்கிற வினை களை 'இருள் சேர் இருவினை' என்பர் அறிஞர்.

அதேபோல் கடவுளைக் கருத்தில் கொண்டு செய்யப் படுவனவும் வினைகளே. ஆண்டவன் திருவருளாகிய ஒளி வட்டத்தில் இருந்து கொண்டு அவன் திருவருள் துணையோடு அவனை நோக்கிச் செய்யப்படும் வினைகள் ஆதலால், அவற்றை அருள் வினை எனலாம்.

அருள் வினைகள் படிப்படியாக ஆன்மாவை முன்னேற்றி, பிறப்பு - இறப்புச் சுழற்சியிலிருந்து விடுவித்து, ஆண்டவனின் திருவடிப் பேரின்பத்துக்கு இட்டுச் செல்லும்; இருள் வினை களோ வினைசெய்தவனுக்கு வாழ்நாள் முழுவதும் துன்பத்தைத் தந்து, இறப்புக்கும் பிறப்புக்குமே வித்தாகும். இதனைச் சற்று விரித்து நோக்கலாம்;

அருள்சேர் வினை

கடவுளை நோக்கி நாம் செய்கிற வினைகளைத் திருப்பணி, திருத்தொண்டு, இறைபணி, சேவை, மெய்த்தவம் என்றெல்லாம் கூறுவர் அருளாளர்; இது திருவருளில் நம்மைச் சேர்ப்பிப்பதால், இதனை, அருள்சேர் வினை - என்று கூறுதல் முற்றிலும் பொருந்தும். மெய்த்தவத்தின் மென்மைக்கும் செறிவுக்கும் ஏற்பவே பேரின்பமும் வாய்க்கிறது. அருள் வினைகள் மும்மலக் கட்டுகளை நீக்குகின்றன; பிறப்பு இறப்புச் சுழற்சியிலிருந்து நம்மை விடுவிக்கின்றன; நிலையான பேரின்பப் பெருவாழ்வுக்கு நம்மை ஆற்றுப்படுத்துகின்றன.

'நான்' - என்ற அகந்தையின்றி, எல்லாம் சிவபெருமானின் விருப்பம், அவனுடைய அறிவு, அவனுடைய செயல் - என, யாவற்றையும் சிவபெருமான் திருவடி பற்றியே சிந்தித்து, அனைத்தையும் சிவச் செயலாகவே செய்வது இறைப்பணியாகும்.

இறைப்பணியாகிய மெய்த்தவ நெறியில் திளைத்து நிற்போர் எல்லோரும் அருள்வினை செய்தோர் ஆவர். அவர்கள் மூவகை மலக்கட்டுகளிலிருந்து நீங்கிய ஆருயிர்களாவர். பாசப்பிணிப்பு அற்ற அவற்றை இயமன்கூடத் தன் பாசக் கயிற்றினால்

கட்டிச் செல்ல முடியாது. மார்கண்டேயர் போன்ற அத்தகைய தலைசிறந்த மெய்த்தவ ஞானிகள், சிவபரத்தின் திருவடிகளையே தமக்குப் பற்றுக் கோடாகக் கொண்டிருப்பர். எல்லா அருளாளர் களின் நிலையும் அத்தன்மையதே.

சிவபெருமானிடம் தோழமை என்ற சிறந்த உரிமையைப் பெற்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர்கள் நாளும் தவறாது உள்முகமாகவே (அந்தர்யாகமாகத்) தம் எண்ண அலைகளை ஓட்டி, எரியோம்பிச் சிவத்தைச் சிந்தித்த அந்தணாளர் ஆவர். ஆதலால் அத்தகையோரை மறுவாழ்வுக்கு அழைத்துச் செல்ல, இயமனுக்கு அதிகாரம் இல்லை. அவனிலும் மேலான, உயர்ந்த தேவர்களாலும், அவரிலும் உயர்வான சிவகணங்களாலுமே அவர்கள் அழைத்துச் செல்லத் தக்கவர் ஆவர். திருக் கயிலைக்கு மீண்டும் அழைத்துக்கொள்ளுமாறு வேண்டி நின்றார் சுந்தரர், சிவபெருமான் தன்னுடைய தனி ஊர்தியாகிய ஐராவதத்தை யும், திருமால், பிரமன், இந்திராதி தேவர்களையும் அனுப்பிச் சுந்தரரைத் திருக்கயிலைக்கு அழைத்துக் கொண்டான் என்பது நம் தெய்வத் தமிழகத்தில் நிகழ்ந்த வரலாற்று உண்மை.

திரு ஆனைக்கா திருத்தலத்தில் நாவல் மரத்தினடியில் எழுந்தருளியிருப்பவர் அப்புலிங்கப் பெருமான். மரத்தின் காய்ந்த சருகுகளும் மற்ற மற்ற தூசுகளும் அவருடைய திருமேனியில் விழுவதைச் சிலந்தி ஒன்று கண்டது; சிவலிங்கத்தின் மேல் அழகியதொரு விதானம் அமைத்தாற்போல் அச்சிலந்தி தன் எச்சிலைக் கொண்டு வலையினைக்கட்டியது. அஃது ஒரு சிவத்தொண்டு, ஆதலால் அச்சிலந்தியைக் கோச்செங்கணான் என்ற சோழப் பெருவேந்தனாக்கி, எழுபத்திரண்டு மாடக் கோயில்களைக் கட்டுமாறு அருள்பாலித்தான் சிவபெருமான்.

இவை எல்லாம் அருள்-வினைகளுக்கான சில எடுத்துக் காட்டுகள்; இனி இருள் சேர்வினைகள் பற்றி நோக்குவோம்.

இருள் சேர் இருவினை : நல்வினை, தீவினை

மற்ற எல்லா உயிர்களுக்கும் இன்பம் தருவனவற்றைச் செய்வதன் மூலம் தன் உயிர்க்கும் உறுதியானவற்றை செய்தலே சிறப்பு; அதுவே யாவர்க்கும் நன்மை பயப்பதால் அதனை நல்வினை என்பர். அவற்றைச் செய்யாமையும், மறுதலையான வற்றைச் செய்தலும் தீவினையாகும்.

இவ்வாறு, உலகியல் வாழ்வு தொடர்பான வினைகளைப் பொதுவாக நல்வினை என்றும், தீவினை என்றும் இரண்டாக வகைப்படுத்திக் காண்பதே வழக்கம். அவை இரண்டுமே ஆன்மாக்களை மாயையின் மயக்கத்திலும், ஆணவ-இருளிலும் தொடர்ந்து அழுத்துவதால், அவற்றை இருள்சேர் இருவினை என்று கூறுவர்.

''ஐயா! ஒரு சிறு ஐயம். தீவினை செய்தால் துன்பம், ஆதலால் தீவினை செய்யக்கூடாது என்பது சரி. ஆனால் நல் வினை செய்வது 'இன்பம் தானே? அதை ஏன் கூடாது என்கிறார்கள்?'' என வினவினார் குப்புசாமி.

பொன் விலங்கும், இரும்பு விலங்கும்

அவரவர் செய்த வினைகளுக்குரிய பயனை அவரவரே உரிய காலத்தில், உரிய அளவில் நுகர்தல் வேண்டும் என்பதே நியதி. நல்வினைகளைச் செய்தவன் இன்பத்தை நுகர்வதற்கும், தீவினைகளைச் செய்தவன் துன்பத்தை நுகர்வதற்கும் உரியவன் ஆகிறான். ஒரு பெரிய உண்மை என்ன வெனில், தீய செயல் செய்தவன் அதற்கான துன்பத்தை நுகர்வதற்காக, மறுபிறப்பு எடுப்பதைப் போலவே, நல்ல புண்ணியம் செய்தவனும் அதற்குரிய இன்ப வாழ்வில் தலைப்படுவதற்காக மற்றொரு பிறப்பில் தோன்ற வேண்டியதாகிறது.

அப்பொழுது அவன் முன்வினைக்கு உரிய இன்பத்தை மட்டும் நுகர்ந்து, மேல் வினை செய்யாது இருப்பின், அவ் வாழ்வு சிறப்புறும். ஆனால் மும்மலங்களால் உந்தப்பட்டுக், குறிப்பாகப், பதவி, பணம், படைவலிமை போன்ற நிலையற்ற மாயையில் மயக்குண்டு, தன்னை அறியாமலேயே அவன் தீவினைகள் பல செய்கிற வாய்ப்பினையும் பெற்றுவிடுகிறான். அதுவே அவனுக்கு மறு மறு பிறப்புக்கு வித்தாகிறது.

ஆகவே, வினை என்னும் அச்சினை மையமாகக் கொண்ட பிறப்பு-இறப்புச் சக்கரத்தில் நன்மை செய்தவனும் சுழலு கிறான், தீமை புரிந்தவனும் சுற்றிச் சுற்றி வருகின்றான். இஃது ஒரு தொடர் வட்டமாகிக் காலங்காலத்துக்கு அவனை ஓரோ ஒரு வகையில் கட்டுப்படுத்திவிடுகிறது, ஆதலால் தீவினையினை இரும்பு விலங்கு என உருவகப்படுத்திய ஆன்றோர்கள், நல்வினை யினைப் பொன் விலங்கு எனவும் உருவகித்தனர். இரண்டுமே

இன்பதுன்பப் பிறப்புக்கு மூலகாரணமாதலால், இவற்றை, 'இருள்சேர் இருவினை', என்றார், வள்ளுவப் பெருந்தகையும்.

வினைகள் பொதுவகையால் இரண்டாக இருப்பினும் அவற்றின் செயல்முறை, பயனளிக்கும் பாங்கு ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்து நோக்கும்போது அவை இரண்டா யிரத்துக்கும் மேற்பட்ட வகையான வினைகளாக விரிந்து கிடக்கக்காணலாம்' என்றேன்.

''அப்படியா ஐயா! மிகவும் வியப்பாக இருக்கிறதே! அவற்றைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ளுவதற்கு விருப்பமாக உள்ளது. தாங்கள் சிரமம் பாராது அவற்றை எங்களுக்கு விரித்துரைக்க வேண்டுகிறோம்'' என்றார் குப்புசாமி. அவர்கள் விருப்பப்படி யான் வினை வகைகளைக் கூறத் தொடங்கியதும் அவர்கள் இருவரும் தத்தம் ஏட்டில் குறிப்பெடுத்துக் கொள்ள ஆயத்தமானார்கள்.

வினையின் வகைகளும் பெயர்க்காரணமும்

''வினைகளுக்கு ஏற்ற விளைவுகள் உண்டு என்பதும், இன்றைய இன்பதுன்பங்களுக்குக் காரணம், முந்தைய பிறப்பு களில் நாம் செய்த நல்வினை, தீவினைகளே என்பதும் தொன்று தொட்டே, நம் தமிழ்ச் சான்றோர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்ற கொள்கையாகும். எனவே, பின்விளைவுகளை நோக்கியே வினைகள் ஒவ்வொன்றுக்கும் பெரியவர்கள் தக்க பெயர்களைச் சூட்டியுள்ளனர்.

ஆகூழ் (ஆகாமியம்)

உலக வாழ்க்கையில் ஊழ்வினையின் இன்பதுன்பப் பயன்களை நுகர்தற்பொருட்டு அமைந்ததே இப்பொழுதைய வாழ்வு. இவ் உண்மையை நாம் முழுமையாக உணரவில்லை; இன்பச் சூழலில் அகமகிழ்ந்திருந்தாலும். துன்பச் சூழலில் அல்லலுற்றாலும், நாம் நம்மை இழந்துவிடுகிறோம். அவ்வினைப் பயனை நுகர்வதோடு நாம் அமைதியுறுவதில்லை.

அந்த நேரத்தில் அந்தச் சூழலுக்கு வழி வகுத்தவர்களின் பால் விருப்போ வெறுப்போ கொள்ளுகிறோம். அவர்களுடைய குறை நிறைகளைப் பூதக் கண்ணாடி கொண்டு ஆராய்கிறோம். அதனையே முதலீடாக்கிக் கொள்ளுகிறோம். பதிலுக்கு பதில் அவர்களுக்கு ஏதேனும் செய்யத் துடிக்கிறோம்.

நான் என்ற தற்போதமும் தன் முனைப்பும் மேலோங்குகின்றன; ஆணவமும், தன்முனைப்பும் நம்மை வலிமையாகப் பிணிப்பதற்கு அஃது ஒரு வாய்ப்பாகிறது. நம் சிற்றறிவையே முழுமையான பேரறிவாக எண்ணி மருளுகிறோம். இறையருளையும் மதியாமல், தவறாகப் பயன்படுத்த முற்படுகிறோம்.

மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் பலப்பல புதிய வினைகளைச் செய்யத் தலைப்படுகிறோம். அத்தகைய புது வினைகள் ஆகாமியம் எனவும், வருவினை, புது வினை, மேல்வினை எனவும் பெயர் பெறுகின்றன. இதனைத் தூல கண்டிதம் என்பர். அவற்றுள் மென்மை காரணமாக உடனே அனுபவித்தவைபோக எஞ்சியவை சஞ்சிதம் என்ற வினைத் தொகுப்போடு சேர்ந்து, மறுமறு பிறப்புக்கு வித்தாகின்றன.

தொகுப்பு வினை (சஞ்சிதம்)

முந்தைய பல பிறப்புகளிலும், நாம் தன்முனைப்பொடு பல காரியங்களை முயன்று செய்திருக்கிறோம்; இப்பொழுதும் இடையறாது வினைகளைச் செய்து கொண்டே இருக்கிறோம்; வினைகளின் பயனாகிய இன்ப துன்பங்களையும் அவ்வப்போது நுகர்ந்து கொண்டும் இருக்கிறோம்.

எனினும் மொத்த வினைகளையும் முழுமையாக நுகர்ந்து முடித்துவிடவில்லை; இன்பங்களும் துன்பங்களும் முற்றிலுமாக நுகரப்படாமையால், ஓரளவு வினைகள் எஞ்சிநின்று, வினை -எச்சமாக நம் கணக்கில் தங்கிவிடுகின்றன. ஒவ்வொரு பிறப்பிலும் நம்மால் செய்யப்பட்டு அவ்வாறு எஞ்சிநிற்கும் வினைகள் அனைத்தும் ஒருங்கு சேர்ந்து நம் கணக்கில், ஒரு பெருங்குவியலாகத் தொகுத்துக் கிடக்கின்றன. அவற்றையே வினைத்தொகுதி அல்லது தொகுப்புவினை என்கிறோம். அவை பலவும் கூடித் தொகுப்பாகக் கிடப்பதால் வடநூலார் அதனைச் சஞ்சிதம் - என அழைக்கின்றனர்.

வினைத் தொகுப்பு என்பது தொன்மைக் காலம் முதல் பல பிறப்புகளிலும் பல்லாற்றானும் செய்யப்பட்ட வினைகள், ஆதலால் பழமையான அவற்றை நம்மவர்கள் தொல்வினை என்றனர். மறைந்திருந்து (சமஸ்காரரூபமாய் நின்று) பயன் கொடுப்பதால், அபூர்வம் என்றும் அது அழைக்கப்படுகிறது. வினை-எச்சமும், வினைத்தொகுப்பும் எவ்வாறு நிகழ்கின்றன

என்பதை நடைமுறையில் உள்ள ஒரு நிகழ்ச்சியின் மூலம் தெளிவாக உணரலாம்.

ஒவ்வொரு வேளையும் நாம் உணவு உட்கொள்ளுகிறோம். உண்ட உணவு சீரணமாகி நமக்கு அவ்வப்போது ஆற்றலைத் தருகிறது; ஆயினும் உட்கொண்ட உணவு முழுவதும் ஆற்றலாகி விடுவதில்லை. அதன் எஞ்சிய பகுதி மலமாகி, மலக்குடல் வழியாக வெளியேற்றப்படுகிறது. அந்த மலமுங்கூட முழுமையாக வெளியேறி விடுவதில்லை;

சிறிதளவேனும் எச்சமாக நம் குடலுக்குள் இருந்து கொண்டே இருக்கிறதன்றோ? அதேபோன்றுதான், வினைகளும் அவற்றின் விளைவுகளும் அமைகின்றன.

ஒரு நெற்குதிரில் ஆண்டு தோறும் சேர்த்துவருகிற மொத்த நெல்லைப் போன்றது, சஞ்சிதம், புதிதாக விளைந்த நெல்லின் ஒரு பகுதியை நாம் உடனே பயன்படுத்துகிறோம். அங்ஙனம் உண்டு தீர்த்தவை போக, எஞ்சியவை குதிரில் உள்ள முந்திய நெல்லோடு சேர்க்கப்படுகின்றது அன்றோ?

அதுபோல, நாம் இப்பிறப்பின் மேன்மேலும் புதிய வினை களைச் செய்து கொண்டே இருக்கிறோம். வினைகளின் அப்புதிய ஈட்டத்தில் அவ்வப்போது சிலவற்றை நுகர்ந்து கழித்து விடுகிறோம். எஞ்சியவை, முந்தைய தொகுப்போடு சேர்ந்து கொள்ளுகின்றன. இத்தகைய தொகுப்பையே சஞ்சிதம் என்கின்றனர்.

இச் சஞ்சித கன்மமே, உயிரின் குலப் பிறப்புக்கும், ஆயுட் காலத்துக்கும், இன்பதுன்ப நுகர்ச்சிக்கும் வாழ்வின் ஏற்ற இறக்கங்களுக்கும் ஏதுவாகும்.

நுகர் வினை - ஊழ் (பிராரத்தம்)

நம் வீட்டுத் தோட்டத்தில் ஒரு மாமரம்; அதில் நிறைய பழங்கள் உள்ளன; அவற்றுள் ஒன்றிரண்டு நன்றாகப் பழுத்து இப்பொழுதே தின்னும் நிலையில் கனிந்து உள்ளன; ஏனையவை இன்னும் முழுமையாகக் கனியவில்லை; சற்றே காயாகவும் உள்ளன. ஆதலால் பழுத்துப் பக்குவமானவற்றை மட்டும் நாம் இப்பொழுது உண்பதற்கு எடுத்துக் கொள்ளுகிறோம் அன்றோ?

அதேபோன்றுதான், சஞ்சிதம் எனக் குவிந்து கிடக்கும் வினைத்தொகையில், பிஞ்சு, காய், பழம் என ஏராளமான வினைகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றுள், இப்பொழுது நுகரத்தக்க வகையில் சில வினைகள் நன்கு முதிர்வுற்றிருக்கும். அவற்றை நுகர்ந்து தொலைக்க வேண்டும் என்பது நியதி. அங்ஙனம், இருவினைகளை நுகர்வதற்காக வந்ததே இன்றைய வாழ்வு. இதுவே ஊழ் எனப்படுகிறது. இதனைப் பிராரத்தம் என்பர் வடநூலார்.

சஞ்சிதம் எனப் பெருகிய வினைகளின் மொத்தத் தொகுப்பு இப்பொழுது நம்மைப் பாதிக்கவில்லை. அவ்வினைத் தொகுப்பினுரடே நன்கு பழுத்து, முதிர்ந்து, இப்பிறப்பில் நுகர்ந்து தொலைப்பதற்கு ஏற்பப் பக்குவமாகி, வந்து வாய்த் துள்ளவை ஒரு சிறு அளவு வினைகளே. அவற்றின் அனுபவமே ஊழ் என்ற பெயரால் இப்போது நம்மை இன்பதுன்பங்களுள் அழுத்துகிறது. நாம் அனுபவித்துத் திருந்தும் அளவுக்கு மட்டுமே, அஃது இப்பிறப்பினில் நமக்கு ஊட்டப் பெறுகிறது. அதையே விதி என்ற பெயரால் நாம் அழைக்கிறோம்.

நுகர்வினைகள் இரண்டு வகையில் நம்மைப் பற்றலாம்; ஒன்று: முந்திய பல பிறப்புகளிலும் நாம் செய்து, ஈட்டி, நுகர்ந்து, எஞ்சி இருப்பதான வினைத்தொகையிலிருந்து, நன்கு முதிர்ந்த காரணத்தால் இப்போழுது பயன் தர வருவது. மற்றது; இப்பொழுது செய்து, உடனுக்குடன் பயன்தருகிற புது வினை களால் வருவது. இதைச் சில நடைமுறை நிகழ்ச்சிகளால் அறியலாம்.

வங்கிச் சேமிப்பு என்பது சஞ்சிதம்; அதிலிருந்து அப்பொழுதைய சிறுதேவைக்கு எடுக்கப்படும் பணம் போன்றது பிராரத்தம். குதிரில் குவிந்து கிடக்கும் நெல்லைப் போன்றது சஞ்சிதம். அதிலிருந்து அன்றையத் தேவைக்கு எடுக்கப்படும் சிறு அளவு நெல்லைப் போன்றது, பிராரத்தம், இங்ஙனம், பிராரத்தம் (ஊழ்) என்பது, குதிரிலிருந்து அன்றையத் தேவைக்கு எடுக்கப்பட்ட நெல்லையும், வங்கிச் சேமிப்பிலிருந்து சிறு தேவைக்காக எடுத்த பணத்தையும் போன்றது.

வயலிலிருந்து இந்த ஆண்டில் புதிதாக நெல் விளைந்து வருகிறது. அஃது ஆகாமியம்; அதில் ஒரு பகுதியை நாம் உடனே பயன்படுத்துகிறோம். அவ்வாறு பயன்படுத்தப்படுகிற நெல்லைப்

போன்றது பிராரத்தம்; நாம் இப்பொழுது உண்டு தீர்த்தவைபோக, எஞ்சிய நெல்லைக் குதிரில் உள்ள முந்திய நெல்லோடு சேர்க்கிறோம்; அங்ஙனம், ஒரு நெற்குதிரில் பல ஆண்டுகளிலும் சேர்த்து வருகிற மொத்த நெல்லைப் போன்றது, சஞ்சிதம்.

அதுபோல, நாம் இப்பிறப்பில் மேன்மேலும் புதிய வினை களைச்செய்து கொண்டே இருக்கிறோம். வினைகளின் அப்புதிய ஈட்டத்தில் அவ்வப்போது சிலவற்றை நுகர்ந்து கழித்து விடுகிறோம். எஞ்சியவை, பழைய தொகுப்பாகிய சஞ்சிதத்தோடு சேர்ந்து கொள்ளுகின்றன.

வங்கியில் முன்னர் வரவிலிருக்கும் தொகையோடு புதிய தொகையும் சேர்ந்தாற்போன்றது இது. இதனை ஒரு கணக்கின் மூலம் கண்டறியலாம்.

பிறப்பின் தொடக்கத்தில் வினைத்தொகுப்பின் முன் இருப்பு (சஞ்சிதம்)	100
இப்பிறப்பின் நுகர்ச்சி எனும் செலவுக்காக ஏற்று கொண்ட (பிராரத்தம்)	-10
சஞ்சித எச்சம்	= 90
இப்பிறப்பில் புதிதாக ஈட்டிய ஆகாமியம் + 25 = (நுகர்ச்சி-10) = (சஞ்சிதத்தில் கூடிய) எஞ்சிய ஆகாமியம்	25-10 = +15
ஆக, மறுபிறப்பின் தொடக்கத்தில் நம் கணக்கில் மொத்த வினைஇருப்பு	90 + 15 = 105

நம் ஒவ்வொருவரின் வரவுபற்றுக் கணக்காக, வங்கியின் பதிவுப் புத்தகம்போல, ஆண்டவனிடம் ஒரு வினைப் பதிவேடு உள்ளது. அதை நாம் ஒவ்வொருவரும் மனத்தில் இருத்திச் செயல் படுதல் கடமை, வினைப் பயன் நுகர்ச்சியில் யாருக்கும் விலக்கு இல்லை; இவ்உண்மையைச் சுந்தரரின் வாழ்விலிருந்தும் அறியலாம்;

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானின் நெருங்கிய தோழர். பெருமானிடமிருந்து அவர் வேண்டிப் பெற்ற நலன்கள் பலப்பல. திருமுதுகுன்றத்திலும், திருப்புகலூரிலும், திருப் பாச்சிலாச்சிரமத்திலும் பொன்னை வேண்டிப் பெற்றார்; குண்டையூரில் மலைமலையாக நெல்லைப்பெற்றார். திரு

நாகையில் உலகச் சிற்றின்பப் பொருள்கள் பலவற்றையும் வேண்டிப்பெற்றார்.

அத்தகைய தோழமை நெருக்கத்தில் இருந்தமையால், திருவொற்றியூர் மகிழ மரத்தடியில் சிவபெருமான் முன்னிலையில் சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற மறந்தார். அதுவே அவருக்குப் புதிய வினை ஆயிற்று. கண்ணொளி இரண்டும் இழந்து, அல்லலுற்றார், பின்னர்க் காஞ்சியிலும், திருவாரூரிலும் கண்ணுதலோன் கருணை பாலித்தான்; இழந்த பார்வையை மீளப் பெற்றார் -என்பது வரலாறு.

ஊழ் என்ற பிராரத்த வினைகளைத் துணைக் காரணமாகக் கொண்டுதான் இறைவன் உலகத்தையும் உயிர்களையும் இயக்குகிறான். சாதனைக்கு ஏற்ற பரிசு போலவும், நோய்க்கு ஏற்ற மருந்து போலவும் இன்ப துன்பங்களை உரிய பொழுதில் உரிய அளவு அவன் நமக்கு ஊட்டி உதவுகிறான். அதுவே பிராரத்தம் என்பதாயிற்று. பிராரத்த-அனுபவமானது ஆதி-தைவிகம், ஆதி-பௌதிகம், ஆதி-ஆன்மிகம் என மூன்றாக இருக்கும்.

தெய்வப்புகழ்ச்சி இகழ்ச்சிகள் (ஆதி தைவிகம்)

''கோயில்களில் இறைவன் திருவுருவச் சிலைகளையும் பிற பொருள்களையும் கொள்ளையடிக்கிறார்களே, அவர்களுக்குத் தண்டனை என்பது இல்லையா? ஐயா!'' என மிகுந்த ஆதங்கத்தோடு வினவினார் சிவசாமி.

''ஆதி தைவிகத்தோடு தொடர்புடைய சிந்தனை இது. 'அரசன் அன்றே கொல்லுவான், தெய்வம் நின்று கொல்லும்' எனும் பழமொழியை நீங்கள் அறிவீர்களே. ஆலயங்களுக்கு முன்னால் அரை விரல்களோடும் அழுகிய கைகளோடும் தொழுநோயராய்ப் பிச்சை கேட்டு இரந்து உழல்பவர்களைக் காண்கிறோம். அவர்கள் எல்லாம் யாவர் என எண்ணுகிறீர்கள்? முன்னர்க் கோயில்களில் சிலைகளையும் நகைகளையும் கொள்ளையடித்தவர்கள், அன்று கைநீட்டிக் குற்றம் செய்தார்கள், இன்று அதன் விளைவாகக் கைகள் குறுகித் தொழுநோயராய்த் துன்புற்றுக் கோயில் வாசலிலேயே அரற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தெய்வங்களுக்குச் செய்த பிழைகளும் பெருமைகளுமே ஆதி-தைவிகம் என்னும் வினைக்குக் காரணமாகின்றன.

திருக்கோயில் திருப்பணி செய்வது மிகப்பெரிய சிவ புண்ணியம். அங்குள்ள தெய்வச் சிலைகளையும் பிற பொருள் களையும் திருடுவது சிவ அபராதம் (தெய்வக் குற்றம்). அவை உயிர்கள் முன்னிலையின்றித் தெய்வ முன்னிலையாகச் செய்யப் படுவதால் அவற்றிற்கான பயன்களும் உயிர்கள் முன்னிலை யின்றித் தெய்வ முன்னிலையாகவே வருவன. ஆகவே அவற்றை ஆதி தைவிகம் என்றனர்.

சிவ-ஆலயங்களுக்கும், சிவகுருமார்களுக்கும், சிவனடியார் களுக்கும் தொண்டுகள் செய்வது சிவ-புண்ணியம்.

சிவகுருமார்கள் அறிவுறுத்திய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகைச் சைவ ஆகம நெறிகளில் நின்று மெய்த்தவம் இயற்றல் என்பது வாழ்நாளில் தலைப்பட வேண்டிய முக்கிய சிவ புண்ணியம் ஆகும்.

இறைவன் அருளியுள்ள, எண்ணற்ற நலன்களை மறந்தும், மறுத்து நாத்திகம் பேசியும், யாவும் தன் உடைமை எனத் தருக்குற்றும் ஆர்ப்பரித்தல் தெய்வ குற்றமாகும்.

தாயின் வயிற்றில் கருவாக வளர்ந்து வரும் நாளில் உண்டாகிற துயரங்கள், சிசுவாகப் பிறக்கும் நேரத்தில் விளையும் துன்பங்கள் பருவ முதிர்ச்சியில் தோன்றுகிற நரை, திரை, மூப்பு, சாக்காடு, இயம தண்டம், நரகம் முதலியவை யாவும் உயிர்கள் முன்னிலையின்றித் தெய்வ முன்னிலையாக வருவனவே யன்றோ?

"அவை தெய்வ முன்னிலையாகச் செய்யப் பெற்றமையால் அவற்றிற்கான பயன்களும், உயிர்கள் முன்னிலையின்றித் தெய்வ முன்னிலையாகவே வருகின்றன; தெய்வ முன்னிலை யாக நிகழ்வதால், அவற்றை ஆதிதைவிகள் என்றனர். இவை மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாதவை.

(குற்றம் செய்தவர்களை) 'அரசன் அன்றே கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' - என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கேற்ப, ஆதிதைவீக வினைகள் பெரிதும் மறுமறு பிறப்பு களிலேதான் உரிய பயனைத் தக்கவாறு தருகின்றன எனலாம். எனினும் ஒரோஒரு சமயத்தில் வினை செய்த இம்மைப் பிறப்பிலேயே விரைந்து அவை உரிய பயன் தருவதும் இயல்பாகக் காணலாம்.

புள்ளிருக்கு வேளூர் என்பது, சிவபெருமான் வைத்தீஸ்வரனாய்க் கோயில் கொண்டுள்ள புனிதத்தலம், அங்குச் சில ஆண்டுகளுக்கு முன் (1980 வாக்கில்) சோமாஸ்கந்தரின் காசுமாலையை ஒருவன் திருடினான்; பெருமதிப்புள்ளது அம் மாலை. அதிலிருந்து ஒரு சில பொற்காசுகளைப் பிரித்தெடுத்துத் தன் மனைவிக்குக் கழுத்துச் சங்கிலி செய்து அணிவித்தான்.

அவளோ தன் கழுத்தில் பாம்பு நெளிவதைப் போன்று உணர்ந்தாள்; அதை அணிந்து கொள்ள அஞ்சினாள். அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது - மாறுகால் மாறுகை இல்லாத அவல நிலையிலே. இங்ஙனம் துன்பத்தை அனுபவித்ததும் அவனுக்கு அச்சம் தோன்றியது;

திருடியவனுக்கு நல்லறிவு வந்தது. காசு மாலையைத் தானே திருப்பிச் செலுத்தி, சரண் அடைந்தான், இம்மை யிலேயே ஆதிதைவிகம் பயனளித்தமைக்கு இஃது ஒரு சான்று.

அறிவியல் கொண்டும் எண்ணிப் பார்க்கலாம். எங்கும் நிறைந்த பரம்பொருள், நம் உடம்பினில் நரம்பு மண்டலத்தின் மூலமாகவே இயங்குவதால், ஆதிதைவிகத்தின் விளைவுகள் பெரிதும் நம் உடம்பினில் நரம்பு மண்டலத் தொடர்புடையன வாகவே இருக்கக் காணலாம்.

(எ-டு) திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது திருவாசி என்ற திருப்பாச்சிலாச்சிரமம். 1400 - ஆண்டுகளுக்கு முன் அப்பகுதியை ஆண்ட மழவர் குல மன்னன் மகளை முயலகன் என்ற ஒருவகை நரம்பு நோய் பிணித்திருந்தது; அதனைத் திருவருள் துணைகொண்டு, திருஞானசம்பந்தப் பெருமான் குணப்படுத்தினார் - என்பது வரலாறு. இதற்குத் தேவாரத் திலும், பெரியபுராணத்திலும் அகப்புற சான்றுகள் உள்ளன.

ஆதி ஆன்மீகம்

குப்புசாமி முக்கியமானதோர் வாழ்வியல் வினாவை எழுப்பினார். 'சிலருக்கு மகப்பேறு கிட்டுவதில்லை. வேறு சிலருக்குத் திருமணமே தடைபடுகிறது. இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவாக இருக்கும் ஐயா?' என்பது அவரது வினா.

இஃது ஆதி ஆன்மிகத் தொடர்பானது. முன்னர் மற்ற ஆன்மாக்களுக்குச் செய்த நன்மை தீமைகள் புண்ணிய பாவமாகி

ஆன்மாக்களின் மூலமே பயன் தருவன ஆதலால் 'ஆதி - ஆன்மீகம்' எனப்பட்டது.

சிலர் கணவன் மனைவியரின் இன்ப வாழ்வினைச் சீர் குலைத்து, மற்றவர் துன்பத்தில் மகிழ்வு காண்பர். அத்தகு தீயோரே இப்பிறப்பில் திருமணம் ஆகாமலும் திருமணம் தடைபட்டும், மண-முறிவுகளுக்கு ஆளாகியும் அவதியுறு கின்றனர். முன்னர்ப் பெற்றோர்களையும் பிள்ளைகளையும் பிரித்து மகிழ்ந்தவர்களும் ஈவு இரக்கமின்றி உயிர்க்கொலை, கருச்சிதைவு முதலிய காரியங்களைச் செய்தவர்களும் இறைவன் விருப்பத்துக்கு மாறாகச் செயற்பட்டவர்கள் ஆவர். ஆகவே அவர்கள் மகப்பேறு கிட்டாமல் மலடாய்க் கிடந்து மயங்கி அழுகிறார்கள்.

இவையேயன்றி இவைபோன்ற மற்ற காரணங்களும் உள்ளன. மொத்தத்தில், முன்னர் இறை-ஆணைக்கு மாறாக, ஆன்மாக்களுக்குச் செய்த வினைகளே இன்றைய இன்ப துன்ப வாழ்வுக்கு அடித்தளமாகின்றன. இதனை மற்றொரு எளிய உவமை மூலம் தெளியலாம்.

'எருதுக்கு நோக்காடு, காக்கைக்குக் கொண்டாட்டம்' என்னும் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள் எருதின் முதுகில் ஏதேனும் காயம் இருந்து சீழ் வைத்திருந்தால், அதிலுள்ள சிறு கிருமிகளைத் தின்பதற்காக அந்த எருதின் முதுகில் காக்கை வந்து உட்கார்ந்து, அப்புண்ணைத் தன் கூரிய அலகால் கொத்தும். அவ்வாறு அது கொத்திக் கொண்டே இருப்பது எருதுக்குப் பெருந்துன்பத்தைத் தரும், வலி தாளாத எருது தன் வாலை வீசிக் காக்கையை விரட்ட முயலும். அதைத் தவிர எருதுக்கு வேறு ஒரு வழியும் இல்லை. இடப்புறம் வாலால் விரட்டினால், காக்கை வலப்புறம் பறக்கும். மீண்டும் வந்து உட்காரும். வலப்புறம் விரட்டினால் இடப்புறம் பறந்து வந்து முதுகில் உட்கார்ந்து தன் வேலையைத் தொடரும். இவ்வாறு எத்துணை முறை எருது விரட்டினாலும், பறந்து பறந்து மீண்டும் மீண்டும் வந்து கொத்துவதும், எருதின் துன்பத்தை அறியாமல் தான் இன்பமாக விளையாடி மகிழ்வதும் காக்கையின் இழிகுணம். இதனையே 'எருதுக்கு நோக்காடு, காக்கைக்குக் கொண்டாட்டம்' என்னும் பழமொழியால் அறிவுறுத்தினர்.

இந்த காக்கையைப் போலவே, சுற்றுப்புறத்தில் வாழும் உயிரினத்துக்கு ஊறு செய்து மகிழ்வது சிலரது தொழில், வேறு சிலருக்கு அதுவே பொழுது போக்கு, மற்றும் சிலருக்கு அதுவே பேரின்பம்.

பிற உயிர்களுக்கு நன்மை செய்தல் என்பது ஆன்மாக் களை நோக்கிச் செய்கிற நல்வினைகள். தீமை செய்தல் என்பது தீவினைகள்.

சுவர்க்கம் முதலிய மறுமை இன்பங்களைக் கருத்திற் கொண்டு வேள்வி, மற்றும் தானதருமங்கள் முதலியவற்றைச் செய்கிறார்களே, அவை தேவர்கள் மானுடர்களை நோக்கியே செய்யப்படுகின்றன. தேவர்களும் மானுடர்களும் ஆன்மாக்களே ஆகையால் அவை ஆதி ஆன்மீகத்தில் அடங்கும்.

உலகியலில் ஏற்படுகிற காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலியவையும் ஆதி ஆன்மீகமே.

பிறிதோர் உயிரைக் கொலை செய்தோ, வேறு வேறுவகை களால் ஊறு விளைவித்தோ துன்புறுத்துகிற ஒருவன், அந்த நேரத்திற்கு வேண்டுமானால் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், பின்னர் (மறுமறுபிறப்புகளில்) அ(வ்) உயிரினத்தாலேயே துன்புற நேரும்; அதுவே நியதி, விலங்குகள், மனிதர்கள், அசுரர்கள், தேவர்கள், பைசாசங்கள், கள்வர் போன்ற ஆன்மாக்களால் ஏற்படும் இன்பதுன்பங்கள் யாவும் இதில் அடங்கும்.

நம் உடலில் ஆன்ம-இயக்கம் (உயிரின் செயற்பாடு) என்பது, உடம்பு முழுவதும் ஓடுகிற குருதியின் மூலமே அமைகிறது. ஆதலால் ஆதி-ஆன்மீக-வினைகளால் விளையும் பயன்களும் குருதித் தொடர்பாகவே அமையக் காணலாம். இரத்த அழுத்தம், இரத்தக்குழாய்க் கோளாறுகள் போன்ற குருதி வழிக் குறை பாடுகளால், தத்தம் மனத்திலும் உடலிலும் விளைகிற நோவு களையும் ஆதி ஆன்மிகத்துள் சிந்தித்தல் பொருந்தும்.

பூதப் பயன்பாட்டில் நன்மை தீமைகள் (ஆதி-பௌதிகம்)

(சிவத்திலிருந்து சைவமும், விஷ்ணுவிலிருந்து வைஷ்ணவமும் தோன்றிது போலப் பூதம் என்ற சொல்லிலிருந்து எழுந்தது பௌதிகம். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்

என்ற பஞ்ச பூதங்களால் ஆனது இப்பெரிய உலகம்; இதன்கண் உள்ள பலவகைப் பொருள்களும், நம் உடம்பும் அவ்வாறே ஐம்பூதச் சேர்க்கையால் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே பௌதிகம் என்பது சடமாகிய உலகத் தொடர்பானது)

ஏனைய உயிர்களையோ தெய்வங்களையோ அல்லாமல், ஐம்பூதங்களுக்குச் செய்த புண்ணியங்களாலோ, அன்றி ஐம்பூதப் பழிப்பாலோ சிலவகை இன்பதுன்பங்கள் நேர்கின்றன. இஃது நடைமுறை அனுபவத்தால் அறியத்தக்க உண்மையே. பூதங்களாலான பொருள்களைக் காத்த முறைகளும், வெறுத்த நிலைகளும் வினைகளாகின்றன. அவையே பின்னர் வளமைக்கும் வறட்சிக்கும் வித்தாகின்றன; இன்பதுன்பங்களுக்குக் காரணமாகின்றன. அப்போது அஃது ஆதி-பௌதிகம் என்ற பெயரைப் பெறுகிறது, முன்னர் நிகழ்த்திய, பௌதிக-வினைகளின் பயன் இது-என்பது பொருள்.

குளிர், வெப்பம், காற்று, புயல், மழை, மின்னல், இடி, நிலநடுக்கம் போன்ற இயற்கைபூதப் பொருள்களால் விளையும் இன்பதுன்பங்களே ஆதி-பௌதிகம் எனப்படும்.

நன்செய்நிலத்தைப் பேணிக் காக்கவில்லையாயின் நல்ல மகசூலுக்கு வழி ஏது? நாட்டில் பஞ்சமே எஞ்சும் அன்றோ? தொழிற்சாலைகளின் வேதியற் கழிவுகளை நன்னீர்த் துறைகளில் சேரும்படிவிட்டால் பின்னர்க் குடிநீருக்கு என் செய்வது? வாந்தி பேதியும், மஞ்சள் காமாலை போன்ற நோய்களும் அன்றோ தலை விரித்தாடும்? எரிவாயுக்களும், கரியமிலவாயுவும் காற்றில் மிகுதியாகக் கலந்ததால் அன்றோ, கால அடைவில் ஓசோன் மண்டலத்தில் ஓட்டை விழுந்ததாக அஞ்சப்படுகிறது? இவை எல்லாம் புற உலகில் பஞ்சபூதப்பழிப்பிற்கு விளைவுகள் ஆம். சுற்றுச் சூழலை மாசுபடுத்திவிட்டால் சுகமான வாழ்வு எவ்வாறு வந்தமையும்? இனிப் பஞ்சப்பூதங்களாலான நம் உடம்பைப் பற்றிச் சிந்திக்கும்போது, 'கடுமையான வெய்யிலில் அலையாதே, புது மழையில் நனையாதே, நெருப்போடு விளையாடாதே, ஊதற்காற்று உடம்புக்கு நோவு, சூரிய சந்திர கிரகணங்களை வெறுங்கண்ணால் பார்க்காதே, ஆற்றில் சுழி அதிகம் இருக்கும் போது நீந்த முயற்சி செய்யாதே, ஒவ்வாத உணவை உட்கொள்ளாதே, அமுதமேயாயினும், அளவின் மிகுதியாகக் கொள்ளாதே; உடம்பினைப் பேண வில்லையாயின் உடல்

தொல்லைகள் மிகும்,' -என்றெல்லாம் பெரியவர்கள் அறிவுறுத்து வதும் இக்கருத்துபற்றியே எனலாம்.

'தண்ணீரை அதிகம் ஊற்றி வீணாக்காதே, அதிகமாகப் பொருள்-விரயம் ஆகும்' எனப்பெரியவர்கள் கூறுவது இக் கருத்தினால் தானோ ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

அதனால் பண விரயம் மற்றும் செல்வமின்மை போன்ற பூதத் தொடர்பான இன்பதுன்பங்கள் நேரும் என்பதாலேயே அவ்வாறு அறிவுறுத்துகின்றனர்.

அடுத்து, இயற்கையின் நியதிகள் பழிக்கப்பட்டாலும் அவை பௌதிக வினையாகும். அதற்கான பயன் பின்னொரு காலத்தில் உரியவாறு ஊட்டப் பெறுகிறது.

இயற்கை-நியதி என்பது பற்றி, ஒருநாள் குரு குலத்தில் சீடர்களுக்கு இடையே பெரியதொரு விவாதம் எழுந்தது: ஞானி ஒருவர் தம் வழியில் சென்று கொண்டிருக்கிறார். அப்போது சாலை ஓரத்தில் ஒரு பெரிய பாம்பு தேரை (தவளை) ஒன்றினை வாயினால் கல்விச் சிறிது சிறிதாக விழுங்கிக்கொண்டிருக் கிறது. உயிர்ப் பிராணியாகிய அத்தவளையை பாம்பின் வாயி லிருந்து விடுவித்துக் காக்க வேண்டியது ஞானியின் கடமையா, இல்லையா? என்பது பற்றியதே அப்பொழுதைய விவாதம். ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைக் கூறினார்கள். விவாத முடிவில், குரு இயற்கையின் நியதியைச் சீடர்களுக்கு எடுத்துக்கூறினார்.

பாம்புக்கு இரை தவளை என்பது பூதத்துவ நியதி. படைப்பின் நியதிக்கு ஏற்பவே, அப்பாம்பு அத்தவளையைத் தன்னுடைய இரைக்காகக் கவ்விப் பிடித்திருக்கிறது. தவளையை விடுவித்துவிட்டால், அந்த இடத்தில் அப்பாம்புக்கு மாற்று உணவுப்பொருள் ஒன்று இரையாக வேண்டும். ஞானியால் எதைக் கொடுக்க இயலும்?

இப்பொழுது ஞானியால் விடுவிக்கப்பட்டாலும், உடனேயோ மறுநாளோ அத்தவளை மீண்டும் அப்பாம்பி னாலேயே கவ்வப்படலாம். ஒருவாறு, அத்தவளை இந்தப் பாம்பிடமிருந்து தப்பினாலும், மற்றொரு பாம்புக்கு இரையாகாது, - என்பது என்ன உறுதி? அதற்கான ஏதுவும் இல்லை.

தவளையை இனிமேல் உணவாகக் கொள்ளக் கூடாது' - எனக் கூறிப் பாம்பின் இயல்பினை மாற்ற நம்மால் முடியுமோ?

பாம்பு - தவளை போன்றே எல்லா உயிர்களின் வாழ்வியல் முறையிலும் ஓர் இயற்கையின் நியதி உண்டு; இதுபோல, இன்னும் எத்தனை எத்தனையோ இயற்கை நியதிகள் உள்ளன. அவை எல்லாம் இறைவனின் ஏற்பாடு. அவற்றை எல்லாம் மாற்றியமைக்க முற்படுதல் அறிவுடைமையாகாது. அவற்றை நம்மால் மாற்றவும் முடியாது.

ஜீவகாருண்யம், சமுதாய நோக்கு என்பன போன்ற சொற் சிலம்பங்களுக்கு வேண்டுமானால், இது போன்ற விவாதங்கள் வழிகோலலாம். அதைத் தவிர உயர்ந்த பயன்களை இவை தரமாட்டா. இறைவனின் படைப்புகளையே மாற்ற முயற்சி செய்வது ஆதி பௌதிகம் ஆகி, மறுமறு பிறப்புகளில், அதற்குரிய பயனைத் தருவதாகின்றன.

அறியாமல் செய்கிற வினைகள்
(அபுத்திபூர்வ வினைகள் Un-planned / accidental)

'உலகில் பல அப்பாவி மக்கள் அறியாமையாலும், உள் நோக்கம் எதுவுமின்றியும் பலப்பல காரியங்களைச் செய்து விடுகின்றனர். அங்ஙனம் விளங்காமல் அவர்கள் செய்வன, வினைகள் ஆகுமா? அவற்றிற்கும் பயன் உண்டா' என வினவினார் சிவசாமி.

தெரிந்து சாப்பிட்டாலும், தெரியாமல் சாப்பிட்டாலும், நஞ்சு கொல்லவே செய்யும். கொல்வதென்பது, நஞ்சின் இயல்பு, எனினும் அதற்கு மாற்று மருந்துகளும் உள்ளன அன்றோ? சூழலுக்கு ஏற்ப மாற்றங்கள் நிகழும் என்பதும் இயல்பாகும்.

நம்முடைய அன்றாட வாழ்வில், ஒவ்வொரு நொடியும், நாம் ஏராளமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். அவற்றுள் பலவற்றை எவ்வித உள் நோக்கமுமின்றிச் செய்கிறோம்; அப்போது பல செயல்களில் நம் சுய உணர்வு வேலை செய்வதில்லை; பல செயல்கள் நம் அறிவுக்கு அப்பாற்பட்டவையாகவும் அமைந்துவிடுகின்றன. அப்பொழுது நாம் நம் அறிவை (புத்தியை)ப் பயன்படுத்துவதில்லை. அவ்விதம் அறியாது செய்யப்படும் வினைகளை அபுத்திபூர்வ வினைகள் என்பர். எடுத்துக்காட்டாக மேலும் சில காண்போம்.

நாம் மகிழ்ச்சியாக நண்பர்களோடு அளவளாவிப் பேசிக் கொண்டிருக்கிறோம், அல்லது ஒரு காரியத்தில் முழுமனதோடு

ஈடுபட்டிருக்கிறோம், அப்போது, ஓர் எறும்பு நம் காலில் கடிக்கிறது. உடனே நாம் நம்மை அறியாமலேயே மற்றொரு காலால் கடிபட்ட இடத்தைத் தேய்த்து விடுகிறோம். அங்கு கடித்துக் கொண்டிருந்த எறும்பு, நாம் தேய்த்ததனால் நசுங்கி இறந்துவிடுகிறது. எறும்பு ஓர் உயிர்ப் பொருள். எனவே, அஃது ஓர் உயிர்க் கொலையேயன்றோ? ஆயினும் அது நம்மால் திட்டமிட்டுச் செய்யப்பட்டதன்று. அந்த எறும்பைக் கொல்ல வேண்டும் என்று நாம் முன்னரே எவ்வித திட்டமும் தீட்ட வில்லை; கொல்லவேண்டுமென்ற விருப்பமோ, உணர்வோகூட நமக்கு ஏற்பட்டதில்லை. காலில் ஊறு விளைவித்தது எறும்பு தான் என்ற உணர்வுகூட இல்லை.

மனிதக் கொலைகளேயாயினும், இங்ஙனம் தன் உணர் வின்றியும், முன்னரே திட்டம் தீட்டப் பெறாமலும், விபத்தாகவும் நிகழ்கிற வினைகள் பல உள்ளன நீதிமன்றங்களிலும்கூட இத்தகு வினைகள் குற்றமாகக் கருதப்படாமல் (*Unplanned murder* - என்ற அளவில்) வினையாளி விடுதலையாவதும் உண்டு.

இங்கிலாந்துநாட்டு முந்தைய மன்னர்களுள் ஒருவர் கடைகளுக்குச் செல்லும்போது அங்குள்ள சில பொருள்களை எடுத்துத் தம் மேலங்கியினுள், வைத்துக்கொண்டுவிடுவாராம். சொல்லப்போனால் அது தண்டனைக்குரிய ஒரு திருட்டுக் குற்றமே. ஆனால் அரண்மனை மருத்துவர்கள் அரசரின் அப் பழக்கத்தை ஒரு நோய் என்றே கூறினார்கள். எனவே, உடன் சென்ற உதவியாளர் அரசர் எடுத்த பொருள்களுக்கு உரிய பணத்தை அவ்வப்போது செலுத்தி, உரிமப் பட்டியலைப் பெற்றுக் கொள்ளுவாராம். அரசருடைய அம்மன இயல்பு அறிவுப் பூர்வமான தன்று ஆதலால், அஃது ஒரு 'அபுத்திபூர்வ வினையாகவே கருதப்பட்டது.

''அபுத்திபூர்வ வினைக்கு நம் தமிழகத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகள் இருக்குமே. அவை பற்றிக் கூற வேண்டுகிறோம், ஐயா'' என்றார் சிவசாமி.

''மனுநீதிச் சோழன் என்பவன் ஒரு மாமன்னன். அவனுடைய மகன், திருவாரூர் மாடவீதியில், தேர் ஊர்ந்து செல்லுகிறான். அப்போது ஒரு பசுவின் இளங்கன்று அத்தேர்க்காலில் சிக்கி இறந்துவிடுகிறது. அஃது ஒரு கொலையாகுமா? - என்பது இப்பொழுதைய கேள்வி.

அவன் வந்ததோ அரசர்க்கே உரிய மாட வீதி, அங்கு அப்பசுவின் கன்றுக்கு என்ன வேலை? அவன் ஊர்ந்து வந்ததோ, ஒலி எழுப்புகிற மணித்தேர்; ஒலிகேட்ட அளவிலாவது கன்று புறத்தே ஓடி இருக்க வேண்டும். அவனைச் சூழ்ந்து வந்தவர்களோ, தானைகள் முதலாகப் பரசுவந்தியர், சூதர், மாகதர், வெள்வளை மாதர் எனப் பலப்பலர்; முரசும், சங்கமும் பேரொலி எழுப்ப அன்றோ அவன் தேர்மிசைப் பொலிந்து போந்தான்? இங்ஙனம் தேரினை முழுவதுமாகச் சூழ்ந்து பெரும் படை வந்தபோதிலும், அவர்களை எல்லாம் கடந்து, அக்கன்று தேரை நெருங்க எவ்வாறு முடிந்தது? தேர்க்காலின் அடியில் எவ்வாறு சிக்கியது?

எனவே, அவ் இளங்கன்றின் முடிவு, மன்னர்மகனும் அறியாமல் நிகழ்ந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை அன்றோ? அஃது ஓர் அபுத்திபூர்வ வினை. ஆயினும் மனுநீதி மன்னன் யாது செய்தான் என்பதைப் பெரிய புராணம் திருநகரம் சிறப்புப் பகுதியில் சேக்கிழார் பெருமான் சிறப்புரைக்கக் காணலாம்.

அறிந்து செய்கிற வினைகள்
(புத்தி பூர்வ வினை - planned actions)

முன்னரே திட்டமிட்டு, பின்-விளைவுகளை எல்லாம் அறிவுப் பூர்வமாக நன்கு ஆராய்ந்து, அறிந்து செய்யப்படும் வினைகளைப் புத்திபூர்வ வினைகள் எனக் குறிப்பிடுவர். இலக்கியங்களிலிருந்து இதற்கு ஏராளமான சான்றுகள் கூறலாம்.

இராவணன் தோள் வலி மிக்கவன்; தன்னை வெல்ல யாராலும் முடியாது என்ற மமதை கொண்டான்; அதனால், ஒரு சமயம், இறைவனின் இருக்கையான திருக்கயிலை மலையையே தூக்க முயன்றான்; அதற்குரிய தண்டனையையும் பெற்றான். அஃது ஆணவச் செருக்கால், அவன் சிற்றறிவோடு செய்த புத்திபூர்வ வினை; திருமுறை ஆசிரியர்கள் எல்லோராலும் இராவணனின் இச்செயல் கண்டிக்கப்பெறுகிறது.

சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவருள், மெய்ப்பொருள் நாயனார் என்பார் ஒருவர். அவருக்கு எதிராக முத்தநாதன் என்ற பகை அரசன், பலகாலம் திட்டமிட்டு, இறுதியில் தன் நினைப்பதனை முடித்துக் கொண்டான். இவ்வரலாறு பெரிய புராணத்தில் விளக்கமாக எடுத்தோதப் பெறுகிறது.

கொலைகள், கொள்ளைகள் பெரும்பாலும் திட்டமிட்டே செய்யப்படுகின்றன. அண்மைக்கால இந்திய வரலாற்றில்,

அண்ணல் காந்தி, இந்திரா காந்தி அம்மையார் போன்றோரின் கொலைகள் முற்றிலுமாகத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட புத்தி பூர்வ வினைகளே அன்றோ? இங்ஙனம் திட்டமிட்ட, திட்டமிடப் படாத இருவகைக் கொலைகளுக்கும் ஒரே நிகழ்ச்சியில் சான்று காணலாம். முன்னாள் பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொல்லுவதற்காகச் சிலர் முன்னரே சதித்திட்டம் தீட்டி இருந்தனர். காலமும் சூழலும் அமையும் வரை காத்திருந்தனர், வாய்ப்பு நேர்ந்த போது, அத்தீயவர்கள் தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டனர். அது திட்டமிட்ட கொலை, அறிவு - பூர்வமான வினை. அவர் அவ்வாறு குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்டபோது, அருகிலிருந்த வேறு சில அப்பாவிகளும் கொல்லப்பட்டனர் அன்றோ? அங்ஙனம் அவர்களையும் கொல்ல வேண்டுமென, முன்னர் எவ்விதத் திட்டமும் தீட்டப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, அப்பாவி மக்கள் கொல்லப்பட்டது அபுத்திப்பூர்வ வினையே யன்றோ?

மனம், மொழி, மெய்யினால் வினைகள்

'அநாதி மூலகன்மமும், பிரவாக கன்மங்களும் ஆன்மாவைப் பற்றுவதற்கு விருப்பு வெறுப்புகள் காரணம் என முன்னர்க் கூறினீர்கள். இப்போது மனம், புத்தி, அகங்காரமே காரணம் எனக் கூறுகிறீர்களே ஐயா!. அவற்றிற்குள்ள தொடர்பினை விளக்கினால் நல்லது' என விண்ணப்பித்தார் சிவசாமி.

ஆன்மாக்களின் விருப்பு- வெறுப்புகளும், சொல்லும், செயலும் மூலகன்மம் காரியப்படுதற்கும், வினைகள் தோன்று தற்கும் காரணமாகின்றன என்பதை முன்னரே கூறியுள்ளோம்.

மனத்தினால் ஒரு பொருளை விரும்புகிறோம். ஒரு காரியத்தைச் செய்ய நினைக்கிறோம். அந்த விருப்பமும், நினைப்புமே வினையாகின்றன. தாம் வளமுடன் வாழ வேண்டும், பிறரும் அவ்வாறே வாழ வேண்டும் என எண்ணுவோர் எவ்வித குறைவுமின்றி வாழ்வதைக் காணலாம்.

வாய்திறந்து, இன்ன காரியத்தைச் செய்கிறேன் எனக் கூறுகிறோம். அச்சொல்லே ஒரு வினையாகிவிடுகிறது. (எ-டு) சிலர் மற்றவரை வாழ்த்திப் பரிசுகள் பெறுகின்றனர்; மற்றும் சிலர் பிறரை ஏசித் துன்புறுத்துகின்றனர். கைகால், கண்காது போன்ற உடலுறுப்புகளால் காரியங்கள் செய்கிறோம். அவை

வினையாகின்றன. (எ-டு) நல்ல காட்சிகளைக் கண்டால் மகிழ்ச்சி யுறுகிறோம். கடுஞ் சொற்களைக் கேட்கும்போது மனம் வேதனை யடைகிறது. இவ்வை நடைமுறையில் நிகழ்வனவேயன்றோ?

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள் - 45)

என்பார் வள்ளுவப்பெருந்தகையும். அன்பு என்பது மனத்தின்கண் தோன்றி வளர்வது. அறன் என்பது செயலால் நேர்வது. இங்ஙனம் ஆன்மா வினை செய்வதற்கு மனம், மொழி, மெய் என்ற மூன்றும் வாயில்களாக அமைகின்றன.

அறம் செயவிரும்பு. - என்றார் ஔவை மூதாட்டி. அதை விரித்து நோக்கலாம்.

அ. அறம் செய விரும்புதல்--- மனத்தால் நிகழ்வது;

ஆ. அறம் செய்வதாகச் சொல்லுதல் --- மொழியால் (சொல்லால்) நிகழ்வது;

இ. அறம் செய்தல்- மெய்யால் (உடம்பால்) நிகழ்வது;

ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பயன் உண்டு.

இச்சை, ஞானம், கிரியை

சிவபெருமானின் உள்ளீடான ஆற்றலுக்கு அருளாற்றல் (அருட்சத்தி) என்பது பெயர். உயிரினத்துக்கு உறுதுணை புரிவதற்காக இந்த அருளாற்றலே இச்சை, ஞானம், கிரியை என முத்திற ஆற்றல்களாக விரிந்து வெளிப்படுகிறது.

சிவபெருமானின் இந்த மூன்று ஆற்றல்களைப் போலவே, ஆன்மாக்களுக்கும் மூவகை ஆற்றல்கள் உள்ளன. அறிவுப் பொருள்களையே ஆன்மா அல்லது உயிர் என அழைக்கிறோம். பொருள்களின்பால் விருப்போ, வெறுப்போ கொள்ளுவதாகிய விழைவாற்றலே இச்சை எனப்படும். விழைவு, விருப்பம், நசை, ஆசை, அவா என்பன போன்ற பல சொற்களாலும் அது குறிக்கப்படுகிறது.

அப்பொருள்களைப் பெறுவது யாங்ஙனம் எனச் சிந்தித்துத் திட்டங்கள் தீட்டுவதாகிய அறிவாற்றலை ஞானம் என்கிறோம். அஃது பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் என

மூவகைப்படும். உலகப் பொருள்கள் உள்ளிட்ட பாசங்களை ஊனக் கண்களால் கண்டு அறிதல் பாச ஞானம் எனப்படும். ஆன்மாக்களின் குற்றங்கள், குணங்கள் ஆகிய பண்பு நலன்களை ஆராய்ந்து அறிதல் என்பது பசு ஞானம் ஆகும்; கடவுளைப் பற்றித் திருவருட் கண்கொண்டு அறிந்து தெளிதலைப் பதி ஞானம் என்பர்.

விரும்பியதை அடைவதற்காக முனைப்பொடு செயல்படுவதாகிய செயலாற்றலைக் கிரியை எனக் கூறுகிறோம். இந்த மூன்று ஆற்றல்களும் உடைய பொருள்களே உயிர்கள் எனப்படும்.

ஆக, உயிர் என்பது எக்காலத்தும் அழியாத நிலையானதொரு பொருள்; அதன் உள்ளீடான ஆற்றலே அறிவு (ஞானம்), அந்த ஆற்றலைச் செம்மையுறச் செய்து, உயிரினத்தை நிலையான பேரின்பத்தில் செலுத்த இறைவன் திருவுளம் கொள்கிறான். அவனோ அனைத்தையும் பிழையின்றி ஒருசேர அறியவல்ல முற்றுணர்வினன்; பேரின்ப ஊற்று. அவன் ஒருவனால்தான் ஆன்மாக்களை ஈடேற்ற முடியும். ஆகவே அவன் உயிரினத்தின் இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்று ஆற்றல்களையும் தன்னுடைய இச்சா ஞான கிரியா சத்திகளால் இயக்கியருளச் செய்கிறான்.

இங்ஙனம் திருவருளாகிய இறை - ஆற்றல் ஆன்ம - ஆற்றல்களை இயக்க, ஆன்மாக்களின் வாழ்வியல் நாடகம் தொடர்கிறது.

அறிவாற்றலையே தனக்கு உருவாகக் கொண்ட அறிவுப் பொருள் உயிர்; அது விருப்பம் எனும் ஆற்றலை முன்னோடியாகக் கொண்டு செயல்-ஆற்றலில் இறங்குகிறது.

எந்த ஓர் ஆற்றலும் தனித்து நின்று இயங்க முடியாது என்பது அறிவியலும் ஏற்கிற உண்மை. ஆதலால், இச்சை என்னும் விழைவாற்றலுக்கு ஆதாரமாகச் சிவபெருமான் மனம் என்ற தத்துவத்தைப் படைத்தான். அதுபோல், அறிவாற்றலுக்குப் புத்தி என்ற தத்துவமும், செயலாற்றலுக்கு அகங்காரம் என்ற தத்துவமும், ஊழ் என்னும் வினைப் பதிவுக்குச் சித்தம் என்ற குண-தத்துவமும் ஆதாரமாகச் சிவபெருமானால் அருளப் பெற்றன.

இந்தப் பேரண்டம் என்பது ஒலி-ஒளிக் கூறுகளால் ஆனது. வண்ணம் (எழுத்து), பதம் (சொல்), மந்திரம் (தொடர்மொழி) என்ற மூன்றும் ஒலிக்கூறுகள். இவற்றை வாயில்கள் (அத்து வாக்கள்) என்பர். உலகத்தைத் தோற்றுவிக்கும் போது இவற்றைத் தலைவாயில்களாக வைத்து உலகைப் படைக்கிறான் இறைவன். ஒடுக்குங்காலத்தில், இவையே கடை வாயில்களாக ஆகின்றன.

மனம் வாக்கு காயம் என்னும் மூன்றையும் கருவியாகவும், இந்த ஆறு அத்துவாக்களையும் இடமாகவும் கொண்டு, உயிர் களாகிய நாம் நல்-வினை, தீ வினைகளை இடையறாது செய்து கொண்டிருக்கிறோம்.

மனம் நினைப்பதால் தோன்றும் வினைகள், நா சொல்லு வதால் ஏற்படும் வினைகள், உடம்பு செயற்படுவதால் நிகழ்கிற வினைகள் என வாயில்களை அடிப்படையாகக் கொண்டு, வினைகளை, மூவகைப்படுத்திக் காண்பது மரபு.''

'மனம் போல் வாழ்வு' எனப் பெரியவர்கள் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். மனதுக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம்? ஐயா?' என வினவினார் குப்புசாமி.

''எந்த ஒரு பொருளையும் முதலில் பற்றுவது மனம் தான் என்பது முதற்காரணம்.

அடுத்து, உயிர் என்னும் தலைவிக்கு மனமே ஆருயிர்த் தோழி. உயிரை அரசனாக்கி மனத்தை அமைச்சனாகச் சிந்திப்பது சைவ மரபு. 'அந்தக்கரணம் - ஆன்மா - அமைச்சு - அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே' என்பார், மெய்கண்டார் (சிவஞான போதம் 3-ஆம் சூத்திரம்)

மேலும் மொழியாலும் உடம்பாலும் காரியப்பட்டு வினை களைச் செய்கிறவர்களைவிட, மனத்தின்கண் நினைப்பால் வினை ஈட்டிக் கொள்ளுவோரே மிகுதி. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், காமம், மோகம், விருப்பு, வெறுப்பு முதலியன மனத்தால் நிகழும் வினைகளே. அவை அவ்வாறு நிகழ்வதற்கும் பல காரணங்கள் உண்டு.

அவற்றுள் இயலாமை என்பது முக்கிய காரணம். (அடைய முடியாத பொருள்களுக்காக ஆசைப்பட்டுத் தீய சிந்தனைகளையும் செய்து, எண்ணங்களை மாசுபடுத்திக் கொள்ளுவோரே இவ்வுலகில் மிகுதியாக உளர்.

மேலும் தனக்கு இன்னல் விளைவித்த ஒருவன் தன்னைக் காட்டிலும் உடல் வலியாலும், பண பலத்தாலும், பதவிச் செருக்காலும், சூழ்ச்சித் திறனாலும் தன்னால் சமாளிக்கமுடியாத அளவு வலிமையுள்ளவனாக இருந்தால், அவனை வெல்வதற்கு இயலாத சூழல் ஏற்படுகிறது. அப்போது, அமைதி அடைந்து ஒதுங்குவோரை விட மனத்தினாலேயே திட்டம் தீட்டுவோர் பலர்; அதைச் செயற்படுத்த முடியாதாயின், அந்த மனத்தினால், அவனைத் திட்டியாவது தீர்ப்பர்.''

''பிறருடைய வளர்ச்சியோ, வாழ்வோ கண்டு பொறாமை கொள்ளுகிறார்களே அஃது ஒரு வினையாகுமா? அவற்றிற்கும் பயன் உண்டா? ஐயா'' என வினவினார் குப்புசாமி.

''பொறாமை கொள்ளுவது, மற்றவர் பொருள்களை அபகரிக்க நினைப்பது முதலிய யாவுமே மனத்தால் நிகழ்த்துகிற வினைகளாகும், மனத்தால் செய்யும் வினைகளுக்கும் உரிய பயன் உண்டு. அஃது உடனடியாகவும் அமையலாம். காலம் கடந்தும் நிகழலாம்.

நல்வினைப் பயனைப் போன்றதே தீவினைக்குரிய பயனும், ஒரு சமயம் மனத்தால் பிறர்க்குத் துன்பம் அளிப்பவன், மறுசமயம் அதேபோன்ற மனத்துயரை மற்றவர்கள் தனக்குத் தரத் தானும் அதை அனுபவித்தே தீரவேண்டும். ஆகவே மனத்தாலும் பிறர்க்குக் கேடு நினைக்கவோ, பிறர்மனம் நோகும்படி பேசவோ, செயற்படவோ, பிறவாறாகத் துன்புறுத்தவோ நினைத்தலும் கூடாது.

'நினைப்பு பிழைப்பைக் கெ(ா)டுத்தது.' என்றும் ஒரு வழக்கு மொழியைக் கேட்டிருப்பீர்களே! அதில் எத்துணை அளவு உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன!

மனத்திற்கு இரு நோக்கு உண்டு. மனத்தின்கண் எழுகின்ற விருப்பம் பசுமையும் நேர்மையும் உடையதாக இருப்பின், புத்தியின்கண் அறிவும் நல்வழியிலேயே சிந்திக்கும்; செயல் திறனும் அதற்கேற்பப் பண்பட்டு அமையும். அந்த வினையின் பயனும் சிறந்ததாகவே இருக்கும். இதையே மேற்கண்ட பழமொழிகள் நினைவுறுத்துகின்றன. இதற்குப் பெரிய புராணத்தி லிருந்து சான்றுகள் பல கூறலாம்.

அவற்றுள் ஒன்று பூசலார் நாயனார் வரலாறு. பூசலார் என்பவர் ஒரு மெய்யடியார்; அவர் நாளும் அந்தர்யாகமாகச் சிவபூசை செய்யும்போது, சிவபெருமானுக்கு அழகிய ஒரு கோயிலைத் தன் மனத்தகத்தில் கட்டிக் கொண்டே வந்தார். சிறிது காலத்தில் கோயில் திருப்பணி மனத்தின்கண் நிறைவுற்றது, எனவே, குடமுழுக்குக்கான நாளையும் தீர்மானித்துக்கொண்டார்.

அக்காலத்தில் காஞ்சியை ஆண்டவன் மாமல்லன் என்ற பல்லவ மன்னன். அவன் அங்குக் கயிலாயநாதர்க்குப் பெரும் பொருட்செலவில், அழகியதோர் கற்கோயிலை எழுப்பி அதற்குக் குடமுழுக்குச் செய்ய நாள் குறிப்பிட்டான்.

இரண்டும் ஒரே நாளாக அமைந்தது. சிவபெருமான் மன்னனின் கனவில் தோன்றி, நாயனாரின் கோயில் குடமுழுக்குப் பற்றிக் கூறி, அவனை வேறோர் நாள் குறிக்குமாறு பணித்தார். மன்னன் வியந்து, நாயனாரின் கோயிலைக் காணப் புறப்பட்டான். தான் அமைத்த கற்கோயிலைவிட, நாயனாரின் அன்பு உள்ளத்தில் கட்டப்பெற்ற மனக்கோயில் தனிச்சிறப்பு வாய்ந்தது என்ற உண்மை அப்போது தான் அவனுக்கு தெளிவாயிற்று.''

''மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் எவ்வாறு நெருங்கிய தொடர்புடையவை? ஐயா சற்றே விளக்க வேண்டு கிறோம்'' என்றார் குப்புசாமி.

''மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் அகத்தே அமைந்த நுண்கருவிகள்; அவை மூன்றும் இணைந்து ஓர் உடம்பாகவே இயங்குகின்றன. அதற்கு மனோமயகோசம் என்பது பெயர். அவற்றுள் மனம் என்பது பற்றும்; புத்தி நிச்சயிக்கும்; அகங்காரம் செயற்படுத்தும் - எனச் சைவ ஞானநூல்கள் அறிவுறுத்தும்.

நம்முடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஆதாரமாக இருப்பது மனம் என்ற தத்துவம்; நம் அறிவு விளங்கி இருப்பதற்கும், விளங்காதிருப்பதற்கும் ஆதாரமாக இருப்பது புத்தி என்ற தத்துவம்; செயல்திறன் வெளிப்பட ஆதாரமாக இருப்பது அகங்காரம் என்னும் தத்துவம்.

உயிரினம் முழுமைக்குமே மனம் என்ற கருவி உண்டு; ஆயினும் ஓரறிவுத் தாவரங்களுக்குத் தொடு உணர்வு மட்டுமே

மேலோங்கி இருக்கும். ஐயறிவுப் பறவை, விலங்குகளுக்கோ கீழ்மைப் பண்புகளிலேயே விருப்பம் மிகுந்திருக்கும்.

அறநெறி, நேர்மை, உண்மை, இறைமைச் சிந்தனை முதலிய உயர்ந்த பண்புகளை உடையது மனித மனம். ஆகவே, மிகப் பழங்கலந்தொட்டே மனித மனம் பெருமதிப்புக்கு உரியதாகக் கருதப்படுகிறது. மனிதனுக்கு அமைந்த ஆறாவது அறிவுக் கருவியாக மனத்தைப் போற்றியுள்ளார் தொல்காப்பியர்.

மனிதனுடைய மனம் கலங்கி மாசுடையதாக இருந்தால், அவன் முந்தைய விலங்கு நிலையிலிருந்து வெளியேறவில்லை என்பது பொருள். அத்தகையோர் மாக்கள் என்றே குறிக்கப் பட்டனர்.

மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று அகக் கருவி களும் ஒன்றி நின்று ஒளிபொருந்திய சிவத்தையே சிந்தித்திருந்தால், மனத்தின் கண் மாசுகள் நீங்கி, அறிவில் தெளிவும், செயலில் விழுப்பமும் அமையும். அதையே செவ்விய மனிதப் பண்பாகக் கருதினர் நம் பண்டைய தமிழ் முன்னோர்.

மனத்தின் நினைவால் உண்டாகும் நற்காரியங்கள் அருளுடைமை, பொறை, பிறர் பொருள் விரும்பாமை, செய்ந் நன்றி மறவாமை, வஞ்சகம் இன்மை, நடுவுநிலைமை நிற்றல், அழுக்காறு இன்மை, அவா அறுக்கை, பிறர் துயர் கண்டு இரங்கல், இடையறாச் சிவசிந்தனை முதலியன.

வாக்கினால் உண்டாகும் நல்வினைகள்

தருமம் போதித்தல், புறம் கூறாமை, உண்மை பேசுதல், இனியன சொல்லுதல், திருமுறை மற்றும் வேதாகமங்களை ஓதுதல் முதலியன.

உடம்பினால் உண்டாகும் நற்செயல்கள்

அரிய தருமங்களைச் செய்தல் பூசை ஓமங்களைச் செய்தல், பகுத்துண்ணல், நந்தவனம் மற்றும் குளம் கூவல் அமைத்தல், கல்விக் கூடங்கள், அறச் சாலைகள் நிறுவுதல், திருமடம், திருக்கோயில் கட்டுவித்தல் முதலியன.

இந்த மூவகை வினைகளையும் சற்றே கூர்ந்து நோக்கினால், மற்றொரு உண்மை புலனாகும். எந்த ஒரு விஷயத்தையும்

மனமே முதலில் பற்றுகிறது. மனத்தின் துணையின்றி அறிவுக் கருவிகளோ, செயற் கருவிகளோ, செயற்பட இயலாது.''

''ஆம் ஐயா, அன்று வகுப்பில் பாடம் நடத்திக்கொண்டிருந்தேன். மாணவர்கள் எல்லோரும் ஒழுங்காகப் பாடம் கேட்பது போல் தோன்றியது. ஒரு மாணவனை அப்பாடம் தொடர்பாக வினா ஒன்றைக் கேட்டேன். அவனால் பதிலிறுக்க முடியவில்லை. தூல-உடம்பால் அங்கே இருந்த அவன், மன-உடம்பால் வேறு எங்கோ அலைந்து கொண்டிருந்திருக்கிறான்'' என்றார் சிவசாமி.

''ஆம், நிலைமை இவ்வாறிருக்க, மனம் பற்றிய அத்துணை விடயங்களையும் நாம் யாரிடமும் சொல்லுவதுமில்லை. அதே போல் செயற்படுத்துவதுமில்லை. மேலும், மனம் பற்றியவற்றுள், வெளியில் பிறரிடம் சொல்லுகிற பகுதி குறைவு என்றாலும், அவற்றினும், செயற்படுத்துகிற பகுதியோ மிகமிகக் குறைவே ஆகும்.

மனத்தின் வேகம் மற்ற இரண்டு வாயில்களையும்விட அதிகம். ஆதலால் செயற்கருவிகளாலும், அறிவுக் கருவிகளாலும் செய்கிற வினைகளைவிட, மனத்தால் நினைந்து, விருப்பு-வெறுப்புகளை வளர்த்துக் கொண்டு கற்பனை செய்து நிகழ்கிற வினைகள் அளப்பரியனவாகின்றன. மனம், மொழி, மெய் ஆகிய இம் மூன்றாலும் வினை செய்யப்படும்போது, அஃது ஆகாமியம் எனப்படும். அதன் விளைவும் இன்பதுன்பங்கள் ஆகின்றன.

பயன்கருதிய வினை (காமியம்)

''நாளும் திருக்கோயில் சென்று சிவபெருமானை வழி படுவது அருள்-வினைகளுள் ஒன்று என்று சொன்னீர்கள். மிகவும் நன்று. எனினும் பெரும்பாலோர் இறைவனிடம் ஏதேனும் வேண்டுதலோடுதான் திருக்கோயிலுக்கு வருகிறார்கள். இறைவனை வழிபடும்போது, அவ்வாறு ஏதேனும் பயனை எதிர்நோக்கி வழிபடலாமா?'' - எனச் சிவசாமி வினவினார்.

''தாங்கள் சொல்லுவது முற்றிலும் உண்மையே. உலகில் பெரும்பாலோர் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதற்கான பயனை எதிர்நோக்கியே செய்கின்றனர். அன்றைய உலக வாழ்வில், குழந்தைப் பேற்றிற்காகவும், பொன்னையும்,

புகழையும் அடைதற்காகவும், பதவி உயர்வுகளுக்காகவும், பட்டங்கள் பெறுவதற்காகவும் -என, ஏதோ ஒரு சில பயன் களை விரும்பிக் காரியத்தில் ஈடுபடுவோரே மிகுதி.

பயனை எதிர்நோக்கிச் செய்கிற வினைகள் காமியம் என்றும், பயன் கருதாது செய்யப்பெறுகிற வினைகள் நிஷ்காமியம் என்றும் அழைக்கப்படும். காமம்=விருப்பம்; காம்யம்=பயனை எதிர்பார்த்தல், நிஷ்காமியம்=பயன் கருதாமை.

மக்களுக்கு உதவிகள் செய்யும்போது மட்டுமன்று, மகேசுவரனை வணங்கும்போதுங்கூட, வரம் என்ற பெயரால் அவர்கள் பலப்பல நன்மைகளை இறைவனிடம் எதிர்பார்க்கின்றனர்.

இராமனை மகனாகப் பெற விரும்பினான் தசரதன்; உள்ளத்தின் கண் அதே விருப்பத்தோடு, இறைவனை வேண்டி, வேள்வி செய்தான். அது புத்திரனைப் பெற விரும்பிச் செய்யப் பெற்ற யாகம்; ஆதலால், அவ்வினை புத்திர-காமேஷ்டி எனப் பெயர் பெறுகிறது. காமம் என்றால், ஒன்றை அடைவதில் உள்ள விருப்பம் -என்பது பொருள்.

குழந்தைப்பேற்றிற்காகச் சிவபெருமானை நோக்கிச் செய்யப்பெறுகிற வேள்வி, புத்திரகாமேஷ்டி யாகம் என்பதைப் போல், இந்திர பதவியை அடைவதற்காகக் குதிரைகளைக் கொண்டு செய்யப்பெறுகிற வேள்வியை அஸ்வமேத யாகம் என்பர்.

'இறைவா! நான் உனக்கு பால் அபிடேகம் செய்கிறேன், பன்னீர் அபிடேகம் செய்கிறேன், நீ எனக்குப் பல கோடி செல்வத்தைத் தா'-எனக் கடவுளிடமும் பேரம் பேசுவோர் பலர். குழந்தைப் பேற்றிற்காகச் சிலர் மூன்று ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் எனப் பாத யாத்திரை மேற்கொள்ளுவர்; வேண்டி யதைப் பெற்ற பிறகு இறைவனையே மறந்து விடுவோரும் உளர். பொருட்செல்வத்தையும், உடல் நலத்தையும் கருதி உண்டியலில் காணிக்கை செலுத்துதலும், மொட்டை அடித்துக் கொள்ளுதல் போன்ற வேண்டுதல்களை மேற்கொள்ளுவதும் பலரிடம் இக்காலத்தில் காணப்பெறுகிற பண்பு.

பயன்கருதா வினை (நிஷ்காமியம்)

தான் பெற்ற குழந்தைக்கு, அதன் பசி அறிந்து பால் ஊட்டுகிறாள் தாய். அஃது அன்பின் பெருக்கு. குழந்தையிட மிருந்து தாய் எவ்விதப் பயனையும் எதிர்பார்ப்பதில்லை அன்றோ?

அதேபோல், ஒருவருக்கு ஒரு நன்மை தருகிற காரியத்தைச் செய்யும்போது, அதனால் தனக்கு என்ன பயன் கிடைக்கும்? -எனக் கருதுதல் சிறப்பாகாது. பயனை எதிர்பாராமல் காரியம் செய்வது, நிஷ்-காமியம் எனப்படும். அதன் உயர்வு பற்றித் திருவள்ளுவரும்,

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது (குறள் - 103)

என்று சிறப்புரைத்தனர்.

சாலையில் விரைந்து வருகிறது சரக்கூர்தி ஒன்று. ஓரமாகச் சென்று கொண்டிருக்கிறான் ஒரு சிறுவன். சரக்கூர்தி அவனை மோதி, அவன் அதில் அடிபட்டு இறந்து விடுகிற ஆபத்தான சூழ்நிலை. அப்போது தன் உயிரையும் பொருட்படுத்தாது, அந்த ஆபத்திலிருந்து அச்சிறுவனை வழிப்போக்கர் ஒருவர் காப்பாற்றுகிறார். தனக்கென ஒரு பயனையும் கருதாமல் அவர் செய்கிற அவ்வுயரிய செயல் ஒரு நிஷ்காமிய வினையே.

அதைப்போன்றதுதான் மெய்யடியார்களின் நிலையும். அவர்கள் சிறந்த அருளாளர்கள்; இறைவனிடம் எவ்வித வரமும் கேட்கமாட்டார்கள். ஆண்டவனை அகத்தேயும் புறத்தேயும் உள்ளன்போடு வழிபடுகிறவர்கள்.

ஊழ்வினைப் பயனாகிய இன்ப துன்பங்களை முற்றிலுமாக நுகர்ந்து தொலைப்பதையும் முந்தைய வினையின் முதலை முற்றிலுமாகக் களைவதையும், எல்லாம் இறைவன் திருவுள்ளம் என்று அமைதி உள்ளத்தோடு அவனது திருவருள் இன்பத்தில் திளைத்திருப்பதையுமே குறிக்கோளாகக் கொண்டு, உலகப் பணிகளை மேற்கொள்ளுதல் அவர்கள் இயல்பு.

அவன் அம்மையப்பன்; அவர்கள் அவனுடைய அன்புக் குழந்தைகள்; அவர்களுடைய தேவைகளை அவனே அறிந்து,

அனைத்தையும் அவர்களுக்கு அருளுகிறான். இஃது உறுதியிலும் உறுதியான அனுபவ உண்மையாகும்.

உடனே பயனளிக்கும் வினை (திருஷ்ட ஜன்ம போக்கியம்)

''அதிர்ஷ்டம் அதிர்ஷ்டம்'' - என்று சொல்லுகிறார்களே, அதிர்ஷ்டம் என்றால் என்ன? அது எவ்வாறு வருகிறது? என்பது பற்றி அறிய ஆவலுடையோம், ஐயா!'' என்றார் சிவசாமி.

வினைகளுக்கான இன்பதுன்பப் பயன்கள், அவ்வினை செய்தாரைச் சென்று அடைவது உறுதியே என முன்னர்க் கண்டோம்; ஆயினும், வினைகள் செய்யப்பட்ட வரிசை முறை யில் பயன் தருவதில்லை. தத்தம் முதிர்ச்சிகளுக்கு ஏற்பவே கால அடைவில் பயன் தருகின்றன. காலவேறுபாட்டில் பயன் தருகிற நிகழ்ச்சிகளுக்கு நம் நடைமுறை வாழ்விலிருந்தே பல சான்றுகள் காணலாம்.

நம் வீட்டின் கொல்லைப்புரத்தில் நிலத்தைச் சீர் செய்து, பாத்தி கட்டுகிறோம். ஒரே முகூர்த்தத்தில் ஒரு இடத்தில் கீரை விதைகளைத் தூவுகிறோம், சிறிது இடம் தள்ளிச் சில வாழை முட்டிகளை (தாய்க்கிழங்குகளை)ப் பதிப்பிக்கிறோம். மற்றோர் இடத்தில் தென்னையைப் பயிரிடுகிறோம்.

ஒரே முகூர்த்தத்தில் நடப்பட்டபோதிலும், அவை பயன் தருகிற முறையாலே கால வேறுபாடு காணப்பெறுகிறது. அவற்றுள் கீரை சில வாரங்களிலேயே உணவுக்கு வந்துவிடு கிறது. வாழைமரம் பயன் தரச் சில மாதங்கள் ஆகின்றன. தென்னையோ காய்த்துப் பயன்தர சில வருடங்கள் எடுத்துக் கொள்ளுகிறது.

இங்ஙனம் ஒவ்வொரு வினையும் அதனதன் வன்மை மென்மைகளுக்கு ஏற்ப வெவ்வேறு காலங்களிலேயே பயன் தருகின்றன. பயன்தரக்கூடிய காலத்தை நோக்கும்போது. ''உடனே பயன் தருபவை, காலம் கடந்து பயன் தருபவை இருபோதும் பயன் தருபவை'' என வினைகளை மூவகைப் படுத்துவது மரபு.

திருஷ்டம் என்றால் பார்வை என்பது பொருள். சில வினைகள் உடனுக்குடன், அவரவர் நினைவு மறவாத காலத்திலேயே, அவரவர் பார்வையிலேயே, உரிய பலன் தருவனவாக இருக்கும்; அவை திருஷ்ட ஜன்ம போக்கிய வினை எனப்படும்.

வீட்டில் காய்கறி நறுக்கும்போது, கத்தியால் வெட்டுண்ட காயத்திலிருந்து உடனே இரத்தம் வருகிறது. கடுக்கவும் தொடங்கு கிறது. ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதுதானே பழமொழி? அதற்கேற்பக், காலையில் கத்தியால் வெட்டிக் கொண்டால் மாலையில்தானே இரத்தம் வரவேண்டும்? - என வினவிச் சமாதானம் கூறி, வலியைத் தள்ளிப்போட முடியுமா? உணவு சீரணிக்கவில்லை என்றால், வயிற்று நோவு, பேதி போன்ற தொல்லைகள் உடனேயே ஏற்படுகின்றன அன்றோ?

ஆற்று நீரின் சுழியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தது ஒரு குழந்தை, மிகுந்த துணிவோடு, எவ்வித பயனும் கருதாமல் தண்ணீரில் குதித்து, அதைக் காப்பாற்றினான் ஓர் இளைஞன்; அவனுக்கு நகர மக்கள் ஒன்று கூடி விருது வழங்கிப் பாராட்டினர். வினைக்கு உரிய பயன் இப்பிறவி யிலேயே நிகழ்தலின், இவை எல்லாம் திருஷ்ட - ஜன்ம - போக்கிய - வினைகளாகும். புத்திரகாமேஷ்டி யாகம் போன்ற பெருவேள்விகளும் இத்தன்மையனவே.

இப்பொழுது செய்கிற வினைகள் இப்பிறப்பில் நம் கண் எதிரிலேயே உடனுக்குடன் பயனளிப்பதைத் திருஷ்ட ஜன்ம போக்கிய வினை என அறிந்தோம். அடுத்து, அதிருஷ்ட ஜன்ம போக்கிய வினை பற்றிக் காண்போம்.

மறைந்திருந்து பயனளிக்கும் வினை அதிர்ஷ்டம்

'அதிர்ஷ்டம், அதிர்ஷ்டம் எனக் கூறுகிறார்களே! அதில் ஏதேனும் உண்மை உள்ளதா? ஐயா!' என வினவினார் குப்புசாமி.

''அதிர்ஷ்டம் என்பதும் உண்மையே, நாம் இப்போது மெய்ப்பொருளைக் காண்பதற்கான முயற்சி செய்கிறோமே, இது கூட நாம் முன்னர்ச் செய்த தவமாகிய பெருவிருப்பின் காரணமே!

முன்னர் எப்பொழுதோ செய்த வினை, நியதிப்படி முதிர்ச்சிக் காலம் வரை மறைந்திருந்து, பின் ஒரு சமயம் நாமே எதிர்பாராத சூழலில் நமக்குப் பயனைத் தருவது உண்டு. ஒரு பிறப்பில் செய்த வினை மற்றொரு பிறப்பில் பயன் தருமாயின், அங்ஙனம் எதிர்பாராது வருகிற இன்பதுன்பங்களையே அதிருஷ்ட - ஜன்ம - போக்கிய - வினை (சுருக்கமாக அதிர்ஷ்டம்) என்பர். அஸ்வமேத யாகமும் அதற்குரிய இந்திர பதவியும் போன்றவை அவ்வகையில் அடங்கும்.

குலுக்கல் சீட்டுகளால் வருகிற அதிர்ஷ்டப் பரிசுகளும் அத்தன்மையனவே. அதிர்ஷ்டத்தினால் இன்பம் மட்டும்தான் வரவேண்டுமென்பதில்லை, துன்பமும், துயரமும்கூட, அதிர்ஷ்டத்தின் விளைவே. பலகாலமும் சீட்டுகளை வாங்கிப் பரிசே விழாமல் ஏராளமான பணத்தைத் தோற்பதும், துர் + அதிர்ஷ்டமே.

கொலை செய்த ஒருவன், இப்பொழுதைக்குச் சட்டத்தின் பிடியிலிருந்து ஏதோ ஒரு வழியில் தப்பிவிட்டாலும், மறுமையில் அதற்கான தண்டனையை அடைவது உறுதியேயாகும். ஆகவே, தற்பொழுது தீயவனாக இருக்கும் ஒருவன் பலவகை இன்பங்களைத் துய்த்துக் கொண்டிருக்க, நல்லவனாக இருக்கும் மற்றொருவன் துன்பத்தில் துவளுகிறான் எனில், இவை இரண்டுமே முந்தைய பிறப்புகளில் அவரவர் செய்த நல்வினை, தீவினைகளின் விளைவேயாம்.''

சிவசாமி உடனே ஐயத்தை எழுப்பினார். ''ஐயா, சென்ற ஆண்டு நம் ஊர்க் கருப்பண்ணன் மாடசாமிக்குக் கடன் கொடுத்தான், கடன் வாங்கிய மாடசாமி மிகவும் நாணயமானவன்; ஆயினும், கணக்கு நேராவதற்கு முன்னரே இறந்துவிட்டானே. இப்பொழுது கடன்பட்ட அவ்வினை எவ்வாறு நேராகும்?''

''உடனடியாக இல்லை என்றாலும், என்றோ ஒருநாள் அக்கடன் நேராக வேண்டும் என்பதே நியதி. சில சமயங்களில் வேறொரு விதமாகவும் நேர்ந்திருக்க வாய்ப்பு உளது; கருப்பண்ணன் முன்னர் ஏதோ ஒரு வகையால், அல்லது ஏதோ ஒரு பிறப்பிலே, மாடசாமியிடம் வாங்கிய பொருளை இப்பொழுது வட்டியும் முதலுமாகத் திருப்பிக்கொடுத்ததாகவும் இது இருக்கலாம்.

ஆயினும் இது புதிய தொடர்புதான் எனக் கொண்டால் அவர்கள் இருவரும் பேரக்குழந்தைகளாக மீளவும் பிறப்பு எடுப்பர்; அப்பொழுது இன்றைய கடன் முழுவதும், அசலும் வட்டியுமாகச் சேர்த்துச் செலுத்தப்பெற்றுக் கணக்கும் நேராகும் - என்பது உறுதி. பொருளைக் கைவரப் பெற்றவன் அதிர்ஷ்டக்காரன், அதனை இழந்தவன் (கொடுத்தவன்) துரதிஷ்டக்காரன் என்பதாகவே அன்றைக்குப் பலரும் கூறுவர்.

இங்ஙனம் முன்னர், என்றோ ஒரு நாள் செய்த வினை, நம் கண்ணும் கருத்தும் மறந்த நிலையில், காலங்கடந்து நமக்கு ஊட்டப்பெற்று, அது உரிய பயனைத் தருவதையே அதிர்ஷ்டம் என்றனர். எனவே அதிர்ஷ்டம் என்பது இன்பமாகவும் இருக்கலாம், துன்பமாகவும் இருக்கலாம், விரவியும் இருக்கலாம்.''

இருகாலும் பயனளிக்கும் வினை (திருஷ்டாதிருஷ்டம்)

மற்றும் சில வினைகள் ஒருபகுதிப் பயனை உடனுக்குடன் இப்பொழுதே தந்து, மறுபகுதிப் பயனைக் காலங்கடந்த நிலையில் பின்னொருகால் தருவனவாகவும் அமைவதுண்டு.''

இளமைப் பருவத்தில் மாங்கன்றினை நட்ட ஒருவன், தன் முதுமைப் பருவத்தில் அம்மரம் தந்த மாம்பழத்தை உண்டு மகிழ்கிறான். மேலும், அவனே மறுபிறப்பில் அவ்வீட்டில் தன் மகனுக்கு மகனாக, -பேரனாகப் பிறந்து அனுபவித்தலும் கூடும். அதனால்தான், தாத்தா ஈட்டிய சொத்தில் பேரனுக்கே உரிமை மிகுதி - என்றவாறு சொத்துரிமைச் சட்டத்தை அரசு உருவாக்கி யுள்ளது.

இவ்வாறு, பயனின் ஒரு பகுதி இப்பிறவியிலும், மற்றொரு பகுதி மறுமையிலும் கிடைப்பதாயின், அது திருஷ்டாதிருஷ்ட ஜன்ம போக்கிய வினை எனப்படும்.''

சிவசாமி தொடர்ந்தார் ''ஐயா, புண்ணிய பாவங்களைப் பற்றிச் சிந்திக்கும்போது, அடியேனுக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. சென்ற ஆண்டு மதுரைக்குச் சென்றிருந்த போது, செல்வந்தர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் தன் மனைவி யாரோடும் பேரப்பிள்ளையோடு என்னையும் அழைத்துக்கொண்டு பார்வையற்ற சிறார் பள்ளிக்குப் புறப்பட்டார். அங்குச் சென்றதும், தன் பேரப்பிள்ளையைக் கொண்டு பார்வையற்ற அப்பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்புத் தின்பண்டங்களையும், துணிமணி களையும் வழங்கினார். அன்றைய மாலைப் பொழுது எல்லோருக்கும் இன்பமாக இருந்தது. இயலாதவர்களுக்கு இங்ஙனம் உதவுவதும் அறச்செயல்தானே?'' என்று தம் ஐயத்தை நயமுற வினவினார், சிவசாமி.

உடனே, அருகிலிருந்த குப்புசாமியும், ''ஐயா! சில ஆண்டு களுக்கு முன் நான் கோலாலம்பூர் சென்றிருந்தேனல்லவா?

அப்போது அங்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் அறிமுகமானார். அவர் தமிழகத்திலுள்ள மனவளம் குன்றியோர் பள்ளிக்காக நூறாயிரம் பொற்காசுகளை நன்கொடையாக அளித்ததைக் கூறினார். 'கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்குத் திருப்பணி' - என்பதைவிடக் கண்ணுக்குத் தெரிந்த எளியோர்க்கு உதவுவதிலேயே தமக்கு நாட்டம் மிகுதி என்றும் கூறினார். அது வினையின் எந்த வகையைச் சேர்ந்தது? அதன் பயன் என்னவாயிருக்கும்? சற்றே விளக்குங்கள், ஐயா!'' -என வேண்டிக் கொண்டார்.

'அறம் செய விரும்பு, ஈவது விலக்கேல்' என்று கூறி, வாழ்வியலில் ஆற்றுப்படுத்தியுள்ளார், ஔவை மூதாட்டியும். 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம்' என்பதும் நல்லோர் வாக்கே. இயலாதவர்களுக்கு உதவுவது நல்வினை; அது புண்ணியப் பயனை நல்கும் என்பதும் உறுதி, ஆயினும். அறம் என்பது, பெயரளவில் ஒன்றுபோல் காணப்பெறினும், உள்ளீடான உண்மைகள் பல உள்ளன.

ஆயிரக்கணக்கில் கல்வி கற்கும் ஒரு பள்ளியில் எல்லா மாணவர்களும் ஒரே வகுப்பிலா படிக்கிறார்கள்? அல்லது, ஒரு வகுப்பில் படிக்கும் அத்தனை மாணவர்களும் ஒரே மாதிரியான அறிவுடையவர்களாக இருக்கிறார்களா? பலதர அறிவு, பலவகைப் படிப்பு; என்பது போல, நல்வினைகள் பலதரத்தனவாக இருப்பதால், அவை தொடர்பான புண்ணியப் பலன்கள் பலவாகி, அவற்றிற்குரிய இன்பத்துன்ப விளைவுகளும் வேறுபடுவது இயல்பேயன்றோ? அக்கருத்தின் அடிப்படையில் வினைகள் ஐவகையாகின்றன.

''சிவபெருமானால் இயற்றப்பட்டவை வேதங்களும், ஆகமங்களும். தாவரம் முதல் மனித, தேவர்கள் வரை அனை வருக்கும் பொதுவான வாழ்வியல் நெறிகளையே நான்கு வேதங் களும், அவற்றின் ஆறு அங்கங்களும் அறிவுறுத்துகின்றன. பள்ளியில் எல்லா மாணவர்களுக்குமான பொதுவிதிகள் போலவே, எல்லா உயிர்களுக்கும் ஒட்டு மொத்தமாக வேதங்களும் சில வாழ்வியல் நெறிகளைப் போதிக்கின்றன. ஆகவே அவை 'பொதுநூல்' எனப்படுகின்றன.

பள்ளியில் அறிவு மேம்பட்ட மாணவர்கள் சிலர் இருப்பது போல, ஆன்மாவின் ஈடேற்றத்தைச் சிந்தித்து மெய்ப்பொருளை

நாடி நிற்போர் பலர் உளர். அத்தகையோருக்கு அவர்கள் ஒழுகவேண்டிய சீரிய நெறிமுறைகளை, 28-ஆகமங்களும், இருநூற்று ஏழு துணை ஆகமங்களும் அறிவுறுத்துகின்றன. ஆகவே அவை 'சிறப்பு நூல்' எனப்பட்டன.''

''வேதங்களும் ஆகமங்களும் எவ்வாறு வினை செயல் வகைகளைப் போதிக்கின்றன? ஐயா'' என வினவினார் சிவசாமி.

''வேதங்களில் வேள்வி செய்யும் முறைகள் போதிக்கப் படுகின்றன. அவை அறிவுறுத்தியவாறு உலகியல் நன்மை கருதி, உடற் கருவிகளால் (சரீரத்தால்) செய்யப்படும் வினைகள் வைதிக-வினையாம். அவ்வேதவினைகளும் உலகவினைகள் என்றும், வைதிக-வினைகள் என்றும் இரண்டு வகைப்படும்.

உலக வினை

மருத்துவமனைகள் கட்டுதல், கிணறு தோண்டுதல், தண்ணீர்ப்பந்தல் முதலிய அறச்சாலைகள் அமைத்தல், உழைக்க இயலாதவர்களுக்கு உதவுதல், சாலை ஓரங்களில் மரங்களை நடுதல் போன்றவை உலக மக்களின் நலன் கருதிச் செய்யப் படுகிற பௌதிக காரியங்கள் (ஐம்பூதத் தொடர்பான வினைகள்). இவை உலகவினை எனப்படும். தொல்காப்பியம் போன்ற பண்டைய தமிழ்நூல்களில் இதனைப் புறத்திணை என்பர்.

உலக வினைகள் முழுமையும் உடம்பினாலேயே செய்யப் படுகின்றன. நாம் அணிகிற சட்டையின் முன்புறம் பின்புறம் போல, நம் உடம்பினை முன்பக்கம், பின்பக்கம் என இரண்டு கூறுகளாகச் சிந்திப்பின், பல அரிய உண்மைகள் புலனாகும்.

முன்பக்கத்திலுள்ள உறுப்புகளால் செய்யப்படும் காரியங்கள் அனைத்தும் கீழ்முகப்பட்டனவே; நம் வாயில் போடும் உணவு, தண்ணீர், போன்றவை கீழ்முகமாக இறங்கி வெளியேறுகின்றன; மூக்கினால் சுவாசிக்கும் காற்றுக் கீழ்முகமாகப் பயணம் செய்கிறது; இவை போலவே பாலுறவுகளும் கீழ்முகப் பட்டனவே. இவற்றைத் தத்துவ நூல்கள் கூறுகிற கீழாலவத்தை என்பதோடு ஒப்பிடலாம்.

உலக/வைதிக வினைகள் எவ்விதப் பயனைத் தரும் என ஆகமங்கள் அறிவுறுத்துகின்றன. வினைக்கு ஏற்ற விளைவு என்ற அடிப்படையில், வயிற்று, அடிவயிற்று வினைகள்

அங்கேயே பலனைத் தருவது இயல்பாகுமன்றோ? உலகவினைகள் நிவிர்த்தி கலையை ஆதாரமாகக்கொண்டு நிகழ்கின்றன; ஆதலால் அவற்றின் பயன்களும் நிவிர்த்தி-கலையின் அடங்கியுள்ள 108-புவனங்களிலும் ஆன்மாக்கள் போகங்களைப் புசிப்பிக்க உதவும்.

வைதிக-வினைகள்

வேத நூல்கள் அறிவுறுத்திய வண்ணம், வேத மந்திரங் களைக் கொண்டு, தெய்வங்களை நோக்கிச் செய்யப்பெறுகிற வேள்வி முதலியன வைதிக வினை எனப்படும். உலக வினைகள், வைதிக வினைகள் இரண்டுமே மக்கள் நலன் கருதிச் செய்யப் படுகிற காரியங்களே; (எ-டு) மழைவளம் கருதி இந்திரன், வருணன், மாரியம்மன் முதலியோரை வேண்டுதல் போன்றனவும் இதில் அடங்கும்.

உலகவினைகள் நிவிர்த்தி-கலையில் அடங்கியுள்ள 108 புடனங்களிலும் ஆன்மாக்கள் போகங்களைப் புசிப்பிக்க உதவுவது போலவே, வைதிக வினைகள் பிரதிட்டா-கலையில் அடங்கியுள்ள 56-புவனங்களிலும் போகங்களைப் புசிப்பிக்கக் கருவியாகும். (இந்த 108+56=164 புவனங்களும் அசுத்த தத்துவ புவனங்களே.)

இவ்விரண்டு வினைகளுமே ஆன்மாக்களின் உடம்பு நலத்தையும், உடம்பின் புறத்தேயுள்ள உலகியல் பொருள்களின் வளத்தையுமே குறிக்கோளாகக் கொண்டன. நிவிர்த்தி கலையும் பிரதிட்டா கலையும் அசுத்த தத்துவ புவனங்களுக்கு ஆதாரமாக இருப்பவை. அக்கலைகளில் அடங்கிய அசுத்த போகங்களையே இவ்வினைகள் பயப்பதால், உலக வினையையும், வைதிக வினையையும் அசுத்த கன்மம் என்றனர்.

அடுத்து, ஆன்ம ஈடேற்றத்துக்காகச் செய்யப்படுகிற புண்ணிய-வினைகளைப் பார்ப்போம்.

அத்தியான்மீகவினை

இவை உடம்பும் மனமும் இயைந்து நின்று செய்யும் வினைகள். 1. அகப்பூசனையாக (அந்தர்யாகமாக)ச் சிவபெருமானைத் தத்தம் நெஞ்சில் நாளும் வழிபாடு இயற்றுதல், உலகச் சிற்றின்பங்களைத் துறத்தல் முதலியன.

நம் உடம்பில் இருதயம், நுரையீரல் முதலிய உள்-உறுப்புக்கள் உடம்பின் மையத்தில் இருந்து கொண்டு இரு

பக்கமும் செயற்படுகின்றன அன்றோ? சுத்த-அசுத்த இரத்தங்களாலும், சுத்த-அசுத்த காற்றுகளாலும் இவற்றின் இயக்கம் நிகழ்கின்றன. இவற்றைத் தத்துவ நூல்கள் கூறுகிற மத்தியா வத்தை என்பதோடு ஒப்பிடலாம்.

சுத்தமும் அசுத்தமும் விரவிய நிலையில், இது மிச்சிர கன்மம் எனப்படும். இவை மறுமையில் வித்யா கலையில் அடங்கியுள்ள 27-மிச்சிர தத்துவ புவனங்களிலும் போகங்களைப் புசிப்பிக்கத் துணை நிற்கும்.

அதிமார்க்கவினை

மனத்தையும் ஆன்மச் சிற்றறிவையும் ஒன்றி இருக்குமாறு செய்து, இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்றவாறு அட்டாங்க யோக நெறியில் நின்று, தத்தம் உடம்பினுள்ளேயே ஆறு ஆதாரங்களிலும் சிவபெருமானைக் கண்டு வழிபட்டு இன்புறுதல் அதிமார்க்க-வினை எனப்படும். இது மறுமையில் சாந்திகலையில் அடங்கியுள்ள 18-சுத்த தத்துவ-புவனங்களிலும் போக நுகர்ச்சிக்கு வித்தாகும்.

மாந்திர வினை

திருவருளையே எஞ்ஞான்றும் சிந்தித்துச் சிவபரம் பொருளைத் தம்முள் கண்டு முறுகிய நிலையில் தியானித்திருத்தலும் சமாதி கூடலும் ஞானநூல்களை ஓதலும் போன்ற உயரிய செயல்கள் மாந்திர வினை எனப்படும். ஆன்மாக்களுக்குச் சுத்த போகங்களைத் தரவல்ல இவை சாந்தியாதீத கலையிலே அடங்கியுள்ள 16-புவனங்களிலும், ஆன்மாக்கள் போகம் நுகர்தற்கு வித்தாகும். அதிமார்க்க வினை, மாந்திர வினை இவை இரண்டும் சுத்த போகங்களைப் பயப்பதால் 'சுத்த கன்மம்' எனப்பட்டன.

விதி என்பது மூடநம்பிக்கையன்று

'' 'வினை' என்பதும் 'அதற்கு ஓர் பின் விளைவு உண்டு' என்பதும், எல்லாம் மூட நம்பிக்கையே, 'மறுபிறப்பு, வினை நுகர்ச்சி' என்பன எல்லாம் பொருளற்றன'' - எனப் பிறமதத்தவர் பலர் பிரச்சாரம் செய்கிறார்களே! நம்மவர்களும் உண்மை உணராது அவர் கூற்றை நம்பி, மோசம் போகிறார்களே'' என ஆதங்கத்தோடு என்னை நோக்கினார் சிவசாமி.

''தங்கள் உணர்வுகளை யான் மதிக்கிறேன். ஆயினும் இத்தகைய மாறுகோள்களும் முரண்பாடுகளும் இன்று நேற்றல்ல, காலங்காலமாகத் தொடர்ந்து வருவனவே. நாவன்மை சிலருக்குக் கை கொடுத்தது, நயவஞ்சகம் சிலருக்கு உதவி நின்றது. முரட்டுத் தனத்தால் மதம் பிடித்தோர் சிலர். இங்ஙனம் புற்றீசல் போலப் புறப்பட்ட மதங்கள் பலப்பல. அவை ஒரோஒரு சமயம் சண்டமாருதமாக வீசிச் சடுதியில் மறைந்தும் போயின.

'உண்மையே இறுதிவரை வெல்லும்' என்பது வரலாறு கண்ட உண்மை. தான் நினைத்ததை நிறைவேற்ற முடியவில்லை என்றாலோ, விரும்பியதைப் பெற முடியவில்லை என்றாலோ, மனிதன் மாற்று யோசனையில் இறங்கிவிடுவது இயல்பாகிறது. அரசியல் கட்சிகளைப் போல மதங்களின் தோற்றமும் அத்தகைய மாறுகோள்பட்ட மனக்கிளர்ச்சிகளின் விளைவே எனலாம்.

1300 - ஆண்டுகளுக்கு முந்தைய, நம் அப்பர் அடிகளின் வாழ்வே இதற்கு நல்லதொரு சான்று. மருள்நீக்கியார் என்பது இவர்தம் இயற்பெயர். ஆயினும் மருள் நீங்காத இளமைப் பருவம்; மாற்றாரின் கூற்றிலே மயங்கினார்; நம்பர் அருள வில்லை என எண்ணினார். தாய்ச் சமயம் விட்டு, அமண் சமயம் புகுந்தார், ஆர்ப்பாட்டமாகவே வாதிட்டார் அவர்களுக்காக. 'அறம் காக்கும் வீரர்' என்ற பொருளில், அவர்களும் இவருக்குத் 'தருமசேனர்' என்ற பட்டமளித்துப் புகழாரம் சூட்டினர்.

காலம் கனிந்தது; சூலை நோய் சுட்டது; வீரட்டானத்து அம்மானை நினைந்து உள்ளம் உருகினார். அருள் நோக்கு வாய்த்தது. தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாடல்கள் தேவாரமாய் மலர்ந்தன.

கூற்(று) ஆயினவாறு விலக்ககிலீர்,
கொடுமைபல செய்தன நான் அறியேன்

(அப்பர் தேவாரம் - திருஅதிகை வீராட்டானம் - 4-1)

என்று தொடங்கி, அவர் பாடியுள்ள செந்தமிழ்ப் பனுவல்கள் நெஞ்சை நெகிழ்விப்பன.

காத்து(ஆ)ள்பவர் காவல் இகழ்ந்தமையால்.
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி,
நீத்தாய கயம்புக நூக்கியிட,
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்.

வார்த்தைஇது ஒப்பது கேட்(டு) அறியேன்;
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன(ல்) ஆர்அதி கைக் கெடில
வீரட்டானத்(து) உறை அம்மானே!

(அப்பர் தேவாரம் - திருஅதிகை வீரட்டானம் - 4.5)

கருத்து

தலையாய உண்மைக் காவலை (சிவபரத்துவத்தை) மறந்தேன், உலுத்தர் பேச்சிலே மயங்கினேன். வாழ்க்கைக் கடலின் வளமை வினவினேன், வழிநின்றவர் கைகாட்டினர், ஆழம் தெரியாது காலைவிட்டேன், நிலைகொள்ளாது அல்லலுற்றேன். 'சிவாயநம எனச் சிந்தித்(து) இருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை - என்ற ஒப்பரிய வார்த்தை கேட்டேன்; (கல்மனத்தைக் கரைப்பதுபோல்) நீயும் என்னைச் சூலைநோயால் குடலைப் பிசைந்து, ஆட்கொண்டாய், எம்பெருமானே! - எனப்பாடிப் பரவினார். முரண்பட்டுத் துன்புறுத்திய மகேந்திர பல்லவனையும் சைவனாக்கித் திருத் தொண்டில் புகழுறச் செய்தார்.

அப்பரடிகளைப் போன்றே ஒவ்வொருவரும் வாழ்வில் ஏதோ ஒரு நிலையில் தடம் புரண்டாலும், பிறிதோர் சூழலில் மனம் திருந்தித் தாய்ச் சமயத்திற்குத் திரும்புவர்; தாம் மட்டு மன்று, ஏராளமான மற்றவர்களையும், உண்மை உணர்த்திச் சைவ நன்னெறியில் ஆற்றுப்படுத்துவர்; இது கால அடைவில் நிகழக்கூடிய உண்மை என்பது உறுதி.''

வினைக்கும் விளைவுக்கும் இடைப்பட்ட நிலை

''சமுதாயக்கேடு செய்வோர் பலரும், எவ்விதச் சலனமும் இன்றி ஆரவாரத்தோடும் மகிழ்வோடுந்தானே உலாவருகின்றனர்! அவர்கள் எப்போது திருந்துவர்? ஐயா'' என வினவினார் குப்புசாமி.

''கொலை செய்வது, கொள்ளையடிப்பது, கயமை புரிவது, கற்பினைக் கெடுப்பது, பொய்யுரைப்பது, புறம்பேசுவது என்பன போன்றவை எல்லாம் தீச்செயல்கள். அத்தகு தீச்செயல்களில் ஈடுபட்ட அனைவருமே, கொலை, கொள்ளை போன்ற அச் செயல் அத்தோடு முடிந்துவிட்டது. சாட்சிகள் யாரும் இல்லை; தாம் வெற்றி பெற்றுவிட்டோம் - என்று எண்ணியே இறுமாந்திருக்கின்றனர்.

அந்நிகழ்ச்சிகளுக்குப் போதிய அளவு சாட்சிகள் புறத்தே வேண்டுமானால் இல்லாதிருக்கலாம்; மிகவும் வலிமையான ஆதாரம் அவர்களிடமே, அவர்களின் அகத்துளேயே உள்ளது என்பதை அவர்கள் உணர்வதில்லை.

சூக்குமகன்மம்

ஒரு செயலுக்கு அடிப்படை ஆதாரமாக இருப்பது விருப்பம்; விருப்பமே செயலின் முதற்படி என முன்னரும் கண்டோம். அந்த விருப்பத்தின் தோற்றுவாயாக இருப்பது அவனுடைய மனம் என்ற ஒரு நுண்கருவி (தத்துவம்). அந்த விருப்பத்தை நிறைவேற்ற அவன் திட்டம் தீட்டுகிறான்; அவ்வாறு திட்டமிடுவது, அவனுடைய அறிவினால் நிகழ்கின்ற ஒன்று. அந்த அறிவுக்கு ஆதாரமாக இருப்பது, புத்தி என்ற மற்றொரு நுண்கருவி; இங்ஙனம் மனத்தால் விரும்பிப் புத்தியால் திட்டம் தீட்டியதை, அகங்காரம் என்ற மற்றொரு நுண்கருவி கொண்டு அவன் செயற்படுத்துகிறான். அதிலே வெற்றியும் காண்கிறான். வேறு யாருக்கும் தெரியாது என்பது அவனுடைய கணிப்பு.

அந்தோ, பாவம்! அவன் செய்த நல்வினை, தீவினைகள் உடனே மறைந்துவிட்டன என்பது உண்மை; ஆயினும், செய்தவனையும் அறியாமல் அவற்றின் நுண்ணிய தன்மைகள், மனம், புத்தி, அகங்காரம் என்ற அவனுடைய நுண்ணிய அகக் கருவிகளின் மூலம், சித்தத்திலும் சிவசத்தியின்பாலும் அதி நுண்ணிய புண்ணியங்களாகவும், பாவங்களாகவும் பதிவாகின்றன. அவ்வினைக்குச் சூக்கும கன்மம் என்பது பெயர். அதுவே நாம் அவ்வப்போது வினைகளைச் செய்துள்ளோம் என்பதற்கான ஆவணமாகச் சான்று காட்டி நிற்கிறது.

நாம் பேசுகிறோம், பாடுகிறோம். அவை சாதாரண ஒலி அலைகள் (*Sound Waves*). அவற்றை மின் நாடாவில் (*Tape Recorder*) பதிவு செய்கிறோம். அவை அதி நுண்ணிய மின் அலைகளாக (*Micro - Waves*) அந்த நாடாவில் பதிவாகின்றன.

ஆயினும் அப்பதிவு நமக்குச் சிறிதும் கண்களுக்குப் புலப்படவில்லை அன்றோ? எனவே பேச்சு மறைந்துவிட்டது - என்றோ, பதிவு செய்தமையால் பயன் ஒன்றுமில்லை-என்றோ கூறமுடியுமா? நாம் பேசியபோது ஒலி அலைகளாக இருந்தவையே, இப்பொழுது அதிநுண்ணிய மின்அலைகளாக மாற்றப்பட்டு, நாடாவில் பதிவாகியுள்ளன.

வினைகள் சிவசக்தியின் பார்வையில், புத்தி தத்துவத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, பாவபுண்ணியமாக நம் கணக்கில் மாயையில் கட்டுப்பட்டுக் கிடக்கும் - என்பர் சைவசித்தாந்திகள். அவர்கள் அவ்வாறு சொல்வதற்குக் காரணமும் உண்டு.

உயிருக்கு முதன்மையான ஆற்றலாக இருப்பது அறிவு. அறிவு என்ற நுண்ணிய அவ் ஆற்றல் நம் உடலின் மூலம் தொழிற்படுவதற்கு நிலைக்களனாக (ஆதாரமாக) இருப்பது புத்தி தத்துவமே. மாயையின் 36-தத்துவங்களுள், இந்தப் புத்தி தத்துவமும் ஒன்று. ஆகவே முற்கூறிய ஆகாமியம் என்ற வினைகளுள் அப்பொழுதே நுகர்ந்து தீர்ந்தவைபோக எஞ்சிய வினைகள் புத்தி தத்துவத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு அசுத்தமாயை என்னும் மூலப்பிரகிருதியில் (சித்தத்தில்) கட்டுப்பட்டுக் கிடக்கும் என்பது சைவக் கொள்கையாயிற்று.

பதிவு செய்யப்பட்டு நாடாவில் நுண்மையாக மறைந்திருக்கும் மின் அலைகளை மீண்டும் ஒலி அலைகளாக மாற்றி, நாம் பேசிய பேச்சை இன்பமுடன் கேட்க முடிகிறது அன்றோ?

அதேபோன்றுதான் நாம் அவ்வப்போது செய்கிற நல்வினை களும், தீவினைகளும் உடனே மறைந்துவிட்டாலும், அவ்வினை களுக்கு ஆதாரமாக இருந்த மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று நுண்கருவிகளும் சாட்சியாகி விடுகின்றன. அவ்வினைகள் புத்தி தத்துவத்தில் பாவபுண்ணியங்களாக மறைந்திருந்து பின்னொருகால் நுகர்ச்சிக்கு ஏற்ப இன்பதுன்பங்களாக வெளிப்படுகின்றன.

மாதச் சம்பளம் பெறுகிற ஒருவன், வங்கியில் சேமிப்புக் கணக்கில் பணம் சேர்க்கிறான்; ஒவ்வொரு மாதமும் சம்பளத்தில் செலவு செய்தது போக, மிஞ்சுகிற தொகையைச் சேமிப்புக் கணக்கில் சேர்க்கிறான்; இங்ஙனம் பலகாலம் சேர்த்ததும் ஒரு கணிசமான தொகை அவன் கணக்கில் வரவிருக்குமன்றோ?

அதேபோல், எச்சவினைகள் மாயையில் கட்டுண்டு, நம்முடைய புத்திதத்துவம் என்ற பேரேட்டைப் பற்றுக்கோடாகக் கொண்டு, நாம் நுகர வேண்டிய கணக்கில், நமக்குப் புலப் படாதவாறு நுண்மையாகச் சூக்கும ரூபமாகப் பதிவாகிக் கிடக்கும்; அங்குப் பதிவான வினைகளுக்கு முற்பிற்பாடு கூற முடியாமை

யால் அவை அபூர்வம் என்றும், இன்பதுன்பங்களுக்கு ஏது வாதலால் புண்ணிய பாவம் என்றும் பெயர்பெறுகின்றன.

மூலப்பிரகிருதியாகிய அசுத்தமாயை என்பதை வங்கியாகக் கொண்டால், புத்தி தத்துவம் என்பது குறிப்பேடு; நாம் செய்த/செய்கிற நல்வினை, தீவினைகளே நம் கணக்கில் குறித்துக்கொள்ளபடுகின்ற புண்ணிய பாவங்கள். அவை சித்தம் என்ற பேரேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.

காலம் கனியும்வரை அவை அங்கே கருவாய்க் கிடக் கின்றன; பின்னர், முதிர்ச்சிக் காலத்தில், அவையே மாற்றுருவில் துன்பமாகவும், இன்பமாகவும் சிவசத்தியால் உரிய முறையில் அவரவர்க்கு ஊட்டப்பெறுகின்றன. இச்சஞ்சித கன்மமே, உயிரின் குலப்பிறப்புக்கும், ஆயுட் காலத்துக்கும், இன்பதுன்ப நுகர்ச்சிக்கும் ஏதுவாகும்.

நல்வினைகள் புண்ணியமாகி இன்பப் பயனைக் கொணரும் என்பதும், தீவினைகள் பாவமாகித் துன்பச் சூழலில் அழுத்தும் என்பதும் சைவ-அருளாளர்கள் தத்தம் அனுபவத்தால் தெளிந்து கூறிய உண்மைகள்.

''வினைகள் இரண்டாயிரத்துக்கும் மேலான வகையில் இருப்பதாகக் கண்டோம். நாம் ஒவ்வொரு நொடியும் அவ்வினை களுள் ஏதேனும் ஒன்றையோ பலவற்றையோ செய்து கொண்டே இருக்கிறோம். அவை புது வினையாகவும் இருக்கலாம்; முந்தைய வினைகளின் தொடர்பாகவும் இருக்கலாம். எவ்வாறா யினும், ஒவ்வொரு வினைக்கும் ஏற்றதொரு இன்பதுன்ப வாழ்வு தவறாது வந்து வாய்க்கிறது. நமது இன்றைய பிறப்புக்கும் இன்பதுன்பங்களுக்கும் வித்தாக இருப்பன நாம் முற்பிறவிகள் தோறும் செய்த நல்வினை தீவினைகளே.

அவற்றைச் சமநிலைப்படுத்தி நமக்குப் பேரின்பத்தை அருளவல்லவன் சிவபெருமான் ஒருவனே. அவனையே எஞ்ஞான்றும் நினைத்தல் வேண்டும். முந்தைய வாழ்வின் தொடர்ச்சியாகவே அனுபவங்கள் அமைகின்றன. அதுவே நியதி. அக்காரணம் பற்றியே, 'உடம்பும், உலகப்பொருள்களும் நாம் அனுபவிப்பதற்காகவே படைக்கப்பட்டவை' என்பது வழக்கு மொழியாயிற்று. ஆதலால் எவ்விதத் தொடர்பும் இன்றிப் புதிதாக

வினைகளை செய்து அனுபவிக்க எண்ணுவது விரும்பத் தக்கதல்ல.

புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைச் சுந்தரர் திருமணம் செய்து கொள்ள மணப்பந்தலில் அமர்ந்திருந்தார். அவர்களுக்கு அஃது முன்னைத் தொடர்பில்லாத புதுவினை. ஆகவே, சிவபெருமான் கிழவேதியராய் வந்து சுந்தரரை அத் திருமணம் செய்துகொள்ளாதவாறு தடுத்து ஆட்கொண்டார்.

பெருஞ்செல்வந்தர்களின் வீடுகளிலுள்ள அழகான பெண் களுக்குக்கூடத் திருமணம் போன்ற பல நிகழ்ச்சிகள் தடைப்பட்டு நின்றுவிடுவதை நடைமுறையில் காணுகிறோம். முன்னர்ப் பிறப்புகளில் அவர்கள் எத்துணை திருமணங்களை கெடுத்தார் களோ அன்றி நல்ல மணவாழ்விலே குறுக்கிட்டுப் பிறருடைய இன்ப வாழ்வை முறிவடையச் செய்தார்களோ! இப்போது அவர்கள் வாழ்விலே தடை நிகழ்வதற்கு முன்னைத் தொடர்பே காரணம் என்பதில் ஐயமில்லை.

எந்த ஒரு மனிதனுக்கும் ஆசைகள் இருப்பது இயல்பு. ஆசைகளின் காணமாகவே மனிதன் பலப்பல வினைகளையும் செய்கிறான். அந்த வினையின் பயனை நுகர்தற்காக இம்மையில் இன்பதுன்பங்களை அனுபவிக்க வேண்டிய நியதிக்கு ஆளாகிறான். தவறினால் மறுமை என்னும் பிறப்பு-இறப்பு களுள் சிக்கித் தவிக்கிறான். எனவே நிலையற்ற உலகப் பொருள்களில் பற்று வைக்காமல், நம்மிடம் இருப்பவற்றை நிறைவாகக் கருதி, அமைதியாக வாழ்வதற்குப் பயிலுதல் வேண்டும்''

வினை ஊக்கிகளின் இயல்பு

''ஆன்மாக்கள் வினை செய்வதில், ஊக்கிகள் இருப்பதாகக் குறிப்பிட்டீர்கள் ஐயா! அவற்றைப் பற்றி அறிந்துகொள்ள அவா உடையோம்'' என்றார் சிவசாமி.

''வினை ஊக்கிகளுள் முதன்மையானது ஆணவம். அஃது ஆன்மாவின் சிற்றறிவை மேலும் முடக்குகிறது; அதனைக் குற்றறிவாக்கித், தீயநெறியில் செலுத்துகிறது; வினைகளைச் செய்யுமாறு மேன்மேலும் தூண்டி ஊக்குவிக்கிறது.

அடுத்து வருபவள் சிவசத்தி. அவள் சிவபெருமானின் விருப்பத்தையே ஆணையாக ஏற்று, திரோதாயி என்ற மறைப்பு

ஆற்றலாகி ஆன்மாவுக்கு ஊழ்வினைப் பயனை ஊட்டுகிறாள்; அதற்காக அவள் புதுவினைகளையும், துணை-வினைகளையும் செய்யுமாறு ஆன்மாக்களை ஊக்குவிக்கிறாள்.

மூன்றாவதாக ஊக்கிகளாக இருந்து, ஆன்மாக்களை வினை செய்யத் தூண்டுபவை மாயையும் மாயேயமும். அவை உலகப் பொருள்களின்பால் நாம் மயங்கிக் கிடக்குமாறு செய்து, இறைவனை நினையாதவாறு தடையாக இருக்கும். இவை அனைத்தும் தீயனவற்றின்பால் அளப்பரிய பற்றினை ஊட்டி ஆன்மாவை வினை செய்வதற்கு ஊக்குவிக்கின்றன.

வினைக்கான மூவகைக் காரணிகள்

உலகத்தில் நம்மைச் சுற்றிலும் ஏராளமான பொருள் களைக் காணுகிறோம். ஒவ்வொரு பொருளுக்கும் தோற்றம், இருப்பு, அழிவு என்ற மூன்று நிலைகள் காணப்பெறுகின்றன. உலகப் பொருள்கள் அனைத்தும் சடம், ஆயினும், இப் பொருள்கள் பலப்பல வடிவங்களில் தோன்றுகின்றன. சிறிது காலம் நிலைத்து நிற்கின்றன. பின்னொரு காலத்தில் அழிகின்றன. இவை இவ்வாறு மூவகை மாற்றங்களைப் பெறுவதற்கு மூன்று காரணங்கள் தேவையாகின்றன. அவற்றை முதற்காரணம், நிமித்த காரணம், துணைக்காரணங்கள் என்பர்.

1. முதற் காரணம் : (அநாதி மூல கன்மம்)

ஏதேனும் ஒரு மூலப்பொருளிலிருந்தே பொருள்கள் ஆக்கப்படுகின்றன. எந்த ஒரு மூலப்பொருளிலிருந்து ஒரு பொருள் ஆக்கப்படுகிறதோ, அம்மூலப்பொருளே அப் பொருளுக்கு முதற்காரணம் எனப்படும். (எ-டு) மண்ணினால் செய்யப்படுகிற குடத்துக்கு, மண்ணே மூலப்பொருள்; எனவே மண்ணே மட்குடத்துக்கு முதற்காரணம். ஐம்பொன்னை மூலப் பொருளாகக் கொண்ட தெய்வ உருவத்துக்கு, அ(வ்) ஐம் பொன்னே முதற்காரணம்.

அதேபோல் வினையாகிய செயலுக்கும் மூலப்பொருள் ஒன்று இருக்க வேண்டுமன்றோ? அம்மூலப் பொருளை, மூலகன்மம் என்பர்; அதுவே வினைக்கு முதற்காரணம்.

2. நிமித்த காரணன் : (ஆன்மாக்கள்)

நிமித்தம் என்றால், ஏதேனும் ஒன்றன் பொருட்டு - என்பது பொருள். அது, தான் இன்பம் அடைதற்பொருட்டும்

இருக்கலாம், மற்றவர்கள் நன்மை அடைதற்பொருட்டும் அமையலாம். உலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு குறிப்பிட்ட காரணத்தோடுதான் ஆக்கப்படுகின்றன. தன்னுடைய நலனையோ அல்லது பிறருடைய நன்மையையோ குறிக்கோளாகக் கொண்டுதான் பொருள்கள் ஆக்கப்படுகின்றன.

அங்ஙனம் தனக்கோ, பிறருக்கோ நன்மை விளைவிப்பதாகிய குறிக்கோளின் நிமித்தம், முதற்பொருளிலிருந்து ஒருவன் ஒரு புதுப்பொருளைத் தோற்றுவிக்கிறான்; பொருளை அவ்வாறு தோற்றுவிப்பவன், அப்பொருளுக்கு நிமித்த காரணன். மண்ணிலிருந்து, நாம் பயனடைதல் நிமித்தம், குயவன் மட்குடத்தைச் செய்கிறான்; எனவே குயவன் மட்குடத்துக்கு நிமித்தக் காரணன்.

உயிர்களாகிய நாம் நன்மை அடைதற்பொருட்டு, உலகைப் படைக்கிறார் கடவுள். எனவே கடவுள் உலகத் தோற்றத்துக்கு நிமித்த காரணன். அதேபோல், உயிர்கள், தாம் இன்பம் துய்த்தல் நிமித்தம், இருள் சேர் இருவினை செய்கின்றன. எனவே, உயிரினமாகிய நாமே (ஆன்மாக்களே), வினை ஈட்டத்துக்கு நிமித்த காரணம்.

3. துணைக்காரணங்கள்
(சிவசத்தி, ஆணவம், அந்தக்கரணங்கள், அறிவுக்கருவிகளும் செயற்கருவிகளும்)

மூலப்பொருளை முதற்காரணம் என்றும், அம்மூலப் பொருளைக் கொண்டு புதுப் பொருளை ஆக்குவோனை நிமித்த காரணன் என்றும் கண்டோம். அவ்வாறு ஆக்குவதற்கு அவன் சில பொருள்களைத் துணையாகக் கொள்ளுகிறான். துணை நிற்கும் அப்பொருள்களைத் துணைக்காரணங்கள் என்பர்.

மண் என்ற முதற்பொருளைக் கொண்டு குயவன் என்ற நிமித்த-காரணன் மட்பாண்டங்களைச் செய்வதற்குச் சக்கரமும் தண்டும் துணையாகின்றன அன்றோ? ஆகவே அவை அதற்குத் துணைக்காரணங்கள் ஆயின.

அதேபோல், வினை செய்வதற்கு நம்மைத் தூண்டித் துணை நிற்போர் யாவர்? எனச் சிந்தித்தல் வேண்டும். ஆணவம், சிவசத்தி (திரோதாயி), மனம் முதலிய அந்தக்கரணங்கள்,

மற்றும் அறிவுக்கருவி, செயற்கருவிகளும் நம்மை வினை செய்யுமாறு தூண்டுகின்றன. பழவினைகள் நுகரப்படுங்கால், புதிதான வினையீட்டத்துக்கும் துணைக்காரணங்களாக அவை அமைகின்றன.''

மூவகைக்காரணிகளைப் பற்றி யான் இங்ஙனம் குறிப்பிட்டதும், சிவசாமி, ''ஐயா! தாங்கள் கூறிய முதற்காரணம், நிமித்த-காரணம் என்ற இரண்டும் புரிகிறது. இந்தத் துணைக் காரணங்களைப் பற்றித் தாங்கள் சற்று விரித்துக் கூறவேண்டு கிறேன்'' என்றார்.

''அவை பற்றிய உண்மைகளை முன்னரே ஓரளவு சிந்தித்துள்ளோம். எனினும் இப்போது ஆண்டவனின் இயல்பு, ஆன்மாக்களின் இயல்பு, ஆணவத்தின் இயல்பு, வினையின் இயல்பு ஆகியவை வினை ஈட்டத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன என்பது பற்றிய மேலும் சில கருத்துக்களை இவண் சிந்திக்கலாம்'' என்றேன்.

துணைக்காரணம் - ஆணவம்

''அருள் உருவானவன் ஆண்டவன். அவனுக்கு நேர் மாறானது ஆணவம். ஒளிமயமான ஆண்டவன் ஞானத்தின் திருவுருவானவன்; ஆன்மாக்களுக்கு ஞானத்தெளிவூட்டி நன்னெறி யில் ஆற்றுப்படுத்துகிற கருணையாளன். ஆணவமோ, இருள் மயமாய் நிற்பது. ஆன்மாக்களை வஞ்சனையால் கவர்ந்து, அவற்றுக்கு உள்ள சிற்றறிவையும் மறைத்து, அவற்றின் ஆற்றல்களை எல்லாம் முடக்கித் தீநெறியில் செலுத்தவல்லது.

சுற்றுச்சூழலில் உள்ள நீர்த்திவலைகளும் காற்று அணுக் களும் பட்டுச் செப்புப் பாத்திரத்தில் களிம்பு ஊறுகிறது அன்றோ? அதனால் செம்பு தன் இயல்பான சிறு ஒளியையும் இழந்து, மாசுபடுவதைக் காணுகிறோம். அதுபோலத்தான் ஆணவத்துக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள தொடர்பு நிலையும் அமைந்துள்ளது.

இருண்மை என்பது நுண்மையான ஆணவ ஆற்றல். அறிவு என்பது நுண்மையான உயிராற்றல். ஆணவமாகிய இருளாற்றல் உயிராற்றலாகிய அறிவைத் தன்னுள் முடக்கிக் கொள்ளுகிறது.

பெற்றோரை விட்டு விலகி, வெளியில் விளையாடித் திரியும் சிறு குழந்தையை வஞ்சனையால் கவர்ந்து, கடத்திச் சென்று, கொடுஞ்செயல்களுக்குப் பயிற்றுவிக்கிற ''பிள்ளை-பிடிக்கிகளை''ப் போலவும், கணவனுடன் சண்டையிட்டுப் பிரிந்து தனி வழியே செல்லும் பெண்ணைக் கயவர்கள் தந்திரமாகக் கடத்திச் சென்று பங்கப்படுத்துவது போலவும், தாய்க்கோழியை விட்டுத் தனியே மேய்கிற சிறுகுஞ்சுகளை விரைந்து தூக்கிச் செல்லுகிற பருந்து போலவும், ஒளிமயமான இறைவனிடத்துப் பற்று இல்லாத ஆன்மாக்களை, ஆணவம் என்ற இருள்மலம் வலிதே பிணித்து அல்லல்படுத்துகிறது.

இறைவனிடத்து நன்றியும் பற்றும் இல்லாமல், அவனது பாதுகாப்பையும் புறக்கணித்த ஆன்மாக்கள் சார்பிடம் அறியாது தத்தளிக்கின்றன. அவற்றை மிக எளிதாக ஆணவம் என்ற மூலமலம் பற்றிக் கொள்ளுகிறது. உயிராற்றலும், ஆணவ ஆற்றலும் இவ்வாறுதான் அநாதிகாலந்தொட்டே இயைபு பட்டுள்ளன. எனவே ஆணவத்தின் இயல்பு பற்றிச் சுட்ட வந்த அருளாளர்கள் ஆணவத்தை, ''உடன்பிறந்தே கொல்லும் நோய்'' என்றும், ''இருள்மலம்'' - என்றும் அறிவுறுத்தினர்.

அதன் பிடியிலிருந்து விடுபட வழிதெரியாத ஆன்மாக்களும், அந்த ஆணவ இருள் மலத்தின் தூண்டுதலாலேயே வினைகள் பல செய்கின்றன'' என்றேன்.

''ஆணவத்தின் தீதுறு தொடர்பு பற்றிய தங்கள் விளக்கத்தால் நாங்கள் பெரும்பயன் அடைந்தோம். மிகவும் நன்றி, ஐயா! சிவசத்தியையும் வினையீட்டத்துக்குத் துணைக் காரணமாகக் குறிப்பிட்டீர்கள், அஃது யாங்ஙனம்? சற்று விளக்கினால் பெரிதும் பயனடைவோம்'' என்றார், குப்புசாமி.

''அதுபற்றி அறிய வேண்டுமானால், முதற்கண் சிவத்துக்கும் உயிர்களாகிய நமக்கும் உள்ள அத்துவிதத் தொடர்பு பற்றி அறிந்து கொள்ள வேண்டும்'' என்று கூறி விளக்க முற்பட்டேன்.

துணைக்காரணம் - சிவசக்தி (சிவ-சீவ அத்துவிதக் கூட்டம்)

எங்கும் நிறைந்திருப்பவர் பரம்பொருள்; இஃது ஓர் அடிப்படை உண்மை. கடவுட் கொள்கை உடைய எல்லாச் சமயத்தவரும் இவ் உண்மையை ஏற்பர். பதியாகிய பரம் பொருளுக்கும் பசுக்களாகிய நமக்கும் உள்ள அத்துவிதக்

கூட்ட உறவுகளை, சமய நூல்கள் பலவும் பலவாறாகக் கூறுகின்றன. ஏனைய சமய நூல்களைவிடச் சைவசித்தாந்த ஞானநூல்கள் இவ்வுண்மை பற்றி, மிகத் தெளிவாகவும் சிறப்பாகவும் எடுத்தியம்புகின்றன.

சிவ-சீவத் தொடர்பு மூவகையாக அமைந்துள்ளது என்பது சைவக்கொள்கை. இவ்வுண்மையை விளக்குவதற்கு, அரக்கினில் பதித்த மணிகளை உவமையாகக் கூறுவர்.

வைரம் போன்ற மணிகளைப் பதித்து, அணிகலன்களைச் செய்யும் பொற்கொல்லர் முதற்கண் அரக்கினில் அம்மணி களை அழகுறப் பதித்துக் கொள்ளுவதைக் காணலாம். அப்போது, அரக்கும் மணியும் கலந்து, ஒரே பொருள்போல் காட்சி அளிக்கின்றன அல்லவா? மேலும் அரக்கு மணிகளோடு ஒன்றாய்க்கூடி, அம் மணிகளை விடாமல் சேர்த்துப்பிடித்துக் கொண்டும் இருக்கிறது. ஆயினும் பொருள்களின் தன்மையால், அரக்கு வேறு, மணிகள் வேறு என்பதே உண்மையன்றோ?

அதேபோன்றுதான், சிவபெருமானுக்கும் உயிர்களாகிய நமக்கும் அத்துவிதத் தொடர்பு அமைந்துள்ளது என்பர் சைவ ஞானிகள். சிவபெருமான் உயிருக்குள் உயிராய் ஒன்றாய்க்கூடி நின்றும், உயிருக்கு அமைந்த உடலிலும், புறத்தேயுள்ள உலகப்பொருள்களிலும், யாவற்றிலும் கலந்து உடனாய் நின்றும், உயிர், உடல், உலகம் முதலியவற்றிற்குப் புறத்தே அவற்றின் வேறாய் நின்றும், இங்ஙனம் மூவகையாக நின்று அவற்றை இயக்குகிறான் என்பது சைவக்கொள்கை.

இஃது எல்லா ஆன்மாக்களுக்கும் பொதுவான நிலை. ஆயினும், பக்குவ வேறுபாடு காரணமாகவும் சார்புப் பொருள் களின் இயல்புக்கு ஏற்பவும், ஆன்மாக்களின் விருப்பு-வெறுப்பு உணர்வுகளும், அறிவுத் திறனும், செயல் முறைகளும் பலவாறாக வேறுபட்டுக் கிடக்கின்றன என்பதை முன்னரும் சிந்தித்தோம். தான் உறவு கொள்ளுகிற நட்புக்கு ஏற்ப, ஆன்மா நல்லதையோ கெட்டதையோ செய்கிறது. அச்செயலே அதற்கு வினையாகிறது.

எல்லாக் குழந்தைகளும் பெற்றோர் சொற்படி கேட்டு நடப்பதில்லை. சிலரை அறிவுரையால் திருத்தலாம். சிலரை அடித்து நல்வழிப்படுத்தலாம். ஆனால், சில குழந்தைகள்

பெற்றோர் எவ்வளவுதான் அறிவுறுத்தினாலும் கேட்காமல் முரண்டுபிடிப்பர். தம் போக்கிலேயே அவர்கள் தவறான காரியங்களைச் செய்வர். முரட்டுத்தனமும் மந்தபுத்தியும் உள்ள சில குழந்தைகள் வீட்டைவிட்டு வெளியே ஓடவும் எண்ணுவர். அத்தகைய குழந்தைகளுக்கு அறிவுரைகளால் பயனில்லை, அவை தாமாகவே பட்டுத்திருந்தட்டும், (அனுபவப் பட்டு அறிவினைப் பெறட்டும்) - என்று அவற்றின் போக்கிலேயே பெற்றோரும் விட்டுவிடுவர்.

அதேபோன்றுதான் தன்பால் நம்பிக்கை இல்லாத ஆன்மாக் களைச் சிவபெருமானும் அவற்றின் போக்கிலேயே விட்டு விடுகிறான். சார்பு இன்றி வாழ முடியாதவை ஆன்மாக்கள். ஆகவே அவை ஆணவத்தைச் சார்ந்து அதன் கட்டுக்குள், தற்போதத்தோடும் தன் முனைப்போடுமே குற்றங்கள் பல புரிகின்றன.

அத்தகு சூழலிலுங்கூட அம்மையப்பராகிய இறைவன் ஆன்மாக்களோடு உடனாகவே நிற்கிறான். என்றாலும், ஆன்மாவின் தன் முனைப்புக் கருதி அவன் அப்பொழுது ஆன்மாவைத் தடுத்து நிறுத்துவதில்லை. தான் மறைந்திருந்து அவ் ஆன்மாக்களின் தற்போத தன்முனைப்புச் செயல்களுக்கும் ஊக்கமளித்து, அவற்றிற்கு அனுபவஅறிவை ஊட்டவே விழை கிறான். எனவே அவற்றின் போக்கிலேயே செயல்பட விடுகிறான்.

ஒவ்வொரு நொடியும் ஆன்மாவின் ஒவ்வொரு செயலுக்கும் அவன் சாட்சியாகவே நிற்கிறான். ஆதலால், ஆன்மாக்கள் வினை செய்வதற்குச் சிவனும் சத்தியும் மறைந்திருந்து துணை நிற்கின்றனர்; துணைக்காரணமும் ஆகின்றனர்.

அகக்கருவிகளும், புறக்கருவிகளும் : (துணைக் காரணங்கள்)

எந்த ஒரு செயலைச் செய்வதற்கும் கருவி காரணங்கள் தேவை; இஃது யாவரும் அறிந்த உண்மை. மனம், மொழி, மெய் - என்ற மூன்றும் ஆன்மா வினை செய்வதற்குத் துணை நிற்கும் கருவிகள்.

முந்தைய வினையின் பயனாகிய இன்பதுன்பங்களை நுகர்ந்து தொலைப்பதற்கும், மெய்ப்பொருள் பற்றிய சீரிய அறிவைப் பெறுவதற்கும் உயிர்களாகிய நமக்குக் கருவி

கரணங்கள் வேண்டியதாயிற்று. அவற்றை அருளி உயிரினத்தை உய்விக்க விரும்பினான் சிவபெருமான். அதற்காக அவன் தன் வைப்பு ஆற்றலாகிய மாயையிலிருந்து நமக்காக உடம்பு, உலகப்பொருள்கள், உணர்கருவிகள், நுகர்ச்சி என்ற நான்கு வகைப்பொருள்களைத் தோற்றுவித்தான்.

மனம், மொழி, மெய் முதலிய யாவும் மாயையிலிருந்து அங்ஙனம் இறைவனால் காரியப்படுத்தப்பட்டு விரிந்து வெளிப்பட்ட மாயாகாரியங்களே. நாம் அவற்றைக் கருவி களாகக் கொண்டு ஆணவ, கன்ம மலங்களிலிருந்தும் அவற்றால் விளையும் துன்பச்சூழலிலிருந்தும் விடுபடுவதற்காகவே, ஒரு மாற்று ஏற்பாடாக அம்மாயா காரியங்களை ஆண்டவன் படைத்தான்.

ஆன்மாக்களுக்கு இஃது ஓர் இடைக்கால ஏற்பாடே. நோயின் கடுமை தெரியாமல் இருப்பதற்காக, மருத்துவர் கொடுக்கும் மயக்க மருந்தைப் போன்றனவே இவை எல்லாம். ஆயினும் நாம் அவ்வுண்மையை உணரவில்லை.

தேன் குடித்து இன்புற வேண்டிய வண்டு, தேனுக்கு உள்ளேயே விழுந்து மாய்வதைப் போன்று, நாமும் மாயா காரியங்களிலேயே மயங்கி, விருப்பு வெறுப்புகளில் அழுந்து கிறோம். அதனால் மயக்கநிலை ஏற்படுகிறது. மயக்க உணர்வுகள் முழுவதுமாகக் கழியாதபோது, நல்வினை தீவினைகளை விரும்பியோ விரும்பாமலோ செய்கிறோம். அதன்மூலம் புது வினைகளின் தோற்றத்திற்குக் கருவியாக்கிக் கொள்ளுகிறோம்.

மனத்தில் ஏராளமான விருப்பு வெறுப்புகள் தோன்று கின்றன. அவற்றிற்கு ஏற்பவே, புத்தி செய்திகளை அறிகிறது. அறிவுக் கருவிகளும், செயற்கருவிகளும் அகங்காரத்தைத் துணையாகக் கொண்டு, செயற்படத் தொடங்குகின்றன. எனவே மனத்தின்கண் எழுகின்ற விருப்பு வெறுப்புகள் வினை யீட்டத்துக்குக் காரணமாகின்றன.

''மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற அந்தக் கரணங்கள் நான்கும் எவ்வாறு வினையீட்டத்திலும், பயனூட்டத் திலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய் செயற்படு கின்றன'' என வினவினார் சிவசாமி.

மனம், விருப்புவெறுப்போடு பொருள்களைப் பற்றுதலே வினைக்கு அடித்தளமாகிறது;

புத்தி ஆன்மச் சிற்றறிவினைக் கொண்டு திட்டங்கள் தீட்டி, வினை செய்வதை உறுதிப்படுத்துகிறது.

அகங்காரம் என்ற நுண்கருவியோ கை, கால் போன்ற புறக்கருவிகளை இயக்கிச் செயல்படுத்துகிறது.

சித்தம் என்ற விதி ஏட்டில் நிகழ்வுகள் பதிவாகின்றன.

வாழ்வின் முக்கிய கூறாகிய பண்புநலன்கள் மூன்று குணங்களாலேயே அமைகின்றன. அந்த முக்குணங்களும் பிரிவுபடாமல் (அவ்வியக்தமாக) ஒருங்கு கூடி நிற்கும் நிலையே சித்தம் என்ற மூலப்பிரகிருதி ஆகும்.

மூலகன்மத்தின் இருப்பும் இயல்பும்

மறுநாள் காலை, அன்பர்கள் சிவசாமியும், குப்புசாமியும் ''வணக்கம், ஐயா!''- என்று காலை வணக்கம் கூறிக் கொண்டே வந்து இருக்கையில் அமர்ந்தனர்.

''வாருங்கள்; வணக்கம்; வினை வகைகள் பற்றி நேற்றுச் சிந்தித்தோம். அதில் ஏதேனும் ஐயம் உளதா?'' என வினவினேன்.

''எப்போதும்போல, நேற்றைய தங்களுடைய தத்துவ-விளக்கம் எளிமையாகவும் அருமையாகவும் இருந்தது; பெரிதும் பயனுடைய கருத்துக்கள்; மிகவும் நன்றியுடையோம், ஐயா! நேற்று வீட்டிற்குச் சென்றதும், அடியேன் அக்கருத்துகளை மீண்டும் மீண்டும் அசைப்போட்டுப் பார்த்தேன். பல உண்மைகள் விளங்கின; சில ஐயங்களும் எழுந்தன. அவ் ஐயங்களைத் தாங்கள் அருள் கூர்ந்து நீக்கியருள வேண்டுகிறோம்.

மூலகன்மம் என ஒன்று உண்டா?

வினைகளே பிறப்புக்கு வித்து என விளக்கினீர்கள், ஐயா! வினைகளைத் தவிர மூலகன்மம் எனவும் ஒன்று உண்டா? என்பது பற்றித் தெளிவுறுத்த வேண்டுகிறோம்'' என்றார் சிவசாமி.

''ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று பாசங்களைப் பற்றி முன்னரே கூறியுள்ளோம். அவற்றுள் கன்மம் என்பது

மூலகன்மத்தையே குறிக்கும். வித்து இன்றி விளைவு இல்லை என்பது பொதுவாக யாவரும் அறிந்த உண்மை. உடம்புகள் எனப் பரந்துபட்டு விரிந்து கிடக்கும் இப்பிரபஞ்சத்துக்கு மூலமாக, நுண்ணிதோர் வித்தாக இருப்பது மாயை, அதே போல் காமம், குரோதம், மோகம், மூர்க்ககுணம் போன்ற கீழ்மைப் பண்புகளுக்கு மூலவித்தாக இருப்பது ஆணவம். இவையேபோல் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டதாக நேற்று நாம் சிந்தித்த வினைகளுக்கு மூலப்பொருளாக இருப்பதையே மூலகன்மம் என்பர் சாத்திரநூலார்.

அருணந்திசிவம் என்ற சைவப்பேரறிஞர் சகல ஆகமங்களையும் கற்றுணர்ந்த பெரியவர். அவர் குறிப்பிடு கிறார் : ''ஆன்மாவின் இச்சா சத்தி வெளிப்பாடாகிய விருப்பு வெறுப்புகளே, மூலகன்மம் எனப்படும். விருப்பு-வெறுப்புக் கள் செயலாக வெளிப்பட்டாலன்றி, எளிதில் அறியப்படவோ, பயன்தரவோ மாட்டா. மூலகன்மமாகிய மூலவினையே கான்மிய மலம், அதுவே காமியமலம் என்பதாயிற்று'' என்பார் (சிவஞான சித்தியார் : 128).

உயிர்கள் அநாதி

''என்னுடைய மற்றொரு ஐயம், வினையின் தோற்றம் பற்றியது. ஒரு காரியம் செய்தால் அஃது வினையாகிறது எனக் கூறினீர்கள். அவ்வாறாயின் காரியம் செய்யப்படுவதற்கு முன்னர் வினை என ஒன்று இருந்திருக்க முடியாதல்லவா? தாங்கள் கூறிய தத்துவ-விளக்கத்தின்படி, வினை என்ற ஒன்று இடைக் காலத்தில் உயிரினத்தைப் பற்றி நிற்கிறது, நுகர்ந்து முற்றுப் பெற்றதும், ஒடுங்கி விடுகிறது என்பதாகத் தானே அறிய முடிகிறது?'' என வினவினார் குப்புசாமி.

''நல்ல வினா. இங்கு ஓர் அடிப்படை உண்மையை நினைவிற்கொள்ளுதல் வேண்டும்.

சிற்றுண்டிச்சாலையில் ஒவ்வாத உணவை உட் கொண்டதால் இராமனுக்கு வயிற்றுநோவு வந்தது. அவன் அவ்வாறு உண்டது ஒரு வினை. வயிற்று நோவு என்பது அதன் விளைவு. 'உண்பதற்குமுன், உண்ணுதலாகிய அவ்வினை இருந்ததா? இல்லையா?' என்பதே இப்பொழுதைய தங்கள் வினா.

உண்ணுகிற செயற்பாடு இராமன் ஒருவனுக்கு மட்டுமே உரிமையன்று; உயிரினம் முழுமைக்கும் பொதுவான ஒன்று. ஆகவே வினை என்பது சூக்கும ரூபமாய் மூலகன்மமாகவோ, அதன் காரியமான வினையாக மற்றவர்களிடமோ இருந்து கொண்டே இருக்கிறது என்பதுதானே உண்மை?''

வினைகள் நிலையற்றன?

''உலகத்தில் மரம், செடி கொடி முதலாக ஏராளமான பொருள்களைப் பார்க்கிறோம். நேற்றுக் காணப்படாத சில பொருள்கள் இன்று காணப்படுகின்றன. இன்று உள்ள பொருள்களில் சில நாளை இல்லாமலும் ஒழிகின்றன. ஆயிர மாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த நம் முன்னோர்கள் இன்று நம் கண்முன் இல்லையே!

நெருநல்உளன் ஒருவன், இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇ(வ்) உலகு (குறள் - 336)

என்றுதானே வள்ளுவப் பெருந்தகையும் அறிவுறுத்துகிறார். ஆகவே வினைகளையும் நிலையற்றவை எனக் கொள்ளுவதில் என்ன தவறு? ஐயா'' எனத் தம் ஐயத்தை வெளிப்படுத்தினார் குப்புசாமி.

''மிகச் சிறந்த சிந்தனையை முன்வைத்துள்ளீர்கள். பாராட்டுக்கள்!'' எனத் தொடர்ந்தேன்.

'நேற்று இருந்தவன், இன்று இல்லை' என்னும் நிலை யாமையே இந்த உலக வாழ்விலே காணப்படுகிற பெருமை யாகும் என்பது இக்குறட்பாவின் கருத்து. நிலையற்ற வாழ்வினை உடைய நாம், நிலைபெற்ற உலகப் பொருள்களைச் சேர்ப்பதற்காக, நேர்மையற்ற வழி முறைகளைக் கையாண்டு, வாழ்நாளைப் பயனற்றதாக்கிவிடாமல், செந்நெறியில் வாழவேண்டும் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதே வள்ளுவப் பெருந்தகை யின் கருத்து எனலாம்.

மக்கள் கூட்டத்தைப் போலவே மரம், செடி, கொடி களும் உயிர்ப்பொருள்களே. அவை எல்லாம் சிறிது கால வாழ்வுக்குப் பிறகு அழிந்துவிடுகின்றன என்பது உண்மையே. அவை அனைத்தும் ஓரோ ஒரு பொழுதில் உடம்பினைப் பெற்றுச் சின்னாள் வாழ்ந்து பின்னொருகால் தத்தம் உடம்பினை

விட்டு நீங்குகிற உயிர்ப் பொருள்கள். ஆகவே, உலகத்துக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவு நிலையற்றது என்பது உண்மையே. அதுபோல உயிர்களுக்கும் வினைகளுக்கும் உள்ள தொடர்பு களையும் நிலையற்றன எனக் கொள்ளுவதில் பிழை ஏதுமில்லை.

உயிர்களுக்கு அழிவு இல்லை, அவை அநாதி நித்தப் பொருட்கள் என்பதை முன்னரே கூறியுள்ளோம். உடம்பு, உலகப்பொருள்கள் முதலியன அழிவதுபோலத் தோன்றினாலும் உண்மையில் அவற்றுள் எதுவும் அழிவதில்லை; உலகம், உடம்பு, வாழ்வு என்பன யாவும் மாயா - காரியங்களே. மாயை என்பது நிலையானது; அம்மாயையின் காரியங்களாகிய உடம்பு முதலியனவே நிலையற்றவை.

உயிர் நீங்கிய நிலையில், உடலின் பஞ்சபூதக் கட்டமைப்புக் கள் பிரிந்து தத்தம் மூலத்துள் (மாயையின் 36-தத்துவங்களுள்) ஒடுங்குகின்றன; உடம்பினை விட்டு உயிர் பிரிவதையே மரணம், இறப்பு, சாவு, அழிவு எனப் பலவாறு கூறுகிறோம். மாயையின் காரியப்பாடுகளே அவ்வாறு ஒடுங்குகின்றன. மாயை என்பது நிலையான பொருளாகும். இஃது சைவ சித்தாந்தம் அறிவுறுத்துகிற உண்மை, இதனை இக்கால இயல்பியல் துறையினரும் *Law of conservation of mass / energy* என்ற விதிமுறையாகக் கொள்ளுகின்றனர்.''

கோழி முந்தியா? முட்டை முந்தியா?

''மூவகைக் காரணிகளைப் பற்றித் தெளிவாகக் கூறினீர்கள்; ஐயா! எங்களுக்குச் சில ஐயங்கள்'' எனக் குப்புசாமி மிகுந்த ஆர்வத்தோடு சில வினாக்களை எழுப்பினார்.

''வினை செய்தோம்; அதன் பிறகு, அததற்குரிய பயன் களை நுகர்தற்காகவே, மாயையிலிருந்து கருவி கரணங்கள் தோற்றுவிக்கப்பட்டன -என முன்னர்க் கண்டோம். வினை செய்வதற்கு, ஆன்மாவுக்குக் க்ருவி கரணங்கள் வேண்டும் - என இப்போது கூறுகிறீர்கள். அவ்வாறாயின் மாயையிலிருந்து கருவிகளைப் பெறுவதற்கு முன்னரே ஆன்மாக்கள் வினை செய்தற்கு வேறு கருவிகள் இருந்தனவா? எவ்வாறு இருந்தன? வினை முதன்முதலில் எப்போது, எவ்வாறு, ஆன்மாவைப் பற்றியது? இவை போன்ற பல ஐயங்கள் எழுகின்றன. அவற்றைத் தெளிவு செய்ய வேண்டுகிறேன், ஐயா!'' என்றார் சிவசாமி.

ஆன்மா ஆணவக்கட்டினுள் முடக்குண்ட தனிநிலைக்குக் கேவலநிலை என்பது பெயர். கேவலநிலையில் ஆன்மாவுக்கு ஆணவமே உடம்பாக இருக்கிறது என்பது சித்தாந்தம், (இப்போதுங்கூட, ஆணவம் தலைக்கேறி விட்டது' எனச் சிலரைப்பற்றி மற்றவர்கள் குறிப்பிடுவதைக் கேட்கிறோம் அன்றோ?)

அப்போது கன்ம - மலமும் தன்னளவில் சூக்குமமாய்ச் சும்மா கிடக்கும். அதற்கு மூல கன்மம் என்பது பெயர். அந் நிலையில், ஆன்மாவின் முத்திற உணர்வுகளும் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன. தான் அடைப்புண்ட சிறையிலிருந்து கதவினை உடைத்துத் தப்பிக்க விரும்புகிறான் சிறைக்கைதி ஒருவன்; அப்போது அவன் தன் விருப்பம், அறிவு, செயல் ஆகிய திறமை களைக் கொண்டு அங்குச் அச்சிறையிலுள்ள ஆயுதங்களையே கருவிகளாகப் பயன்படுத்தி விடுதலைபெற முயல்வது இயல்பு அன்றோ? அதுபோலவே, ஆணவக்கட்டினுள் சிக்கிய ஆன்மாக் களும் அதிலிருந்து விடுபட, ஆணவ - உடம்பையே தமக்குக் கருவியாகக் கொள்ளுகின்றன.''

அத்தகைய முயற்சியே ஆகாமிய வினையாகிறது. அஃது ஆன்ம தத்துவக் கருவி கரணங்களை அசுத்தமாயையிலிருந்து பெறுவதற்கு நிமித்த காரணமாகிறது.

''முட்டை முதலா? அன்றிக் கோழி முதலா?'' என்பதும், வித்து முதலில் தோன்றியதா, அல்லது மரம் முதலில் தோன்றியதா? என்பதும் சிறுவர்கள் யாவரிடமும் கேட்கப்படுகிற சுவையான கேள்விகள். அதேபோன்று தங்கள் வினாவில் சிந்திக்க வேண்டிய அடிப்படைக்கருத்து, ''வினை முந்தியா? அல்லது மாயை, மாயாகாரியம் முந்தியா?'' என்பதாகும்.

''பனை முந்தியோ? பனை வித்து முந்தியோ?'' என அறிஞர் ஆராய்வர், இதனைத் 'தாலபீஜ நியாயம்' என்பர். இவற்றைப்போலவே, வினையீட்டம் முதலில் நிகழ்ந்ததா? அல்லது கருவிகரணங்கள் முதலில் தோன்றினவா? அநாதிப் பொருள்கள் யாவை? அவை ஒன்றிற்கொன்று எவ்வாறு இயைந்து செயற்படுகின்றன? - என்பன பற்றி அறிஞர்கள் பலவாறாகச் சிந்தித்துள்ளனர்.

அதுபோல, ஒரு பிறவியில் நாம் உடலால் கன்மம் (வினைகளைச்) செய்கிறோம். அந்த வினைகள் மறுபிறவியின் உடம்புக்குக் காரணமாகிறது, மறுபிறவியில் எடுத்த உடம்பு அப்பிறப்பில் நாம் மீண்டும் கன்மம் செய்வதற்குக் காரணமாக அமைகிறது; ஆகவே வினைசெய்ததால் உடம்பு வந்ததாகவும், உடம்பு இருந்ததால் கன்மம் செய்ததாகவும் - இவ்வாறே ஒன்றுக்கு ஒன்று காரண-காரியமாகி, பிறப்பு-இறப்புச் சக்கரத்தில் ஆன்மாக்களாகிய நாம் சுழன்று கொண்டிருக்கிறோம்.

முட்டை உடைந்து கோழியின் குஞ்சு வெளிப்படுகிறது; அந்த முட்டை எங்கிருந்து வந்தது? கோழியிலிருந்து வந்தது; அதேபோல் ஒரு விதையிலிருந்து மரம் தோன்றுகிறது, விதை எங்கிருந்து தோன்றியது? மரத்திலிருந்து தோன்றியது; இங்ஙனம், வித்துக்கு மரமும் மரத்துக்கு வித்தும் ஒன்றினுக்கு ஒன்று காரணம் ஆகிறது.''

மூலகன்மம் அநாதி

''மூலகன்மம் அநாதி என்ற உண்மையைச் சான்றுகளோடு நிறுவ இயலுமா? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

1. சற்காரிய வாதம்

''நன்றாக முடியும், முதற்கண் சற்காரியவாத அடிப்படையில் நிறுவலாம். ''உள்ளதே தோன்றும்; இல்லாத ஒன்று தோன்றாது'' என்பது சற்காரிய வாதம் (சத்=உள்ளது; காரியம் = செயற்படுதல்). நெருப்பு என ஒன்று இருப்பதால் புகைதோன்றுகிறது; நெருப்பின்றிப் புகையாது என்பது யாவரும் அறிந்ததே. இக்கருத்தின் படி மூலகன்மம் என ஒன்று முன்னரே உள்ளது. ஆன்மா செயற்படுங்கால் அதுவே வினையாக வெளிப்படுகிறது என்பது சாலும்.

2. மாயையினைப்போல் அநாதி

அடுத்து மாயையினைப்போல் வினையும் அநாதி என்று கூறி நிறுவலாம். உடம்புகள்தாம் அழிகின்றனவேயன்றி, உடம்பின் உள்ளே இருக்கிற உயிர்களோ, அவ் உடம்புகளின் மூலமாக இருக்கிற மாயையோ அழிவதில்லை.

அதேபோல்தான் வினைகளின் மூலமாகிய கன்மம் அழிவதில்லை. ஆணவத்தால் ஆன்மாக்கள் செய்கிற வினைகள்

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டு விளங்குவதை முன்னரே கண்டோம். ஆன்ம இயக்கத்துக்கு ஏற்ப வினைகள் வேறு படுவதும், அவற்றிற்குரிய இன்பதுன்பப் பயன்கள் நுகர்ந்து தொலைக்கப்பட்டதும் குறிப்பிட்ட அவ்வினை அவ் ஆன்மாவை மட்டும் விட்டு நீங்குவதும் இயல்பே,

ஒரு துறவியிடமோ, சிவஞானியிடமோ உலகியல் பற்று நீங்கிவிட்டதால், மாயையோ அதன் இயக்கமோ முற்றிலுமாக இல்லாது ஒழிந்தன என்று கூறலாமா? மற்றவர்களிடத்தில் அம் மாயையின் ஆதிக்கம் இருக்கவே செய்கிறதன்றோ?

மாயை என்ற ஒரு பொருள் அநாதிநித்தப் பொருளாய் இருக்க, அதிலிருந்து உலகம் முதலிய மாயாகாரியங்கள் தோன்றுவதுபோல, மூலகன்மம் என்ற அதிநுண்ணிய பொருள் முன்னரே அநாதிதொட்டே இருப்பதால்தான் அதிலிருந்து வினை என்ற செயற்பாடு நிகழுகிறது என்பதே உண்மை.

சுருங்கக் கூறின் மாயை என்பது நித்தப்பொருள். அதன் வெளிப்பாடாகிய உலகம் முதலியன நிலையற்றதாய், வாழ்வின் முடிவில் ஒடுங்குகின்றன. அதேபோல் மூலகன்மம் என்பது நித்தப்பொருள். அதன் வெளிப்பாடாகிய வினைகள் (செயற் பாடுகள், காரியங்கள்) யாவும் நிலையற்றனவாய், நுகர்ச்சி முடிவில் நீங்கிவிடுகின்றன.

3. இயல்புநிலைச் சிவம் போல், மூலகன்மம் அநாதி

மூன்றாவதாகப் பரசிவத்தின் இயல்பு நிலைகொண்டு எண்ணிப்பார்க்கலாம். சிவபெருமான் தன் இயல்பு நிலையில் எத்தொழிலும் செய்யாமலும், வெளிப்பட்டு வாராமலும், தன்னளவில் ஓர் பேரின்பப்பொருளாக (சச்சிதானந்த சொரூபியாக) இருக்கிறான்; அங்ஙனம் தோன்றி நின்று தொழிற்படாத இயல்பு நிலையில் சிவபெருமானை 'இல்லை' என்றோ. 'பின்னர்த் தோன்றியவன்' என்றோ கூற முடியுமா? சிவபெருமான் செயற்படுவதற்குமுன் அவனுடைய ஆற்றல்களை 'இல்லை' என்று மறுத்துரைக்கவும் முடியுமோ? அப்பொழுதும் அவன் இருந்தான், இப்பொழுதும் அவன் இருக்கிறான். எப்பொழுதும் அவன் இருப்பான் என்பதே உண்மை. முன்னர் உள்ள ஒரு பொருளே வெளிப்பட்டு வருகிறது என்பதே சரியான கருத்து ஆகும்.

அவன் அங்ஙனம் சும்மா இருக்கும்போது பரசிவமும் இருக்கிறது. அவனுடைய அளப்பரிய ஆற்றலும் அவனுள் ஒடுங்கிக் கிடக்கிறது. அதேபோன்று மூலகன்மம் அநாதிப் பொருளாகப் பண்டு தொட்டே இருந்து வருகிறது என்றும் வினையாக வெளிப்படுவதற்கு முன் அஃது செயற்பாடின்றி இருந்தது என்றும் கொள்ளுவது பொருத்தமே.

4. கேவலத்து முடங்கிய ஆன்மாபோல் அநாதி

அடுத்து ஆன்மாவின் கேவல நிலைகொண்டு வினையின் அநாதி இருப்பை நிறுவலாம். உயிர்களாகிய நமக்கு அறிவு, விருப்பம், செயல் என்றவாறு முத்திற ஆற்றல்கள் உண்டு.

நாம் ஆணவத்துள் முடங்கிக்கிடந்த கேவலநிலையிலும் அவை நம்பால் இருக்கவே செய்தன; ஆனால் செயலற்று முடங்கிக் கிடந்தன. நாம் ஓர் உடம்பினை எடுத்தபோது அவை செயற்படத் தொடங்கின. ஆகவே அவற்றை முன்னர் இல்லை என்றும் புதிதாகத் தோன்றியன என்றும் சொல்ல முடியுமா? அதுவரையில் அவை உள்ளீடாகவே இருந்தன என்பது தானே உண்மை?

அதேபோல், ஆன்மாக்களின் வழி, வினையாக வெளிப்படாத வரையில், மூலகன்மமும் அநாதியே. தன்னளவில் செயலற்று இருந்தது என்றும், அதுவே பின்னர் வெளிப்பட்டது என்றும் கொள்ளுதலே பொருந்தும்.

5. சிவ-சீவர்களைப் போன்று வினையும் அநாதி

சிவன், சீவன் மற்றும் மாயை போலவே மூல வினையை யும் அநாதி காலந்தொட்டு உள்ள ஒரு பொருளாகவே, திருமூலர் போன்ற அனுபவ ஞானிகள் கூறியுள்ளனர். அநாதிப் பொருள்களை மூன்று என்றும், நான்கு, ஐந்து, ஆறு என்றும் ஞானநூல்கள் பலவாறாகக் கூறும். 'பதி என அழைக்கப் பெறும் கடவுள் பிறப்பு இல்லாத அநாதியானவர். பசு என்று வகைப்படுத்தப்பட்ட உயிர்களும் அநாதியானவையே. கடவுளை யும் உயிர்களையும் போன்றே, ஆணவம், கன்மம், மாயை என்ற பாசங்களும் அநாதியே நிலைத்திருப்பன. இம்மூனறும் நுண்மையானவை; வெவ்வேறு வகையான ஆற்றலுடையவை' என்பதே தொன்றுதொட்ட சைவக் கொள்கையாக இருந்திருக்கிறது.

''பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில்,
பதியினைப் போல் பசு, பாசம் அனாதி''

(தந்திரம் - 1, உபதேசம் - 3)

என்பது, திருமூலதேவர் வாக்கு.

''பதி என்று குறிக்கப்படுபவன், ஒருவனேயாகிய இறைவன்; பசு என்று குறிக்கப்படுவன கோடானு கோடியாக உள்ள உயிர்கள்; பாசம் என்பது இறைவனை உயிர்கள் சென்றடைய முடியாதவாறு தடுத்து நிற்கும் தளைகள். இறைவனாகிய பரசிவத்தைப்போலவே, கோடானுகோடியாக உள்ள உயிர் இனமும், அவ் உயிரினத்தைப் பற்றி நிற்கின்ற மூன்று மலங் களும் காலத்தால் அநாதி; அவைகளுக்குத் தோற்றமோ இறுதியோ இல்லை'' என்பது திருமூலர் அறிவுறுத்துகிற சைவஆகம வழிச் சித்தாந்தம். இதனையே,

ஏகன், அநேகன், இருள், கன்மம், மாயை - இரண்டு
ஆக, இவை ஆறு,ஆதி இல்

என, உமாபதி சிவாச்சாரியார் தம் சைவஞான நூலாகிய திருவருட்பயனில் தெளிவுறுத்துவார். இக்குறளின் பொருள் ''ஒருவனேயாகிய இறைவன், எண்ணற்றனவாக உள்ள உயிர்கள், ஆணவம் என்ற இருள் மலம், இவற்றோடு கன்மம் என்ற வினைகள், சுத்த மாயை, அசுத்தமாயை என்ற இரண்டு மாயைகள் -ஆக இவை ஆறு பொருள்களும் தோற்றமோ இறுதியோ இல்லாத அநாதி காலத்தன'' -என்பதாம்.

பாசத்தைத் திருமூலர் ஒரே குழுவாகக் குறிப்பிட, உமாபதியார் அதனை விரித்து நான்கு தனித்தனிப் பொருள் களாகச் சுட்டி உரைக்கிறார். அவற்றுள் இருள் என்பது ஆணவத்தையும் கன்மம் (வினை) என்பது மூலகன்மத்தையும் குறிக்கும்; மாயை என்பது சுத்தமாயை, அசுத்தமாயை என இரண்டாகச் சிந்திக்கப்பெறுகிறது.

மூலகன்மம் இவ்வாறு காரியப்படத் தொடங்கியதால் அதற்குக் காரியகன்மம் என்பது பெயராயிற்று. எனவே. மூலகன்மம் என்பது முன்பு இல்லாத ஒன்றாகவும், இப்போது நடுவில் வந்ததாகவும் கூறுவது பொருந்தாது.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுகிற உண்மைகள் யாவை? விருப்பு, வெறுப்புகளே நாம் முதற்கண் செய்த வினைகள். அவை அதி நுண்மையானவை. ஆதலால் வெளிப் படையாக அறியப்படாத இயல்பின. இந்த வினைகளுக்கு முதற்காரணமாக இருந்தது மூல கன்மம் என்ற மூல-வினை என்பதாகும்.

'மும்மலம், நெல்லினுக்கு, முளையொடு, தவிடு, உமி, போல்
மம்மர் செய்து, அணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று
பொய்மை செய் போக பந்த போத்திருத்துவங்கள்
பண்ணும்...'

என்பார் அருணந்திசிவம் (சிவஞான சித்தியார் : 176). (மம்ம = மயங்க; அணு = ஆன்மா; பொய்மை=அறியாமை; போத்திருத்துவம்= விருப்பு, வெறுப்பு முதலிய விபரீத உணர்வுகள்) நெல்லினுக்கு, முளையும், தவிடும், உமியும் - ஆகிய மூன்றும், அநாதியே கூடி இருப்பனபோல், ஆணவமும் உயிரைப் பந்தப்படுத்தி, அறியாமையையும் விருப்பு, வெறுப்பு முதலிய விபரீத உணர்வுகளை (கன்மத்தை)யும் தோற்றுவித்தலால், ஆணவத்தைப் போன்றே, ஆன்மாவில், (ஆணவமும்) மாயையும் கன்மமும் அனாதியாகவே பற்றி இருக்கும் என்பது கருத்து.

6. உடைமைப்பொருள்

உலகத் தோற்றுத்துக்கு முன், மாயை எவ்வாறு சிவபரத்தின் ஆளுமைக்குள் அடங்கிக் கிடக்கிறதோ, அதேபோல்தான் அநாதியாகிய மூலகன்மமும் தன்னளவில் ஓர் ஆற்றலாகச் சிவபரத்துவத்துள் ஒடுங்கிக் கிடக்கிறது என்றும், பின்னர் ஆணவக்கட்டுள் ஆன்மா சிக்குகிறபோது, அதன் செயற் பாட்டிற்கு வருகிறது என்றும் கொள்ளுதல் சாலும்.

வினை என்பதும் சடமாகிய ஒரு செயப்படுபொருளே. உலகம் முதலியன எவ்வாறு மாயையிலிருந்து தோற்றுவிக்கப் பட்ட பொருள்களோ, அதேபோல் வினையும் மூலகன்மத்தி லிருந்து அவ்வப்போது தோற்றுவிக்கப்பட்ட பொருளே. ஆகவே 'வினை என்பது முன்னர் இல்லை என்றும் இடைக் காலத்தில் தோன்றியது' என்றும் சிலர் வாதிடுவர்.

மூலகன்மம் என்பது அநாதிநித்தமாய் உள்ள மும்மலங்களில் ஒன்று; அதிநுண்மையயானது; அதன் ஒரு பகுதி இடைக் காலத்தில் ஆன்மாவைப் பற்றுகிறது: அப்போது அதனை ஆகந்துகம் என்பர்.

7. நிலையான காரணி

மேலும், இரண்டு நிலையான பொருள்கள் புணர்வதற்கு மற்றொரு நிலையான காரணி வேண்டும். உயிர்கள் நிலையான பொருள் (அநாதி). மாயையும் நிலையான பொருள். உயிரின் தொன்றுதொட்ட வாழ்வில், மாயையிலிருந்து உடம்பு முதலிய மாயாகாரியப் பொருள்கள் மாறிமாறி இணைந்து வருகின்றன. அத்தகு உயிர்-மெய்ச் சேர்க்கைக்கும் ஒரு காரணம் வேண்டு மன்றோ? அதுவே வினை. அதற்கு முதற்காரணமாக இருப்பது மூலகன்மம்.

மூலகன்மம் 'அனாதி நித்தம்'

மூலகன்மம் என்பது அநாதி என ஏற்றுக்கொள்ளு வோருள்ளும் இருவிதக் கருத்துக்கள் நிலவுவதைக் காணுகிறோம். ஒரு சாரார் மூலகன்மத்தை அநாதி நித்தம் என்பர், மற்றொரு சாரார் பிரவாகநித்தம் என்பர். தொடக்கமும் இறுதியும் இல்லாமல், எக்காலத்தும் ஒரே தன்மையாய் இருப்பது, அநாதி; தோன்றி அழிந்து மீண்டும் தோன்றித் தொடர்பாய் வருவது பிரவாக அநாதி.

சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது ஆன்மா; அநாதிகாலத்தில் ஆன்மா கேவல நிலையில், ஆணவச் சார்பில் கட்டுண்டு கிடந்தது. அப்போது ஆன்மாவிடம் இயல்பாகவுள்ள இச்சா, ஞான கிரியா சக்திகள் தன்-முனைப்பொடு இயங்கியதால், ஆன்மாவுக்கு மூலகன்மத் தொடர்பு அநாதி தொட்டே இருந்து வருகிறது; ஆகவே, மூலகன்மம் என்பது 'அனாதி நித்தம்' -என்பது ஒருசாரார் கருத்து.

பிரவாக அநாதி

மற்றொரு சாரார் அதைப் 'பிரவாக அனாதி என்பர். அதற்கான காரணத்தையும் கூறுவர்: ஆற்றில் நீர் வெள்ளமாக ஓடுகிறது. நாம் ஒரு பாலத்தின்மேல் நின்று நீரோட்டத்தைக் கவனிக்கிறோம். பாலத்தின் கீழ் ஒரு நொடியில் காணப்பட்ட

நீர் மறுநொடியில் இல்லை. ஆயினும் அங்கு அடுத்தடுத்து வேறு நீர் வருகிறது; ஒன்றுபோக ஒன்றாக, நீர்ப்பெருக்கு வந்து கொண்டே இருக்கிறது. இங்ஙனமாகப் பாலத்தின்கீழ், நீர் இல்லை' என்று சொல்லும் நிலை தோன்றாமல், 'நீர் உள்ளது' - என்று கூறுகிற நிலையே தொடர்ந்து காணப்பெறுகிறது. இங்ஙனம் நீரோட்டத்தில் முன் எது? பின் எது?' என அறியப்படாமையே பிரவாகம் எனப்படும். (பிரவாகம் = வெள்ளம்; நித்தம் = அழிவின்மை, நிலைத்த தன்மை).

இவ்வாறு இடையீடின்றித் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிற ஆற்று வெள்ளம்போல, ஒரு வினை கெட்டு அதனின்று விளைவாகிய மறுவினை இடையீடின்றித் தோன்றுகிறது. ஒரு வினை நுகரப்பட்டுத் தீர்ந்தாலும், அடுத்தடுத்துத் தொடர்ந்து வினைகள் செய்யப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இங்ஙனம் உடம்பும் வினையும் பண்டுதொட்டே அநாதியாய் ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்து கொண்டே இருகின்றன. ஆற்றின் வெள்ளம்போல வினையும் அழிவில்லாததாய்க் காணப்பெறுதலால் வினையைப் பிரவாக அநாதி என்றனர். ஆற்றின் வெள்ளம் என்பது மாயையின் பிரவாகம்; வினை என்பது மூலகன்மத்தின் பிரவாகம்.

மூலகன்மம் ஏன் முன்னரே பற்றவில்லை?

''மூலகன்மம் அநாதியாக இருந்தும் அநாதியான ஆன்மாவை ஏன் அநாதியே பற்றவில்லை?'' என வினவினர் சிவசாமி.

ஆன்மா அநாதி நித்தப் பொருள். அதுபோலக், கன்மமும் அநாதி தொட்டே இருந்து வருகிறது. ஆயினும் முன்னர் அவ் இரண்டும் தமக்குள் இயைபின்றிச் சும்மா இருந்தன. ஆகவே ஆன்மாவைக் கன்மம் பற்றவில்லை; ஆணவமே ஆன்மஆற்றல் களை இருளில் செலுத்தத் தலைப்பட்டது.''

மூலகன்மம் ஆன்மாவை எங்ஙனம் பற்றியது?

''ஆன்மாவை மூலகன்மம் எந்தச் சூழலில் பற்றியது? எங்ஙனம் பற்றியது? ஐயா!' என வினவினார் குப்புசாமி.

கேவலத்தில் ஆன்மா ஆணவத்தை சார்ந்திருந்தது என அறிவுறுத்துகிறது சித்தாந்தம். 'சார்தல்' ஆகிய தொழிலும் ஒரு வினையே. ஆன்மா அவ்வினையைச் செய்ததால் அனாதி மூல கன்மம் ஆன்மாவைப் பற்றியது. வினை என்னும் கன்மமலம்

ஆன்மாவைப் பற்றுவதற்கு ஆணவமே முதன்மைக் காரணமாயிற்று.

ஒரு மனிதன் பெரியதொரு சுமையைத் தலையில் வைத்துக் கொண்டு ஒரே இடத்தில் எத்தனை நேரம் நின்றாலும் அவன் வேலை செய்ததாகக் கருதப்படமாட்டான். ஒரு குறிப்பிட்ட காலத்தில் அச்சுமையோடு அவன் எத்தனை தூரம் நடந்திருக் கிறான் என்பதைப் பொருத்தே அவன் செய்த வேலை கணக்கிடப் பெறும் (*Work = mass x distance*).

அதுபோல, முன்னர் ஆன்ம ஆற்றல்களும், மூலவினையும் தொடர்பின்றிச் சும்மா இருந்தன. கன்மம் அநாதி தொட்டே இருந்த போதிலும் ஆன்மாவைத் தானாகப் பற்றவில்லை. ஆணவமே ஆன்மாவை இருளில் அழுத்தி கன்ம மலத்தில் பற்றச் செய்தது.

ஆன்மா ஆணவத்தின் பிடியிலிருந்த கேவல நிலையில், அவ் ஆணவமே ஆன்மாவுக்கு உடம்பாக இருந்தது. ஆணவத்தின் கோரப் பிடியிலிருந்து விடுபடுவதற்காக, ஆன்மா முயற்சிகளைச் செய்யத் தலைப்பட்டது. அப்போது அது ஆணவமாகிய உடம்பினைக் கருவியாகக் கொண்டுதான் முதன்முதலாக வினை செய்தது; அங்ஙனம் முயன்றபோதுதான் உயிரை மூலகன்மம் பற்றியது என்று கொள்வதும் பொருத்தமே.

2. ஆண்டவன் மூலகன்மத்தை ஊட்டுதல்

''ஏன் ஆண்டவன் மூலகன்மத்தை ஆன்மாக்களுக்கு ஊட்ட வேண்டும் ஐயா!'' என்ற பொருள்பொதிந்த வினா ஒன்றை எழுப்பினார் சிவசாமி.

''ஆணவத்தை ஒடுக்கி, ஆன்மாவுக்கு அனுபவத்தை ஊட்டி, நிலையான சிவஞானப் பேரின்பத்தில் ஆன்மாவைத் திளைத்திருக்கச் செய்யவேண்டும் என்பதே சிவபெருமான் திருவுள்ளக் குறிப்பு. அதற்காகவே அவன் கருணையோடு ஐந்தொழில் இயற்றுகிறான்.

மேலும், ஆணவக்கட்டிலிருந்து ஆன்மாவை விடுவிக்கத் திருவுளம் கொண்ட சிவபெருமான் ஒவ்வொரு படிநிலையிலும் ஒரோ ஒரு வகையில் ஆன்மாவுக்கு மூலகன்மத்தை ஊட்ட வேண்டியது கடமையாகிறது. அஃது யாங்ஙனம் எனக் காண்போம்.

1. நச்சுக் கிருமிகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற இப்பொழு தெல்லாம் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. குறிப்பிட்ட நச்சின் மிகச் சிறிய கூறினை முன்னதாகவே மக்களுக்குச் செலுத்துவதன் மூலம், நோய்களை அவை வருமுன்னரே தடுத்துவிடுகிற (Immunisation) முறை யாவரும் அறிந்த ஒன்று.

அதேபோல்தான், ஆன்மாக்களுக்கு ஆணவம் என்ற நச்சுக்கிருமியால் நேரவிருக்கும் வினைத்துன்பத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு, வினையின் கூறுகளையே ஆண்டவன் தானே முன்னின்று ஊட்டுகிறான் எனலாம்.

2. ஒருவனுக்கு நோய் பிணித்திருக்கிறது. தக்க மருந்துகளைத் தெரிவுசெய்து கொடுத்து அவனைக் குணப்படுத்தவேண்டும்; வைத்தியர் யாது செய்வார்? அவனுக்கு நோயின் பாதிப்பு எந்த அளவு உள்ளது என்பதை முதற்கண் சில சோதனை களின் மூலம் அறிய முற்படுவார். நோயின் மூலத்தையும், பாதித்துள்ள அளவையும் தெளிந்தபின் அந்நோய்க்கு ஏற்ற மருந்தினைத் தக்க அளவு, தக்கவாறு கொடுத்து நோயை நீக்குவார் அன்றோ?

அதேபோன்றுதான் வைத்தியநாதனாகிய சிவபெருமானும் ஆன்மாக்களாகிய நம்மைப் பிணித்துள்ள ஆணவநோயின் பாதிப்பு எந்த அளவு உள்ளது என்பதை அளவிட, வினை ஊட்டம் என்னும் சோதனையை மேற்கொள்ளுகிறான்.

மூலகன்மம் தொழிற்படுத்தப்பட்ட முறையை ஒரு நடைமுறை உவமை மூலம் தெளியலாம்.

விதை என்பது ஓர் உயிர்ப்பொருள். அதற்கு முளைத்து எழுகிற ஆற்றல் உண்டு. அவ் ஆற்றல் அவ்விதையினுள் அதி நுண்மையாக மறைந்து கிடக்கிறது. அவ் விதையை நிலத்தில் சிறிது ஆழத்தில் புதைத்து வைக்கிறோம். சில நாட்களில் அது முளைத்து எழுகிறது. அவ்வாறு விதை முளைப்பதற்கு மண் மட்டுமோ. அன்றி ஈரம் மட்டுமோ இருந்தால் போதாது, மண்ணும் வேண்டும். அம்மண்ணில் ஈரமும் இருத்தல் வேண்டும் என்பது யாவரும் அறிந்த உண்மை.

அதுபோல, ஆணவமாகிய மண்ணில் புதைந்த ஆன்ம எழுச்சி என்னும் இன்ப வித்தை முளைத்து எழச்செய்வதற்காக

வினை என்னும் நீரைப் பாய்ச்சி மாயை என்ற உரமிடுகிறான் இறைவன்.

இதற்கு ஆணவம் மட்டுமோ அன்றி மூலகன்மம் மட்டுமோ இருந்தால் போதாது. ஆணவம் ஆன்மாவின்பால் தற்போதத்தையும் தன்முனைப்பையும் தூண்ட, ஆன்மா அகங்காரத்தோடு செயற்படத் தொடங்குகிறது. அதனால் வினை ஆன்மாவைப் பற்றுகிறது.

இங்ஙனம் ஆணவ நண்பனோடு மூலகன்மம் துணை நின்றதாகக் கொள்ளுதலும், இரண்டும் இயைந்து நின்று, உயிரின் காரியப்பாட்டிற்கு உதவின எனக் கொள்ளுதலும் சாலும். இது உயிருக்கும் கன்மத்துக்கும் உள்ள அநாதி சம்பந்தம் எனலாம்.

பள்ளிகளில் மாணவர்கள் சிறுபிள்ளைத் தனமாக ஏதேனும் குறும்பு செய்வது காலங்காலமாக நிலவுகிற நிகழ்ச்சியே. 40, 50 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஆசிரியப் பெருமக்கள் குறும்பு செய்யும் மாணவர்களைத் தண்டிக்கும் முறையை நினைவு கூர்ந்தால், நம் உதடுகளில் சிறு முறுவல் தோன்றும்.

எந்த ஒரு மாணவனும் தனியாகக் குறும்பு செய்ய மாட்டான். அவனுக்கு ஒரு நண்பன் துணை நிற்பான். அந்த இரண்டு பேரையும் ஆசிரியர் இனம்கண்டு கொள்ளுவார். இருவரையும் வகுப்பின் மையப்பகுதியில் நிறுத்தி, ஒருவன் காதை மற்றொருவன் பிடித்துக் கொள்ளுமாறு செய்வார். 'உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்' என்று இருவரும் சொல்லிக்கொண்டே தோப்புக்கரணம் போட வேண்டும். அதுவே அவர்களுக்குத் தண்டனை. எளிய தண்டனையுள் ஏராளமான தத்துவ உண்மைகள்.

சொல்வது வாய், கேட்பது காது, குறும்பு செய்தது உடம்பு ஆகவே அம்மூன்றையும் கொண்டு அவர்களுக்கு உரிய தண்டனையை அவர்களைக் கொண்டே நிறைவேற்றுவதற்காக, ஒருவன் காதை மற்றவன் பிடித்துக்கொள்ள வாயினால் அவ்வாறு சொல்லிக் கொண்டே உடலால் 'உக்கி' போடச் செய்யும் அக்கால ஆசிரியர்களின் மதியூகத்தை என்னென்பது!

அதேபோல தன்னளவில் சும்மா இருந்த மூலகன்மம் ஆணவம் என்ற மூலமலத்தோடு இணைந்து ஆன்மாவின் தன்முனைப்பைத் தூண்டி, ஆன்மா வினை செய்வதற்கு

மூலகாரணம் ஆயிற்று எனலாம். அவற்றை நெறிப்படுத்து வதற்காகச் சிவபெருமான் மூன்றாவது மலமாகிய மாயையினை ஆன்மாவுக்குத் தொடர்புபடுத்துகிறான்.

ஆணவத்தை ஒடுக்கி, ஆன்மாக்களைக் காத்தலே ஆண்டவனின் திருவுள்ளம். ஆணவ மலம் ஒன்று மட்டுமே செம்பினில் களிம்பு போல உயிரை அநாதி தொட்டே பற்றி நின்றது எனவும், கன்மமும் மாயையும் இறைவனுக்கு என்றுமுள்ள உடைமைப் பொருளாய் அவனுக்குள் இருந்து, ஆணவ மல நிவிர்த்தியின் பொருட்டு, உயிருக்கு இறைவன் கூட்டுதல் பற்றி, இடையில் (ஆகந்துகமாக) கூடின என்றும் அறிஞர்கள் விளக்குவர் (சிவஞானபோதம்-உரை பக். 228 பொ. முத்தையா பிள்ளை)

ஆன்மாவின் தன்முனைப்பு

ஆணவ இருளில் அறிவு முடங்கி அல்லலுற்ற ஆன்மாக் களுக்குச் சிவபெருமான் தன் உள்ளீடான அருட்சத்தியைக் கொண்டு, சுத்த மாயையிலிருந்து ஒலி, ஒளி (நாதம், விந்து) வினாலான அதி-உன்னத உடம்பினைத் தந்தருளினான். ஆணவக் கட்டின் இறுக்கம் சிறிது தளர்ந்தது; ஆயினும் ஆன்மாவுக்கு அறிவு-விளக்கம் கிட்டவில்லை.

ஆகவே அசுத்த மாயையினை இயக்கி, அதிலிருந்து ஆன்மாக் களுக்கு அறிவு புகட்டும் வகையில் வித்தியா தத்துவ நுண் உடம்பினைக் கொடுக்கிறான். அப்போதும் ஆன்மா நுண்ணிய அவ் உடம்பின் கருவிகளைக் கொண்டு ஒலி, ஒளி இன்பத்தில் மயக்குற்றுத் தன்முனைப்போடு செயற்படத் தொடங்கியதே யன்றி, அவற்றைத் தனக்கு மிகுந்த கருணையுடன் தந்தருளிய இறைவனை சிறிதும் நன்றிப் பெருக்குடன் எண்ணிப்பார்க்க வில்லை.

உலகியலில் மிக அற்பமான சிறு உதவிகளைச் செய்தவர் களுக்குக் கூட நன்றியுடன் வணக்கம் தெரிவிக்கிறோம். ஆனால் காரிருளில் கண்ணிலா முதியோரைப்போல் தவித்த நமக்கு ஒலி, ஒளியாகிய வாழ்வையும் வளத்தையும் தந்தருளிய பரம கருணையாளனை நாம் சிறிதும் சிந்திப்பதுகூட இல்லை. ஆன்மாவின் இத்தகு செயற்பாடே வினையாகப் பந்திக்கலாயிற்று, என்பதும் கருதற்பாலது.''

சிவசத்தியின் அருளிப்பாடு

''வினையூட்டத்தில் சிவசத்தியை எவ்வாறு அருளாளர்கள் தொடர்புபடுத்துகின்றனர்? ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

''நமக்காகச் சிவபெருமான் ஐந்தொழிற்படும்போது, அவனுடைய உள்ளீடான அருட்சத்தியின் இச்சை, ஞானம், கிரியை என்ற முத்திற ஆற்றல்களையும் தொழிற்படுத்துகிறான். சிவபெருமானின் முத்திற ஆற்றல்களைப் போன்றே, ஆன்மா என்னும் உணர்வுப் பொருள்களாகிய நமக்கும் இச்சை, ஞானம், கிரியை என்ற மூவகை ஆற்றல்கள் இயல்பாகவே உள்ளன.

சிவபெருமானின் மூவகைச் சக்திகளும் உயிர்களின் இச்சை, ஞானம், கிரியை ஆகியவற்றை இயக்கி வினைசெய்யத் தூண்டு கின்றன. ஆகவே வினையை ''ஆணையின் இருவினை'' எனக் குறிப்பிடுவார் மெய்கண்டசிவம். ஆணை என்பது சிவசக்திக்கான பரியாய பெயர். அவளுடைய உடைமையாகவே வினை என்ற பாசம் உள்ளது என்பது இத்தொடரின் கருத்து.''

மூலகன்மத்தை ஏன் மலம் என்றனர்?

''ஆணவப் பிடியிலிருந்து விடுபடுவதற்காகவே வினை யூட்டம் நிகழ்ந்திருப்பதாக அறிகிறோம். அவ்வாறிருக்க, மூலகன்மத்தை ஏன் மலம் என்று கூறினார்கள்? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

''உடல் நலம், உள்ளத்து நலம், அவற்றோடு உயிர் நலம் - இவை எல்லாம் ஒவ்வொரு நிலையில் இன்பம் தந்து, ஆன்மாக்களாகிய நம்மை உயர்நிலைக்கு இட்டுச் செல்லுவன. நலம் என்பதற்கு முற்றிலும் மாறுபட்டது மலம் என்பது. உடல் நலமாயினும் சரி, உள்ளத்து நலமாயிலும் சரி, அல்லது உயிர் நலமாயினும் சரி, நமக்கு உரிமையாகிய உயர்ந்த இன்ப நலத்தை நாம் அடைய முடியாதவாறு நம்மைத் தடுத்து நிற்பது எதுவாயினும், அது மலமே.

உண்ட உணவு சீரணமானபின், பெருங்குடலில் மலமாகச் சேருகிறது. அஃது அவ்வப்போது கழிக்கப்பட்டால்தான் உடல் நலம் சீராக இருக்கும்.

ஆசைகளில் தொடங்கிக் கோபம், பொறாமை, பொய்மை, சூது, வஞ்சனை, காமம், அச்சம் என மனத்தில் அழுக்குகள்

சேர்ந்து கொண்டே இருக்கின்றன. உள்ளத்தில் கள்ளத்தனமான சிந்தனைகள் அடிக்கடி எழுந்து உள்ளத்தைப் பெரிதும் மாசு படுத்திக்கொண்டே இருக்கின்றன. மாசு மலங்கள் நீங்கி உள்ளம் தூய்மையுற்றால்தான், உள்ளத்து நலம் உண்மையிலேயே பேணப்பட்டதாகும்.

வினைகள் ஈராயிரத்துக்கும் மேற்பட்டனவாய் ஆன்மாவைப் பிறப்பு-இறப்புச் சூழற்சியில் சிக்க வைத்துச் சிவபெருமானின் திருவடிப் பேறாகிய பேரின்பத்தை ஆன்மாக்கள் நுகர முடியாதவாறு தடையாக இருப்பதால், அவற்றின் மூலமாகிய மூலகன்மமும் மும்மலங்களுள் ஒன்றாக எண்ணப்படுவதாயிற்று என்பது திருமந்திரம்.

உடலில் உள்ள மலம், உள்ளத்து மாசுமலம். இவை போன்றே உயிரினையும் இந்த மூலகன்மமும் ஆணவம் என்ற மூலமலமும், மாயை என்ற மயக்குறு சக்தியும் ஆக மூன்றும் வலிதே பிணித்துள்ளன. அவற்றினின்று விடுபட்டால்தான், உயிர் உண்மையான இன்ப நலத்தை எய்தமுடியும்.

எப்போதும் மூலகன்மம் ஆன்மாவைப் பற்றியது?

'மூலகன்மம் ஆன்மாவை எப்போது பற்றியது? ஐயா!' என வினவினார் சிவசாமி.

ஆணவத்தின் கேட்டினை ஓரளவு உணர்ந்ததுமே ஆன்மா தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பியது. அதற்கான முயற்சியில் தன்முனைப்போடு முயன்றது. அஃது ஆணவத்தையே உடம்பாகவும் கருவிகரணங்களாகவும் கொண்ட ஓர் அவலச் சூழல். அப்போது ஆன்மா மேற்கொண்ட விருப்பங்களும் முயற்சி களும் 'பின் விளைவு'களைத் தரவல்ல வினைகள் ஆயின. அங்ஙனம் ஆணவ உடம்பினைக் கருவியாகக் கொண்டு ஆன்மா முதன் முதலாக வினை செய்யத் தலைப்பட்ட போதுதான் மூலகன்மம் ஆன்மாவைப் பற்றியது.

இன்று இந்த அளவிலே நிறைவு செய்வோம்; நாளை மீண்டும் தொடர்வோம் எனக்கூறி அன்பர்கள் இருவருக்கும் விடை அளித்தேன்.

ஐந்தாம் இயல் முற்றிற்று.

இயல் - 6

இறைவன் அன்புக்கு எளியவன்

(இறைவனின் இயல்பு)

''எங்கும் நிறைந்தவன் பரம்பொருள் எனக் கூறுகிறீர்கள். ஆயினும் அவனை எல்லோரும் எளிதாகக் காணமுடிய வில்லையே! அஃது ஏன் ஐயா?'' என வினவினார் சிவசாமி.

''சூரியன் ஒரே மாதிரியாகத்தான் தன் ஒளிக் கதிர்களை பரப்புகிறான். ஆயினும் கண் பார்வையில் குறைபாடுடையோரால் அவ் ஒளியைக் காண முடிவதில்லையன்றோ? அதுபோல் தான் இறைவன் காட்சி அருளுதலும். ஆணவத்தால் மூடக் குண்டவர்கள் குருட்டுத் தன்மையினர். அவர்கள் ஞானக் குருடர்கள்; ஆகவே தன்முனைப்போடு இறைவனைப் பகுத்தறிய முற்படுவர், அவர்களால் அவனை எளிதில் காணமுடியாது. அவர்கட்கு அவன் எட்டாத தொலைவினன் என்பதில் ஐயமில்லை.

'உல(கு) எலாம் உணர்ந்து(ம்) ஓதற்கு அரியவன்'

எனும் பெரியபுராணத் தொடக்கச் செய்தி அவ் அம்பலக் கூத்தனே அருளியது அன்றோ?

'சொல்லாலோ மனத்தாலோ அளந்தறிய முடியாத இறைவன் அன்புக்கு எளியன்' என்னும் பொருளில் 'வாக்கு மனாதீத கோசரன்' எனச் சாத்திரங்கள் இயம்புகின்றன. மேலும்,

'புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க'

- திருவாச. சிவபுரா. 8

என்பதும்,

'அவன் அருளாலே அவன்தாள் வணங்கினார்க்கு அவன் மிகவும் எளியனாகக் காட்சி யருளுபவன்' என்பதும் மணிவாசகரின் அனுபவ மொழிகளாயிற்றே!

'மடம் என்னும் பெண்ணியல்போடும் உள்ளார்ந்த அன்போடும் அவன் திருவடிகளைச் சார்ந்து நிற்றல் வேண்டும் அத்தகைய உயர் பண்பினர்க்கு அவன் மிகவும் எளியன்' என்பதே அனைத்து ஞான நூல்களும் அறிவுறுத்தும் உண்மை.

சோதனையும் வேதனையும்

'இன்ப துன்பங்கள் விளைவதற்குக் காரணம் நல்வினை தீவினை எனக் கூறினீர்கள். அவை தவிர, வேறு காரணங்களும் உள்ளனவா? ஐயா!' என வினவினார் குப்புசாமி.

''உள்ளன. சிவபெருமான் அவ்வப்போது செய்யும் சோதனை களும் நம் இன்பத் துன்பங்களுக்குக் காரணமாக அமைவதும் உண்டு'' என யான் கூறியதும் அப்படியா? என வியப்பொடு வினவினார் குப்புசாமி.

''ஆம் சோதனைகளும் வேதனைகளுமே மனிதனின் சிந்தனைக்குப் பெரிதும் வளம் ஊட்டுகின்றன. அவனைச் செயற் படுமாறு தூண்டுகின்றன. தான் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்னும் அவாவுக்கும் அவையே வித்திடுகின்றன.

அறிவானந்தப் பரம்பொருளாகிய சிவபெருமான் கருணையே வடிவானவன். கோடானுகோடி ஆன்மாக்களும் தத்தம் நிலையில் உயர்ந்து தாம் வழங்குகிற அப்பேரின்பத்தில் திளைத்திருக்க வேண்டும் என்பதே அவன் திருவுள்ளம்.

ஆயினும் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒட்டுமொத்தமாக இறைப் பேரின்பத்தை அருளலாமா? அஃது அவர்கட்கு உரிய பயனைத் தருமா? முற்றுணர்வினனாகிய அவனால் அவ்வாறு அருள இயலும். ஆனால் சிற்றறிவு ஆன்மாக்களால் அவற்றை முறையாக ஏற்று நுகர முடியாதே! எனவே இறைவன் ஆன்மாக்கள் அனைவரையும் அவரவர் தகுதிக்கு ஏற்பப் பலப்பல சோதனைகளுக்கு ஆளாக்குகிறான்.

உலக வாழ்வின் நடைமுறையில் நாளும் நாம் காணுகிற சில சோதனைகள் பற்றி முதலில் பார்ப்போம். அப்போது தான் சிவபெருமான் நம்மிடத்துச் செய்யும் சோதனைகளின் உண்மைப் பொருள் தெளிவாகும்.

முதலில் பொருளாதார நடைமுறை ஒன்றினை நோக்கு வோம், கட்டடம் கட்டுவதற்காக வங்கியில் கடன் பெற விழைகிறார் ஒருவர். வங்கி அதிகாரிகள் முன்னோட்டமாக என்ன செய்கிறார்கள்? கடன் பெறுவோரின் தகுதியை முழுமை யாகச் சோதிக்கிறார்கள். பத்திரங்களை எல்லாம் வாங்கிச் சரிபார்க்கிறார்கள். தாங்கள் முன்னர்க் கொடுத்த பணம் முறையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறதா? என்பதையும் கண்காணிக்கிறார்கள்.

இத்தகைய சோதனைகளை மேற்கொள்ளுவது வங்கியின் பொறுப்பாகிறது. இங்ஙனம் முன்னர் நிறைவேறிய பணியின் அளவுகளைச் சோதித்து முன்னேற்றத்துக்கு ஏற்பவே கடன் தொகைகளின் அடுத்தடுத்த பகுதிகளை விடுவிக்கிறார்கள் அன்றோ?

அதேபோன்றுதான் சிவபெருமானும் சோதிக்கிறான், அவன் கருணையோடு நமக்கு அருளியுள்ள இந்த மாயாகாரிய உலகப் பொருள்களை நாம் முறையாகப் பயன்படுத்துகிறோமா? அறநெறியில் வாழுகிறோமா? மேன்மேலும் தொடர்ந்து உதவியைப் பெறுகிற தகுதி நமக்கு உள்ளதா என்பதை எல்லாம் அவன் சோதிக்கிறான்.

அடுத்துக் கல்விக் கூடங்களை எடுத்துக்கொள்ளுவோம், பட்டங்கள் வழங்கும் பல்கலைக்கழகத்தார் என்ன செய்கிறார்கள்? அவ்வப்போது தேர்வுகள் நடத்துகிறார்களே ஏன்? மாணவர்களைத் துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கமா? அல்லவே!

மாணவர்கள் நாளும் தவறாது பாடங்களைப் படித்துக் கல்வி அறிவில் முன்னேறித் தமக்கும் மற்றவர்களுக்கும் பயனுள்ள வர்களாக வளர வேண்டும் என்பதுதானே கல்விக் கூடங்களின் முக்கிய நோக்கம்? அந்த வகையிலே, மாணவர்களின் நலன் கருதியே தேர்வுகள் நடத்தப்படுகின்றன. கல்வி மற்றும் ஒழுக்கம், முதலியவற்றில் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு வழி காட்டவே அத்தகைய சோதனைகள்.

அதேபோன்றுதான் ஆன்மாக்களாகிய நம்முடைய உய்தி யிலே அக்கறை கொண்ட சிவபெருமானும் சோதனைகள் செய்கிறான். நாம் எந்த அளவு ஆணவ - அறியாமையிலிருந்து விடுபட்டுள்ளோம்? அறிவு-விளக்கத்தில் தெளிவு பெற்றுள் ளோமா? சிவ உலகத்தில் (சாலோகம்) நுழைவதற்கும், அங்கு வாழ்வதற்கும், சிவபெருமானுக்குச் சமீபத்தில் (சாமீபம்) பயில்வதற்கும், அவருக்கு அணுக்கத் தொண்டு செய்வதாகிய தோழமை உறவை (சாருபத்தை)ப் பெறுவதற்கும், திருவடிப் பேரின்பத்தை நுகர்ந்து (சாயுச்சியத்தில்) நிலை பெற்றிருப் பதற்கும் எந்த அளவு நாம் தகுதி அடைந்துள்ளோம்? என்பதைச் சிவபெருமான் நமக்கு உணர்த்தவே சோதனைகளை மேற்

கொள்ளுகிறான். அச்சோதனைகள் மூலம் மெய்ஞ்ஞானத் தெளிவூட்டுவதே சிவபெருமான் திருவுள்ளம்.

அடுத்து, மருத்துவமனைச் சோதனைகள் என்பன யாவரும் அறிந்த ஒன்று, நோயின் தன்மையைச் சோதித்து அதன் பின்னரே மருத்துவர் சிகிச்சை செய்கிறார். மீண்டும் மீண்டும் சோதனைகள் நடத்தப்படுகின்றன. முதலில் நோய் நீக்கத்துக்கான மருந்து, அதன் பின்னர் உடல் நலத்துக்கான ஊட்டச்சத்து மருந்துகள் என இவை யாவும் உரிய சோதனைகளுக்குப் பிறகுதானே கொடுக்கப்படுகின்றன?

ஆன்மாக்களாகிய நாம் மும்மலங்களாகிய பெரு நோய்களால் பிணிக்கப்பட்டுப் பிறவி எனும் தீராநோயில் அல்லலுறுகிறோம். ஆணவ இருளை நம் உள்ளத்திலிருந்து சிறிதுசிறிதாக நீக்குவதற்காகவும், நுகர்ந்தாலன்றித் தொலையாத வினை-எச்சங்களை நுகர்விப்பதற்காகவும், மாயாகாரியமாகிய உடம்பு, பொன், பொருள், மாடு, மனை, சுற்றம் முதலியவற்றின் நிலையற்ற தன்மையை நமக்கு உணர்த்தி, அவற்றின்பால் நமக்குள்ள பற்றினைக் களைவதற்காகவுமே சிவபெருமான் மிகுந்த கருணையோடு நம்மை அவ்வப்போது சோதனைக்கு ஆளாக்குகிறான்.

அடுத்து விமான நிலையச் சோதனையைப் பார்ப்போம். பயங்கரவாதிகளின் ஊடுருவலையும், போதைப் பொருள் கடத்தலையும், அனைய பிற கேடுகளையும் தவிர்ப்பதற்காகவும், மற்ற நல்ல பயணிகள் அமைதியாகவும் மகிழ்வோடும் பயணம் செய்வதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையிலுமே விமான நிலையத்தில் சோதனைகள் நிகழ்த்தப்பெறுகின்றன.

உடம்பு என்னும் இந்தக் கூடு ஒரு விமானத்தைப் போன்றது. இதில் பயணம் செய்கிற உயிரோ, தோற்றமும் அழிவும் இல்லாத நித்தியப் பொருள். இந்த உயிரின் ஆன்ம-வாழ்வு என்பது நீண்ட நெடிய பயணம் ஆகும். இந்த நம் உடம்புக்குள்ளே ஒரே ஒரு உயிர் மட்டுமே இருப்பதாக நாமெல்லாருமே எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆயினும் பண்டுதொட்ட கூட்டாளிகளாகப் பலப்பல நுண்ணுயிர்களும் உடனுறைகின்றன என்பது அறிவியலும் ஏற்றுக் கொள்ளுகிற உண்மை, அவற்றிற்குப் பாக்டீரியா, வைரஸ், அமீபா என்பன போன்ற பெயர்களும்

உண்டு. அவையும் இந்த உடம்பினுள் வாழ்கின்றன; வளர்கின்றன; உயிரின் இன்பத் துன்பங்களுக்கு உரமூட்டுகின்றன. அம்மட்டோ?

ஆணவம் என்னும் அரக்கனும் கன்மம் என்னும் நச்சு-வளையமும், மாயை என்னும் மயக்குறு பொருளும் உயிரைப் பந்தப்படுத்தி நிலைகுலையச் செய்கிற மூன்று மலங்கள். இவை எல்லாம் எந்த அளவு ஆன்மாக்களைப் பற்றி நின்று ஊறு செய்கின்றன என்பதைச் சிவபெருமான் சோதிக்கிறான்.''

'ஐயா! அதைச் சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டுகிறேன்' என விண்ணப்பித்தார் குப்புசாமி.

''தங்களிடம் ஒருவர் சிறிது பணத்தைக் கடனாகக் கேட்கிறார் என வைத்துக்கொள்ளுவோம். தாங்கள் என்ன செய்கிறீர்கள்? அவருடைய நம்பிக்கையை, நாணயத்தை, நன்றி உணர்வைப் பலவாறு சோதித்து, மன நிறைவாக இருந்தால், அதன் பின்னரே அவருக்கு உதவி செய்ய முன்வருவீர்கள் அல்லவா? அதே போன்றுதான் சிவ-சீவ சம்பந்தமும் உள்ளது.

தன் மாயா சத்தியிலிருந்து நமக்கு ஏற்ற உடம்பு, உணர் கருவிகள், உலகம், நுகர்ச்சி வாய்ப்புகள் ஆகிய அத்தனை பொருள்களையும் சிவபெருமான் அருளியுள்ளான். அங்ஙனம் அருளியவன் நம்முடைய நாணயத்தையும் நன்றி உணர்வையும் சோதிப்பதில் வியப்பில்லையே! தன்னுடைய அருளிப்பாடுகளை இந்த ஆன்மா எந்த அளவு ஏற்று இன்புறவல்லது? என்பதை சிவபெருமான் நன்கு அறிவான் பின்னர் ஏன் சோதனை?

இந்த அளப்பரிய வளமைகள் அனைத்தும் அவன் கொடுத்தவை என்ற நல்லறிவு நம் உள்ளத்தில் சிறிதளவேனும் நிழலாடுகிறதா? (ஆணவப்பிடியின் தளர்ச்சி)

எல்லா ஆன்மாக்களுக்குமே அவரவர் நுகர்ச்சிக்கு ஏற்ப வளமைகளை அவன் வழங்கி இருக்கிறான்; அவ்வாறிருக்க நாம் பிறருடைய நுகர்-பொருள்களைக் கவர, வஞ்சனைகள் புரிகிறோமா? -என நம் கன்ம - மலக்கட்டினைச் சோதிக்கிறான்.

இந்த வாழ்வு அவன் அருளியது என்ற குறைந்த பட்ச நன்றி உணர்வாவது நம் உள்ளத்தின் அடி ஆழத்தில் உலவுகிறதா?

இந்த வளமைகளுள் சிறிதளவேனும் நாம் அவன் பொருட்டு, வழிபாடுகளுக்காகவும், ஆலயத் திருப்பணிகளுக்காகவும்,

அடியார் நலனுக்காகவும், பிற இறைத் தொண்டுகளுக்காகவும், மனம் உவந்து விட்டுக் கொடுக்கிறோமா? (மாயையின் பாலுள்ள பற்றினைச் சோதித்தல்) இவ்வாறெல்லாம் அவ்வப்போது சோதித்து, நாம் மெய்யுணர்வு பெறுமாறு தூண்டுகிறான்.

நிலையற்று உருண்டோடும் இயல்புடையன, இந்த மாயா காரிய பொருள்கள். அவன் அவற்றை நமக்கு அனுபவ-பாத்தியதை யாகத்தான் கொடுத்துள்ளான். ஆயினும், அவற்றின் ஒரு சிறுபகுதியைக்கூட நாம் அவன் பொருட்டுப் பிரிவதற்குப் பெரிதும் தயங்குகிறோம். அம்மட்டோ! மற்ற ஆன்மாக்களின் நுகர்ச்சியையுமன்றோ தட்டிப் பறிக்க முற்படுகிறோம்?

ஆகவே அவன் துணி துவைப்பதுபோலத் துயர் என்னும் உவர் ஊட்டி, அடியார்களின் மனத்தை அடித்துத் துவைத்துக் கசக்கிப் பிழிந்து இறுதியில் தூய்மையும் ஒளியும் ஊட்டு கிறான். இதனையே நாம் சோதனை எனக் கூறுகிறோம். இங்ஙனம் மும்மலக்கட்டால் முடக்குண்ட ஆன்மாக்களை மறக்கருணையாலும் கட்டுநீத்த தூய ஆன்மாக்களை அறக் கருணையாலும் தேவையானால் மறக்கருணையாலும், ஆட் கொள்ளுவதற்காகவே சிவபெருமான் பலப்பல சோதனை களையும் மேற்கொள்ளுகிறான்.

இத்துணைச் சிறுமைப் பண்புடைய நாம் வல்வினை களால் துன்பச் சூழலில் அழுந்த நேர்வது இயல்பேயன்றோ? எந்தச் சூழலிலும் தந்தையாகிய சிவபெருமான் குழந்தைகளாகிய நம்மைக் கைவிடுவதில்லை; இடையறாது சோதித்துத் தொடர்ந்து அருள்பாலிக்கிறான். இதுவே உண்மை.

ஆயினும் அவ்வப்போது உள்ள நம் மெய்ஞ்ஞானப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப, சிவபெருமான் நம்மை அரவணைத்தோ, அறிவுரை பகர்ந்தோ, மறைந்திருந்து வினை களை ஊட்டியோ, புதிய துன்பங்களைத் தந்து சோதித்தோ நம்மைக் கரை ஏற்றவே முற்படுகிறான். எனவே இறைவனின் சோதனை என்பதும் இன்றியமையாத ஒன்றே.''

''அவ்வாறாயின் நல்லவர்களை மட்டுமே சிவபெருமான் சோதிக்கிறாரே! அஃது ஏன்? ஐயா'' என வினவினார் குப்புசாமி

''அருமையான வினா! இது தொடர்பான ஒரு நிகழ்ச்சியைக் காண்போம்.

அன்றொருநாள், நமது ஊர் மலையரசி அம்மன் கோயிலுக்கு அருகில் நானும் தலைமை-ஆசிரியர் சுந்தரமூர்த்தியும் பேருந்துக்காகக் காத்திருந்தோம். அப்போது அவரும் இதே போன்ற வினாவைத்தான் கேட்டார். 'என்னுடைய அண்ணன் ஓய்வுபெற்ற தமிழாசிரியர்; இப்பொழுது, திருக்கோயிலில் சுவாமி திருமுன்னர், தேவாரப் பாடல்களைப் பண்ணொடு இசைத்துப் பாடும் ஓதுவாராகப் பணிபுரிகிறார். என்னைக் காட்டிலும் பக்தியால் சிறந்த அவர் பல்லாற்றானும் இடர்ப்பட்டு அல்லுறுகிறாரே, அதற்குக் காரணம் என்னவாகயிருக்கும்?' - இதுவே சுந்தரமூர்த்தி என்னிடம் எழுப்பிய வினா.

''அவரவர் கணக்கிலுள்ள ஊழ்வினைகளே அவரவர் இன்பதுன்பங்களுக்குக் காரணம். வினைகளின் பயனான இன்பதுன்பங்கள் உரிய பொழுதில், உரியவாறு சிவபெருமானால் அவரவர்க்கு ஊட்டப் பெறுகின்றன; இதுவே பொது நியதி. ஆயினும் நல்லடியார்களைச் சிவபெருமான் அவ்வப்போது சோதித்துப் பார்த்தலும் உண்டு. எனினும் அத்தகைய சோதனையை அவர் எல்லோரிடத்திலும் ஒரே மாதிரி நிகழ்த்துவதில்லை; மெய்ஞ்ஞானத்தில் ஆர்வமுள்ள அடியவர்களையும், அம்முறை களில் பயின்றவர்களையும், ஓரளவு பருவம் எய்தியவர் களையும், மெய்யான அன்பு உள்ளம் கொண்டவர்களையும் மட்டுமே அவர் சோதிக்கிறார்; மேலும் அவரவர் தகுதிக்கு ஏற்பவே அச்சோதனையும் அமைகிறது. எவ்வளவு உயர்ந்த நிலையோ அவ்வளவு ஆழமான, அழுத்தமான, வெவ்வேறு வகையான சோதனைகள்!

மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமை ஏல் ஓர் எம்பாவாய்!

(திருவெம்பாவை - 11)

என்பது மாணிக்கவாசகரின் அனுபவ வாக்கு எனக் கூறினேன்.''

'ஏன் அவர் நல்லன்பர்களை மட்டுமே சோதிக்க வேண்டும்? - எனத் தங்களைப் போலவே சுந்தரமூர்த்தியும் வினவினார்.

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். சற்றுத் தொலைவில் புல்வெளியில் சில மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன; சிறுவன்

ஒருவன் அந்த மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். ஆசிரியரிடம் அவனைச் சுட்டிக்காட்டினேன்; 'ஐயா, தாங்கள் பள்ளியில் மாணவர்களுக்கெல்லாம் தேர்வு வைக்கிறீர்களே; அதோ அங்கு மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறானே, அந்தப் பையனுக்கும் தேர்வு உண்டா? என்றேன்.

'அவனுக்குத் தேர்வு இல்லை' என்பது அவரது விடை.'

'ஏன் அவனைத் தேர்வு எழுத அனுமதிக்கக் கூடாது?' எனக் கேட்டேன். 'அவன் எங்கள் பள்ளியில் மாணவனாக இருந்தால் அன்றோ தேர்வு எழுதச் சொல்லலாம்? அவன்தான் மாணவன் அல்லனே! எனவே அவனுக்குத் தேர்வு என்பது இல்லை' - என்றார்.

''ஐயா! தேர்வு என்பது பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர் களுக்கு அவர்கள் அந்த வகுப்பில் எந்த அளவு கற்றுத் திறமை பெற்றிருக்கிறார்கள் என்பதையும், மேல் வகுப்புச் செல்லுவதற்கு எந்த அளவு தகுதி பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அளவிட்டு அறிய, அம்மாணவர்களுக்கு நடத்தப்பெறும் சோதனைகளே. அங்கு மாணவர் அல்லாத மற்றவர்களைச் சோதிப்பது இல்லை என்பது சரியே.

அதேபோன்றுதான், சிவபெருமான் தன் அன்பு - வட்டத்துக்குள் வந்த நல்லன்பர்களை மட்டும் அவர்களின் திறமையையும், தகுதியையும் அளவிடுவதற்காகச் சோதனை களை நிகழ்த்துகிறான்; மற்றவர்களை அவரவர் விருப்பப்படி விட்டுவிடுகிறான். தத்தம் வினைகளுக்கு உரிய பயனை அவரவரே அனுபவித்துக் கொள்ளட்டும் என்பது கருத்து. இப்போது இவ் இரண்டு வகைச் சிறுவர்களின் எதிர்கால வளமை பற்றி எண்ணிப்பாருங்கள்.

கல்விக் கூடங்களில் பல தேர்வுகளில் வெற்றி கண்ட மாணவன், வாழ்விலும் வெற்றிநடை போடுகிறான்; அரசின் மிக உயர்ந்த பதவிகளில் அமர்கிற வாய்ப்புகளை எல்லாம் பெறுகிறான். அவனை உயர்ந்தோன் என மக்களும் மதிக்கின்றனர். அவனும் பெருமையுடன் பீடுநடை போடுகிறான்.

அதற்கு மாறாகப் பள்ளியின் சோதனைக்குள் வர விரும்பாமல், இளமையைச் சுதந்திரமாக மாடு மேய்த்துக் கழிப்பவன் அந்தப் பருவத்தில் வேண்டுமானால் கட்டுப்பாடு

எதுவும் இல்லாமல் சுற்றலாம், இன்பமாகவும் இருக்கலாம், ஆயினும் கடைசிவரை அந்த நிலையிலேயே காலத்தைக் கழித்து, உயர்வான நிலைகளைக் காணாமலேயே அரிதிற் பெற்ற மானுட வாழ்வினையும் வீணாக்கியவன் ஆகிறான்.

விலை மதிப்பற்ற தங்கம் மண்ணிற் புதைந்து கிடக்கிறது; அதை வெளியில் எடுத்து, அப்படியேயா கழுத்திலும் காதிலும் அணிந்து கொள்ளுகிறோம்? இல்லையே! தங்கத்தைக் கழுவி, நெருப்பிலிட்டுத் தூய்மை செய்து அமிலத்தால் சோதித்து, உருக்கி, கம்பியாக இழுத்தும், வார்த்தும், வளைத்தும், நெளித்தும் நகை செய்து, (அத்தோடு விட்டோமா?) அரத்தால் இராவி, மெருகு ஊட்டிப் பின்னர்த்தானே அணிந்து கொள்ளுகிறோம்!

அதேபோன்று சிவபெருமான் செய்கிற சோதனைகளும்; அவை நல்லன்பர்களை மேன்மேலும் உய்தி அடையுமாறு செய்வதற்கே நிகழ்த்தப் பெறுகின்றன. உய் என்ற வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியதுதான் உயிர் என்ற சொல். உய்தல் என்றால், உயர்வடைதல் என்பது பொருள். உய்கின்ற இயல்புடைய பொருள்களே உயிர்ப் பொருள்களாம். மண்ணில் பதித்த விதையுங்கூட மண்ணிலிருந்து விண்ணை நோக்கியே வளர்கிறது அன்றோ? அதேபோன்று மண்ணி லிருந்து விண்ணுக்கு உயர முயற்சி செய்வதே உயிரின் இயல்பு.'' இப்பதிலைக் கேட்டதும் சுந்தரமூர்த்தியின் முகத்தில் ஒரு தெளிவான மலர்ச்சி தெரிந்தது.

சிவபெருமான் சோதிக்கும் முறைமை

இன்பத்தை நாடித்திரிவது உயிர்களின் இயல்பு. அஃது அவற்றின் உரிமையும்கூட அவ்வாறு தேடி அலையும்போது, ஆணவம் என்ற இருள் ஆன்மாவின் சிற்றறிவை வெகு எளிதாக மயக்கித், தன்பால் ஈர்த்துக் கொள்ளுகிறது, இருட்டில் நடமாடிக் கொள்ளை, கொலை, மாதர்ப்பழிப்பு போன்ற மடமை களில் ஆன்மா ஈடுபட்டுச் சுகம் காணுகிறது. இன்பத்தையே குறிக்கோளாகக் கொண்ட ஆன்மாவுக்கு, அதைத் தான் அடைகின்ற முறைகளில் உள்ள கேடுகள் புரிவதில்லை.

அந்த ஆன்மாவின்பால் இரக்கம் கொள்ளுகிறான் இறைவன். ஆன்மா தேடித் திரிவதோ இன்ப வாழ்வு. அதனை அதற்கு வேறுவிதமாகக் கொடுக்க எண்ணம் கொள்ளுகிறான். அந்த ஆன்மாவின் இதயத்தில் ஓரளவு ஒளியினை ஊட்டுகிறான்.

நோயுற்றவனுக்குப் மருத்துவம் புரிகிற நல்ல வைத்தியனைப் போன்று அவன் செயல்படுகிறான்.

மாயை என்னும் தன்னுடைய சடசக்தியிலிருந்து முதற்கண் இன்பப் பொருள்களை உருவாக்கி ஆன்மாக்களுக்குத் தகுந்த உடம்புகளையும் கொடுத்து அ(வ்) ஆன்மாக்களை அங்கு உலவ விடுகிறான். பொன், பொருள், மண், மனை, தோப்பு, வயல், தொழில், செல்வம் அனைத்தும் நம்முடைய இன்ப அவா என்னும் நோய் நீக்கத்துக்காக அவன் அங்ஙனம் கொணர்ந்த மருந்துகளே. இன்ப - வேட்கை என்னும் ஆன்ம - வெப்பு - நோயைத் தணிக்க வந்த இடைக்கால நிவாரணங்களே அவை. மருந்துப் பெட்டிகளின் வண்ணமிகு வடிவமைப்பும், புறத் தோற்றத்தின் பொலிவும் அறியாக் குழந்தைகளைத் தம்பால் ஈர்க்கின்றன அன்றோ? அதேபோல் அறியாமையில் உழலும் ஆன்மாக்கள் பலவும் மாயையால் மயக்குறுகின்றன. இடைக் கால நிவாரணமாக வந்த மருந்துகளையே தமக்கு நிரந்தர உணவாகக் கொள்ளத் தலைப்படுகின்றன.

மருந்தின் உண்மை இயல்புகளை உணர்ந்த ஆன்மாக்கள், மருந்தின் கவர்ச்சியிலிருந்து விடுபட்டு, ஊட்டச் சத்துப் பொருள்களை நாடி, மருத்துவனிடம் செல்லுகின்றன. அதே போல் ஆன்ம - உய்தியைக் குறிக்கோளாகக் கொண்ட ஆன்மாக்கள் மாயாகாரியப் பற்றினை விட்டுச் செந்நெறிகளையே நாடி, வைத்தியநாதனிடம் செல்லுகின்றன. அவனுக்கு வினை தீர்த்தான் என்றே ஒரு பெயரும் உண்டு.

அங்ஙனம் மாயாசக்தியின் கவர்ச்சியில் மயங்கி மடியாத ஆன்மாக்களுக்குச் சிவபெருமான், எக்காலத்தும் தன் உள்ளீடாக உறைகிற சிவசக்தியையே உடம்பாகத் தந்து அருள்பாலிக்கிறான். ஒரு மனைவிக்குத் தன் கணவரிடம் எத்துணை உரிமைகள் உள்ளனவோ, அத்துணை உரிமைகளையும் சிவசத்தியை உடம்பாகப் பெற்ற ஆன்மாக்களுக்கு அவன் அருளுகிறான்.

வெள்ளெருக்கு அரவம் விரவுசடைப்
புள்ளிருக்கு வேளூர் அரன் பொற்கழல்
உள்ளிருக்கும் உணர்ச்சி இல்லாதவர்
நள்ளிருப்பர் நரகக் குழியிலே - தேவா. 5-ஆம்திருமுறை, பா. 1

எனப் பண்ணிசைப்பார் அப்பரடிகள்.

மெய்ப்பொருள் தொடர்பான இவ் உண்மைகளை உணருகிற மனத்திட்பத்தையும் ஞானத்தெளிவையும் ஆன்மா பெற்றிருக்கிறதா? என்பதை இறைவன் அவ்வப்போது சோதிக் கிறான். அத்தகு சோதனைகளிலும்கூட அவன் அருளால்தான், ஆன்மாக்கள் வெற்றிபெற முடியும்.

மாசு படிந்த ஆன்மாக்களுக்கு முதற்கண் மாயாசக்தியையும், பின்னர், மாசு - மயக்கம் நீங்கிய ஆன்மாக்களுக்கு சிவ சக்தியையுமே உடம்பாகத் தந்தருளுகிறான், சிவபெருமான். அவனுடைய திருவருள் திறனை முழுமையாக பெறுவதற்கு, அவனருளாலன்றி நம்மால் இயலுமோ?

ஊழ்வினையாளர்களின் விருப்பங்களும் புது முயற்சி களுமே அவர்கள் முன் செய்த தீவினைகளின் பயனை இப்பொழுது நுகர்தற்கு வாயில்களாக அமைகின்றன.

சிவசக்தியின் செயற்பாடு

'நம் பொருட்டுச் சிவசக்தியைக் கொண்டு மாயையிலிருந்து மாயாகாரியங்களைச் சிவபெருமான் வெளிப்படுத்துகிறான் என்று கூறினீர்கள். அப்போது சிவசக்தி எவ்வாறு செயற்படுகிறாள்? என்பதை அறிய அவாவுடையோம், ஐயா' என்றார் சிவசாமி.

"ஆணவத்தின் பிடியிலிருந்து ஆன்மாக்களைக் காத்தற்காக ஆண்டவன் மாயையினை தொழிற்படுத்துகிறான் எனக் கண்டோம். ஆணவத்தால் முடக்குண்ட ஆன்மாக்களின் விருப்பம், அறிவு, செயல்திறன் (இச்சா, ஞான, கிரியா ஆற்றல்) களை உசுப்பி எழுப்புவதே, அவன் செய்கிற முதற் காரியம்.

33,000 என்ற மின்-அழுத்தத்தில் (*Voltage*) உற்பத்தியாகிறது மின்சாரம். அஃது அதே அழுத்தத்தில் நம் பயன்பாட்டிற்காக வெளிவரின், யாராலும் அதை எதிர்கொண்டு, பயன்படுத்த முடியாது. ஆகவே அதன் ஆற்றல் வெளி வரும்போது படிப் படியாக 22000 V, 1100 V, 550 V, 230 V என்றவாறு அழுத்தம் குறைக்கப்பட்டு நம் இல்லங்களுக்கு வருகிறதன்றோ? அதே போன்று, சிவபெருமானின் அருளாற்றலாகிய பராசக்தி நம் பொருட்டுத் தன் அளப்பரிய ஆற்றல்களைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டு, ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா

சக்தி எனத் தோன்றி உயிரினத்தையும் உலகங்களையும் இயக்கத் தலைப்படுகிறாள்.

சிவ தத்துவம், வித்யா தத்துவம், ஆன்ம தத்துவம் என்ற மாயாகாரியத் தத்துவ அமைப்பினை முன்னரே பார்த்திருக்கிறோம். அவற்றைச் சிவசக்தி இயக்கும் முறைமை பற்றி இப்போது இங்குக் காண்போம்.

சிவபெருமானின் இச்சா சக்தி, சிவ-தத்துவத்திலுள்ள சாதாக்கியத்தின் மூலம், வித்தியா- தத்துவத்திலுள்ள அராகம் என்னும் தத்துவத்தை ஊக்குவிக்கிறாள். அப்போது பொது வகையால் எல்லா ஆன்மாக்களும் தம்முடைய இச்சாசக்தி என்னும் விழைவாற்றலில் ஒரு விழிப்புணர்வு பெறுகின்றன.

சிவபெருமானின் ஞான சத்தி, சிவ - தத்துவத்திலுள்ள நாதம் மற்றும் சுத்த வித்தை ஆகியவற்றின் மூலம், வித்தியா - தத்துவத்திலுள்ள வித்தை என்னும் தத்துவத்தை ஊக்குவிக்கிறாள். அப்போது பொதுவகையில் எல்லா ஆன்மாக்களும் தம்முடைய செயலாற்றலில் ஒரு விழிப்புணர்வு பெறுகின்றன.

சிவபெருமானின் கிரியா சத்தி, சிவ-தத்துவத்திலுள்ள விந்து மற்றும் ஈசுரம் ஆகியவற்றின் மூலம், வித்தியா - தத்துவத்திலுள்ள கலை என்னும் தத்துவத்தை ஊக்குவிக் கிறாள். அப்போது பொதுவகையால் எல்லா ஆன்மாக்களும் தம் செயலாற்றலில் ஒரு விழிப்புணர்வு பெறுகின்றன.

பொதுவகையால் இங்ஙனம் விழிப்புணர்வு பெற்ற ஆன்மாக்கள் தத்தம் மாறுபட்ட இயல்புகளுக்கு ஏற்ப ஆணவப் பிடியிலிருந்து தம்மைதாமே விடுவித்துக் கொள்ளப் பலவாறு முயலுகின்றன.

அத்தகைய முயற்சியே அவற்றுக்கு ஆகாமிய - வினை யாகி, ஆன்ம-தத்துவக் கருவி - கரணங்களைப் பெறுவதற்கு முதற் காரணமாகிறது. அத்தகைய முதற்காரணத்தையே மூலப் பிரகிருதி என்றும், அவ்வியக்த குணசரீரம் என்றும் சித்தம் என்றும் அழைக்கிறோம்.

முதற்காரணமாகிய அசுத்த மாயையினை மூலப்பிரகிருதி என்றும் சித்தம் என்றும் இங்ஙனம் கூறி யான் சற்று நிறுத்தியதும்

சிவசாமி முன்னொரு கால் யான் சொல்லியிருந்த செய்திகளை நினைவுகூர்ந்தார்.

ஐயா! தாங்கள் முன்னரே ஒரு முறை தத்துவத் தோற்றம் பற்றிக் கூறியுள்ளீர்கள். அப்போது சிவதத்துவங்கள் 5, + வித்யா தத்துவங்கள் 7 (5+7 =) இந்தப் பன்னிரண்டு மூலக்கூறுகளின் தோற்றுவாயினையும், தொழிற்பாட்டினையும் விளக்கி, இவ் வுண்மையைச் சிவபெருமான் இயற்றியருளிய சிவாகமங்களில் மட்டுமே காண முடியும், வேறு எந்தச் சமயமும் இவ் வுண்மையைக் குறிப்பிடவில்லை என்றும்; சைவசித்தாந்தத்தை 'இராஜாங்க சமயம்' என அருளாளர்கள் போற்றுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும் - எனக் கூறி விளக்கினீர்கள்

பெரிதும் பயனுடைய செய்திகள் இவை; தங்களுக்கு மிகவும் நன்றி, ஐயா! இப்பொழுது வித்தியா - தத்துவத்தால் விளக்கமுற்ற ஆன்ம - உணர்வுகள், எவ்வாறு வினை செய்யத் தலைப்பட்டன. பூத உடம்பினை ஆன்மாக்கள் எவ்வாறு புகலிடமாகக் கொண்டன? - என்பன பற்றி விளக்கமாகச் சொல்லுங்கள்' எனக் கரம் குவித்துக் கேட்டுக்கொண்டார்.

கலை, வித்தை, அராகம் ஆகிய வித்தியா - தத்துவங்களை அக-அந்தக்கரணங்கள் என்றும், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய ஆன்ம-தத்துவங்களைப் புற அந்தக்கரணங்கள் என்றும் அழைப்பது மரபு. சிவசக்தி அக - அந்தக்கரணங்களைக் கருவி களாகக்கொண்டு புற-அந்தக்கரணங்களை இயக்கி, ஆன்மாக்களின் உறங்கிக் கிடக்கும் முத்திற ஆற்றல்களையும் உசுப்பி எழுப்பு கிறாள் என்று கண்டோம்.

சூரபதுமனின் சிறைக்கூடத்தில் அல்லலுற்றான் அமரர்குல இளவரசன் சயந்தன். அப்போது அங்கு வீரவாகுதேவர் தோன்றி, முருகப்பெருமானால் அவன் விரைவில் விடுதலை பெறுவான் எனக் கூறி, அவனுடைய எண்ணங்களுக்குப் புத்துயிர் அளிக்கிறார்.

அசோகவனத்தில் இராவணப்படையால் மனம் புழுங்கித் தவித்தாள் சீதை; இராமநாமம் கூறி அனுமன் அவளுக்கு ஆறுதல் அளித்தான். அவையே போல்

ஆணவம் என்னும் சிறைக்குள் அவலத்தில் உழலுகின்றன ஆன்மாக்கள். ஆண்டவன் அளித்த வித்யா-தத்துவக் கருவிக் கரணங்களே அவற்றுக்குப் புத்துணர்வு கொணர்கின்றன.

ஆணவப் பிடியில் சிக்கித் தவிக்கும் ஆன்மாக்கள் தாம் அத்தவிப்பிலிருந்து விடுதலை பெற்றதும், அடுத்து தாம் செய்ய வேண்டியது யாது? என்பதைப் பற்றிச் சிந்திக்கின்றன. அந்த நினைப்பும் ஒரு வினையே அன்றோ? அந்த நிலையில் அநாதியாகிய மூலகன்மம் ஆன்மாவைப் பற்றுகிறது.''

பொருள்களின் இயல்பு நிலை

''இயல்புநிலை, பொது நிலை என்று கூறினீர்களே. ஐயா! அவற்றைப் பற்றிச் சிறிது விளக்கினால் நல்லது'' என்றார் குப்புசாமி.

''ஒவ்வொரு பொருளுக்கும் அதததற்கு என ஒரு தனித் தன்மை இருக்கும்; அதனையே இயல்பு நிலை அல்லது சிறப்பியல்பு எனக் கூறுகிறோம். அதனைச் சொரூப நிலை என்பர் வடநூலார். அப்பொருளை அனுபவிப்பதன் மூலமே அதை உணர முடியும். பதி, பசு, பாசம் என்ற மூன்று நிலையான உள்-பொருள்களின் இயல்புநிலைகள் யாவை? என இனிப் பார்ப்போம்.

இயல்புநிலையில், சிவபெருமான் பேரின்பத்தின் நிலைக் களனாய்ச் சும்மா இருக்கிறான். அந்நிலையில் அவனைச் சச்சிதானந்த சொரூபி எனச் சாத்திரங்கள் போற்றி மகிழும்.

ஆன்மாக்களோ இயல்பாகவே இன்ப வேட்கை யுடையன; இன்பம் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்ட அவை, ஏதேனும் ஒரு பற்றுக்கோட்டைச் சார்ந்து நிற்கக் கருதி தம்போக்கில் அலைந்து திரிகின்றன.

இருள்மயமாய்த் தீய ஆற்றல்களோடு எங்கும் உலவித் திரிவது ஆணவத்தின் இயல்பு. மூல - கன்மமும் சிவத்தைப் போல தன்னளவில் சும்மா இருப்பது இயல்பு, மாயை என்ற மூன்றாவது மலமோ தன் இயல்பு நிலையில் சிவத்தின் உடைமைப் பொருளாக அவன்பால் ஒடுங்கி இருக்கிறது.

பொருள்களின் தொழிற்பாடு நிலை

ஒவ்வொரு பொருளும் மற்ற பொருள்களோடு தொடர்பு கொள்ளும்போது, சில மாற்றங்களைத் தாம் பெறுவதும் மற்ற பொருள்களின் மேல் சில தாக்கங்களை ஏற்படுத்துவதும் இயல்பு. அதனையே அப்பொருளின் பொது இயல்பு என்கிறோம்.

தடத்த இலக்கணம் என வடநூலார் கூறுவர். மாற்றங்களை ஆராய்வதன் மூலம் இப்பொதுநிலை பற்றி எளிதாக அறிய இயலும். அத்தகைய ஆய்வுகளின் மூலமே மொழி இலக்கணிகள் புணர்ச்சி - விதிகளை வரையறுத்தனர்.

கடவுளுக்கு அவருடைய இயல்பு நிலையில் குணம் குறிகளோ, பெயர் இடங்களோ இல்லை என்பதும் நமக்காகத் தொழிற்பட வரும்போது அவர் எண்குணத்தானாக ஆயிரமாயிரம் பெயர்களோடு தோன்றுகிறார் என்பதும் சைவ சித்தாந்தக் கொள்கை.

பரம்பொருளாகிய சிவபெருமான் எங்கும் நிறைந்தவன்; அவன் அணுவுக்குள் அணுவாய், ஆன்மாக்களாகிய நம் உயிரின் உள்ளேயும் அநாதிகாலம் தொட்டே உறைகிறான்; ஆகவே சிவ-சீவ சம்பந்தம் என்பது அநாதியானது என்பர் அருளாளர்.

பரந்துபட்ட செயற்பாடுடையது ஆணவம்; காற்றும் ஈரமும் பட்டதும் இயல்பாகச் செம்பினில் களிம்பு ஊறுவது போல, இன்ப வேட்கையோடு சார்பு கருதி அலைகிற ஆன்மாக்களை ஆணவம் நயவஞ்சனையால் வசியப்படுத்தி வெகு எளிதிலே பற்றிக் கொள்ளுகிறது. இங்ஙனம் ஆண்டவன் - ஆன்மத் தொடர்பு போலவே, ஆணவ - ஆன்மத் தொடர்பும் அநாதியாகவே இருந்து வருகிறது. ஆதலால் தான்,

இருள் வெளி இரண்டுக்கும் ஒன்றே இடம்

என ஔவையாரும்

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்

என உமாபதியாரும் பிறரும் கூறிப் போந்தனர்.

ஆணவத்தின் ஆற்றல்

'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' இது பன்னெடுங்கால அனுபவத்தால் அருளாளர் உய்த்துணர்ந்த உண்மை! ஆயினும் ஒரு கைதேர்ந்த திருடனைப் போன்று, ஆணவம் என்ற இருள் மலம் தன் ஆற்றலைக் காட்டக் காணுகிறோம்; ஆன்மச் சிற்றறிவினைத் திரித்து, 'நான் செய்தேன், எனது செயல்' என்றெல்லாம் தற்போது உணர்வையும், தன் - முனைப்புச் சிந்தனைகளையும் உயிர்களாகிய நம்பால் தோற்றுவிப்பது இந்த ஆணவமே.

அத்தோடு உடலும், உறவும், உலகமும் பிறவும் தனக்கு மட்டுமே உரியன என்ற சுயநல உணர்வினையும் தோற்றுவித்துச் சிறுசிறு கலவரங்கள் முதல் உலகளாவிய பெரும் போர்கள் வரை பல கேடுகளும் நிகழ ஆணவமே காரணமாகிறது; இங்ஙனம் புறஉலகப் போராட்டங்களிலேயே உயிரைத் திசை திருப்பி அலைக்கழிப்பதன் மூலம், ஆணவம் என்ற மூலமலம் உயிரினத்தை இறைவனுக்கு வெகு தொலைவில் மறைத்து விடுகிறது.

சும்மா இருந்த மூலகன்மம் ஆணவ - நண்பனோடு சேர்ந்து கொண்டு, ஆன்மாக்களை வினையாளியாக்கி, ஆன்மாக்களின் பிறப்பு-இறப்புக்குக் காரணமாயிற்று.

ஆண்டவனின் பரிக்கிரக சத்தியாய் நிலைபேறுடைய மாயை, ஆன்மாக்களின் பொருட்டு உடல், உலகம் முதலியனவாக விரிந்து, சிலகாலம் நிலைபெற்றுப் பின் ஒடுங்கிவிடுகிறது.

ஆன்மாக்களின் இயல்பு

இயல்பாக இன்ப வேட்கை உடையன ஆன்மாக்கள். பிழைபட்ட வேட்கையால் இருள் உலகத்துள் நுழைந்து அவை ஆணவத்தின் வலிய பிடியில் சிக்கிக் கொள்ளுகின்றன. தமக்கு இயல்பாக உள்ள இச்சை, ஞானம், கிரியை என்ற முத்திற ஆற்றல்களைச் செயற்படுத்துவதற்கு அவை ஆணவத்தையே உடம்பாகவும் கருவி - கரணங்களாகவும் கொள்ளுகின்றன. அத்தகு கூடா நட்பால், ஆன்மாக்களுக்கு 'நான்' என்னும் அகந்தை (தற்போதம்) மேலிடுகிறது. ஆன்மாவின் இந்த நிலையையே சாத்திரங்கள் 'தனிநிலை' (கேவல நிலை) எனக் கூறுகின்றன.

தீய இச் சேர்க்கையால் ஆன்மாக்கள் தன் - முனைப்போடு செயற்படத் தொடங்குகின்றன. அதனால் கன்ம மலம் பற்ற வினை ஈட்டம் நிகழ்கிறது.

இங்ஙனம் ஆணவத்தோடு கூடி, இறைவன் அருளிப்பாடு களை மறப்பதும், மாயாகாரியங்களோடு கூடி உலகச் சிற்றின்பங் களில் அலைமோதுவதும் ஆன்மாக்களின் பொது இயல்பு. இதனைச் சகல நிலை எனச் சாத்திரங்கள் அறிவுறுத்துகின்றன.

அடுத்து இறை - அருளால் சிவசக்தியின் சார்பு ஏற்பட, மாயையிலிருந்து ஆன்மாக்கள் கை-கால், கண்-காது மனம் -

புத்தி முதலிய கருவிகளைப் பெறுகின்றன. அவற்றைக் கொண்டு செயற்படுவது காரணமாக வினைகளின் தொடர்ச்சி அமைகிறது. கால அடைவில் அவ் வினைகளுக்குரிய இன்பதுன்பப் பயன்கள் ஊட்டப்பெறுகின்றன.

திருவருளை முழுமையாகச் சார்ந்து நிற்கும் ஆன்மாக்கள் படிமுறையில் சிவஞானத் தெளிவு பெற்று எங்கும் நிறைந்த பரம்பொருளின் திருவடியில் பேரின்பம் துய்க்கின்றன. அப்போது சிவசக்தியே ஆன்மாவுக்கு அருளுடம்பு ஆகிறாள். இதனை ஆன்மாவின் 'சுத்தநிலை' என்பர்.

இதேபோன்றுதான், உலகில் காணப்படும் பொருள்கள் யாவற்றிற்குமே ஒரு பொது இயல்பு உண்டு. மூலவித்தாக ஒன்று இருக்கும், அது பிறிதொரு பொருளொடு இயைந்து கூடி வெளிப்படும். காரியப்படும்.

உடைமையும் அடிமையும்

கோடானு கோடியாக உள்ளன நம் போன்ற உயிர்ப் பொருள்கள்; அவை தாமாகவும் தன் முனைப்போடும் செயற் படுகிற ஆற்றல் உடையவை (*Kinetic Energy*); அவை அனைத்தும் சிவபெருமானுக்கு அடிமை. உயிர்ப் பொருள்கள் மற்றும் உயிரற்ற பொருள்கள் யாவும் சிவத்தின் கட்டுபாட்டுக்குள் முழுமையாக அடங்கிச் செயற்படுகின்றன என்பது சைவ சிந்தாந்தக் கொள்கை.

உலகப் பொருள்கள் அனைத்தும் உயிரற்ற சடப்பொருள்கள். அவையேபோல் மும்மலங்களும் சடமே. சடமாகிய பொருள்கள் அனைத்தும் அவற்றின் பல்வேறு ஆற்றல்களும் தாமாக இயங்க வல்லன அல்ல. பிறரால் இயக்கப்படுவனவே (*Potential Energy*). அவை அனைத்தும் சிவபெருமானுடைய உடைமைப் பொருள்களே. இதுவே முக்காலத்துக்கும் உண்மை.

வினை என்பதும் சிவபெருமானின் ஆணைவழி இயங்குகிற ஓர் உடைமைப் பொருளே; அதனை, 'ஆணையின் இருவினை' என்பார் மெய்கண்டார், 'ஆணை' என்பது சிவசக்தி. நல்வினை தீவினைகள் சிவபெருமான் ஆணைப்படி சிவசக்தியாலேயே நிகழ்கின்றன. இவ் உண்மையை அப்பரடிகள் மிக அழகாகப் பண்ணிசைப்பார்.

ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடாதாரே?
அடக்குவித்தால் ஆர்ஒருவர் அடங்காதாரே? என்று

(தேவாரம், திருத்தாண்டகம் - 3)

பொன்வாள் (ஆல்) அலர்(தலும்), சோக(மு)ம், செய்(கின்ற) கமலத்து (போன்று), சிவபெருமான் என்ற வள்ளல் (ஆல் மும்மலங்களும் செயற்பட்டுத் தத்தம் ஆற்றலால் உயிரினத்தைக் கட்டுபடுத்துதல்) ஆம் என்பது சிவஞானபோதம்.

இதன் கருத்து சூரியனின் இளஞ்செங்கதிர்கள் பரிசத்தலால் மலர்கின்றது தாமரை. அதே தாமரை பின்னர் உச்சிப்பொழுதில் அதே சூரியனின் வெய்ய கதிர்களால் வாடுகிறது. அதேபோன்று தான் சிவபெருமானின் ஆணையால் மும்மலங்களும் ஆன்மாக் களின்பால் செயற்படுகின்றன என்பதாம்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகைப் பாசங்களையும் தன் ஆணை வழிச் செலுத்தி ஆன்மாக்களை மெய்யுணர்வு பெறச் செய்பவள் சிவபெருமானின் உள்ளுறையும் திரு அருட் சத்தியே. அவளே சிவபெருமானின் ஆணை ஏற்று நம் ஆன்ம வினை நுகர்ச்சிக்கு ஏற்றவாறு ஒவ்வொரு ஆன்மாவுக்கும் மாயையிலிருந்து தக்கதொரு உடம்பு, உணர்கருவிகள் நுகர்ச்சிப் பேறு ஆகியவற்றை அருளுகிறாள்.

மும்மலங்களின் ஆற்றல்

மும்மலங்களுள் மாயை என்பது சிவத்தின் அரவணைப்பில் உள்ள நல்லதோர் ஆற்றல்; ஆணவம் என்பது தீய ஆற்றல்; அது தலைவனாகிய சிவபெருமானிடம் அவ்வப்போது முரண்டு பண்ணும்; போரிடவும் துணியும். கன்மம் என்பதோ ஒரோஒரு சமயம் முரண்பட்டாலும் பெரிதும் சிவத்திடம் ஒடுங்கிப் போகிற ஆற்றல். இந்த மூன்று ஆற்றல்களுமே உயிரற்ற சடம்; சிவம் இயக்கினாலன்றி இவற்றால் இயங்க முடியாது. ஆயினும் இம் மூன்றும் சிவத்தைப் போன்றும், உயிர்க்கூட்டத்தைப் போன்றும் அநாதி வாழ்வுடையவை; எக்காலத்தும் அழியாதவை இவை மூன்று ஆற்றல்களும் சிவத்துக்கு வெளியே இருந்து செயற்படுபவை.''

சிவபெருமானின் திருவருள் ஆற்றல்

சிவத்துக்கு உள்ளீடான பேராற்றல் ஒன்று உள்ளது; அதனையே திருவருள் (சிவசக்தி) என நாம் அழைக்கிறோம்;

அவ் ஆற்றலைக் கொண்டுதான், சிவபெருமான் ஏனைய வெளி ஆற்றல்களை எல்லாம் தன் வயப்படுத்தி இயக்குகிறான்; ஆயினும் அவன் விருப்பு-வெறுப்பு இல்லாத நடுவுநிலையாளன், ஆதலால், எந்த ஆற்றலாலும் கட்டுறாத தூயவனாகவே திகழ்கிறான்; அதுமட்டுமின்றி நம் போன்ற உயிர்க் கூட்டத்தையும் மும்மல ஆற்றல்களின் பிடியிலிருந்து விடுவிக்கவும் சிவ ஆற்றலாகிய உவப்பிலா அறிவானந்தத்தை (சத்சித் ஆனந்தத்தை) நமக்கு அருளவும் அவனால் முடிகிறது.

ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகைப் பாசங்களையும் தன் ஆணைவழிச் செலுத்தி ஆன்மாக்களை மெய்யுணர்வு பெறச் செய்பவள், சிவபெருமானின் ஆணை ஏற்று, வினை நுகர்ச்சிக்கு ஏற்றவாறு ஒவ்வோர் ஆன்மாவுக்கும் மாயையிலிருந்து தக்கதொரு உடம்பு உணர்கருவிகள், உலகம் நுகர்ச்சிப் பேறு ஆகியவற்றை அருளுகிறாள்.

இரப்பவர்க்கு ஈய வைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்

- அப்பரடிகள் (தேவாரம், 4-ஆம் திருமுறை - 10)

வினைப் பயனை ஏன் ஊட்ட வேண்டும்?

நோயாளியின் நோயை எவ்வாறேனும் குணப்படுத்த வேண்டியது ஒரு மருத்துவரின் பொறுப்பு அன்றோ? அதுபோல வினைகளுக்கு உரிய தண்டனையைக் கொடுத்து அவர்களைப் பாசக் கட்டிலிருந்து விடுவிக்க வேண்டியது இறைவனின் பொறுப்பாகிறது.

முன்னொருகால் தீங்கு செய்த கொடியவர்கள் தம் ஆணவம் ஒடுங்கித் தத்தம் வினைகளுக்கு உரிய பயன்களை முழுமையாக உரிய முறையில் தாம்தாமே நுகர்ந்தாலன்றி அவர்களுக்கு பாசக்கட்டிலிருந்து விடுதலை என்பது அரிதேயாகும். அப்பாவச் செயல்களுள் அவ்வப்போது நுகர்ந்தவை போக, எஞ்சியவற்றின் விளைவுகளை அவர்கள் இப்போது நுகர வேண்டியதும் நியதியாகும்.

அந்நியதிக்கு ஏற்ப, அவர்களை உரியவாறு துன்பச் சூழலில் அழுத்த வேண்டும். அதற்காக அவர்களை மாயா காரியங்களாகிய காசு பணத்திலும், காரிகையரிடத்திலும் அனைய பிறவற்றிலுமாக மயங்கிக் கிடக்குமாறு செய்கிறான்

இறைவன். செல்வச் செருக்கும், பதவிப் பித்தும், புது முயற்சி களிலே அவர்களை ஆட்டிப் படைக்குமாறும் செலுத்துகிறான்.

ஆன்மாவைப் பிறப்பு இன்றியே கடைத்தேற்ற முடியாதா?

சிவசாமி ஓர் ஐயத்தை எழுப்பினார். 'பிறப்பு-இறப்புச் சக்கரத்திலே அழுத்தாமலேயே ஆண்டவனால் ஆன்மாக்களைக் கடைத் தேற்ற முடியாதா?'

'உயிர் என்பதோ ஓர் உணர்வுப்பொருள் (ஆற்றல்). அதற்கு எனத் தனி வடிவமோ உருவமோ கிடையாது. அது வினைகளை செய்வதற்கும், அவற்றின் பயனை நுகர்தற்கும் அறிவுக்கருவிகள், செயற்கருவிகள், உணர்கருவிகள் மற்றும் நுண்ணிய கரணங்கள் பலவும் வேண்டும். ஆதலால் ஏதோ ஒருவகை உடம்பினுள் புகுந்துதான் அது செயற்பட வேண்டும்.

அந்த உடம்பே அதற்கு வடிவம் ஆகிறது. அந்த உடம்பு ஈ, எறும்பு போன்ற சிறிய வடிவமாகவும் இருக்கலாம்; யானை போன்ற பேருருவாகவும் அமையலாம். மரம், செடி கொடி யாகவும் இருக்கலாம்; மனித, தேவ, நரகர்களுள் ஏதேனும் ஒரு வடிவிலும் அமையலாம். ஆன்மாவுக்கான அவ்வடிவத்தை, நியதிக்கு ஏற்ப நிர்ணயிப்பவன் சிவபெருமானே.

நால்வகைத் தோற்றம், எழுவகைப்பிறப்பு, எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களில் ஆன்மா ஏதேனும் ஒரு மாயா-காரிய உடம்பினைப் பெறுகிறது என்பது சைவ சித்தாந்தம். அங்ஙனம் எக்காலத்தும் அழியாமல் நிலை பெற்றி ருக்கும் இயல்புடைய உயிர், ஓரோ ஒரு காலத்தில் ஓரோஓர் உடம்பினுள் புகுத்தப் பெறுவதையே பிறப்பு என்கிறோம்.

முன்னர் ஆணவத்தை உடம்பாகக் கொண்டு, ஆன்மா வினைகளைச் செய்து கன்ம மலத்தை ஈட்டிக் கொண்டது. இப்போது ஆணவமும் கன்மமுமாக இரண்டும் சேர்ந்து ஆன்மாவைப் பிணித்து மாய-இருளில் அழுத்திக் கொண்டிருக் கின்றன. அவற்றின் வலிமையான பிடியிலிருந்து ஆன்மாவை விடுவிக்க வேண்டும்; மறுவாழ்வு அளித்துக் காக்க வேண்டும். ஒளிமயமான உயர்நிலையில் நிலைநிறுத்த வேண்டும் என விரும்புகிறான் சிவபெருமான். அஃது அவனுக்கு மிகவும் எளிமையான ஒரு செயலே. ஆயினும் ஆன்மாவின் சிறுமைப் பண்புகளைச் சற்றே சிந்தித்துப் பார்க்கிறான் அவன்.

ஒளியைக் காட்டிப் பேரின்பத்தை ஊட்டினாலும், ஆன்மாவால் அதைத் துய்த்துக்கொண்டு அங்கு நிலையாக இருக்க முடியுமா? 'நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது வாலைக் குழைத்துக் கொண்டு வாசலுக்கே ஓடும்' என்பது அனுபவ வாக்கு அன்றோ? வேம்பின் கசப்பையே விரும்பி, உண்டு பழகிய புழுவுக்கு எத்துணைத்தான் சர்க்கரையை ஊட்டினாலும். அப்புழு வேம்பின் கசப்பை நாடியே ஓடும்.

அதுபோல ஆணவ-கன்மத்து இருளில் பழகிய ஆன்மாவுக்கு, எத்துணைதான் கருணை உள்ளத்தோடு பேரின்ப ஒளியைக் காட்டினாலும் அங்கு நிலைப்பெற்றிருக்கும் இயல்பு மலக் கட்டுடைய ஆன்மாவுக்கு இருப்பதில்லை. ஆன்மா தனக்குத் தானே அனுபவித்து அதன் மூலம் காரண - காரியங்களைச் சிந்தித்து, உண்மைகளைப் படிப்படியாக உணர்ந்து, அறிவு விளக்கம் பெற்றால்தான் ஆன்மாவால் அறிவானந்தமாகிய பேரின்பத்தில் நிலை பெற்றிருக்க முடியும் என அவன் எண்ணுகிறான். ஆதலால் தான் அருளாளர்கள் சிவபெருமானை,

'வேகம் கெடுத்தாண்டவேந்தன் அடி வெல்க! - என்றும்
பையவேசென்று பற்று அறுப்பானை' - என்றும்

(திருவாசகம், சிவபுராணம் - 6)

போற்றி மகிழ்வர்.

ஊனப்பாலும் ஞானப்பாலும்

விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நம்மை வினை செய்யுமாறு தூண்டுபவள் சிவசக்தி. பின்னர்ச் செய்வினைகளுக்கு ஏற்ப, இன்ப துன்பப் பயன்களை நுகர்விப்பவளும் அவளே.

பால் என்பது வினைப் பயனைக் குறிக்கும் அழகியதோர் தமிழ்ச் சொல். வினைகள் நுகர்ந்தாலன்றிக் கழியா; எனவே புண்ணிய பாவப் பயனாகிய ஊனப்பாலைக் குழந்தைகளாகிய நமக்கு அன்னை சிவசக்தி ஊட்ட வேண்டியது நியதி ஆகிறது. அப்போது தான் மறைந்திருந்து, செவிலித் தாயாகிய மாயா சத்தியைக் கொண்டு நமக்கெல்லாம் அவள் ஊனப்பாலை ஊட்டுகிறாள்.

வினைகள் முற்றிலுமாகக் கழிந்தபோது, அவளே நம் அருள் வினைக்கு ஏற்ப, விரைந்து வந்து, அருளார் அமுதமாகிய இறைப் பேரின்பத்தை ஞானப்பாலாகவும் ஊட்டுகிறாள். சீர்காழித்

திருக்குளத்தில் மூன்றாண்டுக் குழந்தைக்குத் திருமுலைப்பால் ஊட்டி, ஞானசம்பந்தராக்கிய அருள்-வரலாறு யாவரும் அறிந்த ஒன்றே.

எனினும் அவள் தன் விருப்பப்படி மட்டும் எதையும் செய்வதில்லை; நுகர்ச்சிக்கென முதிர்ந்த வினைகளின் பதிவைக் கையேடாகக் கொண்டுதான் செயற்படுகிறாள்.

இறைவன் நின்மலன், தொடக்குறான்

''மும்மலங்களும் உயிர்களாகிய நம்மைப் பெரிதும் பந்தித்துத் துன்புறுத்துகின்றனவே. அதே போன்று ஆணவ, கன்ம மலங்களும் இறைவனின் வைப்பு சக்தியாக உள்ள மாயா மலமும் இறைவனைப் பிணிக்காவோ?'' - என்ற ஒரு வினாவினை எழுப்பினார் சிவசாமி.

''பாம்பினிடத்து விடம் உள்ளது. அதற்கு மற்றவர்களைக் கொன்றுவிடுகிற ஆற்றல் உண்டு. ஆயினும் அந்த விடம், அப் பாம்பினிடத்து அடங்கி இருக்குமேயன்றி, அப் பாம்பினைக் கொல்லாது அன்றோ? அதுபோல மாயை, கன்மங்கள், இறைவனுள் அடங்கிய உடைமைகள், அவை அவனைப் பந்திக்க மாட்டா.

சூரியனின் இளஞ்செங்கதிர்கள் பரிசித்தலால் மலர்கின்றது. தாமரை; அதே தாமரை பின்னர் உச்சிப் பொழுதில் அதே சூரியனின் வெய்ய கதிர்களால் வாடுகிறது. மலர்ச்சியும், வாட்டமும் தாமரைக்குத் தானேயன்றி, அதற்குக் காரணமான சூரியனுக்கு அல்லவே? அதே போன்று தான், மும்மலங்களும் சிவபெருமானின் ஆளுமைக்கு உட்பட்டு ஆன்மாக்களின்பால் தம் காரியங்களைச் செய்யுமேயன்றிச் சிவத்தைப் பந்திக்கும் ஆற்றலற்றன.

சிவபெருமான் நடுவுநிலையாளர்

> ''நல(ம்) இலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு நல்லன்
> சலமிலன் பேர் சங்கரன்''

எனச் சிவபெருமானைப் பற்றி உமாபதி சிவனார் அறிவுறுத்து கிறார். தம்மைச் சார்ந்தவர்களுக்கு நன்மை செய்பவனாகவும் சாராதவர்களுக்கு நன்மை செய்யாதவனாகவும் சிவபெருமான் இருக்கிறானே! அவ்வாறாயின் அவனை நடுவுநிலையாளன் எனக் கூறுதல் எவ்வாறு பொருந்தும்?'' என்ற ஓர் ஐய வினா எழுப்பினார் குப்புசாமி.

''மிகச் சிறந்த வினா ஒன்றை எழுப்பி இருக்கிறீர்கள், மகிழ்ச்சி. 'புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க! என்ற மணிவாசகரின் திருவாசகக் கருத்தை அடியொற்றியே உமாபதி சிவனாரும் தம் நூற்பாவை அமைத்துள்ளார்.

நண்ணுதல் என்றால் நெருங்குதல், அணுகுதல், சேர்தல், என்பன பொருள். ஞானத் தெளிவு பெற்ற ஆன்மாக்கள் சிவநெறி யில் நின்று முன்னேற விழைகின்றன. அவனுடைய திருவடி களையே பற்றுக் கோடாகக் கொண்டு அவை வாழ்கின்றன. அத்தகைய ஆன்மாக்களுக்குச் சிவபெருமான் கருணை பொழிகிறான்; அவற்றை மேன்மேலும் செந்நெறியில் ஆற்றுப் படுத்துகிறான்; அவற்றின் மெய்த்தவத்திற்கு ஏற்ப உயர்ந்த பயன்களை அவை நுகருமாறு துணைநிற்கிறான். எனவே 'நண்ணினர்க்கு நல்லன்' என்றார் அருளாசிரியர்.

வேறு சில ஆன்மாக்களோ சிவபெருமானைப் புறக்கணிக் கின்றன; மற்றும் சில ஆன்மாக்கள் அவனை மதிப்பதில்லை; எதிர்த்தும் நிற்கின்றன. இன்னும் சில ஆன்மாக்கள் பிற சிறுதெய்வங்களோடு சிவத்தையும் சமமாக எண்ணுகின்றன. அவன் பெருமைகளை உணராமலும் அவன் தமக்குச் செய்துள்ள ஏராளமான நன்மைகளை நன்றி உணர்வோடு எண்ணிப் பார்க்காமலும், அவனைப் புறக்கணித்துத் தம்மைத் தாமே ஒதுக்கிக் கொள்ளுகின்றன. இங்ஙனம் சிவபெருமானை நெருங்காமல் அவனுக்கு வெகுதொலைவில் உள்ள ஆன்மாக் களை மாணிக்கவாசகர் 'புறத்தார் எனப் பட்டியலிடுகிறார்.

இவ்வாறு சிவத்திலிருந்து மாறுகோள்பட்ட ஆன்மாக்களுக்கு அவனும் சேயோனாக வெகு தொலைவில் நிற்கிறான் என்பது அடிகளின் கருத்து. புறத்தார் விருப்பத்தில் குறுக்கிடாமல் அவர்கள் போக்கின்படியே அவர்களை முனைப்போடு இயங்க வழிவிட்டு அவ்வினைகளின் பயனையும் அவர்களே நுகருமாறு செய்கிறான் சிவபெருமான். எனவே அவனை 'நலமிலன் நண்ணார்க்கு' என்று கூறி மாணிக்கவாசகரின் கருத்துக்கு வலுவூட்டுகிறார் உமாபதிசிவனார்.

மேலும் அவன் எவ்விதக் கேட்டினையும் தானே விரும்பிப் புறத்தார்க்குச் செய்வதில்லை என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

சிவபெருமான் நடுவுநிலையாளன் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எல்லா ஆன்மாக்களுக்குமே பேரின்பம் நல்க வேண்டும் என்பதுதான் அவனுடைய விருப்பமும், குறிக்கோளும். ஒவ்வொரு ஆன்மாவையும் அதனதன் நிலையிலிருந்து படி முறையில் முன்னேற்றுவிக்கவே அவன் திருவுளம் கொள்ளுகிறான்.

ஆயினும் பண்பு நலன்களாலும், அறிவு நிலையாலும் செயல்திறனாலும் உயிர்களுக்குள் மிகுந்த ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. ஆன்மாக்கள் ஆணவமாகிய முதற் குற்றம் காரணமாகச் சிற்றின்பங்களையே நாடி அலைகின்றன. அங்ஙனம் உலக இன்பங்களை விரும்புதலை ஒழியாத ஆன்மாக்களுள், நன்மையை விரும்புகிற உயிர்களும் உள; என்றாலும் அவை தொழிற்படும்போது நல்ல காரியங்களை மட்டுமே செய்தலின்றி ஆணவத் தொடர்பு காரணமாக, தீயனவற்றையும் அன்றோ முனைந்து செய்கின்றன!

மேலும், உயிர்கள் செய்கிற வினைகளை இறைவன் கண்டு கொள்ளாது இருப்பின், அவை பயன் தரமாட்டா; வினைப் பயன் நுகர்ந்து தொலைக்கப்படவில்லை யாயின், உயிர் பிறப்பு - இறப்புச் சக்கரத்திலிருந்து மீள்வதற்கு வாய்ப்பு இல்லை. எனவே ஒவ்வொரு உயிருக்கும் அதனதன் வினைக்கு ஈடாக வெவ்வேறு விதமான வாழ்வினைக் கொடுக்க வேண்டியது சிவபெருமானின் கடமையாகிறது.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில் (குறள் - 582)

என்ற தெய்வமொழிக்கு ஏற்ப, நடுவுநிலை நிற்கும் இறைவன் நல்வினைக்குரிய இன்பப் பயனைச் சிவநெறி நிற்கும் உயர்ந்த ஆன்மாக்களுக்கு ஊட்டுவிப்பதும், புறத்தார்க்கு அவர்கள் புரிகிற தீவினைகளுக்கு உரிய துன்பப் பயனை கூட்டுவிப்பதும் கடமையாகிறது.

தாம் செய்யும் நல்வினையை இறைவன் ஏற்றுப் பயன் தர வேண்டும் என எல்லா ஆன்மாக்களும் விரும்புகின்றன. அவ்வாறு உணர்ந்தபின், அவன் நாம் செய்கிற தீவினை களை மட்டும் நோக்காது இருத்தல் வேண்டும் என விரும்புதல் முறையாகுமா? அஃது அவனுடைய நடுவு நிலைமைக்கு இழுக்காகுமன்றோ?

சுந்தரருக்குத் திருவாரூரில் தம்மைத் தோழமையாகத் தந்திருந்தான் சிவபெருமான். திருவொற்றியூரில் மகிழமரத்தடியில் சுந்தரர், இறைவன் முன்னிலையில் சங்கிலியார்க்குச் சபதம் செய்து கொடுத்தார், திருவொற்றியூரை நீங்குவதில்லை' - என்று.

ஆயினும் பின்னர், தாம் செய்த சூளுரையினை மறுத்த போது, அவர் தம்முடைய அணுக்கத் தொண்டராகவும், நெருங்கிய தோழராகவும் இருந்த போதிலும், அவருடைய இரண்டு கண் பார்வையையும் மறையுமாறு செய்தான் சிவபெருமான். இதுபோல் ஏராளமான வரலாற்றுக் குறிப்புகள் பெரியபுராணம் போன்ற ஞானநூல்களில் பேசப்படுகின்றன. இவையெல்லாம் சிவபெருமான் நடுவுநிலையாளர் என்பதற்கு சான்று அன்றோ?

இதனை ஒரு நடைமுறை உவமை மூலமும் தெளியலாம்:

ஒரு கல்விக்கூடத்தில் ஏராளமான மாணவர்கள் படிக் கிறார்கள். அனைத்து மாணவர்களும் நல்ல முறையில் படித்து முன்னேற வேண்டும் என்றே தலைமை ஆசிரியர் விரும்புகிறார். ஆனால் எல்லா மாணவர்களும் ஒரே வகுப்பில் படிக்கவும் இல்லை; ஒரு வகுப்பில் படிக்கும் எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியான அறிவுடையவர்களாகவும் இல்லை. அறிவாலும் செயல்திறனாலும் அவர்களுக்குள் மிகுந்த ஏற்றத் தாழ்வுகள் உள்ளன அன்றோ? ஆகவே ஒவ்வொரு மாணவனையும் அவனவன் தகுதிக்கு ஏற்ப வெவ்வேறு வகுப்பில் வைத்து வெவ்வேறு பாடங்களைச் சொல்லிக் கொடுத்து தனித்தனியே வெவ்வேறு காலகட்டங்களில் கடைத்தேற்ற வேண்டியது தலைமை ஆசிரியரின் கடமையாகிறது. அங்ஙனம் மாணவர்கள் வேறுவேறு விதமாக நடத்துவதால் தலைமை ஆசிரியரை நடுவுநிலை இல்லாத கொடியவர் என்று கூற முடியுமா?

இதுகாறும் சிந்தித்த இறை-இயல்புகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து நோக்குவோம்:

இறைவன் ஆன்மாக்களை இயக்கி வினையைச் செய் விப்பான்; அவற்றின் பயனை நுகர்விப்பான்; அதன் மூலம் எல்லா உயிர்களையும் ஈடேற்ற விழைவான்; அதற்காக ஐந்தொழிலும் இயற்றுவான்.

ஓர் அலுவலகத்தில் அவரவர் திறமைக்கு ஏற்ப வெவ்வேறு பணிகள் கொடுக்கப்படுவதுபோல, வெவ்வேறு ஆன்மாக்களின்

வெவ்வேறு தன்மைத்தான அறிவு-விளக்கம், வினை-நுகர்ச்சி, மாயா-மயக்கம் இவற்றிற்கு ஏற்பவே மாயையிலிருந்து உடம்பு முதலியவற்றை அருளுகிறான்;

தன்னை நினையாதாரை அவனும் நினையான்; ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியான்; தன்னைப் பிற சிறு தெய்வங் களோடு ஒப்ப நோக்குவார்க்கும், தன் பரத்துவத்தை ஏற்கா தார்க்கும் அவன் வெகு தொலைவிலேயே நிற்பான்; புறத்தார்க்குச் சேயோன் தன்னிடம் பகை கொள்ளுவாரையும் அவன் மறக் கருணையால் ஆட்கொள்ளுவான்;

மெய்யடியார்களிடத்து அவன் அளப்பரிள கருணை கொண்டவன்; சிறந்தடியார் சிந்தனையுள் தேன் (ஆக) ஊறி நின்று, பிறந்த பிறப்பு அறுப்பான்;'' (திருவாசகம் - சிவபுராணம்).

'வினையின் நீங்கி விளங்கிய அறிவரே' வீடு பேற்றிற்கு உரியவர், ஆதலால் எச்சம் எதுவுமின்றி வினைகளை முற்றுமாக நுகரச் செய்தற்காக நல்லடியாரை அவ்வப்போது இன்பதுன்பச் சுழற்சியிலே சிக்க வைப்பான்; சோதனையும் செய்வான்;

இருவினை-ஒப்பு, மல-பரிபாகம் உற்ற பக்குவ ஆன்மாக் களுக்கு எவ்வித இடையூறுமின்றி விரைந்து வந்து அருள் பாலிப்பான்;

வினைவயிற் பிரிந்தோன் மீண்டு வருகாலை
இடைச் சுர மருங்கில் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியல் கலிமா உடைமையான

என்பது தொல்காப்பியம் (கற்பியல் - 53).

தன் அருட் சக்தியின் மூலம் திருவடிப்பேறாகிய நிலையான அறிவானந்தத்தை ஆன்மாக்களுக்கு வாரிவாரி வழங்குவான்.

ஆறாம் இயல் முற்றிற்று.

இயல் - 7

இன்ப நுகர்ச்சிக்கு உரியோர்

(பேரின்ப உரிமை)

முப்பொருள் உண்மை

''ஐயா! எக்காலத்தும் அழியாத நிலையான பொருள்கள் மூன்று எனக் கூறினீர்கள். அவற்றுள் இன்பதுன்பங்களை நுகர்கிற உரிமையுடையோர் யாவர்?'' என வினவினார், சிவசாமி.

இறை, உயிர், தளை என்ற மூன்று பொருள்கள் எக்காலத்தும் அழியாத நிலையான பொருள்கள் என்பதையும் அவற்றின் இயல்புகளையும் நாம் முன்னரே தெளிவாகச் சிந்தித்துள்ளோம். எனினும் ஒருமுறை நினைவுப்படுத்திக் கொள்வது தங்கள் வினாவுக்கான விடையினைக் காணப் பெரிதும் உதவியாக இருக்கும்.

பதியாகிய சிவபெருமான் ஒருவரே தனிப் பெரு முழுமுதற் கடவுள்; உயிர்கள் எனப்படும் நம் போன்ற ஆன்மாக்களோ கோடானு கோடியாக உள்ளன; ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் மும்மலங்கள் - இம் மூன்றும் அநாதி-நித்திப் பொருள்கள் என்பது சைவசிந்தாந்தத்தின் சிறப்புமிகு கொள்கையாகும். நிலைத்த தன்மையால் இம்மூன்றும் ஒன்று போல் தோன்றினாலும் மற்ற மற்ற இயல்புகளால் பெரிதும் வேறுபாடுடையன.

சிவம் - பேரின்பப் பொருள்

இம் மூன்றனுள், சிவபெருமான் பேரின்பத்தின் ஒரே நிலைக்களன்; இன்ப ஊற்று; ஞானமே வடிவான முற்றுணர்வினன்; எக்காலத்தும் நிலையாக இருப்பவன்; ஆகவே அவனைச் சத்சித் ஆனந்த சொரூபி எனப் போற்றுவது மரபு. (சத் = நிலையான; சித் = முற்றுணர்வு; ஆனந்தம் = பேரின்பம்.) அவனே மற்றவர்களுக்குத் தன்பாலுள்ள அருள் ஆர் அமுதமாகிய பேரின்பத்தை வாரி வாரி வழங்கும் வள்ளல்.

ஆதலால் பேரின்ப நுகர்ச்சி என்பது அவனுக்குத் தேவை இல்லாத ஒன்று. ஏதேனும் வினை செய்துதான் இன்பத்தை நுகர வேண்டுமென்ற அவல நிலையும் அவனுக்கு இல்லை.

அத்துணை பெருமையுடைய சிவபெருமான் திருவடியில் நிலைத்திருப்பதையே பேரின்ப நுகர்ச்சி என்றும் பரமுத்தி என்றும் சைவ சாத்திரங்கள் போற்றும். அவ்வாறாயின் அவ் இன்பத்தை நுகர்வோர் யார்? என்பதே இப்போதைய சிந்தனை.

அறிவற்ற மலங்களுக்கு நுகர்ச்சி இல்லை

ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் சிவத்துக்கு நேர் எதிரான அவப்பொருள்கள்; அவற்றை மலங்கள் என்றும், பாசங்கள், தளைகள் என்றும் குறிப்பிடுவர். அவையும் சிவத்தைப் போல் நிலையானவையே; என்றாலும் அவற்றிற்கு அறிவு கிடையாது.

அவை மூன்றுமே சடப்பொருள்கள். சிவபெருமான் எத்துணைதான் பேரின்பத்தை வாரி வாரி வழங்கினாலும் அதை ஏற்று நுகர்ந்து இன்புறுகிற உணர்வு அவற்றிற்குச் சிறிதும் இல்லை. எனவே நுகர்ச்சி-உரிமை என்பது வினை உள்ளீட்டத் திற்கும் மலங்களுக்கும் இல்லை.

ஆன்மாக்களுக்கே இன்ப நுகர்ச்சி

மூன்று பொருள்களுள் எஞ்சி நிற்பவை ஆன்மாக்கள். ஆன்மாக்களும் நிவையானவையே; அவை அனைத்தும் அறிவுப் பொருள்கள்; ஆயினும் அவற்றின் அறிவோ சிற்றறிவு, அவற்றிற்கு இன்ப வேட்கையும் நிறையவே உண்டு. அத்தகு வேட்கை மிகுதி யாலும் சிற்றறிவாலுந்தான் நல்லது எது கெட்டது எது என்று புரிந்து கொள்ளாமல், அவை சேரக்கூடாத ஆணவ மலத்தோடு சேர்ந்து, செய்யக்கூடாத இருவினைகளைச் செய்து, நுழையக் கூடாத மாயா உலகத்தில் நுழைந்து, அடைய வேண்டாத பிறப்பு - இறப்புச் சுழற்சியில் அல்லலுறுகின்றன.

ஆகவே இருள்சேர் இருவினைகளைச் செய்வதும், அவற்றிற்கான இன்பதுன்பப் பயன்களைப் பிறப்புகள் தோறும் நுகர்வதும் உயிர்க் கூட்டமாகிய நமக்கு நடைமுறை வழக்கமாயிற்று. இது உலகியல் சிற்றின்பத் தொடர்பானது. அடுத்து,

அதேபோல் அருள்வினையாகிய மெய்த்தவ நெறியில் நிற்பதற்கும் அதற்குரிய பயனான திருவடிப்பேறு என்னும் பேரின்பத்தில் திளைத்திருப்பதற்கும் உரிமை உடையோர் உயிரினமாகிய நாமே என்பதும் தெளிவு.

செய்வினையும் செயப்பாட்டு வினையும்

ஆன்மாக்களாகிய நாம் ஆணவத்தால் உந்தப்பட்ட சூழலில் 'நான் என்ற தற்போத உணர்வு மேலோங்கி இருப்பதால் நம்மிடம் அளப்பரிய கருணையுள்ள பரம்பொருளாகிய பரசிவத்தை நாம் மறக்கிறோம்; தன் - முனைப்போடு செயல்களில் ஈடுபடுகிறோம்.

ஆணவத்தின் வலிய பிணிப்பால் இங்ஙனம் நாமே தன் - முனைப்போடு வினை செய்வது ஒரு புறம்; ஆணவக்கட்டிலிருந்து விடுபடுவதற்காக, இறைவன் மறைந்திருந்து, ஆன்மாக்களாகிய நம்மை வினை செய்யத் தூண்டுவது மறுபுறம், ஆக, வினை என்பது செய்வினை என்றும் செயப்பாட்டு வினை என்றும் இரண்டு வகையாகிறது.

உரிமைப் போராட்டம்

''உரிமை என்றதும் எனக்கு ஓர் ஐயம் எழுகிறது, ஐயா, பல குடும்பங்களில் அண்ணன் தம்பியர் சொத்துரிமைக்காகப் பெரும்போர் நிகழ்த்துகிறார்களே! அண்ணன் உயிரிலும் ஆண்டவன் இருக்கிறான்; தம்பியின் உயிரிலும் ஆண்டவன் இருக்கிறான்; அவ்வாறாயின் அவர்கள் ஏன் ஒருவரோடு ஒருவர் சண்டையிடுகின்றனர்?'' என நடப்பியல் தொடர்பான வினா ஒன்றை எழுப்பினார், குப்புசாமி.

''அண்ணன் - தம்பி என்ற அந்த இருவர் உயிர்களில் மட்டு மல்ல, அவர்கள் எந்தப் பொருளுக்காக சண்டையிடுகிறார்களோ அந்தச் சடப் பொருள்களிலும் சிவபெருமான் மறைந்து கலந்து இருக்கிறான். சொல்லப்போனால் அந்தப் பொருள்கள் அனைத்தும் சிவபெருமானுடைய உடைமையே, (சிவபெருமானின்) மாயா சத்தி என்பது அந்த உடைமைக்குப் பெயர். அதைக்கொண்டு அவன் புரிகிற இந்திர ஜாலங்கள் பலப்பல. மாயா சத்தியை ஆகாய கங்கை வடிவில் அவன் எப்பொழுதும் தன் தலையினில் தாங்கிக் கொண்டிருக்கிறான்.

மாயையின் வெளிப்பாடாகிய அப்பொருள்களைக் கொண்டு அவன் நமக்கு அருளியிருப்பது ஓர் இடைக்கால அனுபவப் பாத்தியதையே. அந்த அடிப்படையில்தான் அவை அவனால் நமக்குத் தரப்பட்டன.

அப்பொருள்களில் எதுவும் நமக்கே நிலையான உடைமை யல்ல. கால அடைவில் அவை நம்மை விட்டு நீங்குகின்றன;

அல்லது நாம் அவற்றை விட்டுப் பிரிகிறோம். சில சமயங் களில் அவை நம் கண் முன்னாலேயே மறைந்து விடுவதைப் பார்க்கிறோம்; மற்றும் சில சமயங்களில் அவை மறைவதற்கு முன் நாம் மறைந்து விடுகிறோம். இதுவே வாழ்வியலில் காணப்படுகிற உண்மை. இதனை எல்லோருமே அறிவர்.

ஆனால் சிற்றறிவினராகிய நாமோ அதைத் தவறாகப் புரிந்து கொண்டு உழலுகிறோம். அப்பொருள்களைக் கொண்டு நாம் தொடர்ந்து இன்பத் துன்பங்களை அனுபவிக்க வேண்டிய ஊழ் (பிராரத்தம்) இருந்தால் மட்டுமே அவை நம்மிடம் உரிய காலம் வரை தங்கி நிற்கும். மாறாக, மற்றவர்க்கே அத்தகு ஊழ் இருப்பின் அவர்கள் கைக்கே அது கிட்டும்.

அறியாமை காரணமாகவே, அண்ணன் - தம்பியரும் பிறரும் வாரிசு - உரிமை என்ற பெயரில் வம்புகளை வளர்த்துக் கொண்டு சண்டையிடுகின்றனர்; பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குகின்றனர். வாழ்வின் செந்நெறிகளை மறக்கின்றனர். இருள்சேர் இருவினைக்கு இடம் கொடுக்கின்றனர். பிறப்பு - இறப்புச் சக்கரத்தில் சுழலத் தம்மைத்தாமே தயார் செய்து கொள்ளுகின்றனர். இவ்விதம் எல்லா மக்களும் எவ்வித பாகுபாடுமின்றி ஏதோ ஒரு வகையால் வினை செய்வதும், பாவபுண்ணியங்களை ஈட்டுவதும், இன்பதுன்பங்களை நுகர்வதும், இயல்பு ஆகின்றன. வினைப் பயன் நுகர்ச்சி யாகவே இன்பதுன்ப விளைவுகள் வந்து அமைகின்றன.

ஆயினும் வினைகள் பலவகை; அவற்றைச் செய்யும் முறைகளும் பலவிதம். எனவே வினை நுகர்ச்சியும், வினை நீக்கமும் பலவாறாக வேறுபடுவதும் இயல்பாகிறது. ஆன்மாக்கள் எத்துணை வகையாக வினைகளைச் செய்து, பிறப்பு - இறப்புச் சக்கரத்தில் சுழன்றாலும், கால அடைவில் கருத்துத் தெளிவு ஏற்பட்டு, மெய்த்தவ நெறியில் நின்று, இறுதியில் இறைவன் திருவடியாகிய பேரின்பத்தில் திளைத்திருக்கும் உரிமையும் அவற்றுக்கே உண்டு.

அங்ஙனம் உரிமையுள்ள ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தை அருளுபவதற்குச் சிவபெருமான் தடையாக இருக்கவில்லை; ஆன்மாக்கள் தத்தம் ஆன்ம ஈடேற்றத்துக்குத் தாமே தடை யாகவும் நிற்கின்றனர்.

இவ்வுண்மையைச் செந்தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓர் அழகிய நூற்பா மூலம் தெளிவுபடுத்தி உள்ளார்.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்(று) ஆகும்.

- (தொல்-கற்பியல். 27)

தொகுப்புரை

பேரின்ப நுகர்ச்சி உரிமை பற்றிய செய்திகளை இனித் தொகுத்து நோக்குவோம்.

இறைவன் = நிலைபேறு + முற்றுணர்வு + பேரின்பஊற்று
(சத்+சித்+ஆனந்தம்)

உயிர்கள் = நிலைபேறு + சிற்றறிவு
(உணர்த்த உணரும் அறிவு) இன்பஉரிமை

தளைகள் = நிலைபேறு மட்டுமே உடைய
சடப்பொருள்கள். உணர்வற்றவை.

பேரின்ப ஊற்றாகிய இறைவன் அதை வாரி வழங்கும் வள்ளன்மையும் உடையவன். யாவற்றையும் முற்றுமாக உணருகிற ஆற்றலுடைய அவன் தக்கவர்க்குத் தக்க நேரத்தில், தக்க அளவு, தக்க முறையில் அருளுகிற கருணையாளன்.

தளைகளாகிய பாசங்களோ அறிவற்ற சடம், எவ்வித உணர்வும் அற்ற அவற்றிற்கு இறைப்பேரின்பத்தை வழங்கினாலும் அதனை நுகரும் ஆற்றல் அவற்றிற்குச் சிறிதும் இல்லை.

உயிர் என்பது அறிவுப் பொருள், உணர்வுடையது. உணர்த்த உணரும் இயல்பினது. ஆதலால் இறைவன் திருவடியாகிய பேரின்பம் என்னும் பெருஞ் செல்வத்தைப் பெற்று நுகர்தற்கு உரிய, உண்மையான வாரிசு ஆன்மாக்களாகிய நாமே.

ஏழாம் இயல் முற்றிற்று

இயல் - 8

ஆன்மா உய்வினை நாடுதல்

(குருவின் வருகை)

''இறை - பேரின்பமே அளப்பரிய கருவூலம். அதை நுகர்தற்கு எந்த முயற்சியும் செய்யாமல் நிலையற்ற உலகியல் சொத்து களுக்காக உரிமை கொண்டாடுகிறோம். போராட்டமும் நிகழ்த்து கிறோம். ஐயா! இஃது ஒரு விந்தையாக இருக்கிறதல்லவா,'' என்று கூறி அன்றைய மாலை நேரச் சிந்தனைக்கு அடித்தள மிட்டார் குப்புசாமி.

உடம்பு வந்த காரணம்

''பணத்துக்காகப் பட்டி தொட்டிகளில் சண்டை, பதவிக்காக பார்லிமெண்டிலும் கூச்சல், இங்ஙனம் பணம், பதவி, பொருள், வாழ்நாள் முதலியவற்றில் உரிமை கொண்டாடி மனித இனம் போடுகிற சண்டைக்கு எல்லை இல்லை. இப்பொருள்கள் யாவும் அளவால் சிறியது என்றும், கால எல்லைக்கு உட்பட்டதே என்றும், துன்பக் கலப்புடையது என்றும் யாவருமே அறிவர்; இருந்தும், இச்சிறிய இன்பங்களை அடைகிற முயற்சியால் இன்றைய மனித சமுதாயம் பொன்னான நேரத்தின் பெரும் பகுதியை வீணடித்து விடுகிறது. இஃது வியப்பு மட்டுமல்ல. மிகவும் வேதனைப்படத் தக்க ஒரு சூழலே.

ஆணவமே உடம்பாகக் கேவலத்தில் உழன்று கொண்டி ருந்தோம் நாம். இரக்கம் கொண்ட இறைவன் தன் மாயா சத்தியிலிருந்தே நமக்கு மாற்றுடம்பைத் தந்தருளினான். உயிர் களாகிய நமக்கு அவன் கொடுத்த சொத்துகளிலேயே முதன்மை யானது, இந்த உடம்பும் கருவி கரணங்களுமே. மிகச் சிறந்த காரணங்களுக்காகவே அவன் இவற்றை அருளியுள்ளான்.

இன்பதுன்பங்களுக்கு மூலமாகிய ஊழ்வினைகளை அவரவரே நுகர்ந்து தொலைக்க வேண்டும் என்பது நியதி. அவ்வாறு நுகர்ந்து தொலைத்தற்காகவும், அறியாமை இருளி லிருந்து விடுபடுவதற்கான அனுபவத்தைப் பெற்றுப் படிப்படியாக உய்தி அடைதற்காகவும், மெய்த்தவம் இயற்றி, அவ் அனுபவத்தின்

மூலம் மெய்ஞ்ஞானத் தெளிவு பெறுவதற்காகவும், அருளுடம்பைப் பெற்றுத் திருவடிப் பேரின்பத்தில் நிலை பெற்றிருப்பதற்காகவுமே இறைவன் நமக்கு இந்த உடம்பு, உலகம், உணர் கருவிகள், நுகர்ச்சிப்பேறு ஆகியவற்றை வழங்கினான். இஃது அவன் திருவுளக் குறிப்பு.

ஆனால் நாமோ நிலையற்ற உடம்பு முதலியவற்றைக் கொண்டு நிலையற்ற உலகப் பொருள்களுக்காகவே ஆரவாரத் தோடு போராடிக் கொண்டிருக்கிறோம்.''

பொய்த் தவமும் மெய்த் தவமும்

''ஐயா! மெய்த்தவம் என்று குறிப்பிட்டீர்களே, அவ்வாறாயின் பொய்த்தவம் எனவும் ஒன்று உண்டா? என வினவினார் குப்புசாமி.

''ஆம்; உண்டு, தவம் என்பது என்ன? மனம் ஒன்றியிருந்து இடையறாது ஒரு குறியீட்டை நோக்கிச் சிந்தித்து நிற்றலே தவம் எனப்படும். அக்குறியீடு நிலையற்றதாகிய உலகியற் பொருள்களைப் பற்றியதாகவும் இருக்கலாம்; நிலையான மெய்ப்பொருளை நோக்கியதாகவும் இருக்கலாம்.

மாயையினாலான நிலையற்ற உலகியல் பொருள்கள் அனைத்தும் சிற்றியல்புடைய பொய்ப்பொருள்களே. அப் பொய்மையை அடைவதற்காகச் செய்யப்பெறும் முயற்சிகளையும் தவம் என்றே கூறலாம். எனினும் பொய்மையை நோக்கியே செய்யப்பெறுவதால் அவை பொய்த் தவமாகும். நம்மில் பெரும்பாலோர் முற்பிறப்புகளில் மட்டுமின்றி இப்பிறப்பிலும் உலகத் தொடர்பான பொய்த்தவத்தையே செய்துள்ளோம்; செய்து கொண்டிருக்கிறோம்.

இன்றைய அறிவியல் உலகத்தில், நிலவியல், இயற்பியல், வேதியல், பொறியியல், மருத்துவ இயல் எனப் பலப்பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறையிலும் கற்றுணர்ந்த மேதையர் பலரைக் காணுகிறோம். அவர்கள் அத்துறையில் வல்லுநர் ஆவதற்கு எத்துணை காலம் எந்த அளவுக்குப் பாடு பட்டிருப்பார்கள்? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒருமைக் கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள் - 398)

என்பது வள்ளுவர் வாக்கு.

ஒவ்வொரு மேதையும் அவரவர் துறைக்கல்வியில் மிகுந்த நாட்டமுடையவராய், மன ஈடுபாட்டோடு சிந்தித்து, பன்னெடுங் காலம் கடுமையாக உழைத்து, நூலறிவோடு, அனுபவ அறிவையும் பெற்றுத் தத்தம் துறையில் அறிஞர்களாயினர் என்பது தானே உண்மை. அஃது அவர்கள் செய்கிற தவம்.

அதே போன்றது தான் இறை-இயல் பயிற்சியும். சிவபெருமான் ஒருவனே மெய்ப்பொருள். அவனே நிலையான அறிவானந்தப் பரம்பொருள் (சச்சிதானந்தம்); அவனைக் கருத்திற் கொண்டு இயற்றப்பெறுகிற தவம் யாவும், மெய்ப்பொருள் பற்றியமையால், மெய்த்தவம் எனப்படும். நம்மில் சிலர் சென்ற பிறப்புகளில் இறைத் தொண்டாகிய மெய்த்தவத்தைச் செய்துள்ளோம்.

மெய்த் தவப்பயன்

இப்பூவுலகில் வேட்டுவச் சாதியில் பிறந்தவர் கண்ணப்பர்; எனினும் சிவபெருமானிடம் அளப்பரிய அன்பு கொண்டு செயற்கரியன செய்து, அவர் ஆறே நாட்களில் முத்திப் பேறு எய்திய பெருமைக்கு உரியவரானார். இப்பிறப்பில் கல்வியறி வில்லாத ஓர் இனத்தில் பிறந்த அவரைக் 'கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர்(க்கு அடியேன்)' எனப் - போற்றுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கண்ணப்பருக்குச் சிவத்திடம் இத்துணை ஈடுபாடு எங்ஙனம் வாய்த்தது? கலைகளை முற்றும் உணர்ந்தவராக அவரைச் சுந்தரர் போற்றுகிறாரே! அஃது யாங்ஙனம்? அதற்கான காரணத்தைச் சேக்கிழார் பெருமான் இயம்புகிறார் (பெரியபுராணம் - கண்ணப்பர் - 8) :

பெற்றியால் தவ(ம்) முன் செய்தாணாயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலை நின்றுள்ளான்

முற்பிறப்பில் வேத - ஆகமங்களை ஓதியுணர்ந்து, சிவபரத்தையே இடையறாது சிந்தித்திருந்தவர் கண்ணப்பர். அன்றைய அருந் தவத்தின் பயனாக அன்றோ இவ்வுயரிய பேறு இப்போது கண்ணப்பர்க்குக் கிட்டியது? - எனக் கூறிப்போற்றுகிறார் சேக்கிழார்.

அதேபோல், மூன்றாண்டுப் பருவத்தில் உமையம்மையின் திருமுலைப்பால் உண்ணுகிற உயர்ந்த நற்பேறும், தேனினு

மினிய தீந்தமிழ்ப் பனுவல்களை இயற்றி அருளுகிற தனித் தன்மையும் ஞானசம்பந்தப் பெருமானுக்கு எவ்வாறு வாய்த்தது. முற்பிறப்புகளில் அவர் ஈட்டிய அருந்தவப் பயனே யன்றோ?''

இறைவன் ஆன்ம - பக்குவத்தை அறிதல்

'உயிர் பக்குவம் அடைதல் என்றால் என்ன? அதை எவ்வாறு அறிவது? என்பன பற்றித் தெரிந்து கொள்ள விரும்பு கிறோம் ஐயா! என்றார் குப்புசாமி.

பிறந்தது முதல் ஒரு குழந்தை சிறிது சிறிதாக உடல் வளர்ச்சியுற்று, பல பருவங்களைக் கடந்து முதுமை அடைகிறது அன்றோ? அதேபோல் ஆன்மா என்ற குழந்தையும் அறிவாலும் அனுபவத்தாலும் படிப்படியாக வளர்ந்து மெய்ப்பொருளை நாடி முன்னேறுகிறது.

கடவுட் கொள்கையை ஏற்காமலோ, அல்லது கடவுளைப் பற்றிய சிந்தனையே இல்லாமலோ புறஉலக வாழ்விலோ பொழுதைக் கழிப்போர் பலர் உள்ளனர். ஐயறிவிலிருந்து ஆறறிவுக்கு வளர்ந்த தொடக்கநிலை அது. கால அடைவில் அவர்களும் இறைமையில் இன்புறுவர் என்பது உறுதி. இந் நிலையில் அவர்களைப் புறத்திணையின் பால் வைத்தனர் ஆன்றோர். திருக்கோயிலின் ஐந்தாவது சுற்றுக்கும் அப்பால் மதிலுக்கு வெளியே அலைமோதித் திரிவது அவர்களது இயல்பு.

முற்கூறியவாறு சரியை என்னும் தொண்டு நெறியில் தொடங்கி, கிரியை என்னும் மகன்மை நெறியில் வளர்ந்து, யோகம் என்னும் தோழமை நெறியில் முன்னேறுகிறது ஆன்மா. அத்தகு ஆன்மாவுக்கு மலக்கட்டுகள் சிறிதுசிறிதாகத் தளர்கின்றன; திருவருட் பொழிவும் அந்த அளவுக்கு நிகழ்கிறது. அந்நிலையில் ஆன்மா சிவஞானம் என்னும் மெய்ஞ்ஞானத்தை அடைய வேட்கை யுறுகிறது. திருவடிப் பேற்றிற்காக இரந்து நிற்கிறது. அத்தகு ஆன்மாவையே பக்குவ ஆன்மா எனச் சாத்திரங்கள் மொழிகின்றன.

ஒருவர் உடலால் வளரும்போது, அதை யாவரும் காண முடியும். அவர்தம் மன-வளர்ச்சியை அவருடைய செய்கை களால் (மெய்ப்பாட்டினால்) ஓரளவு ஊகித்து அறியலாம். ஆனால் உயிர் பக்குவம் அடைந்த உண்மையையும், அப்பக்குவத்தின் தன்மையையும் மற்றவர்களால் எளிதில் அறிய இயலாது.

நம் உடம்பில் வலி தோன்றும்போது, அதை மற்றவர்கள் அறிய முடியாது. உடம்பின் உள்ளே உறைகிற உயிர் ஒன்றாலேயே அவ்வலியைத் தெளிவாக அறிய முடிகிறதன்றோ? அதேபோன்று உயிருக்குள் உயிராக உறைகிற கடவுள் ஒருவரே உயிரின் வளர்ச்சியை - ஆன்மாவின் பக்குவத்தை நன்கு அறியவல்லவர். அவர் அங்ஙனம் உயிரின் பக்குவத்தை அறிந்ததும், அவ் உயிருக்கு நன்னெறி காட்டி உய்வித்தற் பொருட்டுத் தாமே குருவாக எழுந்தருளுகிறார்.''

குருவின் தோற்றம்

சச்சிதானந்த சொரூபியான இயல்பு நிலையில் சிவபரத்துக்குக் குணம் குறிகள் உருவம் முதலிய எதுவும் இல்லை. எங்கும் வியாபித்திக்கும் அவர் நம் பொருட்டு திருக்கோயில் கருவறையிலும், மெய்யன்பர்களின் இதய கமலத்திலும், வெளிப்பட்டுத் தோன்ற விழைகிறார். அப்போது தன்னைத் தானே குவித்துக் கொண்டு அருவ நிலையை மேற்கொள்ளுகிறார் அடுத்து அருவுருவமாக மந்திர சொரூபியாகிறார். தொடர்ந்து ஆன்மா காணுமாறு ஓர் உருவினை மேற்கொண்டு தம்மைத் தாமே காட்டியருளுகிறார். அத்தகைய திருவுருவமே, ஆலமர் கடவுள் என நாம் அனைவரும் போற்றி வழிபடுகிற தக்ஷிணாமூர்த்தி. ஆகவேதான், சிவமே குருவாக வருகிறார் என ஆகமங்கள் பரவித் துதிக்கும்.

நம் வீட்டிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்ததும், அதுகாறும் உள்ளே மறைந்து கிடந்த மின்னாற்றல் முதலில் ஒளியாக வெளிப்படுகிறது; அடுத்து இனம் புரியாத கோடுகள் அருவமும் இல்லாமல், உருவமும் இல்லாமல் ஓர் கோலமாகத் தெரிகிறது, அதனைத் தொடர்ந்து முழுமையான உருவங்கள் கண்ணுக்குப் புலனாகின்றன அன்றோ?

அதேபோன்றுதான் இயல்புநிலையில் குணம் குறி இல்லாத சிவபெருமான், தொழிற்படுகிற (தடத்த) நிலையில் அருவம், அருஉருவம், உருவம் எனத் தன்னைத் தானே எளிமையான தோற்றங்களில் காட்டி அருள்பாலிக்கிறார்.

சிவபெருமானிடம் உபதேசம் கேட்டவர்களும் அவ்வழியில் வந்தவர்களும் திருக்கயிலாய பரம்பரையில் தோன்றிய சிவகுருமார் களாகப் போற்றப்பெறுகின்றனர்.

சிவகுரு நம் வலக்காதில் திரு ஐந்தெழுத்தை உபதேசிக் கிறார். சிவத்தோடு கொண்டுள்ள அநாதி சம்பந்தத்தாலும், முற்பிறப்புகளில் நாம் செய்துள்ள மெய்த் தவப்பயனாலும் இப்போதைய குரு உபதேசத்தாலும் நம்முடைய மனத்திலும் அறிவிலும் நல்ல தெளிவு பிறக்கிறது.

ஆகவே நாம் சிவகுருவின் அறிவுரைகளை ஏற்க முற்படு கிறோம். ஐம்புலன்களின் ஆளுமைக்கு உட்பட்டதால், இருள்சேர் இருவினைகளையே செய்து இடர்ப்பட்ட நிலையைக் குரு அறிவுறுத்துகிறார். பெருமைக்குரிய நம் வாழ்வு சிறுமையில் உழல்கிறது என்ற உண்மையை நாம் சிவகுரு மூலம் அறிகிறோம்.

மாயா - காரியங்களின்பாலுள்ள பற்றினை விட்டு, புதுவினை ஈட்டத்தைத் தவிர்க்க எண்ணுகிறோம். சிவபெருமான் நமக்கு இதுகாறும் செய்துள்ள எண்ணற்ற உதவிகளை எல்லாம் செய்ந் நன்றி உணர்வோடு சிந்தித்துப் பார்க்கிறோம்.

நம் மனத்தில் அவனை மறவாமல் உவகையுடன் வழிபடுகிற அன்பு ஒவ்வொரு நொடியும் வளர்கிறது. அடிமை உணர்வோடு தொண்டுசெயப் புகுந்து, மகன்மை உறவிலே வளர்ந்து, தோழமை நெறியில் திளைத்து இறைப்பணியில் இன்பம் காணுகிறது. இம்மூவகைச் செந்நெறிகளில் முன்னேறிய ஆன்மாவுக்குச் சிவஞானம் சித்திக்கிறது. அதன் பயனாகச் சிவபெருமான் திருவடியைப் பற்றி நின்று பேரின்பப் பெரு வாழ்வினைப் பெறுகிறது. இதுவே சைவக் கொள்கை என்றேன்.

கடவுளை நேரில் பார்க்க முடியுமா?

'கடவுளே குருவாக வருவதானால், நாம் கடவுளை நேரில் பார்க்க முடியுமா? ஐயா!' என்று ஒரு குழந்தையின் ஆர்வத்தோடு வினவினார் குப்புசாமி.

''முடியும்; நன்றாகப் பார்க்க முடியும், உரையாட முடியும், இன்னும் பலவாறு கலந்து இன்புறவும் முடியும். இவ்வாறு கூறியதும், சிவபெருமான் ஏதோ புதிதாக நம்மிடத்தில் அப்போது தான் வருகிறார் என எண்ணிவிடுதல் கூடாது. அவர் ஆன்மாக் களாகிய நம்முடன் அநாதி காலந்தொட்டே அத்துவிகமாகக் கூடியுள்ளார் என முன்னரே கண்டோம். அஃது மூன்று வகையாக நிகழ்கிறது.

நிலையற்ற உலகப் பொருள்களின்பாலுள்ள பற்றுகளை விட்டு, இருவினைகளையும் நுகர்ந்தும் பிறவாறும் கழித்து, ஆணவ ஆற்றல்களும் ஒடுங்கிய நிலையில் உள்ள ஆன்மாக்கள் சிறப்பு-அறிவினர்(விஞ்ஞானகலர்) ஆவர். மும்மலங்களின் கட்டுநீத்த தூய ஆன்மாக்களாகிய அவர்கள் உள்முகமாகவே இறைவனைக் கண்டு, கேட்டு, உண்டு உயிர்க்கும் ஆற்றலைப் பெறுகிறார்கள். ஆகவே இறைவன் அவர்தம் அறிவுக்குள் அறிவாக உள்நின்று ஞானத்தை உணர்த்துவன். அப்போது அவன் மேற்கொள்ளுவது அறிவுத் திருமேனி. அதை அவ் ஆன்மாவால் நுகர்ந்து இன்புற முடியும்.

சிவபெருமான் அங்ஙனம் உயிருக்குள் உயிராக ஒளிர்ந்திருந்து இதுகாறும் உணர்த்தி வந்த தன்மையை ஆன்மா இந்த நிலையில் தான் செவ்விதே உணரத் தலைப்படுகிறது.

உலகப் பற்றுகளை விட்டொழித்த அடியவர்களுக்கு, ஆணவமும், கன்மமும் மட்டும் பிணித்துள்ள நிலையில், இறைவன் உருவத் திருமேனியோடு முன்னின்று காட்சியருளி, ஞானத் தெளிவூட்டுவன். நான்கு தோளும், மூன்று கண்ணும், நீலகண்டமும் பிறவும் கொண்ட இறைமைத் தோற்றம் அது. அஃது உயிரின் புறத்தே ஆனால் உடம்பின் உள்ளே உயிரோடு சிவபெருமான் (உடனாய் இருந்து) ஆன்மாவை வழிநடத்து வதாகும். பிரளயாகலர் எனப்படும் அவ் ஆன்மாக்கள் அப்போது அத்தோற்றத்தைக் கண்டு, அறிவு விளக்கம் பெறுவர்.

அடுத்து, நம் போன்ற மும்மலங்களாலும் கட்டுண்ட ஆன்மாக்கள். இளமையில் நாம் எப்படி எப்படி வாழ்ந்தாலும், இறைவனைப் பற்றிய உணர்வு ஏதேனும் ஒரு காலகட்டத்தில் தோன்றவே செய்யும். அத்தகு வேட்கை நம் உள்ளத்தில் மிகும் போது, நம் மனம் ஓரளவு பக்குவம் அடைகிறது. வினை-நீக்கம், மல-பரிபாகம், திருவருட்பேறு ஆகியவற்றில் நம்மை ஆற்றுப் படுத்த அதுவே தக்க தருணம் எனச் சிவபெருமான் கருதுகிறார். அதற்காக அவர் தாமே மானிட உருத்தாங்கிக் குருவாக எழுந்தருளுகிறார்.

சகலர் எனப்படும் நமக்கு நம் போன்ற மானுடச் சட்டை தாங்கிய குருவாகச் சிவபெருமான் எழுந்தருளி, ஞானத்தைப் புகட்டுவர். அப்போது மனித-குரு வடிவில் நாம் கடவுளைக் காணலாம்''.

எது உண்மையான வாழ்வு?

சீரிய வாழ்வியல் பற்றி இதுகாறும் சிந்தித்த செய்திகளைத் தொகுத்து நோக்குவாம்: உயிர் என்பது எக்காலத்தும் நிலைத்திருக்கிற பொருள். நம்முடைய வாழ்வு இப்பிறப்போடு முடிந்து விடுவதில்லை. முன்னரே எண்ணற்ற பிறப்புகளில் உழன்றுதான் இப்போதைய உயர்ந்த இந்த மானுடத்தைப் பெற்றிருக்கிறோம்.

மனம் என்ற ஆறாவது அறிவுக் கருவியைப் பற்றிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தண்டமிழ்ச் சான்றோர்கள் செவ்விதே சிந்தித்திருக்கின்றனர். அதற்குத் தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் நூல்களே சான்று பகர்கின்றன. அந்த மனத்தைப் பயன்படுத்தி, சீராகச் சிந்தித்து, செவ்விய நெறி நின்று, செம்பொருளின் பெருமையும் நுண்மையும் உணர்ந்து உய்தி அடைதல் வேண்டும்.

உயிர் என்ற சொல்லுக்கு இடையறாது உயர்வினை நோக்கி முன்னேறுதல் (உய்தல்) என்ற உண்மைப் பொருளை உணர்தல் வேண்டும். ஓரறிவு உயிர்ப் பொருளாகிய தாவரத்திலுங்கூட, நிலத்திலிட்ட விதை, தன் உய்தி கருதி, மண்ணைப் பிளந்து கொண்டு மேல்நோக்கி வளர்ந்து வருவதைக் காண்கிறோம்.

ஆன்மாக்கள் தொடர்ந்து உய்தி அடைய வேண்டும் என்ற விருப்பால்தான், மிருக நிலையில் படுக்கையாக இருந்த முதுகு எலும்புக் கோவையைச் சிவபெருமான் நிமிர்த்தி, உயர்ந்து நோக்குகிற மனித உடலுக்கு நம்மை மாற்றி அருளினான். நாமும் அதைப் பயன்படுத்தி மேல் நோக்கிய பயணத்தை மேற்கொள்ளுவதே அறிவுடைமை. நாம் உய்தியை நாடாதிருப்பது, நமக்கு ஊனம்-என்பார் ஞானசம்பந்தர்.

நாம் அரிதிற் பெற்றிருக்கும் மனம் என்ற ஆறாவது அறிவுக் கருவியைக் கொண்டு,புற வழியிலேயே முழுவதும் நாட்டத்தைச் செலுத்தாமல், சிறிதளவேனும் சிவபரத்தை நோக்கி எண்ணங்களைக் குவித்து, எல்லாக் காரியங்களையும் செய்வதற்குப் பயிலுதல் வேண்டும்.

எட்டாம் இயல் முற்றிற்று.

இயல் - 9

என் கடன் பணி செய்து கிடப்பதே

(நெறிமுறை நிற்றல்)

நான்கு கட்டளைகள்

''ஆன்மாக்களாகிய நாமே பேரின்ப நுகர்ச்சிக்கு உரியவர்கள் என்பதை நாங்கள் தெளிவாகப் புரிந்துகொண்டோம்; ஐயா! இனி நாங்கள் கடைத்தேறுவற்கான சில வழிபாட்டு முறை களை எங்கட்கு அறிவுறுத்த வேண்டுகிறோம்'' என்றார் சிவசாமி.

''சைவ ஆகமங்களின் சாரமாகத் திகழ்பவை சைவசித்தாந்த சாத்திரங்கள். மெய்கண்ட சாத்திரங்கள் என வழங்கப் பெறும் அவற்றில் ஆன்மாக்கள் உய்தி அடைதற்கான நெறிமுறைகள் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என அந்நெறிகள் பகுத்து உணர்த்தப்பெறுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்:

உடல் தொண்டும் சிவ-உலக வாழ்வும்

சிவபெருமானைத் தம் தலைவனாகக் கொண்டு, தாம் அவனுக்கு அடிமை என்ற உணர்வோடு உடலால் தொண்டு செய்வோர் சரியை நெறி நிற்போராவர். அதுவும் ஒரு தவ நெறியே. சரீரம்=உடம்பு. உழவாரத் தொண்டு செய்த திருநாவுக்கரசரைச் சரியை நெறிக்குச் சான்று காட்டுவது சைவ மரபு.

''கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க'' என்பது திருவாசகம்.

அந்த நெறியிலேயே நின்று இப்பிறப்பினை விடுவோர்க்கு மறுமை நிலை எவ்வாறு அமையும் என்பதையும் சிவ-ஆகமங் களே அறிவுறுத்துகின்றன. சரியையாளராகிய அவர்கள் சிவ உலகத்திலும் அதே போன்ற மெய்த் தொண்டுக்கு உரிமை உள்ளோர் ஆவர்.

உடல்-மன வழிபாடும் சிவனை அண்ணிய வாழ்வும்

கள்ளமிலா உள்ளத்தோடு கடவுளிடத்திலும் அடியாரிடத் திலும் குழந்தையினைப் போன்று உண்மையான அன்பு கொண்டு

பரவித் துதிப்போர் மகன்மை நெறியாளர் எனப்படுவர். அஃது சற்றே வளர்ந்த ஆன்ம நிலை. சரீரத்தோடு மனத்தையும் ஈடுபடுத்திச் சிவபூசை முதலியன செய்வோர் இதன்பால் நிற்பர்.

மூன்றாண்டு அகவையில் உமையம்மையிடம் முலைப்பால் உண்டு, பரஞானம், அபரஞானம் என்ற இரண்டும் பெற்ற சீர்காழிச் செம்மலாம் ஞானசம்பந்தக் குழந்தையைக் கிரியை நெறிக்குச் சான்றாகக் கொள்ளுவது சைவ மரபு.

''ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்பது திருவாசகம்.

மெய்த்தவத்தின் இரண்டாவது நிலையாகிய இந்த நெறியிலேயே இப்பிறப்பினை விடுவோர், மறுமையில் சிவ உலகத்தில் சிவபெருமானின் அன்புக்குரிய குழந்தைகளாக அவன் அருகில் நிலைபெறுகிற உரிமை உள்ளோர் ஆவர்.

மனமும் ஆன்மாவும் ஒன்றிய சிவ-சாரூப வாழ்வு

மெய்த்தவத்தின் மூன்றாவது உயர்ந்த நிலை சிவயோகம் என்பது. உடம்பினைச் சிறிதளவு கருவியாகக் கொண்டு, மனம் முதலிய அந்தக்கரணங்களையும் உயிரையும் ஒருங்கிணைத்து அக-வழிபாடு இயற்றுவோர் யோக நெறியாளர் ஆவர்.

அத்தகையோர் தத்தம் உடம்பின் உள்ளேயே ஒவ்வோர் இடத்திலும், ஒவ்வோர் உறுப்பிலும் இறைவனைக் கண்டு, கேட்டு, உண்டு மகிழ்வோராவர். ஆகவே திருக்கோயில்களில் இறைவன் வீற்றிருக்கும் கருவறைக்கு முன்னுள்ள அர்த்த - மண்டபம் வரை செல்லும் உரிமை உடையோர் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்க உண்மை.

சிவபெருமானால் திருவாரூரில் தோழமை அருளப்பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளை இந்நெறிக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளுவது மரபு. ஒரு தோழனாய் நின்று தலைவனாகிய பரசிவத்திடம் இடித்துரைப்பதும் இன்பங்களை வேண்டிப் பெறுதலும் அவர்களுடைய இயல்பு என்பதைச் சுந்தரரின் வாழ்விலிருந்து தெளியலாம்.

அத்தகையோர் அந்நெறியிலேயே இப்பிறப்பினை விடுங்கால் மறுமையில் சிவ உலகத்தில் சிவபெருமானின்

திருவுருவைப் பெற்று அவருக்கு அணுக்கத்தொண்டு புரிகிற நற்பேற்றால் இன்புற்றிருக்கும் உரிமை உள்ளோர் ஆவர். சுந்தரரும் அவர்தம் தோழர்களாகிய சேரமான் பெருமானும், பெருமிழலைக் குறும்பரும் அங்ஙனம் ஆதாரயோகம் பயின்று திருக்கயிலை அடைந்தவர்கள் என்பது பெரிய புராணத்திலிருந்து அறியத்தக்க வரலாறு.

சிவயோகிகளின் அகவழிபாடே சிவஞானத்திற்குத் தலைவாயிலாகும்.

ஞானத்தால் அறிவானந்தப் பெருவாழ்வு

''சிவஞானத் தெளிவு பெறுவதற்கு வழியாக உள்ள சிறப்பு'' மிகு அகப் பூசனைமுறை பற்றி அறிந்து கொள்ள மிகவும் அவா உடையோம். ஐயா! கருணைகூர்ந்து விளக்கியருள வேண்டு கிறோம்' என முறையாக விண்ணப்பித்தார் சிவசாமி.

திருக்கோயில் என்பது இறைவன் குடிகொண்டிருக்கும் இடம். அஃது உலக நிலப்பரப்பில் கல்லும் மண்ணும் கொண்டு கட்டப்பட்ட கருங்கல் கட்டடமாகவும் இருக்கலாம்; எலும்பும் தசையும் கொண்டு நரம்புகளால் கட்டப்பட்ட மனித உடம்பாகவும் இருக்கலாம். கற்கோயிலுக்கு ஐந்து சுற்று (பிரகாரங்கள்) உண்டு; அதே போல் மனித உடலுக்கு ஐந்து கவசச் சட்டைகள் (கோசங்கள்) உண்டு.

இந்த ஐந்து சுற்றுகளுக்கு அப்பால் சிந்தையை புறத்தே செலுத்தி வாழ்வோர் புறத்திணயாளர் எனப்பட்டனர். அதன் உள்ளே சிறிது சிறிதாக அகநோக்கில் செல்லுவோர் அகன்-ஐந்திணக்கு உரியவர்கள் என்பது பழந் தமிழ்க் கொள்கை.

திருக்கோயில்களில் சிவலிங்கத் திருமேனிக்கு அபிடேக ஆராதனைகள் நடைபெறுவதை நாம் நாளும் காணுகிறோம். அவ்வழிபாடு நம் உயிருக்கும் உடம்புக்கும் புறத்தே நிகழுகிறது. ஆகவே அதனைப் புற வழிபாடு (பரார்த்த ஆலய வழிபாடு) என்பர்.

திருக்கோயிலில் கண்டு இன்புற்றவாறே, தத்தம் இதய கமலத்தைச் சிவலிங்கமாகப் பாவித்து, அங்குப் பெருமானுக்கு அபிடேகம், ஆராதனை, சோடசோபசாரங்கள் முதலியவற்றை உள்ளன்போடு முறையாகச் செய்ய வேண்டும் என ஆகமங்கள் அறிவுறுத்துகின்றன. அத்தகு வழிபாடு உடம்பின் உள்ளே நிகழ்வதால் அதனை அகவழிபாடு (அந்தர்யாக பூசை) என்பர்.''

இதய கமலத்தில் சிவ வழிபாடு

''நம் உடம்பினுள்ளேயே அகவழிபாட்டிற்கு வாய்ப்புகள் உள்ளனவா? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

''ஆம்: நிறைவாகவே உள்ளன. எவ்விதச் செலவோ சிரமமோ இன்றிச் சிவத்தை நம் இதயகமலத்தில் சிந்தித்து வழிபடுவதற்கு வேண்டிய அத்துணை வசதி வாய்ப்புகளையும் இறைவன் நமக்குச் செவ்விதே அருளியுள்ளார்.

குகை வடிவான நம் நெஞ்சுக் கூட்டினுள்தான் இருதயம் என்ற உறுப்பு இருக்கிறது. அதனை ஒரு குருதிக்கடல் எனலாம். கடலுக்கு முந்நீர் என்ற ஒரு பெயரும் உண்டு; அங்கு ஆற்றுநீர், ஊற்று நீர், மழைநீர் என்ற மூன்று வகையான நீர்களும் வந்து கலப்பதால் முந்நீர் என்பது காரணப் பெயராயிற்று.

நம் உடல் முழுதும் ஓடுகிற குருதிக் குழாய்களோ ஆறுகள் போன்றவை; அவை இடையறாது இருதயத்துக்குக் குருதியைக் கொணர்ந்து கொட்டுகின்றன; நம் உடம்பில் ஊற்றுகளாயிருந்து ஊட்டச்சத்து நீர்களைச் (Hormones) சுரக்கும் நாளமிலாச் சுரப்பிகள் இருதயத்தில் வண்டல் நீர்களைச் சேர்த்து உடலை வளமாக்கு கின்றன. சிரசிலுள்ள கார்முகிலில் (Grey Matter) சஹ்ஸ்ராரமுதம் என்ற அமுதப் பெருக்கு (Cerebro Spinal Fluid-CSF) ஊறுகிறது. அஃது ஓங்கார வடிவில் பரவி இருதயத்திற்கு வந்து சேர்கிறது. ஆகவே நம் இருதயமும் புனிதமான ஒரு முந்நீர்க்கடலே.

நம் மனித இருதயம் ஒரு சிவலிங்கத்தின் வடிவத்தைப் போன்ற தோற்றத்தையும் செயற்பாட்டையும் கொண்டது. நம் இருதயத்தினுள் சிவபெருமானைச் சிந்திப்பது சிவயோக நெறி. சிவபெருமான் அபிடேகப் பிரியன் என ஆகமங்கள் அவனைப் போற்றும். ஆனைந்து ஆடுவதில் அவனுக்கு அளப்பரிய விருப்பமாம். ஆ என்றால் பசு என்பது பொருள். நாமெல்லாம் பசுக்கள்; பசுவின் பால், தயிர், நெய், கோமயம், கோநீர் ஆகியவற்றை அபிடேகமாக ஏற்பதைப் போன்றே, நாம் அன்போடு அவன் திருவடியில் சேர்க்கும் யாவற்றையும் சிவபெருமான் மிகவும் விரும்பி ஏற்றருளுகிறான்.

நாம் உண்கிற உணவு முதலியன இரத்தமாகி நமக்குச் செயல் திறனை நல்குகின்றன அன்றோ? தூய இரத்தத்தின்

நிறம் சிவப்பு. தொழிற்பட்டு அழுக்கேறிய இரத்தத்தின் நிறம் நீலம். இருதயத்தின் இடப்புறம் தூய செங்குருதி கொட்டிக் கொண்டே இருக்கிறது. அதேபோல், அதன் மறு பகுதியில் அழுக்கான நீலநிறக் குருதி கொட்டி க் கொண்டே இருக்கிறது. சிவலிங்கமாகிய இருதயத்தில் அஃதே அன்பான அபிடேகமாகும்.

அன்பு மிகுந்து, இறைபணி நிற்கும் மெய்யடியார்களாகிய நம் போன்றோர் செய்கிற நல்வினை தீவினைகளைத் தாமே ஏற்றருளும் பொருட்டு, அவற்றின் பயன்களாகிய சுத்தம், அசுத்தம் ஆகிய இரண்டு வகை இரத்தங்களையும் சிவபெருமான், சிவலிங்க வடிவினதான நம் இருதயத்தில் வீற்றிருந்து, தானே அபிடேகித்துக் கொள்ளுகிறான் என்பது கருத்து.



1. இடப்பக்க மேலறை
2. வலப்பக்க மேலறை
3. இடப்பக்கக் கீழ்அறை
4. வலப்பக்கக் கீழ்அறை
5. அரவக்கச்சுப் போன்ற குருதி நாளம்

இருதயம் - சிவலிங்கம்



சிவபெருமான் அரவக்கச்சு ஆர்த்த நிலை

எனவே சிவபெருமான் உண்மை அடியார்களிடத்து அவர்தம் உள்ளத்தில் குடி இருக்கிறான் என்பதும், அவன் ஓர் அபிடேகப் பிரியன் என்பதும் அபிடேகப் பொருள்களாக அடியவர்தம் வினைப் பயன்களாகிய இரத்தமே அவன்மேல் தைல தாரையாக எப்பொழுதும் இடையீடின்றிப் பொழிந்து கொண்டிருக்கிறது என்பதும், விருப்பம், அறிவு, செயல் அனைத்தும் சிவமயம் எனத் தெளிந்த உள்ளம் கொண்டிருத்தலே நமது தலையாய கடன் என்பதும், இவண் நாம் உய்த்துணரத் தக்க உண்மைகளாம்.

உடம்பு முழுவதிலுமிருந்து அழுக்கான நீலக்குருதி இருதயத்தை வந்து சேர்கிறது; அங்கு அது பிராணவாயுவினால் தூய்மை செய்யப்பட்டுச் செங்குருதியாகி மீண்டும் உடலுக்கு ஆற்றலைக் கொடுக்கப் புறப்படுகிறது.

மனித இருதயம் சிவலிங்கத்தின் வடிவமைப்பைக் கொண்டது எனக் கூறினோம். மெய்யடியார்கள் தத்தம் இருதயக் கமலத்தில் சிவபெருமான் வீற்றிருப்பதாக எண்ணி அபிடேக ஆராதனைகளையும் சோடாசோபசாரங்களையும் செய்து அந்தர்யாகமாகச் சிவ-வழிபாடு நிகழ்த்துவர். அப்போது பிராணவாயுவால் குருதியிலிருந்த அழுக்குகள் தூய்மையாவதைப் போன்று பிரணவ - மூலமந்திரத்தால் மனத்தின் மாசுகளும் நீங்கி மனம் தூய்மையுறுகிறது.

முற்றிலும் அசுத்தம், சுத்த-அசுத்தக் கலப்பு, முற்றிலும் சுத்தம் மற்றும் திருவருள் என நான்கு கூறுகளாக நம் உடம்பினைச் சிவபெருமான் வள்ளன்மையோடு ஆக்கித் தந்துள்ளான். முதல் நிலையிலிருந்து நாம் படிப்படியாக உள்முக மாக முன்னேற முயலுவதே அறிவுடைமை.

நம் புற உடம்பு பஞ்சபூதச் சேர்க்கையால் முற்றிலும் அசுத்தமான உடம்பு. இதன் உள்ளே, பிராணவாயுவினால் சுத்த-அசுத்தக் கலப்பு உள்ளது. இவ் இரண்டும் இம்மைச் சிற்றின்பத்துக்கு ஊற்றுக்காலாக இருப்பவை.

பிரணவ ஓங்காரத்தில் முற்றிலும் சுத்தம் அமைகிறது. இஃது மனத்தைத் தூய்மை செய்து ஆன்மாவுக்கு இம்மையில் மறுமையை நல்குகிறது. அதையும் கடந்து உள்ளே செல்ல உதவுவது சிவ மூலமந்திரம். அதனால் திருவருள் சித்திக்கிறது. அருட்சத்தியே உடம்பாகிறாள். அவ் உயரிய நிலையே மரணமிலாப் பெருவாழ்வு எனப்படுகிறது. அஃது தொல்காப்பியர் போன்ற பழந்தமிழ்ச் சான்றோர்கள் அனுபவத்தால் உணர்ந்துள்ள 'இம்மையிலேயே அம்மைப் பெருவாழ்வு' ஆகும்.

மனமும் ஆன்மச் சிற்றறிவும் இருதயத்திலேயே நிலைபெற்று முழுமையாகச் சிவத்தின்பால் ஒன்றித்து நிற்பதால் ஊழ்வினையின் பயன் மனத்துக்கோ ஆன்மாவுக்கோ ஊறு செய்வதில்லை.

வேள்வித் தீயில் விமலன் பூசை

மூலாதாரத்து வேள்வித் தீயில் பேராற்றலோடு விளங்கு கிறது பாசுபதப் பரஞ்சுடர். எதையும் சுட்டெரிக்கும் ஆற்றல்

நெருப்பு ஒன்றுக்கே உண்டு. ஆதலால் ஆன்மார்த்தமாக அவ் விடத்தில் அந்தர்யாகத்தீ வேட்கும்போது, மும்மலங்களின் ஆற்றல்கள் அனைத்தையும் மூலாதார நெருப்பு சுட்டெரிக்கிறது; இஃது அனுபவம் வாயிலாக மட்டும் உணரத்தக்கது.

இறைவழிபாட்டில் இங்ஙனம் முழுமையாக ஒன்றி நிற்கும்போது, நம் சிந்தனைகள், செயல்கள் அனைத்தும் சிவத்தின் திருவடிகளிலேயே அழுந்தி இருப்பதால், அந்த வேளையில் நாம் நுகர வேண்டிய வினைத்துன்பங்கள் நம் மனத்தையோ, புத்தியையோ தாக்குவதில்லை; அவை உடலினைத் தாக்கிய அளவிலேயே நுகரப்பட்டுக் கழிந்து விடுகின்றன; இதனை உடலூழாய்க் கழிதல் என முன்னரும் கண்டோம்.

நெறியும் நெறிஞ்சிலும்

நெறிஞ்சி முள் நிறைந்த ஒரு நிலப்பரப்பு, அதனைக் கடந்து செல்ல வேண்டும்; அந்தப் பகுதியை நமக்கு முன்னரே பலர் கடந்து சென்றிருக்கின்றார்கள். அவர்கள் பலரும் அடிக்கடி சென்றதால் அங்கு ஓர் ஒற்றையடிப் பாதை உருவாகியுள்ளது. நாமும் அந்த ஒற்றையடிப் பாதையில் நடந்து சென்றால், முள் நிறைந்த அப்பகுதியைத் துன்பமின்றிக் கடக்கலாம்; அப்பகுதிக்கு அப்பாலுள்ள நம் இலக்கினையும் எளிதாக அடையலாம், அதற்கு மாறாக, நடைபாதையைவிட்டுச் சற்றே தள்ளிக் கால் வைத்தால், அங்கே கிடக்கும் நெறிஞ்சி முட்கள் நம் கால்களில் குத்திப் பெரிதும் இடர்ப்படுத்துவது இயல்பேயன்றோ?

அதேபோன்றுதான், பொய்யும் களவும் நிறைந்தது இப் பூவுலக வாழ்வு; இங்கு, அருள் நூல்கள் அறிவுறுத்துகிற அறநெறியில் நாம் நெறியோடு வாழ முற்படுதலே சிறப்பு; அதுவே நாம் நிலையான பேரின்பத்தில் நிலை பெற்றிருக்க உதவும். அதற்கு மாறாகச் செல்லுங்கால், நாம் செய்யும் இருள்சேர் இருவினைகள், அறமாகவும், பாவமாகவும் மாறி, நமக்கு இன்பதுன்பங்களைக் கொணர்கிற தலைவிதி ஆகிறது. இவ் வுண்மையைத் திருமூலர் தம் திருமந்திரத்தில் மிக அழகான உவமைமூலம் உணர்த்துகிறார்.

நெறியைப்படைத்தான், நெறிஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெறிஞ்சில் முட்பாயும்

(6-ஆம் தந்திரம், துறவு - 4)

என்பது திருமந்திரம்.

இலக்கியம் கூறும் சில ஆகமக் கருத்துகள்

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி சிவபெருமான்'. கண்ணுக்கும் கருத்துக்கும் அப்பாற்பட்ட அவனே முழுமுதற்கடவுள். பரம்பொருளாகிய அவனை உலகியல் அறிவாலோ. அல்லது ஆன்மச் சிற்றறிவாலோ அறியமுடியாது என்பது சைவக் கோட்பாடுகளில் முதன்மையானது. அவனை 'வாக்கு மனாதீதன்' எனப் போற்றுவார் மெய்கண்டார்.

'அவன் அருளாலே அவன் தாள் வணங்கு' தற்கு நாம் இடையறாது பயிலுதல் வேண்டும் என்பது இரண்டாவது கொள்கை.

நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு (குறள் - 336)

என்ற உண்மையைத் தெளிவாக உணர்தல் வேண்டும் என்பது மூன்றாவது கருத்து இதனைக் காஞ்சித்திணையாகத் தொல்காப்பியர் அறிவுறுத்துவார்.

கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
கற்றுணை யாவது நமச்சிவாயவே

(அப்பர் தேவாரம், நமச்சிவாய திருப்பதிகம் - 1)

என்றவாறு திரு ஐந்தெழுத்தையே நற்றுணையான உறுதிப் பொருளாக நம்பிக்கையோடு தியானித்திருக்க வேண்டும் என்பது நான்காவது கொள்கை. இதனை,

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப (தொல். செய்யுளி.168)

எனத் தொல்காப்பியர் மந்திரத்தின் மாண்பாகச் சுட்டி அறிவுறுத்துவார்.

சைவத் தமிழ் இலக்கியங்களில் காணப்பெறும் இக் கருத்துக்களைச் சிவாகமம் அறிவுறுறத்துகிற நான்கு கட்டளை களாகவே கொள்ளலாம்.

மூவகை அறிவு

ஒவ்வொரு நொடியும் உய்தலை நாடுகிற உணர்வு உடைமையால் 'உயிர்' என்பது காரணப் பெயராயிற்று. ஓரறிவுத் தாவரம் தொடங்கி, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவுச்

சிற்றினம் எனப் படிமுறையில் வளர்ந்து, இப்போது நாம் ஆறறிவு மானுடராக வாழ்கிறோம்.

ஆன்ம-அறிவு மிகச் சிறு அளவினது; பல்லாற்றானும் குறைபாடுடையது. (இதை வைத்துக் கொண்டே நாம் பெரிதாகப் 'பீற்றி'க் கொள்ளுகிறோம்) வானத்தின் மதிக்குக் களங்கம் இருக்கிறதல்லவா? அதைப்போன்றது நம் அறிவு. ஆயினும் அரும்பு, மொட்டாகிப் பெருமொட்டாகிப், பின்னர் போதுமாகி மலர்கின்றதன்றோ? அதுபோல் ஆன்ம-அறிவும் படிமுறையில் வளர்கிறது.

விண்மதியின் கலைகள் தேயத்தேய அதன் களங்கமும் தேய்ந்து, கூன்மதியாகும்போது மாசற்ற நிறை-மதியாக அஃது பெருமையுறுகிறதன்றோ? அதேபோன்றுதான் ஆன்ம- அறிவி லிருந்து ஆணவக் கட்டாகிய களங்கம் தேயத்தேய அஃது சிறிது சிறிதாக இறைமைப் பொலிவினைப் பெற்று வளமுறுகிறது.

இந்த மானுட உடம்பிலும், படிமுறையில் தொடர்ந்து ஆன்மாவுக்கு அறிவு விளக்கம் நிகழ்கிறது. இத்தகைய அறிவு-விளக்கத்தை உலகியல் அறிவு, உயிரியல் அறிவு, இறையியல் அறிவு என மூவகைப் படுத்துவர் சைவ ஞானிகள். பாச-ஞானம், பசு-ஞானம், பதி-ஞானம் என்பர் வடநூலார்.

அறிவுப் பொருள்களின் நிலை இவ்வாறு இருக்க, அறிவாற்றல் இல்லாத உலகப் பொருள்களுக்கு உய்யும் உணர்வு இல்லை. ஆகவே அவை சடப்பொருள்கள் எனப்பட்டன. உடல், உலகம், கருவிகரணங்கள், உலகப்பொருள்கள் அனைத்தும் இத்தகைய தன்மையனவே. ஆயினும் அவை நிலை மாறுகிற தன்மையுடையவை. ஆன்மாக்கள் ஆண்டவனைச் சேர வொட்டாமல், அவை ஆன்ம-சிற்றறிவைத் தம்பால் ஈர்த்து மயக்கிக் கட்டி முடக்கி விடுகின்றன. ஆண்டவனை ஆன்மா சிந்திக்க முடியாதவாறு தடையாக இருப்பதால், அவற்றை மாயா-காரியம் என்றும் பாசங்கள் என்றும் சாத்திரங்கள் வகைப்படுத்தும்.

இத்தகைய நிலையற்ற பாசமாகிய உலகத்தில் உயிர் களாகிய நாம் தங்கி, அப் பாசப் பொருள்களையே கருவி-கரணங் களாகக் கொண்டு, சடமாகிய உலகப் பொருள்களைப் பற்றி அறிதல் சட-அறிவு அல்லது உலகியல் அறிவு (பாச-ஞானம்) எனப்படும். பற்பல கலைகளும், உடலியல், உளவியல், அறிவியல் போன்ற பலதுறைக் கல்வியும் இதனுள் அடங்கும்.

அடுத்து உயிர்-அறிவு (பசு ஞானம்); 'நான், எனது' என்னும் தற்போதத்தால் உயிரின்கண் நிகழ்கிற அறிவு ஆதலால் பசு ஞானம் எனப்பட்டது. எடுத்துக்காட்டாக, நானே கடவுள் என்ற தற்புகழ்க் கிளவிக்கு இதுவே வித்து ஆகும். 'கலை'க்கப் பட்ட அறிவின் தெளியாத இடைநிலையே இது.

முதிர்ந்த முடிவாக நமக்குக் கிட்டுவது இறை-அறிவு (பதி ஞானம்). இஃது இறை அருளால், இறை-இயல்புகள் பற்றி நம் உயிர்-அறிவின் கண் தெளிவாக நிகழ்வது. இதனைச் சிவஞானம், பதிஞானம், மெய்யறிவு, இறையறிவு எனப் பலவாறு சிறப்புரைப்பர்.

பாச-ஞானம், பசு-ஞானம் ஆகிய இரண்டுமே குறைபாடுடை யவை. இவற்றைக் கொண்டு இறைவனை அறிய முடியாது என்பது முதற் கட்டளையின் கருத்து.

'ஊனக்கண் பாசம் உணராப் பதியை' - (ஒன்பதாம் சூத்திரம்) என்பது சிவஞான போதம்.

இவ் உண்மையை நடைமுறைச் சான்றுகளாலும் உணரலாம். வரலாறு, அரசியல் போன்ற பிறதுறை அறிஞர்களுக்கு வேதியல் நுட்பங்கள் விளங்குவதற்கு வாய்ப்பு இல்லையன்றோ? அதேபோல், தமிழில் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும், வேதியல் புரிய வேண்டுமென்பது விதி யல்லவே? அதேபோன்று தான் பலகலை வல்லுநராயினும் அவர்தம் கலையறிவால் கடவுளைக் காண முடியாது.

'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்' எனப் பெரியபுராணம் தொடங்குகிறதே!

பதியாகிய சிவபெருமான் (நம்) உயிருக்குள் உயிராக எக்காலத்தும் உறைகிறான். மெய்யடியார்க்கு அவன், தானே தன்-உள்-இருப்பை உணர்த்துகிறான். அவன் திருவருளால் மெய்த்தவத்தோர் அவனையும், அவனது இயல்புகளையும் அறிவதோடு, அவனுக்கும் தமக்கும் உள்ள அத்துவிதத் தொடர்பு களையும் உணர முடிகிறது. ஆன்மாவுக்கு இங்ஙனம் அமைகிற அறிவினைப் பதிஞானம் (*Intuitive Wisdom*) என்பர்.

வேதியலையே முறையாகப் பயின்று, அன்றாடம் சிந்தித்திருப்பவர்களுக்கு மட்டும் அவ் இயலின் நுட்பங்கள்

எளிதில் புலனாகுமன்றோ? ஒரு துறை வல்லுநர்க்கே அத் துறையின் நுட்பங்கள் புரியுமன்றோ? அதேபோன்றுதான், இடையறா மெய்த்தவத்தாலும், இறையருளாலும் ஆன்மா பதி ஞானத்தைப் பெறுகிறது. அப் பதிஞானத்தால் மட்டுமே பதியாகிய பரம்பொருளை அவ் ஆன்மா அறிய முடியும் என்பது இரண்டாவது கட்டளையின் கருத்து.

'ஞானக் கண்ணினில் சிந்தை நாடி' - (ஒன்பதாம் சூத்திரம்) என்பது சிவஞானபோதம்.

மாயையினாலான இப்பிரஞ்சப் பொருள்கள் அனைத்தும் ஆன்ம உய்திக்காகச் சிவபெருமானால் படைக்கப்பட்ட இடைக் கால நிவாரணங்களே. ஒரு காலத்தில் தோன்றிச், சில காலம் நின்று, பின்னர் ஒடுங்கும் இயல்புடைய இவை பெரிதும் நிலையற்றன, விரைந்து மறையும் இயல்புடையன. பொய்யாகிய இப்பொருள்கள் அனைத்தும் அறிவுப் பொருளாகிய தானும் அன்று, தன் உடைமையும் அன்று என்ற அறிவுத் தெளிவு ஆன்மாக்களாகிய நமக்கு நம் சிற்றறிவில் தோன்றும்.

பிரபஞ்சங்களையும் உயிர்களையும் கடந்து நிற்பவன் கடவுள்; ஆகவே உயிர்கள் பிரபஞ்சப் பற்றினை விட்டொழியும் போது, பொய்ப்பொருள்கள் அனைத்தையும் கடந்துவிடுவதால், அதுகாறும் உயிரின் உள்ளே மறைந்திருந்த மெய்ப்பொருளாகிய பதி ஞானம் விரைந்து விளங்கித் தோன்றும்.

நிலையாமையை உணருமாறு அறிவுறுத்தும் இஃது மூன்றாவது கட்டளையின் கருத்து.

உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி - (ஒன்பதாம் சூத்திரம்)

என்பது சிவஞானபோதம். கானல்நீர் நிலையானதோ உண்மை யானதோ அன்று; அஃது ஓர் மாயை எனத் துணிந்து, ஒதுக்கினால், சிவபரத்தின் தண்ணிய திருவடியே நமக்குக் கருணைபொழியும் நிழலாகும் என்பது இச் சூத்திரத்தின் கருத்து. இக்கருத்துப் பற்றியே தெய்வப்புலவர் திருவள்ளுவரும்.

பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும் (குறள் - 349)

என உணர்த்தியருளினார்.

எல்லா உயிர்களின் உள்ளேயும் இறைவன் உறைகிறான்; எனினும் தன்னை நினையாதார் மாட்டு அவன் விறகினில் தீப் போல மறைந்தே இருக்கிறான். மெய்த்தவத்தோர்க்கு அவன் விளங்கித் தோன்றுகிறான். அத்தகைய அருளாளர், தம் அறிவின் கண்ணே வியாபக அறிவாய் விளங்கி நிற்கும் சிவத்தை உள்முகமாகக் கண்டு, அச் சிவம், 'யான்' எனப் பாவித்துச் ஐந்தெழுத்து ஓதிச், சிவோகம் பாவனை புரிவர். அவர்தம் அறிவில் சிவன் பிரிப்பின்றி விளங்கித் தோன்றுவன்; ஆதலால் ஆணவத்தின் ஆற்றல் ஒடுங்கும். இதனை,

'விதி எண்ணும் அஞ்செழுத்தே' - (ஒன்பதாம் சூத்திரம்) என்கிறது சிவஞானபோதம்.

உலகப் பற்றும், ஆணவப் பிணிப்பும் வினைவழிப் பிறப்பும் மீண்டும் தொடராமல் இருப்பதற்காக, ஆன்மா திரு ஐந்தெழுத்தைச் சிவாகமங்கள் விதித்துள்ள முறைப்படி ஓதுதல் வேண்டும் என்பது நான்காம் கட்டளை''.

திரு ஐந்தெழுத்து ஓதுமுறை

''திரு ஐந்தெழுத்தின் பெருமைபற்றி அறிந்துகொண்டோம் ஐயா, அதை ஓதுகின்ற முறை பற்றி அடியேங்களுக்கு அறிவுறுத்த வேண்டுகிறோம்'' என விண்ணப்பித்தார் சிவசாமி.

''திருஐந்தெழுத்து மூவகைப்படும் : அவை தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்பன. அவற்றைச் சிவகுரு சீடனின் பக்குவத்திற்கு ஏற்ப, அவன் காதுகளில் உபதேசித்தருளுவார். நமசிவாய என்பது தூலபஞ்சக்கரம்; சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம்; இருதலைமணி எனக் குறிப்பிடப்படுகிற அதிசூக்குமம் குருமூலமாக மட்டுமே கேட்கத்தக்கதாம்.

திரு ஐந்தெழுத்தை ஓதுகின்ற முறையும் மூவகைப்படும். கூடியுள்ள பலரும் கேட்குமாறு மந்திரங்களை உச்சிரிப்பது என்பது ஒன்று; அருகில் இருப்போருக்குங்கூட கேட்காதவாறு, தன்செவிக்கு மட்டும் கேட்குமாறு முணுமுணுத்து உச்சரிப்பது என்பது மற்றொன்று. உடலின் எந்த ஓர் உறுப்பும் அசையாமல், மந்திரங்களை மனதால் பாவிப்பது மூன்றவாது. அவற்றை முறையே வாசகம், மந்தம், மானதம் என வடநூலார் குறிப்பிடுவர். அவை ஒன்றின் ஒன்று நுண்மையானவை. அதிகப் பயன் தருபவை.

பல காலப் பயிற்சியினால் பக்குவம் அடைந்தவர்களுக்கு இறைவன் திருவருள் கூட்டுவிப்பதாலேயே, மானதம் என்ற

மனத்தால் உச்சரிக்கும் திறன் வாய்க்கும். திரு ஐந்தெழுத்தின் மூலம் ஆன்மா புறத்தே பூசனைகள் செய்வதுபோல, உடம்பினுள்ளேயும் அகப்பூசனைகள் செய்யின், சிவனுக்கு அடிமையாகி, இவ்வுலக வாழ்விலேயே பேரின்பம் துய்க்கும் பேற்றினைப் பெறுவது உறுதி'' என்றேன்.

எல்லாம் நன்மைக்கே!

உடம்பில் ஒரு சிறு கொப்பளம், சற்றே வீங்கிய நிலையில் மருத்துவரிடம் காண்பிக்கிறோம். ''கட்டி காயாக இருக்கிறது, கொஞ்சம் பழுக்கட்டும்; பிறகு அறுத்துக் குணப்படுத்தலாம் என மருத்துவர் ஆலோசனை கூறுகிறார். கட்டி பழுக்கும் வரை காத்திருக்கிறோம்; பின்னர் மருத்துவர் அக்கட்டியை வெகு எளிதாக அறுத்துத், தக்கமுறையில் மருந்திட்டுக் குணப்படுத்து கிறார். அதற்காக நாம் அவருக்குப் பணமும் கொடுக்கிறோம்.

அதேபோன்றுதான் வினைகளின் நிலையும். வீங்கிய கட்டி பழுப்பதைப் போல, வினைகளும் முதிர வேண்டும். அவ்வாறு முதிர்ந்தாலன்றி, நடைமுறை அனுபவத்துக்கு அவை வாரா. வினைக்கு உரிய பயன்களை அவரவரே நுகர்ந்து கழித்தாலன்றி, அவ்வினையின் மூலக்கரு நம்மை விட்டுத் தொலையவும் தொலையாது. ஆகவே, எப்பொழுது, யார் மூலம் எந்த வகையில் எந்த அளவு வினைப்பயனை நமக்கு ஊட்ட வேண்டும்? என்பது இறைவனால் முன்னரே நிர்ணயிக்கப் பட்ட ஒன்று.

யாரோ ஒருவர் மூலம், ஏதோ ஒரு சூழலில் நாம் இன்பமோ, துன்பமோ அடைகிறோம். மகிழ்வினைத் தந்தவரை மகேசனாகவே எண்ணிப் போற்றுகிறோம்; துன்பம் நேரின், அதைத் தந்தவரைத் 'தீயவர்கள்' என்றே கருதிப் பலவாறாக ஏசுகிறோம்; இவை பொதுவான மானுட இயல்புகள். ஞானத் தெளிவுடையோர் அவ் அனுபவங்களை வேறுவிதமாகச் சிந்திப்பர். அவர்களின் சிந்தனைகள் சற்று விசித்திரமாகக்கூட இருக்கலாம்; ஆயினும், அதுவே உண்மை.

பழுத்த கட்டியை அறுத்து உதவிய மருத்துவரைப் போன்றே, துன்பம் இழைத்தவர்களையும் துணைவர்களாகக் கொள்ளுவது அருளாளர் பண்பு, முதிர்ந்த வினையின் பயனை நமக்கு சுட்டிக் கழிப்பிக்க வந்த துணைக் காரணங்களே அத் 'தீயவர்கள்' என்பதை அருளாளர்கள் நன்கு உணர்வர்.

பழுத்த கட்டியை அறுக்கவில்லையாயின் அதனுள் சீழ் வைத்து, உள்ளே புரையோடி ஏனைய சிலபல உறுப்புகளை இழந்து, வாழ்வின் இன்பங்கள் பலவற்றை இழக்க நேரிடலாம்; உயிருக்கேகூட ஆபத்தை விளைவிக்கலாம். அதே போன்றுதான், நம்முடைய முந்தைய வினைகளையும் உரியவாறு கழிக்க வேண்டும். வினைப் பயன்கள் நுகர்ந்து கழிக்கப் பெற்றாலன்றி, பேரின்பமாகிய முத்திப் பேற்றிற்கு வாய்ப்பு இல்லை.

அங்ஙனம் உரிய ஒருவர் நமக்கு இறைவன் நீதிப்படி வினைப்பயனை ஊட்டும்போது, அவரை நாம் பழித்தோமாயின், அது நாம் செய்கிற புது வினையாகவும் மாறி, மேலும் ஓர் பிறப்புக்கும் வித்து ஆகலாம்.

''மற்றவர்கள் அனைவரும் தத்தம் சுயநலத்துக்காகவே தம்மீது இன்பதுன்பங்களைத் திணிக்கிறார்கள் என அவர்கள் கொள்ளுவதில்லை. இன்று தமக்குத் துன்பம் தருகிறவர்களுக்குத் தாம் முற்பிறப்புகளில் ஏதோ தீங்கு இழைத்திருக்க வேண்டும். அஃது, பல காலமாக, முதலும் வட்டியுமாகத் தம் கணக்கில் ஏறி இருந்து, இப்பொழுது உரியவாறு, அவர்கள் மூலமாகவே தமக்குக் திருப்பித் தரப்படுகிறது. இறைவன் தானே முன் நின்று வழிநடத்துவதாலேயே, அவன் ஆணைப்படி, அவர்களும் செயற்படுகிறார்கள். எனவே அவர்களை நொந்து கொள்ள வேண்டியதில்லை-எனத் தருமை ஆதீனக் குருமுதல்வர் அறிவுறுத்துகிறார்கள் :

அவரவருக்(கு) உள்ளபடி ஈசன் அருளாலே
அவரவரைக் கொண்(டு) இயற்றமானால் - அவரவரை
நல்லார், பொல்லார் என்று நாடுவ(து) என்? நெஞ்சமே!
எல்லாம் சிவன் செயல் என்று எண்

ஆகவே, துன்பம் விளைவித்தவரை நொந்து கொள்ளாமல், அவர் நம்முடைய முந்தைய 'வாடிக்கைதாரர்' என்றும், 'நாம் முன்னர்க் கொடுத்ததையே திருப்பித் தருகிறார்' என்றும். 'அதுவும் இறைவன் ஆணைப்படியே நிகழ்கிறது' என்றும், அஃது அவ்வாறு நிகழவில்லையாயின், நமக்கு உரிய பேரின்பப் பெருவாழ்வு வாய்க்காது என்றும், இன்பம் விளைவித்தவரைப் போன்று, துன்பம் விளைவித்தவருங்கூடப் பேரின்பப்பாதை யிலிருந்த தடையை நீக்கி நமக்கு நன்மையே செய்திருக்கிறார்'

என்றும், கருத்தில் கொண்டு அவருக்கு இயன்றவரை நன்மை செய்தலே அறிவுடைமையாகும்.

நாம் வினை நுகர்ச்சிக்காகவே பிறந்திருக்கிறோம். எனவே, தக்கவர்களின் மூலம் அவ்வினைகள் நமக்கு இறைவனால் ஊட்டப்படுகின்றன. உணவினை ஊட்டுகிற அன்னைக்கும் செவிலித்தாய்க்கும் நாம் நன்றி செய்கிறோமன்றோ. நாம் உடல் நலத்தோடு இருக்கும்போது அவர்கள் அறுசுவை உணவு களை ஊட்டி மகிழ்விக்கிறார்கள்; நாம் நோயால் துன்புறும் போதோ, அவர்களும் கசப்பான மருந்துகளைத் தந்து நமக்கு மேலும் மனத்துயரைத் தருகிறார்கள். அது போலவே, இன்பச் சூழலில் நன்மை நடத்துபவர்க்கு நன்றி நவிலும் நாம், நமக்கே உரிய துன்பமாகிய வினைப்பயனை, ஊட்டுபவர்களுக்கும் நன்றி செய்வது தானே நீதி? இதனையே தெய்வப்புலவர் திருவள்ளுவரும்,

இன்னா செய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (குறள் - 314)

எனக் கூறித் தெளிவுறுத்துகிறார்.

இன்பமும் துன்பமும் கலந்ததுதான் இந்த உலக வாழ்வு. இரண்டுக்குமே மூலகாரணம் வேறு யாருமில்லை; நாமே- என்பதைத் தெளிவாக, ஐயமின்றி நாம் உணர வேண்டும். இன்றைய இன்பத்துக்குக் காரணம் நாம் முன்னர்ச் செய்த நல்ல செயல்கள் என்றும், துன்பத்துக்குக் காரணம், மற்றவர்களுக்கு நாம் முன்னர் மனத்தாலோ, சொல்லாலோ உடலாலோ செய்த கொடுமைகள் என்பதையும் உளமார ஏற்றுக்கொள்ளும் மனநிலையையும் அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பிறர் குற்றங்களையே துருவித் துருவி ஆராய்ந்து, நம்முடைய நினைவையும் நேரத்தையும் வீணாக்குதல் கூடாது; மாறாக, நம் குற்றங்களை ஆழ்ந்து உள் நோக்கி அவற்றின் வன்மை மென்மைகளைச் சீர் தூக்கிச் சிந்தித்துத், தீயனவற்றை மனப் பூர்வமாக அகற்றவும் செந்நெறிகளை உறுதியோடு கடைப் பிடிக்கவும் பயிலுதல் வேண்டும். அஃது, ஆன்மாஉய்தி அடை வதற்கான உயரிய பயிற்சிகளில் ஒன்றாகும்.

புரியட்ட காயம்

சட்டை தைப்பதற்காகத் தையற்காரரிடம் துணியைக் கொடுக்கிறோம். அவர் நம் உடலின் உயரம், பருமன் முதலிய

வற்றை அளவு எடுத்துக் கொள்ளுகிறார்; முழுக்கை வேண்டுமா, அரைக்கை போதுமா என்பன போன்ற நம் விருப்பத்தையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறார். நம் விருப்பத்துக்கு ஏற்ப, நாம் கொடுக்கும் துணியிலிருந்து, நமக்கெனத் தனியாக ஆடை தைத்துத் தருகிறார் அன்றோ?

அதேபோன்றுதான் இறைவன் மன - உடம்பாகிய குண சரீரத்தை நம் இயல்புக்கு ஏற்ப அமைத்துத் தருவதும் நிகழ்கிறது. மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று அந்தக்கரணங்களும், சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்ற ஐந்து தன்மாத்திரைகளும் சேர்ந்த கட்டமைப்புக்குப் புரியட்ட காயம் என்று பெயர். பருமையான ஓர் பூத-உடம்பை விட்டுப் பிரியும்போது, உயிர் இந்த நுண்-உடம்போடுதான் வெளியேறும். மற்றோர் உடம்பினுள் அவ் உயிர் புகும்போதும் இந்த நுண்-உடம்போடுதான் புகும். நம்முடைய முந்தைய விருப்பு வெறுப்புகள். பண்புகளுக்குத் தக்கவாறு ஒவ்வொருவருக்கும் ஏற்ற மன-உடம்பை உருவாக்கி, அதை நம் ஊழ்வினைக்கு ஏற்ப இயக்கிக் கொண்டிருப்பவன் சிவபெருமானே.

ஆடையின் அளவுகளை மாற்றவோ, ஓட்டைகளைச் சரி செய்யவோ தையல்காரரே உதவ முடியும். அதேபோன்றுதான், நம் மனத்தைச் சீர்செய்து, அறிவில் தெளிவினை ஏற்படுத்த ஆண்டவனாகிய சிவபெருமான் ஒருவனால்தான் முடியும். ஆகவே அவன் தந்த மனம் என்ற கருவியைக் கொண்டே அவனை வழிபடப் பயிலுதல் வேண்டும். ஆகவேதான், அவன் அருளாலே அவன்தாள் வணங்கி......எனப் பாடிப்பரவுவார். மாணிக்கவாசகர்.

சத்திய சோதனை

வீடு அல்லது வீட்டு மனையை விலைக்கு வாங்குமுன், அதில் ஏதேனும் சிக்கல்கள் உள்ளனவா என அரசுப் பதிவகத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம் அன்றோ? அதற்கான வில்லங்கம் பற்றிய சான்றிதழும் பெறுகிறோம். அதேபோன்று துன்பம் நேருகிற பொழுதெல்லாம் நாம் நம் வாழ்க்கை ஏட்டின் முந்திய அத்தியாயங்களைப் புரட்டிப்பார்க்க வேண்டும். மூன்று மாதம், ஆறு மாதம், ஓர் ஆண்டு-எனக் கால அடைவில் சிறிது சிறிதாக முந்திய நிகழ்ச்சிகளை எல்லாம் அமைதியாக அசைபோட்டுச் சிந்தித்தல் வேண்டும்.

நாம் அறிந்தோ அறியாமலோ, செய்த குற்றம்-குறைகளை ஒளிவு-மறைவின்றி அசைபோட்டுப் பார்த்தால், அப்போது அங்கு புதைந்து கிடக்கும் பல அரிய உண்மைகள் ஒரு வரலாறாகவே முன்நிற்கும். அஃது ஒரு சத்திய சோதனையே. அதற்கு ஒரு தனித் துணிவு வேண்டும்.''

அமைதியா? ஆத்திரமா?

'பிறர் துன்பம் தரும்போது நம் ஊழ்வினையை எண்ணி அமைதியுறுவதா? அன்றி துன்புறுத்தியவன் அவன் பங்குக்குத் துன்பத்தை அனுபவிக்கும் நேரத்தை எதிர்பார்த்து ஆறுதல் அடைவதா? இவ்விரண்டனுள் எது சிறப்பு? ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

''இன்பதுன்பங்களுக்குக் காரணம் நாம் முன்னர்ச் செய்த வினைகளே என எண்ணி அமைதியுறுவதே சிறப்பு. அவ்வாறு எண்ணும்போது நாம் நம்மை உணரத் தொடங்குகிறோம்; மீண்டும் தீவினைகளைச் செய்ய மனம் கொள்ள மாட்டோம். அந்த வினையும் அதன் விளைவும் அத்தோடு முடிந்தது.

அடுத்து, துன்புறுத்தியவன் ஓர் துணைக் காரணமே. அவனில்லாவிட்டாலும் மற்றொரு வகையில் அத்துன்பம் நமக்கு ஊட்டப்பட்டே தீரும், மேலும் துன்புறுத்தியவனை நம் எண்ணத்தில் தொடர்ந்து தூக்கித் திரிவதால், நமக்கு எந்த ஒரு நற்பயனும் இல்லை. அவன் எப்போது இக்கேட்டிற்கான பயனை அனுபவிப்பான் என எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும் அறியாமையே. ஏனெனில், எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தில் முடிவதே பெரும்பான்மை. அதனால் வருத்தம் தோன்றி, அதுவே ஏக்கமாக மாறும்.

ஏமாற்றமும் ஏக்கமும் சிந்தையில் பகைமை உணர்வுகளை வளர்க்கும்; தன்முனைப்பு தலைதூக்கும்; மீண்டும் தீவினை செய்வதும், மறுபடி மறுபடி இன்ப துன்பங்கள் நிறைந்த பிறப்பு-இறப்புச் சக்கரத்தில் சுழலுவதுமாக வாணாள் வீணாளாகும்.

தியானத்தின் சிறப்பு

''தியானம் செய்வதால் ஏராளமான நன்மைகள் விளையும் என்று பலரும் சொல்லுகிறார்களே, அஃது அறிவியல் அடிப்படையில் எவ்வாறு பொருந்தும்? சற்றே தெளிவு படுத்துங்கள், ஐயா'' என்றார் சிவசாமி.

''மின் விளக்குகள், மின் விசிறிகள், தொலைக்காட்சி, குளிர்சாதனங்கள் என்பன போன்று பலப்பல மின் சாதனங் களை நாம் வீடு முழுவதும் ஏராளமாகப் பயன்படுத்துகிறோம். அத்தனை மின் சாதனங்களுக்கும் மின் ஆற்றலை அனுப்பத் துணை நிற்பது வீட்டில் முகப்பிலுள்ள மின்-இணைப்புப்-பெட்டியே *(Main Switch Board)* அன்றோ?

நாம் குடியிருக்கும் வீட்டினைப் போன்றதுதான் நமது உடம்பும். மின் சாதனங்களின் இயக்கம் முழுவதும் மின் இணைப்புப் பெட்டியின் கட்டுப்பாட்டக்குள் இருப்பது போலவே. நம் உடலின் இயக்கம் முழுவதும் நம் தலையிலுள்ள நரம்பு மண்டலத்தின் கட்டுப்பாடுக்குள் இருக்கிறது. ஆகவேதான் 'எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' என்பது தொன்று தொட்டே வழக்கு மொழியாயிற்று.

நம் சிரசின் உள்-அமைப்பைப் பற்றி முன்னரே விளக்கமாகப் பார்த்துள்ளோம். அதை ஓரளவு நினைவுபடுத்திக் கொண்டு தியானச் சிறப்பினைப் பற்றிச் சிந்திப்போம்.

தலையிலுள்ள நரம்புகளின் தொகுதியை நாம் மூளை என வழங்குகிறோம். மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது மூளை; அது அறிவுக்கு நிலைக் களனாக உள்ளது. இதன் தொடர்ச்சியாக முதுகில் உள்ள பெருநரம்புக்குச் சுழிமுனை நாடி (முதுகுத்தண்டு) என்பது பெயர். மூளை-முதுகுத்தண்டின் நரம்புத் தொகுதியை மையநரம்பு மண்டலம் என்பர்.

சிரசின் முன் பகுதியை நிரப்பிக் கொண்டிருக்கிறது பெருமூளை. இஃது இரண்டு கூறுகளை உடையது; சிவனுக்கும் சத்திக்கும் தொழிலகமாய் விளங்குவது; ஆன்மா சிவஞானத் தெளிவு பெறுவதற்குப் பேரறிவுத்தானமாக திகழ்வது இப் பெருமூளையே.

நம் பின் தலைப் பிடரியில் இருக்கிறது சிறுமூளை; அறிவு நரம்புகளுக்கும் செயல் நரம்புகளுக்கும் *(Sensory Nerves and Motor Nerves)* தோற்றுவாயான இதுவே, உலகியல் வாழ்வில் ஆன்மா ஊழ்வினைக்கு ஏற்பச் சிந்திக்கவும், செயற்படவும் களமாக இருக்கிறது.

சிரசின் மையப் பகுதியில் பெருமூளை, சிறுமூளை இரண்டுக்கும் நடுவில், அமைந்திருக்கிறது நடுமூளை. மிகச்

சிறிய உருவினதான இதன் ஆற்றல் தனிச் சிறப்புடையதாகும். நடுமூளை-முகுளம்-முதுகுத்தண்டு இணைந்த மூன்றாவது பகுதி அனிச்சைச் செயல்களுக்கு ஆதாரமாக இருக்கிறது.

நம் வீட்டிற்குள் வருகிற மின் ஆற்றல், நேர் மின் ஆற்றல் என்றும் எதிர் மின் ஆற்றல் என்றும் இரண்டு கூறாகிப், பின் இணைந்து பயன் தருவதைப் போல, உடம்பின் புறத்திலிருந்து நம் உடம்பினுள் நுழைகிற இறை-ஆற்றலும் சிவன் என்றும் சக்தி என்றும் இரண்டு கூறுகளாகிப் பெருமூளையின் வலக்கூறு, இடக் கூறுகளை *(Right and left hemispheres of the Cerebrum)* இடமாகக் கொள்ளுகிறது. பின்னர், மிகநீளமான ஒரு வெள்ளைநிற இணைப்பானால் *(Corpus Callosum, the largest white commissure)* இரண்டு கூறுகளும் பொருந்தி நின்று, அளவிடற்கரிய பல நுண்மையான காரியங்களைச் செய்கின்றன.

சிவபெருமான் மாதொருபாகன் (அர்த்த நாரீசுவரன்) என்பது சைவக் கொள்கை; அதற்கேற்ப நம் பெருமூளையின் இவ் அமைப்பு ஒத்திருக்கிறது. பேரறிவாளனாகிய சிவபெருமானுக்கு உறைவிடமாக இருப்பது பெருமூளை.

அஃது பெயருக்கு ஏற்ப, அளவால் பெரியது என்ற சிறப்புடையதாயினும், அதன் அளப்பரிய ஆற்றலில் இரண்டு விழுக்காடு (2%) மட்டுமே நம்போன்றார் பயன்படுத்துகிறோம். இஃது இக்கால மேலைநாட்டு நரம்பியல் மருத்துவ நிபுணர்களும் ஆய்ந்து கூறுகிற உண்மை. பக்கம் 73-இல் உள்ள அர்த்தநாரீசுவரர் / பெருமூளை வரைபடத்தை நோக்குக.

பேரருளாளனாகிய சிவபரத்துக்குப் பெருமூளை தொழிலகமாக இருப்பது போன்றே, சிற்றறிவு உயிர்களின் ஆற்றல்கள் செயற்படுவதற்கு ஊற்றுக்காலாக இருப்பது சிறுமூளையாகும். நம் பிடரியில் உள்ள இச் சிறுமூளையில், சிவசக்தி ஆதிசக்தியாகத் தங்கி நின்று, ஆன்மாவின் ஊழ்வினைக்கு ஏற்ற வாழ்வினை ஊட்டுகிறாள்.

வினை நுகர்ச்சிக்கு ஏற்ப, நம்முடைய இந்த உலகியல் வாழ்வில் பிடரியிலுள்ள அறிவு நரம்புகளும் செயல் நரம்புகளும் இயங்குவதற்கு அவளே துணை நிற்கிறாள். மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றன் இயக்கத்துக்கும் இங்கிருந்துதான் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. இக்கருத்துப் பற்றியே தொல்காப்பியரும்,

சிவபெருமானின் பிச்சாண்டிக் கோலமும்
மூளை இணைப்பானும்



1. ஞானப்பால் ஊட்டகம்
2. தலைமைச்சுரப்பி
3. தலைஎழுத்து
4. மூளை இணைப்பான்
5. மூன்றாம் நாளம்
6. பகீரதக் கங்கை
7. பெருமூளை
8. நான்காம் நாளம்



மனித உடலில் சைவமும் தமிழும்
ஆதார யோகம்

வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்,
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து,
பொலிமின்' என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

(பொருள் - செய்யுளியல் - 104)

எனக் கூறி நம் பிடரியையே ஆதிசத்தியின் இருப்பிடமாகச் சுட்டுவார்.

இறை-ஆற்றல் இங்ஙனம் நம் நரம்பு மண்டலத்தை இயக்கிக் கொண்டிருக்க, உயிர் என்ற ஆன்மா, நம் உடம்பில் புருவ நடுவுக்குக் கீழுள்ள முண்டப் பகுதியை ஆடற்களமாகக் கொண்டு செயற்படுகிறது. இவ் உண்மையையும் தொல்காப்பியரே மற்றொரு சூத்திரத்தின் மூலம் உணர்த்தக் காணலாம்.

முதல் எனப்படுவதுநிலம் பொழுது இரண்டின்
இயல்(பு) என மொழிப இயல்(பு) உணர்ந்தோரே

(பொருள் - அகத்திணைஇயல் - 4)

(இதன் விரிவாக்கத்தை ஆசிரியரின் தொல்காப்பியம் சைவசித்தாந்த நோக்கில் என்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீட்டில் காணலாம்)

தியானத்திற்குரிய பொருள், தியானத்திற்கான களம், தியானிப்போரின் இயல்பு என்பன பற்றிச் சிந்தித்தோம். இனி தியானம் செய்யும் முறை பற்றிக் காண்போம்.

எண்ணங்களைச் சிதறவிடாமல், புருவ-நடுவில் குவித்து, உதடுகள் அசையாமல், மனத்தினால் சிவமூல மந்திரங்களை உச்சரித்து, சிவபரத்தைச் சிரசினுள் சிந்தித்திருத்தல் சிவ-தியானம் ஆகும். அப்போது சிரசினுள் இருக்கும் மூளை-நரம்புகளில் ஓர் இன்ப அதிர்வு ஏற்படுகிறது. அப்போது பெருமூளையின் மடிப்புகள் புத்துணர்வு பெற்று, ஆயிரம் இதழ்த்தாமரையாக மலர்கிறது. இதன் இருபக்க-நரம்புகளும் பொருதுகின்றன. மந்திர ஒலி சிவஞான ஒலியாக மாறுகிறது. அப்போது சிந்தையில் மின்னல் போன்ற ஒளி பளிச்சிடுகிறது; இந்த ஒலி, ஒளிகளின் சேர்க்கையால் மின்-ஆற்றல் தோன்றுகிறது. அதனின்று காந்த சக்தி தோன்றுகின்றன. இங ்ஙனம் வரிசையாகத் தோன்றுகிற ஒலி, ஒளி, மின்னாற்றல், ஈர்ப்பாற்றல்களால் *(Sound, Light, Electricity, Magnetism)* நம் சித்தம் தெளிவாகி, எண்ணங்கள் வளம் பெற்று, மேன்மேலும் சிவத்தின்பால் ஈர்க்கப்படுகின்றன.

நம் சிற்றறிவின் செயற்பாட்டிற்கு ஊற்றுக்கால் சிறுமூளை என்றும், விருப்பங்களின் ஊற்றுக்கால் மனம் என்றும் சிற்றறிவின் நிலைக்களன் புத்தி என்றும், செயற்களன் அகங்காரம் என்றும் கூறினோம். தியானத்தின் மூலம் ஆயிரம் இதழ்த் தாமரையாக

மலர்ந்த பெருமூளையை பாவனையால் மீதானத்து இறைவன் திருவடியில் சமர்ப்பிக்கும்போது, ஆன்ம-ஆற்றல் முழுவதும் சிவபரத்தின் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக வருகின்றன. அதனால் நம் மனதில் தோன்றுகிற எண்ணங்களும், அறிவில் தோன்றுகிற சிந்தனைகளும் சிவபரத்தின் விருப்பம், அவனுடைய அறிவு, அவனுடைய செயல் என்றவாறு விழுப்பமுறுகின்றன.

ஆகவே, சிவதியானத்தின் மூலம் பெருமூளையில் புதைந்து கிடக்கும் அளப்பரிய இறை-ஆற்றல்களைப் பெருக்கிக் கொள்ளவும், அரிய கருவூலங்களை அனுபவ வாயிலாக நுகர்ந்து உய்தி பெறவும் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

அறிவியல் தமிழ்

சி என்ற குறியீடு செம்மையைக் குறிக்கும்; இதனை 'நாயோட்டு மந்திரம்' என்பர்; துரத்திவரும் நாயினை (தீ வினை முதலியவற்றை) விரட்டி ஓட்டுகிற ஆற்றல்மிகு அருந்தமிழ்ச் சொல் இது. ஓரெழுத்து-ஒரு மொழியாகிய இதுவே, அறிவியலார் ஆங்கிலத்தில் கூறும் *Absolute Power* -எனலாம்.

வ என்ற குறியீடு சிவத்துள் எப்பொழுதும் பிரியாது நிறைந் திருக்கிற பேராற்றலைக் குறிக்கும்; இதனை வனப்பு ஆற்றல் என்பர். இஃது இயல்புநிலையில் சிவத்துள் அமைதியாக ஒடுங்கி நிற்கும். அப்போதைய இதன் நிலையை அறிவியல் மொழியில் கூறுவதாயின் *Kinetic Energy* எனலாம். சிவ-ஆணைப்படி, இது வெளிப்பட்டு நமக்காக இயங்கத் தலைப்படுகிறது. இப்போதைய இதன் நிலையை *Dynamic Energy* எனக் கூறுதல் சாலும்.

Proton, Electron, Neutron - என்ற மூன்றும் இயைந்தது ஒரு பரமாணு. அதைப் போன்றே சி வ ம் என்பது பரம்பொருளுக்குக் குறியீடாயிற்று. மேல்நோக்கிக் குவிந்து செல்லுவது சிகரம்; திசைகள் தோறும் பரந்து விரிந்து சென்று நற்பயன்தருவது வகரம். இவ்விரண்டின் கூட்டமைப்பே சிவலிங்கம்.

சிற்றறிவு-ஆன்மாக்களை உலகமுகப்படுத்தி, அவரவர்க்கு உரிய வினைகளை ஊட்டிக் கழிப்பித்து, வினை முடிவில் பேரின்பக் குறியீட்டை நோக்கிச் செலுத்துவது வகரம். பேரின்பத்தின் ஊற்றுக் காலாய்ச் சச்சிதானந்தப் பரம்பொருளாய் இருப்பது சிகரம்.

சிவம் என்ற குறியீட்டில், ஞான அருளாற்றலின் குறியீடாக வகரம் இருப்பதுபோலவே, சடமாகிய மாயா வைப்பு ஆற்றலின்

குறியீடாக இருப்பது,'ம்'-என்ற மகர ஒற்று. மாயைக்குத் தன்னளவில் இயங்குகிற ஆற்றல் இல்லை என்பது ஒற்றுவழி அறியத்தக்க உண்மை; ஆயினும், சிவபெருமானால் இயக்கப் படும்போது அளப்பரிய ஆற்றலை அது வெளிப்படுத்த வல்லது. அது பரம்பொருளின் வைப்பு ஆற்றல் (Potential Energy) ஆகும்.

பரசிவத்தின் அதிநுண்ணிய வடிவம் ஞானிகளுக்கு மட்டுமே தெளிவாகத் தோன்றும். ஆயினும் கருணையே உருவான பரசிவம் நம் போன்ற சாதாரண மக்களுக்கும் புலப்பட வேண்டும் என்ற அருளுள்ளத்தோடு மாயை என்ற சட ஆற்றலின் மூலமும் வெளிப்படுகிறார். சுயம்பு லிங்கமாக அப்பரம்பொருள் தன்னைத் தானே வெளிப்படுத்திக்கொள்ளுகிறது.

இதுவே பண்டு தொட்ட நம் செந்தமிழ் நாட்டின் மெய்ப் பொருளியலோடு ஒட்டிய அறிவியல் தமிழ் என்பது குறிப்பிடத் தக்கதாம்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்,
சிவசிவ என்னச் சிவகதி தானே

(திருமந்திரம், 9-ஆம் தந்திரம், ச.காரண பஞ்சாக்கரம் - 2)

என்பார் திருமூலர். சிவமூலமந்திரத்துக்கு அளப்பரிய ஆற்றல் உண்டு என்பது குறிப்பு.

''நூலறிவு கொண்டு சிவத்தை நினைவதற்கும், தியானத்தால் சிந்திப்பதற்கும் வேறுபாடு உளதா? ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

''ஆம் நிறையவே உள்ளது. சாலைகளின் சந்திப்பில் கை காட்டி நட்டிருக்கிறார்கள்; அது பல்வேறு ஊர்களுக்கும் இடம் சுட்டித் திசை காட்டி நிற்கிறது; அவ்வாறு இடங்களையும் திசைகளையும் காட்டுவதன்றி, அக் கைகாட்டியே பயணிகளைத் தூக்கிச் சென்று அந்தந்த இடங்களில் விடுவதில்லை யன்றோ? அதேபோன்றுதான், அறிவுநூல்கள், அறநூல்கள், அருள் நூல்கள் அனைத்தின் நிலையும்.

மெய்யாகச் சொல்லுவதாயின், அவையும் வெறும் கைகாட்டி மரம் போன்று நெறிகளைக் கற்பிப்பவையேயன்றி, தாமே நம்மைத் தூக்கிச் சென்று உயர்ந்த நிலையில் வைக்க மாட்டா; அவற்றிற்கு அந்த ஆற்றலும் இல்லை.

சுவரை வைத்துத் தானே சித்திரம் வரையவேண்டும். எனவே உடம்பு என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் உடம்பு ஒன்றுதான் முழுமையான வாழ்வு -என மயங்கி நாளைக் கழித்து வீணாக்கி விடவும் கூடாது. சுவர் மட்டும் இருந்தால் போதாதே. அதில் சித்திரமும் வரைந்தால்தானே குறிக்கோள் நிறைவேறும்? எனவே சிவதியானம் செய்து நற்பயன் பெறுதலே சிறப்பு.

இக்காலக் கல்விக்கூடங்களில் நிலவியல், வேதியல், உடலியல், இயற்பியல் போன்ற எல்லாப் பாடங்களுக்கும் நேர்முகப் பயிற்சி வைத்திருக்கிறார்கள்.

ஆனால் நம்மவரிடம் பண்டுதொட்டு வளமாக இருந்த இறையியல்-பயின்முறை மட்டும், வழக்கு ஒழிந்து, 'ஏனோ தானோ' என்றவாறு, வெறும் ஏட்டளவுக் கல்வியாக மாறி விட்டமை வருந்துதற்குரியது. மாணவர்கள் தாமாகவே நேர்முகப் பயிற்சிக்கு முன்வர வேண்டும்; அதற்கு ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

அறிவு நூல்களையும் அருள் நூல்களையும் இணைத்துச் சிந்தித்து ஒப்பு நோக்கி, உண்மை கண்டு மனம் தெளிய வேண்டும். அங்ஙனம் தெரிந்து கொண்டவற்றை, வாழ்வில் நடைமுறைப்படுத்தி அதன் உள்ளீடுகளை அனுபவத்தால் ஐயம் திரிபு இன்றித் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

அவரவர் தத்தம் தொழிலைச் செய்து கொண்டே சிவபரத்தையும் சிந்திக்கலாம். அப்போது, மனம் மாசு நீங்கித் தூய்மையுறுகிறது. செய்யும் தொழிலிலும் வெற்றி ஏற்படுகிறது.

மனத்தைத் தூய்மை செய்தல்

''ஐயா! தாங்கள் தத்துவ-விளக்கத்தின்போது, வினைகளின் தோற்றத்திற்குக் கருவியாக இருப்பன மனம், மொழி, மெய் என்ற மூன்றுமே என்று கூறினீர்கள். மனத்தில் தோன்றும் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே, புத்தி செய்திகளை அறிகிறது என்றும், பின்னர் அகங்காரத்தைத் துணையாகக் கொண்டு, கருவிகரணங்கள் செயற்படத் தொடங்குகின்றன என்றும் குறிப்பிட்டீர்கள்.

யாவற்றிற்கும் மனமே அடிப்படைக் காரணமாக இருப்பதால், மனத்தைத் தூய்மையாக வைத்துக்கொண்டாலே, ஏனைய மொழியும், மெய்யும் தூய்மையாகும் அன்றோ? திருடாதே,

பொய் சொல்லாதே தீயன நினையாதே, அன்போடு இரு என்றெல்லாம் அறநூல்கள் அறிவுறுத்துகின்றன. எனவே, மனத்தை அவ்வாறு தூய்மையாக வைத்துக்கொள்ள, அறநூல்களைக் கற்றலே போதாதா? வேறு நெறிகள் தேவைதானா?'' என்றவாறு ஒரு வினாவினை எழுப்பினார் குப்புசாமி.

''அருமையான வினாவைக் கேட்டிருக்கிறீர்கள். பாராட்டுக்கள்! உயிர் என்பது ஓர் உணர்வுப் பொருள். ஒவ்வொரு நொடியும் இன்பத்தை நாடி மேன்மேலும் உயர விரும்பு வதாலேயே அதற்கு உயிர் என்பது பெயராயிற்று. உலகப் பொருள்களின் மேல் அது விருப்போ வெறுப்போ கொள்ளு வதற்கு மனம் என்ற அகக்கருவியே துணை நிற்கிறது. உயிருக்குத் தோழியாக நின்று, உயிரின் ஆற்றல்களை எல்லாம் நெறிப்படுத்துவது மனமே.

ஆகவே மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுவது மிகவும் வேண்டற்பாலது. ஆயினும் மனத்தை எவ்வாறு தூய்மை செய்வது? புற உடம்பின் அழுக்கை நீர் கொண்டு கழுவித் தூய்மை செய்வதுபோல் மனத்தை வெளியில் எடுத்து நம்மால் தூய்மை செய்து கொள்ளமுடியுமோ? இது தொடர்பாக திருவள்ளுவரின் குறள் ஒன்றுகாண்போம்.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு (குறள் - 354)

ஐவகைப் பொறி புலன்களின் இருப்பையும் அமைப்பையும் அறிவியல் நூல்களில் வழி அறியலாம் என்பதும், அவற்றை அடக்கி ஆள்வது பற்றிய நல்ல கருத்துக்களை அறநூல்கள் போதிக்கின்றன என்பதும் உண்மையே. ஆனால் அவற்றை மேலோட்டமாகப் படித்துப் பண்டிதர் ஆனவர்களே பலராக உள்ளனர். அவை கூறுகிற அறநெறிகளை நாமாகவே அனுபவத்துக்குக் கொண்டு வருவதும் அவ்வளவு எளிதன்று.

ஆழமாகப் படித்தவர்களும்கூட அந்நூல்களில் கற்றதற்கு மாறாகப் பிறருக்கு இடையூறும் துன்பமும் தருவதிலேயே மகிழ்கின்றனர்; மற்றவர் பொருள்களைக் கவர்கின்றனர்; கற்றதற்கு மாறாக அவர்களுள் பலரும் நடைமுறை வாழ்வில், பல்லாற்றானும் பிற்பட்டிருப்பதோடு, அவர்கள் மாட்டு ஒழுக்கமின்மையையும் பரவலாகக் காணுகிறோமே?

மெய்ப்பொருள் பற்றி, ஐயம் திரிபு அற்ற, தெளிந்த உணர்வு இன்மையால் அன்றோ, அறிவியற் கல்வியும், அற நூற்புலமையும் இவ்வாறு பயனற்றுப் போயின? அதற்கு அவரவர் களுடைய வலிய ஊழ்வினையும் ஒரு காரணமாகவே உள்ளது.

ஆகவே மனத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள அறநூல் கல்வி மட்டும் போதாது என்பது தெளிவு. இதற்குச் சரியான தீர்வு காணவேண்டுமானால், முதலில் மனம் என்பது என்ன? அதன் இயல்புகள் யாவை? அதற்கும் மற்ற பொருள்களுக்கும் எத்தகைய தொடர்பு? என்பன போன்ற அமைப்பு முறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மனம் என்பது என்ன?

நம் அறிவை வழி நடத்துவதற்காக, நம்முடைய வினை-நுகர்ச்சிக்கு ஏற்பச் சிவபெருமானால் வடிவமைத்துத் தரப் பெற்ற உயர்ந்த பொருளே மனம் என்பது. அது அவருடைய உடைமையாகிய மாயை என்னும் சட ஆற்றலிலிருந்து அற்புதமாக விரித்துக் தரப்பட்ட ஒரு நுண்-கூறு. எனவே, சிவபெருமானின் உடைமைப் பொருளாகிய மனம் பொதுவாக நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் இருப்பதில்லை.

கண், காது, மூக்கு, நாக்கு, மெய் என்பன போன்ற மற்ற உறுப்புக்கள் நம் கண்ணுக்குப் புலனாகின்றன. மனமோ கண்ணுக்குப் புலப்படாமல் உடம்பின் உள்ளே இருக்கிற ஒரு நுண்கருவி. அதுவும், மற்ற உறுப்புக்களைப் போல, மாயையிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட ஒரு கருவியே. ஏனைய கருவிகளை எல்லாம் அடக்கியாளுகிற அதனை ஆறாவதாகிய ஓர் அறிவுக் கருவியாகவே தொல்காப்பியர் போன்ற நம் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் சிந்தித்துள்ளனர். ஆகவே, அதனைப் பேணிக்காத்துப் பெருமை சேர்க்க வேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்பு ஆகும்.

மாயை என்பதோ ஒரு சடப்பொருள்; ஆயினும் நிறைந்த ஆற்றல் உடையது. அது சுத்த மாயை, அசுத்த மாயை என்ற இரண்டு கூறுகளை உடையது. இந்த மாயை என்ற சடசத்தி யிலிருந்து தோன்றியதுதான் மனம் என்ற கருவி, எனவே மனமும் சடமே. சுத்த-மாயையிலிருந்து சுத்த மனம் தோன்றுகிறது;

அசுத்த-மாயையின் வெளிப்பாடாக அசுத்தமனம் தோன்றுகிறது. எனவே, அது நன்மையும் செய்யும், மயக்கமும் செய்யும்.

மாயையின் தொடர்பு ஏன்?

உடம்பிலும் உடைகளிலும் உள்ள அழுக்குகளைக் கழுவு வதற்குச் சீயக்காய், சோப்பு போன்ற வேறு அழுக்குகளை நாளும் நாம் பயன்படுத்துகிறோம். தன் குழந்தை மலம் கழித்த இடத்தைச் தூய்மை செய்வதற்குப் பசுவின் சாணமாகிய மற்றொரு மலத்தைத் தாய் பயன்படுத்துகிறாள் அன்றோ? அதேபோல் தான், ஆணவம்,கன்மம் என்ற இரண்டு மலங்களைக் கழுவு வதற்காகவே, தன்பாலுள்ள மாயை என்ற மூன்றாவது மல - ஆற்றலைச் சிவபெருமான் செயற்படுத்துகிறான்.

நோய்வாய்ப்பட்ட மனிதனுக்குச் சிறந்த மருத்துவரின் கண்காணிப்பு, நல்ல மருத்துவ மனை, உயர்ந்த மருந்துகள், புன்முறுவலாலேயே நோயைக் குணப்படுத்த வல்ல இள நங்கையரின் பராமரிப்பு இவை எல்லாம் இருந்தால் அவன் விரைவில் குணமாகி வீடு திரும்பலாமன்றோ?

கவர்ச்சிக்கு மயங்குவதும், திரிவுபடச் சிந்திப்பதும் பெரும் பாலோர்க்கு இயல்பாகவே உள்ளது. சிற்றின்ப வேட்கையால் அலைந்த ஆன்மாவை, ஆணவம் என்னும் நோய் வலிதே கவர்ந்து இழுத்துக் கட்டிப் போட்டது. அங்ஙனம் கவர்ச்சியில் நாட்டமும், மயக்க உணர்வும் உடைய ஆன்மாவை, ஆணவத்தின் பிடியிலிருந்து விடுவிக்க, சிவபெருமான் தன்வயமுள்ள மாயை என்ற மற்றொரு மயக்கு பொருளை ஆன்மாவுக்குத் துணையாக அனுப்புகிறான்.

அஃது ஓர் இடைக்கால நிவாரணமே என்பதையும் படிப் படியாக ஆன்மாவுக்கு உணர்த்துகிறான்; (அங்ஙனம் சிவஞானத் தெளிவுற்ற) ஆன்மாவும், (பிறவியாகிய) பிணி நீங்கி நலனுற்ற, (உடல்/உலகமாகிய) இந்த மருத்துவ மனையிலிருந்து விரைவில் வெளியேறிச் (சிவபெருமான் திருவடியாகிய) வீட்டினை அடைய விரும்புகிறது.

மனத்தை இறைவன் இயக்குதல்

மனம் என்பது இரு நோக்குடையது. ஆன்மா முந்தைய இருள்-வினைகளின் இன்பதுன்பப் பயன்களை நுகர வேண்டிய போதெல்லாம் உயிரின் தோழியாகிய மனத்தை உலக விவகாரங்

களில் (*earthly encumbrances*) அழுத்துகிறான் இறைவன். அப்போது மனத்தில் மாசு படிந்திருக்கிறது. பலப்பல காமங்களோடு பதைத்து அலை மோதுகிறது. ஊழ்வினைகளின் பயனை உயிர் நுகர வேண்டிய நியதிக்கு ஏற்ப, மனம் பலவாறாக அலை மோதுவதும், அதனால் ஆன்மச் சிற்றறிவு அவ்வப்போது மயங்குவதும் இயல்பு ஆகின்றன.

மாயை என்பது சுத்தம், அசுத்தம் என இரண்டு வகைப் படும் எனக் கண்டோம். அவற்றுள், கோடானுகோடியாக உள்ள உயிர்களாகிய நாம், பெரிதும் பற்றி நிற்பது அசுத்த மாயை யினாலான உலகப் பொருள்களையே. ஆதலால் நாம் மிகுதியும் மாசுடையவர்களாகவே இருக்கிறோம். அசுத்த மனத்தின் அலைமோதலால்தான் நாம் பெரிதும் அல்லலுறுகிறோம். ஒரோ ஒரு சமயம் மனம் நம் கட்டுக்குள் நிற்பதுபோல் தோன்றும்; சிறிது நேரத்திலேயே ''வேதாளம் முருங்கை மரம் ஏறிய'' கதையாய்க் கிறுக்காட்டம் ஆடத் தொடங்கும். ஆணவமும் தொடர்ந்து தன் சேட்டையைச் செய்து கொண்டிருக்கும்.

முற்பிறப்புகளில் மெய்த்தவமாகிய அருள்-வினை செய்திருப்பின், அதற்கு ஏற்றவாறு இறை-பேரின்பத்தை (*Eternal Pleasure*) நுகரும் உரிமை அந்த ஆன்மாவுக்கு உண்டு. அத்தகைய ஆன்மாவை உயர்ந்த சிவநெறியிலேயே ஆற்றுப்படுத்துமாறு தோழியாகிய மனத்தினை இயைபுபடுத்துகிறான் சிவபெருமான். அப்போது அவ் உயிரின் விருப்பம், அறிவு, செயல் என்ற மூன்று ஆற்றல்களும், மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று நுண் கருவி களை ஆதாரமாகக் கொண்டு, சிவத்தை நோக்கி ஒன்றித்துக் குவிந்து நிற்கும். ஆதலால் மனம் தூய்மையுற்றுத் தெளிந்து விளங்கும்.

மனத் தூய்மை சிவதியானத்தால் விளைவது

மாயையினை சிவபெருமானின் உடைமைப் பொருள் என்றும், அவன் ஆணை-வழி மட்டுமே அஃது செயற்படும் என்றும் முன்னரே கூறினோம். ஆகவே, மாயையின் ஒரு கூறாகிய மனத்துக்கும் அக்கருத்து பொருந்துமன்றோ? நம் மனமும் சிவபெருமான் ஆணை வழியிலன்றிச் செயல்படாது. ஆகவே மனத்தை அவ்வப்போது தூய்மை செய்து கொள்ள, திருவைந் தெழுத்தைத் தியானித்தலாகிய இறை-வழிபாடு ஒன்றே சிறந்த நெறிமுறை (சாதனம்) ஆகும்.

ஆகவே சிவபெருமான் திருவருளால் மட்டுமே நாம் நம் மனத்தை ஒரு கட்டுக்குள் தூய்மையாக வைத்துக் கொள்ள

இயலும்; அதற்கு அறநூல்களும் அருள் நூல்களும் அவ்வப்போது துணைநிற்கும்''.

அறக்கருணை

அறப்பணியும் அருட்பணியும் மேற்கொள்ளுகிற நல்வினை யாளர்களுக்குச் சிவபெருமான் பெரிதும் திருவருள் புரிகிறான். அத்தகையோரின் மனத்திலும், வாக்கிலும், செயலிலும் அவன் உடனிருந்து அவர்களை நன்னெறியில் ஆற்றுப்படுத்துகிறான்.

மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் செய்யக் கூடிய வினைகளை முன்னரே கூறியுள்ளோம். சிவகுருவாக அருள்பாலிக்க வந்த சிவபெருமான் ஆன்மாக்களுடைய மனத்தில் அருளுடைமை முதலிய சீர்மைகளைத் தோற்றுவிக்கிறான்; உடம்பினைக் கொண்டு பலவகைத் தருமங்களையும் செய்யுமாறு உணர்த்துகிறான். இவை எல்லாம் அவன் ஆன்மாக்களின் பால் கொண்ட அறக்கருணைகளாம்.

எது உண்மையான வாழ்வு?

சீரிய வாழ்வியல் பற்றி இதுகாறும் சிந்தித்த செய்திகளைத் தொகுத்து நோக்குவாம்: உயிர் என்பது எக்காலத்தும் நிலைத்திருக்கிற பொருள். நம்முடைய வாழ்வு இப்பிறப்போடு முடிந்து விடுவதில்லை. முன்னரே எண்ணற்ற பிறப்புகளில் உழன்று தான் இப்போதைய உயர்ந்த இந்த மானுடத்தைப் பெற்றிருக்கிறோம்.

உயிர் என்ற சொல்லுக்கு இடையறாது உயர்வினை நோக்கி முன்னேறுதல் (உய்தல்) என்ற உண்மைப் பொருளை உணர்தல் வேண்டும். ஓரறிவு உயிர்ப் பொருளாகிய தாவரத்திலுங்கூட, நிலத்திலிட்ட விதை, தன் உய்தி கருதி, மண்ணைப் பிளந்து கொண்டு மேல்நோக்கி வளர்ந்து வருவதைக் காண்கிறோம்.

ஆன்மாக்கள் தொடர்ந்து உய்தி அடைய வேண்டும் என்ற விருப்பால்தான், மிருக நிலையில் படுக்கையாக இருந்த முதுகு எலும்புக் கோவையைச் சிவபெருமான் நிமிர்த்தி, உயர்ந்து நோக்குகிற மனித உடலுக்கு நம்மை மாற்றி அருளினான். நாமும் அதைப் பயன்படுத்தி மேல் நோக்கிய பயணத்தை மேற் கொள்ளுவதே அறிவுடைமை. நாம் உய்தியை நாடாதிருப்பது, நமக்கு ஊனம் என்பார் ஞானசம்பந்தர்.

மனம் என்ற ஆறாவது அறிவுக் கருவியைப் பற்றிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தண்டமிழ்ச் சான்றோர்கள் செவ்விதே சிந்தித்திருக்கின்றனர். அதற்குத் தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் நூல்களே சான்று பகர்கின்றன. அந்த மனத்தைப் பயன்படுத்தி, சீராகச் சிந்தித்து, செவ்விய நெறி நின்று, செம்பொருளின் பெருமையும் நுண்மையும் உணர்ந்து உய்தி அடைதல் வேண்டும்.

நாம் அரிதிற் பெற்றிருக்கும் மனம் என்ற ஆறாவது அறிவுக் கருவியைக் கொண்டு, புற வழியிலேயே முழுவதும் நாட்டத்தைச் செலுத்தாமல், சிறிதளவேனும் சிவபரத்தை நோக்கி அகவழியில் எண்ணங்களைக் குவித்து, எல்லாக் காரியங்களையும் செய்வதற்குப் பயிலுதல் வேண்டும். அதுவே உண்மையான வாழ்வியல் நெறியாகும்.

மெய்யுணர்வு பெறுதல்

இன்பதுன்பங்கள் அனைத்தையும் ஒப்ப நோக்கி, உள்ளக் கிளர்ச்சியின்றிச் சமமாகப் பாவித்து, மனமகிழ்வோடு ஏற்றுக்கொள்ளுவதையே இருவினை ஒப்பு என்பர். இந்நிலையில் இன்பதுன்பங்களுக்கான நியாயமான காரணங்களை எண்ணிப்பார்க்கும் மனப் பக்குவமும், தெளிந்த அறிவும் உயிருக்கு ஏற்படுகிறது. ஆகவே ஆன்மாவின் படிமுறை வளர்ச்சியில் இதனை ஒரு முக்கிய கட்டமாகக் கருதுவர் ஆன்றோர். மெய்யுணர்வு தோன்றும்போது ஆன்மாவின் சிந்தனையில் பல உயர்-பண்புகள் தலை எடுக்கின்றன.

1. இன்பமோ, துன்பமோ இரண்டுமே நாம் முன்செய்த நல்வினை-தீவினைகளின் பயன் என்ற மனத்தெளிவு ஏற்படுகிறது.
2. இன்ப விளைவுகளை எவ்வித ஈடுபாடுமின்றி நுகர்கிற பக்குவம் ஏற்படுவதால், அவ்வண்ணமே துன்ப நிகழ்வுகளாலும் ஆன்மா துடுக்குறுவதில்லை.
3. துன்பத்தை வெறுப்பின்றி நுகர்ந்து தொலைப்பது ஒன்றே, அத்துன்பத்தினின்றும் விடுபடுவதற்கான ஒரே வழி என்ற உணர்வு மேலிடுகிறது.
4. நிலையற்றுச் சுழலும் உலகியல் பொருள்களைப் போலவும், பகலும் இரவும் மாறிமாறி வருவது போலவும், இன்ப விளைவுகளைத் தொடர்ந்து துன்பத்தின் தாக்கமும் அத்

துன்பத்தை அடுத்து இன்பமுமாக விரைவில் மாறிக் கொண்டே இருப்பதை அவ் ஆன்மாவால் உணர முடிகிறது.

5. துன்பத்தை நாமாகத் துடைக்கவோ, துரத்தவோ, களையவோ தன்முனைப்போடு முற்பட வேண்டியதில்லை. நம்மால் அதில் வெற்றி பெறவும் முடியாது என்பது அனுபவமாகிறது.

அவ்வாறு முனைவது, நாம் முன்னர்க்கூறியது போலப், பிறிதொரு புது வினையின் தோற்றத்துக்கு வாய்ப்பு ஆகிறது.

6. நாம் முன்னர்ச் செய்தது, குற்றம் எனப் பின்னொருகால் நாமே உணர்ந்து வருந்துகிற மனப்பக்குவம் ஏற்படுகிறது. மீண்டும் அக்குற்றத்தைச் செய்ய முனைதல் கூடாது. மனத்தால் நினைத்தலும் கூடாது என்ற மன உறுதி எழுகிறது. அத்தகைய சிந்தனையே அறிவின் வளர்ச்சிக்கும் ஆன்மீக எழுச்சிக்கும், மிகச் சிறந்த ஓர் உரமாக அமைகிறது.

7. இருள்சேர் இருவினையால் இன்பதுன்பங்களில் ஆன்மா எவ்வாறு அலைமோதியதோ அதே போன்று, அருள்வினை புரிந்து இறைவன் திருவருட் பேரின்பத்தில் நிலைத் திருப்பதற்காக, மெய்த்தவத்தில் ஈடுபடுகிறது.

8. வாழ்க்கை என்பது நாம் அனுபவிப்பதற்காக ஏற்பட்ட ஒன்றே. அனுபவம் என்பது புதிது புதிதாகப் பொருள்களை நுகர்கிற வெற்றுக் கேளிக்கை அன்று. முந்தை வினை களுக்கு ஏற்ற வகையிலே இயல்பாக வருகிற இன்ப துன்பங்களை அனுபவித்தல் (நுகர்தல்) என்பதே இதற்கு உண்மையான, சரியான பொருள் என்ற உண்மை தெளிவாகிறது.

9. சிவமூலத்தை ஆகம முறைப்படி ஆசான் வழிநின்று தியானம் செய்வதன் மூலம், பேரறிவுத்தானமாகிய பெரு மூளையை வளப்படுத்தி ஆன்மா உய்தி பெறுகிறது.

இன்று இந்த அளவில் நம் சிந்தனையை நிறைவு செய்வோம்; வினை நுகர்ச்சியும் வினை நீக்கமும் பற்றி நாளை சிந்திப்போம்'' என்ற கூறினேன்.

அன்பர்கள் இருவரும் வழக்கம்போல் நன்றியும் வணக்கமும் தெரிவித்து விடைபெற்றுச் சென்றனர்.

ஒன்பதாம் இயல் முற்றிற்று.

இயல் - 10

வினைகளை நீக்கும் முறைமை

(கட்டு நீத்தல்)

ஆன்ம சுத்தி

சிவசாமியும் குப்புசாமியும் அன்று மாலை சீக்கிரமாகவே வந்துவிட்டனர். அட்டாங்க வணக்கம் செய்து, திருநீறு பெற்றுப் பூசிக் கொண்டு விரிப்பின் மேல் அமர்ந்தனர்.

''நேற்றைய நம் சிந்தனையின்போது, உடல் வளர்ச்சியைப் போன்றே ஆன்ம வளர்ச்சியும், ஆன்ம சுத்தியும் முக்கியமானது என்றும், பேரின்ப நுகர்ச்சிக்கு உரியவர்களாகிய நாம் சிவாகமங்களின் மூலம் அறிந்துகொள்ளத்தக்க முதல் உண்மை இதுவே என்பதையும் தாங்கள் மிக எளிமையாகவும் நன்கு புரிந்துகொள்ளுமாறும் விளக்கியுள்ளீர்கள், ஐயா! மிகவும் நன்றி. இன்று ஆன்ம சுத்தி என்பதன் பொருளை உணர்த்தினால் பயனடைவோம்'' என்றனர் இருவரும்.

''ஆன்மா மும்மலங்களால் கட்டுண்டு அல்லலுறுகிறது. அம்மலங்களிலிருந்து விடுபட்டுத் தூய இறைத் தொண்டில் ஆன்மா ஈடுபடுவதே ஆன்ம சுத்தியாகும். மும்மலங்களுள் கன்ம மலமும் ஒன்று.

நுகர்ந்தாலன்றித் தொலையாதது வினை

ஆன்மா உடலாலும், மனத்தாலும், அறிவாலும் பலப்பல வினைகளைச் செய்கிறது எனவும், அவையே கன்ம மலம் எனவும் கண்டோம். பழங்காலம் தொட்டுச் சற்றுநேரம் முன்வரை நாம் அவ்வாறு செய்துள்ள வினைகளோ அளவற்றன. வினை செய்தவனே அவ்வினையின் பயனை நுகரவேண்டும் என்பது நியதி. அங்ஙனம் நுகர்ந்து தொலைத்தாலன்றிக் கன்ம மலம் தொலையாது, வினை மாளாது. இப் பிறப்பில் அவ்வாறு நுகர்ச்சிக்காக எடுத்துக் கொண்ட சிறு அளவு வினையே பிராரத்தம் (ஊழ்) ஆகும்-இவை எல்லாம் நாம் முன்னரே கண்ட செய்திகள்.

நாம் உணவு உண்கிறோம்; அஃது ஒரு வினை; அதற்கு இருவகைப் பயனும் உண்டு, உண்ட உணவு குருதியாக

மாறுவது நல்ல பயன்; அந்தக் குருதியின் மூலம் நாம் ஆற்றலைப் பெறுகிறோம். உணவின் தீயபயன் வினை-எச்சமாக (மலமாக) நம் குடலுக்கு இறங்குகிறது.

தொலைந்தாலன்றி கிடைப்பதில்லை பேரின்பம்

ஒருவர் உட்கொண்ட உணவின் எச்சம் குறிப்பிட்ட காலத்தில் மலமாகக் கழிக்கப்படுதல் வேண்டும்; மலம் நீங்கினால்தான் இன்பம்; இன்றேல் உடல் நலம் கெட்டு, நோய் தோன்ற வாய்ப்பாகும். வினைக்குரிய பயனும் அதைப்போன்றுதான். அவை உரிய காலத்தில் நுகர்ந்து கழிக்கப்பட வேண்டும்;

கையிலிருக்கும் உணவு சாப்பிடச் சாப்பிடக் குறைவது போல, நாம் செய்யும் வினைகளும் அவற்றின் பயன்களும், அவற்றை நாம் நுகர நுகரக் கழிந்து, இறுதியில் தீர்ந்து விடுகின்றன. அப்பொழுதுதான் உயிர் இன்பத்தில் திளைக்கத் தலைப்படும்.

செய்தவனே நுகர வேண்டும்

உணவு உண்டவராலேயே மலம் கழிக்கப்படுதல்போல, வினை செய்தவராலேயே அதன் பயன் நுகரப்படுதல் வேண்டும் என்பது நியதியாகும்.

அங்ஙனம் உணவு உண்டு, பின்னர் மலத்தைக் கழித்தவர், தம் உடம்பை நன்னீர் கொண்டு கழுவினால் உடம்பு தூய்மை யுறுகிறதன்றோ? அதேபோன்றுதான் கன்ம மலத்தின் வாயில் களாகிய மனத்தைத் தூய்மை செய்வதன் மூலமும், அறிவைத் தூய்மை செய்வதன் மூலமும் கன்மத்தைக் கழித்து, அருள் மழையில் ஆன்மாவைக் குளிக்கச் செய்தல் வேண்டும்.

உள்ளமும், உயிரும் தூய்மையுறுதல் வேண்டும். உள்ளம் என்பது இங்கு மனத்தையும், உயிர் என்பது ஆன்மாவையும் குறிக்கும். மனத் தூய்மையை தத்துவ சுத்தி என்றும், உயிர்த் தூய்மையை ஆன்ம சுத்தி என்றும் கூறுவர்.

ஆன்மா அவ்வாறு தூய்மையுறுதலையே ஆன்ம-சுத்தி எனச் சாத்திரங்கள் சிறப்புரைக்கும். அதைப் பற்றி விரிவாகப் பிறகு சிந்திப்போம்.

புதுவினை ஈட்டம் தவிர்க்க வேண்டும்

ஆறுவது சினம்

''நடைமுறையில் பலர் மற்றவர்களைத் திட்டுவதும், கோபமாகச் சபிப்பதும், அவர்களைத் தண்டிக்குமாறு இறைவனிடம் முறையிடுவதும் காணுகிறோமே. அவர்கள் அவ்வாறு செய்வது அவர்களுடைய ஆன்ம சுத்திக்கோ, வாழ்வியல் நெறிக்கோ பொருந்துமா? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

''பிராரத்தம் என்ற நுகர்-வினைகளைக் கழித்தால் மட்டும் போதாது; புதுவினைகள் வாராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் தமக்குத் துன்பம் தரும்போது அவர்களைத் திட்டுவதும், கடுமையாகத் தண்டிக்குமாறு கடவுளிடம் முறையிடுவதும் பொதுவான உலக வழக்கு. அஃது ஓர் சிறப்பற்ற செயல், மற்றவர்கள் செய்வது பிழையானதாக இருப்பினும், அவர்களைத் திருத்தி அவர்களுக்கும் நல்லறிவினையும். நற் சிந்தனைகளையும் அருளுமாறு கடவுளிடம் வேண்டிக் கொள்ளலாம்; அதுவே ஆன்றோர் செயல். அதுவே சிறப்பான தாகும்.

இறைவனே ஒவ்வொருவருக்கும் இன்பதுன்பங்களை ஊட்டுகிறான்; அவரவர் நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே அவை ஊட்டப்படுகின்றன. அங்ஙனம் ஊட்டுவதற்கு அவன் மற்றவர்களைக் கருவியாகக் கொள்ளுகிறான். ஆகவே துன்பம் தருபவர்கள் அவர்களாகத் தருவதில்லை; அவர்கள் வெறும் கருவியே; பின்னாலிருந்து அவர்களை இயக்குபவன் இறைவனே என்ற உணர்வு மேலிடவேண்டும். 'எய்தவன் இருக்க, அம்பினை நோகலாமா?' என்ற பழமொழியை நீங்கள் அறிவீர்களே!.

மேலும், நம்முடைய தீவினைக்கு ஏற்பத் துன்பத்தைத் தருவதும், மற்றவர்களுடைய நல் வினைகளுக்குத் தக்கவாறு அவர்களுக்கு இன்பத்தை நல்குவதும் இறைவனின் பஞ்ச கிருத்திய செயல்களுள் ஒன்றாகும். நமக்கு ஊறு செய்து, தமக்கு ஒரு முன்னேற்றத்தைத் தேடிக்கொள்ளும் மற்றவர்களைத் தண்டிக்குமாறு இறைவனிடம் வேண்டுவது, அவனுடைய பஞ்சகிருத்தியச் செயற்பாட்டில் நாம் தேவையில்லாது குறுக்கிடு வதாக அமையலாம். அவ்வாறு குறுக்கிடுவதன் மூலம் தெய்வக்

குற்றத்தையும் செய்வது, புதிதாக ஒரு வினைக்கும் வித்திடுவதாகும்.

அடுத்து, மற்றவர்களைத் தண்டிக்குமாறு இறைவனிடம் கூறுவது முறையற்ற செயலாகும்; காரணம், நாம் ஏவல் புரிவதற்கு, இறைவன் நமக்கு அடிமையுமல்லன். நாம் அவனுக்குத் தலைவருமல்லர்''

இன்னாசெய்தாரை ஒறுத்தல்

'நமக்கு யாரேனும் கேடு செய்து துன்பம் விளைவித்தால், அவ்வாறு துன்பம் விளைவித்தவர் பற்றிய சிந்தனை அடிக்கடி நம் நினைவுக்கு வருகிறதே. மன உளைச்சலையும் தருகிறதே, அவ் உணர்வுகளிலிருந்து விடுபடுவதும் அவ்வளவு எளிதாக இல்லையே! அத்தகைய சூழலிலிருந்து விடுபடத் தாங்கள் ஒரு நல்ல வழி காட்டுங்கள், ஐயா!' என்றார் குப்புசாமி.

இத்தகு சூழலிருந்து விடுபட்டு, இன்பப்பாதையில் பீடு நடை போட நம் அருளாளர்கள் சீரிய வழிமுறைகள் சிலவற்றை அறிவுறுத்தியுள்ளனர்; அவை எல்லாமே எல்லோர்க்கும் பயன்படும் என்றாலும், அவற்றின் ஒவ்வொரு வகைச் சிந்தனை ஒவ்வொருவருக்கு நடைமுறையில் எளிதாகும்.

மடைமாற்றம் செய்வது என்பது பொதுவான ஓர் உத்தி. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வருகிறது; மிகுதியான நீர் பாய்வதால் நிலத்துக்கும் பயிர்களுக்கும் நன்மையில்லை என வேளாண் துறையினர் கருதுகிறார்கள்: ஆற்று வெள்ளத்தைத் தடுக்க வேண்டும்; அவர்கள் என்ன செய்வார்கள்? ஆற்றின் போக்கிலுள்ள மற்றோர் மடையைத் திறந்து விட்டு, நீர்ப் போக்கைத் திசை திருப்பி, இந்த மடையை அடைப்பார்கள். இதனையே மடைமாற்றம் எனக் கூறுவர். இவ்வாறு செய்வது பயனுள்ள, பாதுகாப்பான, எளிய முறையாகும்.

அதேபோன்று, கெட்ட செயல்களைப் பற்றியோ, கெட்டவர் களைப் பற்றியோ எண்ணங்கள் தோன்றி இடர்ப்படுத்தும் போதெல்லாம், சிந்தனையை வேறொன்றின்பால், சிறப்பாகச் சிவத்தின்பால் திருப்புவதன் மூலம் இத்தகு மடைமாற்று உத்தியைக் கைக்கொண்டு வெற்றி காணலாம். இது பொதுவான ஓர் உத்தி. இதனைத் தொடர்ந்து, சில சிறப்பு வழிமுறைகளையும் பயிலுதல் வேண்டும்:

1. கேடு செய்தவனுக்கு, நாமும் திருப்பி கேடு செய்ய எண்ண வேண்டியதில்லை;

2. கேடுகெட்ட அந்த மனிதனை முற்றிலுமாக மறப்பதற்கே விரும்ப வேண்டும்;

3. அந்த மனிதனின் நிழலுருவம் நம் விதி-ஏட்டில் (சித்தத்தில்) முன்னரே எழுதப்பட்ட ஒன்று என்றும், (நியதிப்படி) அவனால் நமக்கு வரவேண்டியது வந்து விட்டமையால், கணக்கு நேராயிற்று என்றும் எண்ண வேண்டும்;

4. இன்பமோ துன்பமோ எதுவாயினும், அதன் நுகர்ச்சியோடு, அந்த வினைக் கணக்கு முடிந்தது எனச் சிந்திக்க வேண்டும்.

5. விளைந்த துன்பங்களையோ, அதனைக் கொடுத்த மனிதனையோ, அக்கேடுகள் நிகழ்ந்த சூழலையோ மீண்டும் மீண்டும் அசைபோடுதல், செத்த பாம்பை அடிப்பதற்கு ஒப்பாகும். அதற்கு உயிரூட்டி மீண்டும் மீண்டும் விதி ஏட்டில் வினைகளையும் விளைவுகளையும் தொடர்ந்து சுமக்க வேண்டியதில்லை.

6. ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார்; அந்தப் பாடம் முடிந்ததும் முன்னர் எழுதியதை அழித்துவிட்டுப் புதிதாக வேறு பாடத்தை எழுதுகிறார் அன்றோ? தலையினுள் இருக்கும் விதி ஏட்டிலிருந்து (சித்தத்தில்), கெட்டவனின் உருவத்தை அழித்துவிட்டு, அதற்குப் பதிலாகச் சிவலிங்கத் திருஉருவைச் சிந்தித்துச் சிந்தித்து, ஆழமாக, அழுத்தமாக அங்குப் பதிந்து கொள்ளுவது பெரும் பயன் நல்கும். அதனையே, 'சித்தத்தைச் சிவன்பாலே வைத்தல்' என்றனர்.

7. நம்மை நாமே 'சத்திய சோதனை' செய்து கொள்ளுவதன் மூலம், நாம் செய்த பிழைகள், மாற்றார் செய்த கொடுமைகள் விதியின் விளையாட்டு, இறைவனின் சோதனை, அருள் புரிந்து ஆட்கொள்ளுவதற்காகச் சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் என்றவாறு, உண்மைகள் அனைத்தும் அப்போது நம் உள்ளத்தில் தெளிவாகும். துன்பம் கண்டு துவளமாட்டோம்; மாறாக, பிறவி-நோய்க்கு வைத்திய நாதன் கொடுத்த 'கைப்பு-மருந்து' அது, - என்றே மனம் மகிழ்வோம்.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள். 423)

என்ற வள்ளுவர் வாக்கில் மெய்ப்பொருள் என்பது இக்கருத்துப் பற்றியேயாம்.

8. இறைவனால் படைக்கப்பட்ட உலகப் பொருள்கள் யாவற்றையும் நாம் இயற்கை எனப் போற்றுகிறோம். தன் படைப்பு ஒவ்வொன்றிலும் அவன் ஓரோஒரு மெய்ப்பொருள் உண்மையை (தத்துவத்தை)ப் புதைத்து வைத்துள்ளான் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

இருவினை ஒப்பு

''இருவினை ஒப்பு எனப் பேசப்படுகிறதே! அதற்கு உண்மையான பொருள் என்ன? ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

''அரியணையை ஏற்றுக்கொள்க' என்ற போழ்தும், 'அரியணை துறந்து ஆரண்யம் செல்க' என்ற போழ்தும் எவ்வித மன வேறுபாடுமின்றிச் சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையை ஒத்திருந்ததாம் இராமனின் முகம். அதேபோல் வாழ்வில் இன்பமோ துன்பமோ எது நேரினும், இரண்டையும் சமமாகப் பாவிக்கும் மனப்போக்கு வேண்டும் என்பது கருத்து.

நிலப்பரப்பில் மிக உயர்ந்த இடமாக மலைத் தொடர் களைப் படைத்த இறைவன், இரண்டு பெரிய மலைச் சிகரங் களுக்கு நடுவிலே ஆழமான பள்ளத்தாக்கினையும் வைத்தான். சிகரங்களின் உயரத்திற்கு ஏற்பவே, இடைப்பட்ட பள்ளங்களின் ஆழமும் அமைகின்றன. அதேபோல் பள்ளத்தாக்குகளின் ஆழத்துக்கு ஏற்பவே மலைகளின் உயரமும் காணப்படுகிறது. இங்ஙனம் உயரமான மலையும் ஆழமான மடுவும் இயற்கை என்பதை நாம் நன்கு அறிவோம்.

அதேபோல் தான், துன்பமும் இன்பமும் யாவர்க்கும் மாறிமாறியே வருகின்றன; இதுவே பொதுவான நியதி. இவ் உண்மையை நாம் முதற்கண் தெளிதல் வேண்டும் முந்திய துன்பத்தினால் ஏற்படுகிற அயர்ச்சிக்கு மறுதலையாகவும், அடுத்துவரும் துன்பத்திற்கு முன்னோடியாகவும் அமைகிறது இன்பம்.

துன்பம் தோன்றிச் சிறிது பொழுது இடர்ப்படுத்திப் பின்னர் மறைவதைப் போன்று, இன்பமும் தோன்றி மகிழ்வூட்டிப் பின்னர் விரைவாக அழிந்து விடவே செய்கிறது. எனவே துன்பத்தைப் போன்று, இன்பமும் நிலையற்ற ஒன்றுதான்; வினையின் வன்மை மென்மைக்கு ஏற்ப இன்பதுன்ப அனுபவங் களின் கால எல்லைகள் நீட்டியும், குறுகியும் வேறுபடு கின்றனவேயன்றி, இன்ப-நுகர்ச்சியாயினும் சரி, துன்ப-நுகர்ச்சி யாயினும் சரி, இரண்டுமே அதததற்குரிய கால எல்லை வரை இருந்து பின்னர் மாறுபடுவனவே.

உணர்ச்சிக்கு அடிமையாவது உயிரினத்தின் பொது இயல்பு. வாழ்வில் ஏதேனும் ஒரு சிறு இன்பத்தைக் கண்டாலே களி பேருவகையோடு மனித மனம் துள்ளிக் குதிக்கிறது. இன்ப நிகழ்ச்சிகளையே மீண்டும் மீண்டும் அசைபோடுகிறது. அந்த இன்ப உணர்வுகளிலேயே அழுந்திக் காலத்தையும் கழிக்கிறது.

அத்தகைய மனம் வேறொரு சமயம் துன்பச் சூழலில் சிக்கும்போது, துன்ப நிகழ்ச்சிகளை மறுபடி மறுபடி எண்ணிப் பார்ப்பதும், துன்பச் சுமை தாங்க முடியாமல் அல்லலுறுவதும், அத்துன்ப உணர்விலிருந்து மீளமுடியாமல் தவிப்பதுமே அதற்கு இயல்பாகிறது.

இன்பத்தை இயல்பு எனக் கருதி அமைதியாக இருக்கக் கற்றுக்கொண்டால், துன்பமும் இயல்பானதொரு நிகழ்ச்சியாகித் தொல்லை தாராது ஒழியும். ஆகவே வாழ்வில் இன்பம் வரினும் துன்பம் நேரினும் இரண்டையும் சமமாகப் பாவித்து, மன அமைதியோடு இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என ஆன்றோர் அறிவுறுத்துகின்றனர்.

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் (குறள். 629)

என்பார் வள்ளுவப் பெருந்தகை.

நல்வினை-தீவினைகள் இரண்டுமே பிறப்புக்கு வித்து என்றும், அவற்றிற்குரிய பயனாகிய இன்பதுன்பங்கள் இரண்டுமே நிலையற்றன என்றும் கருத்திற்கொண்டு, இரண்டை யும் வேறுபாடின்றி ஒப்ப நோக்கி, உள்ளத்தை ஒருநிலைப் படுத்துதலை இருவினை ஒப்பு என மொழிந்தனர், சைவ அருளாளர்கள்.

அத்தகையோர்க்கே ஆணவமலக் கட்டிலிருந்து விடுதலை (மலரிபாகமும், வீடுபேறும்) கிடைக்கும் என்றும், அவர்கள் சிவசத்தியின் அருள்நோக்குக்கும் (சத்திநிபாதத்துக்கும்), அதனைத் தொடர்ந்து சிவபெருமானின் திருவடிப் பேற்றிற்கும் (முத்திப் பேற்றுக்கும்) உரியர் ஆவர்-என்றும் சைவ ஞானநூல்கள் இயம்புகின்றன. (விடுதல் + பெறுதல் = வீடுபேறு)

இறைப்பணி நிற்றல்

''ஐயா! இம்மை, மறுமை, அம்மை என்ற நம்முடைய முத்திற வாழ்வு பற்றியும் இருவினைஒப்பு-பற்றியும் தாங்கள் விளக்கியவை, சிந்தனைக்கு நல்ல விருந்தாயின. சிவஞானபோதம் என்ற சைவசாத்திர நூலில் இறைப்பணி நிற்றல் எனக் கூறப் படுகிறதே, அதைப் பற்றிச் சற்று விளக்கினால் பெரிதும் பயனடைவோம்'' - என்றார் குப்புசாமி.

இறைப்பணி நிற்றலாவது, ''அவனன்றி ஓரணுவும் அசையாது- என்ற உறுதிப்பாடு கொள்ளுதல். அனைத்தும் சிவபெருமான் விருப்பப்படியே நிகழ்கின்றன; அவனது முழுமையான பேரறிவு தான் நம் ஆன்மச் சிற்றறிவை இயக்குகிறது; அவனே நம்மை ஆட்டுவிக்கிறான், நாம் அதற்கு ஏற்பவே ஆடுகிறோம், 'நம்முடைய செயல்திறன் - என்று கூறுமாறு எதுவும் இல்லை'' என சிவபரத்தின் திருவடிகளில் உறுதியாக நிற்றலையே' இறைப்பணி நிற்றல்' எனச் சைவ சாத்திரங்கள் அறிவுறுத்தும்.

உடம்பு, உணர் கருவிகள், உலகப்பொருள்கள், நுகர்ச்சி வாய்ப்புகள் ஆகிய யாவும் கூடி இருந்தும், அவற்றோடு, தாம் கூடாமல் நின்று, புறப்பொருள்களின்பால் பற்றினை விட்டு, சிவபெருமான் திருவடிப்பேற்றிலேயே நாட்டம் மிக்கோராய், இறைப்பணி நிற்போர், நிட்டையாளர் ஆவர்.

இதைப் பற்றிய மேலும் சில மெய்ப்பொருள் கருத்துக் களை அறிந்து கொள்ளுதல் பெரும் பயன் நல்கும்.

சிவாலயங்களில் அம்மன் திருக்கோயிலின் பிரகாரத்தில் (கோஷ்டத்தில்) இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்ற மூன்று திருவுருவங்களைக் காணலாம். அவை சிவபெருமானின் முத்திறச் சக்திகளாகும். அருட் சத்தியாகிய பராசத்தியின் பல்வேறு ஆற்றல்கள் எனக் கொள்ளுதல் வேண்டும்.

அவற்றைப் போன்றே, உயிர்களாகிய நமக்கும் இச்சை, ஞானம், கிரியை என்ற முத்திற ஆற்றல்கள் உள்ளன. சிவபெருமான் தன் அருட்சத்தியைக் கொண்டு உயிர்களாகிய நம் ஆன்ம-சித்-சத்தியை எவ்வாறு இயக்குகிறான் எனச் சிந்திப்போம்.

இச்சா சக்தி

சிவபெருமான் கருணைக்கடல்; அவனுடைய அளப்பரிய விருப்பம் யாவும் ஆன்மாக்களாகிய நாம் ஒவ்வொருவரும் மேனிலை அடைந்து இன்புற்றிருக்கவேண்டும் - என்பதே. அதற்காக அவன் தன் விருப்ப-ஆற்றலாகிய இச்சா-சக்தியைக் கொண்டு, நாம் நுகர வேண்டிய வினைகளுக்கு ஏற்ப, மனத்தை *(Faculty of mind)* உசுப்பி, விருப்பு-வெறுப்புகளைத் தூண்டுகிறான்.

ஞானசக்தி

அருளே வடிவமான அவன், அனைத்தையும் ஒருசேர முழுமையாக அறியவல்ல பேரறிவாளன்; அவனை முற்றுணர்வினன் எனச் சாத்திரங்கள் போற்றும். ஆன்மாக் களாகிய நாமும் அறிவுப் பொருள்களே என்றாலும், நம் அறிவு ஒருபுடை அறிவு (ஏகதேச ஞானம்)

நமக்கு ஞானத் தெளிவூட்டி ''நல்லது எது? கெட்டது எது? மெய்பொருள் எது? எதைச் சார்ந்தால் நிலையான அறிவானந்தத்தைப் பெறலாம்?'' என்பனவற்றை எல்லாம் நமக்கு உணர்த்த விரும்புகிறான் அவன். அதற்காக அவன் தன் அறிவு-ஆற்றலாகிய ஞான சத்தியைக் கொண்டு நம் புத்தியில் *(Sensory Nerves)* அறிவைத் தூண்டுகிறான்.

கிரியா சத்தி

பேரறிவாளனாகிய அவன், நம்மைத் துன்பச் சூழலிருந்து விடுவிக்க விழைகிறான்; ''நாம் பொய்ம்மையில் உழன்று பொழுதினை வீணாக்காமல், மெய்ப் பொருள் உணர்வோடு வாழ வேண்டும், வளரவேண்டும், இன்புற்றிருக்க வேண்டும், அந்த முறையிலே செயற்பட வேண்டும்'' என்பதில் அவன் தனி அக்கறை கொள்கிறான். அதற்காக அவன் தன் செயல்-ஆற்றலாகிய கிரியாசத்தியைக் கொண்டு, நம் அகங்காரத்தைத் *(Motor Nerves)* தூண்டி நம்மைச் செயல்பட வைக்கிறான்.

நுகர்ச்சி கால அடைவில் வருமா?

''வினைக்குரிய விளைவுகள் ஒன்றன் பின் ஒன்று என வரிசையாகக் கால அடைவில் வருமா? அன்றி, மாறி மாறி வருமா? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

''முன்னர்ச் செய்த வினை முன்னரும் பின்னர்ச் செய்த வினை பின்னரும் பயன்தருவதாகக் கொள்ளுதல் கூடாது. முன்பின் மாறி மாறிப் பயன் தருவதே பெரும்பான்மை.

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்பது முதுமொழி ஆயினும் வினைப்பயன் கூடி வருகிற காலம் ஒரேமாதிரியாக இருப்பதில்லை; காலையில் கத்தி ஒன்று கீறினால், காயம் ஏற்படுகிறது, உடனே இரத்தமும் வருகிறது, வலிக்கவும் செய்கிறது; மாலைவரை அது காத்திருக்கவில்லை யன்றோ? அதேபோல்தான் சில வினைகள், செய்த மறு நொடியிலேயே தமக்குரிய பயனைத் தரும். மற்றும் சில வினைகள் அப்போது பயன் தராமல், மறுபிறப்புகள் வரை எஞ்சி நிற்கின்றன. ஆகவே, வினை-ஈட்டம் என்பது முன்னால் நிகழ, அதற்குரிய பயன்-ஊட்டம் என்பது பின்னால் விளைகிறது; இதுவே முதுமொழியின் கருத்து.

ஒரு எடுத்துக்காட்டின் மூலம், இவ்வுண்மையை தெளியலாம்; நம் வீட்டின் புழக்கடைத் தோட்டத்தில் சிறு பாத்தி ஒன்று அமைக்கிறோம், கீரை விதைகளை அப்பாத்தியில் தூவிச் சிறிது நீர் தெளிக்கிறோம். அதே முகூர்த்தத்தில் வாழைக் கன்றுகள் சிலவும், தென்னம் பிள்ளைகள் சிலவுமாக அங்கு நடுகிறோம். இம் மூன்று பயிர்களும் ஒரே நேரத்தில்தான் நடவுசெய்யப்படுகின்றன. என்றாலும், அவை பயன் தருகிற முறைமை காலத்தால் வேறுபடுகிறது. கீரை ஓரிரு வாரங்களில் உணவுக்கு ஆகிறது; வாழைமரம் பழம் தருவதற்குச் சில மாதங்கள் ஆகின்றன; தென்னையோ சில ஆண்டுகளுக்குப் பிறகே பயன் தரத் தொடங்குகிறது. இதேபோன்றுதான் வினை களும் அதனதன் வன்மை, மென்மைகளுக்கு ஏற்பப் பக்குவப் பட்டு, முன்பின்னாகப் பயன் தருவது இயல்பாகிறது.''

வரம் கேட்டல்

''வினைத் துன்பத்திலிருந்து விடுவிக்குமாறு கடவுளிடம் வரம் கேட்கலாமா? ஐயா!'' என வினவினார் குப்புசாமி.

''பொதுவாக எல்லோருக்குமே கடவுளிடம் வரம் கேட்கும் பழக்கம் இருக்கிறது. அஃது அவ்வளவு சிறப்பு அன்று. ஒரு குழந்தையின் தேவையை அதன் பெற்றோர் அறிந்து, நிறை வேற்றுவர் அன்றோ? அதுபோல் 'நமக்கு எது தேவை? எது

தேவையில்லை?'' என்பதெல்லாம் இறைவன் நன்கு அறிவான். உரியவற்றை உரிய நேரத்தில், உரிய அளவில், உரியவர் மூலம் அவன் நமக்குத் தந்தருளுகிறான் என்பதே உண்மை.

சிற்றறிவினராகிய நாம் வரம் கேட்பதில்கூட பிழை செய்கிற வாய்ப்புகள் மிகுதி. அவன் தர இருந்தது ஐந்து கோடியாக இருக்கும். நாம் ஐம்பது இலட்சத்தையோ, ஐம்பது கோடியையோ கேட்டுக் கொண்டிருப்போம். ஒன்று குறை, மற்றது மிகை. கோடியைக் கேட்பதற்குப் பதிலாக வாய் உளறித் தகாத வேறு ஒன்றைக் கேட்டாலும் அதையும் அவன் தருவான்; அஃது குற்றமாகி விடும்''.

''ஐயா! குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அடியேனுக்கு ஒரு சிறு ஐயம். இடர் களையுமாறு இறைவனிடம் விண்ணப்பிக்கிற தேவாரத் திருப்பதிகங்களும் உள்ளனவே அவை யாவும் வரம் கேட்பது ஆகாதா? இஃது பிழையான சிந்தனை எனில் பொறுத் தருள வேண்டுகிறேன்'' என விண்ணப்பித்தார் குப்புசாமி.

''வாழ்க்கை என்னும் நெடிய வழியில் இடர்கள் என்பவை ஆற்று வெள்ளம் போன்ற தடைகள். அவற்றைக் கடந்து இன்பநிலையாகிய அக்கரைக்குச் செல்லவேண்டும். அதற்கு ஒரு தோணி வேண்டும், அல்லது நீர் மேல் நடக்கும் வித்தை தெரிய வேண்டும், அல்லது நீரின் ஆழத்தையும் வேகத்தையும் குறைத்து, ஆற்றைக் கடக்கும் வரை நீரோட்டத்தைச் சிறிது நேரம் நிறுத்தி வைக்க வேண்டும். இவை எல்லாம் ஆற்று வெள்ளத்தைக் கடத்தற்கு உள்ள உத்திகள்.

இவற்றில் ஏதோ ஒன்றின் மூலம் தமக்கு நல்லருள் புரிய வேண்டும் என்றுதான் அருளாளர்கள் விண்ணப்பித்தார்களே தவிர, வெள்ளம் என்ற இடரையே வற்றி ஒழியுமாறு வரம் கேட்கவில்லையே! திருக்கொள்ளம்பத்தூர், திருவையாறு போன்ற திருத்தலங்களில் ஞானசம்பந்தருக்கும், சுந்தரமூர்த்திக்கும் சிவபெருமான் அருளிய முறை அத்தன்மையவே. ஆகவே வினைகளை நீக்குமாறு நாமே இறைவனிடம் கேட்பது பொருந்துமாறு இல்லை''.

''வரமே கேட்பதில்லையாயின், ஆலயங்களில் இறைவனிடம் என்ன வேண்டுவது? ஐயா'' என்ற மற்றொரு வினாவை எழுப்பினார் சிவசாமி.

சிவபெருமானின் இச்சா சத்தியைக் கொண்டு நம் இச்சைகளைத் தூண்டி, அவன் திருவடிகளை இடையறாது சிந்தித்திருப்பதாகிய விருப்பத்தையே அவனிடம் இரந்து, வரமாகக் கேட்கலாம்; அவன் ஞான சத்தியைக் கொண்டு நம் ஞானத்தைத் தூண்டி விளக்கியருளுமாறு கேட்கலாம். அவன் கிரியா சத்தியைக் கொண்டு நம் செயல்கள் செம்மையுறுமாறு வேண்டலாம்.

மெய்ப்பொருளாகிய சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து இருப்பது ஒன்றே, ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங் களின் வலிய கட்டிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளு வதற்கான சீரிய வழியாகும்.

வினை நீக்கத்தில் இறைவனின் அருளிப்பாடு (சத்திநிபாதம்)

''ஐயா! எனக்கு வெகு காலமாகவே ஓர் ஐயம் தாங்கள் தான் தீர்க்க வேண்டும்; சிவாலயங்களுக்கு மக்கள் கூட்டம்-கூட்டமாக நிறையவே வருகிறார்கள். எனினும் அவர்கள் அனைவருமே இன்பச் சூழலில் வாழ்வதாகக் காணப்பெற வில்லையே!........

இன்பத்துக்கு முதற்காரணம் ஊழ் என உரைத்தீர்கள், துணைக்காரணங்கள் பற்றியும் விளக்கினீர்கள். இவற்றை எல்லாம் கடந்து, உய்வதற்கு ஆன்மா யாது செய்ய வேண்டும் என்பதை உணர்த்த வேண்டுகிறோம், ஐயா!'' என விண்ணப் பித்தார் குப்புசாமி.

''நன்று வினவினீர்கள்; மகிழ்ச்சி, நலமுடன் வாழ்க! முதற் காரணம், துணைக் காரணங்களோடு நிமித்த காரணன் என்ற மூன்றாவது காரணமும் உண்டு என்பதை முன்னரே கூறியுள்ளோம்.

மட் குடத்துக்கு முதற்காரணம் மண்; துணைக் காரணங்கள் தண்டும் சக்கரமும்; நிமித்த காரணன் குயவன். அவனின்றி மண்ணிலிருந்து அக்குடம் அவ் உருவினைப் பெறமுடியாது.

அதேபோன்று ஆன்மாவின் இன்ப நுகர்ச்சிக்கு முதற்காரணம் ஊழ்வினை; துணைக்காரணங்கள் ஆணவ, மாயா மலங்களும், சிவ-மறைப்பு-ஆற்றலும், மற்றும் மாயாகாரிய உலகியற் பொருள்களும் என்பதையும் கண்டோம். ஊழ்வினைக்கு ஏற்ப

இன்பதுன்பங்களை ஊட்டுபவள் சிவசத்தி என்பதையும் சிந்தித்தோம்.

இறைவனே ஒவ்வொருவருக்கும் இன்பத் துன்பங்களை ஊட்டுகிறான்; அவரவர் நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே அவை ஊட்டப்படுகின்றன. மட்குடம் உருவாகக் குயவனின் உதவி இன்றியமையாதது. அதேபோல் வினைகளைக் கொண்டு சிற்றின்பத்தையோ, வினைகளை நீக்கிப் பேரின்பத்தையோ ஆன்மாக்கள் பெறுதற்குச் சிவபெருமான் திருவருள் மிகவும் வேண்டற்பாலதாகும்.

நிமித்த காரணனாகிய சிவபெருமான் கருணையே வடிவானவன். இருள்சேர் வினைகள் நீங்கினால்தான் ஆன்மா பிறப்பு-இறப்புச் சுழற்சியிலிருந்து விடுபடமுடியும்; அதற்காகவே அவன் மறைந்திருந்து ஆன்மாவுக்கு அதன் வினைகளை ஊட்டு கிறான்; தன் சத்தியையும் மறைந்திருந்து செயற்படுமாறு செய்கிறான்.

பொதுவாக வினைகள் இரண்டு வகையால் நீங்குகின்றன. ஒன்று, ஆன்மாக்கள் பழவினைகளை நுகர்ந்து தொலைப்பதாலும், புதுவினைகள் பற்றாதவாறு மெய்த்தவத்தில் ஈடுபடுவதாலும் நிகழ்வது. மற்றது, சிவபெருமான் திருவருளாகிய அறக்கருணை யாலும் மறக்கருணையாலும் நிகழ்வது. எனவே இன்பச் சூழலில் வாழ்வு அமைவதற்கு இடையறாச் சிவ வழிபாடும், உயர்ந்த சிந்தனைகளும், அன்பான எண்ணங்களுமே நல்ல வாயில்கள்.''

அறக்கருணையால் வினை நீக்கம்

''சிவபெருமானின் அறக்கருணை இயல்பு பற்றி அறிய அவாவுடையோம், ஐயா!'' என்றார் குப்புசாமி.

''குடியிருப்பு வீட்டில் ஒட்டடைகளைத் தட்டிவிட்டால் மட்டும் போதாது; தரையைப் பெருக்கித் தண்ணீர் விட்டுக் கழுவி, அழகாகக் கோலம் இட்டு, அங்கு ஒரு விளக்கும் ஏற்ற வேண்டும். அப்போதுதான் அங்கு இன்பம் பெருகும், மங்கல மனை மாட்சி தழைக்கும்.

அதேபோல் ஆன்மாவுக்கு இருள்-வினை நீங்கினால் மட்டும் போதாது; அஃது மனத்தால் தூய்மையுறுவதோடு,

தொடர்ந்து அருள்-வினையைச் செய்தால்தான் நிலையான அறிவானந்தப் பேற்றினில் திளைத்திருக்க இயலும்; அத்தகு அருள்-வினைகள் மெய்த்தவத்தால் மட்டுமே அமையும். அதற்காகவே செவ்விய நெறிமுறைகளை ஆகமங்களாக வடிவமைத்தான் சிவபெருமான். அந்நெறி நிற்போர்க்கு அருள் பாலித்தற்காக அதுகாறும் தன்னுள் மறைந்திருந்த சிவசத்தியை வெளிப்படுமாறு செய்கிறான். அவளும் அவன் ஆணைப்படி, அன்று சீர்காழிச் செம்மலாகிய ஞானசம்பந்தக் குழந்தைக்கு ஊட்டியதுபோல், பக்குவ ஆன்மாக்களுக்கு ஞானப்பாலை ஊட்டுகிறாள்.

ஆன்மாக்களின் உணர்வு-ஆற்றல் பலவாறு வேறுபட்டுக் கிடப்பதால், அதனதன் பக்குவத்துக்குத் தக்கவாறு தெளிவூட்டுதற் பொருட்டு அவன் தானே குருவாக வெளிப்படுகிறான். அவ்வாறு தான் அன்றொருநாள் திருப்பெருந்துறைக் குருந்த மரத்தின் அடியில் அருள்பாலிக்க வந்தான் இறைவன். திருவாதவூரர் அவன் திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டு,

உடலிடம் கொண்டாய், யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே..

என்றும்

சிக்-எனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே....

என்றும், திருவாசகப் பண் இசைத்து, அவனோடு ஒன்றித்து நின்றார். இதைத்தான் சைவ ஞான நூல்கள், ஏகனாகி இறைபணி நிற்றல் என அறிவுறுத்துகின்றன.

அறப்பணியும் அருட்பணியும் மேற்கொள்ளுகிற நல்வினை யாளர்களுக்குச் சிவபெருமான் பெரிதும் திருவருள் புரிகிறான். அத்தகையோரின் மனத்திலும், வாக்கிலும், செயலிலும் அவன் உடனிருந்து அவர்களை நன்னெறியில் ஆற்றுப்படுத்துகின்றான்.

மனத்தில் அருளுடைமை, பொறை, பிறர்பொருள் விரும்பாமை, செய்ந்நன்றி மறவாமை, வஞ்சகம் இன்மை, நடுவுநிலைமை நிற்றல், அழுக்காறும் அவாவும் ஒறுத்தல், பிறர் துயர் கண்டு இரங்கல் முதலிய சீலமிகு சிந்தனை களையே உண்டாக்குகிறான்.

அவர்களுடைய மனவளம் இவ்வாறிருக்க, அவர்தம் வாக்கினில் சிவபெருமான் உண்டாக்கும் சீர்மைகளோ, மிகவும்

உறுதி அளிப்பவையாம்: அவை தருமம் போதித்தல் புறம் கூறாமை, உண்மை பேசுதல், இனியன சொல்லுதல், வேதா கமங்களை ஓதுதல் முதலியன.

மேலும், சிவபெருமான் அடியவர்க்குக் உடம்பினைக் கொண்டு செயத்தக்க அருஞ் செயல்களாகத் தருமங்களைச் செய்தல், பூசை ஓமங்களைச் செய்தல், பகுத்துண்ணல், நந்தனவனம் குளம் கூவல் அமைத்தல், பள்ளி, மருத்துவமனை, திருமடம், திருக்கோயில் கட்டுவித்தல் முதலியவற்றை உணர்த்து கிறான். இவை எல்லாம் அவன் ஆன்மாக்களின்பால் கொண்ட அறக்கருணைகளாம்.

சிவபெருமான் திருவருளால் நம் வினைகள், தீயிடைப் பட்ட விறகுக் குவியல் போல், வெந்து ஆற்றல் இழக்கின்றன என்பது அப்பரடிகளின் அனுபவ வாக்கு:

சந்திரன் சடையில் வைத்த சங்கரன், சாம வேதி,
அந்தரத்து அமரர் பெம்மான்,ஆன் நல் வெள்ஊர்தியான் தன்
மந்திரம் நமச்சிவாய ஆக நீ(று)அணியப் பெற்றால்,
வெந்து அறும் வினையும் நோயும், வெவ் அழல் விற(கு)
இட்டு அன்றே![1]

(அப்பர் தேவாரம்)

ஒன்றி இருந்து நினைமின்!

'ஏகனாகி இறைபணி நிற்றலின் மூலம், வினை உள்ளிட்ட மூன்று மலங்களின் ஆற்றல்களையும் ஒடுக்கலாம்-எனச் சிவஞானபோதத்தில் மெய்கண்டசிவனார் அறிவுறுத்துகிறாரே. ஏகனாதல் என்பதற்கு அருளாசிரியர் கொண்ட அனுபவக் கருத்து பற்றிக் கூறினால் மிகவும் பயனுடையதாயிருக்கும். ஏகான்மவாதிகள் கூறுகிற ஏகமும் மெய்கண்டார் கூறும் ஏகனாதலும் எவ்வாறு வேறுபடுகின்றன? என்பது பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புகிறோம், ஐயா!'' என்றார் சிவசாமி.

''எக்காலத்தும் நிலை மாறாமல் உள்ள உண்மைப் பொருள்கள் என்ற அளவில் சிந்தித்தால், சிவபெருமான் ஒருவனே முற்றுணர்வினனாகிய பேரின்பப் பொருள். அக்காரணம் பற்றியே வேதங்கள் 'ஏகம் சத்' என முழங்குகின்றன.

எண்ணற்றனவாக உள்ள உயிர்களோ சிற்றறிவுப் பொருள் களாகவும், இன்ப-நுகர்ச்சியில் வேட்கையும் உரிமையும் உடையன

வாகவும் இருப்பன. ஆகவே, பரம்பொருளாகிய சிவனும், உயிர்க்கூட்டமாகிய சீவனும் வேறுவேறு இரண்டு பொருள்களே என்பது உறுதி. ஆயினும், கூடிநிற்கும் தன்மையால் அவை இரண்டும் ஒன்றேயாயிருக்கின்றன என்பது சைவக் கொள்கை. ஏகான்மவாதிகளோ, பரப்பிரமம் ஒன்றே உள்-பொருள் என்றும் மற்ற அனைத்தும் அதன் பிரதிபலிப்பே என்றும் கூறுவர். அஃது உண்மைக்குப் பொருந்தாது.

சைவ ஆகமங்களின்படி, ஆன்மா மெய்ப்பொருளுடன் ஒன்றுபட்டு நிற்பதை உணருகிற நிலையே ஏகன் ஆதல் எனப்படும்; சிவபெருமானும் தானும் வேறு வேறு பொருள் களாக இருந்தும் அவ்வாறு எண்ணமுடியாத அளவுக்கு ஒருங்கிணைந்து நிற்றல் என்பது பொருள். அதனை வடநூலார் நிட்டை என்பர். (நி-நிச்சயம்; ஸ்தா-நிற்றல்; நிஷ்டை = ஒரே சிந்தையோடு உறுதியாக நிற்றல், நிட்டை) அதன் மூலம் ஆணவம் எனப்படும் மூலமலம் தன் ஆற்றல்களை இழந்து விடுவதால், மற்ற இரண்டு மலங்களும் தாமே ஒடுங்கிவிடும் என்பது கருத்து.

குடும்பம் என்பது அன்பின் பிணைப்பு. ஒரு தந்தை தன் குழந்தையை வெளியே கூட்டிச் செல்லும் போது அக்குழந்தையை முன் நடத்தி, அவன் அதன் பின்னே செல்லுகிறான். அவனே தன் மனைவியோடு செல்லும்போது, அவள் தனக்குப் பின்னே வர, அவன் வழிநடத்திச் செல்லுகிறான் அன்றோ? அதேபோன்று தான், பக்குவமுதிர்ச்சி குறைந்த நிலையில் சிவபெருமான் ஆன்மாவுக்குள் மறைந்திருந்து அதனைச் செலுத்துகிறான். உயர்பக்குவத்தால் தலைவி நிலைக்குத் தகுதிபெற்ற ஆன்மாக் களை அவன் முன்னின்று வழிநடத்துகிறான். குழந்தை நிலையைப் பெத்தநிலை என்றும், தலைவி நிலையை முத்திநிலை என்றும் சாத்திரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

மேலும் சிவபெருமான் நம்மோடு எக்காலத்திலும் ஒன்றாகவும், உடனாகவும், வேறாகவும் அத்துவிதமாக நின்று அருள்புரிகிறான் எனச் சைவ ஞானநூல்கள் அறிவுறுத்துகின்றன. ஆகவே சிவம் நம் அகத்து உள்ளான் என்னும் சிவோகம் பாவனையில், அவனோடு ஒன்றிநிற்பதே ஏகனாதல் எனப் பெறும்''.

மறக்கருணையால் வினைகளை நீக்குதல்

சிற்றறிவு ஆன்மாக்களாகிய நாமெல்லாம் ஆணவத்தின் வலிய பிடியில் சிக்கி, இடையறாது தீயவினைகளையே செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே சிவபெருமான் நம்மைச் சற்று கடுமையாகவே நடத்த வேண்டியதாகிறது. அதனை அவன் நமக்கு அளிக்கும் தண்டனை என்றோ வெறுப்பு என்றோ கொள்ளுவதை விட, நம்மீது அவன் காட்டுகிற அளப்பரிய கருணை என்று சிந்திப்பதே அறிவுடைமையாகும். சிவபெருமானின் அத்தகு கருணையை மறக்கருணை என்பர் அருளாளர்.

அறிவு முதிராத இளமைப் பருவத்தில் நம்முடைய ஆசை களும் சிந்தனைகளும் எந்த அளவு அர்த்தமற்று இருந்தன என்பதை இப்போது நாம் அசைபோட்டாலும், நமக்கே நகைப்பு உண்டாகும். குழந்தைகளாகிய நம்முடைய வளர்ச்சியில் உண்மையான அக்கறை கொண்ட நம் பெற்றோர்கள் நல்ல பல அறிவுரைகளைக் கூறி இருக்கின்றனர். நாம் அவற்றைப் புறக்கணித்து ஏதேனும் குற்றம் செய்தபோது; அவர்கள் நம்மைக் கண்டித்திருக்கின்றனர்; தண்டித்துமிருக்கின்றனர்; இவைகள் எல்லாம் ஏன்?-எனச் சிந்தித்துப் பார்த்தால் தம் குழந்தை களின்மேல் அவர்களுக்கு உள்ள அளப்பரிய அன்பே காரணம் என்பது புலனாகும்.

அருமைக் குழந்தைகளாகிய நாம் அறியாமையால் குற்றம் இழைத்து, அதன் காரணமாகப், பின்னர்த் தண்டனை அடைந்து, துன்பத்தில் உழலக்கூடாது என்பதும், நாம் திருந்தி, செவ்விய வாழ்வியல் நெறிகளைக் கடைப்பிடித்து, மேன்மேலும் உயர் நிலைகளை அடைந்து சான்றோர்களாய்த் திகழ வேண்டும் என்பதுமே அவர்களுடைய சீரிய நோக்கம். அதனாலேயே அவர்கள் அவ்வப்போது நம்மைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் செய்திருக்கின்றனர் என்பது, இப்போதுதான் நமக்குப் புரிகிறது.

ஒரு குடும்பத்தில் நிலவும் அன்பு-நிலை போலவே, சமுதாயத்தில் குற்றம் செய்த மனிதன் திருந்த வேண்டும் என்பதற்காக, அரசு அவனைத் தண்டிக்கிறது. அவ்வாறு தண்டனை வழங்குவது அவன் மீது கொண்ட வெறுப்பினா லன்று; அவன் திருந்தி, மேன்மேலும் உயர்ந்த நிலையில் தனக்கும் சமுதாயத்துக்கும் பயனுடையவனாகத் திகழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தாலேயே யாம்.

இங்ஙனம், செந்நெறி வாழும் பெற்றோர்களையும், செங்கோல் ஆட்சி புரிகிற மன்னனையும் போன்றே, சிவபெருமானும் உயிர்களாகிய நம்மை அவ்வப்போது துன்பத்தில் அழுத்துகிறான். அதற்கும் அவன் குழந்தைகளாகிய நம்மீது கொண்ட கருணையே காரணமாகும்.

நெறி பிறழச் செயல் புரிபவர்களைத் தண்டித்து, அச்சம் விளைவித்து, அற நெறி நிற்கும் முறையை அவன் அவர்களுக்கு உணர்த்துகிறான் என்ற உண்மையைச் சைவசமய குரவராகிய அருள்நந்திசிவனார் கூறுமாறு காண்போம் :

நிக்கிர கங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வ(து)
அக்கிர மத்தால் குற்றம் அடித்துத், தீர்த்து, அச்சம் பண்ணி,
இக்கிர மத்தி னாலே, ஈண்டு அறம் இயற்றிடு - என்பன்;
எக்கிர மத்தினாலும் இறை செயல் அருளே என்றும்[2]

1. அக்கிரமத்தால் குற்றம் = நீதிக்கு மாறாகக் குற்றம் செய்தால்,
2. எக்கிரமத்தினாலும் = அன்பு காட்டியோ அச்சுறுத்தியோ, எந்த முறையாயினும்
3. இறை செயல், அருளே ஆகும்.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடாவிடில், உறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம் பார்த்திடில், பரிவே ஆகும்;
இந்த நீர் முறைமை அன்றோ ஈசனார் முனிவும் என்றும்?

சிவபெருமானின் மறக்கருணைக்கு அருளாளர்கள் வாழ்வி லிருந்தும் ஏராளமான சான்றுகள் கூறலாம்: சான்றாண்மை மிக்க சைவக்குடும்பத்தில் பிறந்தவர், மருள் நீக்கியார் என்னும் அப்பர் பெருமான். வினை எச்சங்கள் அவரைத் துரத்தின. ''நம்பர் அருளாமையால் அவர் சமண சமயம் புகுந்தார்'' எனச் சேக்கிழார் பெருமான் கூறுவார்.

அங்கும் அவர் வாழ வேண்டிய வினைக் காலம் முடிந்தது; இனிச் சைவத்துக்கு மீள வேண்டும் என்பது நியதி. அதற்கான சூழலைப் பெருமானே உருவாக்கித் தருகிறான். திலகவதியாரின் இடையறா வேண்டுதல், அடிகளின் முன்னைத் தவம், நம்பரின் மறக்கருணையாகிய அருளிப்பாடு-இவை சூலை நோயாகி அடிகளைத் தாய்ச் சமயத்துக்கு மீட்டன. சைவத்திற்கு மீண்ட

அடிகள் சிவபெருமானைப் போற்றி, ஐம்பதாயிரம் பாடல்களுக்கு மேல் பாடுகிற பேறு பெற்றார் என்பது வரலாறு.

நிலஉலகைக் காத்து அருள்புரித்றகாகச் சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் திருக்கயிலை மலையாகும். அப் புனித மலையையே தூக்க முயன்றான் அரக்க வேந்தன் இராவணன். தான் மாமன்னன் என்ற மமதையும், தவ-வலி மிக்கோன் என்ற செருக்கும், தனக்கு நிகர் யாருமே இல்லை என்ற மனத்திமிரும், பத்துத் தலையும் வலிமைமிகு இருபது தோள்களும் கொண்டவன் என்ற உடல் திமிரும் அவனது அறிவில் அகங்காரத்தைத் தோற்றுவித்தன.

அவன் கயிலை மலையைத் தூக்க முயன்றான். அவனது ஆணவத்தைக் கண்ணுற்றான் சிவபெருமான்; ஆயினும், அரக்க வேந்தனை அழித்துவிட வேண்டும் என்பது சிவபெருமானின் நோக்கமன்று; அறநெறிக்குத் திருத்தி அவனையும் வாழ வைக்க வேண்டும் என்பதே பெருமானின் விருப்பம்.

ஆகவே ஒரு சிறு புன்முறுவலோடு, தன் கால்பெருவிரலால் அம் மலையினைச் சற்றே அழுத்தினான்; மலையினுள் சிக்கிய மன்னனின் தோள்களும் எலும்புகளும் நெறிந்தன. வலி தாளாது அழுது புலம்பினான் மன்னன்; உண்மை உணர்ந்தான், சரண் எனத் தொழுதான்; இறைவனைப் புகழ்ந்து சாமகானம் இசைத்தான். அதனைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்கு வரமாக ஆற்றல் மிகுந்த வாளையும் நீண்ட வாழ்நாளையும் அன்றோ அருளினான்! இங்ஙனம் குற்றம் செய்பவரை முதலில் தண்டித்துப் பின்னர் அருளுவதையே மறக்கருணை என்கிறோம்.

தவத்தால் செருக்கு மிக்கவர்கள் தாருகாவனத்து இருடிகள்; அவர்களின் ஆணவத்தை அடக்கிச் சிவபெருமான் ஆட் கொண்டருளிய வரலாறு முன்னர்ப் பார்த்தோம்.

அதேபோல் ஆணவப் பிடிப்பால் நாம் நம்மை அறியா மலேயே ஒரோஒரு சமயம் தறிகெட்டுத் தடுமாறும்போது சிவபெருமான் நமக்குச் சில இன்னல்களையும் இடையூறு களையும் விளைவித்து இறுதியில் ஆட்கொண்டருளுகிறான் என்பதை நாமும் நம் நடைமுறை அனுபவத்தில் உணரலாம். அவையெல்லாம் அவனுடைய மறக்கருணையே யன்றி வேறு அன்று.

பாவமன்னிப்பு உண்டா?

'மதகுருமார்களிடம் கூறிவிட்டால் நாம் செய்யும் பாவங்கள் அனைத்தும் இறைவனால், மன்னிக்கப்படும் எனச் சில சமயவாதிகள் கூறிவருகிறார்களே, சைவசமயத்திற்கு அக்கருத்து ஏற்புடையதா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்' என்றார் குப்புசாமி.

'அறிந்து செய்தோமோ, அறியாமற் செய்தோமோ, நாம் குற்றம் செய்திருக்கிறோம் என்று உளமார நினைந்து ஏற்கும்போது, இறைவன் கருணையோடு நம்மைப் பார்க்கிறான்; அந்த வினை-வட்டத்திற்குள்ளிருந்து நம்மை விடுவிக்க விரும்புகிறான். இறைத் தொண்டு முதலிய நன்னெறிகளில் ஆற்றுப்படுத்துவதன் மூலம் நம் வினை நுகர்ச்சிக்கு ஒரு வடிகால் அமைக்கிறான். அதனையே நாம் பாவ மன்னிப்பு எனக் கூறுகிறோம்.

'இனிமேல் இத்தகு குற்றத்தை மீண்டும் இழைக்கக் கூடாது' என்ற உறுதிப்பாடும்,'குற்றம் இழைத்தற்கு, மனத்தால் நினைப்பதும் குற்றமே' என்ற தெளிந்த சிந்தையும் உண்டாகும் போது, இறைவன் நமக்குத் துணை நிற்க விரும்புகிறான். இதனைத், தெய்வப்புலவர் திருவள்ளுவர், வினைத் தூய்மை எனஅழகுறக் குறிப்பிடுகிறார்.

எற்றுஎன்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று (குறள். 699)

''இழிசெயல்-என உயர்ந்தோரால் ஒதுக்கப்பட்டவற்றைச் செய்வதற்கு மனத்தாலும் நினைத்தல் கூடாது. ஒருக்கால் ஊழின்-பெருவலியால் அவ்வாறு ஒரு முறை செய்ய நேரிடினும், அதன் கேடுறு இயல்புகளை உணர்ந்து, மனம் திருந்தி, மீண்டும் செய்யாதிருத்தல் சிறப்பு ஆகும்'' என்பது இக்குறட்பாவின் கருத்து. எற்று - எத்தன்மைத்து.

கொலைக் குற்றத்திற்காக ஆயுள்தண்டனை முதலியவற்றைப் பெற்ற குற்றவாளிகள்கூட இந்நாளிலும் குடியரசுத் தலைவருக்குக் கருணைமனுச் செய்து தண்டனைக் காலக் குறைப்பு முதலிய பயனைப் பெறக் காணுகிறோம்!

குற்றம் செய்வதற்கு அடிப்படைக் காரணமாக இருந்த பொருள் எதுவாயினும் அப் பொருள் மீதான பற்றினை

அறவே துறக்க முற்படும்போது, இறைவனும் நாம் முன்னர்ச் செய்த பாவங்களை மன்னித்து, நமக்கு அருள் பாலிக்கிறான்.

இதற்குச் சைவ அருளாளர்கள் வாழ்வில் சான்றுகள் பல உள்ளன :

புகார் நகரில் நிலவுலகக் குபேரனாக வாழ்ந்தவர், பட்டினத்து அடிகள்; செல்வச் சீமானான அவர், சோழ மன்னனுக்கே அவ்வப்போது பொருளுதவி செய்து வந்த பெருந்தகை. நீண்ட காலம் குழந்தைப் பேறு இல்லாத அவருக்கு இடைமருதூர் ஈசனே வளர்ப்பு-மகனாக வந்தான்; 'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' - என்று எழுதிய நறுக்கோலையுடன் சிறிது நூலையும் காது ஒடிந்த ஓர் ஊசியையும் சிறு பேழை ஒன்றில் வைத்து அவரிடம் சேர்ப்பித்து, மறைந்தான். அதுவே அவருக்கு ஞானோபதேசமாயிற்று.

'நிலையற்றன உலகப் பொருள்கள்; அவை நிலையான இந்த உயிருக்கு இறுதிவரை துணை நிற்கமாட்டா' என்ற உண்மை மின்வெட்டுப் போல அடிகளுக்கு பளிச்செனப் புலனாயிற்று; தெளிந்த உள்ளத்தோடு அனைத்துச் செல்வங்களையும் துறந்தார்; வடபுலம் நோக்கிச் சென்றார். விதிவயத்தால் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டார்; பத்திரகிரி என்ற அந்நாட்டு மன்னனின் கட்டளைப்படி, கழுமரத்திற்கும் கொண்டு வரப்பட்டார்.

அவர் சிந்தனையில் அப்போது மெய்ஞ்ஞானம் பளிச்சிட்டது: ''அன்று கோடானுகோடிச் செல்வத்தையும் 'குப்பை'-என உதறி, நகரை விட்டு நாட்டை விட்டு வந்திருக்கிறோம்; இப்பொழுது இங்கு யாம் எவ்வித திருட்டும் செய்யவில்லை; ஆயினும் அரச தண்டனை எதிர் நிற்கிறது. முன்னர் எப்பொழுதோ யாம் செய்த ஒரு தீவினையின் பயன் அப்பொழுது கழிக்கப் படாமல், எஞ்சி நின்று, இப்பொழுது இங்கு நமக்கு இவ் வடிவத்தில் ஊட்டப்பெறுகிறது போலும்''- என்ற உள்ளுணர்வு மேலிட்டது; தண்டனைக்கு ஆணையிட்ட மன்னனை அவர் கடியவில்லை; தன்னையே நொந்து கொண்டார் முன்னை வினைக்காக; தலைவனாகிய சிவபரம்பொருளை நினைந்து தண்டனைக்குத் தயாரானார்.

அங்ஙனம் அவர் உள்ளத்தில் மெய்ஞ்ஞான ஒளி பளிச்சிட்ட போது, ஆதவன் முன் பனி கரைந்து மறைவதுபோல, அவருடைய

முந்தைய வினையின் எச்சங்கள் நீங்கின; கழுமரம் தானாகவே தீப்பற்றி எரிந்தது. கொலைஞர்கள் அஞ்சி ஓடி மன்னனிடம் அறிவித்தனர். அந்த வடபுல வேந்தனும் ஞானத்தெளிவு பெற்றான்; அரசினைத் துறந்து, அடிகளின் சீடனானான்.

'மெய்யுணர்வாளர்களை பொய்யுலகச் சட்டங்கள் ஒன்றும் செய்துவிட முடியாது' என்ற உண்மையை உணர்த்துதற்கும், அடிகளின் தெய்வீகத் தன்மையை, மெய்ஞ்ஞானத் தெளிவினை, மெய்த் தவக்கோலத்தை உலகம் அறியுமாறு செய்வதற்கும் அந்நிகழ்ச்சி ஓர் அரிய வாய்ப்பு ஆயிற்று''

வினைகளின் பயனை இறைவனே ஏற்றருளல்

''சிவபெருமான் அறக்கருணையாலோ, அன்றி மறக்கருணை யாலோ, நாம் செய்கிற வினைகளுக்கு உரிய பயனை நமக்கே ஊட்டிக் கழிப்பிக்கிறான் எனக் கூறினீர்கள். 'அவரவர் செய்த வினைகளை அவரவரேதான் அனுபவித்துத் தொலைக்க வேண்டும்-என்பதே நியதி எனவும் கூறினீர்கள். அவ்வாறாயின் நம்முடைய வினைகளைச் சிவபெருமான் எப்பொழுதாவது ஏற்றுக்கொள்ளுகிறார் என்பது உண்மையா? அதன் தன்மைகளைச் சற்றே விளக்க வேண்டும்'' என வேண்டினார் குப்புசாமி.

'எங்கும் வியாபகமாய் இருக்கும் இறைவன் ஆன்மாக்கள் முத்தி அடைய வேண்டும் என்ற பரம கருணையாளன். ஆதலால், பல சமயங்களில் அவன் ஆன்மாக்களின் இருவினைகளாகிய நன்மை தீமைகளைத் தானே ஏற்று, அவற்றின் நற்பயனை மட்டும் ஆன்மாக்களுக்குத் தந்தருளுகிற நிலையையும் காணலாம்.

பாற்கடலைக் கடைந்தவர்கள் தேவாசுரர்கள். கொடிய ஆலகால நஞ்சு வெளிப்பட்டு அவர்களை அழிக்கத் துரத்தியது. அஞ்சி ஓடிவந்து சரண் அடைந்தனர் தேவர்கள். உலக முழுவதையும் அழிக்க வல்ல அந்நஞ்சினைத் தான் உண்டு, அமுதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்தருளினான், சிவபெருமான். இந்நிகழ்ச்சி, தன் திருவடியையே குறிக்கோளாகக் கொண்டு சரணடைகிற மெய்த்தவ நெறியாளர்க்கு, அவர்தம் வினைகளை எல்லாம் தானே ஏற்று, அவர்கட்கு நற்பேறு நல்குகிற சிவபெருமானின் கருணை இயல்பினைக் காட்டுகிறதன்றோ?

அறக்கடவுளைத் தனக்கு விடையூர்தியாக ஏற்று, அதற்குச் சான்றாகப் பசு இனத்தையும் தோற்றுவித்தான் பெருமான்.

அப்பசு புல்லையும் எள்ளையும் உண்டது, தண்ணீரைக் குடித்தது. உண்டதும் குடித்ததும் அப்பசுவுக்கு வினை ஆயின. அவ் வினையின் விளைவாகத் தோன்றின பால் முதலிய ஐந்து பொருள்கள். அவற்றை எல்லாம் தனக்கு அபிடேகப் பொருள்களாக அவன் விரும்பி ஏற்றுக் கொள்ளுகிற பெற்றிமையைத்தான் நாம் நாளும் காணுகிறோமே!''

வினை-நீக்கத்தில் மற்றொரு முறை

''இங்ஙனமன்றிச் சிவபெருமான் மெய்யடியார்களுக்கு அருளுகிற மற்றொரு முறையும் உள்ளது. பொதுமக்களுள், ஒருவர் மற்றொருவரைக் கொன்றால் அது தண்டனைக்குரிய கொலைக் குற்றமாகும். அதே கொலையைக் கலவர நேரத்தில் காவல்துறையினர் செய்தாலோ, அன்றிப் போர்க் களத்தில் படைவீரர் செய்தாலோ அவை குற்றம் ஆகா; அதற்கு மாறாக அவை வீரச் செயல்களாக மதிக்கப்பட்டு அரசாங்க விருது களையும் பெறத் தகுதியுடையன ஆகின்றன அன்றோ?

அதே போன்றுதான், சிவத் தொண்டும் சிவபுண்ணியமுமே கருத்தாகக் கொண்டு, சிவசிந்தனையாகவே வாழ்ந்து கொண்டி ருக்கிற மெய்யடியார்களின் நிலையும். ஓரோஒரு சமயம், அவர்கள் செய்கிற காரியங்கள் மற்றவர்களுக்குத் துன்பத்தைத் தருகிற தீவினைகளாக ஆகிவிடுவதும் உண்டு. அத்தகு தீவினை களுக்கு உரிய பாவப் பயனைப் புண்ணியமாக மாற்றி, அதற்கு உயரிய பரிசுகளைச் சிவபெருமான் வழங்குகிறான் எனச் சைவ ஞானநூல்கள் கூறுகின்றன:

விசாரசருமர் என்ற அந்தணச் சிறுவர் மண்ணியாற்றின் மணற் பரப்பில், ஆற்று மணலால் சிவலிங்கம் அமைத்து வழி பட்டார். அவர் மேய்ச்சலுக்காக ஓட்டிவந்த அந்தணர் வீட்டுக் காராம் பசுக்கள் தாமாகவே குடம் குடமாகப் பாலைச் சொரிந்தன. அப்பாலை அவர் சிவபெருமானுக்கு அபிடேகித்தார். அதை இப்பால் மறைந்து நின்று கவனித்த அவருடைய தந்தையார், வெகுண்டு ஓடிச் சென்று, தன் மனம் குற்றம் செய்ததாகக் கருதி, அவரைக் கோல் கொண்டு அடித்ததோடு, அப்பாற்குடங் களையும் தம் காலால் எற்றி உதைத்துச் சிதறச் செய்தார். விசாரசருமருக்குத் தன்மீது அடிகள் விழுந்தபோதுகூட உறைக்கவில்லை; அபிடேகப் பாற்குடங்களை எற்றியது அவர்

நெஞ்சில் அடித்ததைப் போன்று இருந்தது. எற்றிய கால் தம் தந்தையாருடையது என்ற எண்ணமும் இல்லை.

தம் அருகில் கிடந்த கோலால் ஓங்கி அடித்தார். அக் கோலே மழுவாகித் தந்தையாரின் கால்களைத் துண்டித்தது. பிறர் கால்களைத் துண்டித்தல் என்பது கொடிய பாவம். அதுவும் தந்தையாரின் கால்களைத் துண்டித்தல் தகுமோ? ஆயினும் அஃது சிவபெருமானால் தீவினையாகக் கருதப்படவில்லை; மாறாக, ஒரு சிவபுண்ணியமாகவே பாராட்டப்பெற்றது. 'சைவ நெறிகாக்கும் சண்டேசுவரர்' என்ற உயர்வான பதவியையும், அரிய பல பெருமைகளையும் சிவபெருமான் அவருக்கு தந்தருளினான். இஃது சிவபெருமான் மெய்யடியார்களின் வினைகளை மாற்றியருளுகிற மாண்பினுக்கு ஒரு சான்று ஆகும்'' என்றேன்.

சிவபெருமான் தீவினைக்கு ஒரு மருந்து

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை, பள்ளி விடுமுறை நாள். ஆகவே காலையில் நேரத்திலேயே சிவசாமியும் குப்புசாமியும் எங்கள் இல்லத்திற்கு வந்தனர். அப்போதுதான் யான் சிவபூசை செய்து கொண்டிருந்தேன். தேவார, திருவாசகங்களோடு, ஔவையாரின் விநாயகர் அகவலும், குமரகுருபரரின் கந்தர் கலிவெண்பாவும் அவ்வப்போது பாராயணத்தில் வைத்துக் கொள்ளுவது வழக்கம். அன்று ஞானசம்பந்தப் பெருமானின் புள்ளிருக்குத் வேளூர்த் திருப்பதிகம் பாடித் தொடர்ந்து விநாயகர் அகவலைப் பாடிக் கொண்டிருந்தேன்.

பூசை நிறைவுற்றது. இருவரும் எழுந்து சுவாமியை வணங்கித் திருநீறு பெற்றுக் கொண்டனர். தத்தம் இருக்கையில் அமர்ந்ததும், ' மந்திரமும் தந்திரமும், மருந்துமாகி வினைகளைத் தீர்க்க வல்லவர்' என வைத்தியநாத சுவாமியைப் போற்றி அருளாளர்கள் பாடியுள்ளனரே! அவர் எவ்வாறு வினைகளைத் தீர்க்கிறார்? என்பது பற்றி இன்று கூறவேண்டுகிறேன், ஐயா!'' என விண்ணப்பித்தார் சிவசாமி.

''நாளும் நாம் செய்கிற தீவினைகளும் நல்வினைகளுமே நமக்குத் தீராக் கொடுநோய்கள் ஆகின்றன; உயிர்களாகிய நம்மைப் பிறப்பினில் புகுத்தித் துன்புறுத்துகின்றன. வழிப் போக்கர்களின் காலில் மிதிபட்டு அல்லலுறும் செடி-கொடி

களைப் போன்றது இவ் உடம்பு, வினைநோய்கள் யாவற்றையும் தீர்க்க வல்ல நன்மருந்தாக இருப்பவன், வைத்தியநாதப் பெருமான் ஒருவனே. அவனை வினைக்கேடன் என்று அருளாசிரி யர்கள் போற்றி மகிழ்வர். வினைகளையும் அவற்றை வித்தாகக் கொண்டு பிறப்பு எடுத்து அல்லலுறுகின்ற உடல்களையும் (மறுமறு பிறப்புகளையும்) களைய வல்லவன் அவன் ஒருவனே; புள்ளிருக்கு வேளூரில் உறைகிற அம்மாமருந்தை இடையறாது சோர்வின்றி வாழ்த்தி வணங்குபவர்களுக்கு வினைகள் நீங்கிவிடும்; மறுபிறப்பு என ஒன்றும் இல்லை'' என்ற நுண்மையான கருத்துகள் தேவாரப்பாடல்களில் நிறைய உள்ளன. அவற்றுள் ஒன்று:

செடியாய உடல்தீர்ப்பான் தீவினைக்கு ஓர் மருந்து ஆவான்
பொடிஆடிக்கு அடிமை செய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடிஆர்ந்த பொழில்காழி கவுணியன் சம்பந்தன் சொல்
மடியாது சொல்ல வல்லார்க்கு இல்லையாம் மறுபிறப்பே.

(சம்பந்தர், தேவாரம்)

வைத்தியநாதப் பெருமான் எவ்வாறு வினைகளைத் தீர்க்கிறான்? யார்யார்க்கெல்லாம் தீர்க்கிறான்? தீவினைக்கு எவ்வாறு மருந்தாகிறான்? அவன் எங்கு வீற்றிருக்கிறான்? என்பன போன்ற வினாக்களுக்கு, ஞானசம்பந்த மூர்த்திகளே ஒரு பாடலில் விடை பகர்கிறார்.

திறம் கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறம் கொண்டு சிவதன்ம(ம்) உரைத்த பிரான் அமரு(ம்)இடம்
மறம் கொண்டு அங்(கு) இராவணன் தன் வலி கருதி வந்தானைப்
புறம் கண்ட சடா(யு) என்பான் புள்ளிருக்கு வேளூரே

(சம்பந்தர் தேவாரம்)

மெய்யடியார்கள் என்போர் பொய்ம்மையை நினைக்காதவர்; பொழுதினை வீணடிக்காதவர்; திருவடிப் பேறு என்ற மெய்ப் பொருளிலேயே நாட்டம் மிக்கவர்; அத்தகையோரே திறம் கொண்ட அடியார்கள். அவர்கட்கு அவன் புள்ளிருக்கு வேளூரில் அமர்ந்து, அறநெறியாகிய சிவதருமத்தை உணர்த்தி அருளுகிறான். அத்திருத்தலத்தின் பெருமைதான் என்ன? காண்போம்.

முறுக்கேறிய தன் இருபது தோள்களின்-வலிமை, அசுரன் என்ற இன-வலிமை, இலங்கையின் மாமன்னன் என்ற ஆட்சி-வலிமை, பிரமனிடம் வரம் பெற்ற தவ-வலிமை முதலியவற்றையே மிகப்பெரிய வலிமைகளாகக் கருதிக்

கொண்டு, காம வெறியோடு சீதையைத் தூக்கிச் சென்றான் இராவணன்; அவனைப் போரில் புறமுதுகிட வெருட்டியவர், சிவனடியாராகிய ஒரு பறவை. சம்பாதி என்பது அவருடைய பெயர். கழுகுகளுக்கு அரசன்; நிறைந்த சிவநெறியாளர்: ஒவ்வொருநாளும் யோசனைதூரம் பறந்து சென்று, நறுமணப் பூக்களை ஆய்ந்து கொணர்ந்து, அவர் சிவத்தை அர்ச்சனை செய்து வழிபட்ட இடம் புள்ளிருக்குவேளூர் (புள் இருக்குவேள்ஊர்) என்னும் புண்ணிய பூமியாகும் என்பது கருத்து. (புள் = பறவை).

ஔவைமூதாட்டியின் அனுபவம்

அடுத்துக் குப்புசாமி ஒரு நல்ல வினாவை எழுப்பினார்: ''ஔவை மூதாட்டி விநாயகப் பெருமானை வணங்கித் தம் வினைகள் நீங்கப் பெற்றதோடு, சிவபெருமான் திருவடிகளைச் சேர்ந்தார்-என புராணங்களில் பேசப்படுகின்றன, ஐயா! அதைப் பற்றிச் சிறிது சொல்லுங்கள்'' என வேண்டினார், குப்புசாமி.

''ஔவை என்பது ஓர் அழகான தமிழ்ச் சொல்; தத்துவப் பொருள்கள் பலவற்றை உள்ளடக்கியது. ஔவை என்ற பெயரோடு நம் தமிழகத்தில் பலர் இருந்திருப்பதைக் காணுகிறோம். இப்பொழுது நாம் சிந்திப்பது 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஔவையாரைப் பற்றியது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிவபெருமான் ஆணைப்படி அவருடைய ஐராவணம் என்ற ஈராயிரம் கொம்புடைய யானை மீது அமர்த்திப் பிரம, விட்டுணு முதலிய தேவர்கள் திருக் கயிலைக்கு அழைத்துச் சென்றனர். தோழராகிய சுந்தரரைப் பிரிய மனமில்லாத சேரமான்பெருமான் நாயனாரும் தம் பட்டத்துக் குதிரைக்குப் பஞ்சாக்கர உபதேசம் செய்து, அதில் அமர்ந்து, வானவீதியில் சுந்தரரை வலம் வந்து உடன் சென்றார். அவர்கள் அவ்வாறு சென்ற அரிய காட்சியை ஓர் இயற்கைக் காட்சியோடு இணைத்துச் சிந்திப்பது அறிவுக்கு விருந்தாகி, இன்பம் பயப்பதாகும்.

வான மண்டலத்தில், சூரியனைச் சுற்றி வருகிறது பூமி; அப் பூமியையோ சந்திரன் வலமாகச் சுற்றிவந்து கொண்டிருக்கிறான். அவன் அவ்வாறு பூமியைச் சுற்றும்போதே சூரியனையும் சேர்த்துச் சுற்றி வருகிறானன்றோ? அதே போன்று, சிவமாகிய சூரியனை, சுந்தரர் என்னும் பூமி சுற்றிவருகிறது; அச் சுந்தரப் பூமியைச் சேரமான் என்னும் சந்திரன் வலம் வந்து

கொண்டே, சிவத்தைச் சென்றடைகிறது. இஃதுஅன்றைய வான் மண்டலத்தில் நிகழ்ந்த ஓர் இன்பக் காட்சியல்லவா?

விநாயகரை வழிபட்டுக் கொண்டிருந்த ஔவை மூதாட்டி தம் ஞானக் கண்ணினால் இவ் அற்புத வான்-காட்சியைக் கண்ணுற்றார். தாமும் அவர்களோடு திருக்கயிலைக்குச் செல்ல வேண்டுமென்ற அவா மிகுந்தது. அம்மையின் குறிப்புணர்ந்தார் விநாயகர். ''ஔவையே! அமைதியாக வழிபாட்டினை முறைப்படி நிறைவு செய்க. யாமே விரைந்து உன்னைக் திருக்கயிலையில் சேர்ப்பிப்போம்'' என்று கூறினார்.

விநாயர் வழிபாடு வழக்கம்போல் நெறிவழுவாது நிறை வுற்றது. ஆனைமுகப் பெருமான் ஔவையைத் தம் துதிக்கையால் தூக்கி, நாயன்மார் இருவருக்கும் முன்னதாகவே, திருக்கயிலையில் சேர்ப்பித்தார் என்பது வரலாறு.

விநாயகர் ஆன்மாவை அம்மைப்பரிடம் சேர்த்தல்

1. திருக்கயிலையில் பரமசிவம் - முத்திப்பேறு
2. ஆன்மா - ஔவை மூதாட்டி
3. இறைவன் திருவடி
4. முதுகந்தண்டு - மூலாதார விநாயகரின் துதிக்கை

வினை தீர்க்கும் விநாயகர்

ஔவை மூதாட்டி இயற்றிய அற்புதப் படைப்பு விநாயகர் அகவல்; அஃது ஓர் அனுபவப் பேழை. யாவற்றையும் கடந்து நின்ற பரம்பொருள், உள் புகுந்து, (கட+உள்) கடவுளாகித் தமக்கு அருள் புரிந்த வரலாற்றை இந்நூலின்கண் அவர் மிகச் சிறப்பாகப் பாடிப் பரவுகிறார். பிராரத்த, ஆகாமிய, சஞ்சித வினையின் ஆற்றல்கள் மூன்று நிலைகளில் எவ்வாறு ஒடுக்கப் படுகின்றன என்பதை மிகத் தெளிவாகவும் நயமாகவும் அவர் அங்கு அறிவுறுத்தக் காணலாம்.

1. பூத-உடம்பிலேயே உலவிக் கொண்டிருக்கும் ஆன்மாவுக்கு விநாயகப் பெருமான் குரு வடிவில் தோன்றித் திருவைந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்ததும், கொடுவினை களின் முனைகள் மழுங்கி விடுவதாகக் கூறுகிறார், ஔவையார்.

   திருந்திய முதல் ஐந்(து) எழுத்தும் தெளிவாய்ப் பொருந்தவே வந்து என் உளம்தனில் புகுந்து, குருவடிவாகிக் குவலயம் தன்னில் திருவடி வைத்துத் திறம் இது பொருள் என வாடா வகைதான் மகிழ்ந்(து) எனக்கு அருளிக் கோடாயுதத்தால் கொடு வினை (பிராரத்த-வினையாற்றலின் கூரிய பகுதி) களைந்தே......... (19-24)

2. உவட்டாத திருவைந்தெழுத்தை உபதேசித்துப் புலன்-உடம்பைக் கட்டுக்குள் நிறுத்தித், தீய சிந்தனைகள், தீய செயல்கள், தீய சொற்கள் முதலியவற்றை தம் வாழ்வில் தவிர்க்குமாறு செய்கிறார் விநாயகப் பெருமான். அப்போது, ஆகாமியம் என்ற புதுவினை, இருள்சேர் இருவினையாகி நம்மைப் பற்றாதவாறு, அவரே அருள்பாலிக்கிறார்,-என ஔவை மூதாட்டி அறிவுறுத்துகிறார்.

   ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம் இன்புறு கருணையின் இனி(து) எனக்(கு) அருளிக், கருவிகள் ஒடுக்கும் கருத்தினை அறிவித்து, இருவினைதன்னை அறுத்து இருள் கடிந்து... (27-30)

3. புலன் ஐந்தொடு மனம் முதலாய அந்தக் கரணம் மூன்றும் சேர்ந்த அமைப்பு, புரிஅட்ட காயம் (5+3=8)எனப்படும். மனம் முதலியவற்றை (ஆன்ம) அறிவொடு ஒன்றித்து நிற்கவும்,

திருவைந்தெழுத்தை இடையறாது தியானித்திருக்கவும் அவர் அருள் புரிகிறார். சிறிதுசிறிதாக நம்மில் மறைந்திருக்கும் தெய்வீக ஆற்றல்களை நாம் உணரத் தலைப்படுகிறோம். தொகுப்பினை (சஞ்சித வினையை) ஆணிவேரோடு விநாயகப் பெருமான் நம்மிலிருந்து அகற்றி அருளுகிறார்.

புரியட்டகாயம் புலப்பட எனக்குத் தெரி எட்டு நிலையும் தெரிசனப்படுத்திக், கருத்தினில் கபாலவாயில் காட்டி, இருத்தி முத்தி இனிது எனக்கு அருளி, என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து, முன்னை வினையின் முதலை களைந்து.... (51-56)

யோகம் முதிர்ந்து ஞானம் தலைப்படும்போது, சிந்தை தெளிவித்து, இருள்-வெளி இரண்டுக்கும் ஒன்றே இடம் என்பது அறிவுறுத்தப் படுகிறது.

இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி, என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டுவது விநாயகரின் இயல்பு.
(59-62)

திருமுறைகள் மூலம் இடர்களை நீக்குதல்

''ஐயனே அடியேனுக்கு ஓர் ஐயம். கருணைகூர்ந்து தெளிவு படுத்த வேண்டுகிறேன்'' என வேண்டி நின்றார் குப்புசாமி. ''நுகர்ந் தாலன்றித் தொலையாதன வினைகள்; அதுவே யாவர்க்கும் பொதுவான நியதி. -என்று தாங்கள் அறிவுறுத்தினீர்கள். மிகவும் நன்றி. ஆயினும் திருமுறை அருட்பனுவல்களில் ஆங்காங்கே ஞானசம்பந்தப் பெருந்தகையும், அப்பர் பெருமானும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மணிவாசக அருட் குரவரும் வினை நீக்கத்தை பற்றிக் குறிப்பிடுகிறார்களே!....

சில திருத்தலங்களில் உறைகிற சிவபெருமானைப் பாடி வணங்கினாலே துன்பங்கள் துடைக்கப்பெறும் என்றும், சில பதிகங்களைப் பாடினாலே வினைகள் நீங்கும் என்றும், வேறு சில பாமாலைகளைப் பயின்றால் முத்திப் பேறு சித்திக்கும் என்றும் அவர்கள் அறுதியிட்டுக் கூறுகிறார்களே! அவை எல்லாம் இக்கால உலக நடைமுறையில் எந்த அளவு ஏற்புடையதாகும்?''

''தேவார, திருவாசகங்கள் நம் செந்தமிழ்நாட்டின் சைவ இலக்கியங்களாகத் திகழ்கின்றன. அத்திருமுறைப் பாடல்கள்

தனிச்சிறப்புடையன. அப்பாடல்களின் மூலம், இறை-மணம் பரப்பி இன்பத் தமிழுக்குச் சைவத்திருமுதை ஊட்டியவர்கள் அவ் அருட் குரவர்கள். சிவபரத்தைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்த அவ் அருளாளர்களால் பாடப்பெற்ற திருமுறைப் பாடல்களில் உட்கிடையான பல குறிப்புகள் உள்ளன. அவற்றை யெல்லாம் அகழ்ந்து நோக்கி, வாழ்வியல் அனுபவமாக்கிக் கொண்டால், இடர்கள் நீங்குவதும் இன்பம் பெருகுவதும், முத்திப்பேறு சித்திப்பதும் உறுதியினும் உறுதியேயாகும்.

இவ்வுண்மைகளைத் திருஞானசம்பந்தர் திருவாக்கால் கேட்போமே:

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃ(து) அறிவீர்;
உய்வினை நாடா(து) இருப்பது உந்தமக்கு ஊன(ம்) அன்றே?
கைவினை செய்து எம்பிரான் கழல் ஏத்துதும்; நா(ம்) அடியோம்;
செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறா, திருநீலகண்டம்

(சம்பந்தர் தேவாரம், 1:116:1)

கொடிமாடச் செங்குன்றூர் என்பது கொங்கு நாட்டுத் திருத்தலங் களில் ஒன்று. திருச்செங்கோடு என் இப்பொழுது வழங்கப் பெறுகிறது. அங்கு 1300-ஆண்டுகளுக்குமுன் ஒருமுறை நச்சுக் காய்ச்சலால் மக்கள் பெரிதும் அவதியுற்றனர். அப்போது, அந் நகருக்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தப் பெருமான் இப்பதிகத்தைப் பாடி அந்நோயிலிருந்து மக்களைக் காத்தார் என்பது வரலாறு.

இப்பாடலின் கருத்து ''முந்தைய வினைகளின் விளைவுகள் இப்பொழுதைய இன்பதுன்பங்கள்''-என்ற உண்மையினை அறிந்தவர்களே!' வினையாகிய கட்டுகள் அனைத்தும் நம்மி லிருந்து நீங்க வேண்டும்; நாம் பேரின்பப் பெருவாழ்வில் திளைந்திருக்க வேண்டும்' என்றெல்லாம், நீவிர் விரும்பாதிருப்பது உமக்குப் பெருங்குறையே யன்றோ?

சிறுசிறு அளவேனும் சிவத் தொண்டுகள் செய்து சிவபரம் பொருளின் திருவடிக் கமலங்களை வாழ்த்திப் போற்றி வணங்குங்கள். ஏனெனில் அறிவுப் பொருள்களாகிய உயிரினம் முழுமையும் அவனுக்கு அடிமை; உயிரற்ற சடமாகிய உலகப் பொருள்களும் மும்மலங்களும் அவனுக்கு உடைமைப் பொருள்கள்; அவனே அனைத்துக்கும் தலைவன்.

முன்னொருசமயம், அமுதம் பெற விழைந்த தேவர்கள், முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை நினையாமல், தன்-முனைப்போடு பாற்கடலைக் கடைந்தனர்; அதுவே அவர்களுக்கு வினையாயிற்று அதன் விளைவு; பாம்பின் வாயிலிருந்தும் பாற் கடலின் உள்ளிருந்தும் ஆலகால நஞ்சு வெளிப்பட்டு வந்தது. அவர்களின் உயிர் குடிக்க விரைந்து வந்த அந்நஞ்சினைத் தேவர்கள் விருப்பத்திற்கு ஏற்பத், தானே ஏற்று உட்கொண்டான் சிவபெருமான்; அதனால் தன் கண்டம் (கழுத்து) கறுத்துத் திருநீலகண்டன் ஆனான். அம்மட்டோ? அவர்களுக்கு அமுதமும் அன்றோ அருளினான் அக்கருணையாளன்!

நீவிர் செய்த அல்லது செய்கிற வினைகள் யாவும் தத்தம் ஆற்றல்களை இழந்து ஓடுங்க வேண்டுமானால், "அவனின்றி ஓரணுவும் அசையாது. யாம் என்றென்றும் அவனுக்கு அடிமையே" என்ற உள்ளுணர்வோடு, அவனை நீவிர் வணங்குதல் வேண்டும். எனவே, சிவ நெறி நின்று சிவத் தொண்டு செய்து, மேன்மேலும் உய்தி பெறுவீர்களாக!" எனத் திருஞானசம்பந்தப்பெருமான் மக்களுக்கு அறிவுறுத்துகிறார். (கைவினை=திருக்கோயிலை அலகிடுதல், மெழுக்கிடுதுல் போன்ற சிறுசிறு தொண்டுகள். உய்வு+இன்+ஐ= உய்வினை)

வினைகள் எப்போது எவ்வாறு நீங்கும்?

புறத்தே இறைவனை வழிபட்டுப் பூசனைகள் புரியும் போது கண், காது போன்ற புற-உடம்பின் உறுப்புக்களால், மாசுறு காட்சிகளைக் காண்பது, தீயனவற்றைக் கேட்பது போன்ற உலகியல் தொடர்பான வினைகள் செய்வது தவிர்க்கப்படும். இஃது உடல்தொண்டில் ஈடுபடுகிற சரியையாளர்க்கு நிகழ்வது.

மனத்தின்கண் சிவத்தினை நினைந்து அகப் பூசனை செய்யும்போது, மனம், புத்தி போன்ற அகத்தே உள்ள உணர் கருவிகளால், வெளிஉலகச் சிந்தனை பற்றிய வினைகள் குறையும். இஃது மகன்மை நெறியில் அன்பு செய்யும் கிரியை நெறி யாளர்க்கு நிகழ்வது.

நினைப்பவர் மனம் கோயிலாக்கொண்டவன், அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனை'ச் சிவோகம்-பாவனையால், இடையறாது சிந்தித்து, அவன் திருவடிகளையே எப்பொழுதும் நினைந்திருக்கும்போது, அத்திருவடியே கண்ணிலும் கருத்திலும்

(புறக்கண்ணிலும், அகக்-கண்ணிலும்) நிலைபெறும். உலகியல் வினை-ஈட்டம் இல்லாது ஒழியும். இஃது திருவருள் தொடர்பான அருள்வினையாதலால், இதற்குரிய உயர்ந்த பேரின்பப் பயனையும் இது கொணருகிறது. இஃது தோழனாய்த் தொண்டு செய்யும் யோக-நெறியாளர்க்கு நிகழ்வது.

ஆகாமிய வினை வறுத்த வித்தாகும்

நாளும் எரிஓம்பி அகவழிபாட்டால், தன்னை உள்ளன்போடு நினைக்கிற மெய்யடியார்களின் சீரிய வழிபாட்டை உகந்து ஏற்று மகிழ்கிறான் சிவபெருமான்; அப்போது நாம் செய்கிற அனைத்துப் பணிகளும், நாம் இயற்றிய ஆகாமிய வினை களாகாமல், அவன் செய்த அருளிப்பாடாகவே நிற்கும். ஆகாமிய வினை நேர்ந்தாலும் அஃது தொடர்வது இல்லை; வறுத்த வித்துப் போல ஆற்றலற்று மறுபிறவியை உண்டுபண்ணாதே ஒழியும்.

பிராரத்தம் உடல்-ஊழாய்க் கழியும்

பிராரத்தம் என்பது இப்பிறப்பில் நுகர்தற்காக ஏற்று கொண்ட வினை. இதனை நுகர்வினை, ஏன்ற-வினை, ஊழ் என்றெல்லாம் கூறுவர். இவற்றை அவரவரே உரிய காலத்தில், உரிய வகையில் நுகர்ந்துதான் தொலைக்க வேண்டும். அதுவே பொது நியதி. அவ்வாறு நுகரும்போது, மார்க்கண்டேயர் போன்ற அருளாளர்கள் வழியைப் பின்பற்ற வேண்டும்: சிவோகம் பாவனையிலிருந்து அனைத்தும் சிவச் செயல் எனக் கொள்ளுகிற உறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது ஊழ் வினையின் இன்பதுன்ப பயன்கள் இரண்டுமே இறைவன் சந்நிதியில் உடலூழாய்க் கழியும். ஆகாமியம் வறுத்த விதை போல் ஆகி, மேற்பிறவியைத் தோற்றுவிக்காது.

> *பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர்க் கோதைமார்தம்*
> *மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவோடு மூப்பு வந்து*
> *கோலனாய்க் கழிந்த நாளும், குறிக்கோள் இலாது கெட்டேன்:*
> *சேல்உலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்துளானே!*
>
> -அப்பர் பெருமான், தேவாரம்

சஞ்சிதம் சுட்டெரிக்கப்படும்

சஞ்சிதம் என்பது தொகுப்பு வினை; அது சிவகுரு அருளுகிற நிர்வாண தீக்கை மூலமும் சீடன் நாளும் அகத்திலும் புறத்திலும் எரி ஓம்பிச் சிவ வழிபாடு செய்கிற வேள்வித் தீயிலும் சுட்டெரிக்கப்பட்டு நீங்கும்.

எல்லா ஆன்மாக்களையும் அவரவர் நிலையிலிருந்து அடுத்துள்ள உயர் நிலைக்கு முன்னேற்றவே விரும்புகிறான் சிவபெருமான்; ஆகவே, உயிர்களாகிய நாம் நற்சிந்தனை களால் முன்னேறுதற் பொருட்டு மனம், மொழி, மெய்களை நமக்கு அருளியுள்ளான். ஆயினும் வினைசெயல் வகையால் நாம் பல்லாற்றானும் வேறுபட்டு நிற்கின்றோம்.

ஆகவே ஆன்மாக்களின் வினைநீக்கத்துக்காக அவன் கைக்கொள்ளும் முறைகளும் பல தரத்தனவாகின்றன. இவ் வுண்மையை நிறைந்த அனுபவம் மிக்கவரும் சகல-ஆகம பண்டிதருமான அருள்நந்திசிவம் என்ற சைவசமய குரவர் மொழிவது கேட்போம்

அருளினால் உரைத்த நூலின் வழிவாராது அதன்மம் செய்யின்,
இருள்உலாம் நிரயத்துன்பத்து இட்டு, இரும்பாவம் தீர்ப்பன்;
பொருள்உலாம் சொர்க்கம் ஆதி போகத்தால்
பு(ண்)ணியம் தீர்ப்பன்;
மருள்உலாம் மலங்கள் தீர்க்கும் மருந்துஇவை வைத்தியநாதன்.

மருத்துவன் உரைத்த நூலின் வழிவரின், பிணிகள் வாரா;
வருத்திடும் பிணிகள், தப்பின்; தப்பிய வழியும், செய்யத்
திருத்தினன் மருந்து, செய்யாது உறும்பிணி சென்றும் தீர்ப்பன்;
உரைத்தநூல் சிவனும், இன்னே உறும் கன்மம் ஊட்டித் தீர்ப்பன்.

மண்ணுளே சில வியாதி, மருத்துவன் அருத்தி ஓடும்;
திண்ணமாய் அறுத்துக் கீறித் தீர்த்திடும்; சில நோய் எல்லாம்,
கண்ணிய கட்டி பாலும் கலந்து உடன் கொடுத்துத் தீர்ப்பன்;
அண்ணலும் இன்பத் துன்பம் அருத்தியே வினை அறுப்பன்

(சிவஞான சித்தியார் : 123 - 125)

இவ்வுண்மையை ஒரு சிறிய நடைமுறை நிகழ்வு கொண்டு எளிதாகத் தெளிவுறுத்தலாம்.

நம். வீட்டில் திருமண விழா; அதற்காகப் பண்டகசாலை யிலிருந்து பலவகைப் பாத்திரங்களை வெளியே கொண்டு வருகிறோம். விழா நிறைவுற்ற உடனே அவை யாவற்றையும் ஒரு சேர மீண்டும் பண்டக சாலைக்குள் கொண்டு சேர்க்கவே எண்ணுகிறோம். ஆயினும் எல்லாப் பாத்திரங்களையும் அவ்வாறு ஒரு சேர உள்ளே அனுப்ப முடிவதில்லை, காரணம்: விழாவின் போது, பாத்திரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமாகப்

பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன. அவற்றைத் தூய்மை செய்வதிலும் வேறுபட்ட பல முறைகளைக் கையாள வேண்டியதாகிறது.

தண்ணீர் குவளைகளாயின் அவற்றில் அதிகம் கறைகள் இரா; எளிதில் ஒரு துணியினால் துடைத்துவிட்டு அவற்றைப் பண்டகசாலைக்குள் அனுப்பிவிடலாம். பால், காபி, டீ போன்ற வற்றை குடித்திருந்தால், அந்தக் குவளைகளைச் சிறிது சீயக்காய்த்தூள் இட்டுத் தூய்மை செய்யலாம்; அதற்குச் சிறு முயற்சி போதுமானது.

சாம்பார், கறிகாய்கள் வைத்த பாத்திரங்களாயின், உட்பகுதி கறைபட்டிருக்கும்; அவற்றை பற்று நீக்கிச் சுத்தம் செய்யச் சிறிது கூடுதல் முயற்சி தேவை; வேறுசில பாத்திரங்களை அடுப்பில் ஏற்றி சோறு, குழம்பு, காய்கறிகளைச் சமைக்கப் பயன்படுத்தி இருப்போம். அடுப்பில் ஏறியதால் வெளியே கரிப்பிடித்திருக்கும், உள்ளேயும் பற்றுகள் இருக்கும்.

அவற்றை நீர்த்துறைகளுக்கு எடுத்துச் சென்று, தலைகுப்புறக் கவிழ்த்து, அதன்மேல் கொஞ்சம் மண், செங்கல் போன்ற வற்றை இறைத்து, அதன் மேலே ஒரு ஆள் ஏறி நின்று மிதிமிதி என்று மிதித்துக், காலினால் தேய்த்துத் தூய்மை செய்ய வேண்டிய தாகிறது. இவ்வாறு மாசுகளின் வேறுபாட்டிற்கு ஏற்ப, தூய்மை செய்யும் முறையும், முயற்சியும், தூய்மை செய்யுங்கால் அந்தப் பாத்திரங்கள் படுகிற பாடும் அதற்கான கால அளவும் வேறு படுகின்றன அன்றோ? ஆதலால் அவற்றைப் பண்டக சாலைக்குள் சேர்ப்பிப்பதிலும் வேறுபாடு நிகழ்வதைக் காணுகிறோம்.

அதே போன்றுதான், பலப்பல வகையாக வினைகளைச் செய்துள்ள ஆன்மாக்களை, வினை வேறுபாட்டிற்கு ஏற்ப, இறைவனும் உலக வாழ்வில் புகுத்திப் பல்லாற்றானும் செம்மைப் படுத்த வேண்டியதாகிறது.

இவ்வாறாகச் சிவ சிந்தனையினால் மட்டுமே வினைகள் அனைத்தும் முழுமையாக நீங்குகின்றன. இந்நிலையில், ஆன்மா திருவடிப் பேற்றிற்குத் தகுதியுடையதாகிற பெற்றிமையை நாளை சிந்திப்போம்'' எனக்கூறி அன்பர்களுக்கு விடையளித்தேன்.

பத்தாம் இயல் முற்றிற்று.

இயல் - 11

திருவடிப் பேறு

(அறிவானந்தப் பேறு)

சிவபூசையில் கரடி!

''ஐயா! சிவபூசை செய்யும் ஓரிரு மணி நேரமும், நம் சிந்தனைகள் சிவத்தின்பால் ஒருமுகமாக நிலைத்திருப்பது தான் உயர்ந்த நிலை என அறிவுறுத்தினீர்கள். ஆனால், முழு விருப்போடு சிவபூசை செய்யும்போதுகூட அந்த முழு நேரமும் நம் அறிவும் மனமும் குவிந்து ஆண்டவனையே பற்றி நிற்கவில்லையே!

எதிர்பாராதவை, இனந்தெரியாதவை, தொடர்பில்லாதவை எனப் பலப்பல பயனற்ற, சிந்தனை-ஓட்டங்கள் மன ஒருமையை சீர்குலைக்கின்றனவே. அறிவினை மழுங்கச் செய்து இடர்ப் படுத்துகின்றனவே. இவ்வாறு நிகழ்வதற்குக் காரணம் என்ன? இதை எவ்வாறு தவிர்ப்பது?'' என வினவினார் குப்புசாமி.

''ஓர் உண்மையை நாம் மீண்டும் மீண்டும் நினைவுப் படுத்திக்கொள்ள வேண்டும். நம் எண்ணச் சிதறல்களுக்குக் காரணம் நாம் செய்துள்ள வினைகளே. அவ் வினைகளைக் கழித்தற்காகவே நாம் இப்போது பிறந்துள்ளோம். வாழ்வின் ஒவ்வொரு நொடியும் அவ்வினைகளுக்கு உரிய பயன்களை உரியவாறு நாமே அனுபவித்துத் தொலைக்க வேண்டும் என்பதே நியதி. அவ்வாறு தொலைத்தால்தான் வாழ்வில் நிம்மதி.

நம் உள்ளத்தில் விருப்பு-வெறுப்பு-உணர்வுகள் மேலோங்கி நிற்கும் போது, அசுத்த மனத்தின் ஆளுமையே மேலோங்கி நிற்கிறது. அதனால் நம் அறிவு (ஆன்ம சிற்றறிவு) ஒடுங்கி விடுகிறது. மும்மலக் கட்டினுள் ஆன்மா, தன்னையே இழந்த நிலை அது. அப்போது காமம், குரோதம், வெகுளி, மயக்கம் போன்ற உணர்வுகள் மிகுந்திருக்கும்; மனித அறிவும் மழுங்கி விடும். 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு'-என்ற பழமொழி யாவரும் அறிந்த ஒன்று.

வழிபாட்டு நேரமேயாயினும் நாம் நுகரவேண்டிய ஊழ் வினைகள் இருப்பின், அவற்றின் பயனை ஊட்டுவதற்காகச்

சிவசக்தி நம் பிடரியிலுள்ள சிறு மூளையில் அமர்ந்து கொண்டு நம் அடிமனத்தை இயக்குகிறாள். அவள் ஆணைப்படி, அவள் செலுத்துகிற வழியில்தான், மனம் ஆன்மச் சிற்றறிவை வழிநடத்திச் செல்லுகிறது. இத்தனைக்கும் பின்னணியாக இருப்பது நம்முடைய ஊழ்வினையே.

நாம் தற்போதத்தோடும், தன்முனைப்போடும் செயல் புரியுங்கால், அப்போதும் இறைவன் உடனாகவே நிற்கிறான். முரண்டு பண்ணுகிற முட்டாள் பிள்ளையைச் சிறிதுநேரம் அதன் போக்கிலேயே விட்டுத் திருத்த விரும்புகிறோமன்றோ? அதேபோல்தான் சிவபெருமானும். நம் அகங்கார உணர்வுகளைக் கருதி, அப்போது அவன் நம்மைத் தடுத்து நிறுத்துவதில்லை. ஆயினும் ஒவ்வொரு நொடியும் அவன் நம் ஒவ்வொரு செயலுக்கும் சாட்சியாகவே நிற்கிறான்.

இங்ஙனம் நாம் வினையை ஈட்டும்போது மட்டுமன்றி, அவ் வினைப்பயன்களை நுகர்கிற காலத்திலுங்கூட, அவன் நம்முள்ளேயே, நாம் அறியாதவாறு, தன்னை மறைத்து நிற்கிறான். வினைகள் நம்மால் நுகர்ந்து கழிக்கப்பெற்ற மறுகணமே அவன் மறைவிலிருந்து வெளிப்பட்டு, நமக்குத் திருவருள் பாலிக்கிறான். இவ்வுண்மையைப் பண்டுதொட்டே நம் தமிழ்ச் சான்றோர்கள் அனுபவ வழி தெளிந்திருக்கின்றனர். இதனை வினைவயிற் பிரிவு என இலக்கியங்கள் இயம்புகின்றன.

வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச் சுர மருங்கில் தவிர்தல் இல்லை;
உள்ளம்போல உற்றுழி உதவும்
புள்ளியல் கலிமா உடைமையான (தொல். கற்பியல் - 192)

எனத் தொல்காப்பியம் (கற்பியல்) இதற்குச் சான்று பகரும்.

ஆகலான் பூசைக்காலத்தில், தன்னை நமக்கு உள் நின்று உணர்த்தும் சிவபெருமான் அடிக்கடி நம்மை வெளி உலகச் சிந்தனையிலும் அலை மோதச் செய்வது இயல்பாகிறது. இதுவும் ஒருவகையில் அவனது மறக்கருணையே. பந்தமும் வீடும் ஆனாய் போற்றி-என்பார் அப்பரடிகள்.

எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீ(டு) அவை ஆய பராபரன்
அந்தம் இல்புகழ் ஆரூர் அரநெறி
சிந்தை உள்ளும் சிரத்துள்ளும் தங்கவே

(அப்பர் தேவாரம், 5-63)

எனவே, முரண்டுசெய்யும் புறச் சிந்தனைகளை வலிதே முடக்க நினைக்காமல், இருதய கமலத்தில் சிவபெருமான் திருவடி ஒன்றினையே நினைந்து வழிபடுவது நற்பயன் நல்கும். சுந்தரருடைய வாழ்விலும் இவ் அரிய உண்மைக்கான சான்று களைக் காணலாம்.

திருவொற்றியூரில் சங்கிலியாரை மணக்க விரும்பிய சுந்தரர், மகிழ மரத்தை மூன்று முறை வலம் வந்து, 'ஆயிழையீர்! இங்கு நான் பிரியாமை, உமக்கு இசையும்படி, இயம்புகிறேன்' எனச் சூள் உரைத்தபோது சிவபெருமான் அச்சூளுரைக்குச் சாட்சியாக மகிழமரத்தில் மறைந்திருந்தார். பின்னர் சூளுரை மறுத்துச் சுந்தரர் ஒற்றியூரை நீங்கியபோதும் சிவபெருமான் மறைந்து நின்றே சுந்தரரின் கண்பார்வையை மறைத்தார். உலகத்தவர் 'போ, குருடா! எனச் சுந்தரரைப் பழித்தபோதும், சிவபெருமான் மறைந்து, அவருடன் நின்றார். இறுதியில் வினை-நுகர்ச்சிக்கான கால அளவு முற்றுப் பெற்ற போது, கண்ணொளியைத் திரும்பக் கொடுத்தார்; தன்னையும் காட்டி அருளினார். அளவு மீறிய சிற்றின்ப நுகர்ச்சி ஒரு தீவினை யாகும்; அதற்குரிய பயன்களுள் ஒன்று கண்ணொளி மங்குதல். இஃது ஓர் அறிவியல் உண்மை. இதனை உடற்கூற்றியல், உளவியல் அடிப்படையில் சிந்தித்தல் பயனுடைத்து.

இமயமலையிலிருந்து வற்றாத வளத்தோடு, இடையறாது ஓடி வருகிறது கங்கை ஆறு. அதேபோன்று நம் உடம்பின் உயர்ந்த சிரசுப் பகுதியில் தோன்றி, உடல் முழுவதும் வளத்தைச் சேர்க்கிறது மூளை-முதுகந்தண்டு நீர் (*Cerebro Spinal Fluid*). இதனைச் சஹஸ்ராரமுதம் என்பர் சாத்திர நூலார்.

மூளையில் சுரக்கும் இத்தூய கங்கைநீர் முதுகந்தண்டு வழியாகக் கீழ்முகமாக இறங்கி, வழியில் இருதயத்திற்கும் மற்ற உள் உறுப்புகளுக்கும் வளம் சேர்க்கிறது. தொடர்ந்து அடிவயிற்றி லுள்ள மூலாதாரத்தை அடைகிறது. அங்கு மூலதார நெருப்பினால் ஆவியாகிக், கார் முகிலாய் (*Grey Matter*) நரம்புமண்டலத்துக்கு வளம் ஊட்டுகிறது. இத்தகைய ஆற்றல்மிகுந்த தூய நீரை அதிகமான சிற்றின்ப நாட்டமுடைய பலரும் பாலுறவிலேயே வீணாக்கி விடுகின்றனர்.

ஆற்றல்மிகுந்த அப்புனித நீர் அவ்வாறு கீழ்முகமாகவே வீணானால் அவர்களுக்குக் கண்ணொளி மங்குவதும், முற்றிலும்

பார்வை-இழப்பு நேருவதும் இயல்பேயாகும். மிகுதியான சிற்றின்ப நுகர்ச்சி ஒரு வினை; அதற்கு உரிய பயன் கண்ணொளி மங்குதல். இவ் எல்லா நிகழ்சிகளின்போதும் சிவபெருமான் உடனிருந்திருக்கிறார். சுந்தரர் தம் 16, 17-ஆவது அகவையில் சங்கிலியாரோடு கொண்ட மிகுதியான உடலுறவினைச் சேக்கிழார் பெருமான் திருவாக்கால் கேட்கலாம்:

> யாழின் மொழி எழில் முறுவல் இருகுழை கடைபிறழும்
> மாழைவிழி வனமுலையார் மணி அல்குல் துறை படிந்து
> வீழும் அவர்க்குஇடை தோன்றி மிகும் புலவி புணர்ச்சிக் கண்
> ஊழியாம் ஒருகணம்தான், அவ் ஊழி கணம் ஆம்
>
> (பெரியபுராணம் - 268)



மைய நரம்பு மண்டலமும் ஆகாய கங்கையும்

1. பெருமூளை
2. சிறு மூளை
3. நடு மூளை
4. மூன்றாம் நாளம்
5. தலைமைச் சுரப்பி
6. தலை உச்சிக்குழி
7. மூளை முதுகுத்தண்டு நீர் (CSF)
8. மூளைக் கால்வாய்
9. நான்காம் நாளம்
10. முகுளம்
11. உள் அரண்
12. நடு அரண்
13. மேல் அரண்
14. முதுகுத்தண்டு

இப்படத்தை இடம் வலமாக வைத்து (CSF) ஆகாயக் கங்கையின் ஓட்டத்தை உற்று நோக்குவார்க்குத் தமிழ் நெடுங் கணக்கில் 'ஓ' என்னும் வரிவடிவை அமைத்த நுண்மாண் நுழைபுலமிக்க நம் பழந்தமிழச் சான்றோரின் பண்பாடும் இறைஉணர்வும் தெளிவாகப் புலப்படும்.

மூலாதார அக்கினியைக் காமாக்கினியாக மட்டுமே பயன் படுத்தி வீணாக்காமல், சிவாக்கினியாகச் சிந்தித்தல் வேண்டும்; புறத்தே சிவவேள்வியில் செய்வதுபோன்று, அகப்பற்றுகளை எல்லாம், பாவனையால், மூலாதாரத் தீயில் ஆகுதிகளாகப் பெய்து, வழிபாடியற்றுவர் அருளாளர். அதன்மூலம் கண் ஒளிப் பெருக்கம், உடல் நலம், மன-வளம், சிவஞானத் தெளிவு போன்ற அளப்பரிய நலன்கள் பலவும் கூடி வரும் என்பது அனுபவத்தால் மட்டுமே உணரத்தக்க உண்மை.

ஒளியும் இருளும்

ஒளிக்கு மறுதலையானது நிழல் (இருள்). ஒளி, நிழல் இவை இரண்டுக்கும் இருப்பிடம் ஒன்றே. ஒளி இல்லையேல் நிழலும் இல்லை; ஒளி விரிய விரிய, நிழல் தன் ஆற்றலை இழந்து மறையும்; ஆனால் நிழல் எவ்வளவு காரிருளாய் விரிந்தாலும் ஒளியின் ஆற்றலைக் குறைக்கவோ அழிக்கவோ முடியாது; அழித்துவிட்டதைப் போன்ற ஒரு மாயத்தோற்றத்தை மட்டுமே அதனால் உண்டாக்க முடியும்.

ஞானம் என்றால் அறிவு. ஞானத்தை ஒளி என உணர்த்துவது மரபு. அதேபோல் அறியாமையை இருள் என எச்சரிப்பர் அறிஞர். ஒளி எந்த அளவுக்குப் பரவி இருக்கிறதோ அந்த அளவுக்கு இருளும் தன் ஆற்றல்களை விரித்திருக்கிறது. சொல்லப் போனால், ஒளி யின் உள்ளேயே இருள் ஒளிந்துகொண்டிருக்கிறது எனலாம்.

சிவசத்தி வெளிப்படுகிற முறைமை

ஞானமே வடிவானவன் சிவபெருமான்; அவன் ஒருவனே முற்றுணர்வுடைய கடவுள்; தன் திருவருட்சத்தியைக் கொண்டு உயிர்களைக் காத்தருள வேண்டும் என்ற உயரிய குறிக்கோள் உடையவன் அவன். அத்தகைய பெருநோக்கே அவனுடைய விருப்பம் ஆகிறது; அதனைச் சங்கற்பம் என்பர் வடநூலார். அவனது அப்பெருங்கருணையே இச்சா சத்தி என உருக் கொள்ளுகிறது.

விருப்பத்தைச் சீராக நிறைவேற்ற அவன் திட்டமிடுகிறான். அப்போது அவனுடைய ஆற்றலின் ஒரு கூறு ஞானசக்தியாகத் திருவுருக் கொள்ளுகிறது. உயிர்களின் நலனுக்காக அவன் படைப்பு முதலாய ஐந்தொழில்களை இயற்றுகிறான்; அப்போது அவனது பேராற்றலின் சிறுகூறே கிரியா சக்தி என்ற பெயரில் வெளிப்படுகிறது.

இங்ஙனம் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி ஆகிய வற்றின் உறைவிடமாகத் திகழும் சிவபெருமான் கோடானுகோடி சூரியர்கள் ஒருங்கிணைந்து தம் ஒளிக்கற்றைகளை வீசினால் எத்துணை பிரகாசம் விளையுமோ அதேபோன்று, அளப்பரிய பிரகாசத்தை உடையவன் என ஞானநூல்கள் அவனைப் போற்றித் துதிக்கும்.

சூரியன் தன் ஈர்ப்பு ஆற்றலால் கிரகங்கள் முதலிய வற்றை தத்தம் இடத்தில் செவ்விதே இயக்குவது போலச் சிவபெருமானும் ஆன்மாக்கள் அனைவரையும் தம்பால் முறையாக ஈர்த்துக்கொள்ளுகிறான்.

ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தைப் பெருமானே

(திருவாசகம், சிவபுராணம் - 74)

என்றும்,

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

(திருவாசகம், சிவபுராணம் - 64)

என்றும் சிவபெருமானைப் போற்றிச் சிவபுராணம் பாடி வணங்குவார் வாதவூரடிகள்.

ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால்

பரம்பொருளின் மறுதலையே பரத்தமை. பரம்பொருள் என்பது மேல் நோக்கிக் குவிந்த பேரின்பப் பெருநிலை; அதற்கு மறுதலையாகத் தலைவிரித்து ஆடுகிற பரத்தமையோ கீழ் நோக்கி விரிந்த, அகங்கார, இழிநிலைச் சிற்றின்பம்.

சிவபெருமானுடைய அளப்பரிய ஆற்றல்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கிறது ஆணவம். அதனை இருள் மலம் என்பர் சைவ அருளாளர். கடவுளைப் போலவும், உயிர்களைப் போலவும், இந்த ஆணவமும் எக்காலத்தும் அழியாமல் நிலையாக உள்ள

ஒரு பொருள். ஆண்டவனைப் போலவே, அதற்கும் அளப்பரிய ஆற்றல்கள் உண்டு; ஆனால் அத்துணையும் தீய ஆற்றல்கள்; அசுரத் தன்மை வாய்ந்தவை. அவை எங்கும் சூழ்ந்திருக்கின்றன; ஆண்டவன் ஒருவனால் மட்டுமே அவ் ஆற்றல்களை ஒடுக்க முடியும். ஆயினும், ஆணவத்தை முழுமையாக யாராலும் அழித்துவிட முடியாது. இதனை ஓர் உவமை மூலம் சிந்தித்துப் புரிந்து கொள்ளலாம்.

நாம் வாழுகிற இப்பேரண்டத் தொகுப்பு, சூரிய மண்டலத்தை மையமாகக் கொண்டு இயங்கி வருகிறது. சூரியன் நடுநாயமாக நிலைகொண்டு, தன் ஒளிக் கற்றைகளைப் பரப்புகிறான். அவனுடைய ஒளி வட்டத்தினுள் ஏராளமான விண்மீன்களும், கிரகங்களும் ஈர்க்கப்பட்டுச் சூழலுகின்றன, அத்தகைய கிரகங் களுள் ஒன்றுதான், நாம் உறைகிற பூமியும்.

சூரியஒளி வட்டத்துக்கு அப்பால் இருள் சூழந்த பகுதியில், சனி என்ற கிரகம் சுற்றி வருகிறது. அதற்கு இருள் கிரகம் என்றே பெயர். ஒளிக்கிரகமாகிய சூரியனுக்கும், இருள்கிரகமாகிய சனிக்கும் நடுவில் நாம் வாழுகிற இந்த நிலவுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இஃது சூரியனைச் சுற்றி வருகிற அதே நேரத்தில், தன்னைத்தானேயும் சுற்றிக்கொள்ளுகிறது, ஆதலால், சூரியனை நோக்குகின்ற பொழுதெல்லாம் ஒளிமயமாக இருக்கிற பூமி, மறுபக்கம் திரும்பும்போது காரிருளில் கவல்கிறது. ஆகவே தான் நாம் பகலையும் இருளையும் மாறிமாறிக் காணுகிறோம்.

தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிற பூமியைப் போன்றுதான், ஆண்டவனாகிய சிவத்துக்கும் இருள்மலமாகிய ஆணவத்துக்கும் நடுவில், தன் முனைப்போடு வாழ முற்படு கின்றன உயிர்கள். ஆகவே, பூமிக்கு நேருகிற பகல் இரவு களைப்போலவே, ஆன்மாக்களும் நல்வினை-தீவினைகளைச் செய்து, இன்பத்துன்பங்களில் மாறிமாறிச் சிக்கிப் பெரிதும் அல்லலுறுகின்றன.

எனவே, 'ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால்' என்ற அவல நிலையைக் கடந்து, பரசிவம் ஒன்றே பேரின்பப் பொருள் என்ற ஒரே உணர்வோடு முன்னேற வேண்டும்.

சுத்த மனத்தையும் கடந்த அருள் நிலை

''நாம் உலகியல் சேற்றிலே கிடந்து உழன்று கொண்டிருக் கிறோம். நம்மை இறைவன் எவ்வாறு தெய்விகப் புனித ஆற்றில்

நீந்தச் செய்கிறான்? அருள் கூர்ந்து விளக்க வேண்டுகிறோம், ஐயா!'' என விண்ணப்பித்தார் சிவசாமி.

''சுத்த மாயை, அசுத்த மாயை என மாயை இரண்டு வகைப்படும் என்றும், அவற்றிலிருந்து வெளிப்படுகிற மனமும் சுத்த மனம், அசுத்த மனம் என்று இரண்டு வகையாக அமையும் என்றும் முன்னரே கூறியுள்ளோம்.

அதேபோல், மாயை என்பது சிவபெருமானின் வைப்பு சத்தி என்றும், சிவசத்தி என்பவள் சிவபெருமானின் உள்ளீடான அருட் சத்தி என்றும் கண்டோம்.

சிவபெருமான் ஆன்மாக்களாகிய நம்பால் கொண்ட அளப் பரிய கருணையினால்தான் தன் சத்திகளையே நமக்கு உடம்பாகத் தந்தருளுகிறான் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஆணவத்தாலும் கன்மத்தாலும் கட்டுண்ட ஆன்மாவுக்கு முதற்கண் மாயை என்னும் சடசத்தியிலிருந்துதான் உடம்பு முதலியவற்றை நல்கி, வாழ்வியல் நெறியைப் பயிற்றுவிக் கிறான். அப்போது நம் பயில் களமாக இருப்பது அசுத்த மாயை. அசுத்த மனம்.

முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு என மொழிவர் இயல்பு உணர்ந்தோரே

(தொல்.பொருள் - ப. 22)

என்பது தொல்காப்பியம், நிலம் என்ற முதல் தத்துவத்துக்கும். காலம் என்ற 31-ஆவது தத்துவத்துக்கும் இடைப்பட்ட அசுத்த மாயையே ஆன்மாக்களின் விளையாட்டுப் பண்ணை (முதற் பொருள்) என்பது கருத்து.

மனம் தூய்மையுற்றால்தான் அலைவுகள் நீங்கும்; புத்தி, அகங்காரம் ஆகியவற்றோடு ஒருங்கியைந்து நின்று அத்தூய மனம் சிவமூல மந்திரத்தைத் தியானித்திருக்க முடியும்.

நம் உய்தியையே கருத்தாகக் கொண்ட சிவபெருமான் பொதுவகையால் நமக்கெல்லாம் அசுத்த மாயையின் தொடர்பினை உண்டாக்கித், தொடர்ந்து நம் எண்ணங்கள், சிந்தனைகள், செயற்பாடுகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ப, அசுத்த மாயா உலகப்பற்றினைச் சிறிது சிறிதாக நீக்கிச் சுத்த மாயையின் சார்பினை உண்டாக்குகிறான்.

இறைவன் அங்ஙனம் மனத்தைத் தூய்மைப் படுத்தியதோடு விட்டு விடுவதில்லை; நல்வினை, தீவினை என்ற இரண்டுமே மறுமறு பிறப்புகளுக்கு வித்தாகின்றன' - என்ற உண்மையைச் சிறிதுசிறிதாக ஆன்மாவுக்குத் தெளிவுறுத்துகிறான்; இன்ப துன்பங்கள் இரண்டையும் ஒப்பநோக்குமாறு செய்கிறான்; அவ்வாறு செய்வதன் மூலம் நமக்குச் சுத்த-மாயையின் சார்புங்கூட விரைந்து நீங்குமாறு செய்கிறான்.

அனுபவித்தால் மட்டுமே இன்பம்

''அசுத்த மனமும், சுத்தமனமும் நீங்கிய அந்நிலையில் நாம் (ஆன்மா) பேரின்பம் துய்க்க இயலுமா? ஐயா'' என வினவினார் குப்புசாமி. ''இயலுவதில்லை; இதற்கான காரணத்தை ஒரு நடைமுறை உவமை மூலம் தெளியலாம்.

ஓர் அறையில் சுவை மிகுந்த உணவு இருக்கிறது; இன்பம் காத்திருந்தாலும் இருள் சூழ்ந்த நிலையில் அங்குள்ள உணவு கண்ணுக்குப் புலப்படவில்லை. அப்போது அங்கு ஒளி வருகிறது; இருள் நீங்குகிறது; உணவு இருக்கும் இடம் முதலியன கண்ணுக்கு விளக்கமாகப் புலப்படுகின்றன.

உணவுவகைகள் கண்ணுக்குப் புலப்பட்டாலும், வயிறு நிறைதலாகிய இன்பம் அப்போதும் ஏற்படவில்லை. காரணம் என்ன? அவ் இன்பத்தைப் பெற நாம் யாது செய்ய வேண்டும்? மிக எளிதான விடை: அந்த உணவை எடுத்து நாம் உண்ண வேண்டும்; அதனால் மட்டுமே இன்ப அனுபவத்தைப் பெற முடியும்.

அதேபோல் மும்மலப் பிணிப்பால் இறை-பேரின்பத்தை நுகர முடியாதவாறு ஆணவ-இருளில் முழுகிக் கிடக்கிற ஆன்மா அதிலிருந்து விடுபடுதற் பொருட்டு மாயை என்னும் சிறு விளக்கொளியைப் பெறுகிறது. அறநெறிகளில் பயிற்சியும் பெறுகிறது.

ஒன்றியிருந்து சிவத்தொண்டு செய்கிறது. ஒன்றியிருத்தல் என்ற அக உணர்வின் மூலம் ஆணவமல பந்தம் அறுபடுகிறது. சிவத்தொண்டு செய்தல் என்பது இறைபணி. அஃது அகம், புறம் ஆகிய இருவகைத் தொண்டினால் நிகழ்வது. அதன் மூலம் கன்ம மலமும், மாயா மலமும் நீங்குகின்றன.

நாம் பேரின்பத்தை நுகர்தற்கு, வினைகளும் பிற மலங்களும் நம்மிலிருந்து நீங்கினால் மட்டும் போதாது; சிவபெருமானது திருவடியை அடையவேண்டும் என்ற தலையாய குறிக்கோள் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வேட்கையாக எழவேண்டும். அத்தகு திருவடிப் பேறு அடைதல் மூலமே இறை-பேரின்பத்தை நுகர முடியும்.

கொடைவடிவினன் சிவபெருமான்

ஆன்மாக்களாகிய நாம் சிவபெருமான் திருவடியை அடைதற்கு அவனே அருள் பாலிக்கிறான். மாயா சத்தியின் தொடர்பினை நம்பால் நீக்குகிற அதே நேரத்தில், சிவபெருமான் தன் அருளாற்றலாகிய சிவசத்தியையே நமக்கு உடம்பாகத் தந்தருளுகிறான்.

அம்மையையே உடம்பாகக் கொண்ட அந்த நிலை அம்மைப்பேறு எனப்படுகிறது. இருவகை மாயா-உடம்பு களையும் நீத்த உயிர் அருளுடம்பையும் திருவடிப் பேற்றினை யும் பெற்றுப் பேரின்பத்தில் திளைக்கிறது; இஃது சிவபெருமானின் அளப்பரிய கருணையின் வெளிப்பாடு அன்றோ? அவனைக் கொடைவடிவினன் என்றே ஞானசம்பந்தர் போற்றிசைப்பார். (பிடியதன் உரு உமை கொள...)

ஆகவே இறைப் பேரின்பத்தை நுகர விரும்புகிற ஆன்மா, திருவடி அடைதற்கு இடையறாது ஒன்றிய சிந்தையோடு முற்படுதல் வேண்டும் என்பது உய்த்துணரற்பாலது.

திருவடிப் பேற்றின் சிறப்பு

திருவடி என்பது சிவபெருமானின் திருவருளாகிய அருளாற்றல். அத்தகு திருவடிப் பேரின்பத்தை நுகர்தற்கு உரிமையுள்ளவர்கள் ஆன்மாக்களாகிய நாமே என்பதை முன்னரே கூறினோம்.

ஏதேனும் ஒன்றைப் பற்றிக் கொண்டிருப்பது மனத்தின் இயல்பு; ஆன்ம இலக்கணமும் அதுவே. ஆகவே தீய சத்திகள் ஆன்மாவைப் பற்றிக்கொள்ளாதவாறு, இளமை தொட்டே இறைவன் திருவடியைப் பற்றி, நிலைபெற்றிருக்குமாறு மனத்தைப் பயிற்றுவித்தல் வேண்டும். அப்போது, ஆன்மச் சிற்றறிவும் ஆண்டவனின் பேரறிவுக்குள் ஒடுங்கி, நிலையான அறிவானந்தம் எய்துதல் கூடும்.

இறைவன் ஆன்மாவைத் தன்னுள் ஏற்கும் முறைமை

எல்லா ஆன்மாக்களும் தில்லைக்கூத்தன் திருவடியில் தான் வந்து சேர்கின்றன. ஆயினும், அவ்வாறு சேருவதில் இடத்தாலும், காலத்தாலும் அவை வேறுபடுகின்றன. பொதுவாக ஆன்மாக்களை இரண்டு வகையாகப் பிரித்து நோக்கலாம். ஒன்று: ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களால் கட்டுண்ட ஆன்மாக்கள்; அவர்களுள் தீவினையாளரும், நல்வினை யாளரும் அடங்குவர். மற்றது :அம்மலங்களின் கட்டிலிருந்து விடுபட்ட ஆன்மாக்கள், மெய்த் தவ யோகிகளும் ஞானிகளும் இப்பிரிவில் அடங்குவர்.

மும்மலக் கட்டுநீங்காத ஆன்மாக்கள், முயலக வடிவில், கூத்தப்பெருமானின் வலது திருவடியில் அழுந்தி மறுபிறப்பினை எதிர்பார்த்துக் கிடக்கும்; பற்றுநீத்த ஆன்மாக்களோ அவனுடைய தூக்கிய இடது திருவடிக்கீழ் நிலையான பேரின்பம் துய்க்கின்ற தலைமைப் பேற்றினைப் பெறுகின்றன. அத்தகைய ஆன்மாக் களுக்கு மறுபிறப்பு இல்லை.''

பிறப்பு நீங்க வழி

''பிறப்பு நீங்கவேண்டுமானால், யாது செய்ய வேண்டும்? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

''உயிர் என்னும் அறிவுப் பொருள் சடமாகிய ஏதேனும் ஓர் உடம்பொடு கூடி உலாவருவதையே பிறப்பாகவும் வாழ்வாகவும் நாம் பொதுவாகக் கருதுகிறோம். இத்தகு வாழ்வு என்பது மிகக் குறுகிய காலஎல்லைக்கு உட்பட்டது. உயிர் என்பதோ கால-எல்லைக்கு அப்பாற்பட்ட அநாதிப் பொருள்; அது மீண்டும் மாயா உடம்பினுக்குள் புகாமல் இருப்பதையே பிறப்பு-நீக்கம் என்றும் விடுதலை என்றும் வீடு (விடுதல்) என்றும் பலவாறு சாத்திரங்கள் அறிவுறுத்தும்.

பிறப்(பு)என்னும் பேதைமை நீங்கச் சிறப்(பு)என்னும்
செம்பொருள் காண்ப(து) அறிவு (குறள் - 358)

என்பது தெய்வப் புலவர் வாக்கு அன்றோ? வாழ்வின் ஒரு காலகட்டத்தில் உலகியலின் நிலையாமை தெளிவாகும். அப்போது துன்பச் சூழலிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணம் நம் உள்ளத்தில் மேலெழுவது இயல்பாகிறது

அப்போது நாம் உள்ளன்போடு இறைவனை இரந்து வேண்டு கிறோம். முன்னர்க் கூறியதுபோல, அவனும் மடைமாற்றம் செய்து, சித்தத்தைச் சிவத்தின்பால் நிலைபெறச் செய்கிறான். அவனருளால் திருவடிப் பேறு வாய்க்கிறது.

''கள்ளப்புலக் குரம்பை கட்டு அழிக்க வல்லான்'' சிவபெருமான் என்பது திருவாசகம். இங்ஙனம் தகாதவற்றை விட்டுத் தக்கதைப் பெறுதலே (விடுதல்+பெறுதல்=வீடு+பேறு) வீடுபேறு என்றும் போற்றப்படுகிறது. அத்தகைய பரமுத்தி எனும் பேறு பெற்ற ஆன்மாக்களுக்கு மறுபிறப்பு என்பது இல்லை என ஞானநூல்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன.''

உண்மைச் செல்வம் எது?

''நம் வாழ்வில் உண்மைச் செல்வம் என்பது எது? ஐயா! என வினவினார் சிவசாமி.

''உண்மைச் செல்வம் என்பது நிலையான இன்பம் தருவதாக இருக்க வேண்டும்; துன்பக் கலப்பில்லாததாக இருக்கவேண்டும்; எந்நாளும் அமைதியான உள்ளத்தைத் தர வேண்டும். அதுவே நுண்ணறிவுக்கும் வித்தாக அமைய வேண்டும். அதையே செம்பொருள், மெய்ப்பொருள் என்றெல்லாம் சான்றாண்மை மிக்க நம் முன்னோர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இவ் உண்மையை அனுபவ வழி உணர்ந்தவர்களே அறிவர்களாகவும், மெய்ஞ்ஞானி களாகவும், முனைவர்களாகவும், அருளாளர்களாகவும் போற்றப் பெறுகின்றனர்.

தம் மூன்றாம் அகவையில் அன்னை உமையவளின் திருமுலைப்பாலினை அருந்தி ஞானத் தெளிவு பெற்ற திருஞானசம்பந்தர், தேவாரப் பண் இசைத்துப் பலப்பல உயரிய வாழ்வியல் நெறிகளை நமக்கு உணர்த்தியுள்ளார். உண்மைச் செல்வம் பற்றிய அவருடைய தெய்வீகப் பாடலைக் காண்போம்.

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர்வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே

(சம்பந்தர், தேவாரம் - தில்லைப்பதிகம்)

அவரைப் போன்றே சுந்தரரும், மெய்ப்பொருள் பற்றிய தம் கருத்தினைப் பாடுகிறார்:

'திருவும் மெய்ப்பொருளும் செல்வமும்
எனக்கு உள்சீருடைக் கழல்கள் என்றுஎண்ணி,
ஒருவரை மதியாதே உறாமைகள் செய்தும்,
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலைசூழ் திரு முல்லைவாயிலாய்!
வாயிலாய்! வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்,
பாசுபதா! பரஞ்சுடரே! (சுந்தரர்-698)

எனவே, முந்தைய வினைகள் எளிதில் நீங்குவதற்கும், புது வினைகள் பற்றாமல் இருப்பதற்கும் அப்பரம்பொருளின் திருவடிமலர்களையே எப்பொழுதும் பற்றி நிற்க வேண்டும். இவ் உண்மையை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (குறள் - 350)

என்றார் திருவள்ளுவரும்.

"திருவடிப் பேறு பற்றிய தங்கள் விளக்கம் எங்கள் மனத்தில் நன்றாகப் பதிந்தது ஐயா! சைவசித்தாந்தத்தின் இத்துணை அரிய செய்திகளிலும் உள்ள உண்மையை இற்றைநாள் அறிவியல் கொண்டு நிறுவ இயலுமாயின், சைவசித்தாந்தத்தின் மாண்பினை உலகம் முழுவதும் மணக்கச் செய்யலாமே!" என்று ஆதங்கத்தோடு கூறினார் குப்புசாமி.

"ஆம், உண்மைதான். தங்களுடைய சிந்தனை பாராட்டுக்குரியது. இற்றை நாளில் அறிவியல் கருத்துக்கள் என நாம் மதிப்பிடும் அனைத்துமே நம்முடைய பழம்பெரும் சைவசித்தாந்த வித்திலிருந்து கிளைத்தெழுந்த விளை பொருள்களே. ஆதலால் திருவடிப் பேறு என்ற சைவக் கொள்கையின் சாயல் இக்கால அறிவியல் துறைகளிலும் இருக்கவே செய்கிறது. நம் உடம்பினைக் கொண்டே இவ் உண்மையை அறியலாம்.

நம் உடம்பின் தத்துவ அமைப்பை முன்னரே கண்டோம். சிவபெருமானின் வைப்பு ஆற்றலாகிய மாயையினை உடம்பாகக் கொண்டது ஆன்மா. அந்த ஆன்மாவையே தனக்கு உடம்பாகக் கொண்டவன் சிவபெருமான். அவனை 'அட்டமூர்த்தன்' எனச் சாத்திரங்கள் போற்றிசைக்கும். ஆகவே எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய அவன் நம் உடம்பிலும் முழுமையாக

நிறைந்திருப்பதில் வியப்பில்லை யன்றோ? அவனுடைய திருவடி நம் உடம்பில் எங்ஙனம் உணரற்பாலது எனக் காண்போம்.

மனித உடம்பினில் இறைவன் திருவடி

சுத்த மாயை, சுத்தாசுத்தமாயை, அசுத்த மாயை என்ற மூன்று கூறுகளாலானது நம் உடம்பு என்பதை முன்னரே அறிந்துள்ளோம். முதலில் நம் உடம்பின் அடியிலிருந்து தொடங்குவோம். நம் கால்கள் எப்பொழுதும் நிலத்திலும் நீரிலும் புழங்கிக் கொண்டே இருப்பன.

ஆதலால், எத்துணைதான் கழுவினாலும் அங்கு அழுக்கு இருந்து கொண்டே இருக்கும், ஆகவே அசுத்த மாயையின் மொத்த உருவமாகக் காட்சியளிப்பன, நம் கால்கள். அவற்றை நம் கால்கள் எனச் சொல்லுவதை விடச் சிவபெருமானின் கால்கள் எனக் கொள்ளுவதே பொருந்தும். அவை சிவபெருமான் திருவருளால் நம்மை உலக வாழ்வில் நடத்திச் செல்லுகின்றன.

நெஞ்சினில் திருவடி

நம் நெஞ்சுக் கூட்டினுள் இருதயம் என்ற குருதிக் கடல் உள்ளது. அது ஒரு சிவலிங்கத்தின் தோற்றத்தைக் கொண்டது; சற்று அழுந்த நோக்கினால், அஃது நேராகத் தொங்கவுமில்லை, படுக்கையாகக் கிடக்கவும் இல்லை; சிவபெருமானின் தூக்கிய திருவடியைப் போன்று, இடப் பக்கம் ஒருக்கழித்தாற்போல் உள்ளது.

இருதயத்தின் இரு கூறுகளில், இடப்பகுதியில் தூய செங்குருதியும், வலப்பகுதியில் அழுக்கான நீலக் குருதியு மாகவே எப்பொழுதும் நிறைந்திருக்கின்றன. எனவே தூய்மையும் அழுக்கும் கொண்ட நம் இருதயம் செந்நிறச் சிவனுக்கும், நீலவாலிழையாகிய உமைக்கும் உறைவிடமாய் மாதொரு பாக வடிவினைக் கொண்டது எனலாம்.

தூய்மையும் அழுக்கும் அங்கு எப்பொழுதுமே உள்ளமையால், விருப்பு வெறுப்பு, களிப்பு, கவலை என மறுதலைப் பொருள்கள் பலவும் விரவிய நிலையாகும். ஆகவே, (சுத்தம்+அசுத்தம்) சுத்தாசுத்த மாயை என்ற தத்துவ அமைப்புக்குச் சான்று கூறி நிற்பது நம் இருதயம் எனலாம்.

சிரசினில் திருவடி

''எண்சாண் உடம்புக்குத் தலையே பிரதானம்'' என்பது ஆன்றோர் வாக்கு; இது எக்காலத்துக்கும் பொருந்துகிற

முதுமொழி. நிலப் பரப்பில் உயர்ந்த இடம் மலை; அதே போல் மனித உடலில் உயர்ந்த இடம் தலை. இது நம் உடம்பினுள் ஆகாயமண்டலமாகத் திகழ்கிறது. நம் முன் தலையின் மேற்பகுதியை முழுமையாக நிறைத்துக் கொண்டிருப்பது பெருமூளை என்ற நுண்ணிய உறுப்பு. பெயராலும், அளவாலும் மட்டுமன்றி, நுண்ணிய பயன்பாட்டாலும் அது மிகவும் பெருமையுடையதாகும். மெய்ஞ்ஞானத் தெளிவு பெறுவதற்கு உறுதுணையாய் இருப்பது, பெருமூளை என்ற அந்த உறுப்பேயாகும்.

அதன் வடிவமைப்பைச் சற்றே கூர்ந்து நோக்கினால், அதன் மேற்பகுதி மண்டை ஓட்டின் வளைவுக்குள் பொருந்துமாறு மேல்நோக்கிக் குவிந்து ஒரு மானுடத் தலை போலவே காணப்படுகிறது. அதன் அடிப்பாகம், குவிந்தும் குழிந்தும் (*Concavo-Convex* ஆக அமைந்து) நம் பாதத்தைப் போன்று காட்சியளிக்கிறது. ஆகவே சிவபெருமான் திருவுருவினை நினைவூட்டுகிற இப்பெருமூளையை ஆயிரம் இதழ்த் தாமரையாகச் சிந்திப்பது, சைவ சமய மரபு.

பெருமூளை, சிறுமூளை, நடுமூளை, முதுகந்தண்டு ஆகியவற்றை உள்ளடக்கியது ஓர் அரிய கட்டமைப்பு. அதனை, இக்கால மேலைநாட்டு மருத்துவ அறிஞர்கள் மைய நரம்பு மண்டலம் (*Central Nervous System-CNS*) என்பர். அதன் தலைமைப் பகுதியாகிய பெருமூளையே, உடம்பின் அனைத்து அசைவுகளுக்கும் காரணமாகிறது. ஆகவே, சிவ தத்துவம் எனப் போற்றப் பெறுகிற சுத்தமாயைக்குக் கட்டியம் கூறி நிற்பது, நம் தலையிலுள்ள பெருமூளை எனலாம்.

நம் முன் தலையில் சிவன் சத்தி இருவரின் தொழிற்படு களமாக உள்ள பெருமூளை, மொத்த உடம்பின் அறிவுக் கருவிகளையும் செயற் கருவிகளையும் தூண்டுகிற ஞான ஊக்கியாகவும், கிரியா ஊக்கியாகவும் திகழ்கிறது. இப் பெருமூளையே நாம் தெய்வீக ஞானமும், பேரின்பமும் பெறுதற்குத் துணைபுரிகிற உயர்ந்த பள்ளியாக (பள்ளிக்கூடமாகவும், பள்ளியறையாகவும்) திகழ்கிறது.

ஆயினும் நாம் இதன் ஆற்றலில் சுமார் 2% மட்டுமே பயன்படுத்துகிறோம் என இக்கால நரம்பியல் நிபுணர்களும் கூறுகின்றனர். நம்மில் பெரும்பாலோர் அப் பள்ளியில்

பயில முற்படாத அவலத்திலேயே உழல்கிறோம். இஃது மிகவும் சிந்திக்கத்தக்க பேருண்மையாகும்.

படிமுறையில் திருவடிப் பேறு

சிவபெருமான் திருவடியை மனத்தால் காண்டல், நெஞ்சில் நினைத்தல், வாயால் வாழ்த்தல், கரத்தாலும், சிரத்தாலும் வணங்குதல், சித்தத்துள் சிந்தித்தல், அன்னையின் அருளால் அரவணைத்தல், அவ்வண்ணமே நிலைபெறுதல் என்றவாறு, ஆன்மா திருவடி இன்பத்தில் அணையும் அனுபவம் நம் ஒவ்வொருவருக்கும் படிமுறையில் அமைகிறது.

ஆன்மாக்களின் இத்தகு படிமுறை வளர்ச்சியை இருவினை ஒப்பு, மல பரிபாகம், சத்திநிபாதம், திருவடிப்பேறு என நால்வகைப்படுத்திச் சைவ சாத்திரங்கள் சிறப்புரைக்கும்.

இப்பேருண்மையை நம் சைவத்தமிழ்ச் சான்றோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அவர்கள் நம்மையும் அச்செந்நெறியில் ஆற்றுப்படுத்த விரும்பினர். அதனாலேயே, ஆன்மார்த்த சிவ வழிபாட்டு முறைகளைப் பத்ததிகளாக ஆக்கித் தந்துள்ளனர். ஆன்ம தத்துவம், வித்யா தத்துவம், சிவ தத்துவம் என்றவாறு, படி முறையில் ஆன்மா சிவ வழிபாடு இயற்றுகிற நெறி முறைகள் அங்குப் போதிக்கப்பெறுகின்றன.

சிவபெருமானின் தூக்கிய திருவடியைப் போன்றதோர் அமைப்பினைக் கொண்டது நம் இருதயம் எனக் கண்டோம். அங்கு மீ-ஒலி (*Ultra Sound*) ஆகிய தூல, சூக்கும பஞ்சாக்கரங் களின் துணைக் கொண்டு, நாம் அன்றாட சிவ வழிபாட்டின் அங்கமாக, அந்தர்யாகப் பூசையைத் தொடங்க வேண்டும். புனிற்றாவின் கன்று முட்ட, மடிப்பால் சுரக்கும் தாய்ப் பசு போலச் சிவபெருமானும் தம் மெய்யடியார்களின் இதயக் கமலத்தில் எப்பொழுதும் நீங்காது வீற்றிருக்கிறான். அப்போது அவனும் அன்பர்களின் உள்ளார்ந்த வழிபாட்டை ஏற்றுத் திருவருள் பாலிக்கிறான்.

அதில் ஓரளவேனும் நிறைவு காணும்போது, சிரசினுள் இயங்கும் முத்தித் திரு ஐந்தெழுத்தை முறையாக ஓதி, சிவதியானத்தை மேற்கொள்ள வேண்டும். அருளாளர்களின் இவ் அறிவுரையிலுள்ள நற்பயன் அவரவர் அனுபவத்தால் மட்டுமே அறியத்தக்க உண்மையாகும்.

அன்பைத் தொடர்ந்து அறிவு

அன்பைத் தொடர்ந்து அறிவு, அம்மையைத் தொடர்ந்து அப்பன், முல்லையைத் தொடர்ந்து குறிஞ்சி என்பனபோல, இதயத்தில் சிவ-வழிபாட்டைத் தொடர்ந்து சிரசில் சிவ-தியானம் என்றவாறு சிவ வழிபாடு சிவாகமங்களில் நெறிப்படுத்தப் பட்டுள்ள பாங்கு உன்னி மகிழற்பாலது.

சிவ வழிபாட்டை, இருதயத்தில் தொடங்குவதில், அறிவியல் அடிப்படையிலான மற்றொரு சிறந்த நன்மையும் உள்ளது.

சூரிய ஒளியிலிருந்தே சந்திரன் உள்ளிட்ட அனைத்துக் கிரகங்களும் தத்தம் ஒளியைப் பெறுகின்றன என்பது அறிவியல். அதேபோல், நெஞ்சுத் தானமே ஆன்மா என்ற அரசன் தன் அமைச்சர் குழாத்தோடு கொலுவிருந்து திருவோலக்கம் புரிகிற அத்தாணி மண்டபம் ஆகும்.

உயிர் என்பது ஒரு வியாபகப் பொருள், அது பொதுவாக உடல் முழுவதும் பரவியிருக்கிறது; என்றாலும், சிறப்பாக நெஞ்சுத்தானம், அடிவயிறு, சிரசு என்ற மூன்று இடங்களில் அதன் தொழிற்பாடு மிகுந்திருக்கும். அம்மூன்று இடங் களையும் முறையே சூரிய மண்டலம், அக்கினி மண்டலம், சந்திர மண்டலம் எனச் சைவ ஞானநூல்கள் சுட்டி உரைக்கும்.

உடற்கூற்றியலை உன்னுவார்க்கு நம் தமிழ் மூதாதையரின் நுண்மாண் நுழைபுலத்தின் மாண்பு நன்கு புலனாகும். நாம் நெஞ்சின் உள்ளே இழுக்கும் மூச்சுகாற்றின் உயிர்ப்பு ஆற்றலில்-20%, இருதயத்திலிருந்து வெளிப்படுகிற குருதியின் அளவில் 20%, உண்ட உணவின் சர்க்கரைச் சத்தில் 20%- என்றவாறு, நம் நெஞ்சுப் பகுதியிலிருந்து, சிரசுக்கு ஆற்றல்கள் செல்லுகின்றன என்பது இக்கால ஆய்வாளர்கள் கூறுகிற மருத்துவக் குறிப்பு.

உள்ளம் உள்கி, உகந்து, சிவன் - என்று
மெள்ள உள்க, வினை கெடும் மெய்ம்மையே;
புள்ளினார் பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே

(அப்பர் தேவாரம், 5-79-8)

என்ற அப்பர் பெருமான் திருவாக்குக்கு ஏற்பச், சிவத்தைத் தம் இதயக்கமலத்தில் தாங்கி, உள்ளம் உவந்து, வழிபடல் வேண்டும்.

ஆன்மார்த்த சிவ வழிபாட்டினை அங்ஙனம் நாம் நாளும் நம் இருதயத்தில் தொடங்கிப் பின்னர்ப் புருவநடு தியானத்திற்குச்

சென்றால், இருதய இயக்கம் சீராகி, அங்குக் குருதி ஓட்டமும் முறையாகி, சிரசினுள் நிறைந்துள்ள இரண்டு கோடி மூளை நரம்புகளுக்கும் தேவையான குருதி முதலியன சீராகக் கிடைக்கவும், 2%-பயன்பாட்டோடு கூம்பிக்கிடக்கிற, அந்த ஆயிரம் இதழ்த் தாமரை குருதி ஓட்டத்தால் வளமுறவும், நாம் அன்றாடத் தியானத்தின் மூலம், சிவ ஞானத் தெளிவு பெறவும் வழியுண்டாகும் எனச் சிந்திப்பது, இக்கால அறிவியல் ஆய்வு முறைகளுக்கும் பொருந்துவதாகும்.

உள்ளுணர்வும் உட்காட்சியும்

மெய்யடியார்கள் திருக்கோயில் திருவுருவங்களில் மட்டு மன்றி புறத்தே இயற்கையின் எழிலார்ந்த அமைப்புகளிலும் இறைவனைக் கண்டு மகிழ்வர். மேலும், தத்தம் உடம்பின் உள்ளேயும், அவ் உடம்பில் உறைகிற உயிருக்குள் உயிராகவும் சிவத்தைச் சிந்தித்து வழிபடுவர். ஆதலால், சிவபெருமானும் தன்னையே உறுபொருளாகக் கருதிச் சிந்திப்போர் சிந்தையில் மிகத் தெளிவாகத் தன்னைக் காட்டி நிற்கிறான்; அவர்தம் உள்ளுணர்வில் சிவஞானப் பேரின்பத்தை மேன்மேலும் ஊட்டு கிறான். இதனை அனுபவத்தில் உணரலாம்.

அவர்களுடைய அன்பு மனத்தையே தனக்கு உறைவிட மாகவும், கோயிலாகவும் கொள்ளுகிறான்; அங்கு அமர்ந்து அவன் அவர்களுக்கு உட் காட்சியாகவும் (*Insight*), உள்ளுணர் வாகவும் (*Intution*) அரிய பல உண்மைகளைப் போதிக்கிறான்.

அப்போது, அத்தகு மெய்யடியார்களால் ஈட்டப் பெறும் புதிய வினைகளுக்கு கர்த்தா சிவபெருமானே. அவற்றின் பயனை அவனே ஏற்றருளுகிறான்; ஆதலால், மெய்யடியார்களை அப் புதிய வினைகள் பற்றுவதில்லை.

எனவே சிவதியானத்தின் மூலம் சிவபெருமான் திருவடியைப் பற்றி நின்று, பேரின்பப் பெருவாழ்வில் திளைத்திருப்பதற்கு நாம் இடையறாது முயல வேண்டும்.

இன்றைய சிந்தனையை இத்துடன் நிறைவு செய்வோம். மெய்யடியார்கள், சீவன்முத்தர்கள் ஆகியோரின் வாழ்வியல் நெறிகளைப் பற்றி நாளை காண்போம்; இப்போது நெடுநேரம் ஆகிவிட்டது; நீங்கள் வீட்டிற்குச் சென்றுவாருங்கள்'' என்றேன். சிவசாமியும், குப்புசாமியும் நன்றி தெரிவித்து வணங்கித் தத்தம் இல்லம் திரும்பினர்.

பதினொன்றாம் இயல் முற்றுப்பெற்றது.

இயல் - 12

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!

(சீவன் முத்தர் இயல்பு)

இனிய மாலை வேளை. சிவசாமி, குப்புசாமி இருவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு வந்தனர்; வழக்கம்போல் வணங்கி இருக்கைகளில் அமர்ந்தனர்.

''இன்பதுன்பங்களுக்குக் காரணம் ஊழாகிய முன்வினை என்பதையும், அவ்வினைகளின் பல்வேறு வகைகளையும், அவற்றை நீக்கி ஆன்மா முன்னேறுதற்கான நெறிமுறைகளையும், செம்பொருளாகிய இறைவனின் கருணைத் திறனையும் மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் எங்கட்கு அறிவுறுத்தியுள்ளீர்கள், ஐயா! நன்றி கூறச் சொற்கள் இல்லை. உளமார வணங்கி இன்புறுகிறோம்.

மேலும் ஓர் ஐயத்தைத் தெளிவிக்க வேண்டுகிறோம்: பற்றற்ற மனநிலை, வினைகள் யாவற்றையும் இறைவன் செயலாகவே கருதுதல், பிற உயிர்கள்பால் அன்பு கொண்டு அறநெறி பேணுதல், இறைவனை வணங்குதல் இவை மட்டுமே இவ்வுலக வாழ்வின் முடிந்த முடிவான நெறிமுறைகள் எனக் கொள்ளலாமா?'' என்று குப்புசாமி அன்றைய சிந்தனைக்குத் தோற்றுவாய் அமைத்தார்.

எச்சரிக்கை வேண்டும்!

''நீங்கள் இப்போது நினைவுகூர்ந்த யாவையும் சிறந்த நெறிமுறைகளே. ஆன்மாக்களாகிய நாம் அந்நெறி நின்று, மிகவும் உயர்ந்த பேறாகிய திருவடி இன்பத்தை இவ் வாழ்விலேயே பெறுவது போற்றுதற்குரியதாகும். ஆயினும், பிராரத்த வினை நுகர்ச்சி முற்றுப்பெறுகிற வரை ஆன்மா இவ் உடம்போடுதான் வாழவேண்டியிருக்கிறது. அப்போது முந்தைய பயிற்சி மற்றும் அனுபவம் காரணமாக, மும்மலங் களும் தத்தம் தீய ஆற்றல்களை நம் மீது மீண்டும் செலுத்துதற்கு வாய்ப்புகள் பல உள்ளன.

நேரடியாக நம்மிடத்தில் ஆணவம் தன் சேட்டைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாலும், நம்மோடு உடனுறையும் மற்றவர்களைத் தன் வயப்படுத்திக் கொண்டு, நம்பால் தொடர்பு கொள்ளச் செய்து நம்மைச் சிவத்திலிருந்து பிரித்து வைக்கவே முயலும்.

மற்றொரு மலமாகிய மாயையின் பால் நம் பற்று நீங்கினாலும் தொடர்ந்து அது தன் மயக்க-உணர்வாகிய கதிர்களை நம்மீது வீசி, நம் எண்ணங்களைக் கவர்ந்து, நம் புனிதப் பயணத்தைத் திசை திருப்பிக் கொண்டுதான் இருக்கும்.

வினை என்னும் கன்ம மலமும் இவை இரண்டோடும் கூட்டுச் சேரும்; புது வினைகளைச் செய்யவும், இருளில் அழுத்தவும் அவற்றிற்கு துணைநிற்கும். ஆகவே நம் வாழ்வியல் முறையை மிகவும் எச்சிரிக்கையாக வைத்துக் கொள்ளுவதில் நாம் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

'ஓரினப் பறவைகள் ஒன்றாகவே பறக்கும்' (*Birds of the same feather will flock together*)'' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. அதேபோல், நாமும் இறைமைப் பண்பில் நம்மோடு ஒத்த சிந்தனை, ஒத்த பண்பு நலன்கள், இயைபான செயற்பாடுகள் - இவை உடைய நல்லன்பர்களோடு மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

நற்றாமரைக் குளத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்

என்பது ஔவையின் வாக்கு.

தம்மை ஒத்த பக்குவத்திலுள்ள சிவனடியார்களையும், அவர்களுடைய திருவேடங்களையும், சிவாலயங்களையும் சிவம் என்றே சிந்தித்து வழிபடல் வேண்டும்.

அடி தொழுதலின் சிறப்பு

''ஐயா! ஆண்டவனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குதலை யாரும் மறுக்கவில்லை. ஆனால் குருமார்களும், அடியார்களும் நம் போன்ற மனிதர்களே யன்றோ? அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்குதல் சிறப்பு எனக் கூறப்படுகிறது. அவ்வாறு வணங்குவதற்குப் பலர் தயங்குகிறார்களே! அவர்களுக்கு

எவ்வாறு அடியார் வணக்கத்தின் சிறப்பினை அறிவுறுத்துவது?'' என வினவினார் குப்புசாமி.

சரியை, கிரியை, யோகம் என்ற மெய்த்தவத்தால் சிவஞானம் தலைப்பட்டுச் சிவோகம்-பாவனையில் வாழ்பவர்கள் அருளாளர்கள். ஆகவே, சைவ சமயச் சாத்திரங்கள், தோத்திரங்கள், புராணங்கள் யாவற்றிலும் குரு, இலிங்க, சங்கம(அடியார்) வழிபாடு மிகச் சிறப்பாக அறிவுறுத்தப்பெறுகிறது. அடியார்களின் திருவடிப் பெருமை அளவிடற்கரியது என்றே நல்லோர் பலரும் கருதுகின்றனர். இது தொடர்பான சிறப்புமிகு உண்மைகளை அறிவியல் கொண்டும் நிறுவ இயலும்.

காந்தம் என்பது ஈர்ப்பு ஆற்றலுள்ள ஒரு பௌதிகப் பொருள். அதை நீங்கள் அறிவீர்கள். சிதறிக் கிடக்கும் இரும்புத் துகள்களை அஃது தன்பால் ஒருசேரக் குவித்து இழுத்துக் கொள்ளும் ஆற்றலுடையது. ஒரு பௌதிகப் பொருளை மற்றொரு பௌதிகப் பொருள் ஈர்ப்பது போன்று, மனத்தை மனம் ஈர்ப்பதும், அறிவை அறிவு ஈர்ப்பதும் இயல்பு அன்றோ?

இரும்புக்குங்கூடத் தன் அளவில் ஈர்க்கும் ஆற்றல் இல்லை என்றாலும், காந்தத்தின் நெருங்கிய தொடர்பால் தானும் காந்த சத்தியைப் பெறுகிறது; (*magnetised iron* ஆகிறது) என்பது அறிவியல் உண்மை. ஒரு காந்தத்தின் தென்முனை மற்றொரு காந்தத்தின் வடமுனையை ஈர்க்கும் என்பதும், ஒரே மாதிரியான காந்த முனைகள் நெருங்கும்போது, ஒன்றின் ஒன்று முரணும் (*North pole of one magnet will attract the south pole of the other; identical poles will always repulse*) என்பதுவும் அறிவியலே.

நிலையான பொருள்கள் மூன்றனுள் இறைவனும், உயிர்களும் அறிவுப் பொருள்கள். சிற்றறிவு ஆன்மாக்களாகிய நம் அனுபவத்துக்காகவே, சடமாகிய மாயையிலிருந்து, பூதத்துவப் பொருள்கள் பலவற்றையும் படைத்தருளியுள்ளான் இறைவன். நமக்கு நல்லுணர்வு ஊட்டுவதற்காகவே அப்பூதப் பொருள்கள் அனைத்திலும் தான் கலந்திருப்பதோடு அப்பொருள்களின் குணநலன்களை எல்லாம் தன்னகத்தே கொண்டும் அவன் விளங்குகிறான்.

இறைவன், உயிர்கள் என்ற இரு பொருள்களுக்குமே காந்த ஆற்றல் உண்டு. எனினும் இறைவன் முற்றுணர்வினன், ஆதலால்

அவனுடைய ஈர்ப்பு ஆற்றல் அளப்பரியது; தெய்வீகமானது. நம் போன்ற உயிர்களோ சிற்றறிவுப் பொருள். சூரிய ஒளிக்கு முன்னால் மின்மினியைப் போன்று, இறைவன் திருமுன் நமக்கெல்லாம் எவ்வித ஆற்றலும் இல்லை' என்று சொல்லும் அளவுக்கு நம் ஆற்றல் மிகமிகக் குறைவானது.

உடம்பு என்னும் ஒரு காந்தத்தில் வடமுனையாக இருப்பது உச்சித்தலை, தென்முனையாக இருப்பது பாதங்கள். அளப்பரிய காந்த ஆற்றலை உடைய இறைவன், மிகச் சிறிய அளவே காந்த ஆற்றலை உடைய சிற்றறிவு-உயிர்களுக்குள், தன்பால் உண்மை அன்பு கொண்ட மெய்யடியார்களின் சிரசினில் தன் திருவடிகளை வைத்துத் தன் அருட்சத்தியால் அவர்களைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளுகிறான். அவ்வாறு செய்யும்போது, அவ்அடியார்களின் சிறிய ஈர்ப்பு ஆற்றலும் பெருகி, இறைமைத் தன்மையைப் பெறுகிறது.

'ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தைப் பெருமானே'

எனச் சிவபெருமானின் அளப்பரும் கருணையைச் சிவபுராண மாகவே அகவி மகிழ்வார் வாதவூரடிகள். இவ்வண்ணம் குருமார் களும், அடியார்களும் பன்னெடுங் காலம் மேற்கொண்ட மெய்த் தவத்தால், சிவபெருமான் திருவடியை அணைந்து, தத்தம் சிரசின் வழியாக மெய்யுணர்வு என்னும் காந்த-ஈர்ப்பு ஆற்றலைப் பெற்றவர்கள்.

இறைவனின் திருவடி அவர்கள் சிரசில் பதிந்து, மிகுதியான காந்த-ஆற்றலைத் தோற்றுவிக்க, அஃது அவர்கள் உடல் முழுவதும் பரவி இருக்கிறது. தெய்வீக ஈர்ப்பு உள்ள அவர் களின் திருவடி ஒரு காந்தத்தின் தென்முனையை ஒத்தது. அத்தகு திருவடியில் நம் போன்றோர் விழுந்து வணங்கும்போது, காந்தத்தின் வடமுனையை ஒத்த நம் தலையின்மூலம் இறைவனின் தெய்வீகக் காந்தமாகிய அருளாற்றல் நம்முள் பாய்ந்து நமக்கும் மெய்யுணர்வினைத் தோற்றுவிக்கிறது.

ஆகவே மெய்ஞ்ஞானத் தெளிவினைப் பெற விரும்புவோர், தம் சிரம் தாழ்த்தி மெய்யடியார் திருவடிகளில் வீழ்ந்து வணங்குதல் சிறந்த பயனைத் தரும் என்பது மனங்கொள்ளத் தக்க உண்மையாகும்.

பொன், பொருள், பதவி, பட்டம் போன்ற உலகியல் நலன்கள் சிலரிடம் குவிந்து கிடக்கின்றன. அவை எல்லாம்

நிலையற்று உருண்டோடும் தன்மையன. இருந்தும் அவற்றை அவர்களிடமிருந்து பெற விரும்பும் பலர் அவர்களின் கால்களில் வீழ்ந்து வணங்கி இரந்து நிற்பதை நடைமுறையில் காணுகிறோம். அந்த மாயா-ஈர்ப்பும்கூட சிவபெருமானின் உடைமையே என்ற உண்மையை நம்மில் பலரும் உணர்வதில்லை.

ஆனால் சிவனடியார்களிடம் இருப்பதோ, நிலையான ஆன்ம உதவிக்கு மேன்மேலும் நலம் பயக்கிற திருவருள்-ஈர்ப்பு. அதைப் பெறுவதற்காக அவர்கள் திருவடியில் வீழ்ந்து வணங்குவதன் சீரிய பயனை எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு வணங்குவதன் மூலம், அவர்களுடைய குருவருளை மட்டுமன்றிச் சிவபெருமானின் திருவருளையும் அன்றோ நாம் ஒருங்கே சேர்த்துப் பெறுகிறோம்!''

மெய்யடியார் இயல்பு

''போலிகள் நிறைந்த இவ்வுலகத்தில், மெய்யடியார்களின் திறனை நாம் எவ்வாறு அறிவது? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

''சிவபரத்தின் திருவடிப் பெருமைகளைப் பல்லாற்றானும் பாடியும் ஆடியும், ஓதியும், உரைத்தும் தம் அன்பு உள்ளத்தில் இடையறாது எண்ணி இருப்பது மெய்யடியார்களின் இயல்பு. அவர்கள் சிந்தையும் செயலும் எக்காலத்தும் சிவத்தின்பால் மட்டுமே ஒன்றி நிற்றலால், அங்குத் தற்போதமோ, தன் முனைப்போ இருப்பதில்லை.

உலக நிகழ்ச்சிகள் யாவும் கருணைக் கடலான சிவபெருமானின் விருப்பப்படியே அவனுடைய இச்சா-சத்தியால் நிகழ்த்தப் பெறுகின்றன என்றும், முற்றுணர்வினாகிய அவனது ஞான-சத்தியால்தான் உலகில் ஞான-ஒளி தெளிவாகிறது என்றும், பேராற்றல் உடைய அவனது கிரியா-சத்தியினாலேயே அனைத்து அருட் செயல்களும் நிகழ்கின்றன என்றும், அவன் திருமுன்னர் (சந்நிதியில்), கோடி கோடி சூரிய ஒளிக்கு முன் மின்மினிப் பூச்சிபோல, நாமெல்லாம் மிகமிகச் சிறியதொரு கருவியே என்றும் சிந்திப்போர் உலகில் நிறையவே உள்ளனர்.

அவர்கள் 'தம் விருப்பம்' என்பதின்றி 'அனைத்தும் சிவபெருமான் திருவருள்' என்றே எண்ணுவர். அதேபோல்

தம் அறிவுத்திறன், செயல்திறன் என்றெல்லாம் அவர்கள் மயங்கமாட்டார். அனைத்தையும் அவனுடைய அருளிப் பாடாகவே கருதுவர்.

அவர்கள் திருக்கோயில் திருவுருவங்களில் மட்டுமன்றி, புறத்தே இயற்கையின் எழிலார்ந்த உலக அமைப்புகளிலும், தத்தம் உடம்பின் உள்ளேயும் இறைவனைக் கண்டு மகிழ்வதோடு, அவ் உடம்பினில் உறைகிற உயிருக்குள் உயிராகவும் சிவத்தைச் சிந்தித்து வழிபடுவர்.

தன்னையே உறுபொருளாக உள்ளன்போடு சிந்திப்போர் சிந்தையில், சிவபெருமானும் மிகத் தெளிவாகத் தன்னைக் காட்டி *(In-sight)* நின்று, அவர்தம் உள்ளுணர்வில் *(In-tuition)* சிவஞானப் பேரின்பத்தை *(Eternal Pleasure)*. மேன்மேலும் ஊட்டுகிறான்.

இதன் மெய்ம்மையைத் திருஞானசம்பந்தரின் இயற்கை வருணனைகளிலிருந்தும், திருநாவுக்கரசர், திருமூலர் போன்ற அருளாளர்களின் உயிர்ப்படக்கிய உட்காட்சிகளாலும், சுந்தர மூர்த்தியின் தோழமை நெருக்கத்தாலும், மணிவாசகரின் திருவாசக அனுபவமொழியாலும் நன்கு தெளியலாம்.

எனவே, தம் விருப்பங்கள், அறிவாற்றல், செயல்திறன் ஆகிய அனைத்தையும், சிவபெருமானின் இச்சை (விருப்பம்), ஞானம் (அறிவு), கிரியை (செயல்) ஆகிய முத்திறச் சத்திகளின் அருளால்தான் பயன்படுத்துகிறோம் என்ற அழுத்தமாகச் சிந்தித்துச் செயற்படுகிற அடியார்களே மெய்யடியார்கள் ஆவர்.''

சீவன் முத்தர் என்பார் யாவர்?

''சீவன் முத்தர்களுக்கு வினை-நுகர்ச்சி இல்லை எனக் கூறப்படுகிறதே! அவர்களின் உலகியல் வாழ்வு பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறோம், ஐயா!'' என்றார், குப்புசாமி.

''சீவன் முத்தர்கள் எத்தன்மையர் என்பதை நாம் முதலில் அறிய வேண்டும். அவர்கள் ஞானகுருவின் கருணையைப் பெற்றவர்கள்; குரு உணர்த்துகிற விளக்கங்களைக் கவனமாகக் கேட்டவர்கள்; ஞான நூல்கள் அறிவுறுத்துகிற மெய்ப்பொருள் பற்றிச் சீராகச் சிந்தித்தவர்கள்; அவற்றை மிகுந்த ஈடுபாட்டோடு

ஆய்ந்து நோக்கியவர்கள்; அதனால் உட்காட்சி, உள்ளுணர்வு மூலம் மெய்ஞ்ஞானத் தெளிவு பெற்றவர்கள்; அங்ஙனம் துணிந்த மெய்ப்பொருளுடன் பிரிப்பின்றி உறுதியாக நின்று, சச்சிதானந்த பேரின்பத்தைத் துய்த்துக் கொண்டிருப்பவர்கள்; இத்தகைய இயல்புடையோரே சீவன்முத்தர்கள் ஆவர்.

ஜீவன் முக்தர் என்பது வடசொல், அதற்கு உடம்பொடு கூடி இவ்வுலகில் வாழும்போதே சிவபெருமான் திருவடியில் கூடி நின்று சச்சிதானந்தப் பேரின்பத்தைத் துய்ப்போர் என்பது பொருள்.

அவர்கள் உள்ளத்தால் சிவபெருமான் திருவருளையே நேசித்திருப்பர்; உணர்வால் சிவபெருமான் திருவடிகளையே நினைந்திருப்பர்; திருவருளால் அன்றி, தன் முனைப்பாலோ பிறவாலோ ஒன்றையும் அவர்கள் காணார். அவர்கள் அனைத்தை யும் அவன் விருப்பம், அவன் அறிவு, அவன் செயல் எனக் கொண்டு, அவ் அருளின் ஏவல் வழியிலேயே எஞ்ஞான்றும் நிற்பர்.

சிவனடியார்களையும் அவர்கள் உள்ளன்போடு தரித்துள்ள திருநீறு, கண்டிகைகளையும், சிவாலயங்களையும் கண்டதும் சிவத்தைக் கண்டதாகவே, உளம் மிக மகிழ்ந்து அவர்களின் திருவடிகளை வணங்கி, அவர்கள் வேண்டுவன கொடுத்துத் தக்கவாறு பணிவிடைகள் செய்து இன்புற்றிருப்பர்.

''திருவடி சேர்வதற்குத் தடையாக உள்ள அனைத்து உறவு களையும் தொடர்புகளையும் அவர்கள் புறக்கணிப்பர்; மும்மல அழுக்கைத் தாமும் ஞானநீரால் கழுவி, தம்போன்று மெய்ஞ்ஞானத் தெளிவு பெற்ற இறைப்-பற்றுடையார் மாட்டு நட்பு கொள்ளுவர்; மல மயக்கம் அறுத்த நல்லடியார்களின் திருவேடப் பொலிவையும், சிவாலயங்களையும் சிவபெருமானாகவே கருதி வழிபடுவர்'' என மெய்கண்டார் என்ற சைவ ஞானாசிரியர், தம் சாத்திர நூலில், சீவன் முத்தரின் இலக்கணம் கூறுகிறார்:

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ,
மால் அற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே

(சிவஞானபோதம் சூத்.12)

இதனைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர் அழகிய ஓர் நூற்பாவால் எடுத்தியம்பக் காணலாம் :

அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே (தொல். கற்பியல் - 47)

கருத்து

அந்தம்-இல் என்றால் முடிவில்லாத, நிலையான என்பன பொருள்; இதனை வடநூலார் சத் என்பர். 'சிறப்பின்-ஆகிய' என்பது சிவஞானமாகிய பேரறிவு கூடி வருதல், அதுவே உயிருக்குத் தனிச் சிறப்பு; அத்தகு மெய்ஞ்ஞானச் சிறப்பை வடமொழியில் சித் என்பர். இன்பம் என்பது துன்பக் கலப்பில்லாததாய் எக்காலத்தும் ஒரே தன்மையதாய் நிலவுகிற பேரின்பம்; அது சிவபெருமானின் திருவடிப் பேறாகிய உண்மைப் பேரின்பம், இதனை வடநூலார் ஆனந்தம் என்பர். சத்+சித்+ ஆனந்தம்=சச்சிதானந்தம். உலப்பிலா ஆனந்தமாயதேன்' என்பார் மாணிக்கவாசகர். நம் வாழ்வில் முடிந்த முடிவான குறிக்கோள் அதுவே.

தன்வயின் வருதலும் = (அத்தகு பேரின்பம் ஆன்மாவுக்கு) இந்த உடம்பொடு கூடி இவ்வுலகில் வாழும்போதே வந்து வாய்த்தலும்; வகுத்த பண்பே = சிவாகமங்கள் அறுதியிட்டுக் கூறியுள்ள உண்மையே. இஃது பண்டுதொட்டே நம் தண்டமிழ்ச் சான்றோர்களின் கொள்கை என்பது தொல்காப்பியரின் இந்நூற் பாவால் அறியற்பாலது''.

வினை உடலூழாய்க் கழியும்

'ஊழ்வினைகளால் அருளாளர்கள் உள்ளம் நோவதில்லை என்றும், அவர்களுடைய வினைகள் உடலூழாகவே கழிந்துபோம் என்றும் சாத்திரங்கள் கூறுகின்றனவே! அஃது யாங்ஙனம்? ஐயா!' என்ற ஐயத்தை எழுப்பினார், குப்புசாமி.

''ஊழ்-வினைக்கு ஏற்ற இன்பதுன்பங்கள் நுகரப்பட வேண்டும் என்பது யாவர்க்கும் பொதுவான ஒரு நியதி. அருளாளர்களாயினும் சீவன் முத்தர்களாயினும் அவரவர் நுகர வேண்டிய ஊழ்-வினை எச்சங்கள் அவற்றிற்கு உரிய காலத்தில் அவர்களைப் பற்ற முற்படுதல் இயல்பே.

இன்பமும் துன்பமும் உடல் மூலமாகவோ, மனத்தின் மூலமாகவோ, அன்றி இரண்டினாலுமோ நுகரப்படுகின்றன. உடல், மனம் இரண்டுமே மாயையின் காரியங்கள். உடல் என்பது புறக்கருவி; மனம் என்பது அகக்கருவி. ஆன்மா என்ற அறிவுப்பொருள், தான் நுகர வேண்டிய இன்ப துன்பங்களை உடல், மனம் ஆகிய இவ்விரு கருவிகளின் மூலமாகவே நுகர்கிறது. உடலால் நுகரப்படும் துன்பத்தைவிட மனத்தால் நுகரப்படுகிற துன்பம் உயிரைப் பெரிதும் வாட்டும்.

சீவன்முத்தர்கள் மனத்தை ஒருநிலைப்படுத்திச் சிவ-வழிபாடு இயற்றுவதால், மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று அகக்கருவிகளும் சிவபெருமான் திருவடிகளிலேயே கூடி நிற்கின்றன. நாம் கண்களை மூடிக்கொண்டால் வெளியிலுள்ள எந்த ஒரு காட்சியும் பார்வைக்குப் புலப்படாதன்றோ? அதே போன்று, மனம் முதலிய கருவிகள் இறைவனிடம் ஒன்றி நிற்கும்போது, அக்கருவிகளின் மூலம் உயிர் எவ்வித இன்ப துன்பங்களையும் உணர்வதில்லை.

அந்த வேளையில் அந்த ஆன்மா, நியதிப்படி நுகரவேண்டிய இன்ப துன்பங்கள் அவ் ஆன்மாவை நெருங்கினாலும் அவ் ஆன்மாவின் மன-உணர்வு வேறோர் இடத்தில் (சிவபெருமானிடம்) இலயித்திருப்பதால், இன்பத் துன்பத்தின் தாக்கத்தை மனம் பற்றுவதில்லை; ஆன்மாவும் உணர்வதில்லை; யாவற்றையும் உடலிலேயே தாங்கிக் கொள்ளும். இதனையே உடல்-ஊழாய்க் கழிதல் என்றனர். இவ் உண்மையை ஒரு நடைமுறை உவமை மூலம் தெளியலாம்.

மருத்துவர் ஒருவர் மயக்க மருந்து கொடுத்து நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்கிறார்; அப்போது, நோயாளியின் உடலில் கத்திகளின் கீறலும், நோயின் பாதிப்பும், அறுவையின் வலியும் இருக்கவே செய்யும்; ஆயினும், அவை அந்நோயாளியின் மனத்தால் சிறிதும் உணரப்படாமலேயே கழிந்து விடுகின்றன; மயக்கம் தீர்கிற வரையில் நோயாளி உள்ளத்தால் அவதியுறு வதில்லை. அவர் அமைதியாகப் படுத்திருக்கிறார்; நோயின் பாதிப்பும், பிற நோவுகளும் உடலளவில் கழிகின்றன அன்றோ? தலைவனைப் பற்றிய சிந்தனையிலேயே இலயத்திருக்கும் தலைவிக்கு அருகிலிருப்போரின் அழைப்போ ஆரவாரமோ

மனப்பாதிப்பை ஏற்படுத்துவதில்லையே. அவை போன்றதுதான், 'சீவன் முத்தர்களின் வினைநுகர்ச்சி, உடலூழாய்க் கழிகிறது' - என்ற சைவக்கோட்பாட்டின் உண்மையும். இதனை மற்றொரு வகையாகவும் தெளியலாம்.

ஒளிக்குமுன் இருள் நில்லாது

தாய்க் கோழியின் சிறகுகளுக்குள் அதன் சிறு குஞ்சுகள் ஒண்டி நிற்கும்போது, கழுகுகள்கூட அவற்றை நெருங்குவதற்கு அஞ்சும். பசு அமைதிக் குணமுடையதேயாயினும் அருகிலுள்ள தன் கன்றினை யாரேனும் துன்புறுத்தினால், அத் தாய்ப்பசு வெகுண்டு தாக்கும். அவையே போன்றுதான் சிவபெருமான் தன் மெய்யடியார்களைத் தன் திருவருள் வட்டத்துள் காத்தருளு கிறான். அஃது இறைவன் இயல்பு.

அம்மையப்பன் பேரொளிப் பிழம்பு; ஆணவம் என்ற மூலமலமோ காரிருள். எவ்வளவுதான் கரிய இருளாயினும், ஒளிப் பிழம்புக்கு முன் காரிருள் முனைந்து நிற்க இயலுமா?

உயிர் தனித்து இயங்காது; ஏதேனும் ஒன்றைச் சார்ந்தே இருப்பதும், தான் எந்தப் பொருளைச் சார்ந்திருக்கிறதோ அந்த பொருளின் வண்ணமாக இருப்பதும் உயிரின் பொதுஇயல்பு. உயிர்களுள் பக்குவர்களாகிய சீவன்முத்தர்களின் இயல்போ இறைவன் திருவருளையே முழுவதுமாகச் சார்ந்திருப்பது.

ஓர் அழகிய பெண் சாலையில் நிமிர்ந்து நடந்து செல்லு கிறாள்; உயர்ந்த மார்பகங்கள்; எடுப்பான தோற்றம். அவளை அவர்கள் பார்க்க நேரிடுகிறது. அப்போதும், காம உணர்வினால் அவர்கள் கட்டுற மாட்டார்கள். மாறாக, அவர்கள் அவளுடைய தலையைச் சிவலிங்கத்தின் குவிந்த இலிங்கமாகவும், உயர்ந்து பொலிவுறும் அவளுடைய எடுப்பான மார்பகங்களை சிவலிங்கத்தின் ஆவுடையாராயும் உருவகித்து, அவளுடைய மொத்த உருவத்தையும் ஒரு நடமாடும் சிவலிங்கமாகவே மனத்திருத்தி மாண்புறுவர். இதேபோல், அவர்கள் யாவற்றிலும் சிவபெருமானின் தோற்றத்தையே கண்டு இன்புறுவர்.

இங்ஙனம், இறையருளில் ஒடுங்கி, ஒளி நிலையில் இருந்துதான், சீவன் முத்தர்கள் ஐம்புலன்வழி உலகினைக் கண்ணுறுகின்றனர். ஆகவே இருளாகிய ஐம்புலச் சிற்றின்பங்கள் அவர்கள் முன் அற்பப் பொருளாகி, முனைந்து நில்லாமல்

அகன்றுவிடும்; மாயா காரியங்களால் சீவன்முத்தர்கள் மயக்குறுவதில்லை. ஆகவே புதுவினை ஈட்டம் அங்கு இல்லை. பழவினைகளும் முன்னர் கூறியதுபோல, உடல்-ஊழாய்க் கழியும். அப்பர் அடிகளை தேவமாதர் பலர் ஆடியும், பாடியும், பலவாறு மயக்க முயன்றனர்; அவரோ

இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமும் செயல் புரிய,
அத்தனார் திருவடிக்கீழ் நினைவு அகலா, அன்பு உருகும்,
மெய்த்தன்மை உணர்வு உடைய, விழுத் தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது, செய்பணியில் தலை நின்றார்[3]

(பெரியபுராணம் - 422)

எனச் சேக்கிழார் பெருமான் நாவரசின் மனத்திட்பத்தைப் போற்றிப் பரவுவார்.

சீவன்முத்தர்கள் யாவரும் அப்பர் பெருமானைப் போலவே, எப்பொருளின் பாலும் விருப்போ, வெறுப்போ கொள்ளாது வாழ்பவர்கள். அவர்கள் 'ஓட்டையும் பொன்னையும் ஒக்கவே நோக்குவர்'. 'சிக்கெனப் பிடித்தேன். எங்கெழுந் தருளுவது இனியே!' என்ற மணிவாசகத்தைப் போன்று, தாம் சிவனைப் பிரியாமலும், சிவன் தன்னைப் பிரியாமலும் அவனோடு அவர்கள் எஞ்ஞான்றும் ஒன்றுபட்டே இருப்பர்.

வினையின் நீங்கியோர் மாண்பு

'வினையின் நீங்கியவர்களைப் பண்டைய தமிழ்ச் சான்றோர்கள் எவ்வாறு சிறப்பித்துப் போற்றியுள்ளனர்? ஐயா!', என வினவினார் சிவசாமி.

''வினைகளின் இயல்பு பற்றியும் அறிவின் மாண்பு பற்றியும் நம் பழந்தமிழ்ச் சான்றோர்கள் தெளிவான சிந்தனை உடையவர்களாய் இருந்தனர்.

வினையும் அறிவுமே வாழ்வின் முக்கிய கூறுகள்; கிரியை, ஞானம் என்பன அவற்றிற்கான வடசொற்கள். வேதங்களும் ஆகமங்களும்கூட கிரியாபாதம், ஞான-பாதம் என்றே பகுத்து உணர்த்தப்படுகின்றன. உலகியலிலுங்கூட வாழ்வு வளமுறுவதற்கு அறிவுக் கருவிகளும், செயற்-கருவிகளுமே பெரிதும் துணை நிற்கின்றன.

வினைகளாயினும், அறிவாயினும் கடவுள் போன்ற உயர்ந்த குறியிடத்தை நோக்கி, உயர்நெறியில் செல்லுதல் வேண்டும்

எனச் சான்றோர்கள் விரும்பினர். தெளிந்த நீர்நிலையில் அடி ஆழத்தில் கிடக்கும் பொருள்கள்கூட, மேலிருந்து பார்ப்பவர் களுக்குத் தெளிவாகப் புலனாகிறதன்றோ? அதே போன்றுதான் தெளிந்த சிவஞானமும், சீலமிகு செயற்பாடுகளும் உள்ள மனிதர் களை அவர்கள் செம்மல்களாகவும், முனைவர்களாகவும் ஏற்று அவர்களின் கருத்துகளை இறைவனின் கூற்றாகவே மதித்தனர்.

அவர்களுடைய சிந்தனையில் ஒரு நிறைவு காணப் பெறுகிறது; ஆணவத்தால் முடக்குண்டு, அறிவு விளங்காத நிலையிலேயே ஆன்மாக்கள் இருவினை செய்கின்றன; ஆன்ம அறிவோ சிற்றறிவு; அச் சிற்றறிவையும் முடக்கிக் குற்றறிவாக்கி விளங்கா நிலையில் அழுத்தி நிற்கிற தீய பொருளே ஆணவம் என்பது என அவர்கள் உறுதியாக நம்பினர்.

தாம் செய்த இருவினைகளுக்கு ஈடாக, இன்ப துன்பங்களை நுகர்தற்காகவே, பிறப்பு என்ற பெயரால் உடம்பு முதலிய மாயா-காரியங்களை ஆன்மாக்கள் பெறுகின்றன. அங்கும் ஆணவத்தின் சேட்டை தொடர்கிறது ஆன்மாவுக்கு விருப்பு வெறுப்புகள் உண்டாகின்றன.

அறிவை முடக்குவது ஆணவம், செயலால் விளைவது வினை என்னும் கன்மம், இவைபோலவே, மாயை என்பதும் ஒரு மலமே. மாயையில் ஆன்மா மயங்குகிறது; பொன்னைச் சேர்க்க வேண்டும், பொருளைச் சேர்க்க வேண்டும், பதவியில் அமர வேண்டும் என்பன போன்ற பலப்பல மயக்கங்களால், ஆன்மா மேன்மேலும் தொடர்ந்து வினைகளைச் செய்கிறது. இங்ஙனம் மும்மலங்களும் ஆன்மாவைத் தொடர்ந்து பந்தித்து அல்லற்படுத்துகின்றன.

ஆன்மாக்களின் விருப்பத்துக்கு ஏற்ப, அவற்றின் போக்கிலேயே ஆண்டவனும் அவற்றைச் செலுத்துகிறான்.

ஆன்மா கடைத்தேற வேண்டுமானால், முதற்கண் ''நான்'' என்ற தற்போதத்தை அது கைவிட வேண்டும். மாயையின் பாலுள்ள மயக்கமும் மாயாகாரியங்களில் கொண்டுள்ள பற்றும் நீங்க வேண்டும். தெய்வப் புலவன் வாக்குக்கு ஏற்பப் ''பற்றற்றான் பற்றினைப் பற்று''தற்குப் பயில வேண்டும். அங்ஙனம் சிவத்தைப் பற்றி நிற்கும் ஆன்மா, உலகத் தொடர்பான வினைகளிலிருந்து விடுபடுகிறது.

சிவபெருமான் திருவருளால் மாயா உடம்பைப் பெற்ற ஆன்மா, கன்ம-மலத்தின் (வினைகளின்) எச்சத்தைக் கழிப்பதற் காகவே உடம்போடு உலகில் வாழ்கிறது.

சிவம் என்ற மெய்ப்பொருளையே சிந்தித்திருப்பதால், மெய்ஞ்ஞானத் தெளிவும் பெறுகிறது. அத்தகைய ஆன்மாவே உட்காட்சி, உள்ளுணர்வுகளால் *(In-sight and In-tuition)* கூர்த்தமதியுடைய முனைவராகிறது.

அவ் ஆன்மாவின் சொல்லும், செயலும், எண்ணமும் எழுத்தும் யாவுமே திருவருள் வயத்தால் நிகழ்வதால், அவற்றை யெல்லாம் முதல்வனாகிய சிவபெருமானின் கூற்றாகவே கொள்ளுதல் தகும். இவ் உண்மைகளை எல்லாம் நம் முன்னோர்கள் தெளிவாக உணர்ந்திருந்தனர். தொல்காப்பியரின் பொருள் பொதிந்த நூற்பா ஒன்றே இதற்குச் சான்றாகும்.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்

(பொருள். மரபியல் - 640)

இவ்வாறு உலக முகப்பட்ட வினைகளிலிருந்து நீங்கியவராகவும், நடுவுநிலையாளராகவும், எத்துறையில் வல்லுநராயினும் தெளிந்த மெய்ப்பொருள் சிந்தனை உள்ளவராகவும் இருப்போரே முனைவர் என்ற சொல்லுக்கு உரியவர்கள் என, மிகத் தெளிவாக அழகியதோர் விளக்கம் அளிக்கிறார், பழம்பெரும் சைவத்தமிழ் ஆசானாகிய தொல்காப்பியர்''.

முனைவன் : அறிவியல் நோக்கு

எந்த ஒரு கருதுகோளாயினும், அஃது பகுத்தறிவுக்கு பொருத்தி வருகிறதா? என எண்ணிப் பார்ப்பது சிவசாமியின் இயல்பு. ஆகவே அவர் ஒரு வினாவினை எழுப்பினார். ''அறிவியல் அடிப்படையிலும் தொல்காப்பியரின் இக்கருத்தை அரண் செய்ய இயலுமா? ஐயா!'' என்பதே அன்பர் சிவசாமியின் வினா.

''நன்றாக இயலும்; அதுவே உண்மை. ஆன்ம வளர்ச்சியை இரண்டு நிலைகளில் சிந்தித்துப் பார்த்தால் அவ் உண்மை தெளிவாகும். ஒன்று தொடக்க கால உலகியல் வாழ்வு. மற்றது இறைமைச் சிந்தனையில் முதிர்ந்த அருளியல் வாழ்வு.

ஊழ்வினைக்கு ஏற்ப உலகியலில் வாழும்போது, ஆன்மா பெரிதும் சிறுமூளையின் இயக்கத்தினாலேயே வாழ்கிறது.

பெருமூளையின் 2% மட்டுமே அந்நிலையில் பயனுகிறது என்பது அறிவியலாரின் ஆய்வு-முடிவு. நடைமுறையிலேயே இதற்குச் சான்று காணலாம்.

போதைப் பொருள்களாலும், கோமா போன்ற கொடு நோய்களாலும் உடலியக்கம் பாதிக்கப்படுவதை நடைமுறையில் காணுகிறோமே? மூளையின் எந்தப் பகுதி தாக்குண்டதால் அத்தகு நிலை ஏற்பட்டது? சிறுமூளையின் செயற்பாட்டில் குறை ஏற்பட்டதாலேயே யன்றோ?

இவற்றிலிருந்து நாம் என்ன அறிய முடிகிறது? ஆன்ம-சிற்றறிவுக்குத் தலையாய நிலைக்களன் சிறுமூளை என்பதும், இவ் அறிவு ஊழ்வினை தொடர்பான சிற்றறிவு என்பதும், உலக வாழ்வில் வினைவயப்பட்ட ஆன்மா சிறுமூளையிலேயே வளைய வந்து கொண்டிருக்கிறது என்பதையும், அறிவு நரம்புகள், அறிவுக் கருவிகள் (*Sensory Nerves and sensory Organs*) மூலமாகவே அஃது பொருள்களை அறிகிறது என்பதையும் தெளிவாக அறிகிறோம்.

சிறுவட்டத்துக்குள் பெரும்பொருள் அடங்காது அன்றோ? பெரிதும் சிறுமூளையைச் சார்ந்தது நம் உலகியல் அறிவு; அதைக் கொண்டு முற்றுணர்வினனாகிய சிவபரத்தின் சிறப்பியல்பு களை அறிதல் இயலாது.

இனி இச் சிற்றறிவு-உயிர் எவ்வாறு சிவஞானம் சித்திக்கப் பெறுகிறது என்பதைக் காண்போம்.

சிவபரத்துக்கு நம் உடம்பில் தொழிற்படுகளமாக இருப்பது பெருமூளை என்பதை முன்னரே பலகாலும் கூறி வந்துள்ளோம். அஃது நம் உடம்பினில் அமைந்துள்ள பேரின்பத்தானம். அதை ஆன்மா அடைய வேண்டும். அங்கு 2% அளவுமட்டுமே தன்னைக் காட்டிநிற்கும் பரம்பொருளைப் பெருமளவில் வெளிப்பட்டுவந்து அருள்புரியுமாறு விண்ணப்பித்தல் வேண்டும். அதற்கு ஒரே வழி சிவதியானம் செய்தலே யாம்.

சிவதியானத்தால் ஆன்மாவின்பால் நிகழும் மாறுதல்கள் என்ன? பிட்யூட்டரியின் நிலை என்ன? ஹைப்போதாலமஸ் என்ற விதிஎட்டில் நிகழும் மாறுதல்கள் என்ன? என்பவற்றைச் சிந்தித்தல் நல்ல பயன் தரும்.

இறைவனை நோக்கிய ஆழ்நிலைச் சிவதியானம் தொடரும் போது, பெருமூளையின் இன்ப-அதிர்வுகள் ஏற்படுகின்றன. ஆன்மாவைப் பற்றியிருந்த உலகியல் தொடர்பான இருள்-வினைகள் நீங்குகின்றன; விதி ஏட்டில் ஆன்மாவின் வினை களும் அவற்றிற்கான பயன்களும் காலநியதிப்படி குறிக்கப் பட்டிருக்கும். அவ் வினைகள் நுகர்ந்து கழிக்கப்பட்டதால், ஹைப்போதாலமஸ் என்ற விதி-ஏட்டில் அதுகாறும் பதிந்திருந்த ஊழ்வினைக் குறிப்புகள் அழிந்து விடுகின்றன.

சிவ-வழிபாடும், சிவ-தியானமும் அருள்-வினையாகி அப்பதிவேட்டில் ஆன்ம-உய்திக்கான சான்றாக அமைகின்றன. சிவ-வழிபாடும், சிவசிந்தனைகளும் விதி ஏட்டில் அருள்வினை களாகப் பதிவாகின்றன.

இவ் விதி ஏட்டையே சித்தம் எனத் தத்துவநூலார் குறிக்கின்றனர். இக்கருத்துப்பற்றியே

'சித்தத்தைச் சிவமாக்குதல்' என்றும்,
'சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்'

(சுந்தரர், திருத்தொண்டர் தொகை - 10)

என்றும் அருளாளர்கள் கூறுவர்.

சிவதியானத்தினால் முதுகுத்தண்டின் மூலம் மேல்நோக்கி முன்னேறிய ஆன்மா, சிரசினுள் ஆணைத்தானமாக (ஆக்ஞை-ஆதாரமாக) உள்ள பிட்யூட்டரியை அணைகிறது. பிட்யூட்டரி எப்போதும் தன் இயக்கத்துக்குத் தேவையான குறிப்புகளை ஹைப்போதாலமஸ் என்ற வினைப் பதிவேட்டிலிருந்துதான் பெறுகிறது என முன்னரே கூறியுள்ளோம்.

விதி ஏடு தூய்மையுற்ற நிலையிலும், வினைப் பதிவேட்டி லிருந்து பிட்யூட்டரிக்கு இப்போதும் குறிப்புகள் செல்லுகின்றன. அவை அருள்-வினை நுகர்ச்சிக்கான பேரின்பக் குறிப்புக்கள். ஆதலால் இப்போது ஆன்மாவுக்கு இறைவனின் பேரறிவு ஊட்டப்பெறுகிறது. அதுகாறும் சிறுமூளையால் தன் சிற்றறிவு கொண்டு சிந்தித்த மனிதன், ஆணைத்தானத்தை அணைந்த பெற்றிமையால், தெளிந்த சிவஞானத்தால் யாவற்றையும் நோக்கத் தலைப்படுகிறான்.

'எதற்கும் முன்யோசனை வேண்டும்' என்னும் கிராமியத் தொடரை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்; 'முன்யோசனை' என்பது பெருமூளையால் சிந்திப்பது என்னும் கருத்திலேயாம்.

பிட்யூட்டரி என்பது அருட்சத்தியாகிய அன்னை உமையவளின் அந்தப்புரம். ஆன்ம சிற்றறிவும் நான் என்ற தற்போது உணர்வும் சிவஞானத்துள் ஒடுங்கி விடுகிறது. அஃது சிவதியானத்தால் வளம்பெற்ற இறைமைத் தொடர்பான அறிவு. ஆதலால் சிவஞானமாகவே விளங்குகிறது.

ஊழ்வினை நுகர்ந்து கழிக்கப்பட்ட அந்நிலையில் ஆணவப் பிணிப்பும், மாயாகாரியப் பற்றும் நீங்கி விடுகின்றன. அப்போது அந்த ஆன்மா வினையின் நீங்கியதாகி, விளங்கிய அறிவினைப் பெற்றுத், தன் முனைப்புகள் மடங்கிச், சிவத்துள் ஒடுங்கிய முனைவனாகிறது. (மடம் என்ற பெண்மை இயல்புக்கு உண்மைப் பொருள் இறையருளும் மடங்குதல் என்பதை உணர்க) அவ் உயரிய ஆன்மாவின் கூற்றுக்களை முதல்வனின் கூற்றுக்களாகக் கொள்ளுவதில் அறிவியல் சார்ந்த உண்மை களும் உள்ளனவே?''

மேலும், 'வினையின் நீங்கியமை, விளங்கிய அறிவு, முனைவன், வழிபடு தெய்வம், நிற்புறம், கலிப்பா, வஞ்சிப்பா, துஞ்சல், படுக்கை, அல்குல் தைவரல், இடைச்சுர மருங்கில் (பிடரியில்) தவிர்தல் இல்லை. நன்னயப் பொருள்கோள்...'' என்பன போன்ற எண்ணற்ற தொல்காப்பியத் தொடர்களுக்கு உள்ளீடாக அமைந்துள்ள மெய்ப்பொருள் கோட்பாடுகள் தெளிவாகின்றன அன்றோ?

இங்ஙனம், இக்கால மேலைநாட்டு அறிவியல் ஆய்வு களோடு, நம் நாட்டுப் பழம்பெரும் தத்துவச் சிந்தனைகளும், செந்தமிழ் இலக்கண இலக்கியங்களும் செம்மாந்து நிற்பதை அறிய முடிகிறதன்றோ?''

இவ்வாறு யான் கூறியதும், சிவசாமியின் முகத்தில் மனநிறைவுக்கான பூரிப்பு தெரிந்தது.

அன்பே சிவம்

'வினையின் நீங்குவதற்கும், இறை இன்பத்தைப் பெறுவதற்கும் தேவையான முக்கிய பண்பு யாது? ஐயா!' என வினவினார் குப்புசாமி.

''எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்கிற மனப் பக்குவம் உடையவர்களே ஆண்டவனிடத்திலும் அன்பு செய்யும்

இயல்புடையவர் ஆவர். அவன்பால் நாம் கொள்ளுகிற அன்பே. பக்தி என்ற பெயரைப் பெறுகிறது.

அன்பும் சிவமும் இரண்(டு) என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்.
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

(முதல் தந்திரம் - 21, அன்புடைமை)

என்பது திருமந்திரம்.

அன்பினில் விளையும் அறிவானந்தம்

இறைவனிடம் பக்தி வளரவளர, அவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற உணர்வு பெருகும். திருக்கோயிலை அலகிடுதல், மெழுக்கிடுதல் போன்ற சிறுசிறு பணிகளைச் செய்யத் தொடங்கிப், பூமாலை தொடுத்தல் நந்தவனம் அமைத்தல் போன்ற தொண்டுகளில் மனம் ஈடுபடும்.

அதனைத் தொடர்ந்து சிவபூசை செய்தல், எரி ஓம்புதல், மனம் ஒன்றி இருந்து தியானித்தல் முதலிய சீலமிகு நெறி முறைகளில் வாழத் தலைப்படும். இங்ஙனம் சரியையில் தொடங்கிப் படிமுறையில் வளர்ந்து கிரியை, யோகங்களைச் செய்தல் சிவபுண்ணியமாம்.

சிவபுண்ணியங்களின் பயனாய் நிகழ்வது சிவஞானமாகும். சிவஞானத்தால் திருவடிப் பேறாகிய பேரின்பம் சித்திக்கும்.

அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்

(திருவாசகம், அடைக்கலப்பத்து - 10)

என மாணிக்கவாசகப் பெருந்தகை அனுபவித்துக் கூறுவதையே பண்டைய நம் செந்தமிழ்ச் சான்றோர்களும் வாழ்வின் முடிந்த முடிவான குறிக்கோளாகச் சிந்தித்துள்ளனர்.

அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே (தொல். கற்பியல் - 47)

எனத் தொல்காப்பியரும்,

அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு (குறள் - 75)

எனத் தெய்வப்புலவரும் அறிவுறுத்தியுள்ளனரே!

அறிவியல் கல்வி

இக்காலக் கல்விக்கூடங்களில் நிலவியல், வேதியல், உடலியல், இயற்பியல், பொறியியல் என அறிவியல் கல்வி பற்பல துறைகளாகப் பல்கிப் பெருகியுள்ளமை காண்கிறோம். வானளாவி நிற்கும் அறிவியற் சிந்தனைகள் உலகுக்கு வளம் கொழிக்கின்றன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அஃது யாவரும் ஏற்கும் உண்மை; அதேசமயம், பல அறிவியல் முடிவுகள் மக்களிடையே தீய நெறிமுறைகளுக்கு வித்திட்டுள்ளன; வன்முறைகளைத் தூண்டி விடுகின்றன. சமுதாய அமைதியைக் கெடுத்து, உலகின் பேரழிவுக்கும் வழிவகுத்துள்ளன என்ற உண்மைகளை மறுப்பதற்கில்லை.

இங்ஙனம் ஆக்கப்பணிக்குப் பயன்பட வேண்டிய அறிவியலை, மக்கள் அழிவுப்பாதையில் பயன்படுத்துவதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய மனவளர்ச்சி இன்மையே - என எண்ணிப்பார்த்தல் பொருந்தும், அறிவியலை எவ்வாறு ஆக்கப் பணிக்குத் திருப்புவது என்பதே இக்காலத்தில் சான்றோர்களின் சிந்தனையாக உள்ளது. மனத்தில் நற்பண்புகள் வளர்வதற்கு அறிவியலோடு அறநூல்களையும், அருள் நூல் களையும் கட்டாயப்பாடமாக்குவதும் அவற்றில் பயிற்றுவிப்பதும் பயன்தரும் என்பது பண்டுதொட்டே நம் தமிழர்களின் அனுபவம்.

அறிவு நூல்களையும் அறநூல், அருள் நூல்களையும் இணைத்துச் சிந்தித்து ஒப்புநோக்கி, உண்மை கண்டு மனம் தெளிய வேண்டும். அங்ஙனம் தெரிந்து கொண்டவற்றை, வாழ்வில் நடைமுறைப்படுத்தி அதன் உள்ளீடுகளை அனுபவத்தால் ஐயம் திரிபு இன்றித் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

அறிவியலின் ஆணிவேர்

சொல்லப்போனால், இன்றைக்குப் பார் முழுவதும் பரந்து விரிந்து ஆளுமை புரிந்து கொண்டிருக்கிற கணினி உள்ளிட்ட அனைத்து அறிவியல் துறைகளுக்கும் ஆணிவேராக, அடித்தளமாக, மூலக்கருவாக இருப்பது சைவ சித்தாந்தச் செம்பொருளே என்றால் அதில் சிறிதும் ஐயமில்லை.

ஒரு புள்ளி விரிந்து வட்டமும் நேர்க்கோடும் ஆகி, இரண்டும் இணைந்து மாதொரு பாகனாகவும், இன்னும்

பலவாறாக அவை இணைந்து 'உ' என்னும் பிள்ளையார்சுழி யாகவும், சிவலிங்கமாகவும், ஆனைமுக விநாயகராகவும், ஓங்காரப் பிரணவமாகவும் காட்சியளிப்பது நம் மூதாதையர் கண்ட சைவக் கருவூலங்கள். இதே வட்டமும் நேர்கோடுமே இன்றைய கணினிப் பொறியியலுக்கு ஆணிவேராக அமைந் துள்ளது என்பதும் உணரற்பாலது. (இதனை விரிவாக, ஆசிரியரின் ''கடவுளும் கணினியும்'' என்ற நூலில் காணலாம்).

அறநெறிக் கல்வி

அறிவியல் நூல்களை இக்காலத்தில் பெரிதும் வயிறு வளர்ப்பதற்கும் பொருள் ஈட்டுதற்கும் புகழ் சேர்ப்பதற்கும் மட்டுமே அறிஞர்கள் பயன்படுத்துகின்றனர். அந்நிலையிலிருந்து முன்னேறி,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் - 423)

என்ற தெய்வத் திருக்குறளின் உண்மைப் பொருளை உய்த் துணர்தற்கு முயல வேண்டும். திருக்குறள் போன்ற அற நூல்கள் சுட்டிக் காட்டுகிற தீயனவற்றை எல்லாம் ஒதுக்கியும், அவை அறிவுறுத்துகிற அன்பு, பண்பு போன்ற நல்லனவற்றை எல்லாம் சீராகச் சிந்தித்தும், அகழ்ந்து நோக்கியும், அதிலேயே சிறிது சிறிதாக அமிழ்தல் வேண்டும். அன்பும் அறமும் வளர வளர, சமுதாயத்தில் நல்ல ஒழுக்கங்கள் வளரத் தலைப்படும். அறநெறி வாழ்வே ஆன்மீகத்தின் முதற்படி.

''அத்தகைய பேரின்ப வாழ்வு எல்லோருக்குமே வந்து கூடுமா? ஐயா!'' என மிகுந்த ஆர்வத்தோடு வினவினார் சிவசாமி.

''அத்தகைய பெருநிலை நம் யாவர்க்குமே ஒரு காலத்தில் வாய்ப்பது உறுதி. அந்நிலையை நாம் எய்துதற்கு, வினை களினின்றும் நீங்கி, விளங்கிய அறிவினைப் பெற வேண்டும். மேலான அவ் உயிர், மாயா உடம்போடு கூடி இருப்பினும், தன் முனைப்பு இன்றி, இறைபணி நின்று, எஞ்சிய வாழ்வின் சிந்தை முழுமையும், சிவபெருமான் திருவடியிலேயே நிலைபெறுமாறு நிறுத்த வேண்டும். அப்போது, அப்பேரின்பம் நமக்கும் சித்திக்கும்.

அருளியற் கல்வி

அடுத்துக் கற்கத்தக்கவை, அருள் நூல்கள் புராணங்கள், இதிகாசங்கள், தோத்திர நூல்கள், ஞான சாத்திரங்கள் -

இவைகளிலெல்லாம் ஏராளமான வாழ்வியல் உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. உடல் நலத்துக்கும், மன வளத்துக்கும், ஆன்ம ஈடேற்றத்துக்கும் அவை கற்பிக்கும் நெறிமுறைகள் பெரும்பயன் நல்குபவை. அவற்றை எல்லாம் மூடநம்பிக்கை என ஒதுக்காமல், முறையாகக் கற்று, அகழ்ந்து ஆய்ந்து நுகர்ந்து இன்புற வேண்டும்.

மிகப் பெரியதொரு சக்கரம் கிடப்பதைச் சில நண்பர்கள் பார்த்தார்கள். அதைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற அவா அவர்களுக்கு. நீளமான கயிற்றினை எடுத்தார்கள். சக்கரத்தின் புற வட்டத்தில் இணைத்துக்கொண்டு எல்லோருமாகச் சேர்ந்து பெரு முயற்சியோடு இழுத்து ஓரளவு அசைத்தும் விட்டார்கள். அப்போது அவர்களுக்கு ஓர் உத்தி தோன்றியது. சக்கர-மையத்தில் ஒரு பந்துக்கோவை (Ball-bearing)யை வைத்து, கைத்தண்டினைக் கொண்டு சுழற்றினால், வேலை கொஞ்சம் எளிதாகுமே என எண்ணினார்கள். அவ்வாறே செய்து சிறிது வெற்றியும் கண்டனர்.

அப்போது அவ்வழியாக வந்தார் ஒரு பெரியவர். ''மையப் பகுதியில் மின்-ஆற்றலைச் செலுத்தினால், நீங்கள் இத்துணைபேர் இவ்வளவு கடினமாக பாடுபட வேண்டிய தில்லை. மின்-விசையால் சக்கரம் தானாகவே சுழலும், சக்கரத்தில் சில ஆசனங்களைப் பொருத்தினால் நீங்களும் இன்பமாக அதில் அமர்ந்து சுற்றலாமே'' என்றார். அதைக் கேட்ட அவர்கள் சற்றே நகைத்தனர், காரணம் மின்-ஆற்றலைப் பயன்படுத்தத் தெரியாத காலம் அது. ஆயினும் பெரியவர் அவர்களை விடுவதாக இல்லை. தக்க மின்பொறி வல்லுநரை வரவழைத்து மின்-இணைப்பின் மூலம் சக்கரத்தைச் சுழலச் செய்தார்.

இன்றைய பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி-முறை என்பது, சக்கரத்தைக் கயிற்றினால் இழுத்ததைப் போன்று வெறும் வயிற்றுப் பாட்டுக்காக வாழ்கின்ற ஓர் அவலமாகவே காணப்படுகிறது. அவர்களுள் சிறுபகுதிக் கல்வியாளர்கள் சக்கர-மையத்தைக் கைத்தண்டினால் சுற்றியவர்களைப் போல் அற நெறியில் வாழ்ந்து இன்புறுகின்றனர். மிகக் குறைந்த அன்பர் களே மின்-உருவான சிவத்தின்பால் பற்று வைத்து, செந் நெறியால் அருள்வாழ்வின் மூலம் தாமும் சிறந்து, மற்றவர் களுக்கும் நல்ல வழிகாட்டியாக உள்ளனர்''.

"நல்ல நூல்களைப் படிப்பதனால் மட்டுமே செந்நெறியினை அறிய முடியுமா? ஐயா!'' என வினவினார் சிவசாமி.

அவற்றை ஏட்டளவில் படித்தால் மட்டும் போதாது. பயின்முறை அனுபவத்துக்குக் கொண்டு வர வேண்டும். ஆழ நுகர்ந்து அனுபவித்துப் பார்க்காமல், எதையும் விமர்சிப்பது பகுத்தறிவு ஆகாது.

ஏட்டுச் சுரைக்காய்!

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' என்பது பழமொழி. சாலைகளின் சந்திப்பில் கைகாட்டி உள்ளது. அது பல்வேறு ஊர்களுக்கும் இடம் சுட்டித் திசை காட்டி நிற்கிறது; அவ்வாறு இடங்களையும் திசைகளையும் காட்டுவதன்றி, அக் கைகாட்டியே பயணிகளைத் தூக்கிச் சென்று அந்தந்த இடங்களில் விடுவ தில்லை யன்றோ?

அதேபோன்றுதான், அறிவுநூல்கள், அற நூல்கள், அருள் நூல்கள் அனைத்தின் நிலையும். மெய்யாகச் சொல்லுவதாயின், அவையும் வெறும் கைகாட்டி மரம் போன்று, நெறிகளைக் கற்பிப்பவையே யன்றி, தாமே நம்மைத் தூக்கிச் சென்று உயர்ந்த நிலையில் வைக்க மாட்டா; அவற்றிற்கு அந்த ஆற்றலும் இல்லை.

அறிவியற் கல்வியில் எல்லாப் பாடங்களுக்கும் நேர்முகப் பயிற்சியும் வைத்திருக்கிறார்கள். ஆனால் பண்டுதொட்டு நம்மவரிடம் வளமாக இருந்த, செவ்விய இறையியல் - பயின் முறை மட்டும், வழக்கு ஒழிந்து, 'ஏனோதானோ' என்றவாறு, வெறும் ஏட்டளவுக் கல்வியாக மாறிவிட்டமை வருந்துதற்குரியது.

ஓர் ஐம்பதாண்டு இருண்ட காலத்துக்குப் பிறகு, இப்பொழுதும் சைவசித்தாந்தத்தைத் தெரிந்து கொள்ளுவதில் பலரும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதனைச் சைவத்துக்கும் தமிழுக்கும் ஒரு மறுமலர்ச்சி என்றே கொள்ளலாம். ஆகவே மாணவர்கள் தாமாகவே இறையியலின் நேர்முகப் பயிற்சிக்கு முன்வர வேண்டும்; அதற்கு அரசும் ஆசிரியர்களும் ஊக்குவிக்க வேண்டும். குறுகிய கண்ணோட்டத்தை விட்டு, வாழ்வியலைப் புரிந்துகொண்டு, காலகாலத்துக்குப் பயனுள்ளதாக, அன்றாடப் பயிற்சிகளை அமைத்துக் கொள்ளுவது அறிவுடையோர்தம் கடமையாகும்.

ஆயினும் விளைபயிருக்கு நடுநடுவே களைகளும் தோன்று வதைப் போலச் சைவ வளர்ச்சிக்கு இடையூறு செய்வதன் மூலம் பல சுயநலமிகள் சைவத்துக்கும், தமிழுக்கும் ஊறு விளைவிக்கக் காணுகிறோம். அவர்களை இனங்கண்டு அவர்தம் ஆணவப் பிடியுள் சிக்கிவிடாமல் எச்சரிக்கையாக முன்னேற வேண்டும். மெய்யுணர்வாளர்களைச் சார்ந்து நின்று அவர்களுக்குத் தேவையான உலகியற் பொருள்களை மனமுவந்து கொடுத்து, அவர்களிடமிருந்து மெய்ஞ்ஞானத்தைப் பெற முயல வேண்டும். அதுவே அறிவுடைமை.

தாம் கொடுப்பது நிலையற்றதாய்ச் சுழன்று கொண்டிருக்கும் பொய்ப்பொருள் என்பதையும், தாம் அருளாளர்களிடம் பெற்றுக் கொள்ளுவது நிலையான அறிவானந்தம் என்பதையும் உள்ளபடி உணர்ந்தவர்களுக்கு, மாணிக்கவாசகரின் அருள்வாக்கு தெளிவாகப் புரியும்:

தந்தது உன் தன்னை(க்), கொண்டது என்னைச்
சங்கரா! யார்கொலோ சதுரர்?

(திருவாசகம், அடைக்கலப்பத்து - 5)

இங்ஙனம் இறைவனிடம் ஊனப் பொருளைக் கொடுத்து, அவரிடமிருந்து ஞானப் பொருளைப் பெற்றதாக மாணிக்க வாசகர் உள்-உணர்ந்து பண்ணிசைப்பது நமக்கெல்லாம் ஓர் அரிய விருந்து; சிறந்த வழிகாட்டியும் அன்றோ?

கைகாட்டி சுட்டிக்காட்டிய திசையில் பயணித்தால் மட்டுமே குறியிடத்தை அடைய முடியும். அதேபோன்றுதான் இறை-நூல்களில் கற்றவற்றை நடைமுறை வாழ்வில் அனுபவத்துக்கு வருமாறு செவ்விதே பயிற்சி செய்ய வேண்டும். அதற்கான பயின்முறைகளைக்கூட நம் முன்னோர்கள் பத்ததிகளாக ஆக்கித் தந்துள்ளார்கள்.

உலகம் பயிற்சிக் களம்

இவ்உலகம், மெய்ஞ்ஞான வாழ்வுக்கான அரியதோர் பயிற்சிக் களம் என்பதை மறந்துவிடக் கூடாது.

இதில் அறிவியல் பாடங்கள் உலக இன்பங்களை உருவாக்கவும் அவற்றை நுகரவும் உதவும்; அறநூற்கல்வி மனத்தை நெறிப்படுத்திச் சமுதாய முன்னேற்றத்திற்கு உதவும், அருள் நூல்களோ உலகியல் இன்பம், சமுதாய முன்னேற்றம், ஒருமைப்பாடு என்பவற்றோடு, பேரின்பத்துக்கும் வழிகாட்டும்.

எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்,
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே

என்பது சுந்தரமூர்த்தியின் அனுபவ அறிவுரை.

'பித்தா! பிறைசூடி! எனத் தொடங்கித் தெய்வத் தமிழால் பண்ணிசைத்துப் பரவிய சுந்தரமூர்த்தியைச் சிவபெருமான் தன் தனி ஊர்தியான ஐராவணம் என்னும் ஈராயிரம் கொம்புடைய வெள்ளை யானையைத் தேவர்கள் புடைசூழ அனுப்பித் திருக்கயிலைக்கு வரவழைத்துக் கொண்டான். இஃது 1200 ஆண்டுகளுக்கு முன் நம் தமிழகத்தில் நிகழ்ந்த அற்புத வரலாறு.

துன்பங்கள் நிறைந்தது இவ்வுலக வாழ்வு. ஆயினும், நாம் துன்பத்தைக் கண்டு துவளுதல் கூடாது.

எல்லா மக்களும் எவ்வித பாகுபாடுமின்றி ஏதோ ஒரு வகையால் வினை செய்வதும், பாவபுண்ணியத்தை ஈட்டுவதும், இன்ப துன்பங்களை நுகர்வதும் இயல்பாகின்றன. உலக வாழ்வில் இன்ப நுகர்ச்சியோ துன்பச் சுழற்சியோ இல்லாத ஆன்மாக்களே இல்லை எனலாம்.

முன்னை வினையின் பயனை முழுமையாக நுகர்ந்து கழித்தற்கு அமைந்தது இவ்வாழ்வு; முந்தைய வினைகளுக்கும் இன்றைய விருப்பு-வெறுப்புகளுக்கும் ஏற்பவே இன்பதுன்ப விளைவுகள் வந்து அமைகின்றன.

அதேபோல் இன்றைய நம் பாவ புண்ணியச் செயல் களே நம்முடைய மறுமை விதியை நிர்ணயிக்க வல்ல ஆவணக் களரி ஆகின்றன. 'ஊழில் பெருவலி யா உள?'

ஆகவே, நம் உலகியற் செயற்பாடுகளையும் அருள் வினையாக ஆக்கிக் கொள்ள முயலுதல் வேண்டும்.

இவ் உண்மைகளை நாம் முழுமையாக உணர்ந்து தக்கவாறு செயல்பட வேண்டும்.

அவரவர் தத்தம் தொழிலைச் செய்து கொண்டே சிவபரத்தையும் சிந்திக்கலாம். அப்போது, மனம் மாசு நீங்கித் தூய்மையுறுகிறது. செய்யும் தொழிலிலும் வெற்றி ஏற்படுகிறது.

விதியை மதியால் வெல்லலாம்

''விதியை மதியால் வெல்லலாம்' என்ற ஆன்றோர் வாக்கு உள்ளதே, அதன் உட்பொருள் என்ன, ஐயா!'' என்று வினவினார் குப்புசாமி.

மதி என்பதற்கு அறிவு என உலகியற் பொருள் கண்டே இடர்படுவர் பலரும். இதேபோல்,

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலை(வு) இன்றித்
தாழாது உஞற்று பவர் (குறள் - 620)

என்னும் திருக்குறளுக்கும் உரை காண்பர். ஆயினும், திருஞான சம்பந்தரின் கோளறு பதிகத்திலும், மெய்கண்டாரின் சிவஞான போதம் பத்து மற்றும் பதினோறாம் சூத்திரங்களிலும் இக் குறளுக்குத் தக்க பொருள் அமைந்திருப்பதாகவே தோன்றுகிறது.

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறை பணி நிற்க,
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே
சிவஞானபோதம் பத்தாம் சூத்திரம்

உயிருக்குள் உயிராக இருப்பவன் இறைவன். அவனை அவ் உயிர், தன்னில் வேறுபடக் காணாமல், அம்முதல்வனேயாம்படி ஒற்றுமைப்பட்டு நிற்றல் வேண்டும். விருப்பம், அறிவு, செயல் எனும் மூவகை ஆற்றலும் அவனுடையதாகவே கொண்டு அவ் இறைபணியில் வழுவாது நிற்றல் வேண்டும். அங்ஙனம் நிற்பின் அவ் ஆன்மாவுக்கு, ஆணவமலம், மாயாமலம் இவை இரண்டுடனே, வலிய கன்ம மலமும் ஆற்றலற்று நீங்கும் என்பது இச்சூத்திரத்தின் திரண்ட பொருள்.

அறிவுக்குள் அறிவாக உறையும் மதிசூடியாகிய முதல்வனை ஆகமநெறிப்படி வழிபடின், வினை (விதி) உள்ளிட்ட மலங்கள் தாக்காது ஒழியும் என்பதே குறள், போதம் ஆகிய இரண்டு நூல்களின் கருத்தும் ஆகும்.

அயரா அன்பின் அரன்கழல் செலுமே
(சிவஞானபோதம் பதினோராம் சூத்திரம்)

கருத்து

இறைவன் ஆன்மாவுடன் அத்துவிதமாக நின்று உதவி செய்துவரும் பெருங்கருணையை மறவாது கடைப்பிடித்துச்

செய்யும் அன்பாலே அம்முதல்வன் திருவடியாகிய சிவானுபூதியை அவ் ஆன்மா தலைப்படும்.

'தாளாது உஞற்றுதல்' என்னும் திருக்குறள் தொடருக்கு மெய்கண்டாரின் ஆகமக் கருத்தான 'அரனிடத்து அன்பு அயராமை' என்பதைப் பொருளாகக் கொள்ளுதல் சாலும் அன்றோ?'

செப்பிள முலை நன்மங்கை ஒருபாகமாக
விடைஏறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பு(ம்) முடிமே(ல்) அணிந்(து)என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே (சம்பந்தர், தேவாரம் - 2:85:7)

எனப் பண்ணிசைப்பார் ஞானசம்பந்தர். மதி=பிறைச்சந்திரன்; அப்பு=கங்கைநீர்).

திருஞானசம்பந்தர் இப்பாடலில் குறிப்பிடும் மதி, வினை எனும் இரண்டு சொற்களையும் கூர்ந்து நோக்குதல் வேண்டும். வினை என்பது சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம் என மூன்றையும் குறிக்கும். பிரார்த்தம் என்ற 'ஏற்ற வினை'யையே, நாம் இப்போது விதி எனக் கூறுகிறோம். இப்பொழுது நுகர்தற்கு ஏற்றுக் கொண்டுள்ள விதி மட்டுமேயன்றி, நம் கணக்கில் குவிந்து கிடக்கும் பழைய வினைத் தொகுதிகளையும், ஆகூழ் ஆகிய புதுவினைகளையும் கூடச் சிவ-வழிபாடு விலக்கிடும் என இங்குச் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

விண்மதியின் தீவினைகளைக் களைந்து, அம் மதியைத் தன் சிரசினில் அணியாகச் சூடியவன் சிவபெருமான். அவனைத் 'தூ வெண் மதிசூடி' என்று தம் முதற்பாடலிலேயே போற்றுவார் சம்பந்தர். (தோடுடைய செவியன்...)

வாதம், பித்தம், சிலேத்துமம் போன்ற தலைவிதியின் தாக்கங்கள் அனைத்தும் 'வினை' என்னும் கன்மத்தின் விளைவுகளே ஆகும். மதிசூடியை உள்ளார்ந்த அன்போடு நினைந்து வழிபடுவோரை அவை நணுகித் துன்புறுத்தமாட்டா. அதற்கு மாறாக, அவை அவர்கட்குப் பெரிதும் நன்மையையே கொண்டு வரும் என அறுதியிட்டுக் கூறுகிறார் ஆளுடையபிள்ளை.

'உப்பக்கம்' என்னும் திருக்குறள் சொல்லாட்சிக்கு ஞானசம்பந்தரின் 'நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே' என்னும் தொடரை அடியொற்றிப் பொருள் காணலாம். அருள்வினையே புரியும் மெய்யடியார் கட்கு, ஊழும் ஊறு செய்யாமல், அவரின் உட்பக்கமாக இருந்து பல்லாற்றானும் நன்மையே பயக்கும் எனப் பொருள் கொள்ளுவது பொருந்துகிறதே!

''இதனை இக்கால அறிவியல் கொண்டு நிறுவ முடியுமா?'' என வினவினார்'' சிவசாமி.

''ஆம் - நிறுவலாம்; மூலாதாரத் தீயிலும், நெஞ்சின் இதய கமலத்திலும் சிவத்தை வழிபட்டது போல. சிரசினுள் சிவ-தியானத்தில் ஒன்றி நிற்கும்போது, பல அற்புதங்கள் நிகழுகின்றன. தலையினுள் பெருமூளையின் இரண்டு கூறுகளையும் இணைத்து நிற்கிறது மூளை-இணைப்பான் *(Largest White Commissure)* என்ற ஓர் உறுப்பு. அது பிறை வடிவானது; நம் சிரசினுள் வெண்ணீறு சண்ணித்த சிவலிங்க (சதாசிவ)த் திருமேனியாக அது திகழ்கிறது.

அந்த மூளை-இணைப்பானைப் பொருந்தி நிற்கிறது, தலைமைச் சுரப்பி என்ற பிட்யூட்டரி. அது சிவலிங்கத்திற்கு ஏற்ற ஆவுடையாராய்ப் பெண்மை இயல்போடு திகழ்கிறது. சிவபெருமான் விருப்பத்தையே (சங்கற்பத்தையே), அவன் தனக்கு இட்ட ஆணையாகக் கொண்டு செயற்படுபவள் சிவசத்தி; ஆகவே அவளுக்கு ஆணை என்பது பரியாயப் பெயராயிற்று. அவளுடைய ஆளுமைக்கு உட்பட்டமையின் பிட்யூட்டரியும் ஆணைத் தானம் (ஆக்ஞை ஆதாரம்) என்ற பெயரில் வழங்கப் பெறுகிறது என்பதை முன்னரும் கூறியுள்ளோம்.

மூளை இணைப்பானும் பிட்யூட்டரியும் இணைந்த நிலை சிவலிங்கம். அங்குச் சிவத்தியானம் செய்யும்போது, அம்மையப்பனின் திருவருளால் ஹைப்போதாலமஸ் என்ற விதி ஏடும் செயலற்றதாகி விடுகிறது என்பதையும் மும்மலத் தடைகளும் நீங்குகின்றன என்பதையும் அனுபவ வாயிலாக உணரலாம்.

சிவயோக நெறி நிற்பார்க்கு, மூளை இணைப்பான் என்ற பிறைமதியால் சித்தம் என்ற விதி ஏடு இங்ஙனம் செயலற்றதாக ஆவதையே 'விதியை மதியால் வெல்லலாம்' எனக் கூறிப் போந்தனர் அருளாளர் எனலாம்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்(கு) அருளியவா(று) ஆர் பெறுவார் அச்சோவே

(திருவாசகம், அச்சோப்பத்து - 1)

என மாணிக்கவாசகப் பெருந்தகை பாடுவதும் இக்கருத்துப் பற்றியே எனலாம்.

மெய்யடியார்களின் வினைகளைச் சிவபெருமான் களைந் தருளிய சிறப்புமிகு வரலாறுகள் பெரியபுராணம் போன்ற அருள் நூல்களில் தெளிவாகப் பேசப்படுகின்றன.

மதி என்பது இங்கு ஆகு பெயராய், மதி சூடிய சிவபெருமானைக் குறிக்கிறது. சிவபெருமானை இடையறாது வழிபடுவதன் மூலம் ஊழ்வினைகளின் தாக்கத்திலிருந்து விடுபடலாம் என்பதை உணர்த்த எழுந்தது இத்தொடர். வினை உள்ளிட்ட மும்மலங்களால் எத்துணையும் கட்டுறாதவன் சிவபெருமான் ஒருவனே. அவனே நின்மலன். அவனால் மட்டுமே உயிர்களாகிய நம் வினைகள் அனைத்தையும் போக்க முடியும் என்பது இத்தொடரின் கருத்து.

பஞ்சபூதங்களாலான இப் பேரண்டத் தொகுப்பினை முதற்கண் தம்முடைய மாயா சக்தியிலிருந்து உருவாக்கிய போது, பரசிவம் தாமே சிவ-பிரமனாகவும், தொடர்ந்து அதைக் காத்து நிற்கும்போது சிவ-விஷ்ணுவாகவும் விளங்குகிறார் என முன்னரே கூறியுள்ளோம்.

மும்மலப் பிணிப்பால் அவதியுறும் மொத்த உயிரினத்தையும் எங்ஙனம் அவ்அவலத்திலிருந்து விடுவித்துச், செந்நெறியில் நிறுத்திப் பேரின்பத்தில் திளைத்திருக்கச் செய்வது என்னும் அருட்சிந்தனையோடு அவர் (சிவபெருமான்) யோக-நித்திரையில் பள்ளி கொண்டிருக்கிறார்.

இத்தகைய திருவுருவத்தோடு திருவள்ளூர் மாவட்டம், ஊத்தக்காடு அருகில் சுருட்டப்பள்ளி என்னும் திருத்தலத்தில் இறைவன் காட்சியளிக்கிறார்.

தன்னுடைய இச்சிறப்புத் தன்மையை எஞ்ஞான்றும் நாம் உணர்ந்து, தியானிக்க வேண்டும் என்பதற்காகவே, நம் ஒவ்வொருவர் சிரசினுள்ளும் படுக்கையான பிறை வடிவில் இறைவன் மூளை-இணப்பானை (*Corpus Callosum*) அமைத் துள்ளார் எனக் கொள்ளுதல் பொருந்தும்.



யோகத்தில், பள்ளிகொண்டு ஆன்மாக்களை உய்விக்கும் சிவபெருமானின் 'படுக்கைக் கோலம்' நம் சிரசினுள் சந்திரப்பிறை போன்ற மூளை இணைப்பானாக உள்ளமை, சிவ தியானத்துக்கு உரியது.

திருவள்ளூர் மாவட்டத்தின் ஊத்துக்காடு அருகில் உள்ளது சுருட்டப்பள்ளி அருள்மிகு பள்ளிகொண்டீஸ்வரர் ஆலயம். சிவராத்திரியை முன்னிட்டு இங்கு விசேஷ வழிபாடு நடைபெறுகிறது.

நிறைவுரை

'விதி'யை வெல்ல விரும்பும் யாவரும், தத்தம் தொழிலைச் செய்துகொண்டே 'மதி' சூடியாகிய சிவபரத்தை எஞ்ஞான்றும் சிந்தித்து நன்றி பாராட்ட வேண்டும். அதுவே சைவ அருளாளர் களாகிய நாயன்மார்கள் அனுபவித்த சீலமிகு பேரின்ப வாழ்வு.

அவர்களைப் போல் நாமும் அவரவர் சிரசினுள் கூனுற்றுக் கிடக்கும் 'மதி'யைச் சிவமூலத்தால் ஆண்மைப் பொலிவுறச் செய்து கொள்ள வேண்டும். அப்போது விதி ஏட்டில் இருள்-வினைக்குப் பதிலாக, அருள்வினை பதிவாகும்.

வாழ்வியல் உண்மைகளைத் தெளிவாக உணர்ந்திருந்த நம் தமிழ் முன்னோர்கள் இந்த உலகவாழ்வை நீட்டித்துத்

தருமாறு இறைவனிடம் வரம் கேட்கவில்லை; மாறாக, மறுமை என ஒன்று தமக்கு உளதாயின், அப்பொழுதும் அவன் மலர்த் திருவடிகளையே சிந்தித்திருப்பதாகிய சீர்மையையும் சீலத்தையும் பெரிதும் வேண்டி நின்றனர். இதனைக் காரைக்கால் அம்மையார் வாழ்விலிருந்து அறியலாம்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப், பின் வேண்டு கின்றார்: பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல், உன்னை என்றும் மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும். நான் மகிழ்ந்து பாடி அறவா! நீ ஆடும்போது, உன் அடியின்கீழ் இருக்க, என்றார் (பெபு-14)

பழமையானவை புராணங்கள்; புதுமையானவை அறிவியல்; இடைக்காலத்தவை இலக்கியங்களும் இதிகாசங்களும்; இவை எல்லாவற்றையும் தம்முள் கொண்டவன் சிவபரம்பொருள். இவ்உண்மையை,

'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே

(திருவெம்பாவை - சக்தியைவியந்தது - 9)

எனச் சிவபரத்தின் 'கால-கால'ச் சிறப்பினையும், கடவுள் தன்மையையும் கவினுற இசைப்பார் வாதவூரடிகள்.

அல்லல் என் செயும்? அருவினை என் செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என் செயும்?
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே (அப்பர் 5-1-4)

நாமும் அருளாளர்களைப் பின்பற்றிச் செம்பொருளைச் சிந்தித்துச், செந்நெறியில் நின்று, வினைகளின் நீங்கி, விளங்கிய அறிவைப் பெற்று, வாழ்வை வளமாக்கித் திருவடிப் பேரின்பத்தில் திளைத்திருப்போமாக!

இதுகாறும் மன விருப்பத்தோடு பல உயரிய செய்திகளைக் கேட்டும், சிந்தித்தும், தெளிவடைந்திருக்கிறீர்கள். இனி இடையறாப் பயின்முறையால் (அனுட்டானத்தால்) உங்கள் வாழ்வு வளம் பெறுதற்கு இறைவன் திருவருள் பாலிப்பானாக!

பன்னிரெண்டாம் இயல் முற்றிற்று

விதியை மதியால் வெல்லலாம்

என்ற நூல் நிறைவுற்றது

திருச்சிற்றம்பலம்

துணைநூற்பட்டியல்

சிவஞானபோதம்

சிவஞானசித்தியார்

திருவருட்பயன்

உண்மை விளக்கம்

சிவப்பிரகாசம்

போற்றிப் பஃறொடை

திருக்குறள்

தொல்காப்பியம்

நல்வழி

நாலடியார்

சிலப்பதிகாரம்

சிவஞானபோதம் - மாபாடியம் - மாதவச் சிவஞான சுவாமிகள்
ஷை - பொழுத்தையாபிள்ளை உரை

தேவாரம் : திருஞானசம்பந்தர்

ஷை திருநாவுக்கரசர்

ஷை சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவாசகம் - மாணிக்கவாசகர்

பெரியபுராணம் - சேக்கிழார்

சித்தாந்தப் பட விளக்கம் - வாலையானந்த சுவாமிகள்

சிவபோகசாரம் - தருமைஆதீன குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்

பௌஷ்கர ஆகமம்

தத்துவ தீபிகை

Grays Anatomy

I'm Joe's body - Readers' Digest

Pear's Encyclopaedia

Arthur C Guyton - Anatomy and Physiology

ஆசிரியரைப் பற்றி...

அ.சொ. சுப்பையா

பிறந்த ஊர் சிறுகூடற்பட்டி, பெற்றோர் சொக்கலிங்கம் செட்டியார் - சிட்டாள் ஆச்சி. நாள் 13.01.1935. இளமை தொட்டே கல்வி கற்பதிலும், கடவுள் வழிபாட்டிலும் மிகுந்த ஈடுபாடு. பள்ளி இறுதித் தேர்வில் திருப்பத்தூர் உயர்நிலைப் பள்ளியில் ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண் பெற்றுத் தேறியவர்; காரைக்குடி அழகப்பா கல்லூரியில் இடைநிலை வகுப்பில் கணிதம், இயற்பியல் மற்றும் வேதியல் கற்று, மதுரை தியாகராசர் கல்லூரியில் இளங்கலை வகுப்பில் பொருளாதாரம், அரசியல் மற்றும் வரலாறு கற்று, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முதுகலையில் தமிழ் மற்றும் சைவ சித்தாந்தம் கற்றுப் பல்துறையிலும் அடிப்படை அறிவு பெற்றவர்.

தேவகோட்டை சைவசித்தாந்த சரபம் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் ஐயா அவர்களிடம் சிவ ஆகம முறைப்படி சமய, விஷேட, நிர்வாணம் ஆகிய மூவகை தீக்கைகளும் பெற்று நாளும் எரியோம்பிச் சிவவழிபாடு செய்பவர். ஆழ்நிலை சிவதியானத்தால் பெறுகிற உட்காட்சி, உள் உணர்வுகளாலேயே பழந்தமிழ்ப் பண்பாட்டின் நுட்பமான அரிய பல கொள்கை கோட்பாடு களையும் உலகு அரிய வெளிக்கொணர்பவர்.

தருமை ஆதீனம் மாலைநேரக் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் கற்றுச் 'சைவசித்தாந்தப் புலவர்', 'சைவசித்தாந்தக் கலாநிதி' என்ற பட்டங்களை ஆதீன குருமகாசந்நிதானம் அவர் களால் வழங்கியருளப் பெற்றவர்.

திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்களால் 'தமிழ்மறைச் சீலர்' என்னும் சிறப்பு விருதும், நமச்சிவாய குருமூர்த்திகளின் 'ஆசிக்கவச'மும் வழங்கியருளிப் பாராட்டப் பெற்றவர்.

தில்லைத் திருப்பதிகங்கள் என்னும் முதல் உரைநூல் 1986-ல் வெளிவந்தது. 1987-ல் கோலாலம்பூரில் (மலேசியா) நிகழ்வுற்ற ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டு ஆய்வுக் கருத்தரங்கில், 'தொல்காப்பியத்தில் சைவம்' என்னும் தலைப்பில் தம்முடைய ஆய்வினைப் பதிப்பித்தார்.

1994 முதல் ஐந்து ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தகுதிநிலைப் பேராசிரியராகத் (*Emeritus Professor*) திருமுறை இருக்கைப் பொறுப்பேற்றுச் சுந்தரர், சம்பந்தர், அப்பர் தேவார திருமுறைகளிலுள்ள சித்தாந்த உட்கிடைகளை அறிவியல் அடிப்படையில் ஆய்வு விரிவுரையாக எழுதியவர்.

'தொல்காப்பியம் - சைவசித்தாந்த நோக்கில்' என்னும் இவருடைய ஒப்பாய்வு நூலும், சுந்தரர் தேவார ஆய்வு விரிவுரை நூலும், திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை உரைநூலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறையினரால் வெளியிடப்பெற்று, நல்லறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன.

கடவுளின் திருவுருவங்கள், திருநாமங்கள் மற்றும் சிறப்பியல்புகள், உயிர்க் கூட்டத்தின் பரிணாம வளர்ச்சி போன்ற பல ஆன்மீகச் செய்திகளும் உடற்கூறு மற்றும் அறிவியலோடு ஒட்டிய ஆன்மீகச் சிந்தனைகளாக நூல்களின் வடிவிலும் 50-க்கும் மேற்பட்ட கட்டுரைகளாகவும் மலர்ந்துள்ளன.

ஞானசம்பந்தம், குமரகுருபரர், சித்தாந்தம், மெய்கண்டார், சாதுசங்கொலி முதலிய திங்களிதழ்களில் இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

பிற நூல்கள்

திருஞானசம்பந்தர், அப்பரடிகள் தேவார உரை நூல்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அச்சில் உள்ளன. 'கடவுளும் கணினியும்' என்னும் நூல் அச்சேறவுள்ளது.

பலதுறைக் கருத்தரங்குகள், மாநாடுகள், அறகட்டளைச் சொற்பொழிவுகள், திருக்கோயில் தொடர் சொற்பொழிவுகள் என அறிவியல் தமிழாலும் ஆங்கிலத்தாலும் சிவம் பெருக்குவதோடு தமிழ்ப் பண்பாட்டை உலகறியப் பரப்பி வருகிற நற்பிண்பினர்.

திருச்சிற்றம்பலம்

பொருள் விளங்க மிகவும் கடினமான, பட்டறிவால் மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய பரம்பொருள் தத்துவத்தை - சைவசித்தாந்தத் தத்துவக் கருத்துகளை எளிமையாக, சுவையாக ஒப்பீட்டு நோக்கில் தந்து நூல் முழுவதும் சுவை குன்றாமல் சொல்வதில் வாகை சூடியுள்ளார் பேராசிரியர் அ.சொ. சுப்பையா.

- மாண்பமை துணைவேந்தர்

முனைவர் மு. பொன்னவைக்கோ